223

ஆதி கிரேக்க மெய்யியல்

யோன் பேணற்று

அரசகரும மொழித் தினைக்கள வெளியீட்டுப் பிரிவினரால்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது

ஆதி கிரேக்க மெய்யியல்

1965

ஆதி கிரேக்க மெய்யியல்

யோன் பேணற்று
M.A., LL.D., F.B.A.
முனைனாட் கிரேக்க மொழிப் பேராசிரியர்
சென். அந்துரூசு பல்கலைக கழகம

தமிழாக்கம்
செ. வே. காசிநாதன்

அரசகருமமொழித் திணைக்கள வெளியீட்டுப் பிரிவினரால்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது.
2—R 10269—1,525 (6/63)

முதலாம் பதிப்பு 1965

EARLY GREEK PHILOSOPHY

by

JOHN BURNET

M.A., LL.D., F.B.A.

Emeritus Professor of Greek, University of St. Andrews

Translated and Published by The Government of Ceylon

by arrangement with

ADAM & CHARLES BLACK, LONDON

இலண்டன், ஆதாம் சார்ள்சு பிளாக்கு நிறுவனத்தாரின் இசைவு பெற்று இலங்கை அரசாங்கத்தாரால் தமிழில் வெளியிடப்பட்டது.

எல்லா உரிமையும் இலங்கை அரசாங்கத்தார்க்கே.

தமிழ்ப்பதிப்புக்கு முகவுரை

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பயிலும் மாணாக்கரின் தேவைகளை நிறைவேற்றுமுகமாக, இத்திணைக்களம் மொழிபெயர்த்து வெளியிடும் மெய்யியல் நூல்களுள் "ஆதி கிரேக்க மெய்யியல்" என்னும் இந்நூல் முதலாவதாகும். இது, ஆங்கில நூலின் நான்காம் பதிப்பின் மொழிபெயர்ப்பு.

இதிகாசங்களிலிருந்து ஆரம்பித்து அணுவாதிகள்வரை கிரேக்க மெய்யியல் வரலாற்றை எடுத்துக் கூறும் இந்நூல், பல்கலைக்கழகக் கலைத்துறை முதலாண்டு வகுப்பில், கிரேக்க மெய்யியல் பயில்வோருக்கு விதிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் முற்பாதியில் இடம்பெறும் விடயங்களனைத்தையும் விரிவாக ஆராய்வதாய் அமைந்துள்ளது. தேலிசு முதல லியூகிப்போசுவரை மெய்யியலில் ஈடுபட்ட பிரதான சிந்தனையாளர்கள் யாவரைப் பற்றியும், இப்போன், இடையோசினிசு போன்றோர் பற்றியும் வரலாற்று ரீதியாக ஆராயப்பட்டிருப்பதோடு, இச்சிந்தனையாளர்களுடைய கொள்கைகளை அறிவதற்கு ஆதாரங்களாகப் பயன்பட்ட நூற் பகுதிகளும் இந்நூலிற் றரப்பட்டுள்ளனவாதலால், ஆதி கிரேக்க மெய்யியல் பற்றி விரிவாக அறிந்து கொள்ள விழைவோர்க்கும் இந்நூல் பயனபடும்.

ஆங்கில நூலில், கிரேக்க மொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட பகுதிகளில், மொழிபெயர்ப்பாளர் குறிப்புக்களாக ஆங்காங்கே காணப்பட்ட சில கிரேக்க மொழிக்குறிப்புக்களும், கிரேக்க பதங்களும், தவிர்க்கப்பட்டுள்ளன ; அவை தமிழ் நூல் பயில்வோருக்குப் பயன்படா.

நூலின் இறுதியில் ஆங்கில அறிவுள்ள மாணாக்கருக்கும் விரிவுரையாளர்க்கும் பயன்படக்கூடிய அரும்பத அகரவரிசை சேர்க்கப்பட்டிருக்கினறது.

இப்புத்தகத்தை மொழிபெயர்த்து வெளியிடும் உரிமையை அளித்த இலண்டன், ஆதாம் சாள்சு பிளாக்கு நிறுவனத்தாருக்கு இத்திணைக்களம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

அரசகரும மொழித்திணைக்களம்,
(வெளியீட்டுப் பிரிவு)
கொழும்பு 7.

நந்ததேவ விசயசேகர,
ஆணையாளர்.

நான்காம் பதிப்பைப் பற்றி ஒரு குறிப்பு

இப்பதிப்பு உண்மையில் மூன்றும் பதிப்பின் புதிய அசசீடே யெனினும், சில திருத்தங்களைச் செய்தற்கு இவ்வாயபபைப் பயன் படுத்திக் கொண்டுளளோம். சில அச்சுப்பிழைகளும் தவறுகளும் நீக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் தனது பிரதியிற் குறித்துவைததி ருந்த ஒரு பிழையும் இங்கு தவிாக்கப்பட்டுளளது. மேலதிகமாக ஓரிரு குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சென். அந்துரூசு,
மார்ச், 1930.

W. L. லொறிமர்.

மூன்றும் பதிப்பிற்கு முகவுரை

இந்நூலில் மலிந்துள்ள குறைபாடுகளை, அதன் ஆசிரியன் என்ற முறையில் நான் நன்கு உணர்ந்துள்ளேன். எனினும் இந்நூல் சேர்மனிய மொழியிலும்[1], பிரெஞ்சு மொழியிலும்[2] மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதையும், தற்போது இதன் மூன்றுவது பதிப்பை வெளியிடுதல் அவசியமாகிவிட்டது என் பதையும் நோக்கும்போது, இது எதோ ஒரு வகையிற் பயன் பட்டிருக்கவேண்டும் எனும் எண்ணம் எற்படுகிறது. பல்கலைக் கழக ஆசிரியர்களது ஓய்வுநேரம் பெருமளவிற்குக் குறைக்கப் படுவதற்கு எதுவாயிருந்த யுத்த கால நெருக்கடிகளுக்கிடை யேயே இம்மூன்றுவது பதிப்புத் தயாரிக்கப்பட்டது. எனது விருப்பத்திற்குமதிகமாக இப்பதிப்பின் வெளியீடு காலந்தாழ்த் தப்பட்டதற்கும் இந்நெருக்கடியே காரணமென்க.

ஆதி அயோனிய சிந்தனையாளரே, நம்மால் இன்று விஞ்ஞா னம் என அழைக்கப்படும் புதிய துறையைத் தொடக்கிவைத் தார்களெனவும் அன்றிருந்து இன்றுவரை ஐரோப்பாவில் அறிவு வளர்ச்சி அவர்கள் வகுத்த வழியிலேயே சென்று கொண்டிருக்கிறது எனவும் நான ஈண்டு காட்ட முயன்றுள் ளேன். ஆதலினூற்றுன், நான் வேறோரிடத்திற் குறிப்பிட்டது போல், விஞ்ஞானம் என்பதற்கு "கிரேக்கர் காட்டிய வழியிற் சிந்தித்தல்" என்பது போதிய விளக்கமாக வமைகிறது. அன்றி யும், இதே காரணத்தினூற்றுன், கிரேக்கர்களின் செல்வாக்குக் குட்படாத மக்களிடையே விஞ்ஞானம் ஒருபோதும் வளர்ச்சி யடையவில்லை.

இருபத்தெட்டு ஆண்டுகளுக்குமுன்னர், "**ஆதி கிரேக்க மெய் யியலின்**" முதற் பதிப்பு வெளியிடப்பட்ட காலத்தே, கிரேக்க மெய்யியல், பொதுவாக இங்கிலாந்தில எகேலிய கணணோட்ட நிலையிலிருந்தே ஆராயப்பட்டதாதலால், எனது நூலிற் காணப் பட்ட முடிபுகளிற் பல, முரணுரைகளாகக் கருதப்பட்டன. ஆனல் இம்முடிபுகளிற் சில இன்று பெரும்பாலானவர்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எனினும் என்னுடைய முடிபுகளுள் இரண்டு இன்றும் பலருடைய எதிர்ப்பையே பெறுகின்றன. முதலாவதாக, பார்மனிடிசுவைச் "சடவாதத்தின் தந்தை"

---

[1] *Die Anfange der griechischen Philosophie, aus dem Englischen ubersetzt von Else Schenkl* (Berlin, Teubner, 1913).

[2] *L'Aurore de la Philosophie grecque, edition francaise, par Aug. Reymond* (Paris, Payot, 1919).

என நான் அழைக்கத் துணிந்தேன்; ஆனால் இன்னமும் சிலர் அவரை ஓர் கருத்துவாதி எனக் கொளகினறனர் (கருத்து வாதம் எனும் இக்கால வழக்கு, கிரேக்க மெய்யியலைப் பற்றி எழுதுவோராற் கையாளப்படுவது தவருன விளக்கங்கள ஏற் படுவதற்கு எதுவாகிறது). "புலன்களினுல் உணர்த்தப்படும், சடப்பொருளாலான இவ்வுலகமே உண்மையானது எனும் கொள்கையே சடவாதத்திற்கு மையமாயமைவது" என்பதே இவர்கள் எனது கருத்தை மறுபபதறகுக் காட்டும் நியாய மாகும்[1]. புலன்களினுல் உணர்த்தப்படும் உலகின உணமை யைப் பார்மனிடசு ஏற்க மறுத்தாரெனபது தெளிவு எனவும் இவர்கள் சுட்டிககாட்டுகின்றனர். அவர் அவ்வாறு மறுத்தா ரென்பதில் எவ்வகை ஐயத்திறகுமிடமிலலையென ஒப்புககொள கிறேன். அன்றியும் இவர்கள குறிப்பிடும் பொருளில் நான் பார்மனிடசுவை ஓர் சடவாதியென அழைப்பேனேயாகில், அது விழல் நியாயமாகும் என்பதிலுமை ஐயமில்லை. ஆனால் எனது விளக்கத்தின்படி, சடவாதியின "சடப்பொரு"ளானது புலன் களால் உணரப்படக்கூடிய பொருளேயல்ல; "ஆவி" யென் பதைப்போல, அதுவும், கருத்தளவாக மட்டும் உணரக்கூடிய வொன்றே. புலனகளுக்குட்படாத இச்சத்துப்பொருளை விளங்கிக் கொள்வதற்குச் செய்யபபட்ட முதலாவது தெளிவான முயறசி யின பலனே பார்மனிடசுவின் "உள்பொருள்." இதுவே எனது நூலில் நான் நிறுவ முயன்றிருக்கும் முக்கிய கருத்தென லாம். அத்துடன் அரித்தோதில், தியோபிறசுத்தோசு ஆகியோரது கூற்றுகளோடும் நன்கு பொருந்தும் வகையில் ஈலிசவாததி லிருந்து பெறபபட்டதே அணுவாதம் என நான் நிறுவமுயன் றுள்ளமையே (பக். 344 sqq.) எனது வாதத்தின் மிக முக்கிய மான பகுதியெனலாம். அணுவாதம் சடவாதத்தினுட் சேர்வதே என்பது யாவராலும் ஏற்றுகொள்ளப்படுவதொனறே. ஆனால் இவ்வாதம் தவருனால், நான் இவ்விடயத்தை ஆராய்ந்துள்ள முறைமுழுவதுமே தவறென ஒப்புக்கொள்ள வேணடும்.

இன்னும் ஏற்றுக்கொள்ளப்படாத, என்னுடைய மற்ற முரணு ரையெனப்படுவது, மெய்ப்பொருளானது உருவேயொழிய சடப் பொருளலல வென்னும் கொள்கை—அதாவது பிளேட்டோ வினது கொள்கை—தெளிவுபெற அமைக்கப்பட்டது பிளேட்டோ வின் கழகத்தின் காலத்திலேயேயெனினும் பைதாகரசவாதிக ளின் காலத்திலேயே அஃது தோன்றிவிட்டதெனவும் சோகிரதர் எலவே அதனை அறிந்திருந்தார் எனவும், நான் நிறுவ முயன்றமையே. பிளேட்டோவின் சம்வாதங்களுக்கு விரிவான

[1] W. T. Stace, *A Critical History of Greek Philosophy* (London, 1920), *pp.* 46 *Sqq.*

வோர் புனர்விளக்கம் தருவதன் மூலமே இதனை யாவரும் ஏற்கும் வகையில் நிறுவமுடியும் எனபது எனக்குத் தெளிவாகி யுளளதாதலால், நான் இப்போது பிளேட்டோவின் சம்வாதங் களைத் தெளிவுபடுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளேன். பத்தொன் பதாம் நூற்றுண்டில், இச்சம்வாதங்களுக்கு அளிக்கப்பட்ட விளக் கம், ஆதாரமற்றனவும், நம்புதற்கரியனவுமான எடுகோள்கள் பலவற்றைக் கொண்டிருந்தது. இங்கு நான் இவ்வெடுகோள் களைப்பற்றி மேலும் கூறுதல் சாத்தியமில்லை. ஆனால் விரைவில் இதனை விரிவாக ஆராய்வதற்கு வேண்டிய சந்தர்ப்பம் ஏற் படும என நம்புகிறேன்.

யோ. பே.

சென். அந்துரூசு,
யூலை, 1920.

உள்ளுறை

		பக்கங்கள்
	முன்னுரை	1 – 33
	ஆதாரங்கள் பற்றிய குறிப்பு ..	34 – 43
அத்தியாயம் 1	மைலீசிய மரபு ..	44 – 83
,, 2	விஞ்ஞானமும் சமயமும் ..	84 – 134
,, 3	எபிசோசு நாட்டு எரக்கிளீட்டசு ..	135 – 176
,, 4	ஈலிய நாட்டுப் பார்மீனடிசு ..	177 – 205
,, 5	அக்கிரகாசு நகரத்து எம்பிடோக்கிளிசு	206 – 263
,, 6	இளாகொமெனே நகரத்து அனக்ச கோரசு	264 – 289
,, 7	பைதாகரசவாதிகள் ..	290 – 319
,, 8	இனிய ஈலியவாதிகள் ..	320 – 340
,, 9	மிலட்டசு நாட்டு லியூசிப்போசு ..	341 – 361
,, 10	சமரசவாதமும் பிற்போக்கும் ..	362 – 374
	அரும்பத அகரவரிசை ..	375 – 390
	அகரவரிசை	393 – 402

முன்னுரை

ஆதி கிரேக்க மெய்யியல்

ஆதி கிரேக்க மெய்யியலின் அண்டவியற் சாரபு

I. உலகு பற்றிப் பாரம்பரியமாக வழங்கி வந்த கொள்கைகளும், வாழ்க்கையை ஒழுங்குபடுத்தற்கு உதவிய வழமையான விதிகளும், வழக்கொழிந்து போனதின பினனரே, இயற்கை பற்றியும் ஒழுக்கம் பற்றியும் ஆராயும் மெயயியற் சிந்தனை முறைகளினுல் மட்டுமே திருப்தி செய்யகூடிய தேவைகளேக கிரேக்க மக்கள் உணரத் தொடங்கினர் எனலாம். ஆனுல இததேவைகளே அவர்கள் ஒரே முறையில் உணர்ந்து கொண்டனர் எனக் கூறுவதும் பொருந்தாது. இயற்கை பற்றிய பழமைக் கருத்துக்கள் முற்றுக வழக்கொழிந்து போகும்வரை, மனிதனது ஒழுக்கம் பற்றிய பணடைய விதிகளின் பொருத்தம் பற்றியும் யாருக்கும் அதிக சந்தேகம் ஏறபடவில்லை ; இக்காரணத்தினுல், அக்காலத்து முதன் முதலில் மெய்யியலில் ஈடுபட்டோர் யாவரும் தம்மைச் சுற்றியுளள உலகுபற்றி ஆராய்வதிலேயே பெரிதும் ஈடுபட்டனர். காலப்போக்கில ஏற்பட்ட புதிய தேவை ஒனறைப் பூர்த்தி செய்வதற்கென அளவையியல உருவாக்கப் பட்டது. அண்டவியல்பற்றிய ஆராய்ச்சிகளேத் தொடர்ந்து பொது மக்களது நம்பிக்கைகளுக்கும் விஞ்ஞானிகளது முடிபுகளுக்கு மிடையே இருந்த பெரிய வேற்றுமைகள் வெளிக்கொணரப் பட்டபோது, அதுவே விரைவில் தீர்க்கபபடவேண்டியவோர் பெரிய பிரச்சினையாயிறறு. அன்றியும் இதன் காரணமாக மெய்யியலாளர்கள் பலரும், சாதாரண மக்களது நம்பிக்கைகளுக்கெதிராகத் தமது முரணுரைகளே நிறுவுவதற்கு வேண்டிய முறைகளேக் கற்கவேண்டியிருந்தது. இதற்குச சற்றுப் பிந்தியகாலத்தில், அளவையியல் பற்றி எற்பட்ட ஆர்வம் காரணமாக, அறிவின் தோற்றம், வாய்ப்பு என்பனபற்றிய விஞகைள் எழுந்தன; ஏறக்குறைய இதற்குச் சமமான காலத்தில் பாரம்பரியமான ஒழுக்கமுறை சீர்குலைந்து போகவே, ஒழுக்கவியல் தோன்றியது. அளவையியலும், ஒழுக்கவியலும் தோன்றிய காலத்திற்கு முந்திய காலம் இவ்வகையில் ஓர் தனித்தன்மையுடையதாகையால் நாம் அதனேப் பற்றித் தனியாக ஆராய்தல் பொருந்தும்.[1]

1. தெமோகிரித்தோசு, இங்கு குறிப்பிடபபட்ட காலப் பகுதிக்குப் பிந்திய வரே எனபது கவனிக்கப்படலாம. சோகிடீசுருக்குச சமகாலத்தவரும் அவரிலும் இளைஞருமான இவரை சோகிரதருக்கு முநதியோரோடு சேர்தது ஆராயும் பொதுவான வழக்கம், வரலாறறு வளர்ச்சியையே தெளிவற்றதாக்கு

உலகம் பற்றிய பாரம்பரிய கருத்து

II. விஞ்ஞானமும், மெய்யியலும் தோன்றியது, உலகம் தோன்றியதற்கு நெடுங்காலத்தின் பின்னரே என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். ஈசியன் கடலேயொட்டிய பகுதிகள் புதிய கற காலத்திலிருந்தே உயர்ந்தவோர் நாகரிகத்திற்கிடமாக விளங்கின. எகிப்திய, பாபிலோனியநாகரிகங்களிலும் பழமையான இந்நாகரிகம் பல முக்கிய விடயங்களில் அவற்றிலும் சிறப்புடையதாக விருந்தது. இவர்களது வளர்ச்சி சிறிது காலத்திற்குத் தடைப்படுவதற்குக் காரணமாயிருந்தவர்களான, நாகரிகம் குறைந்த வடவர்களிடமிருந்தும், இம்மக்கள் புதியனவும், முக்கியமுடையனவுமான சில பண்புகளை பெற்றனராயினும், கிரேக்க நாகரிகம் எனபது பெருமளவிற்கு ஈசிய நாகரிகத்தின் மறுமலர்ச்சியும் தொடர்ச்சியுமே என்பது நாடோறும் தெளிவாகிக்கொண்டு வருகிறதெனலாம். மத்திததரைக் கடற் பகுதிகளின் ஆதிவாசிகளின் தொகை அங்கு வந்து நுழைந்தவர்களினது தொகையிலும் மிக அதிகமாயிருந்திருக்க வேண்டுமெனபதும் சில தலைமுறைகளுக்குள் ளாகவே அவ்வாறு வந்து குடியேறியவர்கள் யாவரும் இவர்களோடு இரண்டறக் கலந்திருக்கவேண்டுமெனபதும் நன்கு புலப்படுகிறது. இவ்வாறு நடைபெறுவதைத் தடுக்க முனைந்த பாட்டா போன்ற ஓரிரு நகரங்களைத்தவிர ஏனைய விடங்களிலும், இவ்வாறே புதிதாக வந்தோர் ஆதிவாசிகளோடு சேர்ந்து கொண்டனர் எனலாம். எவ்வாறுயினும் கிரேக்க கலைகள், கிரேக்க விஞ்ஞானம் என்பவற்றிற்கு, இப்பகுதியின் ஆதிவாசிகளான பழைய சமூகத்தினருக்கே நாம் கடமைப்படடிருக்கிறோம்[1].

கினறது. புரொதாகரசுவுகுப பிந்தியவரான தெமோகிரிததோசு, அறிவியல், ஒழுக்கம் என்பன பறறித் தமது முன்னோரை எதிநோகியனவறறிலும் பெரிய பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருநதது (See Brochard, "Protagoras et Democrite," *Arch.* ii. p. 368).

[1] See Sir Arthur Evans "The Minoan and Mycenean Element in Hellenic Life" (*J. H. S.* xxxii. *277 Sqq.*), இந்நூலிறபினவரு மாறு கூறப்பட்டுள்ளது (ப. 278): புதிய மலாச்சியின்போது நமமுனனே எதிரபபடுபவர்கள் மஞ்சட்டோலியுடைய ஆகையர்களும வெளுதத தோலை யுடைய பிறருமான வடவர்களலல. நாம் இங்கு காணபவர் கருமயிருடைய, கபில நிறதனினரான வோர் சாதியினரே யெனக....மூநதிய கால மினைவ, மைசீனிய சுவரோவியங்களிலிருக்கும் உருவங்களிலிருந்தே இவர்கள எமக்கு முதலில அறிமுகமாகினறனர் ". ஆனல வரலாற்றுக்கால கிரேக்காகள் " மினோவர் " களே எனபது உண்மையானல, சேர். ஆதர் இவான்சு " மினோவர் " களைக் கிரேககர் என அழைக்கத் தயங்குவது எதற்காக ? ஆக்கியர்களும், டொரியர்களும் கிரேககர் என அழைக்கப்படுவதற்கு எவ்வகை விசேட உரிமையையும் பெற்றவர்களலல ; எனெனில் கியூமேயுக்கு இப்பெயரை முதலிற் கொணர்ந்த பொயோதியா நாட்டு கிரேசுகள், இவர்களிலும் பழமையான ஈர் சாதியினர். " எலனிய நாகரிகத்திற்கு

அக்கிரகாசு நகரத்து எம்பிடோக்கிளிசுவைத் தவிர நாம் இந் நூலில் ஆராயப்போகும் ஏனை மெய்யியலாளர்கள் யாவரும் அயோனியர்களே யென்பது குறிப்பிடத்தக்கதாகும். எம்பி டோகிளிசு அயோனியரல்ல வென்பதும் தோற்றத்தளவிலேயே யொழிய உண்மையில்ல்ல வெனலாம். அகிரகாசு நகரம், சீலா எனும் றேடிய குடியிருப்புப் பகுதியிலிருந்தே தோற்று விக்கப்பட்டது. றேடிசு, டொரிய பகுதியென்பதே அங்கீகரிக்கப் பட்ட கருத்தாயினும், நெடுங்காலமாக ஈசிய நாகரிகத்திற்கு அதுவோர் கேந்திர நிலையமாக விளங்கியது. ஆகவே சீலாவிற் சென்று குடியேறியவர்கள், புதிய டொரிய மேன்மக்கள் கூட்டத் தைச் சோநதவர்கள் எனக் கருதுவதிலும் பார்க்க, பழைய குடிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கருதுவதே அதிக பொருத்த முடையதெனலாம். பைதாகரசு, தமது கழகத்தை ஆகிய நகரமான குரோட்டனில் நிறுவினரெனினும், அவர் சாமோசு வைச் சேர்ந்த அயோனியரே.

ஆகவே உலகைப்பற்றி நன்கு ஆராய முனைந்த அக்கால கிரேக்கர்கள், முன்பு யாருமே முயற்சிக்காத ஒரு பணியைத் தொடங்கும் நிலையிலிருக்கவில்லை என நாம் உணர்தல் வேண் டும். எமக்குக் கிடைத்துளள ஈசிய கலைச்சின்னங்களை, அக் காலத்தில உலகத்தின இயற்கை பற்றிய திருப்திகரமானவோர் கொள்கை எலவே இருந்திருகவேணடுமென்பதையே நிரூபிக் கின்றன. ஆயினும் அக்காலப் பதிவுகளிற் கையாளப்பட்டிருக் கும் எழுத்து முறைகளை நாம் நன்கு விளங்கிக்கொள்ளும் வரை, அவர்களிடையே நிலவிய இவ்வுலகக் கொள்கைபற்றிய பூரண விவரங்களையும் அறிந்துகொள்ள வாய்ப்பேற்படாது என

முந்திய" எனனும் சொற்றொடருககுப் பொருளெதுவும் இருபபதாக எனக்குத் தோறை வில்லை. பிறகாலத்தில நாடு முழுவதிற்குமே தமது பெயரை ஈநத ஆக்கிய சாதியினருககு முனபே, ஈசியாகள அஙகிருநதனர் எனப் பொருள கொண்டால், அஃது உணமையேயாயினும், அது கவனிதத்தற்குரிய வொன்றலல. அவ்வாறலலாமல, புதிய கற்காலத்தின இறுதிகளுப் பின்னர, ஒரு காலத்தில ஈசியப் பகுதிகளில குடிசன அமைப்பில் உண்மையில ஓர் மாறறமேற படட தென்பது இசசொறறொடரின பொருளாயின, சோ ஆதா இவானசுவே கூறுவது போல அது தவருன கொளகையே. அலலது ஈசியப் பிரதேசஙகளுக்கு வடவாகளிலுலேயே கிரேக்க மொழி கொணரப்பட்டது எனக் கொள்வதாலும் (இதுவே உண்மையான பொருள் போலத தோனறுகிறது) அதை நம்பு வதற்குப் போதிய ஆதாரம எதுவுமிலலை. இதற்கொபபாக வேறெஙகும் நாம் காணவும் இலலை. நமக்குத தெரிந்தளவில் கிரேககம் அதனது சொல வளத் தைப் பொறுததவரையில ஒரு கலபபு மொழியே. ஆனல அதன அடிப் படை அமைப்பு, இநதோ-ஐரோப்பிய மொழியின் எந்தக கிளையின் அமைபபி லும், இந்தோ-இரானிய மொழிகளின் அமைபபையே அதிகம் ஒத்துளளது. உதாரணமாக " விருத்தி " எனனும் இலக்கண முறை சங்கதம், கிரேக்கம்,

லாம். எகியாதிரியாடாவைச் சேர்ந்த கல்லறையிற் சிததிரிக்கப் பட்டிருக்கும் சடங்கு, இறந்தவர்களது நிலேபற்றித் திட்டவட்ட மான கருத்தொனறிருந்தது என்பதைக் காட்டுகினறது என் பதில் ஐயமில்லே. எகிபதியர்களேயும் பாபிலோனியரையும் போல இறையியல் ஆராய்ச்சியை விருத்தி செய்வதிலும் ஈசிய மக்கள் வல்லவராயிருந்தனர் என்பது இதிலிருந்து புலப்படுகினறது. பிற்காலத்தில இவர்கள் நடாத்திய இறையியல் ஆராய்ச்சியின் சின்னங்களேயும் காணும் வாய்ப்பு எமக்கு ஏற்படும். அனறியும் சைரோசுநாட்டுப பெரிக்கைடிசு எழுதியவற்றிலிருந்து இடைத் துள்ள பகுதிகளே, இத்தகைய இறையியற சிந்தனேப் பகுதிக ளெனக் கருதினுலொழிய வேறெவவகையிலும் அவற்றை விளக்க மூடியாதெனபதையும் இங்கேயே கூறிவிடலாம். எகிப் திய, பாபிலோனிய, ஈசிய நாகரிகங்கள் என்பன ஒனறை யொன்று வளபபடுத்தியுளளன என்பதைப்பற்றி ஐயமெதுவும் இல்லேயெனினும், இவவிறையியற் சிந்தனே மூறையை ஈசியர் கள் எகிப்தியர்களிடமிருந்தே பெற்றுகொண்டனர் எனக் கொள் வதற்குக் காரணமெதுவுமில்லே. எகிப்தியரிடமிருந்து எவ்வாறு கிரீட்டர்கள் பல பணபுகளேப் பெற்றுக்கொண்டனரோ அதே போல கிரீட்டர்களிடமிருந்து பலபண்புகளே எகிப்தியரும் பெறறுக் கொண்டனர். எனினும், அம் மாநதிப் படுக்கை நாகரிகங்களில் லாதிருந்ததவோர் உயிர்த்துடிப்பு இக்கடல்சார் நாகரிகத்திற் காணப்பட்டதெனலாம்.

மேலும், வலிமையுடையனவாயிருந்த பழைய அரசுகளேச் சீர் குலேத்ததன மூலமும் இறுதியில் பாபிலோனிய, எகிப்திய சிந்தனேமுறைகள் நசிந்து போவதறகுக் காரணமாயிருந் தவை போன்ற மூட நம்பிக்கைகளின் வளர்ச்சியைத் தடை செய்ததன் மூலமும், வடவர்கள் படையெடுப்பு கிரேக்க மேதைத் திறனின் விருதகிகுப் பெருமளவில் உதவியது என்பது வெளிப் படை. ஈசிய எசசங்கள் சிலவற்றைப் பார்வையிடும்போது, மூட

பழைய பாரசீகம எனும மொழிகளில மட்டுமே காணபபடுவதொன்ருகும். கி. மு. பத்தாம் நூற்ருண்டிற்கும, இருபதாம நூறருண்டிறகும் இடைபபட்ட காலத்தே வழஙகிய கிரேகக மொழி, அககாலததே வழஙகிய பாரசீக மொழியி விருநது அதிக வேறுபாடுடையதாக விருந்திருக்க மூடியாது. இலததீனிலிருநது பிறந்த மொழிகள பிற்காலததில சதம மொழிகளாக (கிழககு மொழிக ளாக) மாறியதன் மூலம் நிரூபிககபபட்டிருப்பது போல, சென்ரம மொழிகள் (மேற்கு மொழிகள), சதம் மொழிகள எனும் பாகுபாடு பொருததமான வொன்றலல வெனலாம். பழைய இந்திய மொழி, பழைய பாரசீக மொழி என்பனவறறில "நூறு" எனபதறகு வரும் "N" எனும் எழுதறகுப் பதிலாக "A" எனும் எழுதது உபயோகிக்கப்படுவதைப் போல, கிரேகக மொழியிலும இருபபதால் அதுவும் ஒரு சதம மொழியே என அழைபபது அதிக பொருத்தமுடையதாயிருக்கும் எனலாம்.

நம்பிக்கையிலுல் அவர்களது சிந்தனை வளர்ச்சியே குன்றிப் போகலாம் எனனும் அபாயம் உண்மையிலேயே இருந்தது என்பது நமக்குத் தெரிய வருகிறது. எனினும் அப்போலோ வழிபாடு வடகலிலிருநதே, ஆக்கியர்களிலுல் இபபகுதிகளிற் புகுத்தப்படடிருகக வேண்டுமெனத் தோனறுகிறது.[1] நமக்குத் தெரிந்துளளவறறை வைத்துக் கொண்டு நோக்குகையில், ஒலிம்பிய சமயம் என அழைக்கப்பட்டுள்ள மரபுகளும், வடக்கிலிருந்தே பெறபபடடுள்ளன வெனத் தோனறுகிறது. ஆயினும் இவவொலிம்பிய சமய மரபுகள பெற்ற கலா உருவம், மத்தித் தரைக் கடல மகளினது பண்பாடடின முத்திரை பதிக்கபபட்ட தாகக காணப்படுகிறதெனலாம். அவ்வாறு தமது மனதிற் கேறற கலாவடிவததிலிருந்ததலுலேயே ஒலிம்பிய மரபுகளின் பால் அவாகள் ஈாக்கபபட்டனர். ாசிய சமயம் தொடர்ந்திருந்தால் அவர்களது சிந்தனை வளர்சசி அதலுல் தடைப்படும் நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆலுல் ஒலிம்பிய சமயம் அவ்வாறு அவர்களைக் கட்டுப்படுத்தியிருக்க முடியாது. ஆக்கியர்களினது வருகையே கிரேக்கர்களிடையே ஒரு புரோஹித வகுப்பினர் ஏறபடாததற்குக் காரணமாயிருந்திருத்தல வேண்டும். சுதந்திரமானவோர் விஞ்ஞானம் கிரேக்கர்களிடையே தோன்றி வளர்வதற்கு இதுவும் ஓர் காரணமாயிருந்திருத்தல் வேண்டும்.

III. ஓமரது நூல்களில் இப்பண்புகள் யாவும் நன்கு புலப்படு 1. ஓமர்
கின்றன. அவர் சந்தேகததிறகிடமின்றிப பழைய ாசிய சாதியினரே யென்பதும், பழைய மொழியிலேயே எழுதினுரெனபதும் உண்மையெனினும்,[2] ஆக்கிய அரசர்களது சபைகளுக்காகவே அவர் பாடினுர். மேலும் அவராற் புகழ்ந்து பாடப்படுவோர் பெரும் பாலாக ஆக்கிய கடவுளரும் தலைவர்களுமே.[3] அவரது காவி

[1] See Farnell, *Cults of the Greek States*, Vol. iv. pp. 98 Sqq.

2. ஓமரது நூல "பினனா கிரேககததோடு சேர்ததுக் கொள்ளப்பட்டவோர் பழைய மினனுவகாவியமே" எனும் சேர் ஆர்தா இவானசுவின் கருத்தும், இது நம்பததகுநத வொன்றெனக. காவியத்தின மொழி ஆர்க்கேடிய சைபிரிய மொழிகளுடனே அதிகம் ஒத்திருகிறது. ஆாககேடியர்கள வடகலிருநது வநதவர்கள் எனபது கொஞ்சமேனும் பொருத்தமுடையதாகக் காணபபடவில்லை. மேலும் கைப்பற்றப்பட்ட நாட்டுப புலவர்கள் தம்மை வெற்றி கொண்ட அரசாகளது சிறப்பைப் புகழ்நது பாடியதறகு வேறு பல உதாரணஙகளும் உள்ளன.

3. பேராசிரியர் இரிச்சுவே (**Early Age of Greece**, i. p. 674) பழைய சாதியினரிடையே வழஙகிய எரகினிசு, எரிகுதோனியசு, எரிசிகிதோன் எனும் பெயாகள் கிரேகக மொழியிற பொருளுடையனவா யிருக்கினறனவென வும ஆகியர்களது பெயாகளான அக்கிலீசு, ஒடீசியசு, அயகோசு, லெயாதீசு, பீலீயசு எனபனவறறிறகுக கிரேக்க மொழியிற் பொருளில்லையெனவும் சுட்டிக் காடடியுளளாா. அகமெமுனுேன், மெனெலேயசு என்பன கிரேகக பெயர்கள

யத்தில் உலகு பற்றிய பாரம்பரிய கருத்துக்கள் அதிகம் காணப் படாமைக்குக் காரணம் இதுவே. காவியத்தில் வரும் கடவுளர் கள் யாவரும் மானிடத் தன்மையுடையோராகவே வருணிக்கப் படுகின்றனர். அதிக வளர்ச்சியடையாத பழமைக் கருதுதுக்கள் எவையும் அங்கு இடம்பெறவில்லை. பழைய நம்பிக்கைகள், வழக்கங்கள் சிலவற்றின் சின்னங்கள் இருப்பினும் அவை மிகமிகக் குறைவே. ஆட்கொலைக்குரிய தூய்மையாக்கச்சடங்கு பற்றி ஓமர் ஒருமுறையாயினும் குறிப்பிடவில்லை எனபதைப் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். பழைய சாதியினர் செய்தது போல மாண்ட வீரர்கள் புதைக்கப்படுவதற்குப் பதிலாக ஓமரது காவியத தலைவர்கள் தகனம் செய்யப்படுகின்றனர். ஆவிகள் பற்றியும் அதிகம் கூறப்படவில்லை. **இலியாட்டுவில்** குறிப்பிடப் படும் நரபலிச் சம்பவத்தை யொட்டி ஓமரது நூல்கள் முழு வதிலும் உளள ஒரேயொரு நரபலி இதுவே. பத்தி ரோக்கிலிசு என்பானின் ஆவி பறறிக் குறிபபிடபபடுகினறது என்பது உண்மையே. அன்றியும் ஒடிசியின்[1] பதினேராவது பாகத்தில் **நெக்கியா** பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இத்தகைய கருத்துக்கள் மிக மிக அபூர்வமாகவே காணப்படுகினறன. ஆகவே, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலாவது, ஓமர், எந்த அரசனுக்காகப் பாடினாரோ அந்த அரசனைச் சார்ந்த சமுதாயத் திலாவது, உலகம் பற்றிய பாரம்பரிய கருத்து எனைய இடங்க ளுக்கும் முனனராகவே கைவிடப்பட்டு விட்டதெனலாம்.[2] இடை யிடையே இக்கருத்துக்கள் காணப்படுகினறன வென்பதற்காக நாம் எமது முடிபை மாற்றவேண்டியதில்லை.

2. எசியொட்டு

IV. ஆனால் எசியொட்டு எழுதியவற்றைப் பார்க்கும்போது நாம் வேறோர் உலகுக்கே வந்துவிட்டாற போன்ற உணர்வு எமக்கு ஏற்படுகிறது. கடவுளர் பற்றி அவர் கூறும் கதைகள் பகுத்தறி வுக்கு ஒவ்வாதனவையாய் இருப்பதுமட்டுமன்றி மனத்தில் வெறு

எனபது உண்மையே. பழைய சாதியினரைச் சேர்ந்தவோ இளவரசியைப் பெலோபபுசு மணம் செய்ததன்மூலமாக அததிரியசு தனது அரசுரிமையைப் பெற்ற காரணத்தினாலேயே இவ்வாறு ஏற்பட்டது. நாடு முழுவதினுமே புதிய குடிகள் பழைய குடிகளோடு சேர்ந்து கொண்டனர் என்பதற்கு இதுவுமோர் எடுத்துக்காட்டெனக.

1. ஒடிசியின் xi வது பாகதத்தில் சில ஒபிசக்கருத்துக்கள காணப்படுகின்றன வாதலால அது பிற்காலத்த தெனக் கருதப்படுகிறது. ஆனால் இனறு நமக் குத் தெரிநதவைகளை மனதிற் கொணடு நோக்குகையில், அத்தகைய கருது கோள் அவசியமற்றதாகின்றது. இப்பகுதியிற காணப்படும் ஒபிசக்கருதுகக ளெனப்படுபவை அதிக வளர்ச்சியற்றவை. ரிய மக்கள் இவற்றை முன்பே கொண்டிருந்திருத்தல் வேண்டும். ஒபிசம் உண்மையில பழைய கொள்கை களின் மறுபிறபபே யெனக.

2. இவை பற்றி Rhode, *Psyche*[3] i. pp. 37 *sqq*. (= Ps[1].pp.34 *Sqq*.).

ப்பை ஏற்படுத்துவனவாயுமுள்ளன. ஆனால் எசியொடடு இவற்றை யெல்லாம மகவும் முக்கியமானவையாகக் கருதுபவாபோலவே கூறுகினறார். தேவதைகளே அவா பினவருமாறு கூறவைக் கிறார் : " பொயயான பலவறறை உண்மைபோல நாம் கூறவல லோம் ; ஆனால நாம் விரும்பும்போது உண்மையைக் கூறவும் எமகருத் தெரியும. "[1] ஓமரது காவியங்களுக்கும் தனது காலத் திறகு மிடையே யிருநத வேற்றுமையை அவர் உணாந்திருந தா என இதிலிருந்து தெளிவாகிறது. ஓமரது காவியங்களிற் காணபபடும் களிபபுணாவை இங்கு காடடுமம. கடவுளாகளைப் பறறிய உண்மையைக் கூறுவது முககியமென இஙகு கருதப் படுகிறது. ஓமரது காலத்திறகுப பிநதிய, வளஙகுனறிய காலம் தனனுடையது எனபதையும் எசியொடடு உணர்ந்திருநதார். உலகததிலா காலஙகளைப் பறறிக கூறுகையில வெண்கலக் காலததிறகும், இரும்புக் காலததிறகுமிடையே புதிய கால மொனறைப் புகுததுகினறார். ஓமரால பாடபபட்ட வீரர்களது காலமே அது. முந்தியதான வெண்கலக் காலத்திலும், எசி யொடடு வாழ்ந்த காலமான இரும்புக் காலததிலும் அது மிகச் சிறந்ததெனக.[2] ஓமா பாடிய வகுப்பினருக்கல்லாது தான் வேறேர் வகுபபினருக்காகப் பாடிஞா எனபதையும எசியொட்டு நனகு உணாநதிருந்தா. ஓமராற பாடப்பட்ட ஆக்கிய அரசர் கள், எசியொடடின காலததில், பொதுமக்களோடு தொடர்பில் லாதவர்களாகவும, " செம்மையற்ற சடடஙகளே " இயறறுபவர் களாகவும் விளஙகினர். ஆகவே பழைய சாதியினராகிய மந்தை மேய்ப்போா, கமஞசெய்வோர் எனபோரை நோக்கியே எசி யொட்டு பாடிஞர். " ஆக்கிய மத்திய கால "த்தின வளரும் ஆடம்பர வாழ்வும் எனறும் பொதுமக்களது நீலைக்கு அப்பாற் பட்டனவாகவே இருந்தன. உலகம் பறறிய பணடைய கருத்து அவர்களிடையேயிருந்து அற்றுபபோகவில்லை ; ஆகவே அவர் களைப் பற்றி முதன முதலில் எழுத மூனைந்த கவிஞன், தனது கவிதைகளில், அவர்களிடையே நிலவிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டது இயலபானவொன்றே. அதஞலேயே எசியொட்டின் பாடலகளில், ஓமரால வெறுத்தொதுகபபட்ட பழைய அநாகரி கக் கருத்துகளைக் காணகூடியதாய் இருக்கிறது.

1. Hes. Theog. 27 (முதற்கவிதையின சொறகள xix வது ஒடிசி 203 இல் இருந்து பெறபபடடிருக்கினறன). ஓமருகரும் ஊககததை அளித்த தேவதை களே இவாகள. இதிலிருந்து எசியொடடு அறுசீரடிகளையே எழுதினரெனவும், காவிய நடையைப் பயனபடுததினரெனவும் அனுமானிகக லாம்.

2. இஃது எசியொடடுகரு நலல வரலாற்றுணாவு இருந்த தெனபதைக் காடடுகினறது. " ஐரேக மதிய காலம " எனபபடுவது வரலாற்றின் நேரிய போகருகரு முரணு வொனறு என்பதை முதலிற சுட்டியவா எசியொட்டே யொழிய நமது தறகால வரலாற்ருசிரியர்களலலவென்றறிக.

எனினும், மக்களிடை முனபிருந்தே நிலவிவந்த மூட நமபிக்கைகளேயே எசியொட்டுவின் தேவபாரம்பரியத்திற் (தியோகனி) காண முடிகிறதெனக் கொள்வது தவருகும். ஓமரது காவியத்திற் காணப்படுமு முன்பிருந்த சூழ்நிலே மாற்ற மடைந்து விட்டதெனபதையும், எப்படியாயினும் எசியொடு இப் புதிய சூழ்நிலேயின் செலவாகுக்குட்படுதல் வேண்டும் என்பதை யும் மறுக்க முடியாது. ஆகவே அவர் தன்னேயறியாமலே தனது நூலின மூலம ஓர் முனனேடியாகிவிட்டார் எனலாம். பினனா வளர்ச்சியடைந்த அயோனிய விஞ்ஞானம், வரலாறு என்பனவற்றின வித்து எசியொட்டுவின பாடலகளிற காணப் படுகின்றது. அனறியும் எந்தக் கருத்துக்கள் அழிநதுபோவதை அவர் தடுக்க விரும்பினாரோ, அக்கருத்துக்கள் விரைவில் மறைந்து போவதற்கு வேறெவரையும் விட அவரே பெரிதும் காரணமாயிருந்தாரெனலாம். கடவுளர்கள் பறறிய கதைகள் யாவறறையும் ஒருமுறைப் படுத்துவதற்கானவோ முயறசியே எசி யொட்டுவின " தேவபாரம்பரியம் " எனனும் நூல. ஆனால் சறறேனும் ஒழுங்கில்லாதவையான புராண வரலாறுகளே ஒழுங்கு படுத்த முயறசிப்பது அவறறின் சிதைவுக்கு அடிகோலும் என் பதைக் கூறவேண்டியதில்லே. மேலும் எசியொட்டு தனது காவி யப் பொருளே எடுத்துக கூறும் விதம் பழைய சாதியினரது மனேபாவத்தைப் பிரதிபலிப்பதாயினும், அவர் பாடும் கடவுளர் கள் பெரும்பாலும் ஆக்கியர்களது கடவுளர்களே. இது அவரது நூல் முழுவதும் ஓர முரண்பாட்டை எற்படுத்துகிறது எனனே சியர்களது கடவுளர்க்கு ஒரு வரலாறறை அறிந்து அக்கடவுளர் களது பதவிகளேயும் கலேகளேயும் பகிர்ந்து கொடுத்தவர்கள் ஓம ரும், எசியொட்டுமே என எரொடோதசு கூறுகின்றார்[1]. அவர் கூறுவது முறறிலும் சரியானதே. பழைய கடவுளர்க்குப் பதிலாக ஒலிம்பிய கடவுளர்கள் மக்கள் மனதில் இடம் பெறறன ரெனறால், அதற்கு ஓரளவுக்கு எசியொட்டுவும் பொறுப்பாளியே. இவர்களது பாடல்களில் மனிதர்களேப் போல வருணிக்கப்பட்ட கடவுளர்களேத் தாம் வழிபட்ட பழைய தெய்வங்களே யெனச் சாதாரண மனிதர்களினால் இலகுவில் எற்றுக்கொள்ள முடிய விலலே. இக்கடவுளர்கள், மக்களுக்குப் பழகமான இயல்புகளே அற்றவர்களாகவே இப்பாடல்களில் வருணிக்கப்பட்டிருந்தனர். இப்புதிய கடவுளர்கள் மக்களது தேவைகளேத் திருப்தி செய்ய ஏறறவர்களல்ல. நாம் பினனர் ஆராயவிருக்கும் சமய மறு மலாச்சிக்கான காரணம் இதுவே.

அண்ட வறபத்தியல் V. எசியொட்டு தமது காலச் சூழ்நிலேகளின் செல்வாக்குக் குட்பட்டிருந்தார் என்பதற்குப் பிற ஆதாரஙகளும் உள. " தேவ

1. Herod. ii. 53.

பாரம்பரியம்" எனும் அவரது நூல் அண்டவுற்பத்தியியல் பற்றியும் கூறுவதாய உள்ளது. ஆனால் அண்டவுற்பத்தியியலைப் பொறுத்தவரையில், அவர் தமது கொள்கையைக் கூறவில்லை யெனவும் எலவே நிலவிய பாரம்பரிய கருத்துக்களையே விருத்தி செய்தனரெனவும் தோன்றுகிறதெனலாம். எனினும் அவர் அண்டவுற்பத்தியோடு பிணைந்த தொடர்புடையவையான **கயோசு, ஈரோசு** எனும் கருதுகோள்களை குறிப்பிட்டபோதிலும், அப்பெயர்கள் தரப்படுகின்றனவே யொழிய, அவை அவரது கருத்தோடு எவ்விதத்திலும் தொடர்புடையனவாக்கப்படவில்லை. இவ்விரு கருத்துக்களும் பழைய சிந்தனை முறை யொன்றைச் சார்ந்தன போற தோன்றுகின்றன. உலகத்தின ஆரம்பநிலையைக் கற்பனை செய்ய முயல்வதே **கயோசு** எனும் கருத்து. அதன்படி உலக ஆரம்பம் உருவமற்றவோர் கலவையல்ல ; எப்பொருளும் தோன்றுவதற்கு முன்பிருந்த "ஒ" எனற வெளியே அஃது. இது வளர்ச்சியற்ற காலததைச் சேர்ந்த ஒரு கருத்தன்று என நாம் திடமாக உணரலாம். எந்தப் பொருளுமே தோன்றுவதற்கு முன்பிருந்த நிலையைக் கற்பனை செய்யும் எண்ணம் ஆதி மனிதனுக்கு ஏற்படுவதிலில்லை ; தொடக்கத்தில் எதோ ஒரு பொருள் இருந்ததென அவன் எண்ணிக்கொள்ளுகிறான். **ஈரோசு** எனும் மறறைய கருத்து, உலக ஆரம்ப முழுவதிற்கும் காரணமான சிருட்டித்துடிப்பை விளக்குதற்கென ஏறபட்டிருக்க வேண்டும். இவையிரண்டும் உணமையில் ஆராய்ச்சியின மூலம் பிறந்த கற்பனைகளே யென்பது தெளிவு. ஆனால் எசியொட்டினது பாடல்களில் இவை தெளிவின்றியே உள்ளன.

கி. மு. ஆறும் நூற்றாண்டின், அண்டவுற்பத்தியியல் பற்றிய சிந்தனைகளில் அதிக விருத்தி ஏறபட்டது என்பதற்கான ஆதாரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. எபிமினைடிசு, பெரிகைடிசு[1] ஆகியோரது கொள்கைகளைப் பறறியும் நாம் அறிவோம். எசியொட்டுக்கு முன்னரும் இத்தகைய ஆராய்ச்சிகள் இருந்தனவெனில், ஓபிச அண்டவுற்பத்தியியலும் அந்நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கொள்ள நாம் தயங்கவேண்டியதில்லை.[2] **கயோசு** எனும் வெளிக்கும் முந்திய ஓர் நிலையை எடுத்துகொண்டு, குரொனொசு விற்கு அலலது சியசுவிற்கு அங்கு முதலிடம் அளிப்பது இவர்கள் யாவரது கொள்கைகளிலும் காணப்பட்டவோர் பொதுவான பண்பென்க. சிறந்ததெதுவோ அதுவே முதலில் இருந்ததெனக்கருதிய, மெய்யியற் கருத்துக்களையும் கொண்ட, இறையியல்

1. பெரிகைடிசு பற்றிய குறிப்புகளுக்கு, Diels, **Vorsokratiker**, 71 B, அத்துடன் Gomperz, **Greek Thinkers**, Vol. i. pp. 85 *Sqq*.

2. தமாசியோசுவினால வருணிகக்பப்ட்ட தேவபாரமபரிய வியறகாவியம்- (***Rhapsodic Thegony***) பற்றி லொடெக்கு கொண்டிருநத கருத்துமை இதுவே.

வாதிகளுக்கும் பூரண இறையியல் வாதிகளுக்குமிடையே உள்ள வேற்றுமைகள் பற்றி விவரிக்கையில் அரித்தோதில் இதையே கருதியிருக்கவேண்டும்[1]. இப்போக்கு, விஞ்ஞான ரீதியான வளர்ச்சிக்கு முற்றிலும் மாறுபட்டதென்பதும், ஆரம்ப நிலையிற் றெய்வங்கள் இருந்தனரெனக் கூறுவதாயின், முடிவில்லாது அவர்கள் பின்னேக்கிச் சென்றிருக்கலாமென்பதும் வெளிப்படை ; ஆகவே இவ்வண்டவுறபத்தியியலாளர்கள் பற்றி, அவர்களது கற்பனைகள் பிற சிந்தனையாளர்களது ஆராய்ச்சிகளை எவ்வாறு பாதித்தன எனுமளவிற்குக் கவனிப்பதேயல்லால், விரிவாக இந்நூலில் ஆராயவேண்டியதில்லை.

கிரேக்க அண்டவியலின பொதுவான பண்புகள

VI. அயோனியர்களது இலக்கியங்களைப் பார்க்குமளவில், உலகப் பொருட்கள் நிலையற்றவை என்பதை அவர்கள் மிகவும் மனதிற் கொண்டிருந்தனர் எனபது தெளிவாகிறது. திட்டவட்டமான சமய நம்பிக்கைகளோ கருத்துக்களோ இல்லாது, அமிதமாக நாகரிகமடைந்துள்ள எந்தச் சமுதாயத்திலும் இயல்பாகவே உண்டாகக் கூடியவோர் துன்பியல் உணர்வு, இவர்களது சிந்தனையின் அடிப்படையிற் புகுந்திருந்ததெனலாம். கொலொபொனைச் சேர்ந்த மிமினமோசு என்பார் வரப்போகும் வயோதிப காலத்தில் துன்பதைதைப் பற்றிச் சஞ்சலப்படுவதைக் காண்கிறோம். இதற்குச் சற்றுப் பிந்திய காலத்தில், காட்டுமரங்களின் இலைகளைப் போல, பரம்பரை பரம்பரையாக மனிதர்கள் மடிகின்றனரே என சிமோனைடிசு பிரலாபிப்பது, ஏற்கெனவே ஓமர் வெளியிட்ட உணர்ச்சி யொனறை மீட்டுவது போல எமக்குத் தோன்றுகிறது[2]. பருவகாலங்களின் மாற்றங்கள், பொருட்கள் நிலையாமை பற்றிய இத்துன்பியல் உணர்வு நன்கு வெளிப்படுத்தப்படுதற்கு உகந்த உதாரணங்களாயின. இயற்கைச் சத்திகளினது இவ்வளர்சிதைவட்டவியல்பு, வடக்கேயுள்ள பகுதிகளிலும் ஈசிய பகுதிகளில் வெளிப்படையாயிருந்தது. அன்றியும் இப்பகுதிகளில், பருவமாற்றங்கள், வெப்பம், குளிர், ஈரலிப்பு, வறட்சி என்னும் முரண்பாடுகளுக்கிடையே நடைபெறும் பூசல்களைப் போலத் தோனறின. ஆகவே இத்தகையவோர் கண்ணோட்ட நிலையிலிருந்தே ஆதி அயோனிய அண்டவியலாளர் உலகை நோக்கினர். பிறப்பையும் மரணத்

[1]. Arist. Met, 4, 4. 1091 b, 8.

[2]. See Butcher, "The melancholy of the Greeks," in **Some Aspects of the Greek Genius,** pp. 130 sqq.

தையும், விழிப்பையும் துயிலையும் ஒப்பன போலத் தோன்றிய கோடை மாரி, பகல் இரவு என்பனவே இம்மக்கள் கண்ட உலகின் முக்கிய பண்புகளாயிருந்தன.[1]

குளிர் ஈரலிப்பு என்பவற்றை அவற்றின் முரண்பாட்டு இணைகளான சூடும் வறட்சியும் ஊடுருவ முயல்வதனாலும், சூட்டையும், வறட்சியையும் பின்னர் குளிரும் ஈரலிப்பும் ஊடுருவப் பார்ப்பதனாலும் பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது வெளிப்படை. மனித சமுதாய வழக்கிலிருந்த சொற்களினாலேயே இம்மாற்றங்கள் யாவும் வருணிக்கப்பட்டன ; ஆதி நாட்களில், இயற்கை நிகழ்ச்சிகளின் ஒழுங்கிலும், மனிதவாழ்க்கையிற் காணப்பட்ட ஒழுங்கையே மக்கள் அதிகம் உணர்ந்திருந்தனராதலால் இது இயல்பானதேயென்க. சட்டங்களினாலும், வழக்கங்களினாலும் அமைந்தவோர், நல்லுறவு நிலவிய, சமூகத்தில் மனிதன் வாழ்ந்தான். ஆனால் அவனைச் சூழவிருந்த உலகம் எவ்வகை நியதியுமின்றி, ஒழுங்கெதுவுமின்றி இருந்ததாகவே அவனுக்கு முதலிற் றோன்றியது. இதனாற்றான் முரண்பாடுகள் ஒன்றையொன்று ஊடுருவியபோது அது அநியாயம் எனவும், அவ்வாறு ஊடுருவாது சமானமாகவிருந்தபோது அது நியாயம் எனவும் கூறப்பட்டது. பின்னர் வழங்கிய "கொசு மொசு" (அண்டம்) எனும் சொல்லும் இக்கருத்தின் அடிப்படையிலேயே எழுந்தது என்க. முதலில் அச்சொல் படைகளின் கட்டுப்பாட்டையும் அதன் பின்னர் நாட்டின் ஒழுங்கான அரசியலமைப்பு முறையையும் சுட்ட வழங்கியது.

ஆயினும் இஃது போதியதாய் இருக்கவில்லை. முரண்பாடுகளிடையே நடைபெறும் ஓர் இடையறாத பூசலே உலக நிகழ்ச்சித் தொடர் எனும் கருத்து முந்திய அண்டவியலாளருக்குத் திருப்தியளிக்கவில்லை. யாதேனும் பொதுவான ஓர் அடிப்படையிலிருந்தே இம்முரண்பாடுகள் தோன்றுகின்றனவெனவும், அதனுள்ளேயே அவை இறுதியிற் சென்று மறைகின்றனவெனவும் அவர்கள் கருதினர். முரண்பாடுகளுக்கும் முந்தியதானவொன்றை, மாற்றங்கள் யாவற்றினுக்குமூடாக நிலைத்து நிற்

1. *University of Chicago Chronicle*, Vol. xvi. No. 4. "The Background of Greek Science:" பேராசிரியா யே. எல். மையர்சு எனபவரால எழுதப்பட்ட மேறபடி கட்டுரையில இககருதது நன்கு விளககபபட்டிருக்கிறது. "சமயததிலிருநது தததுவமவரை" எனும் தனது நூலின் முதல் அத்தியாயததில் திரு. கோணபோட்டு கூறியிருப்பதைப் போல, "முரண்பாடுகள" பற்றிய இக்கொளகை சமயக் கருத துக்களிலிருந்து பெறபபட்டதென நாம் எண்ணவேணடியதிலலை. இததகைய காரணம எதுவுமினறியே, இமமுரண்பாடுகள் கிரேகக நாடடவரது கவனத்தைக கவர்கினறன. ஆனால நடைமுறையில் கமககாராகளது மாந்திரீகங்களி லும் இககருத்துக்கள் பயன்பட்டன எனபது உணமையே.

குந் தன்மையுடையதும், ஒருருவிலிருந்து மறைந்துபோயினும் வேறோர் உருவில் மீண்டும் தோனறுவதும் ஆனவோர் பொருளை அறிய அவர்கள் விழைந்தனர். இத்தகையவுணர்ச்சியோடேயே அவர்கள் தமது ஆராய்ச்சிகளை ஆரம்பித்தனர் என்பதற்கு ''மூப்பற்றது'', '' இறப்பற்றது '' என இவ்வடிபபடைப் பொருள் பற்றிக் கூறியிருப்பதே போதிய சான்றாகும். சிலரால கூறப்படுவதுபோல, ஆதல், வளர்ச்சி என்பனவற்றில் மட்டுமே இவர்கள் ஆர்வமுடையவர்களா யிருநதிருந்தால், அழிவுடையதும் நிலை யற்றதுமான இவ்வுலகில் நித்தியமான தெனக்கூடிய ஒரேபொருள்பற்றி இத்தகைய கவிதா உணாச்சி நிறைந்த அடைமொழிகளை உபயோகித்திருக்க மாட்டார்கள். அயோனிய '' ஒருமை வாதத் ''தின் உண்மையான பொருள் இதுவே யென்க.

புசிசு (நித்த சத்தி)

VII. இயூரிப்பிடிசு பிறந்த காலத்திற்குச் சமகாலத்திலேயே அயோனிய விஞ்ஞானம் அதென்சு நகரில முதன்முதலில், அனகசகோரசுவினுறை புகுத்தப்பட்டது[1]. இவ்விஞ்ஞான அறிவின சாயல்களை இயூரிப்பிடிசுவின் எழுத்துக்களிற் காணக்கூடியதாய் இருக்கிறது என்பதையும் நாம் ஈண்டுக் குறிப்பிடலாம். மூலப் பொருளைப் பற்றி அனக்சிமாந்தர் குறிப்பிடுகையில் உபயோகித்த '' மூப்பும் இறப்புமறற '' எனும் அடையையே, விஞ்ஞான ஆராய்வுக்கென அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் சிறப்புப பற்றிக்குறிப்பிடுகையில இயூரிப்பிடிசுவும் உபயோகப்படுத்துகின்றார் எனபது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

ஐந்தாம் நூற்றாண்டில், '' புசிசு '' எனும் பெயர் உலகத்தின் மூலப் பொருளான நித்தியமான பதார்த்தத்தையே கருதியது என்பதற்குப் போதிய அத்தாடசிகளுள. நாம் விளஙகிக் கொள்ளுமளவில், இஃது உலக வரலாற்றிறேடும் நன்கு பொருந்துவதே. பொருட்கள் ஆக்கப்படுவதற்கு ஆதி காரணமாக வேண்டிய '' பண்டம் '' என்பதே இச்சொல்லுக்கு முதலிற் பொருளாயிருந்ததுபோலத் தோன்றுகிறது. ஆனால், '' அமைப்பு '' பொதுவியல்பு, உள்ளடக்கம் ஆகிய பொருட்களையும் இச்சொல் இலகுவிற் பெறலாயிற்று எனலாம். ''அழிவும் மூப்புமறற'' ஒன்றைத் தேடிய இவ்வாதி அண்டவியலாளர்கள், யாவற்றினதும் நித்தசத்தியெனும் ஒனறு எனவே தமது கருத்திற்குப் பெயரிட்டிருப்பர் எனக் கருதலாம். ஒவ்வொன்றும் தனக்கெனவோர் புசிசு (நித்தசத்தி) உடையதான நான்கு மூலப்பண்டங்கள் இருந்தன வென எம்பிடோகிளிசு கருதினர். எண்ணிறந்த மூலப்பொருட்கள் இருந்தனவெனக் கருதிய அணுவாதிகளும், தமது அணுக்கள் பற்றிக் கூறுகையில் இப்பதங்களை உயோகித்தனர் என்க.

1. 123 ஆம் பிரிவின கீழ்ப் பார்க்க.

எமது ஆதாரங்களிற் பெரிதும் உபயோகபபடுத்தப்பட்டிருக்கும் ஆர்க்கே (முதற்காரணி) எனும் சொல், இபபொருளில், அரித் தோதிலிய சிந்தனை மரபைச் சார்ந்ததே. தியோபிறசுத்தோசு வும் அவருக்குப் பிந்திய எழுத்தாளர்கள் சிலரும் இச்சொல் லைக் கையாண்டதில் ஆச்சரியமெதுவுமில்லை ; ஏனெனில், தமது கொள்கைகளில் மெய்யியலாளர்கள் எத்தனை முதற்காரணிக ளுள வெனக் கூறினர் எனபதற்கேற்பவே அவர்களை வகைப் படுத்திய அரித்தோதிலின் பௌதிகம் எனும் நூலையே இவ் வெழுத்தாளர் யாவரும பினபற்றினராதலினென்க. ஆனால் பிளேடோ ஒரு முறையாயினும் இப்பதத்தை இப்பொருளில் உபயோகிக்கவில்லை. ஆதி மெய்யியலாளரது எழுத்துக்களின் பகுதிகள் எனக் கருதபபடுவனவறறிலும் இப்பதம் ஒரு முறை யேனும் காணப்படவில்லை. அவர்கள் இசசொல்லை உபயோகித் திருந்தார்களேயானால், இப்பகுதிகள் எவற்றிலும் இச்சொல்கா ணபபடாதிருப்பது ஆச்சரியத்திற்குரியது எனலாம.

இஃது இவ்வாறுயின் அயோனியர்கள் விஞ்ஞானத்தை ''நித் தசதநி பற்றிய விசாரணை'' என அழைத்தற்கான காரணம் நன்கு புலனுகிறது. மூலபபொருள் பற்றிய சிந்தனை வளாசசியே, ஒருவரை யொருவர் தொடர்ந்து வந்த வெவ்வேறு மரபுகளைச் சோந்த மெய்யியலாளர்களுக்குப் பொதுவாயிருநததெனபதை யும், வானவியல் போன்ற விடயங்களில் அவர்கள தமக்குத் தமக்குத் தோனறிய தனி வழிகளிற் சென்றனர் என்பதையும் நாம் காண்போம். நிலையறற உலகநிகழ்ச்சிகளின அடிப்படை யில் இருநத நிலையான பொருள் எதுவென்பதைக் கண்டுபிடிப் பதே இம்மெய்யியலாளர்கள் யாவரினதும் முக்கியநோக்காக விருந்தது.[1]

1. பொதுவாக அக்காலத்தில் ஏற்றுகொள்ளபபடடவையும் பாரம்பரிய மானவையுமான "நானகு மூலகஙகள" பறறிய கொளகையிலிருந்தே, ஆதி அணடவியலாளர் தமது சிநதனையை ஆரமபிதிருககவேண்டும் எனும் ஒரில பேட்டுவின கருத்து எறகத் தகுநததுபோற காணபபடுவது "மூலகம" எனும் சொல்லின பொருள போதியளவு தெளிவுடையதாயில்லாதிருப்பதனுலேயே. தீ, காற்று, நீர, நிலம் எனுமப பெரிய தொகுதிகளையே நாம் கருதினே மாயின, மிக முந்தியவோ காலதிலேயே, இவறறை அறிநதிருநதனர். ஆனால அணடவியலில "மூலகம்" எனுமபோது, வேறெப பொருளாலும் ஆகாது, தனக்கேயுரிததான இயலபையுடையவொனறே கருதப்படுகிறது. பொதுவாக வழஙகிய மூலகஙகள் பறறிய கருத்தோடு திருபதியடையாது அவற்றிற்குமடிப் படையான வொன்றைக காணவே, ஆதி அணடவியலாளர் மூனநதனா என்பது குறிபபிடததககது. மூலபபொருள ஒன்றலலவெனக் கூறவிரும்பிய எமபிடோக இளிசு, முனபே வழஙகிய நான்கு மூலகஙகளையுமே தேர்நததது தற்செயலாக நேர்ந்தவொனறே. இதன காரணமாகவே மூலகம் எனும் சொல மேற குறிப்பிபபட்ட காறறு, தீ ஆகிய தொகுதிகளையும குறிப்பிடலாயிற்று.

இயக்கமும் அசைவின் மையும்

VIII. "நித்திய இயக்கம்" என ஒன்றிருந்ததென ஆதி அண்டவியலாளர் நம்பினார்களென்று அரித்தோதில் மூல மாகவும் அவரைப் பின்பற்றியவர்கள் மூலமாகவும் நாம் அறி கிறோம். ஆனால் "நித்திய இயக்கம்" என இவர்கள் கூறி னார்களேயெனினும், முன்னோரால் நம்பப்பட்ட கொள்கை இத்தகையவொன்றே யெனபது பற்றி நாம் நிச்சயமாக நம்புதல் இயலாது. இயக்கத்தின் நித்திய இயல்புபற்றி அயோனி யர்கள் தமது நூல்களுள் எதனிலாயினும் எழுதினர் என்பதை நம்புவது எளிதன்று. அந்நாட்களில் அசைவின்மைக்கே விளக் கம் காணடல் அவசியம எனக் கருதப்பட்டது. இயக்கம் மறுக் கப்படும் வரைக்கும், இயக்கத்தின் ஆரம்பம் பற்றி ஆராய வேண்டுமென யாருக்கும் தோன்றியிராது என நாம் கொள்ள லாம். பார்மனிடிசு சாதித்தது இதையே என நாம் காண் போம்; அதற்கேற்பவே, அவருக்குப் பின் வந்தோர், இயக்கம் உளது என்பதை ஏறறுக்கொண்டு, அது ஏற்படுவதற் கான காரணங்களே விளக்க முற்பட்டனர். ஆகவே, ஆதி அண்டவியலாளர்கள், இயக்கத்திற்கு ஓர் ஆரம்பம் இருந்த தெனக் கொள்ளும் அவசியம் இருந்ததாக எண்ணவில்லை எனவே அரித்தோதில் கருதினர் என நாம் கொள்வோம். ஆதி அண்டவியல் வாதிகள் நித்திய இயக்கம் இருந்ததென நம்பினார்களென்பது, அரித்தோதிலின் ஊகமேயெனினும் அது பெருமளவிற்குச் சரியானதே. ஆயினும், அவர்களது காலத் தில் உருவாக்கவேபடாதிருந்த கொளகை யொன்றினை அவர் கள் மறுத்தனர் என, நாம் எண்ணுதற்கு அரித்தோதிலி னது கூற்று இடமளிக்கின்றதாகையால், அதனை ஏற்றுக்கொள் ளலாகாது.[1]

இவற்றினும் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய விடயம், இவ்வியக்கத்தின் இயல்பு எனனவென்பதாகும். உலகம் ஆரம் மாவதற்கும் இவ்வியக்கமே காரணமாயிருந்ததாதலால், உலக

1. இவவகையான சிந்தனை முறையே திரவியவுயிர்வாதம் எனப பொது வாக அழைக்கபபடுகிறது. ஆனால் அவ்வாறு அழைத்தல பொருநதாதெனக. உலகம் பற்றியும் மூலபதாரத்தம் பறறியும, அவை உயிருளளனவென எமக் குத தோன்றும் வகையில, ஆதி அணடவியலாளர் எழுதியுளளனா எனபது உணமையே. ஆனால் அவ்வாறு கொளவதற்கும் சடப பொருளுக்குத் தனனைத் தானே இயகிக் கொள்ளும சததி உளளது எனக் கூறுவதறகும மிகுநத வேற்றுமை உளளது. சடப் பொருள பற்றிய எணணக்கருவே அககாலத்தில் இருக்கவில்லை. உயிரவாழவன உடபட யாவறறையும் பொறியியல முறைபடி, அதாவது பொருள்களின் இயக்கதினை மூலம், விளகிவிட முடியும் என்பதே அவர்களது எணணமாகவிருநதது. ஆனால் இதுவும் அககாலததவாகனால் ஒரு திட்டவட்டமான கொள்கையாக உருவாகபபடவில்லை; அவவாறு அவர்கள் கருதினா என நாம் அறியகூடியதாயிருக்கிறது. அவ்வளவே.

ஆரம்பத்திற்கு முனனரே இயக்கமிருந்திருக்கவேண்டுமெனபது வெளிப்படை. ஆகவே, நித்திய இயகததை வானமண்டலத தின் நாளாந்த சுழற்சியெனவோ அல்லது பிற உலக இயக்கங்க ளெனவோ, நாம் கருதலாகாது[1]. பிளேட்டோவின் **திமாயசு**[2] வில் தரப்பட்டுள்ள பைதாகரசகொள்கை, மூல இயக்கம் நிய தியறறதும் ஒழுங்கில்லாததுமாய் இருந்ததென்பதே. அணுவா திகள், தமது அணுக்களின் இயக்கம்பறறிக் கூறுவதும் எறக்கு றைய இதற்கொப்பதே. ஆகவே ஆதி அண்டவியலா ளரது மூலப் பதார்த்தத்தின் இயக்கக்கொள்கை பறறி எத்தகைய திட்டவட்ட மான கருத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளாது விடுதல நன்மை பயக்கும்[3].

அயோனிய விஞ்ஞானத் தின லெளகீக வியல்பு

IX. இதுவரை நாம் கவனித்த எவற்றிலும் இறையியல் ஆராய்ச்சி பற்றிய குறிப்பு எதையும் காணேம். ஈசிய சமயக் கொள்கைகள் முற்றுய் அற்றுப்போய்விட்டனவெனவும், ஒலிம் பிய பல்லிறைவாதத்தில் அயோனிய சிந்தனை ஒருபோதும் பூரணமாக ஈடுபடவில்லை யெனவும் நாம கண்டோம். ஆகவே, அயோனிய விஞ்ஞானத்தின் ஆரம்பம், புராணக் கதைகளிற் காணப்படுகிறது எனக் கொள்வது முற்றிலும் தவருகும். வடவர்களது ஆட்சிக்குட்படாத கிரேக்க பகுதிகள் சிலவற்றில், பழைய கருத்துக்களும் வழக்கங்களும் ஓரளவுக்கு இன்னமும் நிலவினவெனலாம்; ஓபிசக் கொள்கைகளின் மூலமும் வீனைய வழக்கங்களின் மூலமுமாக இவை யெவ்வாறு மீணடும் புத்துயிர் பெறறன என்பதையும் நாம் விரைவிற் காண்போம். ஆனால் அயோனியாவைப் பொறுத்தவரையில் அங்கு பழைய கொள்கைகள் எதுவும் இருந்ததாகக் கூற முடியாது. இற் றைற்றுக்களின் ஆதிக்கம் காரணமாகச் செல்ல முடியாதிருந்த

1. "நிததிய இயக்கம்" எனபது வானமண்டலஙகளின் நாளாந்த சுழற சியே என முதலில தீர்மானித்தவர் அரிதோதிலே.

2. Plato, *Tim.* 30 a.

3. அனகசிமினிசு போன்ற ஆதி சிந்தனையாளரொருவர் அண்டத்தின் மூலவியகதிறகும், எல்லையற்ற காறறினது ஆதி இயகததிறகும இடையே யுளள வேறுபாடடை உணர்ந்திருபபார் எனக கொள்வது பொருததமற்றதாகை யால "நிததிய இயககம" எனபது ஒரு சுழிப்பியக்கமே எனவே போசிரியர் டபிளபூ. ஏ. எயடெல கருதினுர். ஆனால உலகம் ஒரு குறிப்பிட்ட காலத்தில தோனறியதே எனக கருதிய எவரும், குறிபபாக அவா எணணிறந்த உலகங் களுள எனக கருதியவராயுமிருநதிருநதால, இவ்வேறுபாட்டையும் உணாந் திருபபா எனவே எனக்குத் தோன்றுகிறது. ஆதி அணடவியறகொள்கை களினபடி, அணடததின் மூலவியகம் சுழிப்பியக்கமே எனப் போசிரியா எயடெல் கூறுவதை நான எறறுகொளளஙகிறேன. ஆனால் அவர்கள் நிதிய இயகததில் நம்பிக்கை வைததிருந்தனர் என ஒருபோதும் கூற முடியாதெனக.

சின்ன ஆசியாவினுள், ஆக்கியர்களின் வருகையின் பின்னரே கிரேக்கர்களினுற் செலலமுடிந்தது. அதன் பினனரே சின்ன ஆசியாவின் கரையோரங்களில் அவர்களது குடியேற்றப்பகுதி கள் தோன்றினை[1]. ஆகவே இப்பகுதிகளில் எததகைய பாரம் பரிய பண்பாடும் இருக்கவில்லை. ஈகிய தீவுகளில் நிலைமை வேறு பிருந்ததெனினும், அயோனியா உண்மையில் தனகென எவ் வித வரலாறும் இல்லாத நாடாகவேயிருந்ததென லாம். ஆதி அயோனிய மெய்யியல் முற்றிலும் லௌகீக வியல்புடையதாயி ருந்ததற்குக் காரணம் இதுவே யெனலாம்.

எமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களில் கடவுள் எனும் சொல் உபயோகிக்கப்பட்டிருக்கும் விதம், எமது மனதில் தவறுன முடிவுகள் எழுவதற்குக் காரணமாகக் கூடாது. உலகு அலலது உலகுகள் பற்றியும் மூலப் பதார்த்தம் பற்றியும் அயோனியர் கள் இச்சொலலை உபயோகித்தனர் என்பது உண்மையே. ஆனல் ''இறபபறற'' "மூப்பற்ற" எனும் இறையியல் அடைகள் எவ்வாறு பிரயோகிக்கப்பட்டனவென முன்னர் குறிப்பிட்டோமோ அவ் வாறே இபபதமும் உபயோகிக்கப்பட்டதேயொழிய இதறகு வேறெப்பொருளுமில்லை யென்க. "கடவுள்" எனும சொல் அதன் சமயப்பொருளில் உபயோகிக்கப்படும்போது " வழிபடப்படுவது " எனனும் பொருளையே முதனமையாக உணர்த்தி நிற்கும் ; ஆனல ஓமரது நூல்களில் இச சொல் பிற பொருள்களையும் உணர்த்தும் வகையில் உபயோகிக்கப்படுகிறது. எகியொட்டின் **தேவபாரம்பரியமே** இம்மாற்றத்துக்குத் தகுந்த அத்தாட்சி யெனலாம். அதிற குறிப்பிடப்படும் தேவர்களிற் பலர் எவராலும் வழிபடப்பட்டோர் அல்லர் என்பதும், அவர்களிற் சிலர் இயற்கைத் தோற்றங்களையும், உணர்சசிகளையும் மனிதராகக் கற்பிப்பதன் மூலம் பெறப்பட்டவர்களே[2] யெனபதும் தெளிவு. நாம் இந் நூல்களில் ஆராயும் காலபபகுதி முழுவதிலுமே கடவுள எனும் சொல் இவ்வாறு சமயததொடர்பு அதிகம் இன்றி உபயோ கிக்கப்படுவதை நாம் நனகு காணலாம். இதை நாம் நன்கு கவனித்தல் வேண்டும். அவ்வாறு கவனிப்போர் எவரும், புராணத்திலிருந்து விஞ்ஞானம் தோனறியது எனும் தவற் றுக்கு ஆளாகமாட்டார்[3].

1. See Hogarth, *Ionia and the East*, pp. 68 *Sqq.*

2. ஓகியானோசு, ரெதிசு, ஹைரானோசு என்போரை எவருமே வழிபட வில்லை. போபோசு, டெயமோசு எனபோரையும் சமயச்சாபுடைய கடவுளாக எனைக் கூறமுடியாது.

3. திரு. கோண்போட்டுவின " சமயததிலிருநது தத்துவம் வரை " எனும் நூலில உள்ள அடிபபடைத் தவறு இதுவேயென எனக்குத தோனறுகிறது. பழைய முறைகள் அயோனியாவில முறறுக மறைந்து போய விட்டிருந்தன

பழைய சமயங்கள் வானமண்டலத்தையும் வானசோதிகளையும் தெய்வீகமானவையெனவும், பூமியிலுள்ள யாவற்றிலிருந்தும் வேறுபட்ட தன்மையுடையன வெனவும் கருதின. ஆனால் அயோனிய சிநதனையாளர்கள் மக்களது இந்நம்பிக்கைகளை அறிந்திருந்தனராயினும், இவ்வேறுபாட்டை ஒருபோதும் மனதிற் கொள்ளவில்லை. நாம் சற்று முன்பு கூறிய யாவும், இதிலிருந்தே எமக்குப் புலனாகின்றன. பிற்காலத்தில் அரித்தோதிலும், பழைய சமயங்கள் கூறிய இவ்வேறுபாட்டை ஏறறுக் கொண்டாரெனினும் கிரேக்க விஞ்ஞானம் இவ்வேறுபாட்டுக்கு ஒருபோதும் இடமளிக்கவில்லை[1].

மெய்யியல் கிழைத்தேசங்களிலேயே ஆரம்பித்தது எனும் கருத்து

X. கிரேக்க சிந்தனைக்கும் கிழைத் தேச ஞானத்திற்கும் எத்தகைய தொடர்பிருந்தது என்பதையும், முனையது எவ்வாறு பினையதன் செல்வாக்குக்குட்பட்டது என்பதையும் ஆராய்தல் வேண்டும். கிரேக்கர்கள் பாபிலோனியரிடமிருந்தும் எகிப்தியரிடமிருந்துமே தமது மெய்யியல் முறைகளைப் பெற்றுக்கொண்டனர் எனும் கருத்துப் பொதுவாக இப்போதும் ஏற்றுக்கொளளப்படுகிறது வொன்றுதலால், நாம் அக்கூற்றின் பொருள் என்ன வென்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முயற்சித்தல் வேண்டும். ஈசிய நாகரிகத்தின் தொனமை பற்றி நாம் நன்கு அறிந்துள்ள இந்நிலையில், இவ்விடயம் முழுவதையுமே ஒரு புதிய கண்ணோட்டத்தோடு எம்மாற் பார்க்க முடிகிறது என்பதையும் நாம் மனத்திற் கொள்ள வேண்டும். கிழக்கேயிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் எனக் கருதப்பட்டவற்றுட் பல உண்மையில் ஈசியர்களிடமிருந்தே உருவாக்கப்பட்டவையாயிருக்கலாம். அன்றியும் ஈசியர்களது கொள்கைகளில் எவையாயினும் கிழைததேசங்களிலிருந்து பெறப்பட்டவையாயின் எரொடோதசு அதைப் பற்றிக் குறிப்பிடாது விட்டிருக்க மாட்டார்; ஏனெனில் கிரேக்க மதமும் நாகரிகமும் எகிப்திலிருந்து பெறப்பட்டவையென்னும் அவரது கொள்கைக்கும் இக்கருத்து வலுவூட்டியிருக்கும்[2]. வேறு

என்பதை அவா உணரவில்லை. மேற்குப் பகுதிகள் பற்றிக் கூறுமபோது அவரது கருதது அதிக பொருத்தமுடையதாய்த் தோனறுகிறது. எனினும் அஙகும், அயோனிய விஞ்ஞானதிற்கும் பழைய பாரம்பரியத்திற்குமிடையே உள்ள வேறுபாட்டை நனகு உணர அவர் தவறிவிட்டார் எனவே கூற வேணடும்.

1. இதை எவ்வாறு வலியுறுத்தினும் மிகையாகாது. See Prof. A. E. Taylor, *Aristotle*, p. 58.

2. டயனிசோசுவை வழிபடும் வழக்கமும், மறு பிறப்புக் கொள்கையும் எகிப்தியரிடமிருநது பெறபபட்டனவென மட்டுமே அவரால கூற முடிகிறது (ii. 49, 123). இவவிரணடு விடயஙகளிலுமே அவர் கூற்றுத் தவறுனது எனை நாம் காணபோம. ஆனால் இவை பற்றி அவரது கூற்று உணமையாயிருந்தாலும் கிரேகக மெயயியலுகும இவறறிற்கும் எவ்வித தொடர்புமில்லை.

காரணங்களுக்காக எகிப்தியர் மீது அதிக மதிப்பு வைத்திருந்தவரான பிளேட்டோவும் அவர்களை மெய்யியலில் அதிக பற்றில்லாத, பெரிதும் விவகார ஈடுபாடுள்ள மக்களெனவே கருதினர். அரித்தோதிலும் எகிப்தில் கணிதவியல் ஆரம்பித்தது பற்றியே குறிப்பிடுகின்றார்[1]. (இதுபற்றிப் பின்னர் கூறுவோம்.) எகிப்திய மெய்யியல் என ஒன்றிருந்திருக்குமாயின், அதைப் பற்றிக் கூறுவது அவரது வாதத்திற்கு முதவியிருக்குமாதலால் அவர் அதைப்பற்றி அவசியம் குறிப்பிட்டிருப்பார். மிகவும் பிந்திய வோர் காலப்பகுதியில் எகிப்திய மதகுருமாரும் அலெக்சாந்திரிய யூதர்களும், கிரேக்க மெய்யியல தமது நாடுகளில் ஆரம்பித்ததெனக் கூற விழைந்தபோதுதான் கிரேக்க மெய்யியல் பீனீசியாவிலிருந்து பெறப்பட்டதெனவும் எகிபதியரிடமிருந்து பெறப்பட்டதெனவும் திட்டவட்டமான கூற்றுக்கள் எழுந்தன. அனறியும் எகிப்திய மெய்யியல் என அழைக்கப்படுவது, பழையபுராணக் கதைகளிலிருந்து பெறப்பட்ட ஒட்டுவமைகளின் தொகுதியே. பழைய ஏறபாட்டுக்குப் பிலோவினால் தரப்பட்ட விளக்கத்தை இன்றும் நாம் மதிப்பிடக்கூடியதாக இருக்கிறது. எகிப்திய புராணக்கதைகளுக்குப் பொருள் கண்டவர்கள், தம்விருப்பத்துக் கேற்றவாறெல்லாம் பொருள் காண்பதில், பிலோவையும் மிஞ்சியவர்கள் எனக் கொள்ளலாம் ; எனெனில் பொருள் காண்பதற்கென அவர்கள் எடுத்துக்கொணட வரலாறுகள அத்துணைச் சிறப்புடையனவல்ல. உதாரணமாக ஒசிரிசு, ஐசிசு பற்றிய புராணக்கதைக்கு, முதலில் பிந்திய கிரேக்க மெய்யியற் கொள்கைகளுக்கேற்ப விளக்கம் தந்தனர் ; பின்னர் கிரேக்க மெய்யியல் அதனிலிருந்தே ஆரம்பித்தது எனவும் அவர்கள் கூறினர்.

இவ்வாறு பொருள்காணும் முறை நவபைதாகரசவாதியான நூமினியோசுவோடு முடிவடைந்தது. இவருக்குப் பின்னர் சிறித்துவ வாதிகள் இம்முறையைக் கையாண்டனர். " அதீனிய மொழி நடையிற் பேசும் மோசேசுவேயெனக் கூறுது வேறெவ்வாறு பிளேட்டோவை அழைப்பது ? " எனக் கேட்டவர் நூமினியோசுவே[2]. நூமினியோசுவினது கடா பிளேட்டோவுக்கு மாத்திரமல்லாது வேறு பலருக்கும் பொருந்துமென, இலிமென்றும் இயூசிபியோசுவும் கூறினர்[3]. மறுமலர்ச்சியின் போது,

1. Arist. *Met.* A, I. 981 b 23.

2. நூமினியோசு, பகுதி 13 (R. P. 624).

3. ஐழைத்தேச ஞானம் பற்றிய மிகையான கருத்துக்கள் பல என்சைகிளோப்பீடீ (Encyclopedie) மூலமாகப் பிரபலமடைந்தன. இவை பல விடங்களுக்குப் பரவியதற்கும் எளிதில் மறையாததற்கும இதுவே காரணமென்க. மறைந்துபோன ஓர் சாதியினரிடமிருந்து மிகவும் விருத்தி யடைந்த

ஸேனயவற்றேடு இக்குழப்பமும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அன்றியும் பிறெப்பறற்றியோ இவாஞ்செலிகாவிலிருந்து (Praeparatio Evangelica) பெறப்பட்ட சில கருத்துக்களின் அடிப்படையிலேயே, எவ்வே ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் பலவற்றிற்கு நீண்டகாலமாகப் பொருள் கொள்ளப்படலாயிற்று. தேலிசுவிஞலும் பைதாகரசினலும் போதிக்கப்பட்டபண்டைய மொசுகிக, மொசாய்க்க மெய்யியல் பற்றிக் கட்வேத்து குறிப்பிடுகினறார்[1]. சுயமாகச் சிர்திக்கும் திறன் கிரேக்கர்களுக்கு இல்லையெனப் பொருள்படும், இக்கூற்றுக்கள் எவ்வாறு ஆரம்பித்தன என்பதை உணர்தல் அவசியமாகும். பண்டைய மனிதர்களினது நம்பிக்கைகள் பற்றிச் சமீபகாலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக இக்கூற்றுக்கள் பிறக்கவில்லை ; எனெனில், பீனீசிய மெய்யியலோ அல்லது எகிப்திய மெய்யியலோ இருந்ததற்கான ஆதாரம் எதுவும் இவ்வாராய்ச்சிகளின் மூலமாகப் புதிதாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. ஒட்டுவமைகளே உருவாக்குவதில் அலெக்சாந்திரியர்களுக்கிருந்த ஆர்வத்தையே இவர்களது ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஆனல் இன்று, கிளிமென்றுவினது அல்லது இயூசிபியோசுவினது கூற்றுக்கள், கிரேக்க மெய்யியல் மீழைத்தேசங்களில் ஆரம்பித்த தென்பதற்குப் போதிய ஆதாரங்கள் என யாரும் கூறுவதில்லை ; கலேகளைப் பொறுத்தவரையில் என்ன நடந்ததோ அவ்வாறே மெய்யியல் விடயத்திலும் நடைபெற்றதெனக் கூறுவதே இப்போது பொதுவாகக் கையாளப்படும் வாதம், கிரேக்கர்கள் தமது கலேகளைக் கிழக்கிலிருந்தே பெற்றுக் கொண்டனர் என்பதற்கான ஆதாரங்கள் பல எமக்குச் சமீபத்தில் கிடைத்துள்ளனவெனவும், மெய்யியலினது வரலாறும் இத்தகையதே யென விரைவில் நிரூபிக்கப்படுமெனவும் கூறப்படுகிறது. மேலெழுந்தவாரியாக நோக்குகையில் வாய்ப்புடையது போலக் காணப்படும் இவ்வாதத்திலிருந்து எவ்வித முடிபுக்கும் வரமுடியாது. கலேகள், மெய்யியற் கருத்துக்கள் என்பன ஒரு சமூகத்தினரிடமிருந்து இன்னேர் சமூகத்தினருக்குப் பரவும் வகைகளினிடையேயுள்ள வேறுபாட்டை மறந்துவிடலாகாது. இரு

விஞ்ஞானக் கருத்துக்களேக ளீழைத் தேசத்தினர் பெற்றிருத்தல் வேண்டுமெனப் பெய்லி கருதினர். ஆனல மறைந்த இச்சாதியினர் பிளேட்டோவின் அத்லாந்திசுவில் வாழ்ந்த மக்களேயென அவர் கருதினர் ! (Lettres sur l'origine des sciences).

1. சிடோன்நாட்டு மோகோசுவை மெய்யியல் வரலாற்றினுட் புகுதியவர் பொசெய்டோனியோசுவே என திராபோவின் மூலமாக (xvi. p. 757. Strabo) அறிகிறேம். அணுவாதத்தை உருவாக்கியவர் மோகோசுவேயென பொசெய்டோனியோசு கூறினர்.

சமூகத்தினருக்குப் பொதுவான மொழியெதுவுமில்லாதிருப்பினும், ஒரு சாராரினது லௌகிக பண்பாடும், அவர் தம் கலைகளும் மற்றவர்களிடையே பரவுவது சாத்தியமாயிருக்கலாம். ஆனால் மெய்யியற் கருத்துக்கள் கருத்தியல்பானவோர் மொழி நடையில், நூல்களின் மூலமாகவோ அன்றேல் போதனைகளின் மூலமாகவோ கற்றோரால் மட்டுமே வெளியிடப்படக்கூடியவை. நாம் இங்கு கவனிக்கும் காலப்பகுதியில், எகிப்திய மொழியை வாசிக்கவோ, அல்லது எகிப்திய மதாசாரியன் ஒருவனது போதனைகளைக் கேட்டுணரவோ வல்ல கிரேக்கர்கள் இருந்ததாக நாம் அறியவில்லை. மேலும் இதற்கு மிகவும் பிந்தியகாலத்திற்றான் கிரேக்கமொழியில் பேசவும் எழுதவும் வல்ல கீழைத்தேசப் போதனையாளர் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். எகிப்துக்கூடாகப் பிரயாணம் செய்த கிரேக்க யாத்திரீகர்கள் சில எகிப்தியசொற்களைத் அறிந்திருக்கலாம்; இதனிலிருந்து போலும், எகிப்திய மதாசாரியர்கள் தமது கருத்துக்களைக் கிரேக்கர்களுக்குப் புலப்படுத்தக்கூடியதாயிருந்தது எனக் கொள்ளப்பட்டது[1]. ஆனால் அவர்கள் மொழிபெயர்ப்பாளர்களின் உதவியைப் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் அதிக கல்வியறிவில்லாத மொழிபெயர்ப்பாளரின் மூலமாக மெய்யியற் கருத்துக்கள் பரப்பப்பட்டிருக்கலாம் எனக் கற்பனை செய்யமுடியாதிருக்கிறது[2].

ஆனால், பிறருக்குப் போதிக்கக் கூடியவோர் மெய்யியல் இம்மக்களிடையே வளர்ச்சியுற்றிருந்ததா என்பதை முடிவு செய்வதன் முன் மெய்யியற் கருத்துக்களை வெளியிடும் வழிவகைகள் இருந்தனவா என ஆராய்வது வீண் எனலாம். நாம் அறிந்தவரையில், கிரேக்கர்களை விட, மெய்யியல் என அழைக்கக்கூடிய ஒன்றை உடையவர்களாயிருந்த பண்டைய மக்கள் இந்தியர்கள் மாத்திரமே. ஆனால் கிரேக்க மெய்யியல் இந்தியாவிலிருந்து பெறப்பட்டதென இன்று யாருமே கூற மாட்டார்கள். உண்மையில் நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் யாவற்றையும் நோக்குகையில், கிரேக்க மெய்யியலின் செல்வாக்குக்குட்பட்டே இந்திய சிந்தனை வளர்ச்சியுற்றிருக்கிறதென்

1. Herod. ii. 143; Plato, *Tim.* 22 b 3.

2. தனது கிரேக்க நாயகனுக்கு, தனது மக்களின் கொள்கைகள் பற்றி உரையாடுபவளான சுதேசி மணப்பெண்பற்றிக கொமபாசு குறிப்பிடுகிறானெனினும் (*Greek Thinkers*, vol i. p. 95.) எனக்கு அது நம்பிக்கை ஊட்டவில்லை. தனது அந்தப்புர பணிப்பெண்களுக்கு, தூதனமான பெண்தேவதைகளைப் பற்றியும் அவற்றிற்குச் செய்ய வேண்டிய சடங்குகள் பற்றியும் அவள் கற்பித்திருக்கலாம். ஆனால் இறையியல் பற்றியோ மெய்யியல் விஞ்ஞானம் என்பனபற்றியோ தனது கணவனுக்கு உரையாடியிருப்பாள் என எண்ண இயலாதெனக.

னும் முடிபுக்கு வரவேண்டியதாயிருக்கிறது. சங்கத இலக்கியத்தின் காலமானம் இலகுவில் நிர்ணயிக்கப்படக்கூடிய வொன்றல்ல ; ஆயினும் எமக்குத் தெரிந்தவரையில், கிரேக்க கொள்கைகளைப் பெரிதும் ஒத்தனவான இந்திய மெய்யியல முறைகள் கிரேக்க கொள்கைகளுக்குப் பிந்திய காலத்தவையே. பௌத்த, உபநிடத அனுபூதி நெறிகள் இந்திய சிந்தனை முறைகளே எனபதில் ஐயமிலலை ; இவை, அதன் சுருங்கிய பொருளில், மெய்யியலைத தமது செல்வாக்குக் குட்படுத்திஞலும், இவற்றிற்கும் இந்திய மெய்யியலுக்குமிடையேயுள்ள தொடர்பு, கிரேக்க விஞ்ஞானச் சிந்தனைக்கும், எகியொட்டு, ஒபிசம் எனபனவற்றிற்குமிடையேயுள்ள தொடர்பை ஒத்ததே.

எகிப்திய கணிதவியல்

XI. ஆஞல் கீழைத்தேச செல்வாக்குகளின் தொடர்பு எதுவு மின்றியே, கிரேக்க மெய்யியல் தோன்றியது எனக் கூற இய லாது. தமது கணிதவியல் எகிப்திய கணிதவியலிலிருந்தே தோன்றிய தெனக் கிரேக்கர்களே கருதினர். பபிலோனிய வானியலையும் இவர்கள் ஓரளவுக்கு அறிந்திருக்கவேண்டும் எனலாம். இவ்விரு நாடுகளுக்கும் கிரேக்கர்களுக்குமிடையே தொடர்பு மிகுந்திருந்தபோதே கிரேக்கர்களது மெய்யியல் வளர்ச்சியடைய ஆரம்பித்ததும், எகிப்திலிருந்து கேத்திர கணிதத்தைக் கொணர்ந்தவர் எவரோ, அவரே கிரேக்கர்களது முதற் றத்துவஞானி எனக கூறப்படுவதும் எதேச்சையாக நடத்தவை என ஒதுக்கி விட்டுவிட முடியாது. ஆகவே எகிப்திய கணிதவியலின் உண்மையான தன்மையை ஆராய்தல் முக்கியமானதாகிறது. இவ்விடயத்திலும், கிரேக்கர்கள் தாமாகவே தமது கருத்துக்களை விருத்தி செய்தனரென நாம் காண்போம்.

பிரித்தானிய அரும்பொருட்சாலையில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் இறைஞர் புல்லேட்டை நோக்குகையில், நைல் நதியின் கரைகளில் வளர்ச்சியடைந்த எண்கணிதம், கேத்திரகணிதம் ஆதியன எத்தகையன என்பதை நம்மால் ஓரளவுக்கு உணரமுடிகிறது. ஆமேசு என்பவரால் ஆக்கப்பட்டதான இப்புல்லேட்டில் எண்கணித, கேத்திரகணித கணிப்புகளுக்கான விதிகள் குறிக்கப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் கணக்குகள், தானியங்களினதும், பழங்களினதும் அளவைகள், குறிப்பிட்ட தொகையான மனிதரிடையே சில அளவுகளைப் பகிர்தல், ஒரு குறிப்பிட்ட அளவு, எத்தனை உரொட்டிகளுக்குச் சமமானது, எத்தனை சாடி பீருக்குச் சமமானது, ஒரு வேலையைச் செய்த ஆட்களுக்கு எவ்வளவு கூலி வழங்கப்படல் வேண்டும் என்பன பற்றியவை. எகிப்திய கணிதம் பற்றிப் பிளேட்டோ தனது **சட்டங்கள்** எனும் நூலில் கூறுவனவற்றோடு இப்புல்லேட்டு விவரங்கள் நன்கு பொருந்துவனவாயுள்ளன. எகிப்திய சிறுர்

கள், நெடுங்கணக்குப் பயிலும்போதே, அப்பிள்ளையும் மலர் வளையங்களையும் ஆட்களிடையே பகிர்வது பற்றிய கணக்குகளையும், குத்துச்சண்டை வீரரையும், மல்யுத்த வீரரையும் இணையாக்கும் கணக்குகளையும் பயின்றனர் எனப பிளேட்டோ தமது நூலிற் கூறியுள்ளார். கிரேககர்கள் "லொஜிட்டிகே" என அழைத்த கலையின தோற்றம் இதுவேயென்பதில் ஐயமில்லை. இக்கலை மிகவும் விருத்தியடைந்திருந்த நாடான எகிப்திலிருந்தே, இதை அவர்கள் பெற்றுக் கொண்டனர் எனக் கொளளலாம். ஆனால் கிரேக்கர்களினால் "அறித்மீட்டிகே" என அழைக்கப்பட்ட, எண்கள் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிக்கலை பற்றிய குறிப்புகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

இறைன் புல்லேட்டிற் காணப்படும் கேத்திரகணிதமும் இத் தகையதே. எகிப்தில் கேத்திரகணிதம் வளர்ச்சியடைந்ததற்குக் காரணம் அந்நாட்டு மதாசாரியர்களுக்கு ஓய்வுநேரம் மிகையாய் இருந்தமையே எனும் அரித்தோதிலின விளக்கத்திலும், அடிக்கடி யேற்பட்ட வெள்ளப் பெருகுகளின் பின்னர் மீண்டும் மீண்டும் தமது நிலததை அளக்க வேண்டிய அவசிய மிருந்தமையே என எரொடோதசு தரும் விளக்கம் அதிக பொருத்தமானது[1]. நீள்சதுர வடிவமான பரப்புகளை அளவிடுவதற்கெனத் தரப்பட்டிருக்கும் விதிகளே செம்மையுடையனவாகக் காணப்படுகின்றன. ஆனால் அவர்களது தோட்டங்கள பெரும்பாலும் நீள்சதுரவடிவமுடையனவே யாதலால், நடைமுறைத் தேவைகளுக்கு இவ்விதிகள் போதியனவாயிருந்தன. செங்கோண மூக்கோணங்கள், சமபக்க மூக்கோணங்களாக இருக்கலாம் எனவும் அவர்கள் கருதிக் கொண்டனர். கூம்பகத்தினது செகுத்து (seqt) என அழைக்கப்படுவதை அளக்கும் முறைபற்றிய விதி இவற்றிலும் விருத்தியடைந்தவோர் கணித வியலை சார்ந்ததெனலாம். இது பினவருமாறு கூறப்படலாம்; அடியின் மூலவட்டத்தினதும், பக்கவிளிம்புகளினதும் நீள அளவுகளைக் கொண்டு அவற்றினிடையே இருக்கக் கூடிய விகிதத்தைக் குறிக்கும் எண்ணைக காண்டல் வேண்டும். அடியின் மூலவிட்டத்தின அரைப்பங்கைப் பக்கவிளிம்பினால் வகுப்பதன் மூலம் பெறப்படும் செயனமுறை அனுபவத்தின் மூலமே இவ்விதி கண்டு பிடிக்கப்பட்டிருக்கலாமென்பது வெளிப்படை. இத்தகைய ஒரு விதியோடு ஆரம்ப திரிகோண கணிதத்தைத் தொடர்புபடுத்திக் கூறுவது காலவழுவாகத் தோன்றுமெனி

[1] Herod. ii. 109; Arist. *Met.* A. I. 981 b 23.

னும், எகிப்தியர்கள் தமது கணிதவியலை இதற்குமேல் விருத்தி செய்திருந்தனர் எனக் கருத இடமில்லை[1]. கடலிற் செல்லும் கப்பல்கள் போன்ற அணுக முடியாப் பொருள்களின் தூரத்தைக் கணக்கிடுதற்கு உதவும் வகையில், இக்கணிதமுறையை அவர்கள் ஆரம்பத்திலிருந்தே, பல பொது விதிகளைப் பெறுதற்குப் பயன்படுத்தினர். உண்மையிற் பைதாகரசுவினால் உருவாக்கப்பட்டதான கேத்திர கணித்வியல், இப்பொதுமையாக்கங்களிலிருந்தே தோன்றியிருக்கவேண்டுமெனக் கொள்ளலாம். தெமோகிரித்தோசுவினது எனக் கூறப்படும் குறிப்பொன்றிலிருந்து, கிரேக்கர்கள் எவ்வாறு இத்துறையில் தமது ஆசான்களாகிய எகிப்தியரையும் மிஞ்சியிருந்தனர் எனக் காணலாம். அக்குறிப்புப் பினவருமாறு (பகுதி 299) : "கற்றோர் பலரது வார்த்தைகளை நான் கேட்டிருக்கின்றேன். கோடுகளிலிருந்து உருவங்களை அமைப்பதிலும் அவற்றைச் செய்து காட்டுந் திறனிலும் அவர்களில் ஒருவராவது என்னிலும் திறமையுடையராய்க் காணப்படவில்லை. **ஆப்பெடொனுட்டுகள்** என அழைக்கப்படும் எகிப்திய வல்லுநர்களும் எனைப்போன்ற திறமையுடையோராய்க் காணப்படவில்லை[2]". ஆனால் ஆபபெடொனுட்டிசு எனும் சொல் எகிப்திய சொல்லன்று; அதுவொரு கிரேக்க சொலவே. அதன் பொருள் "கயிறு-கடபவன" என்பதாகும்[3]. இந்திய கேத்திரகணித நூல்களில் மிகவும் பழமையானதான நூலும் "கயிறு பற்றிய விதிகள்" எனப் பொருள் படக் கூடியவாறு "சுல்வ சூத்திரங்கள்" எனப் பெயரிடப்பட்டிருப்பதற்கும் இதற்குமுள்ள ஒற்றுமை கவனிக்கத்தக்கதாகும். 3, 4, 5 எனும் விகிதப்படி பக்கங்களையும் செங்கோணமொனறையும் உடைய முக்கோணங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. மிகப் பழைய காலத்திலிருந்தே இவ்வுருவம் சீனர்களிடையேயும் இந்துக்களிடையேயும் உபயோகத்திலிருந்தது என நாம் அறிவோம். இவர்கள் பபிலோனி

1. இதுபற்றிய விரிவான விளக்கத்திற்கு Gow, *Short History of Greek Mathematics*, pp. 127 *Sqq.*; அத்துடன Milhaud, *Science grecque*, p. 99.

2. R.P. 188. இபபகுதி போலியானதென டியலசு இபபோது கருதுகிறார் என்பதும் இஙகு குறிப்பிடததகைது. (*Vors.*[3] ii. p. 124) கிரேக்க விஞஞானம் உயாவானது என வாதாடும் அதே நேரத்தில், அஃது வேறோர் நாட்டிலிருநது பெறப்பட்டது என விளக்க முயலும அலெகசாநதிரிய போலியொனறிலிருநதே இபபகுதி பெறபபட்டதென அவர் கருதுகிறார்.

3. "ஆப்பெடொனுட்டிசு" எனும் சொலலின உண்மையான பொருளை முதலிற காட்டியவர் கான்றர் என்பாரே. பூம்பாத்திகளை இடும் தோட்டகாரனையே எகிபதிய "ஆப்பெடொனுட்டு"களின தற்காலப பிரதிநிதியெனலாம்.

லிருந்தே இதை அறிந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. தேலிசுவும் இவற்றின் உபயோகத்தைப் பற்றி எகிப்திலிருந்தே அறிந்திருக்க வேண்டும் என்பதையும் நாம் காண்போம்[1]. ஆனல் தாம் நடைமுறையிற் பயன்படுத்திய இவ்வடிவங்களையும் விதிகளையும் பற்றிய கொள்கைகளை விளக்க இவர்களில் எவரும் முயன்றிருப்பார்கள் எனக் கருத இடமில்லை; ஆனல் அத்த கையவோர் விளக்கத்தைத் தரும் திறன் தெமோகிரித் தோசு வுக்கு இருந்தது என்பதில் ஐயமில்லை. மேலும் இறைன் புல் லேட்டிற் காணப்படும் கணிதவியலைத் தேலிசு அறிந்திருந்தார் என்று கொள்ள எவ்வித நியாயமுமில்லையென நாம் காண் போம். கணிதவியல், உண்மையில அவரது காலத்தின் பின்னரே, கிரேக்கரிடையே வளர்ச்சியடைந்தது எனவே நாம் முடிவு செய்தல் வேண்டும். இதுபற்றிக் கூறுகையில் கணிதவியற் பதங் கள் யாவுமே கிரேக்க மொழியடியாகப் பிறந்தன என்பதையும் கவனித்துக்கொள்ளல் நலம்.

பபிலோனிய வானியல்

XII. அயோனிய விஞ்ஞானத்துக்குத் தோற்றுவாயாகுமெ னக் குறிப்பிடப்படும் இன்னென்று பபிலோனிய வானியல் என்க. மிகப் பழைய காலங்களிலிருந்தே பபிலோனியர்கள் வானத்தை ஆராய்ந்து வந்தனர் என்பதில் ஐயமில்லை. நிலை யான உடுக்களை, குறிப்பாக இராசி மண்டலத்தைச் சேர்ந்த வற்றை, தொகுதிகளாக வகுத்தனர்[2]. பயன்படுவதேயா யினும், உண்மையில் இக்கொள்கை புராணக் கதைகளைச் சார்ந் ததே. கிரகங்களையும் இவர்கள் இனங்கண்டு பெயரிட்டதோடு அவற்றின் இயக்கத்தோற்றங்களையும் அவதானித்திருந்தனர். கிரகங்களின் நிலைகளையும் அவற்றின் வக்கிரங்களையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்; சங்கிராந்தி, சமராத்திரம் என்பன வற்றையும் அறிந்திருந்தனர். எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் பொருட்டுக் கிரகணங்கள் ஏற்படவிருக்கும் காலத்தை அறிவதற்

1. See Milhaud, *Science grecque*, p. 103.

2. 30° ஐக கொண்ட பன்னிரண்டு அடையாளங்களாக இராசி மண்டலத் தைப் பிரிபபதிலிருநது இது வேறுபடடது. கி. மு. ஆறாம நூற்றாண்டிறகு முன்னா பன்னிரு இராசிகளாகப் பிரிக்கும் முறையிருந்ததற்கான அடையாளம் எதையுஙு காணுேம். உடுததொகுதிகளிற் சிலவற்றின பெயாகளே பபிலோனி யாவிலிருந்து பெறப்பட்டுளளன. ஏனைய யாவும் கிரேகக்களது புராணங் களிலிருநது, அதுவும் அவறறுள் மிகப் பழையனவற்றிலிருந்து, பெறப்படட பெயாகளே. "பிளேவ" காலஙகளிலேயே இவ்வடுத்தொகுதிகளுக்குப் பெய ரிடபபட்டிருக்க வேண்டுமெனபது இதிலிருநது தெளிவாகிறது. அநநுரொமீடி யாவும் அவளது உறவினரும் பெற்றிருக்கும் அளவுக்குமீறிய இடம், கிரீட்டு வுக்கும் பிலித்தியாவுக்குமிடையே நெருஙகிய தொடாபிருந்தவோர் காலததைச் சுட்டுகிறது. வானியற புராணக் கொளகைகளினுல் மறைக்கப்பட்டவோர் கருத்து இஙகு வெளிப்படுகிறது.

காக, கிரகணங்கள் ஏற்படுங் காலங்களை அவர்கள் நன்கு அவதானித்திருந்தனர். ஆனால் இக்கண்டுபிடிப்புகளின் தொன்மையையோ அல்லது செம்மையையோ நாம் மிகைப்படுத்தக் கூடாது. மிகவும் பிந்திய காலத்திலேயே பபிலோனியரால் திருப்திகரமானவோர் ஆண்டுமானத்தை அமைக்க முடிந்தது ; அதுவரைக்கும், அவசியம் நேர்ந்தபோதெல்லாம் பதின்மூன்றும் மாதம் ஒன்றையும் சேர்த்துக்கொள்வதன் மூலமே இவர்களால், சரியாக வருடத்தைக் கணக்கிட முடிந்தது. இந்நிலையில் நம்பத்தகுந்தவோர் காலமானம் ஏற்படுவது சிறிதும் சாத்தியமாயிருக்கவில்லை. ஆகவே நபுனசாரினது, என அழைக்கப்படும் காலம் (747 கி. மு.) வரைக்கும் வானியற் நேவைகளுக்கு வேண்டிய விவரங்களைப் பெற்றுக் கொள்ள இயலாதிருந்தது. 1907 ஆம் ஆண்டுவரையில் எமக்குக் கிடைத்துள்ள வானியல் நூல்களில் மிகவும் பழமையானது கி.மு. 523 ஆம் ஆண்டை, அதாவது கம்பீசசுவின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததே. இது குரோட்டனில், பைதாகரசு தனது கழகத்தை நிறுவிய காலத்திற்கும் பிந்தியதாகும். மேலும், மகா அலெக்சாந்தரது காலத்திற்குப் பின்னர், பபிலோன் ஓர் எலனீசிய நகரமானதன் பினனரே அங்கு வானியலாராய்ச்சியின் பொறகாலம் தோன்றியது எனக் கூறுவர். ஆனால் செம்மையாக வானத்தை அவதானிகுந்திறனையும், பிற்காலத்தில் அலெக்சாந்திரிய வானியலாளருக்குப் பெரிதும் உபயோகமான விவரங்களையும் இவர்களாற் பெறமுடிந்திருந்தபோதிலும், இக்காலத்திற்குனும் பபிலோனிய வானியல் அவதான நிலைக்கு அப்பால் வளர்ச்சியடைந்ததென்பதற்கு எவ்வகை ஆதாரமுமில்லை.

பபிலோனியருக்குக் கிரகணங்களை முன்னரே கணக்கிட்டறிய உதவிய வட்டக் கணிப்புக்களைத் தேலிசுவும் அறிந்திருந்தா ரெனக் கொள்ள இடமுண்டென நாம் காண்போம் (பிரிவு 3) ; ஆனால் கிரேக்க விஞ்ஞானத்தின் முன்னோடிகள், பபிலோனிய வானியல் அவதானங்களைப் பற்றி விவரமாக அறிந்திருந்தனர் எனக் கொள்வது தவருகும். பிளேட்டோவின அந்தியகாலத்திற்கு முந்திய எழுத்துக்களில், கிரகங்கள் எவையும் பபிலோனிய பெயர்களினுற் குறிப்பிடப்படவில்லை. அன்றியும் ஆதிகிரேக்க அண்டவியலாளர்கள் கிரகங்கள் பற்றிய ஆராய்ச்சியில் எவ்வித ஆர்வமும் காட்டவில்லை. நிலையான உடுக்கள் பற்றியும், அவர்கள் யாது கருதினர் என நம்மால் அறிய முடியாதிருக்கிறது. பபிலோனிய அவதானிப்புக்களின் உதவியின்றியே கிரேக்க விஞ்ஞானிகள் தாம் சுயமாக ஆரம்பித்தனர் என்பதற்கு இதுவே போதிய ஆதாரமென்க. மேலும் இவ்வவதானிப்புக்கள் பற்றிய பதிவுகள் அலெக்சாந்திரிய காலம் வரைக்கும் கிரேக்கர்களுக்கு

எட்டவில்லையெனவும் தெரியவருகிறது[1]. ஆனால் இப்பபிலோனிய பதிவுகளே அயோனியர்கள் அறிந்திருந்தாரெனினும், அவர்களது சுயசிந்தனைத் திறனே மறுக்கலாகாது. பபிலோனியர் வானநிகழ்ச்சிகளை அவதானித்தது, தமது சோதிடவியலில் உதவுதற்காகவே யனறி, விஞ்ஞானத்தில் அவர்களுக்கு ஆர்வமிருந்ததாலல்ல. தாம் அவதானித்த நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கான விளக்கங்கள காணவும் அவாகள் முயற்சிக்கவில்லை. நமக்குக் கிடைத்த சில விளக்கங்களுமே சிறிதும் திருத்தமற்றன வாகவே காணப்படுகின்றன. ஆனால் கிரேக்கர்களோ, இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளுக்குள்ளாகவே மிகவும் முக்கியமான மூன்று விடயங்களைக் கண்டுபிடித்தனர். முதலாவதாக, பூமி, கோளவடிவான தெனவும் வேறெதனாலும் தாங்கப்படவில்லை யெனவும் அவர்கள் கண்டுபிடித்தனர்[2]. இரண்டாவதாக, சூரிய, சந்திர கிரகணங்கள் பற்றிய உணமையை அவர்கள் கண்டு பிடித்தனர். மூன்றுவதாக, பூமி, எமது மண்டலத்தின் மத்தியிலில்லை யெனவும், அதுவும் ஏனைய கிரகங்களைப்போல வேறேர் மையத்தைச் சுற்றிச் சுழல்கின்றதெனவும் அவர்கள் கண்டனர். அதிக காலஞ் செல்லு முன், சில கிரேக்க சிந்தனையாளர் பூமியும் பிற கிரகங்களும் சுழலும் வட்டத்தின் மையம, சூரியனே எனும் இறுதி முடிவுகளும், வந்தனர் எனக் கூறலாம். இக்கண்டுபிடிப்புகள் பற்றி அவறறிற்குரிய இடத்தில் நாம் ஆராய்வோம் ; கிரேக்க வானியலுக்கும் அதற்கு முந்திய கால சிந்தனை முறைகளுக்கு மிடையேயிருந்த வேற்றுமையைச் சுட்டிக் காட்டுவதற்காகவே, இவை ஈண்டுக் குறிப்பிடப் பட்டன. மேலும் கிரேக்கர்கள் சோதிடத்தை இக்காலத்தில் வற்றுக்கொள்ளவில்லை. கி.மு. மூன்றும் நூற்றாண்டிலேயே சோதிடம் அவர்களிடையே புகுத்தப்பட்டது[3].

சுருங்கக் கூறின், கிரேக்கர்கள் தமது மெய்யியலையோ அல்லது விஞ்ஞானத்தையோ கிழக்கேயிருந்து பெறவில்லையெனலாம். பொதுப்படுத்தப்பட்டபோது, கேத்திரகணிதம் தோன்றுவதற்குக்

1. இப்பதிவுகள பற்றி நாம் முதன முதலிற் காண்பது பிளேட்டோவின் எபிநோமிசுவிலேயே. (Epinomis, 987 a) அரிதோதினும இவை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

2. நான் அறிந்த ஆதாரங்கள் யாவும், பூமி கோளவடிவினதென எகிப்தியரும் பபிலோனியரும் அறிநதிருநதனர எனும பேகாது கருத்தைத் (**Berger, *Erdkunde*, pp. 171 *Sqq.***) தவறென நிரூபிகின்றன.

3. கிரேக்கர்களிடையே சோதிடக்கலையிருநததற்கான ஆதாரங்களுள் மிகப் பழையது பிளேடோவின் திமாயசுவிலுள்ள குறிப்புகளே (40c9). கிரேக்கர்களிடையே சோதிடம் பரவுவதற்குப பொறுப்பானவர்கள் சுதோய்க்கர்களே. அவரிடையேயும் பொசெயடோனியோசுவைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

காரணமாகிய சில அளவியல் விதிகளை எகிப்தியர்களிடமிருந்து இவர்கள் பெற்றுக் கொண்டது உண்மையே. வானமண்டல நிகழ்ச்சிகள் யாவும் சகடவோட்டமாக மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றன எனும் உண்மையை இவர்கள் பபிலோனியரிடமிருந்தே கற்றனர். இதை அவர்கள் அறிந்து கொண்டது விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்குப் பெருமளவில் அடிகோலியது; எனெனில் பபிலோனியர் கற்பனை செய்துகூடப் பார்த்திராத பல விடயங்களை, கிரேக்கர்களுக்கு இவ்வுண்மை உணர்த்தியது.

ஆதி கிரேக்க அணடவிய லின விஞ்ஞானச் சார்பு

XIII. நாம் இங்கு ஆராயப்புகும் மெய்யியலின் விஞ்ஞானச் சார்பை நன்கு வலியுறுத்தல் அவசியம். கிழைத் தேச மக்கள் கிரேக்கர்களிலும், அதிகமான அறிவைச் சேகரித்து வைத்திருந்தனரென நாம் கண்டோம். ஆயினும் அவர்கள் இந்நேர்வுகளை எவ்வகை விஞ்ஞான ஆய்வுக்கும் பயன்படுத்தவில்லை யெனவும், இந்நேர்வுகள் அவர்களை உலகம் பற்றிய தமது பண்டைய கொள்கைகளைக கைவிடத் தூண்டவில்லையெனவும் கண்டோம். ஆனால் கிரேக்கர்களோ, பபிலோனியர்களிலுந் கண்டுபிடிக்கப்பட்ட இந்நேர்வுகளைத் தாம் கையாண்டு பயனடையலாம் என்பதை உடனடியாகக் கண்டுகொண்டனர். தமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் கிரேக்கர்கள் ஒருபோதும் தயங்கியவர்களல்ல. எரொடோதசுவால் வருணிக்கப்படும் சொலன்-கிறீசசு சந்திப்பு வரலாற்று ரீதியான உண்மையல்ல வெனினும், கிரேக்கர்களுக்கிருந்த ஆர்வத்தை நன்கு எடுத்துக் காட்டுகினறது. சொலனிடம் கிறீசசு, தான் அவனது யாத்திரைகள பற்றியும் ஆழ்ந்த ஞானம் பறறியும் கேள்விப்பட்டுள்ளதாகவும், அறிவின் மீது கொண்ட ஆர்வத்திலுல் அவர் பல நாடுகளுக்கும் ஆங்காங்கு காணவேண்டியனவற்றைக் காண்டற் பொருட்டுச் சென்றது பற்றியும் அறிந்துள்ளதாகவும் கூறுகிறுன். "அவதானித்தல்" "மெய்யியல் ஆராய்ச்சி" என்பன வறறைக் குறிக்கும் கிரேக்க சொற்கள் இவர்களது உரையாடல்களிற் பெரிதும் காணப்பட்டன. ஆனால் இச்சொற்கள், அவற்றிற்கு இன்று வழங்கும் பொருளிலிருந்து சற்று மாறுபட்ட பொருளிலேயே அக்காலத்து வழங்கின எனபது உண்மையே. இச்சொற்கள் யாவற்றிற்கும் அடிப்படையாகவுள்ள கருத்தைத் தமிழிற் கூறுவதானால், "புதுமை நாட்டம்" எனும் சொல்லை உபயோகிக்கலாம். இவ்விழைவு—பிரமீதுகளையும், வெள்ளப் பெருக்குகளையும் இவையன்ன பிறவற்றையும் காணவேண்டுமென்னும் ஆர்வம்—அயோனியர்களை, மிலேச்சர்களிடமிருந்து தமக்குக் கிடைத்தவிடயங்களை உபயோகப்படுத்தத் தூண்டியது எனலாம். அயோனிய மெய்யியலாளர்கள், ஐந்து அல்லது ஆறு கேத்திரகணிதவெடுப்புக்களையும் வானமண்டல நிகழ்ச்சி

கள் சகடவோட்டமாக மீண்டும் மீண்டும் நடைபெறுகின்றன வென்பதையும் அறிந்த மாத்திரத்தே, உள்பொருளில் எங் கெல்லாம் இவ்விதிகள் செயற்படுகின்றன என அவதானிக்க வும், உலகு பற்றியவொரு மெய்யியன் முறையை அமைக்க வும் முற்படும் அசாதாரண துணிச்சலையுடையோராய் இருந்தனர். இம்முறையில் அவர்கள் பெற்ற கொள்கைகளிற் காணப்படும், சிறுபிள்ளைத்தனமான கற்பனைகளும் விஞ்ஞான ரீதியான கருத் துக்களும் சேர்ந்த குழப்பம் இன்று எமக்குச் சிரிப்பையே உண்டாக்குவதாயிருக்கலாம். தமது காலத்தில வாழ்ந்த துணி வுடைய சிந்தனையாளர்களுக்கு " மனிதனது தகுதிக்கேற்ற சிந் தனைகளில் ஈடுபடுங்கள் " என அறிவுரை வழங்கிய அக்கால ஞானியர் சிலரது கொள்கை சரியே எனவும் எமக்குத் தோன்ற லாம். ஆனல், இன்றும் இவைபோன்ற துணிச்சலான தீர்க்க தரிசனங்களே விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு இடமேறபடுத்து கின்றன என்பதை நாம் மனதிற கொள்ளல் நன்மைபயக்கும். அன்றியும் இவவாதி மெய்யியலாளரில் ஒவ்வொருவரும், ஒவ் வொரு திசையில் உலகம் பற்றிய அறிவு விரிவடைவதற்கு வழி வகுத்தது மட்டுமன்றி, உலக அறிவிற்கும் தம் பங்கை ஈந்தனர் என்பதையும் மறுக்க முடியாது.

கிரேக்க விஞ்ஞானம் முறையான ஆய்வுகள் பரிசோதனைகள் என்பனவற்றின் வழியே அமைக்கப்படுவதற்குப் பதிலாக, பெரு மளவிற்கு அதிட்டவசமான ஊகங்களின் வழியாகவே அமைக் கப்பட்டது எனக் கொள்வதற்கு இடமில்லையெனலாம். எமக்குக் கிடைத்துள்ள வரலாறு அவர்கள் எய்திய முடிவுகளைப்பற்றியே கூறுகின்றதாதலினலேயே எமக்கு, அவை யாவும் ஊகங்கள் எனும் எண்ணம் வற்படுகின்றது. இவ்வாதி மெய்யியலாளர்கள் எவ்வாறு தமது முடிபுகளையும் பெற்றனர் என்பது பற்றிய விளக்கங்களைக் காண்டல் மிகவும் அரிதென்க. அன்றியும் ஒன் றன்பின் ஒன்றுகத் தரப்படும் இவ்வபிப்பிராயங்களை நோக்கு கையில் இவை யாவும் கொண்டது விடாக் கொள்கைகள் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனல் இம்மரபின் பொது வான பண்புக்கு மாறுக, சில இடங்களில் விளக்கங்கள் உள் ளன ; பிற்காலக் கிரேக்கர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத் திப் பேணியிருந்தால் இன்னும் பல விளக்கங்களோடு கூடிய கொள்கைகள் எமக்குக் கிடைத்திருக்கலாம் எனக் கருதுவதில் நியாயமுண்டு. கடலுயிரியற்றுறையில், இக்கால ஆராய்ச்சிகளா லும் நிரூபிக்கப்பட்டுள்ள பல குறிப்பிடத்தக்க உண்மைகளை அனக்சிமாந்தர் கண்டுபிடித்தார் (பிரிவு 22). செலூபனிசவும், மோல்ற்ரு பேரோசு, சிராசியூசு போன்ற ஒன்றுக்கொன்று அணித்தாக விராத இடங்களிற் காணப்பட்ட உயிர்ச்சுவடுகளையும்

கலைாய சுவடுகளையும் குறிப்பிட்டுத் தமது கொள்கையை நிறுவ முயனறனர் (பிரிவு 59). ஆதி மெய்யியல் வாதிகளாற் பொது வாக ஏற்றுக்கொள்ளப்பட்டதான, பூமி ஆரம்பத்தில் ஈரலிப் புடையதாயிருந்ததென்னும் கொள்கை, வெறும் புராணக் கருத்தல்ல வென்பதற்கும் உண்மையில் உயிரியல், தொல்லுயி ரியல ஆகிய துறைகளிற் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனு கவே இக்கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்ப தற்கும் இவை போதிய ஆதாரங்கள் எனலாம். இத்தகைய விடயங்களை அவதானித்தவர்களான கிரேக்கர்கள், இன்று நமக் குக் கிடைக்காதொழிந்து போன, வேறு பலவற்றையும் அவ தானிகளும் ஆற்றலும் ஆர்வமும் இல்லாதிருந்திருப்பர் எனக் கொள்வது மடமையாகும். கிரேக்கர்கள் அறிவின் பொருட்டு, அவதானிப்பில் ஈடுபட்டவர்களல்ல எனக் கருதுவது கேலிக்கிட மான தவறாகும். மனித உடலை மிகவும் செம்மையாகச் சித்திரித்திருக்கும் இக்காலச் சிற்பங்களை இவர்கள் நன்கு அவதானிப்பிற் பயிற்றப்பட்டவர்கள் என்பதற்குப் போதிய ஆதா ரங்களெனலாம். இப்போகிராத்திசுவின் நூற்றொகுதியும் விஞ் ஞான ரீதியான அவதானிப்பிற்கு உதாரணங்களாகக் கொள் ளக்கூடிய பகுதிகள் பலவற்றைக் கொண்டுள்ளது. ஆகவே, கிரேக்கர்கள் நன்கு அவதானிக்கும் ;ஆற்றலுடையோராயும், உலகைப்பற்றி மேலும் அறிந்து கொள்வதில் நாட்டமுடையோ ராயும் இருந்தனர் என அறியலாம். அத்தகையோர் தாம் பெற்றிருந்த அவதானிக்கும் திறனைத் தமது ஆர்வத்தைத் திருப்தி செய்ய உபயோகித்திருக்கமாட்டார் எனக் கொள்வது சற்றும் பொருத்தமற்றதொன்றன்றே ? அவதானித்தற்கு வேண்டிய, எம்மிடம் உள்ளவை போன்ற மிகவும் நுணுக்கமான கருவிகள் அவர்களிடம் இருக்கவில்லை என்பது உண்மையே ; ஆனால் மிகவும் எளிமையான உபகரணங்களின் உதவியுடனேயே பலவிடயங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்பதை மறுக்க முடியாது. பருவகாலங்களை அறிதற்குப் பாட்டர்களுக்கு உதவும் என்னும் நோக்கத்துடன்தான் அனக்சிமாந்தர் நிலைக்குத்தைக் கண்டு பிடித்தார் எனக் கொள்ளலாகாது.

கிரேக்கர்கள் பரிசோதனைகளைக் கையாளவில்லை யென்பதும் உண்மையல்ல. மெய்யியலின் வளர்ச்சியில் மருத்துவ மரபு களின் செல்வாக்குப்படிந்த காலத்திலிருந்தே பரிசோதனை முறை ஆரம்பித்ததெனலாம். எம்பிடோக்கிளிசு கிளெப்சைட்ரு வின் உதவியோடு நடாத்திய பரிசோதனையே, வரலாற்றிற் பதிவு செய்யப்பட்டுள்ள, ஒரேயொரு திருத்தமான பரிசோதனை யாகும். இப்பரிசோதனை பற்றி அவர் தந்துள்ள வர்ணனையைப் பார்க்கும்போது (பகுதி 100), ஆவே, ரோறிசெல்லி ஆகியோர்

பிற்காலத்தில் கண்டுபிடித்தனவற்றையும், இப்பரிசோதனை மூலம் அறியக்கூடிய நிலையில் எம்பிடோக்ளிசிருந்தார் எனக் காணக்கூடியதாயிருக்கிறது. அறிவு தேடுவதில் மிகவும் ஆர்வ மூடையோராயிருந்த இம்மக்கள், பரிசோதனை முறையை ஒரே ஒரு விடயத்தில் மாத்திரம் கையாண்டு ஏனைய விடயங்களில் தமது அறிவை விருத்தி செய்வதற்கு அதனைப் பயன்படுத்தா திருந்திருப்பர் என நம்பமுடியாது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சிப் போக்கில், மிகக் குறுகிய காலத் திற்குள்ளாகவே, புவிமையக் கருதுகோள் கைவிடப்பட்டுவிட்ட தெனினும், இதுவே விஞ்ஞானத்தின் ஆரம்ப நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருதுகோளாயிருந்த தென்பதே எமக்குள்ள பெரிய இடைஞ்சலாகும். உலகின் மையம் பூமியே எனக் கருதப்படுகிறவளவில், வளிமண்டலவியலுக்கும் வானியலுக் கும் எவ்வகை வேறுபாடும் இல்லையெனக் கொள்ளப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். இத்தகைய ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வது எமக்கு மிகவும் சிரமமாகவேயிருக்கும். "உலகு" எனும் சொல்லை நாம் உபயோகிக்கும்போது அது பூமியை மட்டுமே குறிக்கிறது எனவோ அல்லது முக்கியமாகப் பூமியையே குறிக்கிறது எனவோ கொள்ளலாகாது என்பதை யும் வானசோதிகள் யாவற்றையுமே – பூமி உட்பட – அது குறிக்கிறதென்பதையும் நாம் நினைவிறகொள்ளல் வேண்டும்.

ஆகவே ஆரும் நூற்றாண்டில் விஞ்ஞானம் முக்கியமாக "மேலே"யுள்ள பகுதிகளைப் பற்றியதாகவேயிருந்தது—மேகங் கள், வானவில்கள், மின்னல் என்பனவும் வானசோதிகளோடு சேர்த்து அக்கால விஞ்ஞானிகளால் ஆராயப்பட்டன. இதனாற் றான், எரியூட்டப்பட்ட மேகங்களே வானசோதிகள் எனும், இன்று எமக்கு மிகவும் ஆச்சரியத்தை யூட்டுவதான,விளக்கம் தரப்பட்டது[1]. ஆனால் இக்கருத்தும், சந்திரன் சூரியன், உடுக் கள் ஆகியன ஒன்றுக்கொன்று மாறுபட்ட இயற்கையுடையன எனும் கருத்திலும் மேம்பட்டதென்க. மிகவும் வெளிப்படையா கத் தோன்றிய கருதுகோள் எதுவோ அதுவே விஞ்ஞானத்தின் ஆரம்ப கருதுகோளாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை தவிர்க்க முடி யாத வொன்றாகும். எக்கருதுகோளையும் நடைமுறையிற் பயன் படுத்துவதன் மூலமே அதன் குறைபாடுகளை வெளிக்கொணர முடியுமாதலால், இவ்வாறு ஆரம்பிப்பதே பொருத்தமானது மாகும். புவிமையக் கருதுகோளை முதன் முதலில் நன்கு பயன் படுத்த முயன்றவர்கள் கிரேக்கர்களேயானபடியாற்றான் அவர் களிடையே அதற்கு அப்பாலும் விஞ்ஞானத்தை விருத்திசெய்ய

1. எனினும், கலிலியோவும் வால்வெள்ளிகளை வளிமண்டல நிகழ்ச்சி னைவே கருதினர்.

முடிந்தது. கிரேக்க விஞ்ஞானத்தின் முன்னோடிகள், விஞ்ஞான முறையான கருதுகோள்களின் இயல்பு பற்றி அறிந்திருக்க வில்லையென்பதும், தாம் கருதியவை முற்றிலும் உண்மை யெனவே அவர்கள் நம்பினர் என்பதும் சரியே. ஆனால் செம் மையான உள்ளுணர்வொன்றினால் அவர்கள் சரியான நெறி யிற் செலுத்தப்பட்டனர் எனலாம். ஆரம்பத்திலிருந்தே " உலக தோற்றத்தைக் கழித்தொதுக்காது விளக்க வேண்டும் " எனும் உணர்வே அவர்களிடையே செயற்பட்டது என்பதையும் நாம் உணரலாம். இறுதியில் உலகு முழுவதையும் பற்றி ஆராயக் கூடியவளவிற்கு வளர்ச்சியடைந்த விஞ்ஞானமுறையை முதன் முதலில் உருவாக்கியதற்காக நாம் இச்சிந்தனையாளர்களுக்கே கடமைப்பட்டிருக்கிறோம். எடுத்த மாத்திரத்தேயே, இவ்விஞ் ஞான முறையைத் தாம் பூரணப்படுத்தி விடலாமென அவர்கள் நம்பினர். இன்றும் நாம் சிலவேளைகளில் இத்தகைய தவறு களுக்குள்ளாகிறோம் ; குறைந்த பொருத்தமுடைய கருதுகோ ளொன்றிலிருந்து, அதிக பொருத்தமுடைய கருதுகோளொன் றைத் தழுவும் நிலைக்கு முன்னேறுவதே விஞ்ஞான வளர்ச்சி எனபதை நாம் மறந்துவிடுகிறோம். இம்முறையை முதன முத லிற் கையாண்டவர்கள் கிரேக்கர்களே. அவர்களே விஞ்ஞானத் தைத் தோற்றுவித்தவர்கள் எனக் கருதுவதற்கு இதுவே போதிய நியாயமெனலாம்.

XIV. கிரேக்க மெய்யியலின் வரலாற்றை முதன் முதலில் ஒழுங்கான முறையில் விவரித்தவனான தியோபிறசுத்தோசு, ஆதி அண்டவியலாளரிற் சிலர் ஆசிரியர்களாகவும் ஏனையோர் அவர்களது சீடர்களாகவும் இருந்தனரெனவும், இவர்கள யாவ ரும் நிரந்தரமான குழுக்களில் அங்கத்துவம் வகித்தனரென் வும் கூறுகிறார். இக்கூற்று ஒரு காலவழுவெனக் கருதப்படுகிறது. மேலும், மெய்யியற் " கழகங்கள் " என எதுவும் இருக்கவில் லையெனவும் சிலர் கூறியுள்ளனர். ஆனால் இத்தகையவொரு விடயம் பற்றித் தியோபிறசுத்தோசு கூறுவனவற்றை, நாம் எளிதாக ஒதுக்கிவிட முடியாது. இவ்விடயம் மிகவும் முக்கிய மான வொன்றுகையால், நாம் எமது கதையை ஆரம்பிப்ப தற்கு முதல் இதனைத் தெளிவுபடுத்துதல் அவசியமாகிறது. மெய்யியற் கழகங்கள்

வாழ்க்கையின் எந்தத் துறையிலும் ஆரம்பத்தில், மக்கள் கூட்டாயிருந்த சங்கத்துக்கே மதிப்பிருந்தது ; தனி மனிதன் ஒரு பொருட்டாக மதிக்கப்படவில்லை. கீழைத்தேச மக்களது வளர்ச்சி ஒருபோதும் இந்நிலைக்கு அப்பாற் செல்லவில்லை ; அவர்களது விஞ்ஞானம் எனப்படுவதும் ஒரு சாதியினரதோ அல்லது குழுவினரதோ பரம்பரைச் சொத்தாக இருந்து வந்

திருக்கிறதே யொழிய, அதனோடு சம்பந்தப்பட்ட தனிப்பட்ட மனிதர் எவரது பெயரும் குறிப்பிடப்படவில்லை. கிரேக்கர்களிடையேயும் இத்தகையவொரு பழக்கமே ஒரு காலத்தில் நிலவியது என்பது சில உதாரணங்களை நோக்குகையில் எமக்குப் புலனாகிறது. உதாரணமாக மருத்துவம் ஆரம்பத்தில் அசுகிளெப்பியாட்டுகளின் "இரகசிய"மாக இருந்தது. ஆனால், கிரேக்கர்களுக்கும் ஏனைய மக்களுக்குமிடையே யிருந்த வேறுபாடு, கிரேக்கர்களிடையே, இக்கலைகள் ஆரம்ப காலத்திலேயே மிகவும் ஆற்றல் படைத்த மனிதர் சிலரது செல்வாக்குக்குட்பட்டுப் புத்துயிர் பெற்றது மட்டுமன்றிப் புதிய வழிகளில் வளர்ச்சியடையவும் வழியேற்பட்டது என்பதே. இதனால், இக்கலைகளின் கூட்டு இயல்பு, அதிகரித்த தெனலாமேயொழிய, குன்றியது எனக் கூற முடியாது. தொழிற் குழுவுக்குப் பதிலாக, "கழகங்கள்" என நாம் அழைப்பவை தோன்றின; தொழில் பயில்வோரின் இடத்தில் சீடர்கள் தோனறினர். இதுவோர் பெரிய மாற்றம் எனலாம். அதிகாரத்தையுடைய தலைவர்களைக் கொண்டதும் கட்டுப்பாடுகளையுடையதுமான தொழிற் குழுக்கள் அதிக மாற்றத்தை விரும்பாதனவும், பழமைச் சார்புடையனவாயும் இருத்தல் தவிர்க்க முடியாததாகும். ஆனால், தாம் மதிக்கும் ஓர் ஆசிரியனைச் சார்ந்தொழுகும் சீடர் கூட்டம் வரலாறறிந்த மிகவும் வலிமையுடைய முன்னேற்றச் சத்திகளுள் ஒன்றென்க.

பிற்காலத்து அதீனிய கழகங்கள் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுச்சங்கங்களாயிருந்தன என்பதில் ஐயமில்லை. இவற்றுள் மிகப் பழையதான கழகம் ஏறக்குறையத் தொளாயிரம் ஆண்டுகளாக நிலைத்திருந்ததெனவும் நாம் அறிகிறோம். இம் மரபு, கி. மு. நான்காம் நூற்றாண்டிற்றான் ஆரம்பித்ததா அன்றேல் அதற்கு முன்பிருந்தே தொடர்ந்து வந்ததா என்பது பற்றியே நாம் முடிவு செய்தல் வேண்டும். ஆதி மெய்யியற் கொள்கைகளுட் பிரதானமானவை, இக்கழகங்களின் வழியாகவே வந்தன என்பதற்கு ஆதாரமாகப் பிளேட்டோவின் கூற்றொன்றுளது. எபிசோசுவிலிருந்த, எரக்கிளேட்சுவின் சீடர்கள் தனது காலத்தில் மிகவும் வலிமையுடையவோர் குழுவினராயிருந்தனர் என அவர், சோக்கிரதரைக் கூற வைக்கிறார். சோபிட்டு, தேற்சுமன்[1] என்பனவற்றில் வரும் அந்நியனும், ஈலியாவில் தனது கழகம் இன்னமும் இருந்து வருகிறது எனக் கூறுவதைக் கேட்கிறோம். அனக்சகோரசுவின் சீடர்களைப் பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம்; பைதாகரச வாதிகளும் ஒரு குழுவினரேயென்பதை யாரும் சந்தேகிக்க மாட்டார். உண்மையில், மைலீசியர்களைத் தவிர, ஏனையோர் யாவரும் கழகங்

1. Statesman.

களைச் சேர்ந்திருந்தனர் என்பதற்குப் பலமான புறச்சான்றுகள் பல உள எனலாம். மைலீசியர்களிலும், பிற்காலத்து மெய்யியலாளர் சிலர் பற்றி, அவர்கள் அனக்சமீனிசுவின் சிந்தனை முறையைத் தழுவியவர்கள் என தியோபிறசுத்தோசு கூறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது[1]. அனறியும், முதலாம் அத்தியாயத்தில், மைலீசியாகளிடையே கழகம் ஒன்றிருந்தது எனபதற்குப் பலமான அகச்சான்றுகள் உள எனவும் நாம் காண்போம். இவற்றையெல்லாம் மனதிற கொண்டே, கிரேக்க விஞ்ஞானத்தைத் தோற்றுவித்த சிந்தனையாளர்களை நாம் ஆராய்வோம்.

1. அத்தியாயம் VI. பிரிவு 122 ஒப்பிடுக.

ஆதாரங்கள் பற்றிய குறிப்பு

அ. மெய்யியலாளர்

பிளேட்டோ

1. ஒழுக்கவியல், அறிவியல் என்பனபற்றிய ஆராய்ச்சிகள் ஆரம்பிப்பதற்கு முந்திய மெய்யியல் வரலாறு பற்றிப் பிளேட்டோ குறிப்பிடும் இடங்கள் மிகச்சிலவே ; ஆனால் அது பற்றி அவர் கூறியுள்ளவை யாவும் மிகவும் பயனுள்ளவையாகக் காணப்படுகின்றன. அவரிடம் இயல்பாகவே அமைந்திருந்த கல்வித்திறனும், பிறரது மனத்தை உணர்ந்து கொள்ளும் ஆற்றலும், ஆதிமெய்யியல் வாதிகளின் கருத்துக்கள் பற்றி ஆதாவோடு விவாதிக்க அவருக்கு உதவின. இவ்வாறு விவாதிக்கையில் தனக்கு முன் வந்த மெய்யியலாளர் பற்றிச் சிலவேளைகளில் விளையாட்டாகவும் சிலேடையாகவும் குறிப்பிட்டுள்ளா ரெனினும், ஒரு போதும் அவர்களது சொற்களுக்கு, அவர்கள் கருதாத பொருளைக் கற்பிக்க, அவர் முயலவில்லை எனலாம். உண்மையில், பண்டைய எழுத்தாளரிடையே மிகவும் அரிதாகவே காணப்பட்ட வொரு வரலாறறுணர்வை அவர் உடையவராயிருந்தார்.

ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அதென்சில் நிலவிய விஞ்ஞானக் கொள்கைகள் பற்றிய அவரது வருணனையான **பீடோவின்** பகுதி (96 a sqq.) எமக்கு மிகவும் உபயோகமானது.

அரித்தோதில்

2. பொதுவாக, ஆதி மெய்யியலாளர் பற்றிய அரித்தோதிலினது கூற்றுக்கள், பிளேட்டோவின் கூற்றுக்களினளவுக்கு வரலாற்று ரீதியானவையல்லவெனலாம். எறக்குறைய எல்லா விடயங்களிலும், அரித்தோதில் தனது கொள்கையின் சார்பில் நினறே பிற கருத்துக்களை ஆராய்கின்றார் எனலாம்; அவர் ஏற்றுக்கொண்ட கொள்கை, வானமண்டலத்தின தோற்றரவான நாளாந்த சுழற்சியை அடிப்படையாகக் கொண்டமைந்ததாதலால், அதனிலும் சிறந்த, விஞ்ஞான ரீதியான கொள்கைகளை ஏற்றுக்கொள்வது அவரால் இயலாததாயிருந்தது. முந்திய மெய்யியலாளர்கள் முயன்றவை யாவற்றையும் தனது மெய்யியன் முறை சாதித்து விட்டதென அவர் நம்பினாராதலால், அவர்களது கொள்கைகள் யாவும், தனது மெய்யியன் முறையை இலட்சியமாகக் கொண்ட " மழலை " முயற்சிகள் எனவே அவர் கருதினார் (Met. A,10, 993 a 15). மேலும் அரித்தோதில் சில மெய்யியன் முறைகளை ஏனையவற்றிலும் அதிக ஆதரவோடு நோக்கினார் என்பது கவனிக்கப்படல் வேண்டும். உதாரணமாக,

சூலியவாதிகள் பற்றி அரித்தோதில் கூறியிருப்பன நியாய மற்றவையே என்பதில் ஐயமில்லை. பொதுவாக, கணிதவியற் சார்புடைய விடயங்களில், அரித்தோதில் கூறுவனவற்றை நம்ப முடியாது.

அரித்தோதில் தனது விவரங்களிற் பெரும்பாலானவற்றைப் பிளேட்டோவின் மூலமே பெற்றார் என்பதைப் பலர் மறந்து விடுவதுண்டு ; பல விடங்களில், பிளேட்டோவின நகைச்சுவை யான குறிப்புக்களுக்குப், பொருத்தமான பொருள் கொள் ளாத தவறுக்கு அரிததோதில் ஆளாகிறார் என்பதையும்நாம் அவதானித்தல் வேண்டும்.

3. சுதோய்க்கர்கள், குறிப்பாகக் கிறிசிப்பியோசு, ஆதிமெய்யி சுதோய்க்கர் யலில் அதிக கவனம் செலுத்தினர். ஆனால், அதுபற்றி அவர்கள் கூறும் முறையில், அரித்தோதிலின் கூற்றுக்களில் நாம்கண்ட தவறு, இன்னும் மிகையாக எற்பட்டிருப்பதைக் காணலாம். தமது கொள்கையின் சார்பில் நின்று, தமக்கு முந்திய மெய் யியலாளர்களை விமர்சிப்பதுடன் அவர்கள திருபதிப்படவில்லை; பழைய கவிஞர்களும் சிந்தனையாளரும் போதித்த கொள்கை களுக்கும் தமது கருத்துக்களுக்கும் எவ்வகை வேற்றுமையும் இல்லையென அவர்கள் எண்ணினர் எனத் தோன்றுகிறது. முந் திய மெயயியலாளரது கொள்கைகளுக்கு இவ்வாறுபொருள் கொள்ளும் முறை ஆதிமெய்யியல் வரலாற்றில், குறிபபாக எரக் இளட்சு பற்றிய விவரங்களில், பல தவறுகள் எற்படுவதற்குக் காரணமாயிருந்திருக்கிறது.

4. ஐயவாதிகளைப் பொறுத்தவரையிலும், இதுவரை கூறியன ஐயவாதிகள் யாவும் பெருமளவிற்குப் பொருத்தமானவை யெனவே கூற வேண்டும். செகுதசு எம்பிரிக்கசு போன்றோர் ஆதி மெய்யிய லில் உள்ள முரண்பாடுகளை வெளிக்கொணர்வதற்காகவே அதில் ஆர்வம் காட்டினர். ஆனால் பெரும்பாலும் அவர் கூறுவன அதிக பயனுள்ளனவாய்க் காணப்படுகின்றன; ஏனெனில், தனது கொள்கைக்கு ஆதாரம் பெறும் பொருட்டு, அறிவு, புலனு ணர்வு பற்றிய பழைய கருத்துக்கள் பலவற்றை அவர் மேற் கோள்களாகத் தருகின்றார்.

5. இத்தலைப்பின்கீழ் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது நவபிளேட்டோ தியோபிரசுத்தோசுவின் செல்வாக்குக்குட்படாத, அரித்தோதி தரிசனவாதி லினை பாடியகாரர்களையே. இவர்களிடையே காணப்பட்ட முக்கிய கள் வியல்பு, பழைய மெய்யியற் கொள்கைகளுக்குப் பொருள் கற்பிப்பதில் இவர்கள் காட்டிய தாராள மனப்பான்மையேயாகும். இதன்படி, மனித அறிவினால் முற்றுக விளங்கிக்கொள்ளக் கூடியதே உலகு எனும் கொள்கையை ஆதி மெய்யியலாளர்

யாவரும் எகோபித்து ஏற்றுக்கொண்டனர் என இவர்கள் கருதினர். எனினும் ஆதி மெய்யியலாளரது மெய்யியற் பகுதிகளைப் பேணி எமக்குக் கிடைக்குமாறு தந்ததற்கு, யாவரிற்கும் மேலாக சிம்பிளிசியசுவுக்கே நாம் கடமைப்பட்டுள்ளோம் எனலாம். கி. பி. 529 ஆம் ஆண்டுவரையிலாயினும், கழக நூல் நிலையத்தைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு அவருக்கிருந்ததென்க.

ஆ. தொகுப்பாசிரியர்கள்

6. பேராசிரியர் எர்மான் டியல்சுவினது டொக்சோகிராபி கிரைக்கி (Doxographi Graeci) எனும் நூல், பிந்திய ஆதாரங்கள் பற்றிய பல புதிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது; பேராசிரியர் டியல்சுவின் ஆராய்ச்சிகளை நாம் மனத்திற் கொள்ளாது விடின், இவ்வாதார நூல்களிலுள்ள கூற்றுக்களைச் சரிவர மதிப்பிட முடியாது. டொக்சோகிராபி கிரைக்கியைப் படிக்க முயலும் வாசகருக்கு உதவக்கூடிய சுருக்கம் ஒன்றை இங்கு தருதல் சாத்தியமாகும்.

தியோபிறசுத தோசுவின "அபிப்பிராயங்கள்"

7. தொகுப்பாசிரியர்கள் (Doxographers) எனும்போது, தியோபிறசுத்தோசுவின் பெருநூலிலிருந்து நேரடியாகவோ அல்லது பிற ஆசிரியர் மூலமாகவோ பெற்ற விவரங்களைக் கொண்டு, கிரேக்க மெய்யியலாளரது அபிப்பிராயங்களைத் தொகுத்துத் தந்தவர்களையே குறிப்பிடுகிறோம். இவர்களுக்கு ஆதாரமாகும், மேற்குறிப்பிடப்பட்ட தியோபிறசுதோசுவின் நூலில் கணிசமான அளவுடையதான ஒரு அத்தியாயம் பேணப்பட்டிருக்கிறது. அரித்தோதிலது நூலொன்றின் முதற்பாகத்திற்கு, சிம்பிளிசியசு எழுதிய பாடிய மொன்றிலும், தியோபிறசுத்தோசுவின் நூலின் முக்கிய பகுதிகள் பல காணப்படுகின்றன என்று பிராண்டிசுவைப் பின்பற்றி ஊசினர் கூறினர். சிம்பிளிசியசும், அபுரொடிசியாசுவைச் சேர்ந்த அலெக்சாந்தரிடமிருந்தே (எ. கு., கி. பி. 200) இப்பகுதிகளைப் பெற்றுள்ளார் போலத் தோன்றுகிறது. ஆகவே தியோபிறசுத்தோசுவின் நூலின் முதற் பாகத்தின் கணிசமான பகுதியும், இறுதிப் பாகத்தில் ஏறக்குறைய முழுவதும் எமக்குக் கிடைத்திருக்கின்றனவெனலாம்.

எமக்குக் கிடைத்துள்ள பகுதிகளைக் கொண்டு நோக்குகையில், தேலிசு முதல் பிளேட்டோ வரை வாழ்ந்த மெய்யியலாளரது கவனத்தைக் கவர்ந்த முக்கியவிடயங்களைத் தனது நூலில் வெவ்வேறு பாகங்களாக வகைப்படுத்தி ஆராய்வதே தியோபிறசுத்தோசு பின்பற்றிய முறை என்பது தெளிவாகிறது. மெய்யியலாளர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கேற்ற

வாறு வரிசைப்படுத்தப்படவில்லை; ஒத்தகொள்கையுடையவர்களா யிருந்த மெய்யியலாளர்கள், ஒருங்கே ஆராயப்பட்டனர். ஆனால் ஒத்தகொள்கையுடையவர் போலத் தோன்றினும் இரு மெய் யியலாளரிடையே வேற்றுமை எதுவும் உண்டெனின், அவ்வேறு பாடுகளும் கவனத்தோடு குறிப்பிடப்பட்டன. ஆனால் முதலா வது பாகம் இம்முறைக்குச் சிறிது புறனடையானது எனலாம்; எனெனில் அதில் காலவரிசைப்படியே மெய்யியல் மரபுகள் வருணிக்கப்பட்டுள்ளன. அனறியும், காலவரிசைப்படி அமைந்த வரலாற்றுக் குறிப்புக்களும் ஆங்காங்கே தரப்பட்டன.

தொகுப்பா சிரியகள்

8. காலப்போக்கில், கிரேக்கர்களது மேதைத்திறன் மங்கவா ரம்பித்ததைத் தொடர்ந்து, எழுந்த பெருந்தொகையானசுருக்க நூலாசிரியர்க்கும், கைநூலாசிரியர்க்கும் தியோபிறசுத்தோசு வினது இந்நூல் மிகவும் பயனுடையதாயிருந்தது. இவர்களிற் சிலர் தியோபிறசுத்தோசுவையே பின்பற்றி, ஒவ்வொரு பிரச் சினையையும் தனியான தலைப்பாகக் கொண்டு வரிசைபடுத்தி னர். வேனையோர் அவரது நூலைப் பிரித்து அதிலே தரப்பட்ட கருத் துக்களை, அவற்றைத் தழுவிய மெய்யியலாளரது பெயர்களின் கீழ் வரிசைப்படுத்தியிருந்தனர். இயற்படுத்தும் தொகுப்புமுறை யிலிருந்து, வரனமுறைத் தொகுபபு முறையைத் தழுவிய இப் பின்னவர்களை வரன்முறைத் தொகுப்பாசிரியர்கள் என நான் அழைப்பேன்.

I. இயற்படுத்த தொகுப்பாசிரியர்

பிளாக்கிட்டா மற்றும் தொபா யோசுவும்

9. புளுட்டாக்கினது எனக் கூறப்படும் நூல்களில் ஒன்றான பிளாக்கிட்டா பிலோசபோறம் (Pla ita Philosophorum) யோன் தொபாயோசு (கி. பி. 470 அளவில்) எழுதிய எக்கிலொகே பிசிகே (E logae Physicae) எனும் இரு நூல்களுமே இன்று இயற்படுத்த தொகுப்பாசிரியரது நூல்களாக எமக்குக் கிடைத் துள்ளவை. இவறறுட் பின்னது, ஆதியில், அதே ஆசிரியாரால் எழுதப்பட்ட புளோரிலேகியும் (Florilegium) என்பதோடு சேர்ந்து ஒரு நூலாகவே கொள்ளப்பட்டது. புளுட்டாக்கினது எனத் தவறுகக் கருதப்பட்ட போலி நூலான பிளாக்கிட்டாவைப் பெருமளவிற்கு ஒத்திருந்த சுருக்க நூலொன்றின் பிரதியொன் றும் இந்நூலிற் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் எக்கிலொகே, பிளாக்கிட்டாவின் முதநூல் எனவோ அல்லது பிளாக்கிட்டா, எக்கிலொகேயின் முத நூலெனவோ சிறிதும் பொருந்தாதென் பது, நன்கு நிரூபிக்கப்படக்கூடியதே. இவற்றுள், எக்கிலொகேயே மற்றையதினும் முழுமையுடையதாய்க் காணப்படுவது ஆயி னும் பிளாக்கிட்டாவே இவற்றுட் காலத்தால் முந்தியதாயிருத் தல் வேண்டும். எனெனில் கி. பி. 177 ஆம் ஆண்டில்

(Dox. p. 4) சிறித்துவரை ஆதரித்தற்கு, அதெனுகரசு பயன் படுத்தியது இந்நூலையே. அன்றியும் கலன் எழுதிய தெனப் படும் மெய்யியல் வரலாற்றினதும், இபூசிபியோசு, சிரில் ஆகியோரது நூல்களிலுள்ள குறிப்புக்களினதும் ஆதாரம் இதுவே. இவ்வெழுத்தாளர்கள் கூறுவனவற்றின் உதவியோடு எக்கிலொகியிற் பல திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன (Dox.pp. 5. spp.).

பிளாக்கிட்டாவைப் பயன்படுத்திக்கொண்ட வேறெருரு எழுத்தாளர் அக்கிலீசு (அக்கிலிசு தாத்தியசுவல்ல) ஆவர். இவரது காலம் எதுவெனத் திட்டவட்டமாக எமக்குத் தெரியாதெனினும், இவர் கி. பி. மூன்றும் நூறாண்டைச் சேர்ந்தவரென அனுமானிக்க இடமுண்டு (Dox. p. 18).

ஈத்தியோசு

10. ஆயின், பிளாக்கிட்டானு எக்கிலொகி ஆகிய இரண்டிற்கும் பொதுவான ஆதார நூல யாது? தியோடோறெற்று (கி. பி. 445 ஆம் ஆண்டளவில்) இதனை வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார் என டியல்சு காட்டியுள்ளார்; ஏனெனில் சிலவேளைகளில், இவ்விரு நூல்களிலும் காணப்படும் கருத்துக்கள் சிலவற்றை, அவற்றிலும் விரிவான உருவத்தில் தியோடோறெற்று தந்திருக்கிறார். அதுமட்டுமல்லாது, ஈத்தியோசுவே ஆதார நூலை எழுதியவர் எனவும் அவர் அறியத்தந்துள்ளார். இதற்கேற்பவே டியல்சு, பிளாக்கிட்டாவின் பகுதிகளையும், அவற்றிற்குச் சார்பான எக்கிலொகியின் பகுதிகளையும் அருகருகே நிரல்களாக வமைத்து அச்சிட்ட தமது நூலிறகு ஈத்தியை பிளாக்கிட்டா வெனப் (Aetii Placita) பெயரிட்டனர். புளுட்டாக்கின் நூலிலிருந்து பிற்தியகால எழுத்தாளர் கையாண்ட மேற்கோள்களும், ஈத்தியோசுவிடமிருந்து தியோடோறெற்றினூல் பெறப்பட்ட பகுதிகளும் டியல்சுவின் நூலில் ஒவ்வொரு பக்கத்தின் அடியிலும் தரப்பட்டிருக்குன்றன.

வெதுசுதா பிளாக்கிட்டா

11. ஆனால் ஈத்தியோசுவும் தியோபிறசுத்தோசுவின் நூலை நேரடியாகப் பயன்படுத்தவில்லை. தியோபிறசுத்தோசுவின் நூலிலிருந்து பெறப்பட்ட வேறெருரு சுருக்க நூலையே அவர் பயன்படுத்தினர். **வெதுசுதா பிளாக்கிட்டா** என அவரால் அழைக்கப்பட்ட இந்நூலின் சாயைகள் சிசரோவின் நூலிலும், வாரோவைப் பின்பற்றுபவரான சென்சோரினசுவின் நூலிலும் காணப்படலாம். **வெதுசுதா பிளாக்கிட்டா** பொசெய்டோனியசின் குழுவினரால் யாக்கப்பட்டது. ஓமரைப் பின்பற்றிய ஒட்டு வமையாளர்களது நூல்களிலும் **வெதுசுதா பிளாக்கிட்டாவின்** சாயைகள் காணப்படுகின்றன.

எபிகூரிய நூல்களிலிருந்தும், வேறு சில ஆதாரங்களிலிருந்தும் பெற்று, ஈத்தியோசு தமது நூலிற் சேர்ந்திருக்கும் பயனற்ற விவரங்கள் சிலவற்றைக் கழித்துவிட்டுப் பார்ப்போமாஞல், **வெதுசுதா பிளாக்கிட்டாவின்** பொருளடக்கத்தை ஓரளவுக்குத் திட்டவட்டமாக ஊகித்துக்கொள்ளலாம் (**Dox. pp.** 181 sqq.). இதனைக் கொண்டு, தியோபிறசுத்தோசுவினது முதல் நூலின் ஒழுங்கையும் ஊகித்துக்கொள்ளுதல் சாத்தியமே.

12. ஆதி கிரேக்க மெய்யியல்பற்றிச் சிசரோ எமக்குத் தரும் விவரங்களைப பொறுத்தவரையில், அவரைத் தொகுப்பாசிரியர்களுள் ஒருவராகக் கணிக்கலாமேயொழிய, மெய்யியலாளரென்க் கருத முடியாது; தியோபிறசுத்தோசுவின் நூலிலிருந்து வேறு யார் மூலமாகவும் பெறப்பட்ட பகுதிகளேயன்றி வேறு எதுவும் இவரிடமிருந்து எமக்குக் கிடைக்கவில்லை. இங்கு நாம் இவரது "**லூக்கலசு**" (**Acad.ii.**) 118, **தேவரியற்கை** (**De natura deorum, i.**) 25–41 ஆகிய இரு பகுதிகளையும் கவனிக்கலாம். சிசரோ

(அ) "**லூக்கலசு**" எனும் தொகுப்பு.—"ஆர்க்கே" யெனும் முதற்காரணி பற்றிப் பல்வேறு மெய்யியலாளர்களும் கொண்டிருந்த கருத்துக்களின், அதிக செம்மையற்றதும், பூரணமற்றதுமான வொரு சுருக்கமே லூக்கலசுவிற் காணப்படுகிறது. தியோபிறசுத்தோசு உபயோகித்த அதே சொற்களை அறிந்து கொள்வதற்கு இது சிறிது உதவுகின்றதென்பதைத் தவிர்த்து இப் பகுதி அதிக பயனுடையதல்ல. காணியாடிசுவுக்குப் பின்னர் கழகத்தின் தலைவராயிருந்த கிளெய்தோமாக்கோசுவின் மூலமாகவே எமக்கு இத்தொகுப்புக் கிடைத்துள்ளது (கி. மு. 129).

(ஆ) **தேவரியற்கை** யெனும் தொகுப்பு.—மிகவும் முக்கியம் வாய்ந்த இப்பகுதியைப் பெரிதும் ஒத்ததான எபிகூரிய நூலொன்றின பகுதிகளைக் கொண்ட சுருள் ஒன்று ஏக்கியூவேனியத்திற் கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இதனைப் பற்றிய அரிய விவரங்கள் பல தெரியவந்துள்ளன. "**தேவரியற்கை**" எனும் பகுதிக்கும் இவ்வெபிகூரிய நூலிற்குமிடையே காணப்படும் ஒற்றுமை காரணமாக இந்நூலே "தேவரியற்கை"யின் மூல நூல் எனக் கருதுவாரும் உளர். **Epp. ad Att. xiii 39.2** இல் உள்ள குறிப்பை ஆதாரமாகக் கொண்டு, மேலே குறித்த எபிகூரிய நூல் பைதுரோசுவினுல் எழுதப்பட்டிருக்கலாம் என முதலிற் கொள்ளப்பட்டது. சிசிரோ, பிலோடெமோசுவைப் பார்த்துத் தமது நூலை எழுதவில்லையெனவும், உண்மையில் இவர்கள் இருவருமே வேறோர் நூலைப் பார்த்துத் (இது பைது

ரோசுவின் நூலேயென்பதில் ஐயமில்லை) தமது நூல்களை எழுதியிருக்கவேண்டுமெனவும், அவர்களாற் பயன்படுத்தப்பட்ட அந்நூலும் தியோபிறசுத்தோசுவுக்குச் சுதோய்க்கர்களால் யாக்கப்பட்ட சுருக்கவுரையொன்றிலிருந்து பெறப்பட்டிருக்கவேண்டுமெனவும் டியல்சு காட்டியுள்ளார். சிசுரோவின் நூற்பகுதிகளும் அவற்றுச் சாபான பிலோடெமோசுவின் பகுதிகளும் டியல்சுவின் பதிப்பில் அருகருகே தரப்பட்டுள்ளன (Dox. pp. 531 sqq.).

II. வரன்முறைத் தொகுப்பாசிரியர்கள்

இப்பொலிட்டசு

13. இப்பொலிட்டசு எழுதிய **புறநெறிமறுப்பு** (Refutation of all Heresies) எனும் நூலின் முதலாவது பாகமே வரன்முறைத்தொகுப்பு நூல்கள் யாவற்றிலும் மிகவும் முக்கியமான தாகும். இந்நூல் நீண்டகாலமாக ஒறிகென் எழுதிய பிலோசொபொமேனு (Philosophoumena) என வழங்கி வந்தது; ஆனால் 1854 ஆம் ஆண்டில் ஒட்சுபோட்டில் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்ட, இந்நூலின் வேறிய பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும், முதலாவது பாகம் ஒறிகெனுல் எழுதப்பட்டது என்பது தவறான கொள்கையெனத் தெரியவந்தது. தியோபிறசுத்தோசுவுகு எழுதப்பட்ட நல்ல சுருக்கவுரை யொன்றிலிருந்து இது எடுக்கப்பட்டிருக்கவேண்டும். இதன் பொருளடக்கம் எலவே வெவ்வேறு மெய்யியலாளர்களின் கொள்கைகளாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால் இந்நூலிலும், தேலிசு, பைதாகரசு, எம்பிடோக்கிளிசு ஆகியோரைப் பற்றிக் கூறும் பகுதிகள், ஐயத்திற்கிடமான கூற்றுக்களையும், பொய்யும் கற்பனையுமான கதைகளையும் கொண்ட வெறுமனே வரன்முறை ரீதியாகத் தொகுக்கப்பட்ட தரங்குறைந்த நூலொன்றிலிருந்து பெறப்பட்டிருக்க வேணடும்.

சுதுறோமத்தீசு

14. **பிறெப்பறூற்றியோ எவாஞ்செலிக்கா** எனும் நூலில் அதன் ஆசிரியரான இயூசிபியோசுவினுல் அனுவாதிக்கப்பட்டுள்ள, புளூட்டாக்குவினுல் எழுதப்பட்டதெனத் தவறுகக் கருதப்பட்ட **சுதுறோமத்தீசு** எனும் நூலின் பகுதிகள், **பிலோசொபொமேனுவின்** மிகச் சிறந்த பகுதிகள் எந்த முதநூலிலிருந்து எடுக்கப்பட்டனவோ, அந்நூலிலிருந்தே எடுக்கப்பட்டிருக்கவேண்டுமெனக் கொள்ளலாம். நாம் காணக்கூடிய வரையில் **சுதுறோமத்தீசு, பிலோசொபொமேனு**விலிருந்து இரு விடயங்களில் மட்டுமே வேறுபடுவதாய்க் காணப்படுகிறது. முதலாவதாக, சுதுறோமத்தீசுவின் பகுதிகள், பெரும்பாலும் நூலின் முற்பகுதிகளிலிருந்தே பெறப்பட்டிருக்கின்றனவாதலால், மூலப்

பதார்த்தம் வானசோதிகள், பூமி என்பனவற்றைப் பற்றிக்கூறு வனவாயே அமைந்துள்ளன. இரண்டாவதாக இங்கு அனு வாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளும் மூல நூலின் மொழிந டையை அதிகமாற்றமேதுமின்றிப் பெயர்த்துத் தரப்பட்டனவல்ல வெனலாம்.

"இடையோ சினிசு லயாத் தியசு"

15. இடையோசினிசு லயாத்தியசு அல்லது லயாததியசு இடை யோசினிசு என்பவரது பெயரில் வழங்கும் குறிப்புத்திரட்டு (cf. Usener, Epicurea, pp. I sqq.) இருவேறு தொகுப்பு நூல்களி லிருந்து பெறப்பட்ட கணிசமான பகுதிகளைக் கொண்டுள்ளது. இவ்விரு தொகுப்பு நூல்களில் ஒன்று, இப்பொலேட்டசுவின நூலில் முதல் நான்கு அத்தியாயங்களைப் போன்று, வெறு மனே சுவையான சம்பவங்களையும், பழமொழிகள் போன்றன வற்றையும் வரன்முறையாகத் தொகுத்ததாகக் காணப்படுகின் றது ; மற்றையது, இதனிலும் சிறந்ததாகவும், இப்பொலேட் டசுவின் ஏன அத்தியாயங்களின் ஆதார நூலைப் போன்றதாக வும் காணப்படுகிறது. இவற்றுள் முன்னையதிலிருந்து எடுக்கப் பட்ட பகுதிகளைச் "சுருக்கநூல" எனவும், மற்றையதைச் "சிறப் புநூல்" எனவும், அழைப்பதன் மூலம் இக்கலப்பை மறைப் பதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கிறது எனலாம்.

திருச்சபைக் குரவர் தொகுப்பு நூல்கள்

16. இயூசிபியோசு (P. E. x., xiv., xv.) தியோடோறெற்று (Gr. aff. cur. ii. 9—11) இரனீயசு (C. haer. ii. 14) ஆஞ பியசு (Adu. nat. ii.9), ஒகத்தீன் (Civ. Dei, viii. 2) ஆகி யோரது நூல்களிலும் சுருக்கமான சிறு தொகுப்புக் குறிப்புக் கள் காணப்படுகின்றன. நாம் அடுத்த பிரிவில் ஆராய விருக் கும் "வரன்முறை நூல்" களின் ஆசிரியர்களிடமிருந்தே மேற் குறித்த யாவரும் தமது விவரங்களைப் பெரும்பாலும் பெற்றுக் கொண்டனர் எனலாம்.

இ. வாழ்க்கை வரலாற்றுசிரியர்

வரன்முறை நூல்

17. முதன்முதலில் கி. மு. 200 ஆம் ஆண்டளவில் "மெய்யிய லாளர் வரன்முறை" யெனும் நூலை எழுதியவர் சோதியன் என்பாரே. (Diog. ii. 12 ; R. P. 4 a) அவரது நூலின் வைப் புமுறை 147 ஆம் பக்கத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. எரக் கிளீடிசு லெம்போசு என்பவர் இந்நூலைச் சுருக்கி எழுதினர். அன்ரித்தேனிசு, சொசிகிறுத்திசு, அலெக்சாந்தர் என்போர் வரன்முறை நூல்கள் யாத்த ஏனை ஆசிரியர்களாவர். இந் நூல்கள் யாவும் அதிக விவரங்களைத் தராதனவாயும், போலி யான நிகழ்ச்சிகளையும், குறிப்புரைகளையும் கொண்டனவாயு மிருந்தன.

எமிப்போசு

18. அரித்தோதிலிய மரபினரான சிமைர்னு நாட்டு எமிப்போசு வென்பார், பல வரலாற்று நூல்களே யாத்துள்ளார். இவரது நூற் பகுதிகள், பல ஆசிரியர்களது நூல்களில் மேற்கோள்களாகக் கையாளப்பட்டிருக்கின்றன. இவரது வரலாற்றுக் குறிப்புக்கள் முற்றுக நம்பத் தருந்தவை எனக் கொள்ள முடியாதெனினும், ஆங்காங்கு சேர்க்கப்பட்டிருக்கும் வேனய ஆதார நூல்களேப் பற்றிய விவரங்கள் மிகவும் பயனுள்ளவை யெனலாம்.

சத்தைரோசு

19. அரித்தோதிலிய மரபைச் சேர்ந்தோருள் இன்னொருவரான சத்தைரோசு என்பார் கி. மு. 160 ஆண்டளவில் "பெயர் பெற்றோர் வாழ்க்கை வரலாறு" எனும் நூலே எழுதினர். இவர் அரித்தாக்கோசுவின் சீடராவர். எமிப்போசுவைப் பற்றிக் கூறியவை யாவும் இவருக்கும் பொருந்துமென்க. எரக்கிளிடிசு லெம்போசு இவரது நூலேயும் சுருக்கி எழுதினர்.

"இடையோசினிசுயாதகியசு"

20. லயாத்தியசு இடையோசினிசு என்பவரது பெயரில் வழங்கும் நூலில் வரலாற்று விவரங்களேத் தரும் பகுதிகள் யாவும், முன்பே தெரிந்திருந்த விவரங்களின், அதிக ஒழுங்கற்ற தொகுப்பே. இப்பகுதிகள் முழுவதும் யாராலும் கிரகிக்கப் பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டது என்பதற்கான அறிகுறி எதுவுமே காணப்படவில்லே; ஒழுங்கெதுவு மின்றித் தாறுமாறுகச் சேகரிக்கப்பட்ட நூற்பகுதிகளின் தொகுதியாகவே இது காட்சிதருகின்றது. ஆயினும் மிகவும் பயனுள்ளவையான பகுதிகள பல இதில் அடங்கியுள்ளன.

ஈ. கால ஆராய்ச்சியாளர்

எரதசுதேனசும் அபபொலோடரசும்

21. கைரீனேச் சேர்ந்த எரதசுதேனசு (கி. மு. 275–194) பண்டைய காலமானத்தை முதலில் உருவாக்கியவராவர். ஆனுல் இவருக்குப் பின்னர் கி. மு. 140 ஆம் ஆண்டளவில் அப்பொலோடரசு அளவை முறையில எழுதிய காலமானம் இவரது நூலிலும் அதிக பிரபலமடைந்தது. ஆதி மெய்யியலாளர் பலரினது காலம் பறறி அப்பொலோடரசுவின் நூலிலிருந்தே நாம் அறிந்து கொள்கிறோம்.

இக்காலமான நூல்களிற் பின்பற்றப்பட்டுள்ள முறை பின் வருமாறு: ஒரு மெய்யியலாளரது வாழ்வில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியொன்றின் காலம் தெரியவந்தால், அதுவே அவர் "சிறப்பொடு விளங்கிய" காலமாகக் கொள்ளப் படுகின்றது; அன்றியும் அப்போது அவருக்கு 40 வயதாகியிருக்கலாம் எனவும் கொள்ளப்படுகிறது. ஆனுல் இத்தகைய சம்பவம் எதுவும் தெரியவராது போனுல், முக்கிய வரலாற்று

நிகழ்ச்சிகளுள் ஒன்று, குறித்த மெய்யியலாளர் "சிறப்பொடு விளங்கிய" ஆண்டில் நடைபெற்றதாகக் கருதப்படுகிறது. கி. மு. 586–5 இல் நிகழ்ந்த, தேலிசுவால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட கிரகணம், கி. மு. 546–5 இல் சாடயிசு நகரம் கைப்பற்றப்பட்டமை, கி. மு. 532–1 இல் பொலிகிருத்திசு பட்டத்திற்கு வந்தமை, கி. மு. 444–3 இல் தெளரியை நகர் நிறுவப்பட்டமை, ஆதியன இவ்வாறு கருதப்படும் வரலாற்று நிகழ்ச்சிகளில் முக்கியமானவை. இவ்வாறு தொடர்புபடுத்தப்பட்ட ஆண்டுகள் சிலவேளைகளில் சற்றேனும் பொருத்தமற்ற அளவிற்கு முக்கிய முடையனவாகக் கருதப்பட்டன. பலமுறைகளில், பிற ஆதாரங்களைக் கொண்டு அப்பொலோடரசுவின் காலமானம் தவறுன தென எம்மால் நிரூபிக்க முடிகிறது. வேறு தக்க ஆதாரங்கள் கிடையாதபோது, தற்காலிகமாக ஏற்றுக்கொள்வதற்கே அவர் தரும் காலமானம் உபயோகப்படும் எனலாம்.

அத்தியாயம் 1

மைலீசிய மரபு

மிலட்டசுவும் லிடியாவும்

1. விஞ்ஞான ரீதியான அண்டவியற் சிந்தனை மரபு முதலிற் றோனறியது மிலட்டசுவிலேயே யென்க. ஈசிய, அயோனிய நாகரிகங்களுக்கிடையேயுள்ள தொடர்பு, குறிப்பிடத்தக்க முறையிற் காணப்படுவதும் மிலட்டசுவிலேயே என்பதும் கவனிக்கத் தக்கது[1]. தமது எல்லைகளை மேலும், மேற்கே விரிப்பதில் நாட்டங் கொண்டோராயிருந்த லிடியர்களோடு மைலீசியர்கள் பலமுறை பொருத நேரிட்டது; ஆனால் கி. மு. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில், கடுங்கோலன் திருசிபோலசுவுக்கும், அலியாத்திசு மன்னனுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை யொன்றின் பயனக மிலட்டசுவை எதிர்காலத்தில் இத்தகைய எல்லைப் போராட்டங்களிலிருந்து பாதுகாக்கும் ஒப்பந்தம் ஒன்று ஆக்கப்பட்டது. அரை நூற்றாண்டிற்குப் பின்னரும், தனது தந்தையின் சாம்ராச்சியக் கொள்கையைப் பினபற்றிய குரீசசு, எபிசோசுவின் மீது போர் தொடுத்து அதனைக் கைப்பற்றிய போதும், இவ்வுடன்படிக்கையின் பாதுகாப்பினால், மிலட்டசு லிடியர்களது ஆட்சிக்குட்படாது இருக்க முடிந்தது. அன்றியும் லிடியர்களுக்கும், மைலீசியர்களுக்கும் இவ்வாறு ஏற்பட்டதொடர்பு, மிலட்டசுவில் விஞ்ஞானம் வளாச்சியடைவதறகு உதவியது எனலாம். பிற்காலத்தில் எலனிசம் என அழைக்கப்பட்ட மரபு, மேமனடையின் பரம்பரையில் வழங்கி வந்த மரபே யெனத் தோன்றுகிறது; எரொடோதசுவும், அக்காலத்துச் "சோபிட்டுகள்" யாவரும் சாடியசுவின் சபைக்குத் திரண்டு சென்றனர் எனக் கூறியுள்ளார். குரீசசுவைக் கிரேக்க ஞானத்தின் "புரவலன்" எனக் காட்டும் ஐதிகம் பூரணமாகத் தோன்றியது, ஐந்தாம் நூற்றாண்டிலேயே. இவ்வைதிகத்தின விவரங்கள் வரலாற்று ரீதியானவையல்ல போலக் காணபபடினும், சிறிதேனும் உண்மையான ஆதாரமின்றி, இது தோனறியிருக்க முடியாது. தீரியாவுக்கு எதிராகக் குரோசசு நடத்திய

[1]. முன்னுரை II ஆம் பிரிவைப் பார். புதிய நகரமான நெலியசுவின அரண்கள் அமைகபப்டுவதறகு முன்னரே, கிரீறறுவிலுள்ள மிலட்டசுவிலிருநது வந்த மக்களால் பழைய மிலட்டசு குடியேறறப்படடது என எபோரசு கூறினர் (Strabo, xiv. p. 634). ஈசிய நாகரிகம், ஆதி அயோனிய நாகரிகத்தோடு கலந்து மிலட்டசுவிற பரவியதென, சமீபதிய புதைபொருள ஆராயச்சிகளின் மூலம் தெரியவருகிறது. புதைபொருள் ஆராய்ச்சியினபோது, அயோனிய உறைவிடங்களின் எசசங்கள, "மைசீனீய" கால எசசங்களோடு கலந்து கிடககக் காணப்பட்டன.

துரதிட்டவசமான போருக்குத் தேலிசுவும் அவரோடு சென்றிருந்தாரென "கிரேக்கர்களிடையே வழங்கிவரும் கதை" குறிப்பிடத்தக்கதாகும். இவர் ஆலிசுவின் போக்கை மாற்றினாரென்பதை எரொடோதசு நம்ப மறுக்கின்றார் எனின் அதற்குக் காரணம், ஏற்கெனவே பாலங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை அவர் அறிந்திருந்ததே. அயோனியர்கள் சிறந்த கட்டிட வியல் வல்லுநராயிருந்தனர் என்பதும், கீழைத்தேச அரசர்கள் அயோனிய கட்டிடவியல் வல்லுநரைத் தம்மிடம் வேலைக்கமர்த்திக் கொண்டனரென்பதும் தெளிவு[1].

லிடியாவினுடைய தொடர்பு, மைலீசியர்கள், பபிலோனியா, எகிப்து ஆகிய நாடுகளுடனும் தொடர்பு கொள்வதற்கு வழி வகுத்தது என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். பபிலோனிய நாகரிகம், லிடியாவில் வளர்ச்சிபெற்றிருந்தது என்பதோடு மட்டுமல்லாது, கிறீசுவும், எகிப்திய, பபிலோனிய மன்னர்களோடு நட்புறவு பூண்டவராயிருந்தாரென்பதும், இவ்வாறு தொடர்பேற்படுவதற்குச் சாதகமாயிருந்தது. எகிப்திய அமாசிசுவும், குரோசசுவைப் போலவே எல்லிச அபிமானங்களையுடையவராயிருந்தார். மேலும், நௌகிறத்திசுவில், மைலீசியர்கள் தமக்கெனவோர் கோவிலை அமைத்திருந்தனர்.

1. தேலிசு

2. மைலீசிய கழகத்தைத் தாபித்தவரும், அதனால் முதல் தோற்றம் விஞ்ஞானியெனப்படுபவரும் தேலிசுவே[2]. ஆனால் உண்மையில்

1. Herod. i. 75. அயோனிய விஞ்ஞானத்தைச் சரிவர மதிப்பிடுதற்கு அக்காலத்திற் கட்டிடக் கலையில், அவாகள அடைந்திருந்த வளர்ச்சியை அறிதல், அவசியம். சாமோசுநாடடு மந்திரோக்கிளிசு, டாரியசு மனனனுகாக, பொசு போரசுவுக்கு மேலே பாலம அமைததுக் கொடுத்தாா (Herod. iv. 88). எகைபோநது பாலத்தை அமைப்பதில எகிப்தியர், மீனிசியர் ஆகியோரது மூயறசி தோல்வியடைநததன பின்னா, தெனெடோசு நாட்டு ஆர்ப்பலோசு, சேக்சசு மனைருக்காக அதனைச் சரிவர அமைத்துக் கொடுத்தாா. (Dies, **Abh. der. Berl. Akad.**, 1904. p.8) எரொடோதசுவினால் வருணிக்கப்பட்டுளள (iii. 60) சாமோசுவுக்கு மேலேயுள்ள மலைக்கூடாகச் செல்லும் சுரங்க வழி, சேர்மானிய புதைபொருளாராய்சசியாளராற் கணடுபிடிக்கப்பட்டுளளது. இவ் வழி ஒரு கிலோமீட்டரளவு நீளமுடையதாயினும், இதன மட்டங்கள் பெருமளவுகுச சம்மையான அளவுடையனவாகக், காணப்படுகினறன. ஏனைய விடஙகளைப் போல, இவ்விடயத்திலும அயோனியர்கள் மினனவ மரபுகளைத் தொடர்ந்து தழுவின ரெனக.

2. தேலிசுவுகு முன்னரும் பல சிநதனையாளா வாழ்ந்தனா என்பதோ பிறகுததோசு கூறினரென சிம்பிளிசியசு எடுத்துகாட்டுகின்றனர். இதை நாம் கவனிக்க வேண்டியதில்லை; எனெனில, அப்பொலோனியசு ரொடியசுவினது நூலுக்கு எழுதப்பட்ட பகவுரையிலிருந்து புறெமீதியசுவே முதலாவது மெய்யியலாளா என அவர் கூறினரென அறிகிறோம்.

நாம் இவரைப் பற்றி அறிந்த விவரங்கள் யாவும் எரொடோதசு மூலமாகப் பெறப்பட்ட விவரங்களே யென்பதையும், எரொடோதசுவின காலத்தில் ஞானியர் எழுவர் பற்றிய கதை ஏற்கெனவே வழக்கிலிருந்ததென்பதையும் நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும். தேலிசுவினது முனைவோர்கள் பீனிசியாவைச் சேர்ந்தவர்கள் என எரொடோதசு கூறியுள்ளபோதிலும், கத்மோசு, அகெனோர் ஆகிய இடங்களைச் சேர்ந்தவோர் உயர்குடும்பத்தைத் தேலிசு சேர்ந்தவராயிருந்தமையாலேயே, எரொடோதசு இவ்வாறு கூறினார் என வேனிய எழுத்தாளர்கள் விளக்கியுள்ளனர்[1]. பீனிசியரிடையே நிலவிய கப்பலோட்டும் முறைகளைத் தேலிசு அயோனியரிடையே புகுத்தினார் என வழங்கிய நம்பிக்கையை எரொடோதசு, தேலிசுவின முனைவோர் பற்றிய இக்கருத்தினைக் குறிப்பிட்டதற்குக் காரணமாயிருந்திருக்கலாம். ஆயினும், எக்சாமியசு எனும் தேலிசுவின் தந்தையின் பெயர், இவர் ஓர் செமித்தியர் எனும் கொள்கையோடு சற்றேனும் பொருந்துவ தாயில்லை. எக்சாமியசு என்பது காரிய பெயர். காரியர்கள் என்போர் இக்காலத்தே பெரும்பாலும் அயோனிய குடிகளோடு கலந்து விட்டனர் எனவே கூறவேண்டும். இக்கால நினைவுச் சின்னங்களில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெயர் களிடையே கிரேக்க பெயர்களும் காரிய பெயர்களும் மாறி மாறி வருதலைக் காண்கிறோம்; மேலும் பிறவிடங்களில் தேலிசு ஒரு கிறீட்டன் என அழைக்கப்பட்டிருப்பதையும் நாம் காண முடிகிறது. ஆகவே, தேலிசுவின் உடலில் காரியவிரத்தமுமிருந்த தெனக் கூறலாமெனினும், அவர் ஒரு மைலீசியரே என்பதைச் சந்தேகிக்க நியாயமில்லை.

கிரகணம் ஏற்படுமென தேலிசு முன்பே அறிவித்தமை

3. லிடியர்களுக்கும், மீடிகளுக்கும் இடையே நடந்த போர் முடிவதற்குக் காரணமாயிருந்த சூரிய கிரகணம் ஏற்படுவது பற்றித் தேலிசு முன்பே அறிவித்தாரென்பதே இவரைப் பற்றி எரொடோதசு தரும் மிகவும் குறிப்பிடத்தக்க செய்தியெனலாம். உண்மையில் கிரகணங்கள் ஏற்படுவதற்கான காரணம் என்ன வென்பது பற்றி இவர் சற்றேனும் அறிந்திருக்கவில்லை. அனக்சிமாந்தரும், அவருக்குப் பின்வந்தோருமே இதுபற்றி அறிந்திருக்கவில்லை[2]. கிரகணங்கள் ஏற்படுவதற்கான காரணம் பற்றிய

[1] Herod. i. 170 (R. P. 9 d.); Diog. i 22 (R. P. 9). ஆதி அயோனிய குடிகளிடையே கத்மோசு, பையற்றியா ஆகிய இடங்களிலிருந்து வந்தோரும் இருந்தனர் என எரொடோதசு கூறுவது பற்றி எவ்வகை ஐயமுமில்லை. (i. 146) of Strabo, xiv. pp. 633, 636; Pausan. vii. 2, 7. ஆனாலும் இவர்கள் செமித்தியர் அல்ல.

[2] அனக்சிமாந்தர் எரக்லீட்டசு என்போர் நம்பிய கொள்கைகள் பற்றி 19 ஆம் பிரிவிற் பார்க்கவும்.

விளக்கம் தேலிசுவிஞற் றரப்பட்டிருந்திருப்பின் இவர்களும் அதை அறிந்திருப்பர் எனலாம். கிரகணம் ஏற்படுவதற்கான காரணத்தைத் தேலிசு அறிந்திருந்தார் எனக் கொள்வதாயினும், எகிப்தில் அவர் பொறுக்கியிருக்கக் கூடிய கேத்திரகணித அறிவு கிரகண காலத்தைக் கணிப்பதற்குப் போதியதாயிருந்திருக்க முடியாது. ஆயினும், தேலிசு இக்கிரகணம் பற்றி அது நடைபெறுவதற்கு முனபே அறிவித்தார் என்பதற்கான சான்றுகள் மிகவும் வலுவுடையனவாதலால், அவர் அவ்வாறு அறிவித்தார் என்பதனைச் சந்தேகிக்கவும் முடியாது. எரொடோதசுவின் கூற்று செஞ்ஞெனிசுவிஞலும் உறுதிப்படுத்தப்பட்ட[1]தெனக் கூறப்பட்டிருக்கிறது. தியோபிறசுத்தோசுவின்படி., செஞ்ஞெனிசு அனகசி மாந்தரது மாணாக்கருள ஒருவராயிருந்தார். எப்படியாயினும், தேலிசுவின் காலத்தே நிகழ்ந்த சம்பவங்களை நன்கு நினைவில் வைத்திருந்த பலரை இவர் அறிந்திருக்கவேண்டும். ஆகவே தேலிசுவைப்பற்றிய மற்ற விவரங்களிலும், கிரகணம் பற்றிய கூற்றுக்கு மிகவும் வலுவான ஆதாரங்கள் உளவெனலாம்.

சந்திர கிரகணங்களை, அவை ஏற்படுவதற்கான காரணம் என்னவென்று அறியாமலே, அவை எப்போது நடைபெறுமென்பதை அண்ணளவாகக் கணித்துக் கொள்வது சாத்தியமே. பபிலோனியர்கள் உண்மையில் இவ்வாறே கணித்தனர் என்பதிலும் ஐயமில்லை. 223 சந்திரமாதங்களைக் கொண்ட காலவட்டம் ஒன்றை அவர்கள் அமைத்தனரெனவும், சமமான கால இடைவெளிகளுக்கொருமுறை சந்திர சூரிய கிரகணங்கள் ஏற்பட்டனவெனவும் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆயினும் இதன் மூலம், பூமியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் எப்போது சூரியகிரகணம் ஏற்படும் என அவர்களால்முன் கூட்டியே அறிந்திருக்க முடியாது ; எனெனில் சூரியன் அடிவானத்திற்கு மேற் காணப்படும் எல்லா இடங்களிலும், ஒரே நேரத்தில் சூரிய கிரகணம் காணப்படுவதில்லை. நாம் பூமியின் மத்தியில் இருக்கவில்லை ;

1. Diog. i. 23. கிரகணங்களை மட்டுமலலாது, சங்கிராந்திகளையும் தேலிசு முன் கூட்டியே அறிவித்தனரெனனும் கூற்று சிலர் கருதுவது போல, அதற்கு பொருளற்றதொனறன்று. சமராத்திரங்களினதும், சங்கிராந்தி நேரங்களினதும் காலங்களைத் தனக்கு முந்தியோரிலும் செம்மையாக இவர் கணித்திருந்தார் என்பதையே இயூடெமோசு கருதியிருக்கலாம். நிலைக்குத்தொனறின் நிழலை அவதானிபபதன மூலம இவர் இவறறைக கணிதிருக்கலாம் ; மேலும் தேலிசு இத்தகைய அவதானங்களில ஈடுபாடுடையவராயிருநதார் என ஙகுகள் கருதினர் என்பதையும் நாம் காணபோம் (ப. 52). தெரகுகிலேடிசுவிஞற் பேணப்பட்டுளள இயூடெமோசுவின வேறெருரு கூறறை நோக்குமபோதும இவ்வாறு கருதுவதே சரியெனத தோன்றுகிறது. சூரியனின ஒழுங்கினமையிலுல் ஏற்படும, நான்கு பருவங்களுககு மிடையேயுளள வேற்றுமையையும் தேலிசு கண்டுபிடித்தார எனபதே இக்கூற்றெனக.

மேலும் புவிமைய இடமாறு தோற்றக் கணிப்பும் கவனிக்கப் படல் வேண்டுமென்க. ஆகவே பபிலோனியர்களது காலவட்டத் தின் உதவி கொண்டு அறியக் கூடியது, எங்காவது ஒரு இடத் தில் சூரிய கிரகணம் ஒரு குறிப்பிட்ட நேரத்திற் காணப்படும் என்பதே. அந்நேரத்தில் சூரிய கிரகணம் ஏற்படுகிறதா என யாரும் பார்க்கலாமெனினும், அவ்வாறு அவதானிப்போர் பெரும்பாலும் ஏமாற்றமே அடைவர் எனலாம். ஏனெனில் எந்த இடத்தில கிரகணம் காணப்படும் என்பதனை அவர்கள் சரியாக அறியார். நமக்குக் கிடைத்துள்ள கல்டிய வானியலாள ரது கூற்றுக்களை நம்புவதாயின், கி.மு. எட்டாம் நூற்றாண்டில் பபிலோனியரது நிலை இவ்வாறே யிருந்ததெனலாம். தமது கணிப்பின்படி, குறிப்பிட்ட நாட்களில் கிரகணம் ஏற்படுகின்ற தாவென அவர்கள் அவதானித்தனர்; கிரகணம் ஏற்படவில்லை யெனின், அதுவோர் நல்ல சகுனமென முடிவு செய்து கொண்ட னர். தேலிசு பற்றி நாம் அறிந்தவற்றை விளக்குவதற்கு வேறெ துவும் வேண்டியதில்லை. ஒரு குறிப்பிட்ட நாளில் கிரகணம் ஏற் படுமென அவர் கூறினார்; அதிட்டவசமாக, சின்ன ஆசியாவில் அதுவும் குறிப்பிடத்தக்கவோர் வேளையில் கிரகணம் காணப் பட்டது.[1]

தேலிசுவின் காலம்

4. ஆகவே, கிரகணத்தை முன்கூட்டியே அறிவித்தமையைக் கொண்டு, தேலிசுவின் விஞ்ஞான அறிவு பற்றி எவ்வகை முடிவுக்கும் நாம் வர முடியாது; ஆனால் அக்கிரகணம் எப் போது நடைபெற்றதென்பதை நாம் நிர்ணயிக்க முடியுமானால், அதிலிருந்து, தேலிசு வாழ்ந்த காலத்தை மதிப்பிடுவதும் ஓரள வுக்குச் சாத்தியமாகும். கி. மு. 585 ஆம் ஆண்டு மே மாதம் (O.S.) 28 ஆம் திகதி ஓர் சூரிய கிரகணம் ஏற்பட்டதெனவும், அது சின்ன ஆசியாவில் காணப்பட்டிருக்கலாமெனவும் வானிய லாளர் கணக்கிட்டுள்ளனர். தேலிசுவினால் அறிவிக்கப்பட்ட கிர கணம் ஒலிம்பிய ஆண்டு XLVIII. 4 இல் (585–4 கி.மு.) ஏற்பட்டதென பிளினி கூறுகிறார். ஆனால் இவ்வாண்டுகள் முற்றுகப் பொருந்தவில்லை யென்பதைக் காண்க. ஏனெனில் 585 ஆம் ஆண்டு மே மாதம், கி.மு. 586–5 ஆம் ஆண்டைச் சேர்ந்தது வாதலினால் என்க. ஆயினும் இவ்வாண்டுகள்

1. cf. Schiaparelli, **Scientia,** 1908. p. 247. அவரது முடிபு பின் வருமாறு : " சூரியகிரகணங்கள் எவ்வாறு எமது கண்ணுக்குப் புலப்படுகினறன என்பது பற்றிய விதிகள மிகவும் சிக்கலானவையாதலால, வெறும் அவதானிப் புக்களினால் அவறறைக் கண்டுபிடிக்க முடியாது. " பபிலோனியாகள் இவ்விதி களைக் கணிக்கும் நிலைக்கு முனனேறியிருககவில்லை. அவற்றைக கணிக்கும் சாதனை, கிரேக்கர்களது கணிதவியல் மேதையால் நிகழ்வதற்கெனக் காததி ருக்கவேண்டியிருந்தது.

மிகவும் கிட்டியவாகக காணப்படுகின்றமையால், நாம் இதுவே தேலிசுவினுல் அறிவிக்கப்பட்ட கிரகணம் எனக் கொள்ளலாம். தேலிசு சிறப்போடு விளங்கிய ஆண்டும் இதுவென அப்பொலோடரசு கூறுவது இதனை யுறுதிப்படுத்துகின்ற தெனலாம். டிமீத்திரியோசு பலீரியசுவின்படி, தேலிசுவுக்கு, அதென்சுவில் டமாசியசு நீதிபதியாயிருந்த காலத்தில் " ஞானியெனும் பெயர் வழங்கப்பட்டது " எனும் இடையோகினிசுவின் கூற்றும் உண்மையில் ஞானியர் எழுவரது கதையையே குறிக்கிறது. இடையோகினிசு பின்னர் கூறுவனவும் இதனையே உணர்த்துகின்றன. அன்றியும் இவரது கூற்று டெல்பி மூக்காலி பற்றிய கதையின அடிப்படையில் எழுந்தது எனபது பற்றியும் எவ்வகை ஐயத்திறரும் இடமில்லை; எனெனில் பைதிய விளையாடுக்களுக்குப் புத்துயிரளிக்கப்பட்ட காலம், டமாசியசு நீதிபதியாயிருந்த காலமே.

5. எகிப்திய கேத்திரகணித அறிவைக் கிரேக்கர்களிடையே புகுத்தியவர் தேலிசுவே யெனக் கூறப்படுகிறது[1]. நைல் நதியில் ஏற்படும் வெள்ளப் பெருக்குகள் பற்றி விளக்கும் கொளகை ஒன்றை இவர் யாத்தனராதலால், எகிப்திற்கு இவர் சென்றிருந்தார் என நிறுவ ஆதாரமுண்டு. ஏனைய நதிகளைப் போலலாது, நைல் நதி கோடைகாலத்தில் பெருகி, மழைக்காலத்தே வற்றுவதற்கு, எரொடோதசு மூன்று விளக்கங்கள் தந்தனர்[2]. ஆனுல் தமது வழமைபோல, இவ்விளக்கங்களின் கருத்தாக்கள் யாவரென அவர் குறிப்பிடுகின்றரில்லை. நைல் நதியிற் பெருக்கேறபடுவதற்குக் காரணம் எசுதிய காற்றுக்களின் உந்தலே யெனும் முதலாவது விளக்கம், தேலிசுவினுற் றரப்பட்டதே யெனவே **பிளாக்கிட்டா**விற கூறப்பட்டிருக்கிறது[3]. ஏனைய எழுத்தாளர் பலரும் இவ்வாறே கூறியுள்ளனர். அரித்தோதிலது என அழைக்கப்படுவதும், கிரேக்க உரையாசிரியர்களால் அறியப்பட்டிருந்ததும், நைல்நதியின் பெருக்குகள் பற்றியதுமான ஓர் விளக்கத்திலிருந்து எமக்கு இச்செய்தி கிடைக்கிறது. பதின்மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்ததும், இலத்தீன் மொழியிலுள்ளதுமான சுருக்கமொன்றிலிருந்தே இவ்விளக்கம் எமக்குக் கிடைத்துள்ளது[4]. இதில், எரொடோதசுவாற் குறிப்பிடப்படும் விளக்கங்களில் முதலாவது தேலிசுவினதென

எகிப்தில் தேலிசு

1. **Proclus, in Eucl.** I. p. 65, Friedlein (from Eudemos).

2. **Herod.** ii. 20.

3. **Aet.** iv. I. I. (Dox. p. 384).

4. **Dox.** pp. 226—229. அரிதோலினது நூற்பகுதிகளைத் தரும் ரெசுலின பதிப்பில், இவ்விலதனின் சுருக்கம் காணப்படுகிறது.

வும், இரண்டாவது மசாலியா நாட்டு இயூதிமினிசுவினதெனவும் மூன்றுவது அனக்சகோரசுவினதெனவும் கூறப்பட்டுள்ளது. அரித் தோதில், அல்லது இந்நூலை எழுதியவர் எவரோ அவர், இப் பெயர்களை எவ்வாறு பெற்றனர் ? எமது மனதில இயல்பாகத் தோன்றுவது எக்காதையோசுவின் பெயரே. எக்காதையோசும், இயூதிமினிசுவின்[1] பெயரைக் குறிப்பிட்டிருக்கினரென்பதைக் காணும்போது, எமது ஊகம் உறுதிப்படுத்தப்படுகிறது. ஆகவே தேலிசு உண்மையில எகிப்திற்குச் சென்றிருக்க வேண்டுமென நாம் முடிவாகத் தீர்மானிக்கலாம் ; நைல் நதி பற்றி விவரிக்கை யில் எக்காதையோசு, தன நாட்டவரான தேலிசுவின் கருத்தை யும், குறித்துக்கொண்டிருக்க வேண்டும்.

தேலிசுவும் கேத்திர கணிதவியலும்

6. எகிப்திலிருந்து தேலிசுவினுற் கொணரப்பட்ட கணிதவிய லின் விரிவையும் இயல்பையும் கவனிக்கும்போது, இவை பற் றிய வரலாற்றைப பல எழுத்தாளர்கள் தவருக விளங்கியுள்ள னர் என்பதை மனதிற கொள்ளல் வேண்டும்[2]. புரோக்ளசு, இயூக்ளிட்டினது முதற் புத்தகத்துக்குத் தான் எழுதிய பாடியத் தில், இயூடெமோசுவினது ஆதாரத்தைக் கொண்டு, தேலிசு விற்குத் தெரிந்திருந்த எடுப்புக்களெனச் சிலவற்றைக் குறிப்பிடு கிறார். இரு முக்கோணங்கள், பக்கமொன்றும், அடுத்துள கோணங்கள் இரண்டும் சமமானவையாயிருந்தால், தாமுஞ் சமமானவையாயிருகின்றன வென்பது இவ்வெடுப்புக்களில் ஒன்று[3]. தேலிசு உண்மையில் இதனை யறிந்திருக்க வேண்டும் எனலாம். எனெனில் இதை அவர் அறியாதிருந்திருந்தால், கடலிலுள்ள கப்பல்களின் தூரத்தை அவர் கணித்துக் கூறினர் எனக்கூறப்படுவது உண்மையாக விருக்க முடியாது. எமது கூற் றுகள் யாவும் எவ்வாறு எழுந்தன என்பது இங்கு புலனாகி றது. சில அளவுகளைச் செம்மையாகத் தேலிசு கணித்தனர் எனவழங்கிய கதைகளைக் கேட்ட மாத்திரத்தே இச்சாதனைகளின் உட்கிடையான கேத்திரகணித வெடுப்புக்களையும் தேலிசு அறிந் திருக்க வேண்டும் என இயூடெமோசு ஊகித்து விட்டார். ஆனால் இது முற்றிலும் தவருனவோர் கருத்தென்க. "செகுற்று "வை அறிதற் கென ஆமேசு வகுத்த விதியைக் கையாள்வதன் மூலம் கடலிலுள்ள கப்பல்களின் தூரத்தையும்,

1. எக்காதையோசு, பகுதி 278 (F. H. G i. P. 19).

2. See Cantor, *Vorlesungen uber Geschichte der Mathematik*, Vol. i. pp. 12 *sqq*.

3. Proclus, *in Euc*l, pp. 65, 7; 157, 10 ; 250, 20 ; 299, 1 ; 352, 14. (Friedlein). தியோபிறசுத்தோசு எவ்வாறு மெய்யியலின் முதலாவது வரலாற்றை எழுதினரோ அதுபோல இயூடெமோசு வானியல், கணிதம் என்பன வற்றின் வரலாற்றை முதலில எழுதினர்.

இவர் கணித்ததாகக் கூறப்படும் கூம்பகங்களின் உயரத்தையும் இலகுவாகக் கண்டிருக்கலாம்[1]. உண்மையில், தேலிசுவின் கணிதவறிவு பற்றிய கதைகள் உணர்த்துவது யாதெனில், அமேசு வினது செயன்முறை விதியினை, எகிப்தியர்களோ முன்பு ஒரு போதும் எதிர்நோக்கியிராத நடைமுறைப் பிரச்சினைகள் சில வற்றைத் தீர்த்தற்குத் தேலிசு கையாண்டார் என்பதே. இவ் வகையில் செயன்முறையொன்றினைப் பிற புதிய விடயங்களி லும் பயன்படுத்தப்படக்கூடிய பொதுமுறையாக்கியவர் இவரே. வேண்டிய புகழை அவருக்கு அளிப்பதற்கு இதுவொன்றே போதிய சாதனையென்க.

அரசியலாதி தேலிசு

7. லிடிய அரசின் வீழ்ச்சிக்குச் சற்று முன்பாக, எரொ டோதசுவின் நூலில் தேலிசு மீண்டும் குறிப்பிடப்படுகின்றார். அயோனிய கிரேக்கர்களை ஒன்றுபடுமாறும், தியோசுவைத் தலை நகராகக் கொண்ட கூட்டாட்சியொன்றை அமைக்குமாறும் இவர் ஊக்கினர் என அங்கு கூறப்படுகிறது[2]. ஆதி மெய்யியற் கழகங்கள் எவ்வகையிலும், அரசியலோடு தொடர்பற்றனவாயிருக்கவில்லை என நாம் பலமுறை காண நேரிடும்; இவை அரசியலிற் தலை யிட்டன என்பதற்குப் பல உதாரணங்களைக் காண்போம். இவை, குறிப்பாக அயோனிய புரட்சியில் எக்காதையோசு பங்கெடுத்துக் கொண்டமை போன்ற நிகழ்ச்சிகள், தேலிசுவின் மரணத்திற் குப் பின்னர் நடைபெற்ற பரபரப்பான நிகழ்ச்சிகளில் மிலட்டசு நகர விஞ்ஞானிகள் தீவிர பங்கெடுத்துக் கொண்டனர் என்பதற் குச் சான்றுகளாகின்றன. மைலீசிய மரபின் தாபகரான தேலி சுவுக்கு, " ஞானியர் எழு "வரிடையே நிச்சயமான இடமொன் றைத் தேடித் தந்தவை இவ்வரசியல் நடவடிக்கைகளே ; இவ்வெழுவரிடையே தேலிசுவின் பெயர் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்தே பிற்காலத்தில் இவரது பெயரைச் சார்ந்து பல கதைகள் வழங்கவாரம்பித்தன[3].

இவ்வரலாறு போதியளவு நம்பிக்கை யானதல்ல வென்பது.

8. எமக்குத் தெரிந்தவரையில், தேலிசு எதையும் எழுதி வைக்கவில்லை. மேலும் அரித்தோதிலுக்கு முந்திய எழுத் தாளர்களில் எவருக்கும் இவர் ஒரு " விஞ்ஞானி " யெனவோ மெய்யியலாளரெனவோ தெரிந்திருந்ததாகவும் தோன்றவில்லை; பழைய வரலாறுகளிலிருந்து, இவர் ஒரு தொழில் நுட்ப வல்லுநராகவும், புதிதுகாணியாகவும் இருந்தாரெனவே அறிய

1. See Gow, *Short History of Greek Mathematics*,, § 84.

2. Herod. i. 170 (R. P. 9 d).

3. 360 நாட்களைக் கொண்ட ஆண்டையும் 30 நாட்கள் கொண்ட மாதங் களையும் அவர் புகுத்த முயற்சித்தாரெனின், அவர் இவறறை எகிப்தியரிட மிருந்தே கறறுக கொணடிருகக வேண்டும்.

முடிகிறது. ஆனால் வர்த்தகத்துறையிலும் ஏனைய துறைகளி லும் மைலீசியர்க்கிருந்த தேவைகளைத் திருப்தி செய்யும் பொருட்டு அவர் தனது கவனத்தை நாம் இன்று வானியல் என அழைக்கும் ஆராய்ச்சியோடு தொடர்புபட்ட பிரச்சினைகளின் பாலும் செலுத்தியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. சிறு கரடியுடுத்தொகுதியின் உதவியோடு கப்பல்களைச் செலுத்தும் முறையினையும் இவரே ஆரம்பித்தாரென இடையோசினிசு கூறியுள்ளார். ஆண்டுமானத்திலும் ஏதோவொரு மாற்றமேற் படுத்த அவர் முயன்றனரெனத் தெரியவருகிறதெனினும், அது பற்றிய போதிய விவரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. மிலட்டசுவிற் பிற்காலத்தில் உபயோகத்திலிருந்ததெனக் கண் டெடுக்கப்பட்ட ஆண்டுமானம் போன்ற வொன்றைத் தேலிசு அமைத்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆயினும் தேலி சுவினுடைய முடிபுகள் எனத் தான குறிப்பிடும் கருத்துக் கள் எவ்வாறு பெறப்பட்டனவெனவோ, அல்லது எத்தகைய வாதங்களினால அவை நிறுவப்பட்டனவெனவோ அரித்தோதில் தானும் அறிந்திருக்கவில்லை. தான இவற்றை அறிந்திருந்த தாக அரித்தோதில் ஒருபோதும் உணர்த்தவுமில்லை. ஆகவே தான் அவர் தந்துள்ள ஒரு சில தகவல்களைச் சந்தேகிப்பது அவசியமற்றதாகிறது. எனவே அரித்தோதில் தரும் குறிப்புக் களின் உதவியோடு, தேலிசுவின் அண்டவியற் கொள்கையினை மீடடும் அமைதது நோக்கலாம். ஆனால் அவரது அண்டவியற் கொள்கை அதிக விருத்தியடைந்தது போலத தோன்றுவிடி னும், நாம் அதனையிட்டுக் குறைகூற முடியாதென்க.

தேலிசுவின அண்டவியல்

9. அரித்தோதிலினது குறிப்புக்களை மூன்றுகச் சுருக்கித்தரு வோம்.

(1) பூமி நீரில் மிதக்கிறது.

(2) பொருட்கள் யாவற்றினதும் ஆதிகாரணம் நீரே.

(3) பொருட்கள் யாவற்றிலும் கடவுளர் நிறைந்துள்ளனர். காந்தககல் உயிருள்ளது ; ஏனெனில் அது இரும்பை நகர்த்தும் சத்தியுடையதாயிருகிறது.

இக்குறிப்புக்களுள் முதலாவதற்கு, இரண்டாவது குறிப்பை யொட்டியே பொருள் கொள்தல வேண்டும். இவ்விரண்டாவது அரித்தோதிலிய மொழி நடையிலுள்ளதெனினும், மாறுந் தன்மையுடைய உலகப் பொருள்கள் யாவற்றினதும் உட்பொரு ளான பண்டம் நீரேயென்பதே தேலிசு கூற வந்த கருத் தென்பதில் ஐயமில்லை. இதுவே அக்காலத்தில் ஆராயப்பட்ட முக்கிய பிரச்சினையாயிருந்ததென நாம் கண்டோம்.

10. அரித்தோதிலும், தியோபிறசுத்தோசும் அவர்களைத் நீர் தொடர்ந்து சிம்பிளிசியசுவும் தொகுப்பாசிரியாகளும், இக் கொள்கை பறறிய பல விளக்கங்களைத் தந்துள்ளனர். அரித் தோதில், தாம் தரும் விளக்கங்கள் உண்மையில் ஊகங்களே யென்கிறார். ஆனால் பிறகால எழுத்தாளர்கள் அவற்றை மீண் டும் குறிப்பிடுகையில் அவை முற்றிலும் உண்மையானவை யென வறுதியாக நம்பினர். தேலிசுவுக்குப் பிந்தியவோர் காலத்தில், சாமோசு நாட்டவனான இப்போன், தேலிசுவின் கொள்கைகளுக்கு ஒப்பான தனது முடிபுகளை நிறுவுதற்குக் கையாண்ட வாதங்களையே, அரித்தோதில் தேலிசுவின வாதங்க ளெனக் கருதினார் என்பதே ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத் தெனலாம்[1]. இவ்வாதங்கள் உளவியல் சாரதனபோற்காணப் படுவதற்கும் இதுவே விளக்கமெனக. ஐநதாம் நூற்றாண் டில் விஞ்ஞான ரீதியான வைத்தியவியல் வளர்ச்சியடைந் ததைத் தொடர்ந்து உயிரியற் தொடர்புள்ள வாதங்கள் பெரி தும் கையாளப்பட்டன. ஆனால் தேலிசுவின் காலத்தில சிந்தனை யாளர் அதிக ஆர்வம் காடடியது அண்டவியலிலேயே யொழிய, உடலியலில்லை. ஆகவே தேலிசுவின் கொள்கைகளையும் அண்ட வியற் கண்ணோட்டத்தினின்றே ஆராய்தல் வேண்டும்.

தேலிசு கொண்டிருந்த கருத்துக்களுக்கு, வானியல் விடயங் கள் எவ்வாறு காரணமாயிருந்திருக்க வேண்டும் எனபதை எளிதில உணரலாம். நாம் காணும பொருடகள எல்லாவற்றி லும், அதிக உருவங்களை அடையக் கூடியது போலக் காணப்படு வது நீரே. திடபதார்ததமாகவும், திரவமாகவும், வாயுவாக வும் நீரை நாம் பல்வேறு நிலைகளிற் காணகிறோம். இதனைக் கண்ணுறற தேலிசு, நீரிலிருந்து உலக தோற்றம் நிகழ்வதை யும் உலகப் பொருட்கள் மீண்டும் நீராக மாறுவதையுமே தான் கண்டதாக எணணியிருக்க வேண்டும். நீர் ஆவியா வதைக் கண்ட மாத்திரத்தே, கடலிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் இவ்வீரலிப்பே, வானசோதிகள் அணைந்து போகாது தொடர்ந்து ஒளிவீசுவதற்குக் காரணமாயிருக்கிறது என அவ ருக்குத் தோன்றியிருக்கிறது. இனறும் நாம் பேசுகையில் "சூரியன் நீரை உறிஞ்சுகிறது" என்கிறோம். நீர் மீண்டும் மழையாக வருகிறது. ஆகவே கடைசியாக நீர், நிலமாக மாறு கிறது என ஆதி அண்டவியலாளர் எணணினர். எகிப்திய நதியினால் உருவாக்கப்பட்ட கழிமுகத்தையும், சின்ன ஆசியா வின் வெள்ளங்கள் கொண்டுவரும் பெருந்தொகையான வண

1. இப்போனை ஓர மெய்யியலாளரென அரிததோதில் குறிப்பிடவிரும்ப வில்லை யெனினும, மேனனது இயாத்திரிகா வெனப் பெயரிய மருததுவவியல வரலாற்று நூலில இப்போனது பெயர் இடம்பெற்றுள்ளது.

டல்களையும் கண்டவர்களுக்கு இக்கருத்து மிகவும் இயலபான தாகவேயிருந்திருக்கும். இறுதியாகப பூமி மீண்டும் நீராக மாறுகிறது என எண்ணினர். நிலத்திற்குக் கீழிருந்து வரும் நீரூற்றுகள், பனி, பனிப்புகார் என்பனவற்றைக் கண்டு இவ்வாறு அவர்கள் எண்ணியிருக்க வேண்டும். ஏனெனில் நிலத்துக்குக் கீழிருந்து வரும் நீரூற்றுக்களுக்கும் மழைக்கும் எவ்வித தொடர்பும் இருப்பதாக அக்காலத்தில் எண்ணப்படவில்லை. "நிலத்துக்குக் கீழேயுள்ள நீர்கள்" மழை, கடல் போன்ற பிற நீர்களுக்குப் புறம்பான வொரு நீர் வகையென அவர்கள் கருதினர்[1].

இறையியல்

11. தேலிசு, "உலக ஆனமா" எனும் ஒன்றுளது என நம்பினர் என்பது, மேலே தந்துள்ள மூன்றுவது குறிப்பிலிருந்து பெறப்படுகிறதென அரித்தோதில் எண்ணினர். ஆனால தனது கருத்து வெறும் ஊகமே யொழிய அவ்வாறு தேலிசு கருதினரெனத் தான் கொள்வதற்கு வேறு ஆதாரங்கள் எதுவும் இல்லையென்பதை எடுத்துக் கூற அரித்தோதில் மறக்கவில்லை[2]. ஆனால் ஈத்தியோசுவோ தேலிசு "உலக ஆன்மா" பற்றிய கொள்கையை நம்பினரென உறுதியாகக் கூறுகிறார். தனக்கு ஆதாரமான நூலிலிருந்து பெற்றுக் கொண்ட சுதோய்கக மொழிநடையில் இக்கொள்கையை எடுத்துக் கூறும் ஈத்தியோசு, உலக ஆன்மாவே கடவுள் எனக் கூறுகிறார். சிசரோவும் தான் பின்பற்றிய எபிகூரிய நூலில் இது போன்ற வொரு கூற்றைக் கண்டனர். ஆனால் அவர் ஈத்தியோசுவுக்கு அப்பால் ஒருபடி சென்று, நீரிலிருந்து பொருட்கள் யாவற்றையும் ஆக்கிய தெய்வசித்தம் ஒன்றிருந்தது எனத் தேலிசு கருதினரெனக் கூறுகிறார்[3]. சுதோய்க்கர்களது, அனைத்து மிறையெனும் வாதத்தை ஒதுக்கிவிட்டு, உலக-ஆன்மாவை, சிசரோ, பிளேட்டோவினது போன்றவோர் இரண்டாந்தர உலக கருத்தாவாகக் கொண்டனர் என்க. இவை யாவும் அரித்தோதிலினது மேலெழுந்தவாரியான கூற்றிலிருந்தே பெறப்பட்டவையாதலால், அக்கூற்றைப்போலவே இவையும் அத்தனை

1. இங்கு தரப்பட்டுள்ள இக்கருத்து ஒமரைபபோன்று உருவகக் கதைகள் யாப்பதிறகுப் பெயர் பெற்றவனான எரக்கிடைசுவின் கொளகையையே பெரிதும ஒக்கினறன (R. P. 12 a). ஆனால இதுவும் சுதோய்க்கர்களினது ஊகமாயிருககலாம்.

2. Arist. *De an.* A, 5. 411 a 7 (R. P. 13).

3. Cicero, *De nat.* d. I. 25 (R. P. 13 b). சிசரோவினது ஆதாரம் பறறி Dox. pp. 125, 128 திற் காண்க. பிலோடெமோசுவிற் பெறப்பட்ட எர்க்குலேனியசுவின் புல்லேடு இவ்விடயம்பற்றி முற்றுய்க் கூறவில்லை. ஆனால் சிசரோவின் தவறை அவர் முன்கூட்டியே அறிந்திருக்க முடியாது.

ஆதாரபூர்வமானவையல்ல வெனவே கொள்ளல் வேண்டும். ஆகவே, தேலிசு ஒரு நீரீச்சுரவாதியா அல்லவா எனும் பழைய விவாதத்தில் நாமும் சேரவேண்டியதில்லை. அவரது வழிவந் தோரின் கூற்றுக்களைக் கொண்டு மதிப்பிடுகையில், நீரைக்கடவு ளென அவர் அழைத்திருக்கலாம் போலத் தோன்றினாலும், அதிலிருந்து அவரது சமயக்கொள்கை பற்றித் திட்டவட்டமாக எதனையும் பெறமுடியாதென்க[1].

மேலும் "பொருட்கள யாவற்றிலும் கடவுளர் நிறைந்து ளர்" எனும் கூற்றுக்கு நாம் வலிந்து பொருள கொள்ள லாகாது. இத்தகையவொரு குறிப்புரையே இவரது கொள்கை பற்றிய தகுந்த ஆதாரமெனக் கொளவதும் சரியல்ல. மைலீசிய மரபின் தாபகர் என்னும் முறையிலல்லாது, ஞானியர் எழு வருள் ஒருவர் எனும் முறையில் மட்டுமே இம்மூன்றுவது குறிப்புத் தேலிசுவைச் சேர்ந்ததாயிருக்கலாம். மேலும், பொது வாக இத்தகைய குறிப்புரைகள் யாருடையவை என்பது ஆரம் பத்தில் தெரிவதில்லை; காலத்துக்குக் காலம் வெவ்வேறு சிந்தனையாளர்களின பெயரால் இவை வழங்குவதுண்டு. ஆனால் காந்தக்கல்லும் அம்பரும் ஆன்மாவுடையன எனத தேலிசு கூறினரென்பது உண்மையென எண்ண இடமுண்டு. இது, "பொருட்கள் யாவற்றிலும் கடவுளர் நிறைந்துளர்" என் பதைப் போனறவொரு மூதுரையல்ல. "பூமி நீரில் மிதக்கிறது" என்பதைப் போன்றவொரு கூற்றுகவே இதனையும் கருதல் வேணடும். தேலிசு பற்றி, எக்காதையோசுவிடமிருந்து நாம் எதிர்பார்க்கக்கூடியன இத்தகைய கூற்றுக்களே. ஆனாலும் இக் கூற்றிலிருந்து, உலகு பறறித தேலிசு என்ன கொள்கையுடைய ராய் இருந்தார் என அனுமானிக்க முயல்வது தவருகும்; ஏனெனில காந்தக் கல்லும், அம்பரும் உயிருடையன வெனக் கூறும்போது, அதனிலிருந்து பெறகூடிய உட்கிடை, எனைய வற்றிற்கு உயிரில்லை யென்பதே.

II அனக்சிமாந்தர்

12. பிரக்சியாடிசுவின மைந்தனான அனக்சிமாந்தரும் மிலட் டசுவைச் சேர்ந்தவரே. இவர் தேலிசுவினது "சிந்தனைமுறை யைத் தழுவியவர்" எனத் தியோபிறசுத்தோசு கூறியுள்ளார். இதற்கு எவ்வாறு பொருள் கொள்வதென முனபு கண்டோம் (பிரிவு XIV). வாழ்க்கை

ஒலிம்பிய ஆண்டு LVIII. 2 இல் (547–6 கி. மு.) அனக் சிமாந்தர் அறுபத்திநான்கு வயதானவராயிருந்தார் என

1. முனனுரை பிரிவு IX இல் காணக.

அப்பொலோடரசுவிடமிருந்து அறிகிறோம். ஒலிம்பிய ஆண்டு XLII. 3 இல் (610–9 கி. மு.) இவர் பிறந்தாரென இப் பொலிட்டசு கூறியிருப்பதும், இராசியின் சாய்வு பற்றிய இவரது உன்னத கண்டுபிடிப்பு நடைபெற்றது ஒலிம்பிய ஆண்டு LVIII. இல் எனப் பிளினி கூறியிருப்பதும், அப்பொலோடரசுவின் கூற்றை மேலும் உறுதிப்படுத்துகினறன[1]. இங்கு நாம்காணும் சான்றுகளின் தொகுதி அசாதாரணமான தொன்றெனக ; ஏனெனில் எந்த விதியின்படி நோக்கினுலும, அனக்சிமினி சுவுக்கும் தேலிசுவுக்கும் இடைப்பட்ட காலத்தில், அதாவது கி.மு. 565 ஆம் ஆண்டிலேயே அனகசிமாந்தர் " புகழுடன் விளங்கியிருத்தல் " வேணடும். இதன்படி கி.மு. 546 ஆம் ஆண்டில் அவருக்கு அறுபது வயதாயிருந்திருகக வேண்டுமே யொழிய, அறுபத்திநான்காயிருந்திருக்க முடியாது. ஆனல் அப்பொலோடரசு, தான் அனகசிமாந்தரது நூலைக் கண்டதாகக் கூறியுள்ளார் போலத் தோனறுகிறது; அதனதுகாலத்தை நிர்ணயிப்பதற்கு, அந்நூலிலிருந்து அவருக்கு யாதோ ஒரு ஆதாரம் கிடைத்திருககவேணடும். தான அந்நூலைக் கண்டிருந் தார் என்பதைக் குறிப்பிடுவதற்கும் இதுவே காரணமாயிருந் திருக்க வேண்டும். 547–6க்கு அடுத்த ஆண்டிலேயே சாடெயிசு நகரம் வீழ்ச்சியடைந்ததாதலால், அனக்சிமாந்தர் தனது நூலில், இந்நிகழ்ச்சி நடைபெற்றபோது, தான எத்தனை வயதுடை யவராயிருந்தார் எனக் குறிப்பிட்டிருந்திருக்கலாம். " மீடி தோன்றியபோது நீ எத்தனை வயதானவனுயிருந்தாய்? " என் பது அக்காலத்தில் ஒரு பிரபல விளுவாயிருந்ததென செனே பனிசுவிடமிருந்து நாம் அறிகிறோம்[2]. எப்படியாயினும் அனக் சிமாந்தர், தேலிசுவுக்கு ஒரு சந்ததி பிந்திய காலததவரே யெனவே தோன்றுகிறது[3].

தேலிசுவைப போலவே, அனக்சிமாந்தரும் நடைமுறையில் மிகவும் பயனுடையவாகக் காணப்பட்ட சில புதுக் கண்டுபிடிப்புக் களின மூலம் பெயர் பெற்றிருந்தார். நிலைக்குத்தைக் கண்டு பிடித்தவர் இவரே யெனச் சில எழுத்தாளர்கள் கூறியுள்ள னர் ; ஆனல் இஃது சரியான கருத்தாயிருக்க முடியாது.

1. Diog. ii. 2 (R. P. 15). Hipp. *Ref.* i. 6 (*Dox.* p. 560). Plin. N. H. ii. 31.

2. Xenophanes, fr. 22(= fr. 17 Karsten; R. P. 95 a).

3. " இதற்குப்பின அதிக காலஞ செலவதற்குள் அவர் இறநதுபோனுர் " எனும் கூறறுக்கு (Diog. ii. 2; R. P. 15) அப்பொலோடரசு, தனது ஊழிகளிலொனறின இறுதியாகக் கருதிய, சாடெயிசுவின் வீழ்ச்சி நடைபெற்ற ஆணடிலேயே (546–5) இவர் இறந்தாரெனக கொணடார் என்பதே பொருள் போலும்.

இக்கருவி, பபிலோனிலிருந்து கொணரப்பட்டது என எரொ டோதசு கூறியுளளார். சங்கிராந்தி நேரங்களையும் சமராத்தி ரங்களையும் நிர்ணயித்தற்குத் தேலிசுவும்[1] இக்கருவியைப்ப யன் படுத்தியிருக்கவேண்டும். முதன் முதலில் ஒரு தேசப்படத்தை அமைத்தவரும் அனகசிமாந்தரே. பின்னர் எககாதையோசு வினால், அதிக விவரங்கள் சேர்த்து அமைக்கப்பட்டது இப்படமே என எராதொசுதெனீசு கூறினார். கருங்கடலின் மீதுசென்ற மைலீசியக கடலோடிகளுக்காகவே இப்படம் அமைக்கப் பட்ட தென்பதில் ஐயமில்லை. அனக்சிமாநதரே, அப்போலோனியா விற்[2] குடியேறச் செனறோர் சிலரைத் தலைமைதாங்கி அழைத் துச் சென்றனர். பின்னர் அக்குடியேற்றப் பகுதியில் அவரோடு வாழ்ந்த வஙைய குடிமக்கள் அவருக்காகச் சிலையொன்று நிறுவினர்[3].

அனகசிமாந தரது மூலப் பதாதகக கொளகை பற்றித தியோ பிறசுதோசு கூறியுள் ளவை

13. அனக்சிமாந்தரது கொள்கை பற்றி நாம் அறிந்துகொள் பவை யாவும் இறுதியாகப் பெறப்படுவது தியோபிறசுத்தோசு விடமிருந்தே. அவர் அனக்சிமாந்தரது நூலை அறிந்திருந் தார்[4]. குறைந்தது ஒரு இடதிலாவது அவர் அனக்சிமாந்தரது சொற்களை மேற்கோளாகக் காட்டி அவரது மொழிநடையை விமாசித்திருகிறார் என்பதில் ஐயமில்லை. அவர் அனகசிமாந் தர் பறறித் தனது முதற் புத்தகத்தில கூறியன வற்றிலி ருந்து எமக்குக் கிடைத்தவை கீழே தரப்படுகின்றன.

பிராக்சியாடிசுவின் மகனும், தேலிசுவோடு கேண்மை பூண் டவனும், மிலட்டசுவைச் சேர்ந்தவனுமான அனகசிமாந்தர்[5], பொருட்களின் மூலகமும் ஆதிகாரணமுமானது எல்லையற்றதே எனக் கூறினான். முதற் காரணத்திற்கு இப்பெயரை முதலி

1. பிளினியோ, நிலக்குதைக் கணடுபிடித்தவா அனக்சிமினிசுவே எனக கூறுகிறர் (N. H. ii. 187).

2. Aelian, V. H. iii,. 17. இங்கு குறிப்பிடப்படுவது பொன்ரசுபகுதி யிலுளள அப்பொலோனியாவாகவேயிருததல வேணடுமெனக கொளளலாம.

3. இககாலத்தைச் சோந்த சிலை ஒனறினது மேற்பபகுதி மிலட்டசுவிற் கணடு பிடிக்கபபட்டுள்ளது (Wiegand, *Milet*, ii. 88) ΑΝ]Α≅ ΙΜΑΝ△ΡΟ என அதிற் பொறிக்கபபட்டிருகிறது. ஆனால, அனக்சிமாந்தருக்கு இககௌரவம் அளிகக்பபட்டது "எல்லையறறது" பறறிய அவரது கொளகைகளுக்காவலல வென நாம் உறுதியாக நமபலாம். தேலிசு, எககாதையோசு என்போரைப் போல இவரும் ஓர் அரசறிஞராகவும புதிது காணியாகவும் விளஙகினர்.

4. இங்கும, மூலநூலிலுள்ள சொறகள அவவாறே பேணபபட்டுள்ள வஙைய இடங்களிலும், நான அவறறைத் தனியாகவே தந்திருகிறேன். மேற்கோளா கத் தரபபட்டுளள எழுத்தாளர்கள பற்றி "ஆதாரஙகள பற்றிய குறிபபு," ५ ஆம் பிரிவிற் பார்க்க.

5. சிம்பிளிசியசு பௌதிகம எனும் நூலுக்கு எழுதிய பாடியததில் வழி வந்தவரும் சீடருமான எனக் குறிப்பிடுகிறார்.

லித்தவன் இவனே. எல்லையற்றதெனும் இது, நீரோ அல்லது மூலகங்கள் எனப்படும் ஏனையவற்றில் எதுவுமோ அல்ல. அவற்றிலிருந்து முறறிலும் வேறுபட்டதும், எல்லையற்றது மான இப்பொருளிலிருந்தே வானமும், அதனில் உள்ள பல்வேறு உலகங்களும் தோன்றுகினறன–Phys. Op. fr. 2 (Dox. p. 476; R. P. 16).

அது " நித்தியமானது, மூப்பற்றது " எனவும் " எல்லா உலகங்களையும் சூழ்ந்திருக்கிற " தெனவும் அவர் கூறினார் Hipp. Ref. i. 6 (R. P. 17 a).

பொருட்கள் யாவும் எதனிடமிருந்து தோன்றுகின்றனவோ அதனுள்ளேயே மீண்டும் செல்கின்றன. " இதுவே பொருத்தமானது ; ஏனெனில், இவை யாவும தத்தம் காலத்தில, தமது நியாயமற்ற நடத்தைகளாக ஒன்றுக்கொன்று ஈடுசெய்தல் வேண்டும் " எனக் கவிதையை யொத்த நடையில் அவர்கூறுகிறார் *Phys*. op. fr. 2 (R. P. 16). இதைவிட நித்தியமான இயக்கமொனறும் இருந்தது. உலகங்களின் தோற்றத்துக்குக் காரணமாயிருந்தது அதுவே–Hipp. Ref. i. 6 (R. P. 17 a).

சடப்பொருளில் ஏறபட்ட மாற்றம் எதனையும் பொருட்களினது தோறறத்துக்குக் காரணமாக அவர் காட்டவில்லை ; ஆனால், வரம்பறற பொருளாயிருந்த அடிப்படையிலிருந்த எதிர்ப்புக்கள பிரிந்து போயின என அவர் கூறினார்–Simpl. *Phys*. p. 150, 20 (R. P. 18).

மூலப் பதார்த்தம் ஒரு மூல கமல்ல

14. ஆகவே நித்தியமானதும் அழிவற்றதுமான ஒருபதார்த்தம் உளதெனவும், பொருடகள் யாவும் அதனிலிருந்தே தோன்றுகின்றனவெனவும், அதனுள்ளேயே சென்று மறைகின்றன வெனவும் அனக்சிமாந்தர் கருதினாரெனலாம் ; உலகுகளின தேய்மானங்கள் யாவற்றிற்கும் ஈடு கொடுக்கக கூடிய வரம்பற்றவொரு களஞ்சியமாக இம் மூலப் பதார்த்தம் உளதென அவர் கருதினார். தேலிசுவினது கொள்கையென நாம் கொண்டதன் இயலபான விருத்தி இவ்வாறுதான் இருக்க முடியும். குறைந்த பட்சம், அனக்சிமாந்தா இதனைத் தெளிவாக எடுத்துக கூறினார் எனபது பறறியாவது எவ்வகை ஐயமும் எழமுடியாது. உண்மையில், அனக்சிமாந்தர் எவ்வாறு சிந்திப்பதன் மூலம், இத்தகைய கருத்தை அடைந்தனர் என்பதை நாம் உணர்தல் இனனமும் சாத்தியமானதே. மற்றப் பொருள்கள் யாவும் யாதேனும் ஒரு பொருளின் உருவங்களேயெனில், அப்பொருள நீராகவே இருத்தல் வேண்டும் எனத் தேலிசு கருதினார் ; ஆனால் மூலப்பதார்த்தம் எவ்

வாறு உலகப் பொருட்களில் ஒன்றுக இருக்க முடியும் என் னும் கேள்வி அனக்சிமாந்தரது மனத்தில் எழுந்திருக்க வேண் டும். **எல்லையற்றது** பற்றி ஆராய்கையில், பின்வருமாறு எழுதி யுள்ள அரிதோதில், அனக்சிமாந்தரது வாதத்தைப் பாது காத்துத் தந்துள்ளார் போலத் தோன்றுகிறது.

மேலும், எல்லையற்றதான, கலப்பற்ற தனிப்பொருளொன்று, மூலகங்களிலொனருகவோ அல்லது அவை யாவற்றிறகும் புறமபானதாகவோ (அப்படியானால் அவை யாவற்றிற்கும் தோறறுவாயாக) இருகக மூடியாது. சிலர் இதனை (அதாவது மூலகங்களுக்குப் புறம்பான பொருளை) நீர் அல்லது காற் றெனக் கூறுது எல்லையற்றதெனக் கூறுவர்; ஏனெனில் எல்லையறறது, இவற்றுள் ஒன்றுயின், ஏனையவை அழிந்து போகும். **இவை யாவும் ஒன்றையொன்று எதிர்ப்பன**—காற்று குளிரானது, நீர் ஈரலிப்புடையது, தீ வெப்பமுடையது—ஆகவே **இவற்றுள் ஒன்று எல்லையற்றதாயிருந்திருந்தால், ஏனையவை இதுவரையில் அழிந்து போயிருக்கும்.** ஆகவேதான், எல்லையற் றது, மூலகங்களுகுப் புறம்பான வொன்றெனவும், மூலகங் கள் அதனிலிருந்தே தோன்றுகினறன வெனவும் அவர்கள் கூறினர்.

இங்கு அனக்சிமாந்தருக்கும், தேலிசு அனக்சிமினிசு என் போருக்குமிடையேயுள்ள வேறுபாடே ஆராயப்பட்டுள்ளதென் பது வெளிப்படை. இப்பகுதியின மொழிநடை அரித்தோதி லினதேயென்பதும் "மூலகம்" எனும் சொற் பிரயோகம் ஒரு காலவழுவென்பதும் உண்மையே யெனினும்[1], இஃது அனக்சிமாந்தரது சிந்தனையைப் பெருமளவிறகுச் சரியாக வரு ணிப்பதாக அமைந்துள்ளது என்பதைச் சந்தேகிக்க நியாய மில்லை. உலகத்தின் தோற்றத்திற்குக் காரணமான, முரண் பாடுகளின பூசலோடேயே, அனக்சிமாந்தர் ஆரம்பத்திருக்கிறார் போலத் தோன்றுகிறது; சூடானது குளிருக்கு எதிரான தாகவும், ஈரலிப்பு வறட்சிக்கெதிரானதாகவும் இருக்கின்றன. இவை பூசலிடுகையில், ஒன்றைவிட ஒனறு அதிக வலிமை யுடையதாதல், "அநீதி" யாதலால், தகுந்த காலத்தே, மற றையதறகு இழைக்கப்பட்ட அநீதிக்கு அது ஈடு செய்தல் வேண்டுமென்க. அடிப்படையான சத்துப் பொருள் நீரே யெனத் தேலிசு கூறியது உண்மையாயிருந்தால், பிற பொருள் கள் இருப்பது எவ்வாறு எனக காண்பது மிகக் கடினமே. முரணபாட்டில் ஒரு பக்கத்தைச் சேர்ந்த குளிரும் ஈரலிப்புமே வரம்பின்றி வலிமை பெற்றிருக்கும்; சூடும், வறட்சியும்

1. பக்கம் 13, குறிப்பு

எப்போதிருந்தோ உலகிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும். ஆகவே பூசலிடும் முரண்பாடுகளல்லாத, அவற்றைவிட அடிப்படையான வோர் பொருளிலேயே, இவற்றின் தோற்றுவாயையும், இறுதியில் இவை செல்லுமிடத்தையும் நாம் காண்டல் வேண்டும். இம்மூலப்பொருளை அனக்சிமாந்தர் "புசிசு" (நித்தசத்தி) என அழைத்தா எனவே நாம் தியோபிறசுதோசுவின கூற்றுக்குப் பொருள் கொள்ளல் வேண்டும்; "ஆர்க்கே" (முதற்காரணி) யெனும் பதம் அனக்சிமாநதாலேயே முதலிற கையாளப் பட்டது எனுமை கூறறு, மயகமக் காரணமாக எற்பட்டதென லாம். அரிததோதில் தேலிசு பறறிக் கூறுகையில "ஆர்க்கே" எனும் பதததை ஆதிகாரணம் எனும் பொருளிலேயே உப யோகித்தா என அறிவோம். இஙகு அது வேறு பொருளில வநதது எனக கொள்ள இடமில்லை.

இக்கொள்கை பறறி அரிததோதில கூறுவது

15. அனகசிமாநதரது கொள்கையைத தனது "தேராச் சடப் பொருள்" பறறிய கருத்தின முனனேடியெனக் கருதிய தும், சிலவேளைகளில் அனக்சிமாந்தரது கொள்கைகளைப் பிற காலத்து "மூலக"க் கொள்கையைச் சாந்த சொறகளில் விவரித்தும், அரித்தோதில இயலபாக இழைத்த தவறுகளே தனது கொள்கையினபடி மூலகஙகளிறகு முதல, உடலுள் பொருள் எதுவும் இருகக முடியாதென்பதை உணாந்திருந் தாரெனினும், அனகசிமாந்தரது **வரம்பற்றது** ஓர் உடலுள் பொருளே யெனபதை அவா அறிநதிருநதா. ஆகவே, மூலகஙகளுகுப் "புறமபான" அவறறினினறு "தனித்தி ருகும்" ஓர வரம்பறற பொருள் என மூலபபதார்ததததை அவர் வருணிக்க வேண்டியிருநதது. அரித்தோதில் இச்சொற றொடர்களை உபயோகிகும்போது குறிபபிடுவது அனகசி மாநதரையே யென்பதை, எனக்குத் தெரிந்தவரையில ஒரு வரும் சந்தேகிக்கவில்லை.

மூலகஙகளுக்கு "இடைப்பட்ட" அல்லது இருமூலகஙகளுக்கு இடையேயுள்ள பொருளென மூலப்பதார்ததத்தைப் பற்றிக் கூறியுளள யாரோ ஒருவரைப் பற்றி அரித்தோதில் வேறு பல இடங்களிற குறிப்பிடடுளளார்[1]. கிரேக்க பாடியகாராகளி னும் சிட்டதட்ட எல்லோரும், இக்கருத்து அனக்சிமாந்தரது எனவே கூறியுள்ளனர். ஆனால தற்கால எழுத்தாளர்கள்

1. தீக்கும் காற்றுகு மிடைபபட்டவொரு பொருள பற்றி நான்கு முறைகளும, நீருக்கும காற்றுகும இடைப்பட்டவோர் பொருள பறறி ஐநது முறைகளும் அரித்தோதில குறிபபிடடிருக்கிறார். நீருக்கும் தீக்கும் இடைபபட்டபொருள் பற்றியும் ஒருமுறை குறிபபிட்டுள்ளார. இவ்வாறு அவா வேறுபடுவதிலிருநது, அவரது குறிப்புகள் வரலாற்று ரீதியானவை யலல என்பது தெளிவு.

அதனை ஏற்றுக் கொள்வதில்லை. அனக்சிமாந்தர் இது போன்ற எதுவும் கூறவில்லையெனபதைக் காட்டுவது மிகவும் இலகுவே யெனினும், அஃது உண்மையான கண்டனமாகாதெனக. வரலாற்று ரீதியாக அமையவேண்டிய பண்புகளைக் கொஞ்ச மும் கவனியாது, அரித்தோதில், யாவற்றையும் தனதுமொழி நடையிலேயே கூறினார் என்பது கவனிக்கப்படல் வேண்டும். அனறியும், வரமபற்றதை "மூலகங்களுக்குப் புறம்பான" என வருணிபபதிலும் பார்கக "மூலகங்களுக்கு இடைப்பட்ட பொருள்" எனக் கூறுவது கூடிய காலவழு என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதலல. "மூலகங்கள்" எனும் பிரயோகம் ஏற்பட்டதன் பின, உண்மையில் பின்னதே பொருத்தமான வருணனை யெனலாம். மேலும், இப்பகுதிகள அனக்சிமாந்த ரைக் குறிப்பிடுவனவல்ல என நாம் கொள்வோமாயின், அனக சிமாந்தரது கொள்கைகள சிலவற்றை ஏற்றுக் கொண்டது மட்டு மல்லாது, அவருக்கே உரியன போன்ற பல பதங்களையும் உபயோ கித்த ஒரு மெய்யியலாளர் பறறி அரித்தோதில் அதிக கவனம் செலுததினாராயினும், அம்மெயயியலாளரது பெயரை அரித் தோதில் அறிநதிருக்கவில்லை யெனவும் நாம் முடிவு செய்தல் வேண்டும். அன்றியும் அரித்தோதில சில இடங்களில் மூலகங களுககு "இடைப்பட்ட" பொருளையும் அவறறுக்குப "புறம் பான" பொருளையும ஒனறெனவே கருதுகிறார என்பதையும் குறிப்பிடவேணடும்.

அனக்சிமாந்தரது வரம்பற்றதை ஓர் "கலவை" யென அரித்தோதில் குறிபபிடும் பகுதியொனறும் உளது. ஆனால் இப்பகுதிககு வேறு விதமாகப் பொருள கொளவதும் சாததி யமே[1]. ஆயினும் அனகசிமாநதரது கொள்கைகளுக்கு நாம் விளக்கம் காண்பது இதனால் எவ்வகையிலும் தடைப்படவேண் டியதில்லை. பார்மனிடிசுவுககு முன்னர் எவராலும் சிந்திக கபபட முடியாதனவையாயும், எம்பிடோகிளிசுவுக்கு முனனர் யாராலும் சிநதிக்கப்படாதனவாயுமிருந்த "மூலகங்கள்" பற்றி அனக்சிமாந்தர் எதுவும் கூறியிருக்க முடியாதெனபது உறுதி. இவ்விடயம் பற்றி நீண்ட விவாதங்கள் எழுநதுளளன வென பதாலும், இரேக்க மெய்யியலின் வரலாற்றை அறிந்து கொள் வதற்கு அரித்தோதிலின் கூற்றுக்கள் எவ்வளவுககுப பயன் படுகின்றன எனபதனை இதிலிருந்து கணிகக லாம் என்பத னாலுமே, இதனை ஈண்டு குறிப்பிட்டோம். அரித்தோதிலினது கொள்கையை மனதிற கொண்டு நோக்கினால், அவரது கூறறுக் கள் ஏற்கத்தக்கவையாயிருக்கலாம்; ஆனால் அவ்வாறல்லாது

1. Met. Δ, 2. 1069 b 18 (R. P. 16 c).

தனக்கு முந்திய சிந்தனையாளரொருவரினது கருத்தொன்றை அரிதாதோதில் காலவழுவான பதங்கள் மூலம் குறிப்பிடுகையில் நாம் அவரது கூற்றுக்களே வரலாற்று ரீதியானவையெனக் கொள்ள வேண்டியதில்லை.

மூலப் பதார்த்தம் எல்லையற்றது

16. அரிதாதோதில் கூறியிருப்பதுபோல, "ஆதல் முடிவினறி நடை பெறவேண்டு மெனபதற்காகவே" அனகசிமாந்தர் மூலப் பதார்த்தத்தை வரம்பறற பொருளாக்கினர் என்பதில் ஐயமில்லை. இச்சொற்கள் அனக்சிமாந்தருடையவைதானு அல்லவா என்பது தெளிவாயில்லை. ஆனால் பாடியகாரர்கள் பலரும் இவ்வாறு கூறியது அவரே யெனக் கூறுகின்றனர். அனக்சிமாந்தரது நூலை நேரில் அறிந்தவரான தியோபிறசுத்தோசு, அனக்சிமாந்தர் இவ்வாறு சிந்தித்தாரெனக் கூறுகிறாரென்பதைக் கொண்டு நாம் திருப்தியடையலாம். அனறியும் உலகு பற்றி அனக்சிமாந்தா கொண்டிருநத கொள்கை அத்தகைய தாதலால் மூலப்பதார்த்தம் வரம்பறறது எனற கருத்து இயல்பாகவே அவருக்குத் தோன்றியிருக்கும். "முரண்பாடுகள்" ஒனறோடொன்று பூசலிடுகின்றன வெனவும், அவ்விரோதம் காரணமாக அவை ஒன்றனுள் ஒன்று "அநீதியாக" வரம்பு கடநது செலகின்றன வெனவும் கண்டோம். கோடையிற் சூடும், மாரியிற் குளிரும் "அநீதி" இழைக்கினறனவாதலால், இறுதியில் வரம்பற்றதைத் தவிர்ந்த ஏனைய யாவும் அழிந்து போக நேரிடும். ஆகவே, புதிது புதிதாக முரண்பாடுகளாகப் பிரியக கூடிய வரம்பற்ற களஞ்சியம் ஒன்று இருப்பதனாலேயே, இவ்விறுதி அழிவு தவிர்க்கப்படலாம். எனவே, நாமறிந்த முரண்பாடுகளில் எதுவுமல்லாத, முடிவில்லாதவோர் பொருட்டொகுதி நாம் வாழும் உலகின் நானபக்கங்களிலும் பரந்திருப்பதாக நாம் கருத வேண்டும். இத்தொகுதியிலிருந்தே எமதுலகு ஒரு காலத்தில் தோன்றியது; இப்பொருட் டொகுதியினுள்ளேயே அது ஒரு காலத்தில் முடிவடையும்.

எண்ணிறந்த உலகங்கள்

17. "வரம்பற்றதனுள்ளே எண்ணிறந்த உலகங்கள் இருநதன" வென அனக்சிமாந்தர் நம்பியதாக நாம் அறிகிறோம்[1]. இதுபற்றி, அழியக் கூடியனவாயினும், ஒரே நேரத்தில் எண்ணிறந்த உலகங்கள், வரம்பற்றதில் உள்ளன வெனும் விளக்கத்தை அல்லது ஓர் உலகம் அழிந்து போகும்வரை புதிய உலகம் ஒன்று ஒருபோதும் தோன்றுவதில்லையாதலால், வரம்பற்றதில் ஒருபோதும் ஓர் உலகத்திற்குமேல் இருப்பதில்லை யெனும் செல்லரது விளக்கத்தைத் தேர்தல் வேண்டும். இது

1. cf. [Plut.] *Strom.* fr. 2(R. P. 21 b).

மிகவும் முக்கியமான விடயமாதலால், இதுபற்றிய ஆதாரங்களைக் கவனமாக ஆராய்தல் அவசியமாகிறது.

முதலாவதாக, உள்ளது ஓர் உலகமோ அல்லது எண்ணிறந்தனவோ என்பது பற்றி ஆதி மெய்யியலாளர்கள் யாவரது கருத்துக்களையும் ஆராய்ந்த தியோபிறசுத்தோசு, அணுவாதிகள் "எண்ணிறந்த உலகங்கள்" உளவென நம்பினர் எனக் கூறும்போது, எக்காலத்தில் உள்ளனவற்றை அவர் கருதினரோ யொழிய, ஒன்றன பின ஒன்றுகத் தோன்றும் உலகங்களையல்ல வென்பது பாடிய மரபிலிருந்து தெளிவாகப் பெறப்படுகிறது. வேறுபட்ட இரு கொள்கைகளை அவர் ஒரு தலைப்பின் கீழ்த் தந்திருப்பாரேயாகில் அவை எவ்விதத்தில வேறுபட்டன வென்பதையும் அவர் காட்டியிருப்பார். ஆனால் அவர் அதற்குமாறுக, அனக்சிமாந்தர், அனக்சிமினிசு, ஆக்கேலசு, செனோபனிசு, இடையோசினிசு, இலியூசிப்போசு, தெமோகிரித்தோசு, எபிகூரசு எனும் யாவரும், எமது உலகத்தின் எல்லாப் பக்கங்களிலும் "எண்ணிறந்த உலகங்கள்" இருந்தனவென்னும் கொள்கையைக் கொண்டிருந்தனர் எனக் கூறுகிறார். எபிகூரசு, இவ்வுலகங்களுக்கிடையேயிருந்த தூரம் வேறுபட்டதெனக் கூறினார, ஆனால் அனக்சிமாந்தர் இவ்வுலகங்கள் சமமான இடைவெளிக் கொன்றுக விருந்தன வெனக் கருதினர் என்பதே தியோபிறசுத்தோசு, இம்மெய்யியலாளரின் கொள்கைகளிற் காட்டும் ஒரேயொரு வேற்றுமையெனக. அனக்சிமினிசு, ஆக்கேலசு, செனோபனிசு என்போர் எணணிறந்த உலகங்களிருந்தன வெனக் கூறினர் என்று கூறும் ஒருவரை நாம் நம்பமுடியாதெனக் கூறி, இவ்வாதாரத்தை[1] ஏற்றுக்கொள்ளச் செல்லர் மறுத்தனர். இம்மூவருள் முதலிருவர் பற்றியும் தியோபிறசுத்தோசு கூறியிருப்பது முற்றிலும் சரியானதேயெனவும், செனோபனிசுவைப் பொறுத்தவரையிலும் கூட அவ்வாறு கூறப்பட்டதற்குக் காரணம் உண்டெனவும், நான் காட்டுவேனென நம்புகிறேன். எபிகூரசுவின பெயர் பின்னர் சேர்க்கப்பட்டதாயினும் இப்பகுதி எமக்கு ஈத்தியோசுவிடமிருந்து[2] இடைத்திருக்கிறதெனபதோடல்லாது, தியோபிறசுத்தோசுவிடமிருந்தே இஃது பெறப்பட்டிருக்க வேண்டுமென்பதையும் நாம் குறிப்பிடலாம். சிம்பிளிசியசுவின, பின்வரும் கூற்றினால் இது உறுதிப்படுத்தப்படுகிறது ; எண்ணிறந்த உலகங்கள் உளவெனக் கருதிய அனக்சிமாந்தர்,

1. தொபாயோசுமட்டுமே இவ்வாறு கூறியுள்ளார் எனச் செல்லர் எண்ணினர். அவர் எழுதியபோது, ஆதார நூல்களின் வரன்முறை நன்கு அறியப்படவில்லையெனக.

2. பார்க்க, அனகசிமினிசுபற்றி, 30 ; செனோபனிசு, பிரிவு 59 ; ஆக்கிலேசு, பிரிவு 192.

இலியுகிப்போசு, தெமோகிரித்தோசு—இவர்களுக்குப் பின்னர் எபிகூரசு—போன்றோர், இவ்வுலகங்கள் தோன்றுதலும் அழிதலும் மூடிவில்லாது நடைபெறுகிறதெனவும், எப்போதும் சில தோன்றிக்கொண்டிருக்கின்ற வெனவும் சில அழிந்து கொண்டிருக்கினறன வெனவும் கருதினர்[1].

இப்பகுதியும், அலெக்சாந்தருக்கூடாக, தியோபிறசுத்தோசு விடமிருந்தே வருகிறது எனபதை நாம் உறுதியாக நம்பலாம்.

அடுத்ததாக, சிசரோவினது மிக முக்கியமான கூறறென்றுக்கு நாம் வருவோம். சிசரோ இதனை, எக்கூலேனியத்திற் காணப்பட்டதும், பிலோடெமொசுவினுல் எழுதப்பட்டதுமான மதம் பற்றிய எபிகூரிய நூலிலிருந்து பெற்றிருக்கவேண்டும். அல்லது அந்நூலுக்கு நேர் ஆதாரமாக உதவிய நூலிலிருந்து இக்கூற்றுச் சிசரோவினுற் பெறப்பட்டிருக்கலாம். வெள்ளியசுவை ஆங்கு அவர் பின்வருமாறு பேசவைக்கிறார் : " நீண்ட இடைவெளிகளுக்கொருமுறை கடவுளர்கள் தோன்றி மறைந்தனர் எனவும், எண்ணிறந்த உலகங்கள் எனபவை இவையே யெனவும் அனக்சிமாந்தர் கருதினர் "[2] அனக்சிமாந்தரது கொள்கையின் படி " எண்ணிறந்த வானங்கள " என்பவையும் கடவுளர்களே என ஈத்தியோசு கூறுவதையும் சிசரோவினது இக்கூறறோடு சோந்தே நோக்குதல வேண்டும் எனபது தெளிவு. இக்கூற்றிற் காணப்படும் " நீண்ட இடைவெளிகள் " என்பதறகுக் கால இடைவெளிகள் எனப் பொருள் கொள்ளாது இட இடைவெளிகள் எனப் பொருள் கொள்வதே இயல்பானது எனபதையும் காண்க ; இது சரியானதென ஏற்றுக்கொள்ளப்பட்டால், எமது ஆதாரங்கள் பூரணமாகப் பொருந்துகினறன எனக கூறலாம்.

மேலும், வரம்பற்றது " எல்லா உலகங்களையும் சூழ்ந்திருக்கிறது " எனும் கூற்றுக்கு, அஃது ஒன்றன்பின் ஒனறுக வரும் எல்லா உலகங்களையும் சூழ்ந்திருக்கிறது எனப் பொருள் கொளளுதல் பொருத்தமானதன்று ; ஏனெனில் அவ்வாறு கொள்ளும் போது, குறிப்பிட்ட எந்தக் காலப்பிரிவிலும் " சூழ்வதற்கு " ஓர் உலகமே இருக்க முடியும். அன்றியும், " வானத்திற்கு வெளியே உள்ளவை எல்லையற்றனவாயின், பொருள் எல்லையற்றதாயிருத்தல் வேண்டும், எண்ணிறந்த உலகங்கள் இருத்தல் வேண்டும் " என அரித்தோதில் ஓரிடத்திற் தரும் வாதம், மைலீசியர்களினது வாதத்தையே குறிப்பிடுவதாயிருத்தல்

1. தியொடொறெற்றுவும் இப்பெயர்களோத தந்திருப்பது இதனை நிரூபிக்கிறது.
2. Cicero, *De nat.d.i.* 25 (R. P. 21).

வேண்டும் ; எனெனில் ஆதி அண்டவியலாளர்களுள், வானங்களுக்கு வெளியே வரம்பற்ற பொருளொன்றுளது எனக் கூறியவர்கள் மைலீசியர்கள் மட்டுமே. இறுதியாக, பைதாகரச வாதிகள் யாவருளளும் காலத்தால் முந்தியவரான பீற்றன் எனபார், நூறறி எண்பததிமூனறு உலகங்களுளவெனவும் அவை முக்கோண வடிவாக நிரைப்படுத்தப்பட்டுள்ளனவெனவும் கூறினார் என்பதையும் நாம் அறிவோம்[1]. அணுவாதிகளுக்கு முன்பும், உலகங்கள் பலவுள வெனக் கூறியவாகள இருந்தனா எனபதையாவது இது நிரூபிக்கின்றதென்பதை ஒப்புக் கொள்ளவேண்டும்.

18. "வானங்கள் யாவற்றையும் அவறறினுளளே உள்ள நித்திய உலகங்கள் யாவற்றையும்" தோற்றுவித்தது "நித்திய இயக் இயக்கமும் கமே" எனத தொகுப்பாசிரியர்கள் கூறுகின்றனா. ஆனால் சுழியும் இத்தகைய பதங்களை உபயோகித்தது அரிதோதிலே யெனவும் (பிரிவு VIII.), வரம்பறறதன் மூல இயக்கத்தை, பூமியினது நாளாநத இயக்கம் போன்றவெதுவுமென நாம கருதக் கூடாதெனவும் கண்டோம். அன்றியும், அவ்வாறு கொள்வது, எண்ணிறந்த உலகக கொள்கையோடு முரண்படும். எனெனில் எண்ணிறந்த இவவுலகங்களில் ஒவ்வொன்றும் தனிப்பட்ட ஓர் மத்தியினையும் நாளாந்த இயக்கததையும உடையதாயிருகுமென எணண இடமுண்டு. இவ்வியக்கம் எத்தகையதெனக் குறிக்கும் திடவட்டமான கூறறு எதுவும் காணப்படவில்லை ; ஆனால "பிரிந்துபோதல்" எனப பொருளபடும் கிரேகக சொற்றொடரைப் பார்க்கும்போது, அரிதடில் ஆட்டிததெரிவது போனறவோர இயக்கமே கருதப்படுகிறது போலத் தோனறுகிறது. பிளேட்டோவினது **திமாயசுவில்**, பைதாகரசவாதிகள் இத்தகையவோர் கொள்கையையே கொண்டிருந்தனர் எனக் கூறபபடுகிறது.[2] பைதாகரசவாதிகள், அண்டவியல சம்பந்தமான விடயஙகளில் அனக்சிமாந்தரையே பெரிதும் பினபறறினர் (பிரிவு 54). அபுதேரா மரபினரும், தமது அணுக்களின இயக்கத்தை விவரிக்கையில இவ்வாறே வருணித்தனர் எனக காண்போம் (பிரிவு 179). இவர்களும் தமது கொள்கையை

1. 53 ஆம் பிரிவிற காணக. cf. Diels, *Elementum*, pp. 63 Sqq.

2. Plato, *Tim.* 52 e. இஙகு மூல வடிவஙகள் ("முரணபாடுக" ஞக்குப பதிலாக இஙகு இவறறைக் காணகிறோம்) துழாவபபடும்போது தானியங்களை தூற்றும் கருவிகளிலுல அசைக்கப்படுமபோது நடைபெறுவது போல, வெவ் வேறு திசைகளில் எடுத்துச் செலலப்பட்டுப் பிரிகினறன ; இவவாறு திணமையும நிறையும் கொண்டவை ஒரு திசையிலும், ஐதானவையும நிறை யில்லாதன வுமானவை வேறோர் திசையிலும் கொணடு செல்லபபடுகினறன. அவ்வாறு சென்றவை தாமடைநத இடஙகளில் தஙகியும் விடுகின்றன.

விவரிக்கையில், மைலீசியர்களையே பின்பற்றினர். ஆனால் இது பற்றிய நேரடியான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லையாதலால் நாம் வெறும் ஊகத்தோடு திருப்தியடைய வேண்டியதுதான்.

ஆனால் உலகம் "பிரிந்ததுபோன"தன் பின்னர் ஏறபடும் இயக்கத்தைப் பற்றி அறிய முறபடும்போது எமது ஆதாரங்கள் திருப்திகரமானவையாகவுள்ளன வெனலாம். நீரில் அல்லது காற்றில ஏற்படும் சுழியை ஓர் உவமையாகக் கொண்டு அதனைப் பெருமளவிற் கையாண்டமை ஆதி அண்டவியலின் முக்கிய பண்புகளில் ஒன்றாக விருந்தது என்பதுபறறி ஐயத்திற்கிடமில்லை. இவ்வுவமை அனக்சிமாந்தர், அனக்சிமினிசு என் போரின் கொள்கைகளைச் சேர்ந்தது என நாம் கொள்வதையும் நியாயமாக மறுக்க முடியாதெனலாம்[1]. மூலப்பதார்த்தம் நீர் எனும் கொள்கையோடு ஆரம்பித்து, அஃது காற்று எனும் கொள்கையை இறுதியாக அடைந்த சிந்தனையாளர்களது மனத்தில் சுழி பற்றிய இவ்வுவமை தோன்றியது முற்றிலும் இயல்பானதே. நிலமும் நீரும் மத்தியிலும், தீ சுற்று வட்டத்திலும், காற்று இவற்றிற்கிடையேயும் இருந்தனவென்னும் கொள்கைக்கும் இவ்வுவமை சிறந்ததோர் விளக்கமாக வமையும். நிறை கூடிய பொருட்கள் சுழியின மத்தியை அடைய முற்படுகினறன; நிறை குறைந்தன சுழியின் சுற்று வட்டப் பகுதிகளுதல்ளப்படுகினறன. ஆனால இதுவரைக்கும், கோளததின சுழற்சி யென எதுவும் குறிபபிடப்படவிலலை; பூமியின மேற் பரப்பை நோகஙிச் சாய்ந்துள்ளதெனக் கருதப்படக்கூடிய வொரு தளத்தில் அல்லது தளங்களில் நடைபெறும் வட்டித்த இயக்கமொன்றையே நாம கற்பனை செய்தல் வேண்டும். மேலே தரப்பட்டுள்ள ஊகம், சுழியின் தோற்றத்தை இயக்கரீதியான முறையிற் திருப்திகரமாக விளக்குகிறது என்பதும், அதனை நாம் ஏறறுகொள்ள வேண்டும் என்பதறகு ஓர் நியாயமாகலாம். சுழியினது தோற்றம் பற்றி அனுவாதிகள தந்த விளக்கமும் இதுவே யென நாம் காண்போம் (பிரிவு 180).

1. அனடவியகததைப் பொறுததவரையில், பேராசிரியா டபிளியூ. ஏ எயடெல் தரும் விளகததை நான் நனறியோடு ஏற்றுகொளகிறேன. ஆனால இதுவும நிதநிய இயககமும் ஒனறேயெனக கூறமுடியாது. இயூடொக்சோசு அரிததோதில எனபோரது "கோளஙக"ளைப் பைதாகரசவாததைத் புகுததக கூடாதென்பதைக காட்டுவதறகு, என்னால ஆனவறறை நான ஏற்கெனவே செய்துள்ளேன். அனக்சிமாந்தரது உலகததின் இயக்கம், ஒரே தளத்தில் ஏறபடும வட்டிதத இயககம் எனல, இக்கருத்துக்கு மேலும் வலுவூட்டுமெனக.

19. உலகின் வெவ்வேறு பகுதிகள் எவ்வாறு வரம்பற்ற திலிருந்து தோன்றின எனபது பற்றியும், தொகுப்பாசிரியர்கள் எமக்குச் சில குறிப்புக்கள் தந்துள்ளனர். பின்வரும் கூற்று தியோபிறசுத்தோசுவிடமிருந்து பெறப்பட்டதாகும். வானசோதி களினது தோற்றம்

நித்திய பொருளிலிருந்து சூட்டையும் குளிரையும் தோறறு விக்கக் கூடிய பொருளொன்று, இவ்வுலகின் ஆரம்பததிற் பிரிந்து போனதென அவர் கூறுகிறார். இப்பொருளிலிருந்து, ஓர் தீககோளம் எழுந்து, மரத்திற் பட்டை பொருநதியிருப் பதைப் போல, பூமியைச் சூழ்நதிருந்த காற்றோடு நெருக்க மாகப் பொருந்திக கொண்டது. இத்தீக்கோளம் பிய்த்தெடுக்கப் பட்டுச் சில வளையங்களுள் அடைக்கப்பட்டபோது சூரியன, சந் திரன், உடுக்கள் என்பன தோன்றின.— Ps.–Plut. *Strom.* fr. 2 (R. P. 19).

வரம்பறறதிலிருந்து, உலகை ஆககும் பொருட்டு ஒரு பகுதி பிரித்தெடுக்கப்பட்டபோது, அது குளிர, சூடு எனும் இரு முரண் பாடுகளாக மாற்றமடைந்தது. சூடு குளிரைச் சூழ்ந்திருக்கும் தீப்பிழம்பாகத் தோன்றுகிறது; குளிர் காற்றிறை சூழப்பட்ட நிலமாகத் தோனறுகிறது. குளிரானது எவ்வாறு, நிலம், காறறு, நீர் எனபனவாக மாறுகிறது என்பது இஙகு விளக் கப்படவில்லையாயினும், அரித்தோதிலினது வளிமண்டலவியல் எனும் நூலில் (Meteorology) உள்ள வொரு பகுதி இவ் விடயத்தைச் சற்றே விளக்குவதாக வமைந்துள்ளது; கடல் பற்றி "இறையியலவாதிகள்" தரும் கருத்துகளை ஆராய்ந்த தன பினனர் அரித்தோதில பின்வருமாறு கூறுகிறார்: ஆனல் மனிதர்களது ஞானததை அதிகமாகப் டெற்றவர்கள், கடலின தோற்றம் பற்றி விளகமொன்று தருகினறனர். முதலில் நிலப்பகுதி முழுவதுமே ஈரலிப்புடையதாய் இருந்ததென அவா கள் கூறுகினறனர்; பினனா சூரியனல் அது வறடடப்பட்ட போது ஆவியான பகுதியே காற்றுக்களை ஏற்படுத்தியது; சூரி யன, சந்திரன என்பனவற்றின கதிகளில் ஏறபடும் திருபபங் களுக்குக் காரணமாகியது. எஞ்சியிருநத நீர்ப்பகுதியே கட லென்க. ஆகவேதான், சூரியன் இன்னமும் அதனை வறட்டுகிற தாதலால், கடல் அளவில் குறைந்து கொணடு வருகிறதெனவும் இறுதியில் அது முற்றுக வறண்டு போய் விடுமெனவும் அவாகள் நம்புகினறனர்—*Meteor*, B, I. 353 b 5.

நிலமும் முதலில் ஈரலிப்புடையதாகவே இருந்தது, பின்னர் நிலத்திற்கு மேலேயிருந்த உலகப பகுதி சூரியனை சூடாக்கப் பட்டபோது வளி உண்டாகி, வானம் முழுவதுமே அதிகரித்து, அவ்வளி, காற்றுக்களை உண்டாக்கியது. சூரியனதும் சந்திரனதும்

கதியில் திருப்பம ஏற்படுவதற்குக் காரணமாகிறது எனறெல லாம் கூறு வோருமை இத்தகைய பொருளறற முடிவையே அடைதல் வேண்டும்.—Ib. 2. 355 a 21 (R. P. 20 a).

இப்பகுதிக்கு எழுதிய பாடியத்தில், இதுவே அனக்சிமாந்தர் இடையோசினிசு எனபோரது கருத்தெனவும், தியோபிறசுத தோசுவே தனக்குச் சான்று எனவும் அலெக்சாந்தர் கூறுகிருர். கடல்பற்றிய அனக்சிமாந்தரது கொள்கை பற்றித் தொகுப்பாசிரி யர்களிடமிருந்து நாம் அறிந்தவையும் இதனை உறுதிப்படுத்து கின்றன (பிரிவு 20). ஆகவே, சுழியினால் முதலில குளிரும் சூடும் பிரிக்கப்பட்டதன் பினனர், தீயின சூடு, உலகின் குளிர்ந்த உட்பகுதியைக் காறறுக அலலது ஆவியாக மாறறுகிறது—அக்கா லத்தில் இவை யிரண்டுக்குமிடையே வேற்றுமை காணப்பட வில்லை—இப்பனியே பின்னர் விரிவடைந்து, தீ, வளையங்களாகப பிரிவதற்குக் காரணமாகிறது என நாம் முடிவு செய்யலாம். இவ்வளையங்கள பற்றிப் பின்னா ஆராய்வோம் ; முதலிற் பூமி பறறிக் கூறப்படுவனவற்றை நாம் கவனிததல் வேண்டும்.

பூமியும் கடலும

20. ஈரலிப்பும் குளிரும் கொண்ட பதார்த்தத்திலிருந்து ஆரம்பத்தில் பூமியும கடலும் பிரிந்தமை பினவருமாறு வரு ணிககப்படுகிறது : மூல ஈரலிபிலை எஞ்சியிருபபதே கடலென்க. அதனிற பெரும பகுதியைத் தீ வறடடி விட்டது. வெப்பமூட்டு வதன மூலம் எஞ்சியதையும் அது உப்பாகவிடடது.— Aet. iii. 16, 1 (R. P. 20 a).

அது உருவத்தில் உருளை போன்ற தெனவும் அதனது ஆழம், அதன அகலத்தில் மூன்றில் ஒரு பகுதியெனவும் அவர் கூறு கிறார்.—Ps. – Plut. *Strom.* fr. 2 (R. P. ib.).

பூமி, தனது நிலையிற் தன்னை நிறுத்திவைக்க வேறு எதனது உதவியையும் வேண்டாமல், அந்தரத்திற் தனியே ஊசலாடுகிறது. அது தனது நிலை மாறுது தொடாநது ஒரு நிலையிலேயே யிருபபதற்குக் காரணம், யாவற்றினினறும் அது சமதூரத்தில் இருப்பதே. உளளே வெறுமையானதும் வட்டமானதுமான பூமி, உருவத்தில் ஓர் கற்றாணை ஒத்திருக் கிறது. நாம் அதன் இரு பரப்புகளில், ஒனறில் வாழ்கிறோம் ; மற்றது எமது பரப்புக்குக் கீழே எதிர்த்திசையில் உள்ளது.— Hipp. *Ref.* i. 6 (R. P. 20).

" மூலகங்கள் " பற்றிய கொள்கைப்படி பார்ப்பதானால், அனக் சிமாந்தர் சூடும், வறட்சியும் எனத் தீயை ஒரு பக்கத்திலும், குளிரும் ஈரலிப்பும் என எனையவற்றை மறுபக்கத்திலும் வைத் தார் எனக் கூறவேண்டும். வரம்பற்றது, தீக்கும் நீருக்கும்

இடைப்பட்டவோர் பொருள் என அரித்தோதில் கூறியதற்கு இதுவே விளக்கமென்க. அனறியும், குளிரான மூலகம் எவ் வாறு தீயினுல், காற்றுக அல்லது ஆவியாக மாற்றப்படுகிற தென்பதையும் நாம் கண்டோம் ; வரம்பற்றதைத் தீக்கும் காற் றுக்கும் இடைப்பட்ட பொருளெனவோ அல்லது காற்றுக்கும் நீருகளுக்கும் இடைப்பட்ட பொருளெனவோ அழைகக அரிதோதி லால் எவ்வாறு முடிந்த தெனபதை அது விளக்குகிறது[1].

உலகின் குளிரும் ாரலிப்பும் கொண்ட உட்பகுதி உணமையில் நீரல்ல. அது எப்போதும் " ாரலிப்பு " அலலது " ாரலிப்பான நிலை " யெனவே அழைக்கப்படுகிறது. எனெனில் அது இன் மேற்ருன் சூட்டினுல் நிலம், நீர், ஆவி என்பனவாகப் பிரிக்கப் படவேண்டியதாக இருக்கிறது. சூடு நீரைச் சிறிது சிறிதாக வறட டியமை, அனக்சிமாந்தர் " அநீதி " யெனக் குறிப்பிட்டதற்கு நல்லவோர உதாரணமாகிறது.

பூமி நீரில மிதகிறதெனத் தேலிசு கூறியிருந்தார். ஆனல் அது தனியே அந்தரததில் நிறகிறதெனவும், அதனைத் தாங்கு வதற்கு எதுவும் வேண்டியதில்லை யெனவும் அனகசிமாந்தர் உணர்ந்தார். இதற்கு அவர் உபயோகித்தவாதம் அரித்தோதி லாற் பேணப்பட்டிருக்கிறது. சூழியின் சுற்றுவட்டத்திலிருந்து பூமி எததிசையிலும் சமமான தூரத்திலேயே இருக்கிறதாத லால், அது கீழ் நோக்கியோ அல்லது மேல் நோக்கியோ அன்றேல பக்கவாட்டிலோ செல்ல வேண்டியதில்லை. எணணி றந்த உலகுகள் உள்ளனவென்னும் கொளகையோடு, அண டத்தில் மேற்பகுதியெனவும் கீழ்ப்பகுதியெனவும் முடிவாக உள் ளன வெனக் கூறுவது, மூரண்படுமாதலால், இவ்வாதம் மிக வும் செம்மையானதே. பூமி மத்தியில் இருப்பதற்குக் கார ணம், சூழியே ; எனெனில், அளவிற் பெரிய பொருட் டொகு திகள் சூழியின் மத்தியை நோக்கிச் செல்ல முற்படு கின்றன. வட்டமான சுழற்சி இயக்கத்தில், பூமியும் சேர்ந்து கொண் டதென அனக்சிமாந்தா கருதினுர் என்று கொள்வதற்கு நல்ல ஆதாரங்கள் உள. ஆயினும், இங்கு பூமி, ஓர் கோள மெனக் கொள்ளப்படவில்லையாதலால், அதனது இயக்கத்தை அச்சியற் சுழற்சியெனக் கொள்ள முடியாது. உல்கம் முழு வதும், சுழன்றுகொண்டிருக்கும் வளையங்களின தொகுதியே யென அனக்சிமாந்தர் தரும் கருத்தை ஏற்றுக்கொண்டோ மானுல், அவரது கொள்கையின்படி பூமியின் வடிவம் என்ன வென்பதையும் விளங்கிக் கொள்ளலாம். சூழியின மத்தியிலே யுள்ளவோர் திண்மவளையமே பூமியென்க.

1. குறிப்பு பக்கம் 60.

வான சோதிகள்

21. சுழியின் சுற்றுவட்டத்தை நோக்கித் தள்ளப்பட்ட தீ, அதன் வெப்பத்தினுல விரிவடைந்த ஆவியின் அமுக்கம் காரண மாக வளையங்களாகப் பிரிந்தது என நாம் கண்டோம். இவ்வளை யங்களிலிருந்து வானசோதிகள் தோன்றிய விதம் பற்றி இப்பொலேட்டசு, ஈத்தியோசு என்போர் கூறுவனவற்றை இங்கு தருகிறேன்.

உலகத்தீயினின்று பிரிக்கப்பட்டு, காற்றினுற் சூழப்பட்டிருக் கும் தீச்சிலலுகளே வானசோதிகள. இச்சில்லுகளில், வான சோதிகள் வெளியே தெரியக்கூடியவாறு, சில சுவாசத்தொளை கள், குழாய்போன்ற வழிகளாக அமைநதிருக்கினறன. இதனு லேயே சுவாசத்தொளைகள் அடைபடும்போது கிரகணங்கள ஏற் படுகின்றன. இவவழிகள் மூடுவதும் திறப்பதுமாய் இருப்பதனு லேயே, சந்திரன் சில வேளைகளிற் தேய்வதும் சில வேளைகளில் வளர்வதுமாகக் காட்சியளிக்கிறது. சூரியனது சில் அளவில் பூமியினதைப் போல 27 மடங்காகவும், சந்திரனது சில் 18 மடங் காகவும், இருக்கின்றன[1]. சூரியனே இவை யாவற்றிலும் அதிக உயரத்தில் இருக்கிறது. உடுக்களின் சில்கள், ஏனைய யாவற்றிற்கும் கீழே உள்ளன.—Hipp. *Ref.* i. 6. (R. P. 20).

தீ நிறைந்த, அழுத்தமடைந்த காற்று வளையங்களே வான சோதிகள். குறிப்பிட்டவோர் இடத்தில் தொளைகளின் ஊடாக இவ் வளையங்கள் தீயைக் கக்குகின்றன.—Aet. ii. 13, 7 (R. P. 19 a).

பூமியைப் போல 28 மடங்கு பெரிய அளவான வோர் சில்லே சூரியன். தேர்ச்சக்கரத்தின் வெளிவளையம் போறையாயிருந் தாற் போலிருக்கும் இச்சில் தீ நிறைந்ததாய் இருக்கிறது. சில்லில் ஓரிடத்திலுள்ள வழியினூடாக, துருத்தியின் மூக்குக் கூடாகத் தோன்றுவது போலத் தீ தோன்றுகிறது.— Aet. ii. 20, I (R. P. 19 a).

சூரியன், பூமிக்குச் சமமான அளவினதே; ஆனுல் எந்தச் சில்லினுல் அது கொண்டு செல்லப்படுகிறதோ, எநதச் சில்லிலி ருந்து அது மூச்சு விடுகின்றதோ, அந்தச் சில் பூமியைப் போல 27 மடங்கு பெரியதாய் இருக்கிறது.—Aet. ii. 21, I.

தீயின் சுவாசத்தொளையின் வாயில் அடைபடும்போது சூரிய கிரகணம் உண்டாகிறது.—Aet. ii, 24, 2.

சந்திரன் பூமியைப் போலப் 19 மடங்கு பெரியதான வோர் சில்லென்க. சூரியனைப்போல இதுவும், தீ நிறைந்து, தேர்ச்சில்

1. டியல்சு எணணுவதுபோல (*Dox.* p. 560), இப்பகுதியிற் சில வரிகள் விட்டுப் போயிருக்க வேண்டுமெனவே நானும கொள்கிறேன். ஆயினும், சூரியன பற்றிய 27 எனும் எணணுடன் பொருந்தும் வகையில் சந்திரனது வட்டத்தை 19 எனது 18 ஆக மாற்றியுள்ளேன்.

லொன்றின் வெறுமையான வளையம் போலவும், சரிவாயுள் ளதாயும், துருத்தியினது மூக்கைப்போல ஒரு சுவாசத்தொளை யையுடையதாகவும் காணப்படுகிறது (சில் திரும்புவதனுலேயே சந்திரகிரகணங்கள் ஏற்படுகின்றன).— Aet. ii, 25, I.

சில்லின் தொளைவாய். அடைக்கப்பட்டபோது சந்திரகிரகணம் ஏற்பட்டது.—Aet. ii. 29, I.

(இடி, மின்னல் முதலிய) யாவும் காற்றின் அதிர்ச்சியினுல் ஏற்பட்டன. அடர்த்தியுடைய மேகமொன்றினுள்ளே அடைபட்டி ருக்கும் காற்று, அங்கிருந்து வெடித்துக்கொண்டு வேகத்துடன் வெளிவரும்போது, மேகம் கிழிகையில் ஏறபடும் ஓசையே இடி யெனக. கிழிந்த அவ்வெளி, மேகத்தின் கருமைக்கு அருகே காணபபடும்போது மின்னல் ஒளி போலத் தோன்றுகிறது.— Aet. iii. 3, I.

வளியின், மிகவும் நுண்ணியனவும், ஈரலிப்புடையனவுமான பகுதிகள், சூரியனுல உருக்கப்படுமபோதும், துழாவப்படும்போ தும் உண்டாகும் வளியோட்டமே காற்றென்க.—Aet. iii. 7, I.

வானசோதிகளினது சில்லுகளினது அளவுகளைக் குறிக்கத் தரப்பட்டிருக்கும் எண்கள் வேறுபடுவதைக காணலாம். 18, 27 எனும் எணகள் உட்சுற்று வடடதனினையும் 19, 28 எனும் எண்கள வெளிச சுற்றுவட்டத்தினையும் குறிக்கின்றன வெனவே தோனறுகிறதெனலாம். உடுக்களினதும் சிலவுகள் பூமியைப் போல ஒன்பது மடங்கு பெரியனவாய் இருந்தனவென நாம் ஊகிப்பதும் பொருத்தமேயெனலாம் ; ஏனெனில், 9, 18, 27 ஆகிய எண்கள் ஆதி அண்டவியற கொள்கைகளிற் பெரிதும் பயனபடுத்தப்படுவதை நாம் காணமுடிகிறது. தீச்சில்லுகள், பூரண வட்டங்களாக ஒருபோதும் எமக்குத் தோன்றுவதில்லை ; எனெனில் இவை தோன்றுவதறகுக் காரணமான ஆவி அல் லது பனி, தீய முற்றுகச் சூழ்ந்திருக்கும் ஓர் வளையமாக அதற்கு வெளியே அமைந்திருக்கிறது. இவ்வளையத்தின் புறச் சுற்றுவட்டத்தில் மட்டும் அமைந்திருக்கும் ஓர துவாரத்தினூ டாக மட்டுமே தீ வெளியே வரமுடிகிறது. இதுவே உண்மையில் நாம் காணும் வானசோதி. பால்வீதி மண்டலத்தைக் கண்ட தன் பின்னரே, வானசோதிகள் இவ்வாறு சில்லுகளாகவுள்ளன என்னும் கருத்து இவர்களுக்குத் தோன்றியிருக்கலாம். வளி யாலான இச்சில்லுகள், தம்முள்ளே யிருக்கும் தீயின் உதவி யினுல் தாமும் பிரகாசமடைவதற்குப் பதிலாக, அத்தீயையும் மறைக்குந் தன்மையுடையனவாதல் எவ்வாறு எனின், கிரேக்கர் களால் " வளி " யென அக்காலத்து அழைக்கப்பட்ட பொருளி னது பண்பு அஃதேயென்க. உதாரணமாக ஓமரது காவியங்களி

லொன்றில் வரும் தலைவனொருவன், "வளி" யினூற் சூழப் படுவதன் மூலம் கண்ணுக்குத் தெரியாதவனுக்கப்படும்போது, அவனுக்கூடாக மட்டுமன்றி அவ்வளிப்போர்வையினூடாகவும் எம்மாற் பார்க்க முடிகிறது[1]. வானசோதிகளின் தோற்றம விளக்கப்படும் விதத்திலேயே, மின்னலும் விளக்கப்படுகின்றது என்பதும் கவனிக்கற்பாலது. அமுக்கமடைந்த காற்றினூடாக—புயல் மூகில்களுக்கூடாக—தீ வெளிப்படுவதனூலேற்படுவதெனவே மின்னலும் விளக்கப்படுகிறது. உண்மையில் அனக்சிமாந்தரது கொள்கை இதிலிருந்தே ஆரம்பித்திருக்க வேண்டும்—அதாவது வானசோதிகள் பற்றிய விளகததை யொட்டி மின்னல் பற்றிய விளக்கந் தரப்பட்டது என்பதிலும், மின்னல் பற்றிய விளக்கதனதைத் தொடர்ந்து வானசோதிகளும் அவ்வாறே விளக்கப் பட்டன எனக் கொள்வதே சரியெனக. மேலும் அக்காலத்தே வானியல், வளிமண்டலவியல் என்பன வெவ்வேறுக ஆராயப் படவில்லையெனபதையும்[2], வளையங்கள் அல்லது சில்லுகள் பற் றிய கொள்கை சுழி பறறிய கருததிலிருநது இயல்பாகத் தோன் றியதே என்பதையும் ஈண்டு நீனைவுகூர்தல் நலம்.

தியோபிறசுத்தோசுவின் ஆதாரததோடு நாம் இதுவரை அனுமானித்தவை சரியெனத் தோன்றுகிறது ; அது உணமை யாயின, மேலும் சில அனுமானஙகளையும் பெறுவது தவிர்க்க முடியாததெனலாம். முதலாவதாக வானம் என்பது, திண்மப் பொருளாலானவோர் கூரைபோன்ற வொன்று எனும் கருத்தி லிருநது அனக்சிமாந்தர் தன்னை முற்றுக விடுவித்துக் கொண் டிருந்தார. ஆகவே வானத்திற்கு அப்பாலுள்ள வரம்பற்ற பொருளை நாம் காண்பதைத் தடைசெயய எதுவும் இல்லை. அனக்சிமாந்தர் இவ்வாறு தன்னுல், வரம்பற்றதைப் பார்க்க முடிந்தது எனவே எண்ணினர் எனக கருத இடமுண்டு. பழைய அண்டவியற் கொள்கை கைவிடப்பட்டு அதற்குப் பதி லாக எண்ணிறந்த சுழிகளும் வரம்பற்ற பொருட்டொகுதியும் கொண்டதும் நீரெனவோ அல்லது தீயெனவோ குறிபபிட்டுக் கூறப்பட முடியாததுமானவோர் அணடம் பற்றிய உன்னத கற்பனை எழுந்துள்ளது. இத்தகைய ஓர் அமைப்பில், நாம் முன்பு நிலையான உடுக்கள் எனக் கருதியவையும், "எண்ணி றந்த உலகங்கள்" எனப்படுவனவற்றுள் அடஙகுவனவே என் னும் கருத்தைத் தவிர்க்க முடியாது. மேலும், எண்ணிறந்

1. இது அததனை புதுமையானவோர் கருததலல. கடலிலுள்ளவோர தீவு அலலது சிறு குன்று பனியினுல் மூடப்படும்போது, அது முற்றுக மறைந்து அதறகு அப்பாலுள்ள வானமும் எமகுத் தெரிவது பேசற் றேனறுகிறது.

2. 30 ஆம் பக்கத்தில் காண்க.

தனவான இவ்வுலகங்கள் " தெய்வங்கள் " எனவும் கொள் ளப்படுகின்றன. பொதுவான நாளாந்தச சுழற்சியென்பது தோற் றவளவில் உள்ளதேயொழிய உண்மையாக நடைபெறுவதொன றல்ல வென்பது பெறப்படும் ; ஏனெனில் எல்லா உடுக்களுக்கும் எமக்குமிடையே யுள்ள இடைவெளிகள் சமமான தூரமுள்ள னவல்லவாதலால், இவை யாவற்றுக்கும் பொதுவானவோர் இயக்கம இருக்க முடியாது. ஆகவே இச்சுழற்சித் தோற்றம், இருபத்திநான்கு மணித்தியாலங்களில உருளை வடிவானபூமி சுழல்வதினால் எற்படுவதாயிருத்தல் வேண்டும். சுழியின் இயக் கததில பூமியும் சேரந்து கொண்டதெனவும் எமக்கு உணர்த் தப்பட்டது. இது பூமிக்கும் சந்திரனுக்குமிடையேயுள்ள உடுக் களினது சில்லுப்பற்றிய பிரச்சினையை விலகுகிறதெனலாம்; ஏனெனில் நிலையான உடுக்களை ஒருபோதும் சில்லுகளின் உதவி யோடு மாத்திரம் விளகக முடியாது ; கோள வடிவத்தின் மூலமே அவற்றை விளக்குதல் கூடும. அப்படியாயின், இவ்வுள் வட்டதினுல விளககப்படும் உடுகளினது உண்மையான தனமை எனன ? விடிவெளளி, அந்திவெள்ளி என்பனவே இவை யென எனக்குத் தோன்றுகிறது—இவ்விரண்டும் உண்மையில் ஒன்றேயென இக்காலத்து உணரப்படவில்லையென நாம் அறி வோம். அதாவது, நிலையான உடுக்கள், ஓரிடதிலிருந்து கொண்டே, தத்தம் சுழிகளிற் சுழல்கின்றன என நான் கருது கிறேன். ஆனால் இவ்வாறு கொள்வதனால், சூரியன் சந்திரன் என்பனவற்றைப் பற்றி ஓர் பிரச்சினை உண்டாகிறது என்பதில் ஐயமில்லை. சுழியின் இயல்பை நோக்கும்போது, சூரிய சந்திரர் களும் பூமி சுழலும் திசையிலேயே சுழல வேண்டுமென்பது பெறப்படுகின்றது. மேலும் நாம் தற்போது ஏற்றுக்கொண்ட கருதுகோளின்படி, இச்சுழற்சி மேற்கிலிருந்து கிழக்கே செலவ தாகவும், பூமியினது சுழற்சியிலும் வேகம் குறைந்ததாகவும் இருத்தல் வேணடும். ஆனால், ஓர் சுழியின் சுற்றுவட்டத்திலி ருப்பவை, அதன் மத்தியிலிருப்பனவற்றை விட வேகமாக இயங் கும் எனும் உண்மையோடு இது முரண் படுவதாகும். ஆனால், தெமொகிரித்தோசுவின் காலம்வரை வாழ்ந்த அயோனிய அண்டவியல் வாதிகள் யாவருமே இப்பிரச்சினைக்கு முடிவு காண முடியாதிருந்தனர். சுழற்சி முழுவதும் ஒரு திசையி லேயே நடைபெறுகிறதென அவர்கள் கருதினர்களாகையால், நாம் எவற்றை மிகவும் வேகமாக இயங்குகின்றன எனக் கூறுகி றோமோ அவையே மிகவும் வேகங குறைந்தவை எனக் கூற வேண்டியிருந்தது. உதாரணமாக, சூரியனளவு வேகமாகச் சந்தி ரன் இயங்கவில்லை ; சந்திரனது இயக்கத்தினிலும், சூரியனது

இயக்கமே, உடுக்களின் இயக்கத்தின் வேகதிற்குச் சமமானது[1]. இபபிரச்சினை பற்றி முதன் முதலிற சிந்தித்தவர் அனக்சிமாந்தரே என்பதை நாம் நினைவிற் கொண்டோமாயின், இதனை அவர் நன்கு அவதானிக்கவில்லை என்பது எமக்கு வியப்பை ஏற்படுத்தாது. சுழியின் மத்தி அதன் சுற்றுவட்டத்திலும் குறைந்த வேகத்திலேயே இயங்குகிறது என்பது உடனடியாகத் தெளிவாவதில்லை. பூமியினது நாளாந்த இயக்கத்திற்கு எதிரான திசையிற் செல்லும் புறம்பானவோர் இயக்கம் வான சோதிகளுடையது எனும் கொள்கை தோன்றியதற்கான காரணமும், இதிலிருந்து புலனாகிறது. இக்கொள்கை பைதாகரசுவினது எனக் கொள்வதற்கு நியாயங்களுள வென நாம காண்போம (பிரிவு 54).

விலங்குகள்

22. உலகினது இயல்பு பறறிய, அனக்சிமாந்தரது கற்பனைகள், உண்மையில் மிகவும் துணிச்சலானவையே என்பது நாம் இதுவரை கண்டவற்றிலிருந்து புலனாகும். ஆனால், உயிருள்ளன வறறின் தோற்றம் பற்றி அவர் தந்துள்ள விளக்கம் நாம் இதுவரை பார்த்த அவரது கருத்துக்கள் யாவற்றையும் மிஞ்சி விடுகிறது எனலாம். தியோபிறசுத்தோசு இக்கொள்கை பற்றி விவரிததவை யாவும், தொகுப்பாசிரியர்களின் மூலம் எமக்குக் கிடைத்துள்ளன :

ஈரலிப்புடைய பகுதி, சூரிய வெப்பத்தினால் ஆவியாக்கப்பட்ட போது, அதிலிருந்து உயிருள்ள பிராணிகள் தோன்றின. – **Hipp. *Ref.* i. 6 (R. P. 22 a).**

முதலிற் றோன்றிய மிருகங்கள் ஈரலிப்பிலேயே உருவாகப் பட்டன. அவை ஒவ்வொனறும் முட்களையுடைய பட்டை போன்ற வெளித்தோலால் மூடப்பட்டிருந்தன. அவை வயதில் முதிர்ச்சியடைந்தபோது, வறட்சி கூடிய பகுதிகளை நோக்கிச் சென்றன. பட்டை உடைந்து போனதனபின் சிறிது காலத்திற்கு அவை உயிரோடு வாழ்ந்தன. – **Aet. v. 19, 4 (R. P. 22).**

முதலில் மனிதன் வேறோர் இனத்தைச் சேர்ந்த மிருகத்திலிருந்தே பிறந்தான் எனவும் அவர் கூறுகிறார். மற்றைய மிருகங்கள் பிறந்து சிறிது காலஞ் செல்வதற்குள்ளாகவே தமககு வேண்டிய உணவைத் தாமே தேடக்கூடியனவாக இருக்கையில், மனிதன் மட்டுமே நீண்ட காலத்திற்குத் தாய்ப்பாலுண்பவனாக வாழ்கிறான். ஆகவே, இவன் இப்போதிருப்பது போலவே, ஆரம்பத்திலும் இருந்திருப்பானகில், மனித இனம் அழிந்து பட்டிருக்கும் எனலாம். – **Ps. – Plut. *Strom.* fr. 2 (R. P. *ib.*).**

1. **Lucretius, v. 619 Sqq.**

முதலில் மனிதர்கள் மீன்களின் உடல்களினுள்ளேயே தோன்றினரெனலாம்; சுறுக்களைப் போலச் சிறிதுகாலம் வளர்ந்ததன் பின்னர், இவர்கள் தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளும் திறன் பெற்றதால் கரையில் விடப்பட்டனர். அப்போதிருந்து இவர்கள் தரையில் வாழ ஆரம்பித்தனர். – Plut. *Symp. Quaest.* 730 f (R. P. ib.).

இக்கூற்றுக்களின் முக்கியத்துவத்தைச் சிலர் போதியளவு உணராதிருந்துளளனர்; சிலர் அதனை மிகைப்படுத்திக் கூறியுளளனர். அனக்சிமாந்தர், இடாவினது முன்னோடியெனக் கொள்ளப்படக்கூடியவா எனச் சிலரும், இக்கூற்றுக்கள் யாவும் பழைய புராணக்கதைகளின் எச்சங்களேயென வேறு சிலரும் கூறியுள்ளனர். ஆகையாறறுன, வெறுமனே சில கூற்றுக்கள் மட்டுமல்லாது அவை என்ன அடிப்படையிற் கூறப்பட்டன என்பது பற்றிய குறிப்பும் இங்கு எமக்குக் கிடைத்துள்ளது என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும். பரிணும வளர்ச்சியினபோது நடைபெறும் சூழ்நிலைகளிசைவான மாற்றம், தகுதி மிக்கவற்றின நிலைபேறு என்பன பற்றியும், ஆதி விலங்குகள் உயர்நிலை விலங்குகளாக இருந்திருக்க முடியாதென்பதையும், அனக்சிமாந்தா அறிந்திருந்தார் என்பது இக்கூற்றுக்களிலிருந்து நன்கு புலனுகிறது. ஆதி விலங்கு வகைகள் கடலிலேயே வாழ்ந்திருக்க வேண்டுமென அவர் கருதினர்; அங்கு வாழ்வனவான மீன்களே மூலையூட்டி இனத்திற்கு மிகவும் ஒப்பானவையென அவர் கண்டார். கலியசு லெவிசு (Galeus levis) எனும் சுறுமீன்வகையைப் பற்றி அரித்தோதில் கூறியவை, பிற்கால உயிரியலாளர் தருவனவற்றினும் செம்மையான விவரங்கள் என யொகானசு மூலலர் எனபார் எடுத்துக்காட்டியுள்ளார். ஆனல் அரித்தோதில் அறிந்திருந்த இவ்வுயிரியல் விடயங்களை அனக்சிமாந்தரும் அவதானித்திருந்தார் என நாம் அறிவோம். சுறு மீன தனது குட்டிகளுக்கு உணவூட்டும் முறையைக் கொண்டு ஆதி விலங்குகள் உயிரோடு பிழைத்தலை எவ்வாறு என்பதை விளக்குதல் சாத்தியமாயிற்று.

III. அனக்சிமினிசு

23. இயூறிதிறுத்தோசுவின் மகனும் மிலட்டசுவைச் சேர்ந்த வனுமான அனக்சிமினிசு, அனக்சிமாந்தரது சிந்தனை முறையைத் தழுவியவன் எனத் தியோபிறசுத்தோசு கூறுகிறார்[1]. சாடியசு நகரத்தின் வீழ்ச்சிக் காலத்தே (கி.மு. 546–5) அவர் வாழ்க்கை

1. Theophr. *Phys. op.* fr. 2. (R. P. 26).

''சிறப்பொடு விளங்கினை''ரெனவும், 63 வது ஒலிம்பிய ஆண்டில் (528–525 கி.மு.) அவர் காலமாகினரெனவும் அப்பொலோடரசு கூறினரெனத் தோன்றுகிறது. அதாவது, தேலிசு சிறப்பொடு விளங்கிய காலத்தே இவர் பிறந்து, தேலிசு இறந்த காலத்தே சிறப்பொடு விளங்கினரென்க. இதிலிருந்து இவரது காலம் பற்றி அப்பொலோடரசுவும் திட்டவட்டமாக எதுவும் அறிந்திருக்கவில்லை எனபது புலனாகிறது. அறுபத்தி மூனறாது ஒலிம்பிய ஆண்டில் அனகசிமினிசு இறந்தார் எனின, மைலீசிய மரபு மூன்று தலைமுறைகளாக கொண்டிருந்தது எனபதோடு அது நன்கு பொருந்தும் என்பதாலேயே அப்பொலோடரசு அவ்வாறு கூறியிருக்க வேண்டும.[1] எனவே, இவா அனக்சிமாந்தரினும் இளையவர் என்பதைத் தவிர, இவரது காலம் பற்றி வேறு எதுவும் திட்டவட்டமாகக் கூற முடியாது.

அவரது நூல்

24. அனக்சிமினிசு எழுதிய நூல், இலக்கிய நலனுய்வுக்காலத்திலும் பேணப்பட்டிருந்தது; அவரது நூல எளிய, ஆடம்பரமற்ற அயோனிய நடையிலெழுதப்பட்டிருந்ததெனக் கூறப்பட்டிருக்கிறது[2]. அனக்சிமாந்தரது உரைச்செயுள போனற நடையிலிருந்து இது மிகவும் வேறுபட்டதாயிருந்திருக்க வேண்டுமென நாம் எணணலாம்[3]. பலதிறப்பட்ட விடயங்கள பற்றி மிகவும் துணிச்சலான கறபனைகளைச் செய்தார எனபதே அனக்சிமாந்தரது மெய்யியன் முறையின் சிறபபாகவிருந்தது. ஆனல் அனக்சிமினிசுவின் கருத்துக்கள் இதற்கு நேர் எதிரான பண்பு படைத்தவை. தனது முன்னோடியின் கொளகைகளில மிகவும் தீவிரமானவற்றை விலக்கியுளள அனக்சிமினிசு, மிகவும் நிதானமாகவே தமது மெய்யியல் முறையை அமைத்துளளார். இதன் பயனக, இவரது கொள்கைகள், அனகசிமாந்தரினது கொள்கைகளினளவுக்கு உண்மையுடையனபோலத் தோன்ற விடினும், இலகுவில் விலக்கப்பட வியலாத அநேக கருததுக்களையுடையனவாகக் காணப்படுகினறன.

மூலப் பதார்த்தம் பற்றிய கொள்கை

25. மெய்யியலாளர் சிலர் பறறித தியோபிறசுத்தோசு தனிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்[4]. அனக்சிமினிசுவும் அவர்களுள் ஒருவர். இவர்பற்றிய வரலாறு நம்பத்தகுந்த தெனபதற்கு

1. பைதாகரசு சிறப்பொடு விளங்கிய காலததோடு, தொடர்புபடுததவே "63 வது ஒலி ஆண்டு" எனக் குறிப்பிடபபட்டதென யாக்கொபி கூறுகிறார். ஆனல இது பொருத்தமற்றது போற றோனறுகிறது.

2. Diog. ii. 3 (R. P. 23).

3. பிரிவு 13 இல தரப்பட்டுள்ள, தியோபிறசுததோசுவின கூற்றுக்களோடு ஒப்பிடுக.

4. See *Dox.* p. 103.

இக்கட்டுரையும் ஆதாரமாக அமைகின்றது. இவரது கொள்கையின் முக்கியமான அம்சத்தைப் பற்றி விரிவாகக் கூறுவன பின் வரும் பகுதிகளே :

இயுறிதிருத்தோசுவின மகனும், மிலட்டசுவைச் சேர்ந்தவனும், அனக்சிமாந்தரது சிந்தனை முறையைத் தழுவியவனுமான அனக்சிமினிசு, தனது முன்னோடியைப் போலவே, அடிப்படைப் பதார்த்தமானது ஒன்றேயெனவும், அஃது எல்லையற்றதெனவும் கூறினன். ஆனால் அனக்சிமாந்தரைப்போல, அது விவரிக்க முடியாதது எனக் கூறாது, அது விவரிகக்கூடிய தேயென இவன் கூறினன்; அது வளியேயென இவன் கூறினன். – *Phys.* op. fr. 2 (R. P. 26).

இன்றுள்ளனவும், முனபிருந்தனவும், இனி இருக்கப்போவனவும, கடவுளரும் தெய்வீகப் பொருள்களும் அதிலிருந்தே தோன்றின. ஏனைய பொருள்கள் இவற்றின எச்சங்களிலிருந்து தோனறின. – **Hipp.** *Ref.* i. 7(R. P. 28).

" காற்றுகிய எமது ஆனமா எவ்வாறு எம்மைச் சிதறவிடாது வைத்திருகின்றதோ, அதுபோலவே, மூச்சும் காற்றும் முழு உலகையும் சூழ்ந்திருக்கினறன " என அவர் கூறினர். – **Aet. i. 3, 4 (R. P. 24).**

வளியினது வடிவம் பின்வருமாறு: அது சமசெறிவாகவுளள இடஙகளில், எமது கண்ணுககுத் தெரியாததாயிருக்கிறது; ஆனல், குளிர், சூடு, ஈரலிப்பு, இயக்கம் எனபன அதைக் கண்ணுக்குப் புலப்படகூடியதாக்குகின்றன. அது எப்போதும் இயஙகிக் கொண்டேயிருக்கிறது ; எனெனில் அது இயங்கவில்லையெனின இவ்வளவு மாறுபடாதென்க. – **Hipp.** *Ref.* i. 7 (R. P. 28).

வெவவேறு பொருட்களில், அடர்த்தியாகவும், ஐதாகவும் இருப்பதற்கேற்ப அது வேறுபட்ட தன்மைகளை அடைகிறது. – *Phys.* op. fr. 2 (R. P. 26).

ஐதாகும் வண்ணம் வளி விரிக்கப்படும்போது, அது தீயாகிறது; காறறுக்கள், அமுகுகப்பட்ட வளியினுலானவையே. காற்று, உரோமம் துணியாக்கப்படும்போது அழுத்தப்படுவதுபோல அழுத்தித் திரட்டப்படுவதனல் உண்டாவனவே மேகஙகள்; இம் மேகங்கள் மேலும் அழுத்தப்படும்போது நீர் உண்டாகிறது. நீர் மேலும் அழுத்தமடைந்து மண்ணுகிறது. அது மேலும் சாத்தியமானவரையில் அழுத்தமடைந்ததன பினனர் கற்களாக மாறுகிறது – **Hipp.** *Ref.* i. 7(R. P. 28).

ஐதாதலும் அடர்த்தியுறலும்

26. முதலிற் பார்க்கும்போது, இது அனக்சிமாந்தரது பண்பட்ட கொள்கையிலும் பிற்போக்கான ஒன்றுகத் தோன்றுகிறது ; ஆனால் உண்மை அவ்வாறல்ல. உண்மையில், ஐதாதல், அடர்த்தியுறல் எனபனவற்றைப் புகுத்துவதன் மூலம் அனக்சிமினிசு புதியவோர் முன்னேற்றத்தைக் கொணர்ந்துள்ளார். உண்மையில், இக்கருத்துக்கள் புகுத்தப்பட்டதனமூலம் மைலீசிய அண்டவியல் முதனமுறையாக இசைவுடைய வொனறுகியுள்ள தெனலாம் ; ஏனெனில், எல்லாப் பொருட்களும் ஒரு பதார்த்தத்தின் மாறுபாடுகளே எனக் கூறும் கொள்கை, அமமாறுபாடுகள் யாவும் பௌதீக வேறுபாடுகளே யெனக்கூறுதல் தவிர்க்க முடியாததென்க. மூலப்பதார்த்தத்தின ஒருமையை நிறுவுதறகான ஒரேவழி, உலகிலுள்ள வேறுபாடுகள் அனைத்தும் மூலப்பதார்த்தம் வெவ்வேறு அளவுகளிற் காணப்படுவதாலேயே எறபடுகின்றன எனலேயாகும். இக்கருத்து எற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், அரித்தோதில் கூறியவாறு, மூலப்பதார்த்தம் என்பது " மூலகங்களுக்குப்புறம்பான " ஒரு பொருள் என்று கூறுதல் அவசியமற்றதாகிறது; அது அவற்றுள் ஒனறே எனக் கூறுவதும் எற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாகிறது.

வளி

27. " வளி " யென்னும்போது நாம் கருதாத பலவற்றையும் அனக்சிமினிசு அப்பெயரின் கருத்துக்குறிப்பில் உட்படுத்து கிறார். சாதாரண நிலையில், சமசெறிவுடையதாக விருக்கும்போது, அது கண்ணுக்குத் தெரியாததாக விருக்கிறது. இதுவே நாம் " வளி " யெனனும்போது கருதுவதாகும் ; அதுவே நாம் உள்ளிழுக்கும் மூச்சும், காற்றென வீசுவதும் ஆகும். அதே நேரத்தில் பனி அல்லது ஆவி யென்பது அடர்த்தியுற்ற காற்றே யென்னும் பழைய கருத்தும் எவ்வித ஆராய்வுமில்லாது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நாம் வளியென அழைப்பது, ஓர் தனிப் பொருளேயெனவும் அஃது ஆவியோ அல்லது வெற்றிடமோ அல்லவெனவும் முதன் முதலிற் கண்டுபிடித்தவர் எம்பிடோக்கிளிசேயென நாம் காண்போம். முந்திய அண்டவியலாளர், யாவரும் வளியெனபது ஒரு வகை ஆவியெனவே கருதினர் ; இருளும் ஒருவகை வளியெனவே கருதப்பட்டது. இருள் எனபது நிழலே யெனக் காட்டி இதனையும் தெளிவுபடுத்தியவர் எம்பிடோக்கிளிசுவே.

வளியே மூலப் பதார்த்தம் என அனக்சிமினிசு முடிவு செய்தது இயல்பானதே ; ஏனெனில் அனக்சிமாந்தரது, அண்டவியல் முறையில, தீவளையம், அதற்குள்ளேயுள்ள குளிர்ந்த ஈரலிப்புடைய பொருள் என்னும் இரு அடிப்படை முரண்பாடுகளுக்கும் இடைப்படாதவோர் நிலை, வளிக்கு அளிக்கப்பட்டது (பிரிவு 19). வளி ஐதாகியபோது சூடாகிய தெனவும்,

அடர்த்தியுற்றபோது குளிரடைந்ததனவும் அனக்சிமினிசு கருதினரென நாம் புளுட்டாக்கின மூலமாக அறிகிறோம். இதை உறுதி செய்வதற்கு அவர் ஓர் விநோதமான பரிசோதனையைக் கையாண்டார். நாம் எம்முடைய வாயைத் திறந்துகொண்டு சுவாசிக்கும்போது, மூச்சு சூடாகக காணப்படுகிறது ; எமது உதடுகள் மூடப்பட்டிருக்கும்போது, மூச்சு குளிராகவிருக்கிறது.

28. இவ்வாதம், அனக்சிமினிசுவின் கொள்கையின் ஓர் உலகு சுவாசிக்கிறது முக்கியமான அம்சத்திற்கு எம்மை இட்டுச் செல்கிறது. இது எமக்குக் கிடைத்துளள ஒரே பகுதியினூலும் உறுதிப்படுத்தப் படுகிறது[1]. "காற்றுகிய எமது ஆத்மா எவ்வாறு எம்மைச் சிதற விடாது வைத்திருக்கிறதோ அதுபோலவே மூச்சும் காற்றும் முழு உலகையும் சூழ்ந்திருக்கினறன." மூலபபதார்த்தம், மனித வாழ்வோடு எத்தகைய தொடர்பையுடைய தாயிருக்கிறதோ, அதே தொடர்பு அதற்கும் உலகினது வாழ்வுக்கு மிடையே நிலவுகிறது. இதுவே பைதாகரசுவின கருத்துமென்க[2]. அன்றியும் பிண்டத்திலிருந்து அண்டத்திற்குத் தொடரும் வாதம முதன முதலிற் காணபபடுவது இங்கேயே. இவ்வாறு, உடற்றொழிலியல் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஆர்வம ஏற்படுவதற்கும் இதுவே ஆரம்பம்.

29. உலகமும் அதன் பாகங்களும் எவ்வாறு தோனறின உலகின வென்பது பற்றித தொகுப்பாசிரியர்கள் மூலம் கிடைக்கும் பாகங்கள் வரலாற்றினை நாம் இப்போது பார்ப்போம் :

வளி திரட்டப்பட்டபோது, பூமி முதலில் உண்டாகியது என அவர் கூறுகிறார். அது மிகவும் விசாலமாயிருக்கிறது. காற்று அதனைத் தாங்குகிறது – Ps.– Plut. *Strom.* fr. 3 (R. P. 25)

இதுபோலவே, தீயின இயல்பினையுடையனவான சூரியனும் சந்திரனும் ஏனைய வானசோதிகளும், விசாலமானவையாயிருப்பதனால், காற்றினாற் றாக்கப்படுகினறன. பூமியிலிருந்து ஈரலிப்பு எழுவதன்மூலம், வானசோதிகள் பூமியிலிருந்து உண்டாக்கப்படுகினறன. பூமியிலிருந்து எழும் ஈரலிப்பு, ஐதாகும்போது, தீ உண்டாகிறது. அவ்வாறு மேலெழும் தீயிலிருந்து உண்டாவனவே உடுக்கள். உடுக்களிருக்கும் இடத்தில், நிலப்பதார்த்தத்தினாலான பொருள்களும் உடுக்களோடு சுழன்று கொண்டிருக்கின்றன. மேலும், பிறர் கருதுவதுபோல, வானசோதிகள் ஒருபோதும் பூமியின் அடிப்பாகத்தின் வழியே செல்வதில்லை யெனவும், எமது தலையைச் சுற்றித் தொப்பியொன்று எவ்வாறு சுழலக்கூடுமோ அவ்வாறே அவை

1. Aet. i. 3, 4 (R. P. 24).
2. அத். II. 53 ஆம் பிரிவிற் காண்க.

பூமிக்கு மேலே மட்டும் அதனைச் சுற்றி இயங்குகின்றன வென வும் அவர் கூறினர். சூரியன் எமது கண்ணுக்குத் தெரியாது மறைவது, பூமியின் உயர்ந்த பகுதிகளினால் அது மறைக்கப் படுவதனாலும், எம்மிடமிருந்து அதிக தூரத்திற் கப்பால் அது சென்று விடுவதாலுமே யொழிய, பூமியின் அடியே சென்று விடுவதனாலல்ல. உடுக்கள் எம்மிலிருந்து அதிக தூரத்திலிருக் கின்றபடியால் அவற்றின் வெயபத்தை நாம் உணர்வதில்லை.— **Hipp.** *Ref.* **i. 7, 4–6 (R. P. 28).**

வளி அடர்த்தியுற்று இயக்கப்படுவதன் மூலம் வேகமாக ஓடும் போது காற்றுக்கள் உண்டாகின்றன ; ஆனால் அது மேலும் அடர்த்தியுற்றுத் தடிக்கும்போது முகில்கள் உண்டாகினறன ; கடைசியாக அது நீராகிறது. –**Hipp.** *Ref.* **i. 7, 7(** *Dox.* **p. 561).**

உடுக்கள் (வானத்தின படிகத்தாலான முகட்டில் ஆணிகளைப் போலப் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சிலரது கூற்றுப்படி, அவை) ஓவியங்கள் போன்ற தீயினாலான இலைகளென்க. – **Aet. ii. 14, 3 (***Dox.* **p. 344).**

அவை பூமிக்கு அடியே செல்வதில்லை, ஆனால் அதைச் சுற்றி இயங்குகின்றன. –**Ib. l6, 6 (***Dox.* **p. 348).**

சூரியன தீயுடைத்து. –**Ib. 20, 2 (***Dox.* **p. 348).**

அது இலையைப் போன்று விசாலமாயிருகிறது. –**Ib. 22, I (***Dox.* **p. 352).**

அழுத்தமடைந்த காற்றினால் தடைசெய்யப்படுவதால், வான சோதிகள் தமது கதியை மாறறித் திருமபிச் செல்கின்றன. – **Ib. 23, I (***Dox.* **p. 352).**

சந்திரன் தியுடையது. –**Ib. 25, 2 (***Dox.* **p. 356).**

கடல், துடுப்புக்களினாற் பிரிக்கப்படும்போது ஒளிர்வதை உதா ரணமாகக் காட்டி, அனக்சிமாந்தரைப்போலவே அனக்சிமினிசு வும் மினனல் ஏற்படுவதற்கு விளக்கம் தநதார். –**Ib. iii. 3, 2 (***Dox.* **p. 368).**

நீர், விழும்போது உறைவதனால் பனிக்கட்டிகள் உண்டாகின றன ; பனி, நீரிற் சிறிது காறறு அடைபட்டிருப்பதனால் உண்டா கிறது. –**Aet. iii. 4, I (***Dox.* **p. 370).**

அடாத்தியான தடித்த வளியில், சூரியனது கதிர்கள் வீழ் வதனால் வானவில் தோன்றுகிறது. அதனாற்றான், அதனது மேற்பகுதி சூரியனது கதிர்களாற் சுடப்பட்டுச் செம்மையாகக் காணப்படுகிறது. ஈரலிப்பு மிகுதியினால், மற்றப் பகுதி இருளு டையதாகவிருக்கிறது. இரவில், சந்திரனால் வானவில எற்படு கிறது. ஆனால் எப்போதும் முழுச் சந்திரன் இருப்ப தில்லையா

தலாலும், சந்திர வெளிச்சம் சூரிய வெளிச்சத்திலும் குறைந்த தாதலாலும், இரவில் அதிகம் வானவில் ஏற்படுவதில்லை.—*Schol. Arat*[1]. (*Dox.* p,. 231).

பூமி உருவத்தில் மேசையைப் போன்றதாயிருந்தது.—**Aet. iii. 10., 3** (*Dox.* p. 377).

கடும் கோடையினாலும் கடும் மழையினாலும் ஏற்படும் வறட்சியும் ஈரலிப்புமே பூமியதிர்ச்சி ஏறபடுவதற்குக் காரணம்.—**Ib. 15, 3** (*Dox.* p 379).

மூலப் பதார்த்தம் பற்றியவோர் விளக்கம் தருவதில், அனக்சிமாந்தரைப் பின்பற்றாது பினனோக்கிச் சென்று, தேலிசுவினதைப் போன்றவோர் கொள்கையை அனக்சிமினிசு தழுவியது முற்றிலும் சரியானதேயெனக் கண்டோம். ஆனால் இதனாற் சில தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய தவறுகள் ஏற்படுகின்றன. பூமியானது, காற்றினில் மிதக்கும், மேசை வடிவமான தட்டு எனும் கற்பனை மீண்டும் தரப்படுகிறது. சூரியன், சந்திரன், உடுக்கள் என்பனவும் "இலைகளைப் போல"க் காற்றினில் மிதக்கும் தீத்தட்டுக்கள் எனக் கூறப்படுகிறது; "சுழி" பற்றிய கற்பனையிலிருந்து, இவ்விளக்கமும் இயல்பாகத் தோன்றுகிறதெனலாம். அனகசிமாந்தர் கருதியதுபோல, இரவில் சூரியன் பூமிக்கு அடியே செல்லவில்லை யென்பதும், தொப்பியொனறைப் போலவோ அல்லது திரிகைக் கல்லைப்[2] போலவோ, பக்கவாட்டாகவே வானசோதிகள் வட்டமாகச் சுழல்கினறன என்பதும் இதிலிருந்தே பெறப்படுகின்றன. பூமியின் வடபாகங்கள் உயர்ந்திருப்பதனால், வானசோதிகள் கண்ணுக்குத் தெரியாது மறைக்கப்படுதல் சாத்தியமெனும் இக்கொள்கை பற்றி அரித்தோதிலும் தனது **வளிமண்டலவியல்** நூலிற் குறிப்பிட்டிருக்கிறார்[3]. வட துருவ வட்டத்திற்கு வெளியேயிருக்கும் உடுக்கள் தோன்றுவதும் மறைவதும் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை விளக்குவதற்கே அரித்தோதில் இக்கருத்தினைக் குறிப்பிட்டுள்ளார். உலகு ஒரு தளத்திலேயே சுழல்கிறது என்பதை மனதிற் கொண்டோமாயின் இவ்விளக்கம்

1. தியோபிறசுத்தோசுவை அறிநதிருந்தவரான பொசெய்தோனியோசுவே இதற்கு ஆதாரமென்க.

2. சக்கரம் போலன்றி, திரிகைக்கல்லைப் போல ஏற்படும் சுழற்சியினை நம்புவோர் பற்றித் தியொடொறெற்றுவும் (iv, 16) கூறியுளளார். இவ்வுவமைகள முறையே அனக்சிமாந்தர், அனக்சிமினிசு எனபோராற் கையாளப்பட்டன என டியல்சுவும் (*Dox.* p. 46) கூறியுள்ளார். இக்குறிப்புக்கள் ஈத்தியோசுவிடமிருநதே எமக்குக் கிடைத்துள்ளன.

3. B, I. 354 a 28 (R. P. 28 c).

போதுமானதே. ஆனால் அண்டம் கோளவடிவானது என்னும் கொள்கையோடு இக்கருத்து முரண்பட்டது.

கிரகங்களைச் சுற்றி நிலப்பதார்த்தத்தாலான பொருட்களும் சுழல்கின்றன என்பது, சந்திரனின் வளர்ச்சி, தேய்வு, கிரகணங்கள் என்பனவற்றை விளக்குவதற்காகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்[1].

எண்ணிறந்த உலகங்கள்

30. அனக்சிமாந்தர் குறிப்பிட்ட எண்ணிறந்த உலகக் கொள்கையில் எத்தகைய சிக்கல் காணப்பட்டதோ அத்தகைய சிக்கல் அனக்சிமினிசுவின கொள்கையிலும் இருக்கும் என்பது எதிர் பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் அனக்சிமினிசுவின் கொள்கை பற்றிக் கிடைத்துள்ள ஆதாரங்கள், முனனவர் பற்றியுள்ள வைபோல் அத்தனை திருப்திகரமானவையல்ல. அனக்சிமினிசு வளியை ஓர் தெய்வமெனவும், இது காலத்தே உண்டாகிய தெனவும் கருதினரென சிசரோ கூறுகிறார்[2]. இக்கூற்றுச் சரியானதாகவிருகக முடியாது. மூலப்பதார்ததம் என்னுமளவில் வளி நிததியமான தெனக் கருதப்படல் முறையே. வரம்பற்றதைத் தெய்வீகமானதென அனக்சிமாந்தர் கூறியதைப் போன்று அனக்சிமினிசுவும் வளி தெய்வீகமான தெனக் கருதியிருக்கலாம்; ஆனால் ஆகி, அழிந்த பல தேவர்கள் பற்றியும் அனக்சிமினிசு குறிப்பிட்டிருக்கிறார். இத் தேவர்கள் வளியிலிருநதே தோனறினர் என அவர் கூறியுள்ளார். அவர் இவ்வாறு கருதினரென்பது, இப்பொலூடசு,[3] செயின்ட் ஒகத்தீன எனபோராலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தேவர்களும் அனக்சிமாந்தர் குறிப்பிடும் தேவர்கள் போலவே விளக்கப்படவேண்டியவர்கள் என்றே கொள்ள வேண்டும். உண்மையில் சிம்பிளிசியசு வேறோர் கருத்தைத் தருகிறார்; ஆனால் அவர் சுதோய்க்க ஆதாரங்களைத் தவறுக எற்றுக் கொண்டார் எனலாம்.[4]

1. முற்றுக இவைபோனற பொருட்கள் பற்றி அனக்சகோரசும் கூறினர். அத். VI. பிரிவு 135 இல பார்க்கவும். மேலும் அத. VII. பிரிவு 151 இல் பாாகவும். Tannery, *Science hellene* இலும் காணக.

2. Cic. *De nat* d. i. 26 (R. P. 28 b).

3. Hipp. *Ref.* i. 7, 1. (R. P. 28).

4. Simple. *Phys.* p. 1121, 12 (R. P. 28 a). சிம்பிளிசியசுவினது இககூற்றையும் விட பிளாகஇட்டாவில இதுபற்றியுள்ள பகுதி நம்பதகுந்ததென்க. இஙகும், ஒனறன பின் ஒனறுகப் பல உலகங்கள தோன்றினவென அனக்சிமினிசு, எரக்ளீட்டசு, இடையோசினிசு எனபோரே கருதினர் எனக் கூறப்பட்டுள்ளது. சுதோய்கக கொளகைபற்றி அத். III. பிரிவு 78 இல காண்க. இடையோசினிசு பறறி அத். X. பிரிவு 188 இல் காண்க.

அனகசி மினிசுவின் செல்வாக்கு

31. அக்காலத்தும், அதன்பின்னரும் பலகாலமாக, அனக்சிமாந்தரினும் அனக்சிமினிசுவே அதிக முக்கியத்துவமுடையவர் எனக் கருதப்பட்டதற்கான காரணம் எமக்கு எளிதில விளங்காதிருக்கலாம். ஆனால் அஃது உண்மையென்பது உறுதி. வான சோதிகள் பற்றிய வருணனையில், பைதாகரசு, அனக்சிமாந்தரையே பின்பற்றினாலும், உலகம் பற்றிய தமது பொதுக் கொள்கைக்கு அனக்சிமினிசுவுக்கே தாம் பெரிதும் கடமைப் பட்டிருந்ததாக அவர் எண்ணினார் (பிரிவு 53). மேலும் பிற் காலத்தில் மீண்டுமொருமுறை விஞ்ஞானக் கல்வி, அயோனியாவில் மறுமலர்ச்சியுற்றபோது, அனக்சிமினிசுவினது மெய்யியலையே அப்புதிய விஞ்ஞானம் தழுவிக் கொண்டது எனவும் நாம் காண்போம் (பிரிவு 122). அனக்சிமினிசுவின அடிப்படைக் கொள்கையை யொட்டிய பல கருத்துக்களை அனக்சகோரசுவும் (பிரிவு 135) அணுவாதிகளும் ஏற்றுக்கொண்டனர். அப்பொலோனியனை இடையோசினிசு, அனக்சிமாந்தரது கொள்கைகளையும் சேர்த்துக்கொள்ள முயன்றானெனினும், அனக்சிமாந்தரது அடிப்படைக் கொள்கையினையே ஏற்றுக்கொண்டு, வளியே மூலப்பதார்த்தம் எனக் கூறினன் (பிரிவு 188). இவற்றை யெல்லாம் நாம் பின்னர் கவனிப்போம்; ஆனால், தேலிசுவினால் ஆரம்பிக்கப்பட்ட சிந்தனை முறை அனக்சிமினிசுவோடு முடிவடைந்தது என்பதையும், "அனக்சிமினிசுவின் மெய்யியன்முறை" யென்பது எவ்வாறு மைலீசிய கொள்கை முழுவதையுமே குறிப்பிடலாயிற்று என்பதையும் இங்குகூறலாம். உண்மையில் இக்கொள்கை அனக்சிமினிசுவைத் தனது கடைசிப் பிரதிநிதிகளுட் சிறந்தவராகக் கொண்டவோர் கழகத்தினதே யென்பதாலும், அவரது சிந்தனை அம்மரபினரான அவரது முன்னோடிகளினது சிந்தனை முறைகளைப் பூரணப் படுத்தியது என்பதாலுமே, அனக்சிமினிசுவின் மெய்யியன் முறை இவ்வாறு முழு மைலீசிய சிந்தனையையும் குறிப்பிடுவதாகக் கருதப்படுகிறது. ஐதாதல், அடர்த்தியுறல் என்பன பற்றிய கொள்கை உண்மையில் மைலீசிய மெய்யியல் முறையைப் பூரணப்படுத்தியதென நாம் கண்டோம் (பிரிவு 26). இதை நன்கு உணர்தல், மைலீசிய அண்டவியலையும் அதற்குப்பின்னர் வந்த அண்டவியன் முறைகளையும் நன்கு விளங்கிக்கொள்வதற்கு உதவும். அடிப்படையில், அனக்சிமினிசு விலிருந்தே பிந்திய அண்டவியற் கொள்கைகள் ஆரம்பித்தனவெனலாம்.

அத்தியாயம் II

விஞ்ஞானமும் சமயமும்

அயோனியாவும் மேலை நாடுகளும

32. ஆசியாவில் வாழ்ந்த அயோனியர்களது உளப்பங்கு முற்றிலும் சமயச் சார்பற்றதாகவே இருந்ததென நாம் கண்டோம்; மேலும் நாம் அறிந்தவரையில் அயோனியர்கள் பழைய பரம்பரைக் கொள்கைகளை முற்றுக விலக்கினரெனலாம். மூலப் பதார்த்தம், எண்ணிறந்த உலகங்கள் என்பனவற்றைக் குறிப்பிடுவதற்கு அவர்கள் "தேவர்கள்" எனும் பதத்தைக் கையாண்டனராயினும் அப்பதத்திறகுச் சமயரீதியான கருத்துக் குறிப்பு எதுவும் இருக்கவில்லை.[1] ஆனால் அனட்டோலிய கரையோரப் பகுதிகளிற் குடியேற்றம் ஆரம்பிப்பதற்குப் பல காலத்திறகு முன்பிருந்தே அயோனியர்களது இருக்கையாக விளங்கிய ஈசிய தீவுகளிலோ நிலைமை வேறுக விருந்தது. அங்கு பண்டைய காலவாழ்வு முறையின் நினைவுகள் பல இன்னமும் அழியாதிருந்தன. இவ்வாறு நிலவிய பண்டைய வழக்குகள் யாவும் டீலோசுவிலேயே நிலவினபோற் காணப்படுகின்றன. டீலோசுவுக்கு அண்மையிலுள்ள தீவான சைரோசுவில் வாழ்ந்தவரான பெரிகைடிசு எழுதியுள்ளனவற்றை நோக்கும்போது, அவை முந்தியவொரு காலப்பகுதி பற்றிக், காலங்கடந்து எழுதப்பட்டனவற்றைப் போலத் தோன்றுகின்றன[2]. ஈசியொட்டுவும் அவரைப் பின்பற்றினோரும், ஏதிர்க்கொணு அதிகாரம் உடையோராய் இருந்த காலத்தே தாபிக்கப்பட்ட, மேற்கேயிருந்த அயோனிய, சளுக்கிடிய குடியேற்றப் பகுதிகளில் நிலைமை வேறுயிருந்தது என்பது [3]உண்மையே.

ஆசியாவிலிருந்த கிரேக்க நகர்கள் பாரசீகத்தின் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட தலைமுறையில் வாழ்ந்தோரில் மிகவும் சிறப்புடன் குறிப்பிடப்படும் தகுதியுடையோரான பைதாகரசு, செனோபனிசு எனும் இருவரும் அயோனியர்களே. ஆனால் இருவரும் தமது வாணாட்களிற் பெரும்பகுதியை மேற்கேயே கழித்தனர். அங்கோ சமயத்தை (குறிப்பாக இக்காலத்துக் கிரேக்க உலகம் முற்றிலும் பரவிய மறுமலர்ச்சியினால் அது வலுப்பெற்றிருந்ததனால்) புற்க்கணித்தல் சாத்தியமாயிருக்கவில்லை. ஆகவே இதன் பின்னர், அறிஞரென்போர், பைதாகரசைப் போன்று பழைய சமயக்

1. 16 ஆம் ப. பார்க்க.

2. 4 ஆம் ப. பார்க்க.

கருத்துக்களைச் சீர்திருத்திப் பண்படுத்துவதில் ஈடுபட வேண்டி யிருந்தது. அன்றேல் செஞ்சுபனிசுவைப் போன்று பகிரங்க மாக அதனை எதிர்க்க வேண்டியிருந்தது.

33. இம்மறுமலர்ச்சியை, வெறுமனே பழைய ஈசிய சமயக் டீலிய கொள்கைகளின் ஒரு புதிய தோற்றமே யெனக் கொள்ளலா சமயங்கள காது. உண்மையில் அக்காலத்து மிக மிக வடக்கேயுள்ள பகுதி யெனக் கொள்ளப்பட்ட பிரதேசத்தே, அப்போது தோன்றிய புதிய கருத்துக்கள் சிலவற்றின் கலப்பும் இம்மறுமலர்ச்சியிற் சேர்ந்திருந்தது. டீலோசியரது ஆலயவிதிகாசம் உணமையில் மிகவும் பழைமையுடையதே. அன்றியும் இடன்யூப்பு நதிக்க ரையில் வாழ்பவர்கள் எனக் கருதப்பட்ட ஐப்பபோரியர்களுக்கும் அப்போலோ வழிபாட்டுக்குமிடையே யோர் தொடர்பையேற் படுத்துவது இவ்விதிகாசமே.[1] எதிரியாத்திக் கடலின் வட பகுதி, டொடோனை, மாலிக்குடா[2] வென்பவற்றுக்கூடாக, ஆங காங்கு வாழ்ந்த மக்களாற் கொண்டு செல்லப்பட்ட "வைக் கோலிற் பொதியப்பட்ட புனிதபொருட்கள்" என்பவை, ஆதி காலத்தில் இடன்யூப்பு, ஈசிய நாகரிகங்களிடையே நிலவிய தொடர்புக்குச் சான்று பகர்கின்றன. இதனை ஆக்கியர்களது வரு கையோடு தொடர்புபட்ட வொன்றுகக் கருதுவதும் பொருத்த மானதே. ஐப்பபோரியனை அபாரிசு[3], புரொகொனேசசுவைச் சேர்ந்தவனை அரித்தியாசு[4] என்போரது கதைகளும், இச்சமய இயக்கத்தையே சேர்ந்தவை. நாம் அறிந்த வரையில் ஈசிய பகுதிகளுக்குப் புதியதான, ஆன்மாக் கொள்கை யொன்றின் அடிப்படையிலேயே இச்சமய இயக்கம் அமைந்திருந்தது என்ப தையும் இக்கதைகள் நிரூபிக்கின்றன. பைதாகரசுவுக்கும் டீலோ சுக்குமிடையே தொடர்பிருந்தது என்பது பற்றியும் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை. ஆக்கிய பெயரைக் கொண்டு பெரு மையடைந்த நகர்களிலேயே அவர் தமது கழகத்தை நிறுவி னரென்பதும் உறுதி. டீலிய சமயம் ஆக்கியர்களிடமிருந்து பெறப்பட்டது உண்மையாயின், வேறு கருத்துக்களை எற்பதன் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியாதனவாகவுள்ள, பைதாகரசின் வாழ்க்கை பற்றிய அம்சங்கள் சில தெளிவாகின் றன. இவை பற்றியும் நாம் பின்னர் காண்போம்[5].

1. Pindar, *Ol.* iii. 14-16.
2. Herod. iv. 33. Cf. Farnell, *Cults of the Greek States*, iv.pp. 99 sqq.
3. Herod iv. 36.
4. *Ibid.* iv. 13-15.
5. 'Encyclopaedia of Religion and Ethics' எனும் நூலில் (S. V. Pythagoras) பைதாகரசுவின் மதம்பற்றி இங்குள்ளதினும் விரிவாக ஆராயந்துள்ளோம்.

ஒபிசம்

34. ஆயினும் வடவரது சமயத்தின் செல்வாக்கு அதிக மாகக் காணப்பட்டது அதனது மூலிய உருவத்திலல்லவென்க. திறேசுவில் இடையுணிசோசுவினது வழிபாட்டோடு இணைந்து கொண்ட இச்சமயம் ஒபியசுவினது பெயரோடும் தொடர்பு பட்டது. இச்சமயத்தின் புதிய நம்பிக்கைகள், "ஆனந்தக் களிப்பு"ப் போன்றவோர் இறையனுபவ அடிப்படையிலேயே அமைந்திருந்தன. ஆன்மாவானது "உடலை விட்டு வெளி யேறிய" பின்னரே தனது உண்மை இயலபை வெளிக்காட்டி யது என நம்பப்பட்டது. ஓமர் கருதியதுபோல மனிதனது பலம் குறைந்தவோர் பிரதியெனக் கருதப்படாது, தன் பதவியி லிருந்து வீழ்ச்சியுற்றவோர் தெய்வமென ஆன்மா வருணிக் கப்பட்டது. முறையான "தூய்மையாக்க" வழிகளாலும் கிரி யைகளாலும் அதனை அதன் உயர் பதவிக்கு மீண்டும் உயர்த்த லாம் எனக் கருதப்பட்டது. கவிஞர்களால உலக வியல்புடையன வும், மனிதராகக் கற்பிக்கப்பட்டனவுமான தெய்வங்களின் வழி பட்டாலும் தம் தேசிய மதங்களைப் பின்பற்றுவதனாலும் அதிக திருப்தியடைந்திருக்காத பல்வேறு மக்களும் இப்புதிய சம யத்தை ஆர்வத்தோடு தழுவிக் கொண்டனர்.

ஒபிச மதம் கிரேக்கர்களுக்கு முற்றிலும் புதியனவான இரு அம்சங்களைக் கொண்டிருந்தது. இறையினது கூற்றுக்கள் என எழுதி வைக்கப்பட்டிருந்த சிலவற்றை இம்மதம் ஆதாரமாகக் கொண்டிருந்தது. இதனைப் பின்பற்றியோர் புறம்பான சமூகங்க ளாக அமைந்து வாழ்ந்தனர். இவர்கள் தாமாக இம்மதத்திற் சேர்ந்து, பொருந்தியிருந்தனரேயொழிய, உண்மையான அல் லது கற்பிக்கப்பட்ட இரத்த உறவு எதனாலும் இணைந்து கொண்டவரல்ல. எமக்குக் கிடைத்துள்ள ஒபிச இலக்கியத்திற் பெரும்பகுதி பிற்காலத்தது என்பதோடு அது எங்கு தோன்றி யது என்பது பற்றியும் திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆனால் தெளரியை, பெருதலியா எனுமிடங்களிற் கண்டெடுக்கப்பட்ட, ஒபிச செய்யுள்கள் பொறிக்கப்பட்ட மெல்லிய பொற்தகடுகள், ஒபிசம் மக்களிடையே பெரிதும் வழங்கியவோர் காலத்திற்கு எம்மை இட்டுச் செல்கின்றன.[1] இவ்வோபிச வழிபாட்டுமுறை கள் அக்காலத்து இந்தியாவில் வழங்கிய சமயச் சடங்குகளைப் பெரிதும் ஒப்பனவாய் இருந்தன வென்பதும் இத்தகடுகளி லிருந்து தெரியவருகிறது. ஆனால் இக்காலத்தே இந்திய செல் வாக்குக இரேக்கர்களிடையே காணப்பட்டது எனக் கொள்வது

1. இப்பொற்றகடுகள பற்றி செல்வி அரிசன் எழுதிய **Prolegomena to the Study of Greek Religion** எனும் நூலின அனுபந்தத்திறகாண்க. பேராசிரியர் இலபேட்டுமறே, ஆஙகு இத்தகட்டுக் குறிப்புகளினை மொழிபெயர்த் துத் தந்து அவற்றை ஆராய்நதுள்ளார்.

சாத்தியமில்லை[1]. ஓபிசச் சடங்குகளினது முக்கிய நோக்கம், ஆன்மாவைச் சம்சாரம் எனும் சக்கரத்திலிருந்து, அதாவது மீண்டும் மீண்டும் விலங்குருவத்திலும் தாவரவுருவத்திலும் பிறப்படைவதிலிருந்து, விடுவிப்பதாகவேயிருந்தது. அவ்வாறு விடுவிக்கப்பட்ட ஆன்மா மீண்டும் தெய்வமாகி, அழியா இன்பத்தை அடைந்தது.

மெய்யியல் ஒரு வாழ்க்கை முறையெனல்

35. ஓபிச சமூகங்கள் மெய்யியல் என்பது "ஓர் வாழ்க்கை முறை" யெனும் கருத்தின் அடிப்படையில் அமைந்தனபோற் காணப்படுகின்றன வென்பதே இங்கு நான் அவற்றைப் பற்றி ஆராய முற்பட்டதற்கு முக்கிய காரணமென்க. அயோனியாவிலும், அதன் பின்னர் அதென்சுவிலும் மெய்யியல் எனபதைக் குறிக்கும் கிரேக்க சொல "புதுமை நாட்டம்", "பண்பாடு" என்னும் தொடர்புகளிலேயே பிரயோகிக்கப்பட்டு வந்ததென நாம் கண்டோம். ஆனால் பைதாகரசுவின் சிந்தனையின் செல்வாக்குப் படிந்துள்ள இடங்களிலெல்லாம், மெய்யியல் என்பது இவற்றிலும் ஆழமானவோர் பொருளுடையதாயிருக்கக் காண்கிறோம். மெய்யியல் என்பது ஓர்வகைத் தூய்மையாக்கமாகவும் சம்சார "சக்கரத்தி"னின்று விடுதலை பெறுதற்கான வோர் வழியாகவுமே கருதப்படுகிறது. பிளேட்டோவினது **பீடோவில்** மிக மேன்மையான முறையில் உணர்த்தப்பட்டிருக்கும் கருத்தும் இதுவே. இக்கருத்து அங்கு பைதாகரச கொள்கையிலிருந்தே பெறப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படை[2]. மெய்யியல இவ்வாறு ஓர் வாழ்க்கை முறையாகக் கருதுவது, இக்காலத்திற்குப் பிந்திய கிரேக்க சிந்தனை முறைகளின் ஓர் பண்பாகவிருக்கிறது. அரித்தோதிலும், எனையோரைப் போல இப்பண்பினைத் தழுவியிருந்தாரென்பது அவரது **ஒழுக்கவியலின்** பத்தாவது பகுதியிலிருந்து புலனாகிறது. இத்தகைய மனப்பாங்கு, வெறும் அமைதியோடு கூடிய மறுவுலக ஈடு

[1]. இந்திய செலவாகுக்குட்பட்ட முதலாவது கிரேகனெனக கொளளப் படக்கூடியவன் எலிசு நாட்டுப வைரோ எனபானே ("Sceptics" by Burnet in the Encyclopaedia of Religion & Ethics). இங்கு குறிபபிடப்படும் சமயக் கொள்கைகள் எங்கிருந்து கிரேகர்களை அடைந்தனவோ, அவ்வடபகுதியிலிருந்தே இநதியாவையும அடைந்திருக்க வேணடும் என நான எண்ணுகிறேன். கைதியாவிலிருந்து இவை தோனறியிருகலாம் (Scythia). சீசர் கூறுவதுபோல, கலிகக மதாசாரிகள் மறுபிறப்புக் கொள்கையைப போதித்தனர் என்பது உண்மையாயின், எனது ஊகம உறுதிப்படுதபடுகிறது. எல். வொன்கடோரது கொள்கைள் (Pythagoras und die Inder, 1884) பைதாகரசவாதம் பறறி நனகு அறியாததால் எற்பட்டவை. அன்றியும் காலவழுக்களும் பல காணப்படுகின்றன.

2. பிளேட்டோவினது பீடோ, பிளெயசுவில் வாழ்ந்த பைதாகரச சமூகத்தினருகளே சமாப்பணப்படுத்தபபட்டிருக்கிறது என்றும் கூறலாம்.

பாடாக மாறலாம் எனும் அபாயம் எப்போதும் இருந்தது. பிளேட்டோ இவ்வாறு ஏற்படுவதைத் தவிர்ப்பதிற் கருத்துடைய வராயிருந்தார். மெய்யியலாளர் தாம் விடுதலை பெற்ற குகைக்கு மீண்டு அங்கு முன்பு தம்மோடு சிறைப்பட்டிருந்த பிறரையும் அங்கிருந்து விடுவிக்க முயலவேண்டும் என வலியுறுத்தியவர் அவரே. ஆனால் இறுதியில் வெற்றி பெற்றது இக்கருத்து அல்ல வென்றால் அதற்குப் பொறுப்பாளிகள் மெய்யியலாளர் களே.

சமயத்திற்கும் மெய்யியலுக்கு மிடையேயுள்ள தொடர்பு

36. விஞ்ஞானம் இவ்வாறு சமயமாக மாறியது; இந்த அளவிற்கு மெய்யியல் சமயத்தின் செல்வாக்குக்குட்பட்ட தென லாம். ஆனால் இக்காலத்தும், எந்தக் குறிப்பிட்ட சமயக் கொள் கையாவது மெய்யியலிற் சேர்த்துக் கொள்ளப்பட்டது எனக் கொள்ளலாகாது. இக்காலத்துச் சமய மறுமலர்ச்சி, ஆன்மா பற்றிய புதிய கொள்கை யொன்று ஏற்படுவதற்குக் காரண மாயிருந்தது எனக் கண்டோம். இஃது மெய்யியலாளர்கள் ஆன்மா பற்றிக் கூறியவற்றிலும், பெரிய மாறுதல்களேற்படுத் தினால் அது இயல்பானதே. ஆனால் இங்கு குறிப்பிட வேண்டி யது என்னவெனின் அவ்வகை மாற்றம் எதுவும் நிகழவில்லை என்பதே. இச்சமய மறுமலர்ச்சியிற் பங்கு பற்றியவர்களான பைதாகரச வாதிகளும் எம்பிடோக்கிளிசுவும் கூட, தமது சமய முறைகளுக்கு முற்றிலும் முரண்பட்டனவான, ஆன்மாக் கொள் கைகளைத் தமது மெய்யியன் முறைகளில் ஏற்றுக்கொண்டனர்[1]. இக்காலத்து மெய்யியல் முறை எதனிலும் ஆன்மாவின் சிறப்பு வித்துவம் ஏற்றுக்கொள்ளப்பட வில்லையென நாம் காண்போம். ஆன்மா அழிவற்றது எனும் கொள்கையை முதன் முதலில், வாதமுறைப்படி நிறுவ முயன்றவர் சோக்கிரதரே[2]. சோக்கிரதர் தனது கொள்கைக்கு ஆதாரமாக, ஓபிசக்கருத்துக்களைச் சுட்டிக் காட்டும்போது, அதிற் பாதி கேலி கலந்திருப்பதாகப் பிளேட்டோ காட்டியிருப்பதும் கவனித்தற்குரியது.

இதற்குக் காரணம் என்னவெனில், பண்டைய சமயங்கள் ஒருபோதும் திட்டவட்டமான கொள்கை முறைகளை உடையன வாகவிருக்கவில்லை யென்பதே. சமயக் கிரியைகள் செம்மை யாகவும், உகந்த மனப்பாங்குடனும் செய்யப்படல் வேண்டும் என்பதே முக்கியமானதாயிருந்தது; வழிபடுவோர் தமது மனத் திற்குகந்த விளக்கங்களைத் தழுவிக் கொள்ளுதலே வழக்கா

1. எம்பிடோக்கிளிசு பற்றி பிரிவு 117; பைதாகரசவாதிகள் பற்றி பிரிவு 149.

2. See "The Socratic Doctrine of the Soul" (Burnet, Proceedings of the British Academy, 1915—16, p. 235) இக்கட்டுரையில் இவ்விடயத்தை விரிவாக ஆராய்ந்துள்ளேன்.

யிருந்தது. அவ்விளக்கங்கள், சொபோக்கிளிசு, பிந்தார் போன் றோரின்று விளக்கங்களைப் போல மேன்மையுடையனவாகவோ அல்லது பிளேட்டோவினது குடியரசில் வருணிக்கப்படும் போலி ஞானியரது கருத்துக்கள் போலவோ இருத்தல் கூடும். இச் சமயததை ஏற்றுக்கொண்டோர் புதிய கொள்கை எதனையும் கற்றுக் கொள்வதாகக் கருதப்படுவதில்லை ; ஆனால் இவர்கள் ஒருவகை மாற்றத்தை அனுபவித்துப் புதிய மனப்பாங்கொன் றினை அடைவதாகக் கருதப்படுகிறது என அரித்தோதில் கூறி னர். இதனாலேயே இச்சமய மறுமலர்ச்சி, மெய்யியலுக்குப் புதிய ஊக்கத்தை அளித்ததாயினும் புதியகொள்கைகள் ஒன்றையும் அதனுட் புகுத்தவில்லை.

1. சாமோசு நகரத்துப் பைதாகரசு

37. பைதாகரசுவைப் பற்றி, வரலாற்று ரீதியான்தென்னக் கொள்ளப்படக்கூடிய விவரம் எதுவும் தருவதென்பது எளிதான தல்ல. அவரைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய குறிப்பு, அவர் காலத்துக்குரியவொன்றாகும். நாயொன்று கத்துவதைக் கேட்ட பைதாகரசு, அதனது குரல்தனது இற்ந்து போன நண்பனொருவனது குரலெனத் தனக்குத் தெரிந்ததால், அதனை அடிக்க வேண்டாமென அதன் சொந்தக்காரனைக் கேட் டுக் கொண்டாரென்னும் பொருள் கொண்ட செனொபனது செய்யுள்கள் சில தரப்படுகின்றன.[1] இதிலிருந்து பைதாகரசு மறுபிறப்புக் கொள்கையைப் போதித்தார் என்பது பெறப்படு கிறது. தமது போலி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் நோக்கத்துடனேயெனினும், பிறர் எவரையும் விட விஞ்ஞான ஆராய்ச்சியை அதிகம் விருத்தி செய்தவர் பைதாகரசுவேயென, அவருக்கு அடுத்த தலைமுறையினரான எரக்கிளீட்டசு கூறினார்.[2] எரக்கிளீட்டசுவுக்குப் பின்னர், ஆனால் அதே நூற்றாண்டில், எரொடோதசு[3] பைதாகரசைப் பற்றி "எல்லாசிய விஞ்ஞானியருள் ஒருவனோருக்கு எவ்வகையிலும் குறைந்தவரல்ல" எனக் கூறி னார். வரலாற்றுப் புகழ் பெற்ற கைதியனை சலுமொக்சிசு சாமோசுவில் பைதாகரசுவின் அடிமையாக விருந்தவன் எனத் தான் கேள்விப்பட்டதாகவும், ஆனால் அதைத் தான் நம்பவில்லை யென்வும் அவர் கூறுகிறார் ; எனெனில் சலுமொக்சிசு பைதா கரசுவிற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவன் என அவர் அறிந்திருந்தார். விஞ்ஞானி எனவும், மறுபிறப்புக் கொள் கையைப் போதித்தவன் எனவும், 5 ஆம் நூற்றாண்டிற் பைதா

இவரைப் பற்றிய வரலாற்றின் இயல்பு

1. Xenophanes, fr. 7.
2. Herod. iv. 95.
3. Herakleitos, fr. 17.

கரசுவின் பெயர் பிரபலமடைந்திருந்தது என்பதற்கு இக்கதை சான்று பகர்கிறது எனலாம். இதுவும் எமக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

பிளேட்டோ பைதாகரசவாதத்தில் அதிக ஈடுபாடுடையவராயிருந்தார் எனினும், எஞ்ஞை அதுபற்றி அதிகம் கூறவில்லை. அவரது நூல்கள் முழுவதிலும் பைதாகரசுவின் பெயர் ஒரேயொரு முறையே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கும் எமக்குக் கூறப்படுவதெல்லாம், பைதாகரசு, தமது சீடர்களுக்குப் பைதாகரச வழியென இன்னமும் அழைக்கப்பட்ட வாழ்க்கை முறையைப் போதிப்பதன் மூலம், அவர்களது அன்பை அசாதாரணமான அளவுக்குச் சம்பாதித்துக் கொண்டார் என்பதே[1]. பைதாகரச வாதிகளும் ஒருமுறையே பெயரிட்டுக் குறிப்பிடப்படுகின்றனர். சங்கீதமும், வானியலும் சகோதர கலைகள் என அவர்கள் கருதினர் என சோக்ரதர் கூறும் இடமே அஃதென்க. ஆனால் வேறு வழிகளில பைதாகரசவாதிகள என நாம் தெரிந்து கொண்ட பலரைப் பற்றிப் பிளேட்டோ கூறுகிறார்; ஆனால் அவர் அவர்களைப் பெயரிட்டுக குறிப்பிடவில்லை. அவர் சொல்வனவற்றிலிருந்து, எகிறத்திசு, பிலோலெசு ஆகியோர் பைதாகரச வாதிகள் என எம்மால் ஊகிக்க முடிகிறதேயொழிய அவர் ஒருபோதும் அவ்வாறு கூறவில்லை. பெரும்பாலும் பைதாகரச கொள்கைகள் அவற்றைக் கொண்டிருந்தோரது பெயரில்லாது, " கெட்டிக்காரர்களினது கொள்கைகள " என்பதுபோன்ற குறிப்புக்களோடு தரப்படுகின்றன. பைதாகரச அண்டவியற் கொள்கை யொன்றை உலோகிரிய நாட்டுத் திமாயோசுவைக் கொண்டு கூறவைத்தபோதும், அவன் பைதாகரச கழகத்தைச் சேர்ந்தவன் என்பதைக்கூடப் பிளேட்டோ வெளிப்படையாகக் கூறவில்லை. அவன் ஓர் இத்தாலியன் எனக் கூறப்படுவதிலிருந்து அவன் ஓர் பைதாகரசவாதி யென்பதையும் நாம் ஊகிக்கவேண்டியிருக்கிறது. பிளேட்டோ இவ்வாறு, இவ்விடயங்கள் பற்றி அதிகம் கூறாது விட்டதைப் போலவே அவரது மாணவரான அரித்தோதிலும், எமக்கு இவர்களைப்பற்றி அதிகம் கூறவில்லை. எமக்குக் கிடைத்துள்ள அரித்தோதிலினது நூல்கள் முழுவதிலும் இரண்டு இடங்களில் மட்டுமே பைதாகரசு எனும் பெயர் காணப்படுகிறது. பைதாகரசு முதியோனாயிருந்த காலத்தில் அலுக்மையோன்[2] இளைஞனாயிருந்தான் எனும் செய்தி ஓரிடத்திலும், " இத்தாலியர்கள் பைதாகரசுவைப் பெரிதும் மதித்தனர் " எனும் அலுக்கிடாமசின் கூற்றொன்றும்[3]

1. Ibid. vii. 530 d.
2. Arist *Met.* A., 5. 986 a 29.
3. Arist. *Rhet.* B, 23. 1398 b 14.

மற்ற இடத்திலும் தரப்பட்டிருக்கின்றன. "பைதாகரசவாதி" எனும் பெயரைப் பிளேட்டோ தவிர்க்க முயன்ற அளவிற்கு அரித்தோதில் அதனைத் தவிர்க்க முயலவில்லை யெனினும், அதை அவர் விநோதமான முறையிற் கையாண்டிருக்கிறார் எனலாம்.. "பைதாகரசவாதிகள் என அழைக்கப்படும் இத் தாலியர்கள்" என்று சில வேளைகளில்[1] எழுதியிருப்பதுடன் குறிப்பிட்ட சில கொள்கைகளைப் பற்றி "இவை பைதாகரச வாதிகளிற் சிலருடையவை" என்றும் வேறு சில வேளைகளிற் குறிப்பிட்டிருக்கிறார். இவற்றை நோக்கும்போது நான்காம் நூற் றாண்டில், உண்மையான பைதாகரசவாதிகள் யார் என்பது பற்றி ஐயம் நிலவியதுபோற் றோன்றுகிறது. இதற்குக் கார ணம் என்னவென்பது நமக்குப் பின்னர் தெரியவரும்.

பைதாகரசவாதிகள் பற்றி அரித்தோதிலும் விசேட கட்டுரை யொன்று எழுதியிருந்தார். இது எமக்குக் கிடைக்காத போதி லும், பிந்திய எழுத்தாளரது நூல்களில் இதிலிருந்து எடுக்கப் பட்ட மேற்கோள்களைக் காண முடிகிறது. இம்மேற்கோள்கள் பைதாகரசவாதத்தின் சமயச் சார்பான கருத்துக்கள் பற்றியன வாதலால் எமக்கு மிகவும் பயனுடையனவாகவுள்ளன.

இவர்களைவிட, பைதாகரசுபற்றி எமக்கு எதுவாயினும் தரு வோர் அரித்தோசெனுசு, திகயாக்கோசு, திமாயோசு என் போரே. இவர்கள் யாவரும் பைதாகரசுவை அறிவதற்கு விசேட வாய்ப்புக்கள் உடையோராய் இருந்தனர். அயாம்பிளிகோசு எழுதிய பைதாகரசுவின் வாழ்க்கை யெனும் நூலில் பைதா கரச கழகம் பற்றிக் கூறப்பட்டிருக்கும் யாவும் திமாயோசுவின் மூலம் பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட வையே. திமாயோசு, போதிய ஆராய்வில்லாதவோர் வரலாற் றுசிரியனேயெனினும், இத்தாலி, சிசிலியெனும் இடங்கள்பற்றி அதிக விவரங்களை அறியும் வாய்ப்பு இவனுக்கிருந்ததாதலால், இவனது கூற்றுக்களில் எமக்குக் கிடைத்தவை யாவும் மிகவும் பயனுள்ளவையே. அரித்தோசெனுசு வென்பான் பிளெயசு விலிருந்த பைதாகரசவாதிகளின் கடைசித் தலைமுறையினரை நேரில் அறிந்திருந்தான். ஆனால் இவன் பைதாகரசுவை ஓர் விஞ்ஞானியென மட்டுமே வருணிக்கவும், அவர் ஓர் சமயாசிரியரு மாய் இருந்தார் என்பதை மறுக்கவும் விரும்புகிறான் என்பது வெளிப்படை. இதுபோலவே, திகயாக்கோசுவும் பைதாகரசு அர சியல் ஞானியாகவும் சீர்திருத்தவாதியாகவும் மட்டுமே வாழ்ந் தார் என நிறுவமுயல்கிறான்.

1. Cf. e.g. *Met.* A, 5. 985 b 23, *De caelo*, B, 13. 293 a 20.

பைதாகரசினது வாழ்க்கை பற்றிப் போபைரி, அயாம்பிளி கோசு, இடையோசினிசு லயார்தியசு என்போர் எழுதிய நூல் களைப் படிக்கும்போது அவர் பற்றி மீண்டும் அதிசயிக்கத்தக்க செய்திகள் பல எமக்குக் கிடைக்கின்றன[1]. ஆனால் நம்பத்தகாத கற்பனைகள் நிறைந்தனவான இவை சந்தேகத்திற்கிடமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கின் றன.[2] ஆயினும், பைதாகரசுபற்றிய வரலாற்றில் உள்ள விந்தை யான செய்திகளை முற்றுக விலக்குதலும் தவறுனதெனலாம்; ஏனெனில் இவற்றுட் குறிப்பிடத்தகுனவான விவரங்கள் பல பைதாகரச வாதிகள் பற்றி அரிதோதில் எழுதிய நூலிலி ருந்தும்[3] எபிசோசு நாட்டு ஆந்திரோனது **மூக்காலி** யெனும் நூலிலிருந்தும்[4] பெறப்பட்டுள்ளன. இந்நூல்களிரண்டும் கி. மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாதலால், நவபைதாகர வாதிகளினது கற்பனைகளின் பீடிப்பினால் எழுந்தவையென நாம் இவற்றைக் கருதவேண்டியதில்லை. உண்மை யென்ன வெனில் பைதாகரசு பற்றிய பழைய வருணனைகளும், பிந்திய வருணனைகளும் அவர் பல விந்தையான காரியங்களைச் சாதித் தார் எனக் கூறுவதில் ஒத்திருக்கின்றன. ஆனால், என்ன காரணத்திற்காகவோ, கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில், பைதா கரசுவினது இத்தகைய சாதனைகளைக் குறிப்பிடாது விடுவதற்கு யாவரும் முயற்சித்துள்ளனர். பிளேட்டோவும் அரிஸ்தோதிலும்

1. போபைரியினது "மெய்யியல் வரலாறு" எனும் நூலிலிருந்து எமக்குக் கிடைத்துள்ள பகுதி அவரது "பைதாகரசுவினது வாழ்க்கை" மட்டுமே. அயாம் பிளிகோசு எழுதிய பைதாகரசுவினது வாழ்க்கை நோககுவினூற் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது (1884).

2. தையனுவைச் சேர்ந்த அப்பொலோனியோசுவினது நூலிலிருந்தும், கெரேசாவைச் சேர்ந்த நிகொமாக்கோசு வெனனும் கணிதவல்லுனனினது நூலிலிருந்ததுமே அயாம்பிளிகோசு தமது நூலை தொகுத்தார். "நூலிற்கு அப்பாலிருந்து பெற்ற விந்தைகள்" எனும் நூலை எழுதிய அந்தோனியசு இடையோசினிசு, நிகொமாக்கோசு என்போரே போபைரியினது ஆதாரங்கள். அந்தோனியசுவின் நூல் லூசியனது **Vera Historia** எனும் நூலில் நையாண்டி செய்யப்பட்டிருக்கிறது.

3. கொடிய விடப்பாம்பொன்றினைப் பைதாகரசு கடித்துக் கொன்றமை பற்றியும், இரு இடங்களில் அவர் ஒரே நேரத்தில் காணப்பட்டமை பற்றியும், ஒலிம்பியாவில் அவர் தமது பொன்னுலான துடையைக் காட்டியமை பற்றியும், அவர் காசாசு நதியைக் கடந்தபோது, வானிலிருந்து ஓர் குரல் அவரை அழைத் தமை பற்றியும் இன்னோரனன பல செய்திகளையும் தந்துள்ளவர் அரிஸ்தோதிலே. இசசெய்திகளைக் கூறுது விடுத்த பிறகால பைதாகரசவாதிகளை எதிர்க்கும் பொருட்டு, அரிஸ்தோதில் இவற்றைக் கூறுவதில விசேட கவனம் செலுத்தி னார் போலும்.

4. "ஞானியர் எழுவர்" பற்றி ஆந்திரோன் ஓர் நூல் எழுதினார். இத்த லைப்பு அவர்கள் பற்றிய கதையையே குறிகிறது.

அதிகம் கூற விரும்பாதமைக்கான காரணத்தையும் இது விளக்குகிறதெனலாம். ஆனால் இதன் பூரண முக்கியத்துவம் பின்னரே புலனாகும்.

பைதாகரசின் வாழ்க்கை

38. பைதாகரசு தனது வாலிபப் பருவத்தைச் சாமோசுவிற் கழித்தாரென்றும், அவர் நெசாக்கோசுவின் மகனென்றும் எமக்கு நன்முகத் தெரியுமெனக் கூறலாம்[1]. பொலிகிறுத்திசுவின் ஆட்சிக் காலத்தில் (கி.மு. 532) இவர் சிறப்புடன் விளங்கினரெனவும் எமக்குத் தெரியவருகிறது[2]. எரக்கிளீட்டசு இவரைக் குறிப்பிடும் வசனங்கள் இறந்தகாலத்தில் எழுதப் பட்டிருக்கின்றன வாதலால், இவ்வாண்டு விவரங்கள் முற்றிலும் பிழையானவையாக விருக்க முடியாது[3].

பைதாகரசு அநேக இடங்களுக்குப் பிரயாணம் செய்தார் எனினும் செய்தி அவ்வளவு நம்பத்தகுந்ததல்ல. அவர் எகிப்திற்குச் சென்றார் என்னும் செய்தியும், சாமோசு நகரத்தவனை பொலிகிறுத்திசுவுக்கும் அமாசிசிசுவுக்குமிடையே யிருந்த நெருங்கிய தொடர்பைக் கவனிக்கும்போது, நம்பத்தகுந்ததேயாயினும், போதிய ஆதாரமுடைய வொன்றல்ல[4]. "ஓபிக்கு", "பாக்கிக்கு" எனும் விதிகளோடும், உண்மையில் இவை எகிப்தியர்களுடையனவேயென்க—பைதகரவாதிகளோடும் எகிப்தியர் பெரிதும் பொருத்தமுடையோராய்க் காணப்பட்டனர் என எரொடோதசு கூறுகிறார். ஆனால், பைதாகரசவாதிகள் இவற்றை

1. Cf. Herod. iv. 95, and Herakleitos, fr. 17 (R. P. 31 a). திமாயோசு, இவரது தந்தையின் பெயர் டெமாறத்தோசுவெனக் கூறுகிறார் எரொடோதசு அவர் சாமோசுவில் வாழ்ந்ததாகக் கூறுகிறார். அதெனியர்கள் குடியேறிய தீவுகளிலொன்றிலிருந்து அவர் குடும்பத்தினர் வந்தனர் என அரித்தோசெனேசு கூறுகிறார் (Diog. viii. 1). இத்தீவு லெமுனோசு அல்லது இம்புரோசுவாக இருக்கலாம். வேறு சில கூற்றுக்கள் இவரைப் பிளெயசுவுடன் தொடர்புபடுத்துகினறன. ஆனால் 4 ஆம் நூற்றாண்டில் அங்கு நிலவிய கழகத்தினர் தமது ஆவல் மிகுதியால் இவ்வாறு கற்பனை செய்து கொண்டிருக்க வேண்டுமென்க. பைதாகரசுவினது பூட்டனான இப்பாசோசு, பிளெயசுவிலிருந்தே சாமோசுவுக்குக் குடியேறினரென, பிளெயசுவில் ஓர் வரலாறு வழங்கியதாகப் பௌசானியசு கூறுகிறார்.

2. 48 வது ஒலிம்பிய ஆண்டு (கி.பி.588/7) டின், ஒலிம்பிய வெற்றி வீரன் பைதாகரசுவேயென எராதொசுதெனிசு தவருகக் கருதினர். ஆனால் இவர் சிறப்புற்று விளங்கிய ஆண்டு 532/1 என அபொலோடரசு கூறுகிறார். பெல்லிகிறுத்திசுவின் கொடுங்கோனமையை வெறுத்தே பைதாகரசு சாமோசுவை நீங்கினர் என அரித்தோசெனேசு கூறியுள்ளதன் அடிப்படையிலேயே அப்பொலோடரசு இவ்வாறு கூறியிருத்தல் வேண்டும்.

3. Herakl. fr. 16, 17 (R. P. 31 , 31a).

4. ஐசோகிறுத்திசுவின் Bousiris என்னும் நூலிற்றான் இது முதலிற் காணப்படுகிறது.

எகிப்தியர்களிடமிருந்தே பெற்றனர் என இதற்குப்பொருள் கொள்ளலாகாது. மறுபிறப்புப் பற்றிய கொள்கையை மூற்காலத்தவரும், பிற்காலத்தவருமான கிரேக்கர் சிலர் தமதெனக் கூறினரெனினும், அஃது எகிப்தியரிடமிருந்து பெறப்பட்டதே யெனவும் அவர் கூறுகிறார். ஆனால் அவர் அக்கிரேக்கர்களது பெயர்களைக் குறிப்பிட மறுக்கிறாராதலால், அவர் பைதாகரசைக் குறிப்பிடுகிறார் எனக் கொள்ளுதல் சிறிதும் பொருந்தாது. அவ்வாறு அவர் கருதியிருந்தாலும் அதை நாம் கவனிக்க வேண்டியதில்லை; ஏனெனில் எகிப்தியர்கள் மறுபிறப்புக் கொள்கையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை. எரொடோதசு அங்குள்ள சமாதிகளின் குறிப்பைத் தவருக விளங்கிக்கொண்டிருக்கவேண்டும்; அல்லது எகிப்திய மதகுருமாரால் ஏமாற்றப்பட்டிருக்க வேண்டும்.

பொலிகிறுத்திசுவின் கொடுங்கோன்மையிலிருந்து விடுதலை பெறும் பொருட்டே பைதாகரசு சாமோசுவை விட்டு வெளியேறினர் என அரித்தொசெனுசு கூறினர்.[1] சாமோசுவோடு நெடுங்காலமாக நட்புறவு பூண்டிருந்ததும் தன்னகத்தே வாழ்ந்த வீரையாட்டு வீரர், மருத்துவர்[2] என்போரது சிறப்பினாற் பெயர் பெற்றதுமான குரோட்டனிலேயே அவர் தமது கழகத்தை நிறுவினர். பைதாகரசு கி.மு. 592 ஆம் ஆண்டில் இத்தாலியை அடைந்து, இருபது ஆண்டுகளாகக் குரோட்டனில் வாழ்ந்தாரெனத் திமாயோசு கூறியுள்ளார்போலத் தோன்றுகிறது. குரோட்டன் வாசிகள் இவரது ஆணைக்கெதிராகக் கிளர்ச்சி செய்ததன் பின்னர், தான் சென்று வாழ்ந்த மெற்ருபொந்தியோனிலேயே இவர் காலமானார்[3].

1. **Porph. V. Pyth. 9 (R.P. 53a).**

2. தெமோக்கிடிசுபறறி எரொடோதசு கூறுவதிலிருந்து **(iii. 131)** குரோட்டன் நகர மருத்துவக கழகம் பைதாகரசுவின் காலத்திற்கு முன்பே நிறுவப்பட்டதென நாம் அனுமானிக்கலாம். கி. மு. ஆரும் நூறருண்டில், தொடர்ந்து குரோட்டன் வாசிகள் பெற்ற ஒலிம்பிய வெற்றிகள குறிப்பிடத்தகுவை.

3. காலததை நிணயிப்பது பறறிய விரிவான ஆராய்ச்சிக்கு, **Rostagni, "Pitagora ei Pitagorici in Times pp. 376 Sqq.** சைபாரிசுவின் வீழ்ச்சிக்குப் பின்னர் (கி. மு. 510) உடனடியாகக கைலோன் கிளர்ச்சியேற்பட்டதெனத் திமாயோசு காட்ட முனைநதாரா என்பது வெளிப்படை. அதைத் தொடர்நது பைதாகரசு, மெறருபொநதியோனிற் சென்று வாழலானார் என்பது கிசிரோவினலும் உறுதிப்படுத்தப்படுகிறது. அநநகர் இனனமும் பெருமையுடன் நினைவு கூரப்படுகிறது எனச கிசிரோ மேலும கூறுகிறார் **(R. P.57c).** அரித்தொசெனுசுவும் இதையே குறிப்பிட்டிருகிறார் **(R. P. 57c). Cf. also Andron, fr. 6 (F. H. G.ii. 34 7)**

39. பைதாகரச கழகமென்பது, அதன் ஆரம்பத்தில் ஓர் சமயத் தொடர்பான சங்கமாயிருந்ததே யொழிய, சிலர் கூறுவது போல அஃதோர் அரசியற் குழுவாகவிருக்கவில்லை[1]. "டோரிய உயர்குலத்தோரது திட்டம்" என அழைக்கப்பட்ட இயக்கத்தோடும் இவர்களுக்கு எவ்வித தொடர்பும் இருக்கவில்லை. பைதாகரசு ஓர் அயோனியரே. அவரது கழகமும் முதலில் ஆக்கிய நகரங்களில் மட்டுமே செயற்பட்டது. மேலும் "டோரிய உயர்குலத்தோரது திட்டம்" என்பது, பாட்டா, கிறீற்று என்பவற்றைப் பற்றிச் சோக்கிரதர் யாத்த உயர்வுநவிற்சிகளின் அடிப்படையில் எழுந்த வெறும் கற்பனைக்கதையே யென்க. கொரிந்து, ஆர்கோசு, சிராக்கியூசு என்பன நீலவிலிருந்து அகன்றுவிட்டன. அன்றியும் பைதாகரசவாதிகள் உயர்குலத்தோரது கட்சியை எவ்வகையிலும் ஆதரித்தனர் என்பதற்கு எவ்வகை ஆதாரமுமில்லை. தமது வாழ்க்கையை மேலும் மேலும் புனிதமுடையதாக்குதலே இக்கழகத்தினரது முக்கிய நோக்கமாக விருந்தது. இடையனிசோசு வல்லாது அப்போலோவே பைதாகரச வாதிகளது பிரதான கடவுளெனக் கருதப்பட்டாரெனினும், மேற்கூறிய வழியில் இவர்கள் ஓபிச கழகத்தினரை ஒத்திருந்தனர். பைதாகரசிற்கு டீலோசுவோடிருந்த தொடர்பின் காரணமாகவே இவ்வொற்றுமை எற்பட்டது என்பதில் ஐயத்திற்கிடமில்லை. குரோட்டன் வாசிகள் இவரை அப்போலோ ஐப்பபோரியசு எனக் கருதியதற்கும் இதுவே காரணமாயிருந்திருக்க வேண்டும்[2].

பைதாகரச கழகம்

[1]. பைதாகரசு, பொதுச்சேவையில் எத்தகைய பதவியும் வகிக்கவில்லை யெனப் பொருள் தோனறுமாறு பிளேடோ **குடியரசில்** எழுதியுளளார். பைதாகரச கழகம் எனபது ஓர் அரசியற் குழுவெனனும் கருத்து, திகயாக கோசுவினுல் ஆரம்பிககப்பட்டதாகும். இக்கழகம் அடிப்படையில ஓர் விஞ்ஞானக் கழகமே எனும் கருத்து எழுவதற்குக காரணமாயிருந்தவர் கணித வியல்லாளரான அரித்தொசெனுசு எனபார்.

[2]. குரோட்டன வாசிகள இவ்வாறு, இவ்விருவரும் ஒருவரே எனக் கருதினுர்கள எனபது அரித்தோதிலாலும உறுதிப்படுதபடுகிறது (**fr. 186. 1510 b 20**). அபாரிசு, அரித்தியாசு என்போரது பெயர்கள், ஓபிசத்திற்கு ஒப்பான, ஆனுல் அப்போலோ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட சமயவியகம் ஒன்றினைக் குறிக்கின்றன ; பிந்திய வரலாறருசிரியர், இவர்களிருவரும பைதாகரசுவின முனனோடிகள் எனக கூறுகின்றனர். எரொடோதசுவின் குறிபபினுலும், பைதாகரசு இறநதவிடமான மெறருபெர்தியோனில அரித்தியாசுவின் சிலையொன்றிருந்தது எனபதனுலும் இஃது உறுதிப்படுத்தப்படுகிறது எனலாம. பைதாகரசிறகும சலுமொகிசுவுக்கும் இடையேயிருந்த தொடர்பும் இத்தகையதே. பைதாகரசினுற் போதிககபபட்ட மதம் முற்றிலும் அயோனியாவைச் சேர்ந்ததே யென்பதும இடையனிசோசுவுக்கும் அதறகும் எவ்வித தொடர்பு மிலலை யென்பதும், ஐப்பபோரியர் வரலாறு டீலியாவைச் சேர்ந்தது என்பதிலிருந்து தெளிவாகிறது.

கழகத்தின் வீழ்ச்சி

40. இப்புதிய கழகம் தோன்றியபின் சிறிது காலத்திற்கு ஆக்கிய நகரங்களில் எல்லாம் பூரணம் ஆதிக்கம் பெற்றதாய் விளங்கிற்று. ஆனால் விரைவில் நிலைமை மாற்றமடைந்தது. ஆனால், பைதாகரசுவின் சீவிய காலத்திலேயே நடைபெற்ற கைலோன் புரட்சி, இத்தாலியிலிருந்து பைதாகரவாதிகள் வெளியேற்றப்படுவதற்குக் காரணமாயிருந்த பிற்காலத்துக் கிளர்ச்சிகள் என்பனவற்றை நம்மால் நன்கு பிரித்தறிய முடியாதிருக்கிறதாதலால், கழகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான இந்நிகழ்ச்சிகளை மயக்கமின்றி அறிந்து கொள்ள முடியவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட கிளர்ச்சிகளைத் தனித்தனியாகப் பிரித்தறிந்து கொண்டதன் பின்னரே நாம் இந்நிகழ்ச்சிகளைச் சிறிது விளங்கிக் கொள்ளக்கூடும். சைபாரிசுவின் வீழ்ச்சிக்குக் (கி.மு. 510) காரணமான நிகழ்ச்சிகளுக்கும், கைலோன் புரட்சிக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததாகத் திமாயோசு கருதினர் போலத் தோன்றுகிறது. சைபாரிசியர்களுக்குப் பைதாகரசு ஏதோ வொருவகையில் தமது அனுதாபத்தைத் தெரிவித்தாரென வும் கொடுங்கோலனை தெலிசுவினால் வெளியேற்றப்பட்ட அக்திகள் சிலருக்குப் புகலிடம் தருமாறு குரோட்டன் வாசிகளைக் கேட்டுக் கொண்டாரெனவும் நாம் அறிகிறோம். ஆனால் இவ்வகதிகள் "உயர்குலத்தோ"ரானபடியாற்றான், பைதாகரசு அவர்கள் மீது அனுதாபம் காட்டினர் எனும் கூற்றுக்கு எவ்வகை ஆதாரமுமில்லையென்க; கொடுங்கோன்மைக்குட்பட்டோரான இவ்வகதிகள் மிகவும் தாழ்மையோடு உதவி வேண்டினராதலால், அயோனியரான பைதாகரசு, துரதிட்டத்தினற் பீடிக்கப்பட்ட, ஆனால் மேன்மையுடையதான அயோனிய நாட்டு மக்கள் மீது இரக்கம் காட்டினர் என்பது விநோதமான நிகழ்ச்சியல்லவெனலாம். செல்வத்தாலும், பிறப்பினாலும், குரோட்டனில் வாழ்ந்தோரில் முதன்மையானவனென அரித்தொசெனுசுவினால் வருணிக்கப்பட்டுள்ள கைலோன்[1] என்பான், பைதாகரசு மற்றோர் ஆக்கிய நகரான மெற்றபோந்தியோனிற்குச் செல்ல வேண்டிய நிலையை உண்டாக்கினன். பைதாகரசு தனது வாழ்வின் எஞ்சிய ஆண்டுகளை இந்நகரிலேயே கழித்தனர்.

பைதாகரசு மெற்றபோந்தியோனுக்குச் சென்றதன் பின்னரும், அவர் காலமாகியதன் பின்னரும், குரோட்டனிற் கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்றன. இறுதியில், பைதாகரவாதிகள் விளையாட்டு வீரனான மைலோவின் இல்லத்திற் கூடியிருக்கையில் அவ்வில்லிற்குத் தீவைக்கப்பட்டபோது இளமையும் வலிமையுமுடையோரான ஆசிப்போசு, இலிசிசு எனும்

1. தற்கால வரலாற்றாசிரியர்கள் இவனை ஓர் மக்கள் தலைவனென அழைப்பதன் காரணம் எனக்கு விளங்கவில்லை.

இருவர் மட்டுமே உயிர் பிழைத்தனர். டோரிய குடியாட்சி நாடான தாரசுவிற்கு ஆகிப்போசு சென்று வாழ்ந்தான்; இலேசிசு முதலில் ஆக்கியாவுக்கும் பின்னர் தீபிசுவிற்கும் சென்றான். தீபிசுவில் அவன் எபபாமினந்தோசுவுகுக் குரு வாகவிருந்தான்[1]. இந்நிகழ்ச்சிகள் யாவும் நிகழ்ந்த ஆண்டு கீழ் நிர்ணயித்தல் சாத்தியமில்லையெனினும், இலேசிசுவின் பெயர் குறிப்பிடப்படுவதிலிருந்து, இவை யாவும் ஒரு தலை முறைக்காலத்திற்குள்ளாகவே நடைபெற்றிருக்கவேண்டும் என அனுமானிக்கலாம். எப்பாமினந்தோசுவின் குருவினுல், குரோட் டன் சதியிலிருந்து தப்பிச் செல்ல முடிந்ததென்றுல், கி.மு. 450 க்குப் பின்னர், சில ஆண்டுகள் கழிந்த பிறகே குரோட் டனில் சதி நடைபெற்றது என்பது உண்மையாயிருக்க முடி யாது; ஏனெனில் அவ்வாருயின் தெளரியை நகர் கி.மு. 444 இல் நிறுவப்பட்ட நிகழ்ச்சி பற்றிய வருணனைகளில் இச் சதிச் சம்பவம் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆக்கிய நகரங்கள் யாவற் றிலும், பைதாகரசவாதிகளினது "குடில்கள்" தீயூட்டப்பட்டது பற்றிப் பொலிபியசு கூறும் சிறந்தவோர் நூற்பகுதி யுளது— இப்பகுதி திமாயோசுவிடமிருந்தே பெறப்பட்டிருக்க வேண்டும். பொலிபியசுவினது வருணனையை நோக்கும்போது, இறுதியில் பெலோப்பொனிசசுவைச் சேர்ந்த ஆக்கியர்கள் அமைதியை நிலைநாட்டும் வரையில், பைதாகரச வாதிகளின் குடில்களுக் குத் தீயூட்டும் இவ்வியக்கம் நீடித்ததுபோற் றேன்றுகிறது. இதற்குச் சிறிது காலத்தின் பின்னர் பைதாகரசவாதிகளுட் சிலர், இத்தாலிக்கு மீளமுடிந்ததெனவும், அங்கு மீண்டு மொரு முறை அவர்கள் மிகுந்த செல்வாக்குப் பெறமுடிந்த தென வும் நாம் பின்னர் காண்போம்.

41. பைதாகரசுவின் வாழ்க்கை பற்றி எமக்குக் கிடைத்த விவரங்களிலும் அவரது கொள்கைகள் பற்றி நாம் அறிந் துள்ளவை மிகக் குறைவே. பைதாகரசுவின் கொள்கைகள் எனக் கூறப்படக்கூடிய ஒழுக்கவியற் கொள்கைகள் அல்லது பௌதிகக் கொள்கைகள் எதனையும் அரித்தோதிலோ அல்லது பிளேட்டோவோ அறிந்திருக்கவில்லை என்பது தெளிவு[2]. அரித்தொசெனுசு ஒழுக்கவியற் கோட்பாடுகள் சிலவற்றை மட்

பைதாகரசின் போதனைகள் பற்றிப் போதிய ஆதாரங்க ளில்லாமை

1. Rohde, *Rhein. Mus.* xxxvi. p. 565, n. I. இக்குமப்ப நிகழ்ச்சிகள் பற்றிக் கூறும் பிற்கால எழுத்தாளர் இவற்றை ஒரே சம்பவமாக இணைத்துக் கூறுகினறனர். மைலோவின் வீட்டில், பைதாகரசும் தீயிலகப்பட்டு இறந்து போனர் எனவும் சிலர் கூறுகின்றனர்.

2. பைதாகரச கொள்கை பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம், அரித்தோதில் "பைதாகரசுவினது" எனுது, எப்போதும் "பைதாகரச வாதிகளினது" எனவே கூறுகிறர். பைதாகரச கொள்கையெனத் தாம் அறிந்திருந்த கொள் கையின் பெரும்பகுதி, உண்மையில், எம்பிடோக்ளிசு, அனக்சகோரசு, லியூ

டும் தருகிறார். மறுபிறப்பு, பிறவிச் சக்கரம், உயிர்கள் யாவற்றிற்கு மிடையேயுள்ள உறவு என்பனபற்றிய கொள்கைகளைத் தவிர, பைதாகரசு தமது சீடர்களுக்குப் போதித்த பிற கொள்கைகளைப் பற்றி எதுவும் தெரியாதெனத திகயாக்கோசு கூறினார்[1]. பைதாகரசு தமது கொள்கைகளை எழுத்து மூலம் பரப்புவதிலும் பேச்சுக்கள் மூலம் பரப்புவதனையே விரும்பினார் போலத் தோன்றுகிறது. மேலும் அலெக்சாந்தரது காலம் வரையில் இவரது பெயரில், போலி நூல்களை வெளியிட யாரும் துணியவில்லை. ஆதிபைதாகரசவாதிகளினது நூல்களெனக கூறப் படுவனவும், இக்காலத்தே தயாரிகபப்ட்ட போலிகளே[2]. ஆகவே பைதாகரவாதத்தில ஆதி வரலாறு பெரும்பாலும ஊகங்களாலானதே ; ஆயினும் இவற்றைக் கொண்டு, கிரேகக சிந்தனையின் வரலாற்றில பைதாகரசுவின நிலையென்னவென்பதைப் பொதுப்படையான முறையிற் கணிக்க முயலலாம்.

மறுபிறப்புக கொளகை

42. முதலாவதாக, அவர் மறுபிறப்புக் கொள்கையைப் போதித்தாரென நாம் கண்டோம்[3]. திகயாக்கோசுவின் கூற்றுப்படி பைதாகரசு கொண்டிருந்ததெனப்படும், மனிதருக்கும் விலங்குகளுக்குமிடையே உறவுண்டெனும் பழைய நம்பிக்கையிலிருந்தே, மறுபிறப்புப் பற்றிய இக்கொள்கை விருத்தி செய்யப்பட்டிருகவேண்டுமென எளிதில் விளக்கிவிடலாம். விலங்குகளும் மனிதரும் இம்முறையில் ஒரே இனத்தவை எனும் நமபிக்கையுடையோர், சில உணவுவகைகளைத் தவிர்க்க வேண்டும் எனும் கொள்கையுடையோராயுமிருத்தலைக் காண்கிறோம், பைதாகரசின் விதியொன்றின்படி இத்தகைய தடைகள் விதிக்கப்படடன வென்பது நன்கு தெரிந்ததே. அயோனியாவிலிருந்து வரும்போதே பைதாகரசு இக்கருத்துக்களை ஏற்கெனவே தழுவியவராயிருத்தல் வேண்டும் என்பது உறுதியெனலாம். டீலோசுவிலுள்ள பலிபீடங்கள் யாவற்றிலும் மிகப் பழையதான, தந்தை அப்பொலோசுவின பீடத்திலொழிய மற்றைய இடங்களில், பைதாகரசு எவ்வகைப் பலியும் இட மறுத்தாரெனத் திமாயோசு கூறுகிறார். அப்பொலோசுவின் பலிபீடத்தில் உயிர்ப்பலி அனுமதிக்கப்படவில்லை[4].

இப்போசு எனபோரது காலத்திலேயே யாககப்பட்டது எனபதை அரித்தோதில் நனகுணர்ந்திருநதார ; ஏனெனில் இவர்களை வருணித்த பின்னர், பைதாகரசவாதம இவர் காலத்திலும் அதறகு முன்பும் நிலவியது எனக் கூறுகிறார்.

1. Porphyry, V. *Pyth.* 19 (R. P. 55).

2. See Diels, *Doxa*, p. 150.

3. 89 ஆம் பககதிற காணக.

4. See Diog. viii. 13.

43. பைதாகரசுவினுல் ஏற்கப்பட்ட புலால்மறுப்புக் கொள்கை பற்றிய போபைரி போன்ற மிகவும் பிந்தியகால எழுத்தாளர்கள் கூறுவனவற்றை ஏற்பது பொருத்தமுடையதோவெனச் சிலர் ஐயமெழுப்பியுள்ளனர். பைதாகரசு விலங்குகளினது இறைச் சியை உணணலாகாது எனப் பொதுவாகக் கூறவில்லையென வும், உழுவதற்குப் பயன்படும் எருது, செம்மறிக்கடா என்பன வற்றினையே உண்ணலாகாதெனக் கூறினரெனவும் அரித்தொ செனேசு தெளிவாகக் கூறியுள்ளார். அவரைக்காய், ஏனைய தாவரங்களினும் அதிகமாக வயிற்றை யிளக்குமியல்புடைய தாதலாற் பைதாகரசு அதனையே அதிகம் விரும்பினரெனவும், பன்றிக்குட்டிகளையும் ஏனைய மெனமை படைத்த இளம் கன்று களையும் உண்பதில் அவா பிரியமுடையவராய் இருந்தாரென வும் அரித்தொசெனேசு கூறினர். பைதாகரவாதிகள் புலால் உண்பதையும், அவரை யுண்பதையும் விலக்கினர் என அரித் தொசெனேசுவின் காலத்தினும் வழங்கி வந்த நம்பிக்கையை எதிர்க்கும் பொருட்டே அரித்தொசெனேசு இவ்வாறெல்லாம் கூறினர் என்பது பெரிதும் மிகைப்படுத்தப்பட்டனவான இக் கூற்றுக்களிலிருந்து புலனுகிறது. ஆனுல் பைதாகரசவாதிகள் இவ்வுணவு வகைகளை விலக்கினர் எனும் வரலாறு நவபைதா கரசவாதிகளினது காலத்திற்கு மிகவும் முன்பிருந்தே வழங்கி வந்ததெனும் உண்மையை அரித்தொசெனேசுவின் வார்த்தை களைக் கொண்டே நாம் நிரூபிக்கலாம் எனலாம். அரித்தொ செனேசு இவ்வாறு நடந்துகொண்டதற்குக் காரணம் அவர் பைதாகரசவாதிகளின் இறுதித் தலைமுறையினரின் நண்பரா யிருந்தமையே ; இவர்களது காலத்தில், கடுமையான இம் மறுப்புக் கொள்கைகள் பெரிதும் தளர்த்தப்பட்டிருந்தன. இன்னமும் இம்மறுப்புக் கொள்கையைத் தழுவுவோராயிருந்த சில தீவிரவாதிகளும், இக்காலத்தில் கழகத்தின் தலைமைப் பீடத்திலிருந்தோரால விலக்கப்பட்டனர்[1]. இனனமும் பழைய பைதாகரச கருத்துக்களைத் தழுவி நடந்தோர், புறநெறியாளர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் " அக்கௌசுமாத்திகள் " எனப் பெயரிடப்பட்டதுடன், உண்மையில் இவர்கள் இப்பாசோசு வின் சீடர்கள் எனவும் அவரது அந்தரங்க கொள்கைகளை வெளியிட்டதனுலேயே இவர்கள் அவரது குழுவிலிருந்து வெளி யேற்றப்பட்டனர் எனவும் கூறப்பட்டது. பைதாகரசுவின் உண் மையான வழித்தோன்றல்கள் கணிதவியலாளரே யெனக் கூறப் பட்டது. ஆனுல் மத்திய இன்பியல் நூலின் கவிஞர்கள் பற்றிய

புலால் மறுத்தல்

1. இவ்வாறிருந்தும், அரித்தொசெனேசுவினுற கூட, பெரிகைடிசு இறந்த போது, பைதாகரசு, டீலோசுவில் அவரை அடக்கஞ் செய்தார் எனும் உண மையைக குறிப்பிடாது மறைத்து வைகக முடியவில்லை யென்க.

அங்கதசித்திரம், அரித்தொசெனேசுவின் நண்பர்கள் புலால் மறுப்பு ஆதியனவற்றைக் கடைப்பிடிக்க வில்லையெனினும், நான்காம் நூற்றாண்டில் பைதாகரச வாதிகள் எனத் தம்மை அழைத்துக்கொண்ட பலர் இவற்றைக் கடைப்பிடித்தனர் என்பதை நிரூபிக்கிறது. மேலும், இவர்கள் இன்னமும் மெளன விதியையும் பின்பற்றினர் என ஐசோகிரத்திசுவின் மூலம் அறிகிறோம். அக்கௌசுமாத்திகள் பற்றிய உண்மை, வரலாற்றில் நன்கு உணர்த்தப்படவில்லை. ஆனால் அவர்கள் என்றும் முற்றுக அழிந்து போய்விடவில்லையென்க. அவர்களது காலத்திற்கும், தயனு நாட்டு அப்பொலோனியசுவுக்கு மிடையேயும் டையடோரசு, நிசிடியசு பிருலசு என்போர் அவ்விடைக்காலத்தே, அம்மரபைக் காத்தனர் எனலாம்.

மனிதர் உண்மையில் விலங்குகளினது உறவினரே யெனப் பைதாகரசு போதித்தாரென நாம் கண்டோம். இவரது புலால் மறுப்புக்கொள்கை வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் நிறுவப்பட்டதேயொழிய, துறவு மனப்பான்மையினாலோ அல்லது மன்னுயிர் நலன் பேணும் நோக்கத்தோடோ கடைப்பிடிக்கப்பட்டதல்ல என நாம் அனுமானிக்கிறோம். பொதுவாக, பைதாகரசவாதிகள் புலால் மறுப்பு விதியைக் கடைப்பிடித்தனரெனினும், தேவர்களுக்குப் பலியிடப்பட்டனவற்றை அவர்கள் உண்டனர் என போபைரி தனது "புலால் மறுப்பின் பெருமை" எனும் நூலிற் கூறியிருப்பதனால் இது நன்கு உறுதிப்படுத்தப்படுகிறது. இன்றும் புலால் உண்ணல் கொடிய பாவமெனக் கருதும் ஆதிவாசிகள் சிலரிடையே சில சடங்குகளின்போது விலங்குகளைக் கொன்று உண்ணல் அனுமதிக்கப் படுவதைக் காண்கிறோம். இங்கு நாம் காண்பதும் இத்தகைய ஆதாரமற்றவோர் நம்பிக்கையே ; எனவே, அரித்தொசெனேசுவின் மறுப்புக்களை நாம் பெரிதாய்ப் பொருட்படுத்தவேண்டியதில்லையென்க.[1]

அக்கௌசுமாத்திகள்

44. எமக்குக் கிடைத்துள்ள பைதாகரச விதிகளையும் உபதேசங்களையும் எவ்வாறு மதிப்பிடுவதென நாம் அறிந்து கொண்டோம். இவை இரண்டு வகையர்னவை; எமக்கு இவை

1. வீளையாட்டுவீரர்கள் (மைலோ ?) புலால் உண்ணவேண்டுமென பைதாகரசு கூறினரெனும் வரலாறொன்று போபைரியினாற் பேணப்பட்டுள்ளது. பொன்சோசுவைச் சேர்ந்த எரகிளீட்டசுவே இக்கதையின் கருத்தா என பேணியசு கூறியுள்ளார். அயம்பிளிகோசுவும் எனையோரும் இவ்வாறு கூறியது பைதாகரசு எனும் பெயருடைய உடற்பயிற்சி வீரரையே என விளக்கினர். நவபிளேட்டோ தரிசனவாதிகள் நான்காம் நூற்றாண்டில் எற்பட்ட புனர் விளக்கக் கொள்கைகளை நீக்கி, பழைய பைதாகர மரபைப் பேண எவ்வாறு முயன்றனர் என்பதை இங்கு காண்கிறோம்.

இரு எழுத்தாளர் மூலமாகக் கிடைத்துள்ளன. அரித்தொசெ னேசுவிடமிருந்து பெறப்பட்டவையும் பெரும்பான்மையாக அயாம் பிளிகோசுவினூற் பேணித் தரப்பட்டவையுமான சில, ஒழுக்கம் பற்றிக் கூறும் வெறும் உபதேசங்களே. இவை பைதாகரசிட மிருந்தே பெறப்பட்டனவென யாரும் கூற முற்படுவதில்லை ; இவை பைதாகரசவாதிகளின் கடைசித் தலைமுறையினரான "கணிதவியலாளர்" தமது முன்னோடிகளிடமிருந்து அறிந்து கொண்டவையே. மற்றைய வகுப்பைச் சேர்ந்த விதிகள் அக் கௌசுமாத்தா என அழைக்கப்படுவதிலிருந்து, பழைய கொள் கைகளே விசுவாசத்தோடு பேணிய, இபபெயருடைய பிரிவினரி டமிருந்தே இவை பெறப்பட்டிருக்க வேண்டுமென அறியலாம். பிற்காலத்து எழுத்தாளர்கள் இப்பின்னைய விதிகள் ஒழுக்க வியலுண்மையின "அடையாளங்கள்" எனக் கூறினர்; ஆனால் இவை உண்மையில் வெறும் ஆதாரமற்ற நம்பிக்கையின் அடிப் படையிற் பின்பற்றப்பட்ட விதிகளே எனபதை எளிதில் உணர லாம். பைதாகரசவாதிகளினது இயல்பை எடுத்துக் காட்டும் பொருட்டுச் சில உதாரணங்களைக் கீழே தருகிறேன்.

1. அவரைக்காயை விலக்குதல் வேண்டும்.
2. விழுந்தனவற்றை எடுக்கலாகாது.
3. வெள்ளைச் சேவல்களைத் தொடலாகாது.
4. உரொட்டியைப் பிய்க்கலாகாது.
5. குறுக்குத் தடிகளைக் கடத்தலாகாது.
6. நெருப்பை இரும்பினூற் கிளறக்கூடாது.
7. முழு உரொட்டியிலிருந்து உண்ணலாகாது.
8. மாலையைப் பிடுங்கலாகாது.
9. அளக்கும் கொத்தின்மேல் உட்காரக்கூடாது.
10. இதயத்தை உண்ணலாகாது.
11. நெடுஞ்சாலைகளில் நடக்கலாகாது.
12. தூக்கணங்குருவிகளைக் கூரையிற் கூடுகட்ட விடக்கூடாது.
13. பாத்திரத்தைத் தீயிலிருந்து அகற்றியதன் பின்னர் சாம்பரில் அதன் அடையாளம் இருக்காதவாறு அதனைக் கிளறிவிடவேண்டும்.
14. வெளிச்சத்திற்கு அருகே, கண்ணாடியிற் பார்க்கக்கூடாது.
15. படுக்கை ஆடைகளிலிருந்து எழும்போது, உடலின் அடையாளம் அவற்றில் இராதவாறு அவற்றைச் சுருட்டி வைத்தல் வேண்டும்.

பைதாகரசவாதத்திற்கும் பழைய ஆதாரமற்ற நம்பிக்கை களுக்குமிடையே யிருந்த நெருங்கிய தொடர்பை நிரூபிப்ப

தற்கு இன்னும் பல உதாரணங்களைத் தருதல் சாத்தியமே. ஆனால் மேலே தரப்பட்டவை போதுமானவை.

பைதாகரசும் விஞ்ஞானமும்

45. பைதாகரசுவின் போதனைகள் இவை மட்டுமேயெனில் மெய்யியல் வரலாற்றிலிருந்து நாம் அவரது பெயரை நீக்கி, எபிமெனிதிசு, ஒலுைமகிறித்தோசு ஆகியோரைப் போன்ற, வைததியர்களின வரிசையில் அவருக்கும் இடமளித்திருப்போம். ஆனால் அவ்வாறு எண்ணுவது மிகத் தவருனது. கிரேக்க நாட்டின் முக்கிய விஞ்ஞானக் கழகங்களில் ஒன்றுகப் பைதாகரச கழகம் வளர்ச்சியடைந்திருந்தது. அன்றியும் பைதாகரச விஞ்ஞானம், ஐந்தாம் நூற்றுண்டின் முற்பகுதியிலேயே, அதாவது கழகத்தின் தாபகராகிய பைதாகரசுவின காலத்திலிருந்தே தோனறியது எனக் கருத இடமுண்டு. விஞ்ஞான ஆராய்ச்சியை, வேறு எவரையும் விட விருத்தி செய்தவர் பைதாகரசுவே என எரக்கிளீட்டசு கூறியுள்ளார். இவர், பைதாகர சுவை உயர்த்திக் கூறும் பொருட்டே இவ்வாறு அவரைப் போற்றினர் எனக் கருத இடமில்லை. "எலனீசிய தார்க்கீகர்களுள் எவ்வகையிலும் எனையோரிலும் குறைந்தவரல்ல" என எரொடோதசு பைதாகரசுவைப் பற்றிக் கூறுகிறார்[1]. அக் காலத்தே "தார்க்கீகன்" (சோபிட்டு) என ஒருவர் அழைக்கப் படின அவர் விஞ்ஞான அறிவுடையவர் என்பது பொருளேயன்றி, அஃது அவரை எவ்விதத்திலும் இகழ்ந்து நவில்வ தாகாது. பைதாகரசு கணிதவியலிலும், எண்களிலும் பெரிதும் ஈடுபட்டிருந்தாரென அரித்தோதில் கூறுகிறார். ஆனால், அவர் பெரிகைடிசுவின் அற்புத ஈடுபாடுகளிலிருந்து தம்மைப் பினனர் விடுவித்துக் கொள்ளவில்லை யெனவும் அரித்தோதில் கூறுகிறார். பைதாகரசினது இவ்விருவகை நடவடிக்கைகளுக்குமிடையே யாதேனும் தொடர்பிருந்ததெனக் காட்டுதல் சாத்தியமாகுமா ?

ஓபிச களியாட்டச் சடங்குகளினதும் அத்தகைய எனைய நடவடிக்கைகளினதும் இலட்சியம், பண்பாடற்ற இத் "தூய்மையாக்க" முறைகளின் மூலம் பிறவிச் சக்கரத்திலிருந்து விடுதலை பெறுவதேயென முன்பு கண்டோம். பைதாகரசவாதத்தில் புதிய அம்சம் ஒன்று இருந்ததெனக் கூறுவதாயின், இப் பழைய நடவடிக்கைகளை எற்றபோதிலும், "தூய்மையாக்கம்" பற்றிய ஆழ்ந்த கருத்தொன்றைத் தரப் பைதாகரசவாதிகள் முயன்றனர் என்பதே அஃதெனலாம். உடலைத் தூய்மையாக்குவதற்கு எவ்வாறு மருந்துகளை உபயோகித்தனரோ அவ்வாறே ஆன்மாவிலிருந்து மாசுகளை அகற்றுதற்குப் பைதாகரச

1. Herod. iv. 95.

வாதிகள் இசையை உபயோகித்தனர் என அரிஸ்தொசெனுசு கூறினார். கொறிபாநதிசுகளினது களியாட்டங்களிலும், ஆன்மாவைத் தூய்மைப்படுத்துதற்கு இத்தகைய முறைகள் கையாளப்பட்டன. மேலும், பைதாகரசவாதிகள் இசையியலில் ஆர்வமுடையோராயிருந்தமைக்கும் இது விளக்கமாயமையும். ஆனால் இவ்விடயம் இனனும் ஆழமாகக் கவனிக்கத்தக்கது. எரக்கிளீட்டசு கூறுவது உண்மையானால், அரிஸ்தோதில் தமது ஒழுக்கவியலிற் குறிப்பிட்டிருக்கும், அறிவுவாழ்க்கை, ஆக்க வாழ்க்கை, போகவாழ்க்கை யெனனும் பிரிவை முதலில் உண்டாக்கியவர் பைதாகரசுவே எனல் வேண்டும். இக் கொள்கை பினவருமாறு : நாம் எல்லோரும் இவ்வுல கிற்கு வந்துள்ள அந்நியர்களே. எமது ஆன்மாக்கள் எமது உடல் எனும் சமாதியில் அடைபட்டிருக்கின்றன. ஆயினும் தற்கொலை மூலம் நாம் எம்மை விடுவித்துக்கொள்ள முயல லாகாது ; ஏனெனில் நாம் எல்லோரும் எமது பாதுகாவல் ஞகிய இறைவனின் அடிமைகள். அவன் ஆணையின்றி எம்மை விடுவித்துக்கொள்ள எமக்கு உரிமையில்லை[1]. ஒலிம்பிய விளை யாட்டுப் போட்டிகளுக்கு மூன்று வகையான மனிதர்கள் வரு வதைப் போல இவ்வுலகிலும் மூவகை மனிதர்கள் வாழ் கின்றனர். ஒலிம்பிய விளையாட்டுகளுககு வருவோரில் மிகத் தாழ்ந்தவர்கள் அங்கு பொருட்களை வாங்கவும் விற்கவும் வரும வர்களே. அவர்களை விடச் சிறிது உயர்ந்தோர் போட்டிகளிற் பங்குபற்ற வருவோர். அங்கு போட்டிகளைக் காண வருவோரே இவர்கள் யாவரிலும் உயர்ந்தவர்கள். எனவே தூய்மையாக்க முறைகள் யாவற்றிலும் சிறந்தது விஞ்ஞானமே. விஞ்ஞானத் தில் முற்றுக ஈடுபடுபவனே உண்மையான மெய்யியல் ஞானி யாவான். " பிறவிச் சக்கர " த்திலிருந்து தன்னைச் செம்மை யாக விடுவித்துக் கொள்பவன அவனே. பைதாகரசு தனது கொள்கையை, இத்தகைய வார்த்தைகளில் வெளியிட்டார் எனக் கூறுவது பொருந்தாது என்பது உண்மையே. ஆனால் இக் கருத்துக்கள் யாவும் பைதாகரசினுடையனவே என்பதில் ஐய மில்லை. அன்றியும் இதுபோன்ற வழியொன்றினலன்றி வேறு எவ்வகையிலும், பைதாகரசெனும் விஞ்ஞானிக்கும் பைதாகரசு எனும் சமய போதகனுகுமிடையேயுள்ள வேறுபாட்டை அகற்ற

1. பீடோவில (62 b) இதுவே பைதாகரசினது கொள்கையெனப் பிலோடோ கூறுகிறார். பீடோவில இதைகருறிப்பிடும் பகுதி இகுகருத்து பிலோலெசு வினுடையது மட்டுமல்லவெனவும் அவருக்கு முந்தியோர் காலத்திலிருந்து இது வழஙகியதெனவும் தெளிவாக உணர்த்துகிறது.

முடியாதென்க[1]. ஆனால், இவரது சீடர்களிற் பலர், குறைந்த தரமான தூய்மையாக்க முறைகளைப் பின்பற்றுவதோடு திருப்தியடைந்திருந்தால், ஆச்சரியப்படுவதற்கில்லை. அக்கொளசுமாத்திகள் போனற ஒரு பிரிவினர் தோனறியதற்கு இதுவே விளக்கமாயிருத்தல் வேண்டும். ஆனால் இவரது சீடர்களிற் சிலர் உயர்ந்தவழியைப் பினபற்றியிருக்கலாம். ஆகவே நாம் ஆராய வேண்டியது யாதெனில், பிறகாலத்தில் பைதாகரச விஞ்ஞானம் என வழங்கிய கொள்கைகளில் எவையெவை பைதாகரசினால் யாக்கப்பட்டவை எனபதே.

எண் கணிதம்

46. அக்கால வணிகர்களது தேவைக்கும் மேலாக எண் கணிதவியலை முதலில் விருத்தி செய்தவர் பைதாகரசே என அரித்தொசெனெசு எண்கணிதம் பற்றிய நூலிற் கூறியுள்ளார். நாம் பிற வழிகள் மூலம் அறிந்துள்ளனவும் அவரது கூற்றை உறுதிப்படுத்துகின்றன வெனலாம். கி.மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியளவில் இத்தகைய துறைகளிற் பலர் ஆர்வம் செலுத்துவதையும், வேறு நோக்கங்களெதுவுமில்லாமலே, கணிதவியல் போன்றவற்றைப் பலர் படிப்பதையும் காண்கிறோம்; இப்புதிய ஆர்வம் குறிப்பிட்ட வொரு கழகத்தினரின் நடவடிக்கைகளால் மட்டும் தூண்டப்பட்டது எனக் கூறுதல் பொருந்தாது; அக்காலத்து வாழ்ந்த அறிஞர் ஒருவரது செல்வாக்கினை காரணமாகவே இத்தகைய புத்துணர்ச்சி பரவுதல் சாத்தியமாகியிருக்க முடியும். பைதாகரசுவை விட வேறு யாரையும் நாம் இக்காலத்தே இத்தகைய செல்வாக்குடையவராக இருந்ததாகக் குறிப்பிடமுடியாது. ஆயினும் அவர் ஒன்றையும் எழுதி வைக்கவில்லை யாதலால், அவரது கொள்கைகளையும் அவருக்கு அடுத்த ஓரிரு தலைமுறைகளில் வாழ்ந்த அவரது சீடர்களது கொள்கைகளையும் பிரித்தறியும் வழியெதுவும் இல்லை. பைதாகரச கொள்கைகள் எவ்வளவுக்கு அதிக விருத்தியடையாதனவாகக் காணப்படுகின்றனவோ அவ்வளவுக்கு அவை பைதாகரசுவின் கொள்கைகளே யெனக் கருத இடமுண்டென மட்டும் நாம் கூறலாம். மேலும், இக்கொள்கைகளுள், பைதாகரசுவின் காலத்தில் அல்லது அதற்குச் சற்று முன்பாக வாழ்ந்

1. See Doring in *Arch.* v. pp. 505 sqq. எரக்கிளேட்டசுவின் 111 ஆது பகுதியிலும், "மூவகை வாழ்க்கைகள்" பறறிய இக்கொள்கை குறிப்பிடப்பட்டிருக்கிறதுபோல தோன்றுகிறது. பிளெயசுவிலிருந்த பைதாகரச கழகத்தில இக்கொள்கை கறபிக்கப்படடதுபோலும்; எனெனில பைதாகரசுவுக்கும பிளெயசுவின கொடுங்கோல மனனனுக்குமிடையே நடைபெற்ற உரையாடலினபோது, பைதாகரசு இககொளகையை வருணிப்பதாக எரகிளேட்டசு சிததிரித்துள்ளார். பிளேட்டோவும், பீடோவில, சோகிரதரை இவ்வாதத்தைக கையாள வைத்துள்ளார்.

தோரது காலத்தில் நிலவிய கொள்கைகளோடு அதிக தொடர் புடையனபோற் காணப்படுவனவற்றையும், பைதாகரசுவின் கொள்கைகளே என நாம் கருதலாம். அன்றியும், பிற்காலத்துப் பைதாகரசவாதிகள், தமது காலத்திற்கொவ்வாத கொள் கைகள் சிலவற்றைப் போதித்தனர் எனக் காணும் போதும், அக்கொள்கைகள் பைதாகரசுவின கொள்கைகளே யென நாம் அனுமானிக்கலாம்; ஏனெனில், இக்கொள்கைகள் எனும் கருத் திணுலேயே, அவை தமது காலத்திற்கு ஒவ்வாதனவாக ஆகி விட்டபின்னரும் அவர்கள் அவற்றைத் தழுவியிருந்திருக்க வேண் டும். இக்கொள்கை முறை பற்றிப் பின்னர் கூறுவதே பொருத் தமாயினும், இக்கருத்துக்களிற் சிலவற்றை இங்கேயே குறிப்பிடு தல் வேண்டும். முந்திய பைதாகரசவாதத்தையும் அதன பிநதிய வடிவத்தையும் தனித்தனியாகத் திட்டவட்டமாகப் பிரித்துக் காட்ட முடியாதெனினும் அவ்வாறு அவற்றைப் பிரித்துணராது, கிரேக்க சிந்தனை வரலாற்றில், பைதாகரசவாதத்திற்கு அளிக்க வேண்டிய இடம் பற்றிச் சரிவர மதிப்பிட முடியாது.

47. ஆக்கைத்தாசுவின் மறுக்கமுடியாத ஆதாரத்தின் பேரில், வடிவங்கள் இயூறைத்தோசு கூறியுள்ளது, பைதாகரசவாதம் பற்றி எமக் குக் கிடைத்துள்ள மிக முக்கியமான கூற்றுக்களிலொன்றுகும். இயூறைத்தோசு வென்பார் பிலோலெசுவின் சீடர்களிலொரு வராவார். அரித்தொசெஞ்சு, கடைசித் தலைமுறையைச் சேர்ந்த பைதாகரசவாதிகளின் ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடு கையில், பிலோலெசுவின் பெயரோடு இவரையும் குறிப்பிட் டுள்ளார். ஆகவே பைதாகரசவாதம் நன்கு விருத்தியடைந்தி ருந்த காலமான ஐந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்தவரான இவர் தற்போக்கான உற்சாகத்தாற் பீடிக்கப்பட்டவர் எனக் கொள்ள லாகாது. உண்மையில், அக்காலத்தில் வாழ்ந்த பைதாகரசவா திகளுள் முதன்மையானேரில் இவரும் ஒருவர்.[1] சூதிரைகள், மனிதர்கள் போன்ற பல்வகைப் பொருட்களுக்குமுரிய எண் களே இவர் கூறினரெனவும், பரற்கற்களைக் குறிப்பிட்ட வடிவங் களில் அடுக்கி வைப்பதன் மூலம் அவ்வெண்களின் பொருத்த முடைமையை நிரூபித்தா ரெனவும் கூறப்படுகிறது. அன்றியும் முக்கோணம், சதுரம்போன்ற வடிவங்களுக்குள் எண்களைப் புகுத்துவோரது முறையோடு, அரித்தோதில் இவரது முறையை ஒப்பிடுகின்றர்.

1. அயாம்பிளிகோசுவின் நூலில், பிலோலெசு, இறந்து பல ஆண்டுகள் கழிந்தகின பின்னர், இயூறைதோசு அவரது குரலை, அவரைப் புதைத்த இடத்திற் கேட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதைவிட நாம் குறிப்பிட்ட அரித் தொசெஞ்சுவின் பகுதியிலும் இயூறைத்தோசுவின் பெயர பிலோலெசுவின் பெயருக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டிருக்கிறது எனபதும் கவனிக்கத்தக்கது.

நெடுங்கணக்குக் குறியீடு, கோடுகளின் மூலம் செய்யப்படும் இயூக்கிளிட்டுவின் குறியீடு என்பனவற்றைவிட, தனியான எண் குறியீட்டுமுறை ஒன்றும் இக்காலத்தே பயன்பட்டது என்பது, இக்கூற்றுக்களால், குறிப்பாக, இறுதியாகத் தரப்பட்ட அரித் தோதிலினது கூற்றினாற் பெறப்படுகிறது. சூனியம்[1], இக் காலத்தே இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை யாதலால், நெடுங்கணக்குக் குறியீட்டை உபயோகிப்பதில் வசதிக் குறைவு கள் காணப்பட்டன. விஞ்ஞானமுறைக் கணியங்களின் கண்டுபிடிப்பால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தவிர்க்கும் பொருட்டுப் பயன்படுத்தப் பட்ட இயூக்கிளிடினது கோட்டுக்குறியீட்டு முறை, பிற்காலத்துக் குரியது. இலகுவாக இனங்கண்டு கொள்ளக் கூடிய சமசீருள்ள வடிவங்களாக அமைக்கப்பட்ட குற்றுக்களின் மூலமாகவே, எண் கள் முதலிற் குறிக்கப்பட்டனவெனத் தோன்றுகிறது. தாயக் கருவிகளிற் பொறிக்கப்படும் குற்று வடிவங்களிலிருந்து இவ் வடிவங்கள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டுமென ஒருவாறு ஊகிக்கலாம். மேலும், எண்களைக் குறிப்பதற்கு முற்காலத்தில் உபயோகிக்கப்பட்ட முறை இதுவே என்பதற்குத் தாயக்கருவிக ளில் இவ்வடையாளங்கள் காணப்படுவதே மிகச் சிறந்த நிரூ பணமெனலாம். எனெனில் மிகமிகப் பழைய காலத்திலி ருந்து உபயோகிக்கப்படுவனவான இக்கருவிகள், எண்களை இவ் வடிவங்களில் அமைப்பதன் மூலமே பொருட்களைக் கணக்கிடக் கூடிய நிலையில் மனிதர்கள் இருந்த காலத்திலும், உபயோ கத்தில் இருந்தனவெனலாம். அக்கால மனிதர்கள், தாம் இவ்வாறு அமைத்த புதிய வடிவங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் புதிய அளவையாகக் கருதினர்.

எனவே, " முக்கோணம், சதுரம் போன்ற வடிவங்களுள் எண் களைப் புகுத்தியவர்கள் " எனும் அரிததோதிலின் கூற்றை எம் மால் முதலில விளங்கிக் கொள்ள முடியாதிருக்கிறது. எண்கணி தத்தை, கேத்திர கணிதத்தோடு சேர்க்காது, ஒரு தனியான

[1]. கிரேகக கணித நூல்களிற காணபபடுமை குறியீட்டுமுறை கி. மு. 4 ஆம் நூற்றாணடிற்கு முனனரே பயனபடுததபபட்டிருகக வேணடுமை எனக கொள்ள ஆதாரங்களுள். அராபியரது எணகளென அழைககப்படுபவை, இந்தியராற் கணடு பிடிககபபட்டவை யெனப் பொதுவாகக கொளளபபடுகிறது. " இநதிய " எனப்பொருளபடுமை " இநதி " எனும் சொலலிறகுமை " கணிதம் சாரநத " எனப பொருள்படுமை " இநதாசி " எனும் அராபிய சொல்லிற்குமிடையே ஏற்பட்ட மயகமே இவ்வாறு கொளளபபடுவதறகுக காரணம எனபது விளக்கப்பட்டிருக்கிறது (M. Carra de Voux, Scientia, xxi. pp. 273 sqq.). நவபைதாகரசவாதிகளாற் கணடு பிடிககபபட்ட இவ்வெணமுறை நவப்பிளேட்டோ தரிசனவாதிகளால பராசீகததுகுக் கொண்டு செலலப்பட்ட தெனவும் அங கிருந்தே இந்தியாவுகும் பினனர் அரேபியாவுக்கும் பரவிய தெனவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

விஞ்ஞானமாக ஆராயும் கலைக்குப் புத்துயிரளித்தவர்களும், தம்மைப் பைதாகரசவாதிகள் என அழைத்துக்கொண்டவர் களுமான பிற்காலச் சிந்தனையாளர் சிலர் பற்றி அறிந்ததன் பின்னரே, அரித்தோதிலின் மேற்கூறிய கூற்றுக்கு எம்மாற் பொருள் காணமுடிகிறது. இவர்கள், இயூக்கிளிட்டினது கோட் டுக் குறியீட்டு முறையை விலக்கியதோடு, தாம் பயன்படுத்திய நெடுங்கணக்குக் குறியீட்டுமுறையும், எணகளின் உண்மையான இயல்பை உணர்த்துதற்கு உகந்தனவல்ல வெனக் கருதினர். கெரேசாவைச் சேர்ந்த நிக்கொமாக்கோசு, எண்களைக் குறிப் பதற்கு எழுத்துக்களை உபயோகிக்கும் முறை வெறும் வழக்கி னால் ஏற்பட்டதே யொழியத் தகுதிகாரணமாக ஏற்பட்டதல்ல வெனக் கூறினர். பகாவெண்களை வரிசையமைப்புக்களினாலும், வடிவ எண்களை ஒருதளவுருவங்களாலும், திணமவெண்களைக் கூம்பகம் போன்ற வடிவங்களாலும் குறியீடு செய்வதே இயல் பான முறையாயமைந்திருகும். இத்தகைய முறையைப் பின் பற்றுவதன்மூலம் கீழே தரப்பட்டுள்ளவை போன்ற வடிவங் கள் உண்டாகின்றன :

α	αα	α α α	α α α α	α α α α α	ααα ααα	α α α α α α α α α

இம்முறையில எத்தகைய புதுமையுமில்லை யென்பது வெளிப் படை. அமைப்புக்களில் அலகுகளாகப் பயனபடுத்தப் பட்டுள்ள " α " எனும் எழுத்து, வழக்கிலிருந்த குறியீட்டு முறையி லிருந்து பெறப்பட்டதேயென்பது உண்மையாயினும், இங்கு நாம் காண்பது உண்மையில் விஞ்ஞானத்தின் ஆரம்ப காலத் தைச் சேர்ந்த ஒரு முறையே யென்றறிக.

முக்கோண, சதுர, செவ்வகவுரு எண்கள்

48. அரித்தோதில் இம்முறை பற்றியே குறிப்பிடுகிறரென் பது வெளிப்படை. மனித இனத்திற்குப் பைதாகரசு உணர்த் தியனவற்றுள் மிகச் சிறப்புடையது அவர் கண்டுபிடித்த " நாற் கணம் " எனும் வடிவமே—பைதாகரசவாதிகள், சத்தியங்கள் செய்வதற்கும் இவ்வடிவத்தையே சாட்சியாகக் கொண்டனர் என்பதிலிருந்து, இதனை அவர்கள் எவ்வாறு மதித்தனர் என் பது புலனுகும்—எனக் கூறப்படுவதனலும் இது உறுதிப் படுத்தப்படுகிறது. அத்துடன் இக்கொள்கை முற்றிலும் பைதா கரசுவினதே எனக் கொள்வதற்குப் பியூசிப்போசுவினது கூற்றும் ஆதாரமாகவுளது.[1] பிற்காலத்தில் பலவகையான " நாற்கணங்

1. பிலோலெசுவின் கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டு பியூசிப்போசு பைதாகரச எணகள் பற்றிய நூலொனறை எழுதினர். இதிற பெரும் பகுதி *Theologumena Arithmetica* எனும் நூலில இன்னமும் பேணப்பட்டிருக்கிறது.

கள்" வழக்கிலிருந்தனவெனினும், பைதாகரசுவினால் ஆக்கப் பட்ட முதல வடிவம் "தசாங்க நாற்கணம்" என்பதே. அது கீழேயுள்ளது போன்றவோர் உருவமாகும்.



"பத்து" எனும் எண்ணே, நாலாலான முக்கோணமொன் றின் மூலம், இவ்வடிவம் காட்டிநறறு. ஒரேபார்வையில் 1+2+ 3+4=10 என்பதை இவ்வடிவம் உணர்த்தியது. தசாங்கத் திற் பைதாகரசு கண்ட வேறு பல அம்சங்கள் பற்றியும் பியூசிப் போசு கூறுகிறார். உதாரணமாக, தொகுப்பெண்களையும், பகாவெண்களையும் சமமான எணணிக்கையிற் பெற்றுளள முதல் எண் பத்தே. இவற்றுள் எவையெவை பைதாகரசு வினுடைய கருத்துக்கள் என்பது பற்றி நாம் முடிவாகக் கூறமுடியாது; ஆனால் "எலனீசியர்களும், மிலேச்சர்களும், பத்துவரைக்கும் எண்ணியதன் பின்னர் மீண்டும் புதிதாகத் தொடங்கி எண்ணும் முறையைக் கைக்கொண்டதற்குக் காரணம் அதுவே "இயற்கையான முறை" என்பதே எனும் கருத்து பைதாகரசுவினதே யெனக் கொள்ளப் போதிய நியாயமுண் டெனலாம்.

தொடர்ந்த முழுவெண்களின் கூட்டுத்தொகைகளைச் சித்திர வடிவிற் காட்டும் வண்ணம், இந்நாற்கணவடிவங்கள் வரைய றையின்றி மேலும் மேலும் அதிக அங்கங்களுடையனவாக அமைக்கப்படலாம் என்பது வெளிப்படை. அதற்கேற்ப, இவ் வெண்தொடர்களின் தொகைகள் "முக்கோணவெண்"களென அழைக்கப்படுகின்றன.

இதே காரணங்களினால், தொடர்ந்த ஒற்றையெண்களின் தொகைகள் "சதுரவெண்"களென அழைக்கப்படுகின்றன; தொடர்ந்த இரட்டை யெண்களின தொகைகளான எண்கள் "செவ்வகவுருவெண்"கள் என அழைக்கப்படுகின்றன. மூலை மட்டங்கள் போன்ற அமைப்புக்களில ஒற்றை எண்கள் சேர்க்கப் படும்போது உண்டாகும் வடிவம் எப்போதும் ஓர் சதுரமாகவே யிருக்கும்; இவ்வாறு இரட்டையெண்கள் சேர்க்கப்படும் போது ஏற்படும் அமைப்பு எப்போதும் நீள்சதுரவடிவமுடைய தாகவே யிருக்கும். இஃது எவ்வாறெனக் கீழே படத்திற்காண்க:

சதுரவெண்கள் செவ்வகவுருவெண்கள்



ஆகவே, தொடர்களின் தொகைகள் பற்றிய ஆராய்ச்சியை நடத்தியவர் பைதாகரசுவே என நாம் கொள்ளப்போதிய நியாயமுண்டென்பது தெளிவு ; ஆனால் செவ்வகவுருவுக்கு அப்பாலும் சென்று, கூம்பக வடிவ எண்கள், கனவடிவ எணகள் என்பனவற்றைப் பற்றியும் அவர் ஆராய்ந்தாரோ அல்லவோ என்பது பற்றி நாம் முடிவாக எதுவும் கூறமுடியாது.[1]

49. எண்களை இவ்வாறு குறியிடும் முறையிலிருந்து கேத்திர கணிதமும் இசையியலும் கேத் திர கணிதவியல்புடைய விஞக்கள் எழுதல் இயல்பே என்பது இலகுவாக உணரப்படும். பரற்கற்களைக் குறிகளும் குற்றுக்கள் வழக்கமாக " எல்லைக்கற்கள் " என அழைக்கப்படுகினறன ; இவற்றினுற் காட்டப்படும் பரப்பு " புலம் " என அழைக்கப்படும். இது அத்தனை வளர்ச்சியடையாதவோர் முறையாகக் காணப்படுகின்றதாதலால், பைதாகரசுவினுலேயே இம்முறை ஆரம்பிக்கப்பட்டதெனலாம். எண்களைப் போலவே " புலங்க "ளையும் ஒப்பிடலாம் எனும் எண்ணம் பைதாகரசுவுக்குத் தோன்றியிருக்கவேண்டும். அத்துடன் எகிப்தில, நடைமுறையில் இது பின்பற்றப்பட்டபோது கையாளப்பட்ட வழிகளையும் அவர் அறிந்திருந்திருக்கலாம். ஆனலும் பைதாகரசு அங்கு பின்பற்றப்பட்ட முறைகளைத் திருப்திகரமானவையாகக் கருதியிருக்க முடியாது என்பது உறுதி. இவ்விடயம்பற்றி அவர் எவ்வாறு சிந்தித்திருக்க வேண்டும் என்பதையும் நாம் வரலாற்றின் உதவி கொண்டு ஓரளவுக்குக் கற்பனை செய்து பார்க்கலாம். 3, 4, 5 எனும் அளவுகளைக் கொண்டு அமைக்கப்படும் முக்கோணங்களினுல் செங்கோணங்களை அமைக்கலாம் என்பதை அவர் அறிந்திருந்தார். எகிப்து போன்ற கிழக்கு நாடுகளில் இம்முறை ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டதெனவும், எலனிய நிடையே தேலிசுவினுலாவது இம்முறை புகுத்தப்பட்டிருக்க

1. " நாஜு " என்னும் எணணே முதறகருதப்பட்ட கூம்பகவெண்ணைனப் பியூபெபோசு கூறுகிறார். ஆனல அவர் இகருத்தைப் பிலோலெசுவிடமிருந்தே அறிந்து கொண்டாராதலால், இது பைதாகரசுவினது கருத்து என உறுதியாகக் கூறமுடியாது.

வேண்டுமெனவும் நாம் முன்பே கண்டோம் (பக். 20). பிற்கால எழுத்தாளர்கள், இவ்வாறு அமைக்கப்படும் முக்கோணத்தைப் "பைதாகரச முக்கோணம்" என அழைத்தனர். செங்கோண முக்கோணங்களில், செம்பககத்தின் சதுரம், ஏனைய இருபக்கங்களின் சதுரங்களுக்கும் சமமானது என்பதே, பைதாகரசுவின் எடுப்புக்களில் முதன்மையானதாகக் கருதப்படுகிறது. பைதாகரச முக்கோணம் எனப்படுவது, இவ்விதியின் மறுதலையை ஒரு தனிப்பட்ட வகையிற் பிரயோகிப்பதனால் அமைக்கப்படுவதே. செம்பக்கம் எனப் பொருள்படும் கிரேக்க சொல்லே, மேற் கூறிய விதிக்கும், முக்கோணவமைப்புக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பை நனகு உறுதிப்படுத்துகிறதெனலாம். இக்கிரேக்க சொல்லின் நேரடியான பொருள் "மேலே, எதிராக இழுத்துப் பூட்டப்பட்டிருக்கும் நாண்" என்பதேயாகும். எகிப்திய ஆப்பெடொனூட்டுக்கள் பயன்படுத்திய கயிறே இந்நாண் என்பதில் ஐயமில்லை. ஆகவே, இவ்வெடுப்பு உண்மையில் பைதாகரசுவினாலேயே கண்டுபிடிக்கப்பட்டது என எணண இடமுண்டு. ஆனால், இதுபற்றி உறுதியாக நாம் எதுவும் கூறமுடியாதென்பதும், இவ்வெடுப்பை நிரூபிக்க இயூக்ளிட்டுத் தரும் வாதம் இவருடைய தல்ல வென்பதும் உண்மையே[1].

பொதுவள வினமை

50. ஆனால் இவை யாவற்றுக்கும் பின்னர் பைதாகரசு, பெரிய எமாற்றம் ஒன்றை அடையவேண்டியிருந்தது. சதுர மொன்றினது மூலை விட்டத்திலுள்ள சதுரம், அதனது பக்கத்திலுள்ள சதுரத்தைப் போலவே இருமடங்கு அளவானதாய் இருக்கவேண்டுமென்பது, பைதாகரசுவின் விதியிலிருந்து நேரடியாகப் பெறப்படுகிறதாதலால், கணிதரீதியாகவும், இதனை நிரூபித்துக் காடடக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் உண்மையில், சமமான இருவர்க்க எண்களாகப் பிரிக்கப்படக் கூடிய வர்க்க எண் எதுவும் இல்லையாதலால், இப்பிரச்சினை தீர்க்க முடியாததாய் உளது. ஆகவே, சதுரத்தின் மூலை விட்டத்திற்கும், பக்கத்திற்குமிடையே உள்ள பொதுவளவின்மையைக் கண்டு பிடித்தவர் பைதாகரசுவே என்பது உண்மையாயிருக்கலாம். அன்றியும், சதுரத்தினது பக்கமும் மூலை விட்டமும் பொதுவளவுடையனவெனின், ஒற்றை எண்ணும், இரட்டை எண்ணும் சமமானவை எனக் கூற வேண்டியதாகும் என அரித்தோதிலினாற் குறிப்பிடப்படும் வாதமும், பைதாகரசு வினைப் போலத் தோன்றுகிறது என்பது உண்மையே. அஃது எவ்வாறாயினும், இவ்விடயம் பற்றி மேலும் ஆராய்வதில், பைதாகரசு அதிக அக்கறை காட்டவில்லை என்பது தெளிவு. இரண்டின் வர்க்க மூலமும், ஓர் விதிதமுறு மூலம் என்பதை

1. See Proclus's commentary on Euclid i. 47.

எதாவது ஒரு வழியில் இவர் அறிந்து கொண்டிருக்கலாம்; ஆனால் விகிதமுறுவெண்கள் பற்றிய பூரண கொள்கையொன்றை அமைத்த பெருமை உண்மையில் பிளேட்டோவின் நண்பர்களான தியொடோரசு, தியாய்த்தித்தோசு என்போரையே சேரும் என்பது நாம் அறிந்ததே.[1] அதுவரை, சதுரத்தினது மூலவிட்டத்திறகும் பக்கத்திற்குமிடையே யுள்ள பொதுவளவின்மை பற்றிய இப்பிரச்னை "தீர்க்கப்படாதவோர் புறனடை" யாகவே யிருந்தது. மெற்றபொந்தியோனைச் சேர்ந்த இப்பாசோசு வென்பான, இதைப்பற்றி வெளியே கூறிய குற்றத்திற்காகக் கடலில மிழ்த்தப்பட்டுக் கொல்லப்பட்டானெனவும் எமக்குக் கிடைத்த வரலாறு கூறுகிறது.[2]

விகிதசமமும இசைவும

51. இயூக்கிளிட்டினது நூல்களில், முதலுள்ளனவற்றை **ஆதி** பைதாகரசவாதிகளுடையன வெனக் கூறலாமெனினும், அவருடைய கணித முறையை இவர்களினதெனக் கூறமுடியாதென்பது மேலே இறுதியாகக் கூறியனவற்றிலிருந்து தெளிவாகியிருக்கும். அலகுகளையன்றிக் கோடுகளை இக்கணிதமுறை பயன்படுத்தியதாதலால், விகிதமுறுமெண்களின் சமனபாடுகளாகக் காட்டப்பட முடியாத தொடர்புகளுக்கும் இம்முறை பிரயோகிக்கப்படலாம். இதனுற்றான் போலும், இயூக்கிளிட்டினது நூலில் கேத்திரகணிதத்திற்குப் பிறகே எண்கணிதம் பற்றிக் கூறப்படுகிறது. இதே காரணத்தினுறறான விகிதசமம் பற்றிய கொள்கையையும் பைதாகரசுவினுற் கண்டுபிடிக்கப்பட்ட தெனக் கூறமுடியாதிருக்கிறது. அது உண்மையில் இயூடொக்சோசுவினது கொள்கையே. ஆனால் ஆதிபைதாகரசவாதிகளும் சமன்பாட்டுக் கொள்கையை ஓரளவுக்கு ஆராய்ந்தனரா என்றே கூறவேண்டும். விகிதசமன்கள் பற்றிப் பைதாகரசவாதிகள் கொண்டிருந்த கொள்கைகளில் முக்கியமானதான இசைவுபற்றிய கொள்கை பைதாகரசுவின் கண்டுபிடிப்பான அட்டசுரத்தோடு தொடர்புடையதாகக் காணப்படுகிறதாதலால், விகிதசமன்கள் பற்றி ஆதிபைதாகரசவாதிகள் அல்லது பைதாகரசாவது ஆராய்வுகள் நடத்தினர் என நாம் நம்பலாம். **12 : 8 : 6** எனும் இசை விகிதத்தை எடுத்துக் கொணடோமானால் **12 : 6** என்பது எட்டாவது சுரம் எனவும் **12 : 8** என்பது ஐந்தாவது சுரம் எனவும் **8 : 6** என்பது நாலாவது சுரம் எனவும் அறிகிறோம். இதனை உணர்வோர் இவ்விடைவெளிகளைக் கண்டுபிடித்தது பைதாகரசுவே என்பதைச் சந்தேகிக்க நியாயமில்லை. இவர் இவ்விசை

1. **Plato.**, *Theaet.* 147 d 3 sqq.

2. அயாம்பிளிகோசுவிடமிருந்தே இவவரலாறு எமக்குக் கிடைத்திருக்கிறது. இதறகுப் பிந்தியது போற் காணபபடும வேறேர் வரலாற்றைப பின்னர் காண்போம் (பிரிவு 148).

விடைவெளிகளே முதலில் ஓர் பட்டடையிலேயே அவதானித்தன ரெனவும், பின்னர் அவற்றுக்குக் காரணமான சுத்தியல்களே அல்லது அவற்றுக்குச் சமமான நிறைகளேச் சம அளவுடையன வான நூல்களிற் கட்டிப் பரிசோதனை செய்தனரெனவும் வழங்கும் கதைகள் யாவும் உண்மையில் அபத்தமான கற்பனைகளே; இவை எவ்வாறு உண்டாயினவெனக் காரணங்காண முனைவதும் நேரத்தை வீணுக்குவதாகும். ஆனால் எமது ஆராய்ச்சியைப் பொறுத்தவரை, இவை இவ்வளவு அபத்தமானவையாய் இருப்பதே இவற்றில் நாம் காணக் கூடிய பெரும் சிறப்பாகும். ஏனெனில், இத்தகைய கதைகளே, எந்தக் கிரேக்க கணிதவியலாளனும் புனைந்திருக்க மாட்டான் என்பதும், பைதாகரசுவே இம்முக்கிய கண்டுபிடிப்பின் கருத்தாவெனக் கூறிய வரலாறு ஒன்று அக்காலத்தே மக்களிடையே வழங்கியது என்பதும், இக் கதைகளின் தன்மையினூற் றெளிவாகின்றன. ஆனால், ஒத்திசைகளே, ஒற்றைநாண்கருவியில் அவற்றுக்கிணையான அளவுகளேக் காண்பதன் மூலம், பைதாகரசு கண்டுபிடித்தாரென்பது முற்றிலும் நம்பத்தகுந்ததே. இது ஒலியியலோடும் பொருந்துவதே யென்க.

பொருட்கள் எண்களே யெனல்

52. இக்கருத்துக்களே, பொருட்கள் யாவும் எண்களே எனப் பைதாகரசு கூறியதற்குக் காரணமாயிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லே. இவற்றுக்குச் சிறிது பிந்திய காலத்தே வாழ்ந்த பைதாகரசவாதிகள் இவ்வெண்கள் கேத்திரகணித உருவங்களே யெனக் கூறினர்; ஆனால் "எண்கள்" எனும் பெயர் கையாளப்பட்டமையையும், இயூறைத்தோசு கையாண்ட முறையையும் நோக்கும்போது, இக்கொள்கை முதலில் இப் பொருளிற் கருதப்படவில்லே என்பது புலனுகிறது. பைதாகரசுவின் சிந்தனே பின்வருமாறே செயற்பட்டிருக்கவேண்டுமென நாம் கருதலாம். இசையொலிகளே எண்களாகக் கருதலாமெனின், வேனய பொருள்களே ஏன் அவ்வாறு கருதக் கூடாது? பொருள்களில் எண்களுக்கு ஒப்பான இயல்புகள் பல இருப்பதைக் காண்கிறோம். நல்வாய்ப்பிருந்தால், அட்டசுரம் கண்டுபிடிக்கப்பட்டதுபோல, பரிசோதனே யொன்றின் மூலம் பொருள்களின் உண்மையான "எண் இயல்பு"ம் எமக்குப் புலப்படலாம். நவபைதாகரச எழுத்தாளர்கள், பிறவிடயங்களில் தாம் பின்பற்றிய வழியைத் தொடர்ந்து, தமது கழகத்தின் மிகப் பழைய கருத்துக்களேத் தழுவி, தமது கற்பனைக்கேற்ற வாறெல்லாம் பொருள்களுக்கும் எண்களுக்குமிடையே பல்வேறு வகையான ஒற்றுமைகளேயும் காண முனைந்திருக்கின்றனர்; ஆனால் அதிட்டவசமாக, அவர்களது முயற்சிகளேயெல்லாம் கவனிக்கவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கில்லே. ஒரு சில பொருள்களே

மட்டுமே பைதாகரசு எணகள் மூலம் விளக்கினுர் என அரித் தோதில தெளிவாகக் கூறியுள்ளார்[1]. ஆகவே, பைதாகரசு இது பற்றிய பூரணமான கொளகையெதனையும் விட்டுச் செல்ல வில்லை யென்பதும், ஐந்தாம் நூற்றுண்டைச் சேர்ந்த பைதாகரச வாதிகளும் இக்கொள்கையை மேலும் விருத்தி செய்வதில் எத்தகைய ஆர்வமும் காட்டவிலலையென்பதும் இதிலிருந்து பெறப்படுகின்றன. ஆனல, " தக்கசமயம் " என்பது ஏழு என வும், நீதி நாலு எனவும், திருமணம் மூன்று எனவும் இவர்கள் கருதினர் என அரித்தோதில கூறியுள்ளார். இவையும் இவை போன்ற சிலவும் பைதாகரசுவினுல் அல்லது அவருக்கடுத்த தலைமுறையில் வாழ்ந்த அவரது சீடர்களினுற் கூறப்பட்டனவே யெனக் கொள்ளலாம் ; ஆனல் இவற்றுக்கு நாம் அதிக முக்கியத்துவமளிக்கலாகாது. நாம் இவ்வொப்புமைகளிலிருந்து எமது ஆராய்ச்சியை ஆரம்பிக்காது, மைலீசிய கொள்கைக ளோடு தொடர்புடையனபோற் காணப்படும் கூற்றுக்களிலிருந்தே ஆரம்பித்தல் வேண்டும். எனெனில், அவையே இக்கொள்கை ஆரம்பத்திலிருந்த நிலைபற்றி எமக்குக் கூறுவன.

53. பைதாகரச கழகத்தின் ஆரம்பகாலக் கொள்கை பற்றிக் அண்டவியல கூறும் கூற்றுக்களிற் குறிப்பிடத்தக்கதாய் உள்ள வொன்று அரித்தோதிலினதாகும். வானத்திற்கு வெளியே " வரம் பற்ற மூச்சு " இருந்ததெனவும் பூமி அதனைச் சுவாசித்ததென வும்[2] பைதாகரசவாதிகள் கூறினரென அரித்தோதில் கூறு கிறர். பொருளளவில் இது அனக்சிமினிசுவாற் போதிக்கப்பட்ட கொளகையேயாகும். பின்னர் செனோபனிசுவால் இக்கொள்கை மறுக்கப்பட்டது என்பதைக் காணும்போது, பைதாகரசுவும் இக் கொள்கையைப் போதித்தார் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இக்கொள்கை மேலும் விருத்தி செய்யப்பட்டதற்கும் பைதா கரசுவே காரணம் என நாம் ஊகிக்கலாம். முதலாவது அங்கம்—அஃது எவ்வாறு நடைபெற்றதெனினும்—தோன்றிய தன் பின்னர், வரம்பற்றதில மிகவும் அணித்தாக இருந்த பகுதி உள்ளிழுக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டது ;[3] இவ்வாறு உள்ளிழுக்கப்பட்ட வரம்பற்றதின் பகுதியே, அங்கங்கள் யாவற் றையும் ஒன்றேடொன்று சேராது பிரித்து வைத்திருக்கிறது. வரம்பற்றதிலிருந்து உள்ளிழுக்கப்பட்ட பகுதியே இவ்வங்கங்களுக் கிடையேயுள்ள வெளியாகிறது. சார்பிலாது தனிப்பட்ட கணிய மெனும் கருத்தை உணர்த்துதற்கே இவ்வாறெல்லாம் வருணிக் கப்பட்டதென்க.

1. Arist. Met. M, 4. 1078, b 21 (R. P. 78).
2. Arist. Phys. Δ 6. 213, b. 23 (R. P. 75a).
3. Arist. Met. N, 3. 1091 a 13 (R. P. 74).

அரித்தோதிலிடமிருந்து பெறப்பட்ட இப்பகுதிகளில், "மூச்சு", வெளியென அல்லது வெறுமையானதென வருணிக்கப்படுகிறது. அனக்சிமாந்தரது கொள்கையிலும் இம்மயக்கத்தை நாம் கண்டோமாதலால், இங்கு இதனைக் காண்பதையிட்டு நாம் ஆச்சரியமடையவேண்டியதில்லை. வளிக்கும், பனிக்கும் வேறுபாடு காணுததால் எற்படும் மயக்கம் இங்கும் எற்பட்டதற்கான சான்றுகளையும் காண்கிறோம். பைதாகரசு எல்லையைத் தீயெனவும், வரம்பற்றதை இருளெனவும் கூறினரென்பது பற்றி எவ்வகையான சந்தேகத்திற்குமிடமிலலைப் போலத் தோன்றுகிறது. இப்பாசோசு தீயே மூலதத்துவமெனக் கூறினரென அரித்தோதில் மூலமாக அறிகிறோம்.[1] பார்மனைடிசு தமது காலத்தவர்களது கொள்கைகளைப் பற்றிக் கூறுகையில், தீ, இரவு[2] எனும் இரண்டுமே முதற்றத்துவங்கள் என அவர்கள் கருதினர் எனக் கூறுகிறார். பைதாகரச மூரண்பாட்டு அட்டவணையிலும், ஒளியும் இருளும், முறையே எல்லை, எல்லையற்றது எனும் தலைப்புகளின் கீழ்த்தரப்பட்டிருப்பதையும் நாம் காணலாம்.[3] மூச்சு என்பதற்கும் இருளுக்கும் இங்கு வேற்றுமை காணப்படாதிருப்பதிலிருந்து, இக்கொள்கை கொஞ்சமேனும் வளர்ச்சி பெறுதலொன்று என்பது நன்கு நிரூபிக்கப்படுகிறது ; எனெனில் கி.மு. ஆரும் நூற்றாண்டிற்றான இருள் என்பது ஒருவகை ஆவி எனும கருத்து நிலவியது. ஐந்தாம் நூற்றாண்டில் அதனது உண்மையான தன்மை உணரப்பட்டிருந்தது. பிளேட்டோ, வரலாற்று ரீதியான விடயங்களைக் கையாளுவதில் தனக்குள்ள வழமையான சாமர்த்தியத்தோடு பைதாகரசவாதியான திமாயோசுவை, இருளும் பனியும், அடர்த்தியுறற வளியேயெனக் கூற வைக்கிறார்.[4] எனவே, இருளாலான புலமொன்றில, பிரகாசமூள்ள ஒளித்திட்டுக்களிருப்பதாக நாம் கற்பனை செய்து கொள்ளவேண்டும்—உடுக்கள் நிறைந்த வானத்தைக் காணும் போது இக்கற்பனை இயல்பாகவே தோன்றுகிறது. உலகம் ஒன்றல்ல, பல உள எனும் மைலீசிய கருத்தையும், பைதாகரசு ஏற்றுக்கொண்டார் எனக் கூறவும் இடமுண்டெனலாம். அதிலும் அவை எண்ணிறந்தன எனக் கூறுவதே பைதாகரசுவின் கொள்கைக்கு ஏற்றதாயிருந்திருக்கும் எனல் பொருந்தும். ஆதி பைதாகரசவாதிகளுள் ஒருவனுகிய பெட்ரோன் என்பான், எல்

1. **Arist. Met. A., 3. 984 a 7(R. P. 56 c).**
2. **அத். 4.91 ஆம பிரிவிற் காண்க.**
3. **Arist. Met. A., 5. 986 a 25 (R. P. 66).**
4. **Plato, Tim. 58 d 2.**

லாமாக நூற்றெண்பத்துமூனறு உலகுகள் இருந்தன வென வும், அவை முக்கோணவடிவான ஒழுங்கில் அமைந் திருந்தன வெனவும் கூறியுள்ளான்.

54. வானசோதிகள் யாவும் தீ நிறைந்த வளிச்சில்லுகள் வானசோதி
எனவும் அவற்றிலுள்ள சில துவாரங்களுக்கூடாகத் தீ வெளி கள்
யேறுகிறதெனவும் அனக்சிமாந்தர் கூறினர் (பிரிவு 21). பைதா கரசுவும் இக்கருத்தையே தழுவினர் எனக் கருத இடமுண்டு[1]. வானசோதிகளான சில்லுகள் மூன்று இருந்தனவென அனக் சிமாந்தர் கருதினரெனவும் கண்டோம். பைதாகரசு தான் கண்டுபிடித்த நான்காவது, ஐந்தாவது, எட்டாவது இசையிடை களுக்கும், வானசோதிகளான இம்மூன்றுக்குமிடையேயும் ஒப் புமை கண்டிருக்கலாம். "கோளங்களின் இசைவு" பற்றிய கொள்கை, இவ்வொப்புமையிலிருந்து ஆரம்பித்ததெனக் கரு துவதே மிகவும் பொருத்தமான தென்க. ஆனால் பைதாக ரசுவின் கொள்கை எதனையும் கோளங்களின் இசைவு பற்றிய கொள்கையென அழைப்பின் அது இருவழிகளில் தவருகும். பைதாகரசு உபயோகித்த பதத்தின் பொருள் அட்சுரம் என் பதே யொழிய இசைவு என்பதல்ல. மேலும் கோளங்கள் எனும் சொல்லைப் பைதாகரசுவின கொள்கையிற் சேர்ப்பது காலவழுவாகும். ஏனெனில் இவரது காலத்தேயும் சக்கரங்கள் அல்லது சில்லுகள் எனவே வானசோதிகள் விளக்கப்பட்டன.

கிழக்கு மேற்காக நடைபெறும் பூமியினது நாளாந்த சுழற் சிக்கும், மேற்கிலிருந்து கிழக்கை நோக்கிப் பூமியிலும் குறை வான வேகத்தில்; சூரியன சந்திரன் கிரகங்கள் என்பன செல் வதற்கும் இடையேயுள்ள வேறுபாடும் பைதாகரசு கழகத்தின் ஆரம்பகாலத்திற் கண்டு பிடிக்கப்பட்டவொன்றே யெனக் கூறி விடலாம். உண்மையில் இவ்வேறுபாட்டை முதலில் உணர்ந்த வர் பைதாகரசுவே எனக் கூறினும் பொருந்தும்.[2] இக்கருத்தை ஏற்றுக்கொள்வதானால், சூழிக்கொள்கை கைவிடப்படவேண்டு மென்பதும் அண்டம் கோளமானது எனும் கருத்தே பொருத்த மானதாகக் கொள்ளப்படவேண்டுமென்பதும் தெளிவு. ஆனால்

1. அத. 4.93 ஆம் பிரிவிற் காண்க.

2. பிளேட்டோ இதனை ஓர் புதுமையாக எடுத்துக்காட்டுகிறார் என எண்ணி, நான இக் கொள்கையின் உண்மையைச் சந்தேகித்தேன். ஆனால் பேராசிரியர் ரெய்லர் எனது கருத்துத் தவருனது என எனக்கு உணர்த்தியுள்ளார். பிளேட்டோ மறுப்பது (*Laws* 822 a) இகொள்கையையே. அவர் புகழ்வது புதிய உருவதிலமைநத சிக்கலற்ற வியககம் பற்றியவோர் கொள்கையையே எனலாம். இது பிளேட்டோ பிறகாலதில உணர்நதவோர் விடயமெனலாம். குடியரசு, திமாயசு ஆகிய நூல்களில சிககலான இயக்கம் பறறிய பைதாகரச கொளகையே காணப்படுகிறது.

அனக்சிமாந்தரது கொள்கையிலுள்ள சிக்கல்களிலிருந்து தப்புவதற்கு இது ஒன்றே சாத்தியமான வழியாயிருந்தது. முடிவாகக் கூறுவதாயின, சூரியன், சந்திரன், கிரகங்கள் ஆகிய யாவற்றினது இயக்கங்களும் வேறுவேறான இயல்பின வெனவே கூறுதல் வேண்டும். மாறுபடக்கூடிய, கோணவேகத்தோடுகூடிய தமக்கியல்பான சுழற்சிகளை யுடையனவாயிருப்பதோடு, இவை நாளாந்த சுழற்சியின் காரணமாகக் கிழக்கு மேறகாகவும் கொண்டு செல்லப்படுகின்றன. வானமையரேகைக்குச் சாய்வாக அமையும் கிரகங்களின் ஒழுக்குகள நாளாந்த சுழற்சியின், சத்திக்கு உட்படுகின்றன எனக் கூறுவதன மூலம் இவற்றின் இயக்கத்தின் தன்மையை வருணிக்கலாம். தெமோகிரித்தோசுவின் காலம்வரை, அயோனிய சிந்தனை மரபினர் இக் கருத்தினை வற்றுக்கொள்ள மறுத்தனர். வானசோதிகள் யாவும் ஒரே திசையிற் சுழல்கின்றன எனும் சுழிக்கொள்கையையே அவர்கள் தழுவி நின்றனர். இக்கொள்கையினபடி, பைதாகரச கொள்கையின்படி மிகக் கூடிய கோண வேகத்தையுடைய வானசோதிகளே, மிகக் குறைந்த வேகத்தையுடையனவாகக் கருதப்பட்டன. பைதாகரசு கொள்கைப்படி, சனி, மூப்பது ஆண்டுகளிற் கொருமுறை சுழல்கிறது ; அயோனிய கொள்கைப்படி, கிரகங்கள் யாவற்றிலுள்ளும் மிகக் குறைந்த வேகதையுடையது இதுவே. அதாவது இராசிகளினது வேகத்திற்குச் சமமான வேகமுடையது எனக் கருதப்படக்கூடியது சனியே என லாம்.

அயோனியர்களாலும், அனக்சகோரசு தெமோகிரித்தோசு போன்றோராலும் மறுக்கப்பட்டதான, பூமி கோளவடிவினதே யெனும் உண்மையைக் கண்டு பிடித்தவர் பைதாகரசுவே யென நாம் உறுதியோடு கூறலாம். இதற்கான ஆதாரங்களை நாம் பின்னர் காண்போம். ஆனால் பூமியைச் சுற்றி வரை உடுக்கள் சுழன்றனவெனவே பைதாகரசு கருதினரெனவும், பூமியும் ஒரு கிரகமே யென்பது பிற்காலத்திலேயே கணடுபிடிக்கப்பட்டது எனவும் தோன்றுகிறது (பிரிவு 150).

பைதாகரசுவின் கொள்கைகள் பற்றி நாம் இதுவரை கூறியவை பெருமளவிற்கு எமது ஊகமே என்பதோடு, இவ் வருணனை பூரணமான தல்ல வெனபதையும் குறிப்பிடல் வேண்டும். பைதாகரச கழகத்தினரின் கொள்கைகளெனப்படுவனவற்றில் மிகவும் பழமையானவையாய்க் காணப்படுவன வற்றை நாம் பைதாகரசுவின் கருத்துக்கள் எனத் தீர்மானித்துள்ளோம். இவ்வாறு தீர்மானித்தற்கு நாம் ஆராயந்த சான்றுகளையும் நாம் இங்கு முற்றுகத் தரமுடியவில்லை. பிற்கால பைதாகரசவாதிகளின் கொள்கைகளையும், பார்மனைடிசுவின் கவி

தையின் இரண்டாவது பகுதியையும் நாம் ஆராய்ந்ததன் பின்னரே, பைதாகரசு பற்றி நாம் கூறியவறறின் உண்மையான தன்மை புலப்படும்[1]. எளிய, எண் விகிதங்களின் மூலம் இசைவுடைய இசையிடைகளைக் குறிப்பிடலாம் எனக் கண்டு பிடித்தமையே விஞ்ஞான வளர்ச்சிக்கு அவர் செய்த மிகப் பெரிய பணியென்பது வெளிப்படை. பைதாகரசுவின இக்கண்டு பிடிப்பைத் தொடர்ந்து வழமையாக, "முரண்பாடுகள்" என அழைக்கப்பட்டவை பற்றிய புதிய கொள்கை ஒன்று உருவாகவும் வழியேற்படுகிறது. இவ்விதங்களை அவதானிப்பதன்மூலம் உயர்ந்தனவற்றிற்கும் தாழ்ந்தனவற்றிற்கு மிடையே இசைவுண்டாக்க முடியுமானால், அதே முறையில் எனைய முரண்பாடுகளிடையேயும் இசைவேற்படுத்தலா மெனபது தெளிவு. சூடு-குளிர், வறட்சி-ஈரலிப்பு எனும் முரண்பாடுகள் யாவும் சம நிலையடையும் வகையில் இணைக்கப்படலாம்[2]. யாவரும் நன்கு அறிந்ததான இடைக்கோட்பாடு என்பதும், பைதாகரசுவின் இசைவு முறையை ஒழுக்கத்துறையிற் பிரயோகிப்பதனால் ஏற்பட்டதே[3]. பைதாகரசுவின் காலத்திறகுப் பின்னர், கிரேக்க மெய்யியல் முழுவதையுமே "பூரணமாகச் சுருதி கூட்டிய தந்தி" யெனும் இலட்சியம் வியாபித்து நின்றது எனினும் மிகையாகாது.

II—கொலொபோன் நாட்டு செனோபனிசு

55. பைதாகரசுவின் கொள்கைகளின மூலம், அக்காலத்துச் சமய இயக்கங்களுக்கு ஆழ்ந்தவோர் பொருளேற்பட்டதெவ்வாறு என்பதைக் கண்டோம். கவிஞர்களாற் புகுத்தப்பட்ட கடவுட் கொள்கைகளுக் கெதிராகத் தோன்றிய, முற்றிலும் வேறு விதமான விளைவொன்றை நாம் இங்கு ஆராய்தல் வேண்டும். செனோபனிசு தனது காலத்தே நிகழ்ந்த சமய மறுமலர்ச்சியைப் பற்றிச் சற்றேனும் கவனியாதிருந்தாரெனினும், தெய்வங்களை மனித இயல்புடையோராகக் கருதுவதை முற்றுக

வாழ்க்கை

1. அத். 4, பிரிவு 92–93 ஐயும் அத். 7, பிரிவு 150—152 ஐயுங் காண்க.

2. தோற்றனது இரசாயனச் சேர்கைக கொளகைக்ம மேலே தரப்பட்ட இசைவுக கோட்பாட்டிற்குமிடையே உளள ஒற்றுமைனையக் கண்டு வியப்படையாதிருகக முடியாது. இனறைய இடத்திண்ம இரசாயனவியலாரது படக குறியீடுகளும் பைதாகரசுவினது வடிவங்களைக் குறிப்பிடத்தக்க வகையில ஒத்திருகினறன. 'பொருளகள் யாவும எணகளே' எனக கூறியபோது பைதாகரசு உலகதோற்றத்தைப் பற்றிய உண்மையை அறிநதிருநதாரோ என எண்ணத் தோனறுகிறது.

3. பிளேட்டோவினது பிலிபசுவிலிருநதே அரித்தோதில தனது இடைக் கோட்பாட்டைப் பெற்றார். அநநூலில இககொளகை பைதாகரசுவினது எனவே விளகபபட்டுளது.

எதிர்த்தார். பைதாகரசுவையும் அவரது மறுபிறப்புக்கொள்கையையும் நையாண்டி செய்து, அவர் எழுதிய இரங்கற் பாவின் பகுதியொன்று இன்றும் உளது[1]. பைதாகரசு, தேலிசு ஆகியோரது கொள்கைகளை இவர் எதிர்த்தாரெனவும், எபிமெனிடிசுவின் கொள்கைகளையும் இவர் தாக்கினரெனவும் நாம் அறிகிறோம். இவை யாவும் நம்பத் தகுந்தனவே யெனினும், இவற்றைப் பற்றிக் கூறும் இவரது நூற்பகுதிகள் எவையும் எமக்குக் கிடைத்திலது[2].

செனோபனிசுவின் காலத்தை நிர்ணயிப்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இவ்விடயங்களிற் பெரிதும் நம்பத்தகுந்த ஆதாரமான திமாயோசு, அயரோன், எபிகாமோசு ஆகியோரது காலத்தையே செனோபனிசுவும் சேர்ந்தவர் எனக் கூறியுள்ளார். கிறீசுவையும், ஞானியர் எழுவரையும் பற்றிய கதைகள் ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கர்களுக்கு எவ்வாறு சிரிப்பை மூட்டினவோ, அவ்வாறே நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கர்களுக்குப் பெரும் களிப்பை மூட்டிய கதையொன்றின் பொருளாயமைந்த, அயரோனது சபை நிகழ்ச்சிகளில இவரும் பங்கெடுத்துக் கொண்டாரெனவே தோன்றுகிறது. செனோபனிசு, நூறு வயதினராகும் வரை வாழ்ந்தார் எனக் கூறுவதாயினும் கூட, அயரோன் கி. மு. 478 இல் இருந்து 467 வரையே ஆண்டானுகையால், அவர் கி. மு. 570 ஆம் ஆண்டிற்கு முன்னர் பிறந்தார் எனக் கூறமுடியாது. ஆனால் 40 வது ஒலிம்பிய ஆண்டில் (கி. மு. 620–616) இவர் பிறந்தாரென அப்பொலோடரசு கூறினரெனவும், டாரியசு, சைரசு என்போரது காலம் வரை இவர் வாழ்ந்தாரெனவும் இளிமென்று என்பார் கூறுகிறார். இத்தகைய விடயங்களில் அப்பொலோடரசுவையே பெரும்பாலும் நம்பியிருப்பவரான இடையோசினிசு 60 ஆவது ஒலிம்பிய ஆண்டில் (கி. மு. 540–37) இவர் சிறப்புடன் விளங்கினரெனக் கூறுகிறார். டியல்சுவும் அப்பொலோடரசு உண்மையில் இவ்வாறு கூறினர் எனக் கூறுகிறார். இவை எவ்வாறிருப்பினும், ஈலியா நிறுவப்பட்ட ஆண்டில் இவர் அங்கு சென்றிருந்தார் என்பதைக் கொண்டே கி. மு. 540 ஆம் ஆண்டு என்பது பெறப்பட்டிருக்கிறது. ஆகவே இது வெறும் ஊகமேயாதலால், நாம் இதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை.

1. மேலே வரும் 7 ஆவது பகுதியைப் பார்க்கவும்.

2. Diog. ix. 18 (R. P. 97). கிரகணம் எற்படப் போவதைத் தேலிசு முன் கூட்டித தெரிவித்தது பற்றிச் செனோபனிசு குறிப்பிட்டுளளார் என நாம எற்கெனவே கணடோம்.

செனோபனிசுவைப்பற்றி நாம் உறுதியாக அறிந்து கொண்ட தெல்லாம், இருபத்தைந்து வயதிலிருந்தே அவர் நாடோடியாக வாழ்ந்தாரென்பதும், 92 வயதிலும் அவர் உயிரோடிருந்து கவிதைகள் பூனைந்து கொண்டிருந்தார் என்பதுமேயாம். அவர் தானுகக் கூறுவதாவது (fr. 8=24 Karst; R. P. 97):

சஞ்சலங்கள் பலவற்றை அனுபவித்த எனது ஆன்மா ஏலாசு நாடு முழுவதும் அறுபத்தேழு ஆண்டுகளாக அலைந்திருக்கிறது ; இவ்விடயங்களைப் பற்றி உண்மையாக நான் எதுவும் கூறமுடியு மென்றால், அப்போது நான் பிறந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்திருக்கும் என்பதுவே அது.

இன்னொரு கவிதையில் எழுதப்பட்ட விஞவிற்கே, செனோ பனிசு இங்கு பதிலளிக்கிறாரெனவும் அவர் இங்கு குறிப்பிடு வது அயோனியாவை ஆர்ப்பகோசு கைப்பற்றிய சம்பவமேயென வும் கொள்ள ஆவல் எற்படுவதியல்பே[1] (fr. 22=17 Karst; R. P. 95 a).

மாரிகாலத்தில் நல்ல உணவுண்டதன் பின்னர் இனிமை யான உவைனைப் பருகிக் கொண்டு தீயினருகே, மெனமை யான படுக்கைகளில் கடலையைக் கொறித்துக்கொண்டிருக்கை யில் நாம் கூறவேண்டியன இவை போன்றவைகளே: "நீங்கள் எத்தேசத்தைச் சேர்ந்தவர், அருமையான கனவானே, உங்க ளுக்கு எத்தனை வயதாகிறது ? பீடி. வந்தபோது நீங்கள் எத்தனை வயதானவராயிருந்தீர்கள்."

இதன்படி இவர் கி. மு. 565 ஆம் ஆண்டிற் பிறந்திருக்க வேண்டும். அத்துடன் இதன்படி அயரோனுக்கும் இவருக்கு மிடையே யிருந்ததெனக் கூறப்படும் தொடர்பும் நம்பத் தகுந்ததாகிறது. மேலும் பைதாகரசுவை இவர் இறந்தகாலத் திற் குறிப்பிட்டனரென்பதையும் எரக்கிளீட்டசு இவரை இறந்த காலத்தில் அழைத்தாரெனவும் நாம் காண்கிறோம்.[2]

அனக்சிமாந்தரது போதனைகளைச் செனோபனிசு "கேட்டா" ரெனத் தியோபிறசுத்தோசு கூறியுள்ளார்[3]. அயோனிய அண்ட வியலையும் இவர் அறிந்திருந்தாரென நாம் காண்போம். தான் பிறந்த நகரிலிருந்து வெளியேற்றப்பட்டதன் பின்னர் இவர் சிசிலியில், பெரும்பாலும் சாங்கிள், கட்டானு ஆகிய இடங்களில்,

1. அது வேறொரு கவிதையாயிருக்க வேண்டும் எனபது உறுதி; ஏனெனில் இங்குள்ள பகுதி இரங்கற்பாவாக இருக்கையில் அதுவோ அறுசீரடிகளாலான தாக காணப்படுகிறது.

2. Xenophanes, fr. 7; Herakleitos, frs. 16, 17.

3. Diog. ix. 21 (R. P. 96 a).

வாழ்ந்தார் என அறிகிறோம்[1]. தனக்கு முன்பு வாழ்ந்த ஆக்கிலொக்கோசுவைப் போல இவரும் தனது இதயபாரம் முழுவதையும் இரங்கற்பாக்கள், அங்கதக் கவிதைகள் என் பனவற்றின் மூலம் வெளியிட முனைந்தார். இவர் தமது கவிதைகளைப் பாடிய வைபவங்களில், அயோனியாவிலிருந்து வந்த அகதிகள், தமது நாட்டு நற்பழக்கங்களைப் பேண முயன் றிருப்பார்கள் என நாம் எண்ணலாம். ஆனால் இவர் ஓர் பாணனாக வாழ்ந்தார் எனும் கூறறுக்கு எவ்வகை ஆதாரமு மில்லை யென்க. அக்காலத்தே, இரங்கற்பாக்களைப் பாடியவர் கள், தமது பாட்டுக்களைக் கேட்போருகுச் சமமானவர்களாய் இருந்தனரேயொழிய, பாணாகளைப் போலச் சமுதாயத்திற் குறைந்தோராக மதிக்கப்படவில்லை. இவர் தனது தொண்ணூற் றிரண்டாவது வயதிலும் நாடோடி வாழ்க்கையையே மேற் கொண்டிருந்தாரென நாம் கண்டோம். இது, இவர் ஈலியாவிற் றங்கி வாழ்ந்து, அங்கோர் கழகத்தையும் நிறுவினரென்னும் செயதியோடு முரண்பட்டதாகக் காணபபடுகிறது. அன்றியும் இவர் தனது இறுதிநாட்களை அயரோனது சபையிற் கழித்தன ரென நாம் கருதுவோமாயின் இம்முரண்பாடு மேலும் வலு வடைகிறதெனலாம். பண்டைய எழுத்தாளர்களில் ஒருவராவது இவர் எப்போதாவது ஈலியாவிற் றங்கி வாழ்ந்தனர் என நேரடியாகக் கூறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. நமக் குக்கிடைத்துள்ள சான்றுகளும், அவர் அங்கு தங்கினர் என்ப தோடு பொருந்தாதனவாகவே உள்ளன.

கவிதைகள்

56. செனோபனிசு அறுசீரடிப் பாடல்களை யெழுதினரெனவும், ஓமர் எசியொட்டு என்போருக் கெதிராக இரங்கற்பாக்களையும் ஐந்து சீரடிப்பாடல்களையும் எழுதினரெனவும் இடையோசினிசு கூறியுள்ளார். இவர் மெய்யியற் கவிதை யெதுவும் எழுதினு ரென நம்பத் தகுந்த ஆதாரம் எதனிலும் குறிப்பிடப்படவில்லை. பூமி முடிவின்றிக் கீழ் நோக்கி விரிந்துள்ளது (பகுதி. 28) எனப் பொருள்படும் கவிதை எதையும் தான் கண்டதில்லை யெனச் சிம்பிளிசியசு கூறுகிறார். இதிலிருந்து கழகத்தில் இக் கவிதையின் பிரதியெதுவும் இருக்கவில்லை யென்பது பெறப்படு கிறது. உண்மையில் இத்தகைய கவிதையொன்றிருந்ததாயின், கழகத்தில அதன் பிரதியில்லாதிருந்தது என்பது மிகுந்த ஆச் சரியத்திற் குரியதே. செனோபனிசுவினும் குறைந்தவ ரான பலரது நூல்களைச் சிம்பிளிசியசுவினால் அங்கு காண முடிந் தது. மெய்யியற் கவிதையொன்றினைச் செனோபனிசு எழுதினு ரென்பதற்கு அகச சானறுகளும் இல்லை. மெய்யியற்

1. Diog. ix. 18 (R. P. 96).

பொருளுடைய, இருபத்தெட்டடிகளையுடைய கவிதையொன்றிருந்ததென டியல்சு கூறியுள்ளார். ஆனால் நான் இங்கு விளக்க முயன்றுள்ளதுபோல, செனோபனிசு, ஓமர், எசியொட்டு என்போரைத் தாக்கும்வகையில் எழுதிய கவிதைகளில் இம் மெய்யியற் பொருளும் இயல்பாகவே அமைந்திருக்கும் எனலாம். ஓமரது காவியங்களுக்கு எழுதப்பட்ட பாடியங்களிலிருந்தே, செனோபனிசுவின் மெய்யியற் கருத்துக்கள் எனக் கூறப்படுபவை பெரும்பாலும் பெறப்பட்டிருக்கின்றன வென்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, செனோபனிசு, தாம் கொண்டிருந்த விஞ்ஞானக் கருத்துக்களை அங்கதக் கவிதைகளிடையே ஆங்காங்கே வெளியிட்டனர் எனக் கொள்வதே பொருந்தும். இம்முறையே அக்கால வழக்காயுமிருந்தது எனபது எபிகாமோசுவின் நூலில் எமக்குக் கிடைத்தனவற்றைப் பார்க்கும் போதும் தெளிவாகிறது.

"சில்லோய்" எனும் பெயரால், பிற்காலத்தில் வழங்கிய, செனோபனிசுவின் அங்கதக் கவிதைகள் அவர் காலத்திலும் இப்பெயராலேயே வழங்கியிருக்கலாம். அல்லது அங்கதக் கவிதையெழுதுவோன் எனும் பொருளிற கிரேகக மொழியில் சில்லோகிறபோசு என அழைக்கப்பட்டவனும், மெய்யியலாளரை நையாண்டி செய்து தான் கூறியனவற்றை யெல்லாம் செனோபனிசுவின் பெயரில் வழங்குமாறு செய்தவனுமான பிளேயசு நாட்டவனான திமோன (ஏறத்தாழ கி. மு. 259) என்பவன் முதலாக, இக்கவிதைகள் இவ்வாறு "சிலலோய்" என அழைகக்பட்டிருக்கலாம். ஐந்து சீரடிகளுள் ஒன்று மட்டுமே எமக்குக் கிடைத்திருக்கிறது. அதுவும் அறுசீரடியையே அடுத்த அடியாகக் கொண்டிருக்கிறது (பகுதி 14). இதைப் பார்க்கும்போது **மாகைப் டுக்சளி** லுள்ளதைப்போல, செனோபனிசுவும் தனது அறுசீர டிப்பாடல்களினிடையே ஐந்து சீரடிகளைப் புகுத்தும் பழக்கத்தையுடையவராயிருந்தார் எனத் தோன்றுகிறது.

57. டியல்சு தந்துளளவாறு, அதே ஒழுங்கில் செனோபனி சுவின் கவிதைப்பகுதிகளைத் தருகிறேன. **கவிதைப் பகுதிகள்**

இரங்கற்பாக்கள்

(1)

எல்லோருடைய கைகளும், அவர்களது கண்ணங்களும் இந்நிலமும் சுத்தமாயுள்ளன ; முறுக்கிய மாலைகளை ஒருவர் எமது தலைகளிற் சூட்டுகிறார் ; இன்னொருவர் வாசனைக் குழம்பைத் தட்டத்திற் கொணர்ந்து எமக்குத் தருகிறார். நிறைந்த இன்பத்தைத் தரும், கலவைப் பாத்திரம் தயாராக இருக்கிறது.

மென்மையானதும், மலர் மணமுடையதுமான உவைன், ஒரு போதும், குறையமாட்டாதது போல, எமக்கருகே சாடிகளில் ஏராளமாக இருக்கிறது. யாவற்றுக்கும் நடுவே தூய வாசனைப் புகையை அளிக்கும் சாம்பிராணியிருக்கிறது; இனிமையான குளிர்ந்த நன்னீரும் உளது. பாற்கட்டியும், நறுந்தேனும், பொன்னிறமாகச் சுடப்பட்ட உரொட்டிகளும் எமக்கு முன்னே படைக்கப்பட்டிருக்கின்றன. நடுவேயிருக்கும் பீடத்தைச் சுற்றிலும் மலர்கள் நிறைந்து காணப்படுகின்றன; ஆடலும் பாடலுமாக இம்மணடபமே களிப்பால் நிறைந்திருக்கிறது.

ஆனால் புனிதமான கதைகளையும் தூயவார்த்தைகளையும் கூறி, களிப்பொடு இறைவனை வழிபடுவதே முதலிற செய்ய வேண்டியதாகும்; அதன் பின், நன்னெறியில் ஒழுகுதற்கு வேண்டிய திடத்தை எமக்குத் தருமாறு பிரார்த்தனை செய்து அருக்கியங்களைச் சமர்ப்பித்ததன பின்னர், பணியாளொருவனது உதவியின்றித தானுகவே தனது இல்லம் சேரும் நிதானத்தை இழக்காதவரையில், விரும்பிய அளவு மதுவருந்துவதிற் பிழை யெதுவும் இல்லையென்க. மூப்புக்காலத்தே தளர்ச்சியடையா திருக்கவும் இது அனுகூலமானதே. மதுவருந்தியதன பின்னரும், திறனைப் பரீட்சிககும் போட்டிகளில், தனது நிலைவையும், வலிமையையும் இயனறமட்டிற் பாவித்து, தனது ஆற்றலைக் காட்டுபவன் எவனோ அவனே மனிதரிடையே போற்றப்படக்கூடி வனுகிறனன. பண்டைய மனிதர்களது கற்பனைகளான தைத் தியர்களையும் இராட்சதர்களையும் மற்றும் குழப்பமான சண்டை களையும் பற்றிப் பாடும் பயனற்ற செயலில் ஈடுபடாது, மனிதன் தெய்வங்களை வணக்கத்தோடு வழிபடல் வேண்டும்; அது அவ னுக்கு எப்போதும் நன்மை தரும்.

(2)

பைசாவூற்றுக்கருகே, சியசுவின் இருப்பிடம் அமைந்துள்ள ஒலிம்பியாவில நடக்கும் ஐந்திறப் போட்டிகளிலாவது, ஓட்டப் பந்தயத்திலாவது ஒருவன் வெற்றியீட்டினுலென்ன, மற்போ ரில், கடினமான குத்துச்சண்டையில் அல்லது இவையிரண்டும் சேர்ந்த யுத்தங்களில் சிறந்து விளங்கி மக்களின் அபிமானத் தைப் பெற்றுலென்ன, இவற்றின் மூலமாக, போட்டிகளின் போது யாவரும் காணக்கூடிய இடத்தில் ஆசனமும் அரசாங்கத் தின் செலவில உணவும் பேணிவைத்திருக்கக் கூடிய பரிசில்களும் ஒருவனுக்குக் கிடைத்தாலென்ன, இரதப் போட்டியில் வெற்றி பெற்றுலென்ன, இவை எவற்றினுலும் எவனும் வாழ்க்கை யில் எம்மினும் அதிக தகுதியுடையவனுக மாட்டான். இவர் களைப் பற்றிப் புகழ்ந்து கூறுவதெல்லாம் இச்செயல்களை நன்கு

சிந்தித்து மதிப்பிடாது விடுவதனுலேயே; மேலும் பெருமை யுடையனவான கலேகளோடு, உடல்வலிமையை ஒப்பிட்டு அத னைப் புகழ்தல் பொருத்தமானதன்று. விளேயாட்டுப் போட்டி களின் போது நடைபெறும் ஒவ்வொரு போட்டி ஓட்டத்திலும், குத்துச் சண்டை, மற்போர், ஐந்திறப்போட்டி ஆகிய இவை அனைத்திலும் யாவரையும் வெல்லக்கூடிய ஒருவன் மக் களிடையே தோன்றினலும், எமது நகர ஆட்சி மேலும் சிறப் பாக நடைபெறுவதற்கு அவனுல் எவ்வித உதவியுமில்லே. பைசா வின் கரைகளில் நடைபெறும் போட்டிகளில் ஒருவன் வெற்றி பெறுவதன் மூலம் எமது நகர் அடையக்கூடியது அற்ப இன பமே; ஒரு நகரின் களஞ்சியங்கள் அதிக வளமுடையவை ஆவ தற்கு இதுபோன்ற சாதனைகள் ஒருபோதும் உதவுவதில்லே.

(3)

வெறுக்கத்தக்க கடுங்கோலாட்சிக்கு உட்படாதிருந்த காலத் தில், இனிமையான, ஆனுல் பயனற்றவையான, பல விடயங் களே அவர்கள் லிடியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்; ஊதா நிறச் சாய மூட்டப்பட்ட மேலங்கிகளே அணிந்தோராய், இவர் களில் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சந்தை நடைபெறுமிடததே சென்றனர். மிகுந்த திறமையோடு தயாரிக்கப்பட்ட வாசனைத் திரவியங்களின் நெடிவீசுவோராயிருந்த இவர்கள், தமது அழ கிய சுருண்ட மயிரைப் பற்றிப் பெருமைபடுவோராயும் வீண் புகழ்ச்சியை விரும்புவோராயு மிருந்தனர்.

(4)

எவனும் தன் இணைத்தில் உவைனை முதலில் ஊற்றி அதன்பின நீரை ஊற்றிக் கலப்பதில்லே. முதலில் நீரை ஊற்றி அதனமேலேயே உவைனை ஊற்றுவான.

(5)

ஆட்டுக்குட்டி யொன்றின் தொடையெலும்பொன்றினை அனுப்பி அதற்குப் பதிலாக நன்கு கொழுத்த எருதொனறின், கொழுத்த காலொனறைப் பெற்றுக்கொண்டாய். இரேகக பாடல் கள் அழியாதிருக்கும் வரை அழியாததும, எல்லாசு நாட்டின் பகுதிகள் யாவற்றிற்கும் பரவுவதுமான புகழையுடையவனுன உனக்கு இது தகுந்த பரிசே.[1]

1. டேராசையுடையவன எனப் பிரசித்தமானவனுன சிமோனிடிசு போனற வோர் கவிஞனே இழிதகுக கூறுமுகமாகவே இது எழுதப்பட்டிருகக வேண்டு மென டியல்சு கருதுகிறார்.

(7)

இப்பொழுது நான் இன்னொரு கதையைக் கூறி வழிகாட்டு வேன.....ஒருநாள் நாயொன்றினை யாரோ அடித்துக் கொண்டி ருந்தபோது, அவ்வழியாற் சென்றுகொண்டிருந்த அவர் (பைதா கரசு) பின்வருமாறு கூறினரெனச் சொல்கிறார்கள் : "நிறுத்து : அதனை அடிக்கவேண்டாம் ; எனெனில் அதன் குரலிலிருந்து அது எனது நண்பனொருவனது ஆத்மா எனநான் தெரிந்து கொண்டேன்"[1].

(8)

114 ஆம் பக்கம் பார்க்க.

(9)

வயோதிபரிலும் பலவீனமுடைய.....

அங்கதக் கவிகள்

(10)

முதலில் யாவரும் ஓமரது வழியிலேயே பயின்றுள்ளனராத லால்.....

(11)

மனிதர்களிடையேயும் அவமானத்தைக் கொணர்பனவாயும், வெட்கப்பட வேண்டியனவாயும் கருதபபடும் செயலகள பல வற் றில களவு, விபசாரம், ஒருவரையொருவர் ஏமாறறுதல் போன் றனவறறில தேவர்கள் ஈடுபட்டதாக ஓமரும் எசியொட்டுவும் கூறியுள்ளனர். R. P. 99.

(12)

களவு, விபசாரம், ஒருவரையொருவர் ஏமாற்றுதல் போன்ற பல சட்டவிரோதமான செயல்களில், தேவர்கள் ஈடுபட்டனர் என அவர்கள் கூறியிருப்பதால. R. P. ib.

(14)

ஆனல் தேவர்களும் தங்களைபோலவே பிறக்கின்றனர் என வும், தங்களைபபோலவே உடையணிகினறனர் எனவும், உருவம் குரல் என்பன உடையர் எனவும் மனிதர்கள் எண்ணுகின்றனர். R. P. 100.

1. எமக்குக கிடைத்துள்ள அடிகளில பைதாகரசு எனும் பெயர காணப்பட வில்லை. ஆனல இடையோசினிசுவின் ஆதாரத்தில் இவ்விவரங்கள் பா முழு வதும் இருநதிருக்க வேண்டும்.

(15)

ஆம், எருதுகளும், குதிரைகளும், சிங்கங்களும், கைகளை யுடையவையாய், மனிதர்கள் வரைவது போலக் கலவண்ண முடைய ஓவியங்களை வரையும் ஆற்றலுடையனவாய் இருந்தால், குதிரைகள், குதிரைகளைப் போன்ற தேவர்களையும், எருதுகள், எருதுகளைப் போனற தேவர்களையும் படைத்திருக்கும். பல்வேறு இனங்களைச் சேர்ந்த பிராணிகளும், தத்தம் உருவங்களைக் கொண்ட தேவர்களைப் படைத்திருக்கும். R. P. ib.

(16)

எதியோப்பியர்களது கடவுளர்கள கறுத்த நிறமும் சப்பை மூக்கும் படைத்தவர்களாகக் கறபன செய்யப்பட்டிருக்கின்றனர். திரேசியர்கள், தமது கடவுளர்கள் நீலக்கண்களும் செம்மயி ரும் உடையவர்கள் எனகிறார்கள. R. P. 100 b.

(18)

முதலிலிருந்து முழுவதையும், தேவர்கள் மனிதர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. ஆனல் தாமாகவே தேடுவதின் மூலம் மனிதர்கள எது நல்லதோ அதை அறிந்து கொள்கின்றார்கள். R. P. 104 b.

(23)

கடவுள் ஒருவன். கடவுளருள்ளும் மனிதருள்ளும் யாவரி லும் உயர்ந்தவன், உருவத்திலோ சிந்தனையிலோ மனிதர்களைப் போலல்லாதவன். R. P. 100.

(24)

அவன் முழுவதுமே கண்ணுகவும், செவியாகவும், சிந்தனையா கவும் இயங்குகிறன். R. P. 102.

(25)

தான இயங்காமலே தனது சிந்தனையினல் அவன் அனைத் தையும் இயக்குகிறன். R. P. 108 b.

(26)

அவன் சற்றேனும் அசையாமல் ஒரே இடத்திலேயே நிலைத் திருக்கிறன் ; அங்குமிங்குமாக அலைவது அவனது தகுதிக்குப் பொருத்தமானதும அல்ல. R. P. 110 a.

(27)

அனைத்தும் நிலத்திலிருந்தே தோன்றுகின்றன, நிலத்திலேயே முடிவடைகின்றன. R. P. 103 a.

(28)

நிலத்தின் மேற்புற எல்லை, எமது பாதங்களுக்குக் கீழே காற்றோடு சேருமிடத்தே காணப்படுகிறது ; அடிப்புறத்தே அது எல்லையின்றிக் கீழ் நோக்கிச் செல்வதாக உள்ளது. R. P. 103.

(29)

தோன்றி வளர்வன யாவும் நீரும் மண்ணுமே. R. P. 103.

(30)

நீரும், காற்றும் கடலிலிருந்தே தோன்றுகின்றன ; ஏனெனில் பரந்த கடலானது இல்லையேல், மேகங்களினுள்ளேயிருந்து (வெளியே வீசும் காற்றுக்கள் இருக்கமாட்டா), வானத்திலிருந்து நீர் கொணரும் மழையும், ஆறுகள், அருவிகள் என்பனவும் இருக்கமாட்டா. பரந்த கடலே, மேகங்களுக்கும் காற்றுக்களுக்கும் ஆறுகளுக்கும் தந்தையாக உளது[1]. R. P.103.

(31)

பூமிக்கு மேலே ஊசலாடி அதனைச் சூடாக்கும் சூரியன்.

(32)

ஐரிசு என அழைக்கப்படுவதும் ஊதா, சிவப்பு, பச்சை ஆகிய நிறங்களையுடைய ஓர் மேகமே. R. P. 103.

(33)

நாம் யாவரும் மண், நீர் என்பனவற்றிலிருந்து பிறந்தவர்களாதலால். R. P. ib.

(34)

நான் குறிப்பிடும் விடயங்கள் அனைத்தைப் பற்றியும் கடவுளர்களைப் பற்றியும் ஐயமற அறிந்த மனிதன் ஒருவனும் ஒரு போதும் இருந்ததில்லை ; இனியும் இருக்கப்போவதில்லை ; தற்செயலாக அவன் கூறுவது முற்றிலும் உண்மையாக இருந்தாலும், அதனை அவன் உணர்வதிலலை. ஆனால் ஒவ்வொரு

1. இப்பகுதி ஓமருக்கு எழுதப்பட்ட செனீவாப் பக்கவுரையிலிருந்து பெறப்பட்டது. பக்கவடைப்புகளுக்குளளே தரப்பட்டிருககும் சொற்கள் டியலசுவினுடையவை.

வரும் தமக்குப் பிடித்த கற்பனைகளை நம்பிக்கொண்டிருக்கலாம். R. P. 104.

(35)

இவற்றை உண்மையைப் போன்ற கற்பனைகள் எனக் கருதலாம். R. P. 104 a.

(36)

மனிதர்களது பார்வைக்குப் புலப்படக்கூடியனவாய் உள்ள அனைத்தும்[1].

(37)

சில குகைகளில் நீர் சொட்டுகிறது.....

(38)

பொன்னிறமான தேனை இறைவன் படைத்திராதிருந்தால், அத்திப்பழங்களை, (இப்போது கருதுவதிலும் பார்க்க) மிகவும் இனிமையானவையென மனிதர் கருதியிருப்பார்கள்.

58. இக்கவிதைப்பகுதிகளிற் பெரும்பாலானவை எவ்வகையிலும் மெயயியற் சார்புடையனவல்ல. அத்தகைய சார்புடையன போற் காணப்படுவனவும், உணமையில் பிறவிடயங்களைக் கருதுவனவே என்பதை எளிதில் உணரலாம். இவற்றுள் ஒன்று (32 ஆவது பகுதி) எதைக் கருதுகிறது என்பது தெளிவு. "ஐரிசுவும்" ஒரு மேகமே எனபபடுவதிலிருந்து சூரியன், சந்திரன், உடுக்கள என்பனவறறைப் பற்றியும் இவ்வாறே கூறப்பட்டிருக்க வேண்டும் என நாம் அனுமானிக்கலாம். ஏனெனில் இவையெல்லாம் "இயக்கம் காரணமாகத் தீப்பற்றிக் கொண்ட மேகங்களே"யென விளக்கப்பட்டன வெனத் தொகுப்பாசிரியர்கள் மூலமாகவும் அறிகிறோம். ஈத்தியோசுவின் மூலமாகக் கிடைத்துள்ள, புனித எல்மோசுவின் தீ பற்றிய விளக்கமும் இச்சந்தர்ப்பத்திற்கே பொருந்துவதாகக் கொள்ளப்படல் வேண்டும். டயசுகொரோய் எனச் சிலரால் அழைக்கப்படுவனவும், கப்பலிற் செல்கையில் உடுக்கள் போலக் காணப்படுவனவுமான சிறு பொருட்களும் இயக்கம் காரணமாக ஒளியூட்டப்பட்ட சிறு மேகங்களே யெனவும் கூறப்பட்டிருக்கிறது. தொகுப்பாசிரியர்களும், சந்திரன், உடுக்கள், வால்வெள்ளிகள், எரிவெள்ளிகள் மூதலியவை பற்றிக் கூறுகையில், மேற்கூறிய விளக்கத்தையே சிறு மாற்றங்களோடு வானசோதி

1. மேகங்களெனச் செனேபனிசுவாற் கருதப்பட்ட உடுக்களையே இது குறிக்கிறது என டியலசு கூறுவது சரியெனலாம்.

தந்துள்ளனர். ஆகவே, இஃது ஓர் ஒழுங்கான அண்டவியற் கருத்தெனவே கொள்ளத் தோன்றுகிறது[1]. ஆனால் இவ்வொழுங்கான விளக்கமுறை தியோபிறசுத்தோசுவினதே யொழியச் செனோபனிசுவுடையதல்ல வெனலாம். எனெனில் ஒரு சில அறுசீரடிச் செய்யுள்கள் அதிகமாக இருந்திருநதால், தொகுப்பு நூல்கள் ஏற்பட்டமை முற்றுக விளக்கபபட்டிருக்கும் எனபது வெளிப்படை.

ஆனால் சூரியன் பற்றிக் கூறப்பட்டிருப்பவற்றை நோக்கும் போது ஓர் சிக்கல் எறபடுகிறது. அதுவோர் தீப்பற்றிய மேக மெனக் கூறப்படுகிறது ; சூரிய வெப்பம காரணமாகக கடல்நீர் ஆவியாகி, அவ்வாவியிலிருந்தே மேகங்கள் உருப்பெறுகின்றன வெனும் கூற்றோடு இது அவ்வளவு பொருந்துவதாயிலலை. ஈரலிப்பான வெளிமூச்சினுள்ள தீபபொறிகளின் சேர்க்கையே மேகங்கள் எனச் செனோபனிசு கருதினனெனத தியோபிறசுத் தோசு கூறுகிறார் ; ஆனால் இதுவும் வெளிமூச்சு எவ்வாறு உண்டாகிறது எனபதை விளக்கவிலலை. ஆனால், மனித வியல்புடையவர்களாகக் கற்பனை செய்யப்பட்ட கடவுளர்களை இழித்துக் கூறுவதே யொழிய, வானசோதிகள பறறிய விஞ்ஞான ரீதியான கொள்கை யொன்றை அமைப்பது செனோ பனிசுவின் நோககமல்ல என்பதை உணர்ந்தோமாயின, வெளி மூச்சு எவ்வாறு ஏற்படுகிறதென்பது விளக்கப்படாததை ஓர் குறையாகக் கருதமாட்டோம். இங்கு முகியமாகக் கவனிக்கப் படவேண்டியது ஈலியோசுவும் ஓர் தற்காலிக நிகழ்ச்சி யெனப் பட்டமையே. அனக்கிமாந்தர் கருதியதுபோலச் சூரியன் பூமி யைச் சுற்றி இயங்கவிலலை. உண்மையில சூரியன் நேரான வோர் கதியிலேயே செல்கிறது. அதற்கும் எமககும் இடை யேயுள்ள தூரம் அதிகரிப்பதுவே, அது வட்டமாகச் செல்வது போற் றோன்றுவதற்குக் காரணம். ஆகவே மறுநாள் உதயமாவது, முதல் நாள் காணப்பட்ட சூரியனே எனக் கொள் வது தவறாகும். ஒவ்வொரு நாளும் உதயமாவது ஒவ்வொரு புதிய சூரியன் என்க. பூமியில் மக்கள வாழாத இடங்களிற் சூரியன் செல்கையில், அங்கு " ஓர் குழியினுள் அது விழுந்து விடுவதனாலேயே " சூரிய கிரகணம் ஏற்படுகிறது. ஓர் கிரகணம் ஒரு மாதகாலம் வரை நீடிக்கலாம். மேலும் அநேக சூரியன் களும் சந்திரன்களும் உள. பூமியின் ஒவ்வொரு பாகத்திற் கும், இவ்விரு இனங்களிலும் ஒவ்வொன்று உள்ளன.

" குழியில் விழுந்து விடுகிறது " எனும் வர்ணனை செனோ பனிசுவின் கவிதைகளிலொன்றிலிருந்தே எடுக்கப்பட்டிருக்க

1. சித்தியோசுவின் இப்பகுதிகள் டியலசுவினால் தொகுக்கப்பட்டவை.

வேண்டும் என்பது தெளிவு. இதுவும் இதனை யொத்தன வாகக் காணப்படும் இன்னும் பல சொற்றொடர்களும் தியோ பிறசுதோசுவினுல் எடுத்தாளப்பட்டிருத்தல் வேண்டுமெனவே நாம கருதுதல் வேண்டும். உடுக்கள் பகலில் அணைந்து போகின்றன. ஆனல இரவில் மீண்டும் "தணற்கட்டிகள் போல" ஒளிர்கின்றன. உலகும் அதனில் வாழும் சீவராசி களும் தோன்றுவதற்குச் சூரியனும் காரணமாயிருந்திருக்கிற தெனலாம். ஆனல் சந்திரன் "இப்படஙில் எவ்வேலையுமே செய்யவில்லை". இததகைய சொற்றொடர்கள், வானசோதிகளை நகைபபுக்கிடமானவையாக்குந் தனமையையே யுடையனபோலத் தோன்றுகின்றனவாதலால், அணடவியற் சார்புடையனபோலக் காணபபடும் ஏனைய கவிதைப்பகுதிகளும் இந்நோகதத்தோடு தான் எழுதப்பட்டனவோ எனும் வினு மனதத்தே எழுகிறது.

59. 29 ஆவது பகுதியில் "பொருட்கள் யாவும் மண்ணும் நீருமே" எனச் செனேபனிசு கூறுகிறர். எச்சந்தர்ப்பதில நீரும் இது கூறப்பட்டது என்பதைப் பறறித் தியோபிறசுதோசு கூறியவை இப்பொலீட்டசுவினுற் பேணித் தரப்பட்டுள்ளன. இவை பினவருமாறு :

மண்ணும்

நிலம் கடலோடு கலந்துகொண்டிருக்கிற தெனவும் ஈரலிப்பி னுல் அது சிறிது சிறிதாகக் கரைந்து கொண்டிருக்கிறதென வும் செனேபனிசு கூறினர். இதைத் தான பின்வருமாறு நிரூபிபபதாக அவர் கூறுகிறர். நாடடின மத்திய பகுதிகளி லும் மலைகளிலும் கிளிஞ்சிலைகள காணப்படுகினறனவெனவும, சிராக்கியூசுவின் கற்குழிகளில மீன், கடறபாசி என்பனவறறின் சுவடுகள் காணப்பட்டன வெனவும், பாரோசு எனும் இடத்தில் கல்லொன்றின ஆழததில் "பே" இலையொன்றின சுவடும், மோல்டடா சமபூமியில் பல கடலுயிர்களினது சுவடுகளும் காணப்பட்டனவெனவும் அவர் எடுத்துக் காட்டினர். ஆதியிற் பொருட்கள் யாவும் சேறுக இருந்தபோதே இவை யாவும் தோனறினவெனவும், சேற்றிற் பதிந்த இவற்றின் அடையாளங் கள் காய்ந்து போயினவெனவும் இவர் கூறுகிறர். பூமி கடலுள இழுத்துச் செல்லப்பட்டுச் சேறுக மாறும்போது, மனிதர்கள் யாவரும் அழிநது போகின்றனர். எல்லா உலகங் களிலும இம்மாறுதல் நடைபெறுகிறது. **Hipp. Ref. i. 14 (R. P. 103 a).**

ஆனல் இது அனக்சிமாந்தரது கொள்கையே யாதலால், உயிர்சுவடுகளைக் கணடுபிடித்த பெருமை செனேபனிசுவை விட அனக்சிமாந்தரையே சாரும் எனக் கூறுவது பொருத்த முடையது எனலாம். மேலே கூறப்பட்டுள்ள யாவற்றிலும்

குறிப்பிடத்தக்கது "எல்லா உலகங்களிலும்" இம்மாறுதல்கள் எற்படுகின்ற வென்னும் கூற்றே. செனோபனிசுவும் "எண்ணிறந்த உலகங்கள்" இருந்தனவென நம்பினார் எனவே தியோபிறசுத்தோசு கூறியிருக்கவேண்டும். இக்கொள்கையை எற்றுக்கொண்டோரது பெயர் வரிசையில் இவரது பெயரையும் ஈத்தியோசு குறிப்பிட்டிருந்தாரென முன்பு கண்டோம். இடையோசினிசுவும், செனோபனிசு இககொள்கையை யுடையராயிருந்தார் எனவே கூறினர். இப்பொலட்டசு, இதுபற்றி ஐயத்திற்கேயிடமில்லையெனக கருதிக் கொண்டார். ஆனால் வேறோர் சந்தர்ப்பத்தில், உலகம் அல்லது கடவுள் ஒன்றே யெனச செனோபனிசு கூறியுளளார். ஆனால் அவரது கொள்கைக்கு நாம் இதுவரை பொருள கண்ட முறை சரியான தேயெனின், இது எமக்கு அதிக சிரமத்தை அளிக்க வேண்டியதில்லை. உணமையில் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றல், "கையா" என்பதும், விரைவிற் கழிந்து போகும் ஓர் தோற்றமெனக் கருதப்பட வேணடுமேயொழிய, எல்லாப் பொருள்களுக்கும் நிரந்தரமாக உள்ளவோர் இடமெனக் கருதப்படக் கூடாதென்பதே. எசியொட்டைத் தாக்குமுகமாகவே இது கூறப்பட்டது. இம் முறையில் செனோபனிசு அனக்சிமாந்தரைப் போல, எண்ணிறந்த உலகங்கள் உள எனக் கூறிப் பின்னர் வேறோர் இடத்தில் உலகம் அல்லது இறைவன் ஒன்றேயெனக் கூறியிருந்தால், இதனை இனி ஆராயப்போகும், நன்கு உறுதிப்படுத்தப்பட்ட வேறோர் முரண்பாட்டோடு தொடர்பு படுத்திப் பார்க்கலாம்.

முடிவுள்ளது அல்லது முடிவற்றது

60. செனோபனிசு உலகம் முடிவுள்ள தெனக் கருதினரா அல்லது முடிவற்றதெனக் கருதினரா என அவரது பாடல்களிலிருந்து அறிவதற்கு அரித்தோதில் முயனறார். "இவ்விடயம் பற்றித் தெளிவாக அவர் எதுவும் கூறவில்லை" என அரித்தோதில் இறுதியிற் கூறினர்[1]. ஆனால் "எல்லாத் திசைகளிலும் அது சமமாயிருந்தது" எனவும், முடிவற்றதாயிருந்தது எனவும் கூறுவதில் உள்ள முரண்பாட்டினைச் செனோபனிசு உணரவில்லையெனவே கொள்ளத் தோன்றுகிறது. சூரியன் அனந்தம் வரைக்கும் செல்கின்றதென அவர் கூறினரெனக் கண்டோம். பூமியானது எல்லையற்றுப் பரந்திருக்கும் ஓர் வெளியாக உள்ளது எனும் அவரது கொள்கையோடு இது பொருந்துவதாகவே உளளது. மேலும், பூமி, நாம் காணக்கூடியதாகவுள்ள மேற்புற எல்லையொன்றை உடையதாயினும், கீழ்ப்புறத்தே எல்லையின்றி நீண்டிருகிறதெனவும் அவர் கூறியுள்ளாரெனக்

1. Arist. Met. A, 5. 986 b 21 (R. P. 101).

(பகுதி 28) கண்டோம். பூமி "முடிவில்லாத வேரையுடைய தாய்" இருக்கிறதென அரித்தோதில் கூறுவதாலும் இது உறுதிப்படுத்தப்படுகிறது. செனோபனிசுவின இககொள்கையை எம்பிடோக்கிளிசு கண்டித்தார் எனவும் அரிததோதில கூறியுள்ளார். விசாலமான வளிமண்டலம், எல்லையின்றி மேல் நோக்கிப் பரந்துளதெனவும் செனோபனிசு கூறியிருக்கவேண்டுமென, அரித்தோதிலால் எடுத்தாளப்பட்டிருக்கும் எம்பிடோக்கிளிசின கூற்றொன்றிலிருந்து அனுமானிக்கக் கூடியதாயிருக்கிறது. ஆகவே, முடிவுள்ள, கோளவடிவினதான உலகில், முடிவற்றவையான பூமி, வளியென்பனவற்றிற்கு இடம் காணவேண்டியதாயிருக்கிறது; அங்கத நோக்கோடு எழுதப்பட்டனவறறிலிருந்து விஞ்ஞானக் கருத்துக்களைப் பெற முனைவதாலேயே இத்தகைய நிலையேற்படுகிறது. ஆனால், வானசோதிகள் பற்றிய கூற்றுக்களுக்கு எவ்வாறு பொருள் கொண்டோமோ, அவ்வாறு இக்கூற்றுக்களுக்கும் பொருள்காண முனைவோமானால், இவை எதை உணர்த்துகினறன என உணர்தல் ஒருவேளை சாத்தியமாகலாம். ஒளரானசு, கையா என்பவை பற்றிய கதைகளே, **தேவபாரம்பரியத்தில்** மிகவும் பிரச்சினைக்கிடமான பகுதிகளாயிருந்தன. ஆனால் முடிவற்ற வளிமண்டலம் பற்றிய கொள்கை, ஒளரானசுவை முற்றுக நீக்கிவிடுகிறது. பூமி கீழ்நோக்கி, எல்லையற்று நீண்டிருக்கிறது எனும கொள்கை, கடல், பூமி என்பனவற்றின் அடிப்புற எல்லையில், வானம், பூமிக்கு மேலே எவ்வளவு தூரத்தில் உள்ளதோ, அவ்வளவு தூரத்தில் எடிசுவுக்குக் கீழே உள்ளதென ஓமரால் வருணிக்கபபட்ட இராட்டறசு எனபதனை முற்றுக நீக்கிவிடுகிறது. இவையெல்லாம் எமது அனுமானமே யெனபது உண்மையே. ஆனால் இவை உணமையாயிருப்பது சாத்தியமானால், இத்தகைய பாரதூரமான முரணபாடுகள் இருந்தன எனபதை நம் பாதுவிட எமக்கு உரிமையுண்டெனலாம்.

மெலிசசு, செனோபனிசு, யோக்சியாசு ஆகியோர் பற்றிய ஆராய்ச்சியென இனறு அழைக்கப்படுவதும், அரித்தோதிலின் நூற்றொருகுதிகளிடையே இன்னமும் காணப்படுவதுமான, ஈலிய மெய்யியலாளர் பற்றிய கட்டுரையொன்றின் ஆசிரியரான, பிற்கால அரித்தோதிலிய எழுத்தாளர் ஒருவர், இம்முரண்பாடுகளை நுட்பமான ஓர் வழியில் விளக்க முயன்றுள்ளார். உலகம் முடிவுள்ளதுமல்ல, முடிவற்றதுமல்லவெனச செனோபனிசு கூறினாரெனக் கூறி அதற்கு ஆதாரமாகப் பல நியாயங்களைக் காட்டியதுமல்லாமல், உலகம் இயங்கவுமில்லை, இயஙகாமலுமில்லை எனும் ஓர் கூற்றினையும் தான் அதனுட் புகுத்தினர். இதன் காரணமாக, இவ்வரலாற்றில் மிகுந்த மயக்கமேற்பட

இடம் உண்டாகியது. அலெக்சாந்தர், தியோபிறசுத்தோசுவின் கூற்றுக்களோடு, இவரது கூற்றுக்களையும் தமக்கு ஆதாரமாகக் கொண்டார். சிம்பிளிசியசு, இவரது கூற்றுக்களிலிருந்து எடுக்கப்பட்ட மேறகோள்களையும், தியோபிறசுத்தோசுவிடமிருந்து பெறப்பட்டவையெனக் கருதினர். செனோபனிசுவின் கவிதைகளின் பிரதி சிம்பிளிசியசுவுக்குக் கிடைக்கவில்லையாதலால், அவர் பெரிதும் குழப்பமடைந்தார். சமீப காலம் வரைக்கும், செனோபனிசு பற்றிய வரலாறுகள் யாவும் இக் குழப்பத்தாற் பாதிக்கப்பட்டனவாயே காணப்பட்டன. ஆனால் இக்குழப்பம் எற்பட்டிராதுவிடின, "செனோபனிசுவின் மெய்யியற் கொள்கை" யெனும் சொற்றொடரை நாம் ஒருபோதும் அறிந்திருக்க மாட்டோம் என்பதைக் குறிப்பிடலாம். ஏனெனில் மேற்குறிப்பிடப்பட்ட, புலமைக் கொள்கையாளரது கூற்று, எவ்வகையிலும் நம்பத்தகுந்ததல்ல என உணரப்படும் காலத்திற்கு முன்பிருந்த வழக்கே "செனோபனிசுவின் மெய்யியற் கொள்கை" யெனும் சொறறொடருக்குக் காரணமென்க.

உலகும் கடவுளும்

61. "ஏகம் உளது எனும் கொள்கையின் முதல் ஆதரவாளர்" எனிசு செனோபனிசுவை, அரித்தோதில் **பௌதிகவதீதத்தின்** பகுதிகளிலொன்றில் வருணிதிருக்கிறார். அங்கே சந்தர்ப்பத்தை நோக்குமிடத்து, இவரே முதலாவது ஈலியவாதியென உணர்த்தவே அரித்தோதில் இவ்வாறு கூறினர் என்பது புலனாகிறது. ஆனால் செனோபனிசுவின வாழ்க்கை பற்றி நாம் இதுவரை அறிந்த விவரங்களை நோக்குமிடத்து, அவர் ஈலியாவுக்குச் சென்று அங்கு ஓர் மெயயியல மரபினை ஆரம்பித்தார் எனபது உண்மையாயிருக்க முடியாது எனபது தெளிவாகிறது. ஆகவே, இத்தகைய சந்தர்ப்பங்களில் வழமையாக நடைபெறுவது போல, இங்கும் அரித்தோதில் பிளேட்டோவின் கூறறுக்கள் சிலவறறை அப்படியே திருப்பிக கூறியிருக்கிறார் எனவே கொள்ளல் வேணடும். பிளேட்டோ ஈலியவாதிகளைப் பற்றி அவர்கள் "மூழுமைக் கொளகையைப் பின்பறறியவர்கள்" எனவும் செனோபனிசுவிலிருந்து, அலலது அவரது காலத்திறகு முன்பிருந்தே ஈலியவாதம் நிலவிவந்ததெனவும் கூறியிருந்தார்.[1] பிளேட்டோவின் கூறறின இறுதிச் சொற்கள் அவர் என்ன கூறவிரும்பினர் எனபதைத் தெளிவுபடுத்துகினறன. எரக்கிளேட்டியர்களை அவர் எவ்வாறு "ஓமரதும்

1. *Soph.* 242 d 5 (R. P. 101 b). இப்பகுதியினபடி, செனோபனிசு ஈலியாவில குடியேறி வாழ்நதாரெனின, பிளேட்டோ கறபனை செய்த அவரது முனனோடிகளும் அங்கு வாழ்நதனர் எனக கொளள வேண்டியதாகிறது. ஆனால் செனோபனிசு நடுவயதினராகும் வரை ஈலியாநகர் நிறுவப்படவில்லையென்றறிக.

அவருக்கு முந்தியோரான ஆசிரியர்களினதும் கொள்கைகளைப் பின்பற்றினோர்" என வருணித்தாரோ அவ்வாறே, செனோ பனிசுவினதும் அவருக்கு முந்தியோரினதும் வழிவந்தோரே என ஈலிய வாதிகளை வருணித்தார். பிளேட்டோ விளையாட்டாகவும் கேலியாகவும் கூறிய பலவற்றிற்கு எவ்வாறு தவறுகப் பொருள் கொள்ளப்பட்டது என நாம் முன்பே கண்டோம். ஆகவே, இங்கும் அரித்தோதில் அவ்வாறே தவறி ழைத்திருப்பதைக் கண்டு நாம் அதிகம் குழப்பமடைய வேண்டியதில்லை.

"முழு உலகையும் பற்றிக் குறிப்பிடுகையில், ஏகம் என்பது இறைவனே" யெனச் செனோபனிசு கூறினரென அரித்தோதில் மேலும் கூறுகிறார். கடவுளுக்கு மனிதபண்புகள் எவையும் இலலையெனவும், தேவருளளும் மனிதருள்ளும் முதல்வனு யுள்ளவனே கடவுள் எனவும் கூறும் 23, 24, 25, 26 ஆம் பகுதிகளையே இது குறிப்பிடுகிறதென்பது தெளிவு. 11 முதல் 16 வரையுமுளள பாடல்கள் அஞகதகவிதையைச் சேர்ந்தன வெனவும் 23 முதல் 26 வரையுள்ள பாடலகள் அண்டவியற கவிதையைச் சேர்ந்தனவெனவும் கொள்வதற்குப் பதிலாக, இவை ஒன்றோடொனறு நெருஙகிய தொடர்புடைய பாடல்கள் எனக் கொள்ளின இபபாடல்கள் அதிக பொருளுடையனவா கின்றனவெனலாம். இதே முறையிற்றான் கடவுள் அல்லது உலகு எனப்படுவது "எல்லாத திசைகளிலும் சமமாயிருக்கிற" தெனவும் அது சுவாசிக்கவில்லையெனவும் செனோபனிசு கூறியிருக்க வேண்டும். தேவர்களிடையே தலைமைப் பதவியெதுவுமில்லையெனும் கூற்றும் 26 ஆம் பகுதியோடு நன்கு பொருந்துவதாயுள்ளது. கடவுளுக்குத் தேவையென எதுவுமிருப்பதிலலை. அத்துடன் ஓமரது காவியத்தில வரும் எர்மிசு, ஐரிசு எனபாரைப் போலத தேவர்களிலொருவர் இன்னொருவருக்குத தொண்டு செய்பவராயிருப்பதும் பொருத்தமானதாயில்லை.

ஓரிறைவாதம அலலது பல்லிறை வாதம

62. ஈண்டுக் "கடவுள்" எனக் குறிப்பிடப்படுவது உலகே என அரித்தோதில் கூறுகிறார். தனித்தனியான புலனுறுப்புக்களில்லையாயினும், இது புலனுணர்வுகளை யுடையதாயிருந்ததெனவும், தனது மனத்தின் சிந்தனையாலேயே பொருட்கள் யாவற்றையும் இயக்கும் ஆற்றலுடையதாய் இருந்ததெனவும் செனோபனிசு கூறினர். இதனை அவர் "ஒரே கடவுள" எனக் குறிபபிடுகிறார். இதனிலிருந்து மட்டும் இவர் ஓரிறைவாதக் கொள்கையினர் என அனுமானிக்க முடியுமாயின், செனோபனிசு அத்தகையவரே. ஆனால் உண்மையென்ன வெனில், "ஒரே கடவுள்" எனும் சொற்றொடருக்குக் கிரேக்கரிடையே அக்காலத்தே வழஙகாத பல கருத்துச் சாயலகள், இக்காலததே

அச்சொற்றொடரைக் கேட்ட மாத்திரத்தே எம்மனத்தில் எழுகின்றன என்பதே. கடவுள் எனும் சொல்லுக்கு வழமையாகத் தரப்படும் பொருளுக்குப் பொருந்தும் கடவுளர்கள் எவரும் இருக்கவில்லையென்பதையே, உண்மையில் செனோபனிசு நிறுவ விரும்பினர் எனலாம். "ஒரே கடவுள்" என்பதற்கு "உலகன்றி வேறு கடவுளில்லை" யெனவே பொருள் கொள்ளல் வேண்டும்.

ஆகவே, புரோய்டெந்தால் கூறுவது போலச் செனோபனிசு ஓர் பல்லிறைவாதி யெனக் கொள்வது, தவறேயென்பது உறுதி[1]. செனோபனிசு தமது இரங்கற்பாக்களில், பல்லிறைவாதத்திற் கேற்ற மொழியைக் கையாண்டிருப்பது நாம் எதிர் பார்த்திருக்கக் கூடியவொன்றே. "கடவுளர்கள" பற்றிய அவரது மற்றைய குறிப்புக்களும், ஓமர், எசியொட்டு எனபோரது மனிதவியலபுடைய கடவுட் கொள்கையைத் தாககும் வகையில் அமைந்தவையெனவே கருதுதல் வேண்டும். பழமொழியினையொத்தவோர் மொழி நடைக்கு அப்படியே நேராகப் பொருள் கொண்டமையே, புரோய்டெந்தாலினது தவறுக்குக் காரணமெனலாம்.[2] குறைந்த பதவியினரான அல்லது வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்களையுடைய கடவுளர்கள் இருந்ததாகச் செனோபனிசு கருதினரென நாம் கூறுவதும் சற்றேனும் பொருந்தாது ; எனெனில் இத்தகைய கடவுளர்களை மறுப்பதே அவரது முக்கிய நோக்கமாயிருந்தது. ஆனால் "உலகில் உண்மையான ஓரிறைவாதத்தைத் தழுவியவர் செனோபனிசு ஒருவரே" எனக் கூறும் உவிலமோவிட்சுவினளவுக்குப் புரோய்டெந்தால் பிழைவிடவில்லையெனவும் என்னால் எண்ணுதிருக்க முடியவில்லை. செனோபனிசுவின் கொள்கை "ஓர் குறுகிய அனைத்துமிறையெனும் வாதக்கருத்து" எனும் டியல்சுவின் கூற்று ஓரளவுக்கு உண்மையைக் கொண்டுள்ளது எனலாம். ஆனால் இக்கூற்றுக்கள் யாவுமே, செனோபனிசுவுக்கு எறக்குறையச் சம அளவு ஆச்சரியத்தை அளித்திருக்குமெனலாம். சேட்டேயினது உவெல்ட்கைன்டைபபோல (Weltkind) தன்னைச் சுற்றிலும் தீர்க்கதரிசிகளை உடையவராயிருந்த அவர், ஒரு காலத்திலதானும் ஓர் இறையியல்வாதியென அழைக்கப்படலாம் என அறிந்திருந்தால், கட்டாயம் புன்னகை செய்திருப்பார்.

1. Freudenthal, *Die Theologie des Xenophanes* (Breslau, 1886).

2. "கடவுளருள்ளும் மனிதருள்ளும முதனமையானவர்" எனச் செனோபனிசு தமது கடவுளைப் பற்றிக கூறுவதிலிருந்து, அவர் பல கடவுளர் இருந்தனர் எனக் கருதினர் எனக் கொள்ளலாகாது. இதுவோர் பேச்சு முறையே.

அத்தியாயம் III

எபிசோசு நாட்டு எரக்கிளேட்சு

எரக்கிளேட்சு

சின் வாழ்க்கை

63. புளொசனது மகனும் எபிசோசு நாட்டவனுமான எரக் கிளேட்சு 69 ஆவது ஒலிம்பிய ஆண்டில் (504/3—501/0 கி. மு.) சிறப்பொடு விளங்கினரெனக் கூறபடுகிறது[1]; அதாவது, பல் வேறு வரலாறுகளிலும் இவரோடு தொடர்புடையனவெனக் குறிப்பிடப்பட்டுள்ள அரசனை டாரியசுவினது ஆட்சிக்காலத்தின நடுப்பகுதியிலென்க.[2] பைதாகரசு, செனோபனிசு எனபோரை, எரக்கிளேட்சு இறந்த காலத்திற் குறிப்பிடுகின்றரெனினும் (பகுதி 16), பார்மனிடிசு இவரை இறந்தகாலத்தில வைத்தே குறிப்பிடுகினரர் (பகுதி 6) எனபது நாம் முகியமாகக் கவ னிக்கவேண்டியதாகும். மெய்யியல் வரலாற்றில் இவருக்குரிய இடத்தை இக்குறிப்புக்களிலிருந்து நிர்ணயிக்கலாம். 114 ஆவது பகுதியிற் குறிப்பிடப்பட்டிருக்கும், எமோடரசு நாடுகடத்தபபட்ட சம்பவம், பாரசீகரது ஆட்சியின் வீழ்ச்சிக்கு முனனர் நடைபெற் றிருக்க முடியாது என்பதைக் கொணடு, எரக்கிளேட்சு கி. மு. 478 ஆம் ஆண்டிற்கு முன்னர் தனது நூலை வெளியிட்டிருக்க முடியாதெனச் செல்லர் கருதினர். இது உண்மையானால், தனது கவிதையை எழுதிய காலததே, பார்மனிடிசுவுக்கு எவ்வாறு எரக் கிளேட்சுவின் கருத்துக்கள் தெரிநதிருந்தன எனபதை விளக்கு தல் சிரமமாயிருக்கும்.[3] ஆனால் பேரரசனுக்குத் தாம் திறை செலுத்தி வந்த காலத்திலேயே, எபிசியர்கள் தம் நாட்டவன் ஒருவனை நாடுகடத்தினர் என எணணுவதிற் சிக்கல் எதுவுமில்லை. சந்தேகத்திற கிடமானதான எரக்கிளேட்சுவின் கடிதங்கள் எனும் நூல் எமோடரசு நாடு கடததப்பட்ட சம்பவம் டாரிய சுவின் ஆட்சிக்காலத்தே நடந்ததெனவே நம்பப்பட்டதெனக் கூறுகிறது[4]. எமோடரசுவின் தலைமையிற் செயற்பட்ட கட்சியினர்,

1. இடையோசினிசு, வேறு யாருகுமூடாக அபபொலோடரசுவிடமிருந்து இதனை அறிநதிருததல வேணடும். பிளிசன என்பதிலும புளொசன எனபதே சரியான தெனபதறகு அதிக ஆதாரங்கள உள. மேலும, புளொசன் என்பது ஓர் அயோனிய பெயா எனபது சாசனங்களிலிருந்தும தெரிய வருகிறது.

2. Bernays, *Die heraklitischen Briefe*, pp. 13 Sqq.

3. பார்மனிடிசுவின காலததிறகு 177 ஆம பககம பாக்கவும்.

4. Bernays, *op. cit.* pp. 20 Sqq. உரோமில் பன்னிரு சட்டங்கள இயற்றப்படடோது, எமோடரசும் அபபணியிற் பஙகு பறறினன் எனனும் உரோம வரலாற்றேடும் இது பொருநதுவதாகவேயுள்ளது. உரோமிலுள்ள, கொமித்தியத்தில் இவரது சிலை ஒன்றிருந்ததெனப் பிளினி கூறுவர். ஹிரேக்கர்

பாரசீக அரசினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராயும் இருந்தனர் என எண்ணுவதிலும் நியாயமுண்டு. ஆகவே, ஏமோடரசு நாடு கடத்தப்பட்ட சம்பவம், பாரசீகரது ஆடசிக்கு எதிரானவோர் இயக்கம ஆரம்பித்ததைக் குறிக்குமேயல்லாது, அவவாடசியின் வெறறியையல்ல வெனலாம்.

எரக்கிளைடடசு, செனோபனிசுவின் சீடராயிருந்தனர் எனச் சோதியன் என்பாா கூறுகிறார்[1]. ஆனால் இது நம்பத்தகுந்த தல்ல வெனலாம்; ஏனெனில், எரக்கிளைட்டசு பிறப்பதற்கு முனனரே செனோபனிசு அயோணியாவை நீஙகியிருந்தார். இவா எந்த ஒருவரினதும் சீடரலல எனக் கொள்வதே பொருததம்போலத் தோன்றுகிறது. ஆனால் மைலீசிய அண்டவியல, செனோபனிசுவின கவிதைகள் ஆகியவற்றை நனகு அறிநதிருந்தார் எனபது தெளிவு. பைதாகரசுவினாற் போதிக்கப்பட்ட கொள்கைகளைப பறறியும் அவர் ஓரளவுக்கு அறிந்திருந்தார் (பகுதி 17). இவர் பழமையான அரசகுடும்பம் ஒன்றைச் சோந்தவர் என்பதையும, தமது தம்பிக்காக, பசிலியசு எனும் கௌரவ பதவியைத் துறந்தவர் என்பதையும் தவிர இவரது வாழ்க்கை பறறி நாம் அதிகம் அறியோம்[2]. இவரது வாழ்கைக பற்றிய பிற கூற்றுக்கள் எவ்வாறு தோன்றின எனபதை நாம் அறிவோம்.[3]

களது சடடஙகளை மாதிரிகளாகக் கொணடே பனனிரு சட்டஙகள இயறறபபட்டன வெனபதை உரோமாகள் நனகு உணர்நதிருநதனா. பேணேய்சு கூறுவதுபோல, உரோம வரலாற்றில போதிய ஆதாரஙகளுடைய மிகசசில விடயங்களில இதுவு மொனறெனக.

1. Sotion *ap*. Diog. ix. 5 (R. P. 29 c).

2. Diog, ix. 6 (R. P. 31).

3. ஆனமாககள் நீராதல அவற்றிறகு மரணத்தைக் கொண்டுவரும் என எரககிளைட்டசு கூறினா (பகுதி 68). இதனோடு பொருநதத்தககதாக, அவர் நீரவீககததினால இறநதாரெனக கூறப்படுகிறது. எபிசியாகள தமது நகரதைச் சிறுவர்களுககு விடடுவிடவேண்டுமெனவும (பகுதி 114) காலம என்பது சொககட்டானாடிக் கொணடிருககும் ஓர் சிறுவனெனவும் (பகுதி 79) அவர் கூறினார். ஆகவே, அவா பொதுவாழ்விற் பங்குகொளள மறுததாரெனவும், ஆட்டெமிசு ஆலயத்திற் சிறுவாகளோடு விளையாடுவதில தனது காலததைக் கழித்தாரெனவும் கூறப்படுகிறது. சாணததை வெளியே வீசி விடுவோா பிரேதங்களை அதனிலும் விரைவாக வீசிவிடுதல் வேண்டுமென அவர் கூறினார் (பகுதி 85); இதறகேற்ப, இவர் தனக்கு நீரவீக்கநோய் வந்தபோது சாணத்தை உடல் முழுவதும பூசிககொண்டார் எனக் கூறபபடுகிறது. இறுதியாக, 58 ஆம் பகுதியோடு பொருந்துவதற்காக, இவர் தனது வைத்தியர்களோடும் அதிகம் வாதித்தாரெனக் கூறப்படுகிறது. இககடடுககதைகளை Diog. ix. 3–5 இல் காண்க.

64. எரக்கிளீட்சுவின் நூலின்[1] பெயர் யாதென நாம் அறி யோம். அதற்குப் பெயரெதுவும் இருந்ததா வெனபதும் சந்தே கமே. ஆகவே அதிற் கூறப்படனவற்றைப பற்றியும் நாம் ஓர் தெளிவான கருத்தைப் பெறமுடியாதிருகிறது. அது மூனறு பகுதிகளாகப் பிரிக்கபபட்டிருந்ததெனக் கூறபபடுகிறது : பிர பஞ்சநூல், அரசியல்நூல், இறையியல்நூல் எனபனவே அப் பகுதிகள எனக[2]. இநநூலை இவ்வாறு பிரித்தவர் எரக்கிளீட் டசுவே என நாம் கொள்ளலாகாது ; சுதோய்க்க பாடிய காராகள் இதனைத் தொகுக்க முயனறபோது, இயல்பாகவே இது இத்தகைய மூனறு பகுதிகளாக்கப்படக்கூடியதாகக் காணப் பட்டது எனவே நாம் அனுமானித்தல் வேண்டும்.

எரக்கிளீட்சுவின மொழிநடை சிறிதும் தெளிவற்றதென் பது பிரசித்தம் ; இதனால் இவருக்கு " இருளுடையார் " எனும் பட்டப் பெயரும் எறபட்டது. இடெல்பிகடவுள், சிபில் என்பவைபற்றிய பகுதிகளிலிருந்து (11–12), தேவவாக்கைப் போனறவோர் மொழி நடையைத் தாம் கைக்கொண்டமையை இவர் உணர்நதிருந்தார் என்பது புலபபடுகிறது. ஆகவே இவர் ஏன இந்நடையில் எழுதினர் என நாம் வினவலாம். மூதலாவதாக, அக்காலததில் இத்தகைய நடையில் எழுது வதே வழக்காயிருநதது என்பதைக் குறிப்பிடல் வேண்டும்[3]. அக்காலத்தே நிகழ்ந்த பரபரப்பான சம்பவங்களும், சமய மறுமலர்ச்சியின் செலவாக்கும் சேர்ந்து அக்கால சிநதனையாளர் களுக்கு, தீர்க்கதரிசிகளினதைப் போன்றவோர் மதிபபை எற் படுத்தின. பிந்தர், ஐசுகைலோசு எனபோரும் இத்தகைய நடை யிலே எழுதினர். தனித்துவம் மலிந்திருந்த இக்காலததே வாழ்ந்த இவர்கள் தனிமையுடையோராயும் எதனினும் ஆர்வமில்லாதோராயும் இருக்குமியல்புடையாராயிருந்தனர். எரக் கிளீட்டசு இத்தகையவராயிருந்தார் எனபதில் ஐயமில்லை. தங்கத்தைத் தேடி நிலத்தைத் தோண்டும் ஆர்வம் மனிதர் களுக்கிருந்தால் அவர்களுக்குத் தஙகம் கிடைக்கலாம் (பகுதி 8);

1. Diog. ix. 12 (R. P. 30 b) இல் அநேக தலைப்புக்கள் தரப்பட் டிருப்பதிலிருந்து, அவற்றுள் எதுவுமே ஆதாரபூர்வமாக, உறுதிபபடுதபபட்ட தல்ல எனபது தெளிவாகிறது. " தேவதைகள " என்னும் தலைபபுப் பிளேட் டோவில சொபோக்கிளிசு எனும் நூலில உள்ள குறிபபிலிருநது எடுக்கப்பட்டதே. வேன்ய யாவும் சுதோய்க்க தொகுப்பாசிரியர்கள் புகுதிய " இலட்சியஙகளே. "

2. Diog ix. 5 (R. P. 30). எரக்கிளீட்சுவின் கவிதைப்பகுதிகளை வரிசைப் படுத்துவதில், பைவாடடா இமமுறையையே பினபற்றியுள்ளார். 1–90, 91–97, 98–130 என்பனவே மூண்டு முபபிரிவுகளாக கருதபபடல் வேணடும்.

3. *Herakleitos von Ephesos* எனும நூலின முன்னுரையில் டியல்சு தந்துள்ள குறிப்புக்களைப் பார்ததல் பயனளிக்கும்.

அத்தகைய ஆர்வமில்லாதோர், வைக்கோலோடு திருப்தியடைய வேண்டும் (பகுதி 51). தியோபிறசுத்தோசு எரக்கிளீட்சுவைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தும் இதுவெனவே தோனறுகிறது. எரக்கிளீட்சு, விறைத்த தலையுடையவன் போன்ற மனோவியல் புடையராய் இருந்தமை, அவரது கூற்றுக்கள் பல குறைவுடையனவாயும் முரண்பாடுடையனவாயும் இருப்பதற்குக காரணமாயிருந்தது எனத் தியோபிறசுத்தோசு கூறினார்[1].

கவிதைப் பகுதிகள்

65. மிகவும் சிறந்ததான பைவாட்டரது பதிப்பில் உள்ள ஒழுங்கின்படி, எரக்கிளீட்சுவின் பகுதிகளைத் தருகிறேன்[2].

(1) என்னைக் கவனிக்கவேண்டியதில்லை ; ஆனால் எனது சொல்லைக் கேட்பதும், பொருளாகள் யாவும் ஒன்றேயென ஒப்புதலும் அறிவுடையோர்க்கழகாகும். R. P. 40.

(2) இச்சொல்லானது என்றும் உண்மையானதெனினும், மனிதர்கள் முதன்முதலில் இதனைக் கேட்கும்போது, இதனைக் கேட்பதற்கு முன்பு எப்படியிருந்தார்களோ, அவ்வாறே இதனை விளங்காதவர்களாக இருக்கின்றனர். இச்சொல்லின்படியே யாவும் நிகழ்கின்றவெனினும், நான் சொற்களையும் சம்பவங்களையும் இனவாரியாகப் பிரித்து விளக்கும்போதும், மனிதர்கள் இவற்றைக் கொஞ்சமேனும் அறியாதவர்போலக் காணப்படுகின்றனர். ஆனால் சிலர், விழித்திருக்கும்போதும் தாம் என்ன செய்கின்றோம் என்பதை அறியாதிருக்கிறார்கள் ; இவர்களை விழித்திருக்கும்போதும், நித்திரையில் தாம் செய்வனவற்றை மறந்துவிடுபவர்கள்போல் இருக்கிறார்கள். R. P. 32.

(3) அறிவிலிகள், செவிப்புலன் உள்ளபோதும் அது இல்லாதவர்களுக் கொப்பானவரே ; சிலர், இருக்கும்போதும் இல்லாதவர்கள் போன்றேரேயென்னும் கூற்று இவர்களுக்கே பொருந்தும். R. P. 31 a.

1. Cf. Diog. ix. 6 (R. P. 31).

2. தனது பதிபபில், டியல்சு இபபகுதிகளை அவற்றின பொருளுக்கேற்ப வரிசைப்படுததும் முயற்சியை முறறுகக கைவிட்டுவிட்டாராதலால், அவரது நூல் எமகுச் சிறிதும பயனறறதாகிவிடுகிறது. முற்றிலும் சீராயில்லாதவோர் ஒழுங்கு முறையினால் எற்படக கூடிய சிரமத்தை அதிகமாக மதிப்பிட்டதுடன், எரகிளீட்டசுவின் மொழிநடை தொடர்பற்ற உரைகருறிப்புக்களாலானது போனறது எனும் கூற்றையும் இவா மிகையாக மதிப்பிட்டுவிட்டார் எனவே எனகருத் தோன்றுகிறது. எரகிளீட்டசுவின் நடை அத்தகையது என்பது உணமையே யெனினும், அதைக கொண்டு அவர் நீட்சேபோல எழுதினார் என முடிவு செய்யலாகாது. கிரேக்க எழுதாளன் ஒருவனது நடை எவ்வளவுதான் தீக்கதரிசன வாக்குப்போல விளக்கமில்லாது இருந்தாலும் அது தொடர்பற்றதாகவிருந்திருக்க முடியாது.

(4) கண்கள் காதுகள் என்பனவற்றின் மொழியை அறியாத ஆன்மாக்களே உடையோருக்கு, இவை பொய்ச்சாட்சிகளே. R. P. 42.

(5) பலர் தாம் காண்பவற்றையும் கவனிப்பதில்லை. பிறர் அவற்றைப் போதிக்கும்போதும் மனத்திற் பதிவு செய்து கொள்வதில்லை. ஆனால தாம் அவற்றை உணர்ந்து கொள்வதாகத் தம்மூள்ளே எண்ணிக் கொள்கிறார்கள.

(6) பேசவும் தெரியாமல், கேட்கவும் தெரியாமல்.

(7) திடீரென நடப்பதை, எதிர்பார்த்திராவிட்டால், காண முடியாது. எனெனில் அதனைத் தேடிக காண்டல் சிரமமானது.

(8) தங்கம் தேடுவோர், அதிக மணலைக் கிண்டிச் சிறிது தங்கமே பெறுகின்றனர். R. P. 44 b.

(10) இயற்கை மறைந்திருப்பதிற் பிரியமுடையதாயிருக்கிறது. R. P. 34 f.

(11) இடைலபோயிலிருந்து தீர்க்கதரிசனம் தரும் கடவுள், தனது கருததைக் கூறுவதோ அல்லது மறைப்பதோ இல்லை ; அடையாளங்கள் மூலமாக அதனை உணர்த்துகிறார். R. P. 30 a.

(12) அலங்காரமோ, நறுமணமோ அல்லது களிப்போ இல்லாத மொழிகளைத் தனது பிதற்றும் உதடுகளினால் விளம்பும் சிபிலின் குரல் அவளுள்ளேயுள்ள கடவுளின் சத்தியால், ஆயிரமாண்டுகளுக்கப்பாலும் கேட்கிறது. R. P. 30 a.

(13) காணக்கூடியனவாயும், கேட்கக்கூடியனவாயும் அறியக்கூடியனவாயும் உள்ளனவற்றையே நான் அதிகம் மதிக்கிறேன. R. P. 42.

(14) ஐயத்திற்கிடமான விடயங்களுக்காதாரமாக நம்பத்தகாத சாட்சியங்களைக் கொணர்ந்து.....

(15) காதுகளிலும் கண்களே செம்மையான சாட்சிகள்[1]. R. P. 42 c.

(16) பலபொருள்களை அறிவதனால், அதிக விளக்கம் ஏற்படுவதில்லை. அவ்வாறில்லையெனின் எசியோட்டு, பைதாகரசு, செனோபனிசு, எக்காதையோசு என்போர் நல்ல விளக்கமுடையோராயிருந்திருக்க வேண்டும். R. P. 31.

(17) நெசாக்கோசுவின் மகனை பைதாகரசு, வேறு எவரையும் விட அதிகமாக விஞ்ஞான ஆராய்ச்சியை விருத்தி செய்தான். இவற்றுட் சிலவற்றைத் தேர்ந்துகொண்டு, தான்

1. Cf. Herod. i. 8.

மிகுந்த ஞானமுடையவனெனக் கூறிக் கொண்டான். ஆனால் அவன் பெற்றிருந்தவை பலவிடயங்களைப் பற்றிய அறிவும் பாசாங்குமே. R. P. 31 a.

(18) நான் கேட்ட யாவருள்ளும், ஞானம் என்பது இவை யனைத்திற்கும் புறம்பானது என்பதை உணர்ந்தவர் எவரு மில்லை. R. P. 32 b.

(19) ஞானம் என்பது புறம்பான வொன்று. யாவற்றை யும், யாவற்றிற் கூடாகவும் இயக்கும் சிந்தனையைத் தெரிந்து கொள்வதே ஞானம். R. P. 40.

(20) யாவருக்கும் பொதுவான இவ்வுலகு, எந்தத் தேவ னாலோ, அல்லது மனிதனாலோ ஆக்கப்பட்டதல்ல ; அது மூன் றும், இப்போதும், இனியும் என்றுமறியாத தீயே. அதன் பகுதி கள் சில அணைந்துபோகின்றன ; வேறு சில பகுதிகள் புதி தாகத் தீப்பற்றிக் கொள்கின்றன. R. P. 35.

(21) தீயின் பல்வேறு உருவங்கள் பின்வருமாறு : முதலா வதாக, கடல் ; கடலிற் பாதி நிலம், மறுபாதி சுழல்காற்று. R. P. 35 b.

(22) கலன்கள் தங்கத்திற்கும், தங்கம் கலன்களுக்கும் மாற் றாகப் பயன்படுவதுபோல, எல்லாப் பொருட்களும் தீக்கும், தீ எல்லாப் பொருட்களுக்கும் மாற்றே. R. P. 35.

(23) அது திரவமான கடலாகிறது. அப்போதும், அது நிலமா வதற்கு முன்பிருந்த அளவினதாகவே யிருக்கிறது. R. P. 39.

(24) தேவையும், தெவிட்டலுமாயிருப்பது தீ. R. P. 36 a.

(25) வளியின் மரணம் தீயின் வாழ்வு[1], தீயின் மரணம் வளியின் வாழ்வு ; நிலத்தின் மரணத்தின் மீது நீர் வாழ் கிறது, நீரின் மரணத்தின் மீது நிலம் வாழ்கிறது. R. P. 37.

(26) தீ முன்னேறும்போது, யாவற்றையும் மதிப்பிட்டுத் தண் டனையளிக்கும். R. P. 36 a.

(27) என்றும் மறையாதிருப்பதிலிருந்து யாரும் எப்படி ஒளித் திருக்க முடியும் ?

(28) யாவற்றையும் அவற்றின் திசையிற் செலுத்துவது இடியே. R. P. 35 b.

(29) சூரியன் ஒருபோதும் தனது அளவை மிஞ்சுவதில்லை. அவ்வாறு செய்யின், நீதியின் எவற்பெண்களான எரிநெயிசுகள் அதனைக் கண்டுபிடித்துவிடும். R. P. 39.

1. எம்பிடோக்ளிசுவின நான்கு மூலகங்களுமே இங்கு குறிப்பிடப்படு கின்றன போற் ருெனறுகிறது.

(30) காலை, மாலை என்பனவற்றின் எல்லை கரடியே ; பிரகாசமுடைய சியசுவின் எல்லை கரடிக்கு நேரேயுளது.

(31) எனைய உடுக்கள் யாவும் இருபதினும் சூரியன் இல்லையேல் இரவு வந்துவிடும்.

(32) ஒவ்வொருநாளும் சூரியன் புதியதே.

(33) (தேலிசு இரகணம் ஏற்படுமென முன்னரே கூறினர்).

(34) யாவற்றையும் கொணரும் பருவங்கள்.

(35) பெரும்பாலானோரின ஆசிரியன் எசியொட்டுவே. அவர் அநேக விடயங்களை அறிந்திருந்தாரென மனிதர்கள் உறுதியாக நம்புகின்றனர். இரவையோ பகலையோ அறியாத எசியொட்டுக்கு இவை ஒனறே[1]. R. P. 39 b.

(36) பகலும் இரவும், கோடையும் மாரியும், போரும் சமாதானமும், பசியும் தெவிட்டலும், யாவும் கடவுளே ; ஆனால் நீ எவ்வாறு வெவ்வேறு வாசனைத் திரவியங்களோடு சேர்கையில் அவற்றின் சுவைகளுக் கேற்ப அழைக்கப்படுகிறதோ, அவ்வாறே கடவுளும் பல உருவங்களை அடைகிறார். R. P. 39 b.

(37) பொருட்கள் யாவும் புகையாக மாறினால், எமது மூக்கு அவற்றை இனங்கண்டு கொள்ளும்.

(38) எடிசுவின், ஆன்மாக்கள் மணமுடையவையாய் இருக்கின்றன. R. P. 46 d.

(39) குளிர்ந்த பொருள்கள் சூடாகின்றன, சூடானவை குளிர்கினறன ; ஈரமாயுள்ளது வறண்டு போகிறது, வறண்டிருப்பது ஈரலிப்புடையதாகிறது.

(40) அது பரவுகிறது, ஓரிடத்திற் றிரள்கிறது ; முன்னேறுகிறது, பினனடைகிறது.

(41–42) ஒரே ஆற்றினுள் இருமுறை இறங்க முடியாது ; எனெனில் புது நீர் எப்போதும் வந்து கொண்டிருக்கிறது. R. P. 33.

(43) "தேவரிடையே யிருந்தும், மனிதரிடையே யிருந்தும் பூசல் என்பது அழிந்து போவதாக" என ஓமர் கூறியது தவறு. தான் உண்மையில் இப்பிரபஞ்சத்தின் அழிவை வேண்டியே பிரார்த்தித்தார் என்பதனை அவர் உணரவில்லை ; ஏனெனில் அவரது பிரார்த்தனை பலித்திருந்தால் யாவும் அழிந்து போயிருக்கும். R. P. 34 d.

1. பகல், இரவின் குழந்தையென எசியொட்டு கூறினர்.

(44) போரே யாவற்றினதும் தந்தையும், அரசனும் ஆகும்; சிலரைத் தேவர்களாகவும் சிலரை மனிதர்களாகவும், சிலரைச் சுதந்திர மற்றவர்களாகவும், சிலரைச் சுதந்திரமுடையோராயும் அது ஆக்கியுளளது. R. P. 34.

(45) முரணபட்டிருப்பது எவ்வாறு தனனுள்ளே இசைவுடைய தாயிருகிறது என்பதை மக்கள் அறியார்கள். வில்லிலும், வீணையிலும் உள்ளது போல இதுவும் ஒன்றையொன்று எதிர்த்துள்ள இழுவிசைகளின இசைவே. R. P. 34.

(46) முரணபாடானதே எமக்கு நன்மை பயப்பது.

(47) வெளிப்படையாகவிருக்கும் இசைவிலும், மறைந்திருக்கும் இசைவு நலல தென்க. R. P. 34.

(48) யாவற்றிலும் பெரியனவான விடயஙகளைப் பற்றி நாம் எமக்குத் தோன்றியவாறெல்லாம் கறபனை செய்யாதிருபபோமாக.

(49) ஞானத்தை அடைய வேண்டுவோர், உண்மையில் அநேக விடயஙகளை அறிநதிருத்தல் வேண்டும்.

(50) கம்பளி திருத்துவோனது சிப்பிற்கு நேர்வழியும் குறுக்கு வழியும் ஒனறே.

(51) பொன்னையும், வைக்கோலையும் கொடுத்தால் கழுதைகள் வைக்கோலையே நாடுகின்றன. R. P. 31 a.

(51அ) [1]கைப்புத்தன்மையையுடைய காட்டவரையைக் கண்டதும் எருதுகள் அதனை உண்ணலாமெனறு களிப்படைகின்றன. R. P. 48 b.

(52) கடல்நீர், யாவற்றிலும் சுத்தமானதும், யாவற்றிலும் அசுத்தமானதும் ஆகும். மீனகள் அதனைக் குடிக்கின்றன, அவற்றிற்கு அது நன்மை பயக்கிறது. மனிதர்களுக்கு அது குடிக்கத் தகாததாயுள்ளது. அவர்களுக்கு அது தீமை விளைவிக்கிறது. R. P. 47 c.

(53) பன்றிகள் சேற்றுற் தம்மைக் கழுவிக்கொள்ளுகின்றன. தோட்டத்துக கோழிகள் புழுதியிற் குளிக்கின்றன.

(54) .....சேற்றிற் களிபபதறகு.

(55) எந்த மிருகமும் அடித்தே மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.[2]

(56) 45 ஆவது பகுதியில் உளளவாறே.

1. See Bywater in *Journ. Phil.* ix p. 230.

2. 55 ஆவது பகுதிபற்றி : Diels in Berl. Sitzb., 1901, p. 188.

(57) நன்மையும் தீமையும் ஒனறே. R. P. 47 c.

(58) நோயாளர்களை வெட்டியும் எரித்தும், குத்தியும் பல மாக இழுத்தும் வேதனை செய்யும் வைத்தியர்கள், தாம் செய்யும் இப்பணிக்குப் பணமும் கேட்கின்றனர். இவர்கள் அத னைப் பெறுதற்குச் சற்றேனும் தகுதியுடையரல்லர். R. P. 47 c.

(59) முழுமையுடையனவும் முழுமையற்றனவுமாய் ஒன்றுய்ச் சேர்ந்தும் வேறுய்ப் பிரிந்தும், இசையும் விரோதமும் உடையன வையாய் இருப்பவையே இணைகள். ஏகம் என்பது அனைத் தினுலும் ஆக்கப்பட்டிருக்கிறது ; அனைத்தும் அதனிலிருந்து தோன்றுகின்றன.

(60) இவை இல்லாதிருந்திருந்தால், மனிதர்கள் நீதியின் பெயரையே அறிந்திருக்கமாட்டார்கள்[1].

(61) கடவுளின் நோக்கில் எந்தக் காரியமும் நியாயமான செம் மையான பண்புள்ள காரியமே. ஆனல் மனிதர்கள் சிலவற்றைச் சரியான காரியங்கள் எனவும் சிலவறறைத் தவருன காரியங்கள் எனவும் கருதுகிறர்கள். R. P. 45.

(62) போர் யாவற்றிற்கும் பொதுவானதென்றும், விரோதமே நீதியென்றும், விரோதத்தின் மூலமாகவே (?) பொருள்கள் யாவும் தோன்றி மறைகின்றனவென்றும் நாம் அறிதல் வேண்டும்.

(64) உறங்குபவன எல்லாம் துயிலிலிருப்பது போலவே, விழித் திருப்பனவாக நாம் காணபன யாவும் மரணமே. R. P. 42 c.

(65) ஏகம் மட்டுமே ஞானமுடைத்து. சியசு எனும் பெயரால் அழைக்கபடுதற்கு அது விருப்பமுடையதாகவிருக்கிறது ; விருப் பமில்லாததாயுமிருகிறது. R. P. 40.

(66) வில், உயிரென அழைக்கப்படுகிறது ;[2] ஆனல் அது மரணத்தைக் கொணரும் தொழிலைச் செய்கிறது. R. P. 49 a.

(67) இறப்புளோர் இறப்பிலாரே, இறப்பிலார் இறப்புளோரே; இவர்களது வாழ்வு அவர்களது சாவு, அவர்களது வாழ்வு இவர்களது சாவு. R. P. 46.

(68) ஆன்மாக்கள், நீராகின் இறந்துபோகின்றன. நீர், மண் ணுகின் இறந்து போகின்றது. ஆனல் நிலத்திலிருந்து நீர் வருகிறது, நீரிலிருந்து ஆன்மா உண்டாகிறது. R. P. 38.

1. "இவை" எனும் பொழுது, எல்லாவகை அநீதிகளையும் அவர் கருதியிருக்க வேண்டும.

2. கிரேக்க மொழியில் வில்லையும் உயிரையும குறிக்கும் சொல் ஒன்றே. (மொ. பெ. கு.).

(69) போம்வழியும் வரும்வழியும் ஒன்றே. R. P. 36 d.

(70) வட்டத்தின் பரிதியில் தொடக்கமும் முடிவும் ஒன்றே.

(71) எத்திசையிற் சென்றாலும், ஆனமாவின் எல்லைகளைக் கண்டு பிடிக்க முடியாது ; ஏனெனில் அது அத்தனை ஆழ மானது. R. P. 41 d.

(72) ஆன்மாக்கள் தாம் ஈரப்பற்றுடையனவாகும்போது களிப் படைகின்றன. R. P. 46 c.

(73) மது மயக்கத்திற்குள்ளாகுபவனுடைய ஆன்மா ஈரப்பற் றுடையதாகிறதாதலால், தான் அடியெடுத்து வைக்கும் இடங் களை அறியாது தடுமாறும் அவன் வழிநடப்பதற்கு முகத்தில் உரோமம் கூட வளராத சிறுவனது உதவியை நாடுகிறான். R. P. 42.

(74–76) உலர்ந்த ஆன்மாவே, மிகவும் புத்தியுடையதும் சிறந் ததும் ஆகும். R. P. 42.

(77) மனிதன் இறந்தவனாய், ஆனால் உயிருடையவனாய் இருக் கும் இராக்காலத்தில் தனக்கென ஓர் ஒளியை ஏற்றிக்கொள் கிறான். துயிலின்போது காட்சியிழந்திருந்தவன், மரணத்தி லிருந்து ஒளி பெற்றெழுகிறான் ; விழித்திருப்பவன், துயில் பவனிடமிருந்து ஒளிபெறுகிறான்[1].

(78) எம்மூள்ளே இளமையுடையதாயிருப்பதும் மூப்புடைய தாயிருப்பதும் ஒன்றே ; செயலுடையதாயிருப்பதும் இறந்து போவதும் ஒன்றே ; முன்னுள்ளவை மாறிப் பின்னுள்ளவை யாகின்றன, பின்னுள்ளவையும் மாறி முன்னுள்ளவையா கின்றன. R. P. 47.

(79) காலம் என்பது சொக்கட்டான் ஆடும் ஓர் சிறுவனென்க: அரசனது போன்ற இவ்வதிகாரம் உண்மையில் ஓர் சிறுவனது கையிலேயே உளது. R. P. 40 a.

(80) நானே தேடியுள்ளேன். R. P. 48.

(81) அதே ஆற்றில் நாம் கால்வைக்கிறோம், கால் வைக்க வில்லை ; நாம் இருக்கிறோம், நாம் இல்லை. R. P. 33 a.

(82) ஒரே தலைமகனுக்காக பணி செய்தலும், அவனாலேயே ஆளப்படுவதும் சலிப்பை எற்படுத்துகிறது.

(83) மாற்றமடைகையில் அது ஆறுதலடைகிறது.

1. டியல்சு தந்துள்ளவாறு, இப்பகுதிகளைப் பூரணமாகவே தந்திருக்கிறேன். மரணம், துயில், விழிப்பு எனபவை, எரக்கிளிட்டசுவின மெய்யியல் முறை யில், முறையே நிலம், நீர், வளி என்பனவற்றைக் குறிக்கினறன.

(84) பொசெற்றுப்பானமும், இளறப்படாவிடில் வேறு வேறு கப் பிரிந்து விடுகிறது.

(85) சாணத்திலும், பிரேதங்கள் வெளியே வீசத்தகுந்தன.

(86) பிறந்ததும், வாழவும், பின்னர் தமது மூடிவை அடைய வும் விரும்புகிறார்கள். தாம் இறக்கும்போது, பிள்ளைகளே விட்டுச் செல்கின்றனர். அவையும் தமது காலத்தின் இறுதியில் தமது மூடிவை அடைகின்றன.

(87–89) ஒரு மனிதன், முப்பது ஆண்டுகளில் பாட்டனுகலாம்.

(90) துயின்று கொண்டிருப்போரும் (உலகில் நடந்துகொண்டி ருக்கும் கருமங்களில்) எமது சக தொழிலாளரே.

(91அ) சிந்தனை யாவருக்கும் பொதுவானது.

(91ஆ) ஒரு நகரத்தில் வாழ்வோர் எவ்வாறு அதன் சட்ட முறையை இறுகத் தழுவியிருக்கின்றனரோ, அதுபோலவே, அல்லது அதனிலும் பலமாக, பூரண விளக்கத்தோடு பேசுவோர் யாவரும், யாவருக்கும் பொதுவான அறிவை இறுகத் தழுவி ஒழுகல் வேண்டும். ஏனெனில் மனிதரது சட்டங்கள் யாவும், ஒன்றே ஒன்றுகவுள்ள தெய்வ விதியிலிருந்தே தமது ஆணை யைப் பெறுகின்றன. இத்தெய்வவிதி எவ்வளவு வியாபிக்க முடியுமோ அவ்வளவிற்கு வியாபித்திருக்கிறது. அப்படியிருக் கையில், அது யாவற்றிற்கும் கண்டு சிறிது எஞ்சியுமிருக்கிறது. **R. P. 43.**

(92) ஆகவே, எது பொதுவானதோ அதையே நாம் நம்புதல் வேண்டும். ஆனல் எனது சொல் யாவருக்கும் பொதுவான தாயிருந்தபோதிலும், சிலர் தமக்கெனப் புறம்பான ஞானம் உள்ளவர்கள் போல நடந்து கொள்கின்றனர். **R. P. 44.**

(93) தாம் எதனை அடிக்கடி புணர்கின்றனரோ, அதனையே அவர்கள் விரோதித்திருக்கின்றனர். **R. P. 32 b.**

(94) துயிலிலிருக்கின்ற மனிதர்களைப் போலப் பேசுவதும், கருமமாற்றுவதும் தகுதியுடைய காரியங்களல்ல.

(95) விழித்திருப்போர் யாவருக்கும் பொதுவானவோர் உலகு உளது. ஆனல் உறங்குவோர் ஒவ்வொருவரும் தமக்கெனத் தனித்தனியே உள்ள உலகங்களுக்குச் செல்கின்றனர்.

(96) மனிதனது வழியில் ஞானம் இல்லை ; ஆனல் கடவுளி னது வழியில் ஞானம் உளது. **R. P. 45.**

(97) இளஞ்சிறுரை மனிதர்கள் குழந்தை என அழைப்பது போலவே, மனிதனும் கடவுளால் குழந்தையென அழைக்கப் படுகிறன். **R. P. 45.**

(98, 99) மனிதர்கள் யாவரிலும் அதிக ஞானமுடையவனும் கடவுளோடு ஒப்பிடப்படும்போது வாலில்லாக் குரங்குக்குச் சமமானவனே. இது, வாலில்லாக் குரங்குகள் யாவற்றிலும் மிகவும் அழகியதாயுள்ள குரங்கும், மனிதனோடு ஒப்பிடப்படும் போது அவலட்சணமுடையதாய்த் தோன்றுவது போலென்க.

(100) தமது (நகரத்தின்) சுவர்களைக் காப்பதற்கு எவ்வாறு போரிடுகின்றனரோ அவ்வாறு தமது சட்டங்களைக் காப்பதற்கும் மனிதர்கள் போரிடல் வேண்டும். R. P. 43 b.

(101) சிறந்த முறையில் மரணமடைவோர் உயர்ந்த பலனைப் பெறுகின்றனர். R. P. 49 a.

(102) போரில் வீரமரணம் எய்துவோரைத் தேவர்களும் மனிதர்களும் கவுரவிக்கின்றனர். R. P. 49 a.

(103) குடியிருக்கும் வீட்டிற் பற்றிய தீ எவ்வாறு உடனடியாக அணைகப்படவேண்டுமோ, அதனிலும் விரைவாக அணைக்கப்படவேண்டியது பொறுப்புணர்ச்சியற்ற உற்சாகம். R. P. 49 a.

(104) தாம் வேண்டுவனவற்றை யெல்லாம் பெறுவது மனிதர்களுக்கு உகந்ததல்ல. இடையே நோய்கள் ஏற்படுவதாலேயே, சௌக்கியம் இன்பமூட்டுவதாயிருக்கிறது ; தீமைகளினால் நன்மை சிறப்படைகிறது ; பட்டினியினால் வளமும், களைப்பினால் ஓய்வும் இவ்வாறே இன்பமூட்டுவனவாகின்றன. R. P. 48 b.

(105–107) இதயத்தின் ஆசைகளோடு போராடுதல் அரிது. அது தனக்கு வேண்டிய யாவற்றையும் ஆன்மாவின் செலவிற் பெற்றுக் கொள்கிறது. R. P. 49 a.

(108, 109) எமது குறைபாடுகளை மறைத்து வைத்திருத்தல் புத்திசாலித்தனம் ; ஆனால் (மதுக்) கிண்ணங்களோடு ஒய்ந்திருக்கும் வேளைகளில் அவ்வாறு மறைத்து வைத்திருத்தல் மிகவும் கடினம்.

(110) எகத்தினது அறிவுரையின்படி ஒழுகுதல் வேண்டும் என்பது ஓர் சட்டமும் கூட. R. P. 49 a.

(111) எனெனில் இவர்களுக்கு எவ்வளவு சிந்தனை அல்லது ஞானம் உளது ? மக்கட் கூட்டத்தைத் தம் ஆசிரியராக மதிக்கும் இவர்கள், கவிஞர்களையும் பின்பற்றுகின்றனர். ஆனால் அவர்களுட் பெரும்பாலோர் தீயவர்கள் எனபதையும் சிலரே நல்லவர்கள் என்பதையும் இவர்கள் அறியார். எனெனில், அவர்களுள் மிகச் சிறந்ததோரும், மனிதரிடையே தாம் அழியாப் புகழ் பெறவேண்டுமென்னும் இலட்சியத்தை, மற்ற எல்லாவற்றிலும் உயர்வாக மதிக்கின்றனர். ஆனால் அவர்களிற்

பெரும்பாலானோர் விலங்குகளைப் போல அமிதமாக உண்டு வாழ்கின்றனர்.[1] R. P. 31 a.

(112) வீனியோரிலும் உயர்வாக மதித்தற்குரியவனும், தியூத் தாமசுவின் மகனுமான பியாசு வென்பான் பிரீனியில் வாழ் கிறான (" பெரும்பாலான மனிதர் தீயோர் " என அவன் கூறினான்).

(113) யாவரிலும் சிறந்தவனுயிருப்பவன், அவன் ஒருவனே யானாலும், என்னைப் பொறுத்தவரையில் ஆயிரம் பேருக்குச் சமமானவனுவான். R. P. 31a.

(114) முகத்தில் உரோமம் முளைக்காத தமது சிறுவரிடம் நகரை விட்டு விட்டு, எபிசியர்கள் யாவரும் தற்கொலை செய் வதே பொருத்தமானது ; வெனெனில் தம்முள் யாவரிலும் சிறந்தவனுகிய எமோடரசுவை " எம்மிடையே யாவரினும் சிறந் தவனான ஒருவனும் இருக்கவேண்டாம். அப்படி யொருவன் இருப்பானுகில் அவன், வேறு எங்காவது, வேறுயாருக்குமிடையே அவ்வாறு இருக்கட்டும் " எனக் கூறி அவனை இவர்கள் வெளி யேற்றினரனறே ! R. P. 29 b.

(115) நாய்கள் தாம் அறியாதவர் எவரைக் கண்டபோதிலும் குரைக்கின்றன. R. P. 31 a.

(116) நம்பிகையில்லாததால் மனிதர்..... (ஞானியைத்) தெரிந்து, கொள்வதில்லை.

(117) எல்லோரும் தன்னைப் புகழ்கிறார்கள் என மூடன் நம்புகிறான். R. P. 44 b.

(118) இவர்களுள் மிகவும் உயர்வாக மதிக்கப்படுபவன் கூட வெறும் கற்பனைகளையே நம்பிக்கொண்டிருக்கிறான். ஆனால் தமது கற்பனைகளை எவ்வளவு உறுதியாகத் தழுவிக்கொண்டி ருப்பினும், பொய் புனைவோரும், பொய்ச்சாட்சி கூறுவோரு மான இவர்கள் ஒருகாலத்தில் நீதியின் பிடிக்குள் அகப்படு வார்கள் என்பது உண்மை.

(119) ஓமரை மேடையிலிருந்து இறக்கிச் சவுக்காலடிக்கவேண் டும். ஆகைலொகோசுவுக்கும் அவ்வாறே செய்தல் வேண்டும். R. P. 31.

(120) எல்லா நாட்களும் ஒரு தன்மையுடையனவே.

(121) மனிதனது குணங்களை அவனது விதியாகின்றன.

1. 2 ஆம் அத்தியாயத்தில் 45 ஆம் பிரிவில் உள்ள மூவகை வாழ்க்கையையே இது குறிப்பிடுகிறதுபோலத் தோன்றுகிறது.

(122) மனிதர்கள் இறந்தபின்னர், அவர்கள் முன்பு எதிர் பார்த்திராத, கனவு கூடக் கண்டிராத பலவிடயங்கள் அவர்களை எதிர்நோக்குகின்றன. R. P. 46 d.

(123) .....அவர்கள் எழுந்து, உயிருள்ளவர்களையும் இறந் தோரையும் விழிப்புடன் பாதுகாப்போராகின்றனர். R. P. 46 d.

(124) இரவிற்றிரிவோர், மேசியர்கள் (Magians) மதுக் கடவுளை வழிபடும் " பச்சோய்கள் " லீனுய்கள் (Lenai) " தீட்சை பெற்றோர் "......

(125) மனிதர்கள் ஈடுபடும் மர்மச்சடங்குகள் யாவும் தூய்மை யற்றனவே. R. P. 48.

(126) தேவர்களினதும், வீரர்களினதும் இயல்பை அறியாத வர்கள், அறிவிலியொருவன் வெறுமையான வீடொன்றைப் பார்த்து கதைக்க முற்படுவதுபோல, உருவசசிலைகளை வழிபடுகின்றனர். R. P. 49 a.

(127) இவர்கள் ஊர்வலத்திற் சென்றதும், இழிவானதான லிங்கபாசுரதத்தைப் பாடியதும் இடையனீசசுவையல்லாது வேறு எவரையாயினும் போற்றுதற்கே யெனின், இவர்கள் செயல் மிகவும் இழிந்ததே. ஆனால் இவர்கள் வெறிகொண்டவர்களைப் போலப் பாடியும் ஆடியும் கவுரவிக்கும் இடையனீசசுவும் எடிசு வும் ஒன்றே. R. P. 49.

(129, 130) சேற்றிற் காலை வைத்தவன் அச்சேற்றினாலேயே அதனைக் கழுவ முற்படுவதுபோல, தம்மைப பரிசுத்தப்படுத்துவ தாக எண்ணிக் கொண்டு இவர்கள் தங்கள்மீது இரத்தத்தைப் பூசிக்கொள்கிறார்கள். தனனைக் கழுவும் பொருட்டுச் சேற்றைப் பூசிக்கொள்பவனைக் காணும் எந்த மனிதனும், அவனுக்குப் பைத்தியம் பிடித்ததெனவே எண்ணுவான். R. P. 49 a.

தொகுப்பு ஆசிரியர்கள் தரும்வரலாறு

66. இப்பகுதிகளிற் பலவற்றின் பொருள் என்னவென்பது கொஞ்சமேனும் தெளிவாயில்லை. இவற்றுட் பலவற்றின் பொருள் என்னவென்று எமக்கு ஒருபோதும் தெரியாமலே போய்விடலாம் என்பதும் சாத்தியமே. தொகுப்பாசிரியர்கள் மூலமாக, இவற்றின் பொருளினை அறியக்கூடிய குறிப்பெதுவும் கிடைக்கிறதா எனப் பார்க்கலாம். ஆனால், துரதிட்டவசமாக எனையோரைப் பற்றிக் கூறியுள்ளளவிற்குத்தானும், தொகுப்பா சிரியர்கள் எரக்கிளிட்டசுவைப் பற்றிக் கூறவில்லை. பொதுவாகத் தியோபிறசுத்தோசு கூறியனவறறைத் திரிபின்றிக் கூறுபவ ரான இப்பொலிட்டசுவும், தேலிசு, பைதாகரசு, எரக்கிளிட்டசு, எம்பிடோக்கிளிசு ஆகியோரைப் பற்றிய தகவல்களை அதிகம் நம்பத்தகாததும், மிகவும் சுருக்கமான சுட்டுரைகளைக் கொண்

டதுமான வாழ்க்கை வரலாறுகளின தொகுப்பொன்றிலிருந்தே பெற்றுள்ளார். பிற்காலத்து விடயங்களை அறிதற்கு அவர் உபயோகித்த மிகச்சிறந்த நூலினை அவர் எரக்ஙிளீட்டசுவைப் பற்றி அறிதற்கும் பயனபடுத்தியிருந்திருப்பாரேயாகில், எரக் ஙிளீட்டசுவைப்பற்றி நாம் அநேகவிடயங்களை அறியக் கூடியதா யிருந்திருக்கும். இப்பொலெடசு எரக்ஙிளீட்டசு பற்றி அறிதறகு உபயோகித்த நூல், எரகஙிளீட்டசுவை ஓர் பைதாகரசவாதி யெனக் கருதியவோர், "வரன முறைநூல்" எழுத்தாளரால் எழுதப்பட்ட தென்க. பைதாகரச வாதிகளுக்கும் எரக்ஙிளீட்டசுவுகக மிடை யேயுள்ள தொடர்பு, இப்பாசோசுவே. ஏனெனில் இப்பாசோசு வினது மெய்யியற கொள்கையிலும் தீயிறகு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அரித்தோதிலெப் பினபற்றியவரான தியோபிறசுத்தோசுவும், எரக்ஙிளீட்டசு, இப்பாசோசு ஆகிய இரு வரையும் ஒரே வசனத்திற குறிப்பிட்டமை **வரன்முறை** நூலாசிரி டையே இம்மயகத்தை ஏறபடுத்துவதற்குப் போதுமானதாயிருந்த தது[1]. ஆகவே பெருமளவிறகுப் பூரணமாயிருப்பதும், சரியான தும், "வெதுசுதாபிளாகஙிட்டா" விலிருந்து பெறப்பட்டதும் இடை யோசினிசுவால் எழுதப்படடதுமான வருணனை யொன்றையே நாம் பாக்கவேணடியிருக்கிறது. எரக்ஙிளீட்டசுவைப்பற்றி இடை யோசினிசு தந்துள்ள இரு வர்ணனைகளில் இதுவே விரிவானது.

எரக்ஙிளீட்டசுவின் பாடியகாராகள் என இடையோசினிசுவாற் குறிப்பிடப்பட்டுள்ள அனைவருமே சுதோய்க்காகள் என்பது இன் ஞெரு பிரச்சினையாகும்[2]. ஏனெனில், எரக்ஙிளீட்டசுவின மீது விசேட மதிப்புக் கொண்டிருந்தோரான சுதோய்க்கர்கள், கூடிய ளவிற்குத் தமது கொள்கைக் கேறறவாறு அவரது கொள்கை களுக்கு விளக்கம் காணமுயனறனர். மேலும் தமக்கு முநதிய கால சிந்தனையாளர்களது கொள்கைகளைத் தமது கொளகை களோடு "இசைவிப்பதில" இவர்கள் அதிக பிரியமுடையோராய் இருந்தனர். இதன் விளைவுகளும் பாரதூரமானவை. ஆகவே சுதோய்க்கரினது கொள்கைகள் சில, அடிக்கடி எரக்ஙிளீட் டசுவின் கொள்கைகளெனக் கூறப்படுகின்றன. சுதோய்க்கர் களுக்குரியனவான சொறகள் பலவும், எரக்ஙிளீட்டசுவின் பகு திகளிடையே விரவிக் கிடககக் காணப்படுகின்றன.

67. மக்கட்கூட்டத்தை மட்டுமல்லாது, தனக்கு முன்பு இயற்கை பற்றி ஆராய்ந்த சிந்தனையாளர் யாவரையுமே எரக்ஙிளீட்டசு இழித்துக் கூறுகிறார். என்றும் வெளிப்படையாயிருந்தபோதி எரக்ஙிளீட்ட சின கண்டுபிடிப்பு

[1]. Arist. *Met.* A, 3. 984 a 7 (R. P. 56 c); Theophr. *ap.* Simpl. *Phys.* 23,33 (R. P. 36 d).

[2]. Diog. ix. 15 (R. P. 30 c).

லும் (பகுதி 93) வேறு யாராலும் முன்பு உணரப்படாதிருந்த ஓர் உண்மையைத் தான் கண்டுபிடித்துவிட்டதாக அவர் கருதினர் என நாம் இதிலிருந்து அனுமானிக்கலாம். மனிதர்கள் யாவரும் அறிவிலிகள் எனவும் புத்திகூர்மை யற்றோர் எனவும் இவர் இழித்துக்கூறியபோது இவர் மனத்தில் என்ன கருத்துடையாயிருந்தார் எனபதை அறிந்து கொள்ளலாம். 18 ஆம், 45 ஆம் பகுதிகளில் இதற்கான விடை காணப்படுகிறதெனத் தோன்றுகிறது. மேலெழுந்தவாரியாக நோக்குகையில், தனித்தனவாகவும் முரண்பட்டனவாகவும் காணப்படும் பொருள்களாவும் உண்மையில் ஒனறே யெனனும் கருத்தும், இவ்வேகப்பொருள பலவாயும் உளது எனும் கருத்தும் இப்பகுதிகளிலிருந்து பெறப்படலாம். "முரண்பாடுகளின விரோதம்" என்பது உண்மையில் ஓர் இசைவே. இதிலிருந்து பூசலிடும் முரண்பாடுகளின் அடிப்படையாக ஒருமை உளதென்னும் அறிவேயொழிய, ஞானம் எனபது பல பொருள்களைப் பற்றிய அறிவல்லவென்பதும் பெறப்படுகிறது. எரக்கிளீட்சுவின கொள்கைகளில் முக்கியமானது இதுவேயெனப் பிலோவும் கூறியுள்ளார். அவர் கூறியிருப்பதாவது: "இரு முரண்பாடுகளாலும் ஆனதாயிருப்பது ஒனறே; அது பிரிக்கப்படும்போது முரண்பாடுகள் வெளிப்படுகினறன; தம்மிடையே மிகவும் புகழப்பட்டவரும், உயர்ந்தவருமான எரக்கிளீட்சு தனது கொள்கைகளில் முதன்மையுடையதெனக் கூறித் தந்த கருத்து, எனக் கிரேக்கர்களாற் போற்றப்பட்டது இதுவனறே?[1]

எகமும் பலவும்

68. வரம்பற்றதிலிருந்து பிரிந்தே முரண்பாடுகள் உண்டாகின்றன வெனவும், ஆனால் அவை தமது அநீதியான ஆக்கிரமிப்புகளுக்கு ஈடு செய்யும் வகையில், மீண்டும் வரம்பற்றதனுள்ளேயே சென்று தமது இறுதியை அடைகினறனவெனவும் அனக்சிமாந்தர் கூறியிருந்தார். முரண்பாடுகளின் பூசல் தவறனது, முரண்பாடுகள் இருப்பது, எகத்தின் ஒருமைப்பாட்டில் ஏற்பட்ட பிளவையே குறிகளும் என்பனபோன்ற கருத்துக்கள் இங்கு காணப்படுகின்றன. ஆனால எரக்கிளீட்சு போதித்த உண்மைகள உலகு எகாலத்தில் ஒனறாகவும் பலவாகவும் இருக்கிறது, முரண்பாடுகளுக்கிடையே "எதிர் எதிராகவுள்ள இழுவிசையே" எகத்தை ஒருமையுடையதாக வைத்திருக்கிறது எனபவையே. வேறு விதமாகக் கூறப்பட்டிருப்பினும், பைதாகரசு கூறியதும் இதுவே. பைதாகரசு கையாண்ட பதம் ஒனறை எரக்கிளீட்சுவும் உபயோகித்திருப்பதிலிருந்து, தன் காலத்

1. Philo, *Rer. div. her.* 43 (R. P. 34 e).

திலேயே வாழ்ந்த தன்னிலும் சிறிது வயது முதிர்ந்தவரான பைதாகரசுவின் செல்வாககுக்கு எரக்கிளீட்டசு உட்பட்டிருந்தார் என்பது புலனுகிறது.

இதுவே எரக்கிளீட்டசுவின் முக்கிய கொள்கை யெனப் பிளேட்டோ தெளிவாகக் கூறியுளளார். சோபிட்டு எனபதில் (242 d), வரும் ஈலிய நாட்டவன், ஒன்றென நாம் கொளவது உண்மையிற பலவே என்பதை எவ்வாறு ஈலியர்கள் நிறுவினர் எனபதை விளககிய பினனர் தொடாந்து கூறுவதாவது :

" ஆனல் சில அயோனிய கவிஞர்களும், (அதற்குப் பிந் தியவோர் காலத்தில்) சில சிசிலிய கவிஞர்களும், இவ்விரண் டையும் ஒனறுபடுத்தி, உள்பொருள் என்பது ஒன்றுகவும் பலவாகவும் இருக்கிறதெனக் கொள்வதே தகுந்த தெனக் கூறினர். காதலும், காய்தலும் இவற்றை ஒன்றுபடுத்தி வைத்திருக்கினறன எனவும் கூறினர். " ஏனெனில் அது வேற்றுமையடைகையில், ஒன்று சேர்க்கப்படுகின்றது " என இக் கவிஞர் எழுவரும் கூறினர் (59 ஆம் பகுதியோடு ஒப்பிடுக). ஆனல் இவருள் மிதமான மனப்பான்மை படைத்தோரா யிருநதோர, எப்போதும் இவ்வாறேயிருததல் வேண்டுமெனும் நிபந்தனையைத் தளர்த்தி, எல்லாம் என்பது ஒருகாலத்தில் அபுரொடைற்று எனும் காதற்றெய்வத்தின் ஆணையால் ஒன் றுகவும சலனமற்றும் இருந்ததெனவும், இன்னொருகாலத்தில் விரோதத்தின் சத்தியால் பலவாகவும் பூசலிட்டுக் கொண்டும் இருந்ததெனவும் கூறினர். இது மாறி மாறி நிகழ்ந்ததாம்.

இப்பகுதியில் அயோனிய கவிஞர் என்பது எரக்கிளீட்டசுவை யும், சிசிலிய கவிஞர் எனபது எம்பிடோக்கிளிசுவையும் குறிக்கினறன என்பது வெளிப்படை. ஆகவே, உள்பொரு ளென்பது ஏககாலததில், ஒனறுகவும் பலவாகவும் இருநத தென எரக்கிளீட்டசு போதித்தார் எனப் பிளேட்டோ கருதினர் என்பது புலனுகிறது. ஆனல இதுவோர் தருக்க ரீதியான தத்துவமாகக் கருதப்படவில்லை.[1] வேற்றுமையிற காணப்படும் ஒற்றுமையென எரக்கிளீட்டசு விளக்கியது மூலப்பதார்த்ததின் பல்வேறு தோற்றங்களுக்கடியேயுள்ள ஒருமைமையையே. மைலீசி

1. லாசல் தனது நூலில் விட்ட பிழை இதுவே. எரக்கிளீட்டசுவின எடுப் புக்களில், தான தனது அளவையியலிற சேர்ததுக் கொள்ளாதது எதுவு மேயில்லையென எகெல் கூறியதே, லாசல் பிழைவிட்டதறகுக காரணம. "இப் பொருள் எவ்வாறு உளதோ அவ்வாறுதான் உள்பொருளும் உளது" என அரித்தோதிலின் பௌதிகவதீதததில் உளள கூற்றை எகெல உதாரணமாகக் காட்டுகிறார். ஆனல் உணமையெனன வென்றல, அங்கு இக்கூறறு லியூசிப் போசு அல்லது தெமோகிரிததோசுவினதாகத தரப்பட்டிருகிறதேயொழிய எரக் கிளீட்டசுவினதாகவல்ல. லியூசிப்போசுவும் தெமோகிரிததோசுவும் இக்கூற்றின

யர்கள் எற்கெனவே இவ்வொருமையை உணர்ந்திருந்தனரெனினும், வேறுபாடுகளிருந்தமை அவர்களுக்குப் பிரச்சினையாயிருந்தது. மூரண்பாடுகளின் விரோதத்தை அனக்சிமாந்தர் அநீதியென விளக்கினர். ஆனால் எரக்கிளேட்சுவோ இவ்விரோதமே மிக உயர்ந்த நீதியெனக் காட்ட மூனைந்தார் (பகுதி 12).

69. இத்தகைய காரணங்களினால், எரக்கிளேட்சு புதியவோர் மூலப்பதார்த்தத்தைத் தேடவேண்டியதாயிற்று. இம்மூலப்பதார்த்தம் முரண்பாடுகளாகப் பிரியக்கூடியதாகவிருப்பது மட்டுமன்றித தன் இயல்பினால் பிற பொருள்களாக மாறக் கூடியதாகவும் பிற பொருட்கள் தானாக மாறக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டுமென விரும்பினர். தீயில் அம்மூலப்பதார்த்தத்திறகு வேண்டிய இலட்சணங்கள யாவும் இருப்பதைக் கண்டார். எரியும் தீயின பண்புகளே நாம் அவதானிப்போமாயின் அவர் தீயை மூலப்பதார்த்தமாகத் தேர்ந்தமைக்கான காரணங்கள் புலப்படும். இடைவிடாது எரியும் சுடரில் உள்ள தீயின் அளவு மாறுதிருப்பதுபோலக் காணப்படுவதுடன, "பொருள்" என அழைக்கப்படுதற்குரியது போலவும் தீச்சுடர் காணப்படுகிறது. ஆயினும் அதன் "உட்பதார்த்தம்" எப்போதும் மாறிக்கொண்டிருக்கிறது. மேலும் அது எப்போதும் புகையாக மாறிக் கொண்டிருக்கிறது. எரிபொருளிலிருந்து புதிது புதிதாக வரும் பதார்த்தம் புகையாக மாறிய பதார்த்தத்தின் இடத்தை நிரப்புகிறது. நமக்கு வேண்டியது இதுவே. "எனறும் அணையாது எரியும் தீ"யென உலகை அறிந்து கொள்வோமேயானால் (பகுதி 20) அது எவ்வாறு எல்லாப் பொருள்களாகவும் ஆகின்றது, எல்லாப் பொருள்களும் எவ்வாறு அதுவாகினறன என அறிந்துகொள்வோம்[1].

மூலம் கருதியது, சடப்பொருள எநத அளவிற்குச் சதது்ப பொருளோ அவ்வளவிறகு வெளியும சத்துப பொருளே யென்பதாகும் (பிரிவு 175). ஒரு பொருள் உள்பொருளாகவும் இலபொருளாகவும எக்காலத்தில இருக்க முடியுமென எரகிளேட்சு கூறினார எனச் "சிலர்" கருதுகிறார்கள் என அரிதோதில் பௌதிகவதீதத்திற குறிபபிட்டுள்ளார். ஆனால அதனைத் தொடர்நது, ஒரு மனிதன் தான பேசுவது போலவே சிநதிகிறான எனபது பெறபபடாது எனக கூறுகிறார். வேறோர இடதில அவர் கூறுவனவற்றால இது விளககப்படுகிறது: குறிபபிட்ட ஓர விதததில் எரகிளேட்சுவோடு வாதித்தால எதிரமறை விதியை அவர் ஒப்புக கொளவார்; ஆனால் அவர் தான் கூறியதன பொருளை எப்போதும் உணாநது கொணடவரல்லர; அதாவது அதன தருக்க ரீதியான தாறபரியததை அவர் உணாந்திருக்கவில்லை.

1. எரகிளேட்சுவின தீயும் அனகசிமினிசுவின வளிபோன்ற வொன்றே யென்பது அரிதோதிலின **பௌதிகவதீதத்தில்** உள்ளது போன்ற சில கூறறுகளால தெளிவாக்கப்படுகிறது. ஆனால் இங்கு தீயெனபது உண்மையிற் தீயைக் கருதுவதல்ல. இலகணப பொருளிலேயே அதனைக கொள்ள வேணடும்

70. தீயை மூலப்பதார்த்தமாக ஏற்றுக்கொள்ளல், உலகில் பாயம் ஏற்படும் மாற்றங்களையும் இயக்கத்தையும் புதியவோர் வழியில் நோக்குதற்கும் காரணமாகவமைகிறது. தீ இடைவிடாமல், தொடர்ந்து எரியும் இயல்புடையது. அது எப்போதும் எரி பொருளை உட்கொண்டு புகையை வெளிப்படுத்துவதாயுள்ளது. யாவும், ஒன்றில் எரிபொருளாக மேல் நோக்கிச் சென்று கொண்டிருக்கினறன, அல்லது சுடருக்கு உயிரூட்டிய பின்னர் கீழ் நோக்கித் தாழ்ந்து கொண்டிருக்கின்றன. உள்பொருள் முழுவதுமே, என்றும் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் அருவி போன்றதென்பதும், ஒருகணமேனும் அது ஓய்ந்திருப்பதிலலை யென்பதும் இதிலிருந்து பெறப்படுகின்றன. நாம் காணும் பொருட்களின் உட்பொருள் எப்போதும் மாறிக்கொண்டே யிருக்கிறது. நாம் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, இப்பொருட்களின் உட்பொருளில் ஒரு பகுதி மாற்றமடைந்து வேறு பொருட்களுக்குட் சென்றுவிடுகிறது. அது போலவே பிறபொருட்களின் பகுதிகளும் மாறி இதனுள்வந்து புகுந்து விடுகின்றன. எல்லாப் பொருட்களும் ஆற்றுநீர் போனறு பாய்ந்துகொண்டிருக்கின்றன" எனும் கூற்று இக்கொள்கையைச சுருக்கமாக எடுத்துக் கூறுவதாகக் கருதப்படுகிறது. இக்கூற்றுச் சரியான பொருளுடையதேயெனினும், இது எரக்ளீட்டசுவிடமிருந்து பெறப்பட்டதுபோலத் தோனறவில்லை யெனலாம். ஆனால் பிளேட்டோ இக்கருத்தைத் தெளிவாக வெளியிடுகிறார். "ஒன்றும் ஒருபோதும் இல்லை, யாவும் எப்போதும் ஆவனவே"; "அருவிகளைப் போல யாவும் இயங்கிக்கொண்டேயிருக்கின்றன"; "யாவும் கழிவனவே, நிலையாயிருப்பது எதுவுமில்லை"; "எல்லாப் பொருட்களும் கழிவனவே யெனவும் ஒன்றும் நிலைத்திருப்பதில்லையெனவும் எரக்ளீட்டசு எங்கோ ஓரிடத்திற் கூறியுள்ளார்; மேலும் பொருட்களை ஆற்றின் நீரோட்டங்களுக்கு ஒப்பிட்டு, அதே ஆற்றில் இருமுறை கால் வைக்க முடியாதெனக் கூறுகிறார்" (41 ஆம் பகுதியோடு ஒப்பிடுக)– இவ்வாறுதான் பிளேடோ எரக்ளீட்டசுவின் கொள்கையை விளக்குகிறார். அரித்தோதிலும் இவ்வாறே கூறுகிறார்: "யாவும் இயங்கிக்கொண்டிருக்கின்றன"; "எதுவும் நிலையாகவில்லை"[1] எந்தப் பொருளும், எவ்வளவு நிலையானதாகத் தோன்றினலும், உண்மையில் ஓர் அருவி போன்ற ஓட்டத்தின் பகுதியே

எனனும் கருதுதுக்கு ஆதாரமாக பிளேட்டோவின கூற்றென்று (*Crat.* 413 b) தரப்படினும் அக்கூற்றின் சநதர்ப்பத்தை ஆராயின அது இககருத்துககு எவ் வகையிலும ஆதாரமாக அமையவில்லை என்பது புலப்படும.

1. Plato, *Theaet.* 152e I; *Crat.* 401 d 5, 402 a 8, Arist. *Top.* A, 11. 104 b22 , *De caelo* T, I, 298 b 30; *Phys.* θ, 3. 253 b 2.

யெனவும், அதன் உட்பொருள் தொடர்ந்து இரு கணங்களுக் காயினும் மாறுதிருப்பதில்லை யெனவும் எரக்கிளீட்சு கூறினார். இது எவ்வாறு நடைபெறுகிறதென அவர் கற்பனை செய்த முறையை நாம் விரைவிற காணபோம். ஆனால் எரக்கிளீட்சு வின கொள்கையில், மிகவும் புதுமையான அம்சம் இதுவல்ல வென்பதைக் குறிப்பிடலாம். மைலீசியர்களும் இதுபோனற வோர் கொள்கையையுடையராயிருந்தனர்.

மேலும் கீழும் செல்லும் வழி

71. எரக்கிளீட்சு, அனக்சிமினிசுவின் கொள்கைக்கு அமை யவே, தனது கொள்கையின் நுணுக்கமான விவரங்களை விருத்தி செய்தார்[1]. ஆனால் ஐதாதல், அடர்த்தியுறல் எனும் கருத்துக் களைகொண்டே அவர் சடப்பொருள் மாறறங்களை விளக்கினர் எனக் கூறமுடியாதெனலாம். ஆனால் எரக்கிளீட்சு அவ்வாறு தான சடப்பொருள் மாற்றத்தை விளகினர் எனும் பொருள் படத் தியோபிறசுத்தோசு எழுதினர் எனக கருத இடமுண்டு ; ஆனால எரக்கிளீட்சு தந்த விளக்கம் தெளிவாயில்லை எனத். தியோபிறசுத்தோசு ஒப்புக்கொள்கிறார். நாம் கீழே தந்துள்ள, இடையோசினிசுவிடமிருந்து பெறப்பட்ட பகுதி இதனை நன்கு உணர்த்துவதாய் அமைந்துள்ளது. எரக்கிளீட்சுவின் பகுதி களில ஐதாதல், அடர்த்தியுறல் எனபன பற்றி எதுவுமே கூறப்படவில்லை. "மாறறு" எனும் பதமே (பகுதி 22) கையாளப்பட்டிருக்கிறது. தீ புகையை வெளியிட்டு அதற்குப் பதி லாக எரிபொருளை உட்கொள்கையில், நடைபெறுவதனைக் கூறு வதற்கு இதுவோர் நல்ல பதமே.

இப்பொலேட்சு மூலமாக எந்த விவரமும் கிடைக்காதவிடத்து, எரக்கிளீட்சுவைப்பற்றிக் கூறும் தியோபிறசுத்தோசுவின் தொகு ப்பைப் பற்றி நாம் பெறக்கூடிய மிகச் சிறந்த கட்டுரை, இடை யோசினிசு எழுதிய இரண்டில், விரிவாயிருக்கும் கட்டுரையே என முனபு கண்டோம். அது பினவருமாறு :

குறித்த சிலவிடயங்கள் பற்றி அவர் கொண்டிருந்த அபிப் பிராயங்கள இவை :

தீ ஒரு மூலகம் எனவும், ஐதாதல், அடர்த்தியுறல் என்பன வற்றின் மூலம் எல்லாப் பொருட்களும் அதறகு மாற்றுக் களாகலாம் எனவும் அவர் கூறினர். ஆனால் எதனையும் அவர் தெளிவாக விளக்கவில்லை. எதிர்ப்புக் காரணமாகவே யாவும் தோன்றுகின்றனவெனவும் இவ்வாறு தோன்றுபவை யாவும் ஆற்றைப்போன்று பாய்ந்து செல்கின்றன வெனவும் அவர் கூறினர்.

1. அத்தியாயம் 1, 29 ஆம் பிரிவிற் பார்க்கவும்.

எல்லாம் என்பது எல்லையற்றது; உலகு ஏகமே. தீயிலிருந்து தோன்றும் இது, தீயினுலேயே இறுதியில் உட்கொள்ளப்படுகிறது. ஆதியும் அந்தமுமில்லாது, காலவட்டத்தில் இந்நிகழ்ச்சிகள் மாறி மாறி நடைபெறுகின்றன. இவை விதியின்படியே நடைபெறுகினறன. முரண்பாடுகளில், உலகம் ஆவதற்குக் காரணமாயிருப்பது போர எனவும் விரோதம் எனவும் அழைக்கப்படும். இறுதித் தீககோளுக்குக் காரணமாயிருக்கும் முரண்பாடு இசைவு எனவும் அமைதியெனவும் அழைக்கப்படும்.

மாற்றத்தை அவர் கீழும் மேலுமாகச் செல்லும் வழியென அழைத்தார். உலகம் இதன காரணமாகவே தோன்றுகிறதெனவும் கூறினர். தீ அடர்த்தியுறும்போது ஈரலிப்புடையதாகவும், மேலும் அழுத்தபடும்போது நீராகவும் மாறுகிறது; நீர் உறையும் போது மண்ணுகிறது. இதனையே அவர் கீழ் நோக்கிச் செல்லும் பாதையென அழைக்கிறார். இவ்வாறேமண் திரவமாக்கப்படின் அதிலிருந்து நீர் உண்டாகிறது, அதனிலிருந்து யாவும் தோனறுகின்றன; எனெனின் யாவற்றிற்கும், கடல் ஆவியாவதையே இவர் காரணமாகத் தருகிறார். இதுவே மேல் நோகிய பாதையென்க.

நிலம், கடல் ஆகிய இரண்டிலு இருந்தும், வெளி மூச்சுக்கள் எழுந்தன வெனவும் அவர் கூறினர; இவறறுட் சில பிரகாசமுடையனவாயும் தூயனவாயும் இருந்தன. ஏனைய இருள் படைததனவாய் இருந்தன. பிரகாசமுடையனவற்றிலிருந்து தீ ஊட்டம் பெறறது. ஈரலிப்பு ஏனையவற்றிலிருந்து ஊட்டம் பெற்றது.

உலகைச் சூழ்ந்திருக்கும் பொருளின் இயல்பென்ன வென்பதையும் இவர் நனகு தெளிவுபடுத்தவில்லை. ஆனால் அதில் கிண்ணங்கள இருந்தனவெனவும் இவற்றின் உட்குழிந்த பக்கங்கள் நம்மை நோக்கியிருந்தனவெனவும் அவர் கூறினர். இவ்வுட்குழிவுகளில், பிரகாச முடையனவான வெளி மூச்சுக்கள் சென்று சேர்நது கொண்டனவெனவும் அதன் மூலம் தோன்றிய தீச்சுடர்களே வானசோதிகளெனவும் இவர் கருதினர்.

இவற்றுள் சூரியனது சுடரே, ஏனைய யாவற்றினும் ஒளியும் சூடும் கூடியதாகும்; எனெனில் ஏனைய சோதிகள் பூமியிலிருந்து அதிக தூரத்திலுள்ளன; இக்காரணத்தால் அவை தரும் ஒளியும் சூடும் குறைந்த அளவினவே. ஆனால் சந்திரன் பூமிக்கு மிகவும் அண்மையில் உள்ளதாயினும், அது இருண்ட தூய்மையற்ற பகுதிக்கூடாகச் செல்கிறது. சூரியன் பிரகாசமான, கலப்பற்ற பகுதிகளுக்கூடாகச் செல்கிறது மட்டுமல்லாது, எம்மிடமிருந்து கணக்கான தூரத்தில் இருக்கிறது. சூரிய சந்திர

கிரகணங்கள் ஏற்படுவதற்குக் காரணம் அவற்றின் இணைங்கள் மேலநோக்கித் திரும்புவதே. சநதிரனது அளவில் மாதந் தோறும் ஏற்படும் மாறறங்களுக்குக் காரணம் அதன இணைம் சிறிது சிறிதாகத் திரும்புவதே.

இரவு பகல், மாதங்கள் பருவங்கள் ஆண்டுகள், மழைகள் காறறுக்கள் எனபனவும் இவைபோன்ற யாவும் பல்வேறு வகையான வெளிமூச்சுக்களிலுலேயே உண்டாகின்றன. பிரகாசமான வெளிமூசசுக்கள் சூரியனது வட்டதினுள்ளே தீப்பற்றுவதலுல் பகல உணடாகிறது. இவற்றிற்கு எதிரான இயல்புடைய வெளிமூச்சுகளள் அதிகமாக இருப்பதலுல் இரவு உண்டாகிறது. ஒளியுள்ள வெளிமூச்சுக்களிலிருந்து வரும் சூடு அதிகரித்ததிலுல் கோடைகாலமும், இருண்ட வெளிமூச்சுக்களிலிருந்து வரும் ஈரலிப்பு அதிகரிதததிலுல் மாரி காலமும் உண்டாயின. ஏனையவறறின் காரணங்களையும் இதறகமையவே எரக்கீளிட்டசு விளக்கினர்.

வானசோதிகளினது இணைங்களைப் பற்றி எவ்வாறு தெளிவாக விளக்காது விட்டுள்ளாரோ, அதுபோலவே பூமியின் இயல்பையும் விளக்கிக் கூறுதுவிட்டனர். ஆயின், இவையே அவரது கருத்துக்கள் என்க.

இபபகுதியை நாம் நம்பலாமாலுல், இது மிகவும் பயனுடையதாயிருக்குமெனபதில் ஐயமில்லை; தியோபிறசுத் தோசுவை ஆதாரமாகக் கொண்ட தொகுப்பு நூல்கள யாவறறிலும் பின் பற்றப்பட்டுள்ள வரிசைப்படியே இப்பகுதியிலும் வெவ்வேறு விடயஙகளின தோறறமும் தரப்பட்டிருக்கினற தாதலால, இதை நாம் நம்பலாம் எனபது புலனுகிறது. முதலில் மூலப்பதார்த்தம், பினனா உலகு. அதனபினனர் வானசோதிகள் அவற்றைத் தொடர்ந்து வலிமண்டல மாறறஙகள்—இவ்வரிசையே எலலாத் தொகுப்பாசிரியர்களது நூல்களிலும் தரப்பட்டிருக்கிற தென்க. ஆகவே ஒரிரு விடயங்களைத் தவிர்த்து ஏனையவற்றை நாம் இப்பகுதியில் உளளவாறே ஏற்றுக்கொளளலாம். முதலிற் றவிாக்கப்படவேண்டியது அடர்த்தியுறல் ஐதாதல் என்பவை பற்றித தியோபிறசுத்தோசு, கொண்டிருந்த தவறுன கற்பனை; அடுத்ததாக, வெதுசுதாபிளாகஸ்டாவிலிருந்து பெறப்பட்ட சில சுதோய்க்க விளக்கஙகள் நீக்கப்படல் வேண்டும்.

இக்கொளகையின விவரஙகளைச் சற்று நோக்கலாம். தூய தீ, பிரதானமாகச் சூரியனிலேயே காணப்படுகிறதாம். இதுவும் ஏனைய வானசோதிகள போல ஓர் கலம் அல்லது இணைமே. இக்இணைத்தின உட்குழிந்த பக்கம் எம்மை நோக்குவதாயுள்ளது. கடலிலிருந்து மேற்செல்லும் வெளிமூச்

சுக்கள் இதனுட் சேர்ந்து எரிகினறன. சூரியனிலுள்ள இத்தீ பிற உருவங்களை அடைவது எவ்வாறு ? கீழ் நோக்கிய பாதை பற்றிய பகுதிகளை ஆராய்வோமாயின், தீ முதலில் கடலாக மாறுகிறது எனக் காண்போம். இக்கடலில் ஒருபாதி நிலம் எனவும் மறுபாதி பெரும் புயலும் தீயும் சேர்ந்த நீர்த்தம்பம் எனவும் கூறப்படுகிறது. கடலிலிருந்து பிரகாசமான ஆவிகள் எழுவதாலேயே தீ ஏற்படுகிறதென எரக்ஙிளிட்டசு கூறினார் என நாம் அறிவோம் ; ஆகவே தீ, கடலாக மாறுவதையும், இதனை யொத்த வளிமண்டலமாற்றத்தின் மூலமே விளக்குதல் வேணடும். உணமையில், சூரியன் எரிவதனால் உண்டாகும் புகையையும், தீக்கும் நீருக்கும் இடைப்பட்ட நிலையையும் சரி வர விளக்கக்கூடிய முறையொன்று வேண்டும். தீயோடு சேர்ந்த நீர்த்தம்பம் எனபதைவிட வேறு எதுவுமே இநநிலையைப் பொருத்தமாக விளகக முடியாதெனலாம். இந்நீர்த்தம்பம் சூரியனிலுள்ள தீயினால் ஏறபடும் புகையெனக கொளளக் கூடிய முறையில், தோற்றத்தில் புகையை ஒத்திருக்கிறது. அத்துடன் அது நீராகவே கீழே வருகிறது எனபதையும எவரும் மறுக்க முடியாது. எரக்ஙிளிட்டசுவின இக் கொள்கை பற்றி ாததியோசு கூறியிருப்பது நிலைமையை மேலும் தெளிவாக்குகிறது. 'மேகங்கள் தீபபற்றிப் பின்னர் அணைந்துபோவதனால்' இந்நீர்த்தம்பங்கள உண்டாகின்றன என ாத்தியோசு கூறியுள்ளார். அதாவது, சூரியனது கிண்ணத்திலிருக்கையில் தீப்பற்றிக்கொண்ட பிரகாசமான ஆவிகள், அணைந்துபோன பின் தீயுடைய இருண்ட புயல் மேகங்களாகத் தோன்றி மீண்டும் கடலுட் செல்கினறன. அடுத்தபடிவத்தில் கடல் இடையருது மண்ணாக மாறிக் கொண்டிருக்கிறதெனக் கூறப்படுகிறது. நாம் இம்மாறறம் பற்றி எலவே கண்டோம் (பகுதி 10). " மேல் நோக்கிச் செல்லும் பாதை " பற்றிக் கூறப்படுவதை நோக்குவோமானால், கடல் எந்த அளவில் நிலமாகிறதோ, அதே விகிதமுறைப்படி நிலம் நீராகிக் கொண்டிருக்கிறதெனக் கூறப் பட்டிருக்கிறது. ஆகவே கடல் எப்போதும் முன்பிருந்த அளவினதாகவேயிருக்கினறது (பகுதி 23). அதில் ஒருபாதி நிலம், மறுபாதி சுழற்காற்று (பகுதி 21). இதன்படி, குறிப்பிட்ட எந்தக் கணமும் கடலின் ஒரு பாதி கீழ்நோக்கிச் செல்லும் பாதையிற் சென்றுகொண்டிருக்கிறது. ஆகவே எப்போதும் ஒரு பாதி சிறிது நேரத்திற்கு முன்புதான் சுழல்காற்றாயிருந்ததாயிருக்கும் ; மறுபாதி மேல் நோக்கிச் செல்வதாய்ச் சிறிது நேரத்திற்கு முன்புதான் நிலமாயிருந்ததாயிருக்கும். கடல்நீர் மழையினால் அதிகரிப்பதற்கேற்ப அதே விகிதத்தில் நீர், நிலமாக மாறிக்கொணடிருக்கிறது. ஆவியாவதன் மூலம்

கடல் நீர் குறைவதை நிவர்த்தி செய்யும் வகையில் நிலத்திலுல் அது கூட்டப்படுகிறது. இறுதியாக, சூரியனது கிண்ணத்தில் கடலிலிருந்து சென்ற ஒள்ளிய ஆவிகள் தீப்பற்றுவதுடன், மேலேயும் கீழேயுமாய்ச் செல்லும் பாதையெனும் வட்டமும் முற்றுப்பெறுகிறது.

அளவுக்கு அளவு

72. இவ்வாறு பொருட்கள் இடையருது பாய்ந்து செல்வன வாயிருந்தும், அவை நிலையானவைபோலத் தோற்றமளிப்பது எவ்வாறு? "அளவுகள்" வழுவாது அவதானிக்கப்படுவதாலேயே இது சாத்தியமாகிறதென எரக்கிளீட்சு பதிலிறுக்கிறார். இதனுல், பொருட்களின் உட்பொருள் மாற்றமடைந்து கொண்டிருந்தாலும் அதன் அளவு காலப்போக்கில் மாறாதமையாதிருக்கிறது. "என்றுமழியாத தீ"யின சில "அளவுகள்" எபபோதும் எரியூட்டப்படுகின்றன. இவற்றைப் போன்ற வேறு "அளவுகள்" அணைந்து போகின்றன (பகுதி 20). தீக்கு எல்லாப் பொருள்களும் "மாற்றுகின்றன"; தீ எல்லாப் பொருள்களுக்கும் மாற்றுகிறது (பகுதி 22). இதிலிருந்து தீ தான எடுத்துக்கொள்ளும் அளவிற்குக் கொடுக்கிறது என்பது புலனுகிறது. "சூரியன் தனது அளவை மிஞ்சுவதில்லை" (பகுதி 29).

எனினும் இவ்வளவுகள் முடிவாக நிர்ணயிக்கப்பட்டனவல்ல. ஒள்ளிய வெளிமூச்சுக்களும் இருண்ட வெளிமூச்சுக்களும் மாறி மாறி ஆட்சிபெற்றனவெனத் தியோபிறசுத்தோசு கூறினுரென மேலே தந்துள்ள இடையோசினிசுவின் கட்டுரைப்பகுதியிலிருந்து அறிகிறேம். ஆவியாதல் மூலமாக எரக்கிளீட்சு எல்லாப் பொருட்களின் தோற்றத்தையும் விளக்கினுரென அரித்தோதில் கூறுகிறார். குறிப்பாக, இரவு பகல், கோடை மாரி எனும் மாற்றங்கள் இவ்வகையில் விளக்கப்பட்டன. உண்மையில் எரக்கிளீட்சுவின் மரபைச் சேர்ந்ததும், இப்போகிருட்டிசுவால் எழுதப்பட்டதெனத் தவருகக் கருதப்படுவதுமான நூலொன்றில், இரவு பகல் என்பனபற்றியும் சூரிய சந்திரர்களது ஒழுக்குகள் பற்றியும் கூறுகையில் "தீ", நீர் என்பனவற்றின் முன்னேற்றம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்கிறேம். 26 ஆம் பகுதியிலும் தீயின் முன்னேற்றம் பற்றிக் கூறப்படுகிறது. இவை யாவும் தொடர்புபட்டனபோற் காணப்படுகினறன. ஆகவே எனைய பகுதிகளிலும் இதனேடு தொடர்புடைய குறிப்புக்கள் எதுவும் காணப்படுகின்றனவோ என நாம் ஆராய்தல் வேண்டும்.

மனிதன்

73. தீ, நீர் என்பன மாறி மாறி அடையும் முன்னேற்றம் பற்றிய ஆராய்ச்சியைப் பிண்டத்திலிருந்து ஆரம்பித்தல் நலம்.

உலகின் இருவகை வெளிமூச்சுக்களைப் பற்றி நாம் அறிவதிலும் அதிகமாக மனிதனது வெளிமூச்சுக்களைப் பற்றி அறிவோம். எரக்கிளீட்டசுவும் அண்டத்தின் மூலம் மனிதனை விளக்காது மனிதன் பற்றிய விளக்கத்தின் மூலமாக அண்டத்தை விளக்கினார் எனவே தோனறுகிறது. ஆன்மாவும் வறண்ட வெளி மூச்சும் ஒன்றே எனப் பொருள்பட அரித்தோதில் எழுதியுள்ளார். எரக்கிளீட்டசுவின் பகுதிகளும் இக்கருத்தை உறுதிப் படுத்துகின்றன. தீ, மண், நீர் எனும் மூப்பொருள்களால் ஆனவனே மனிதன். ஆனால் அண்டத்தில் தீ மட்டுமே ஏகமாய ஞானம் எனக் கூறப்பட்டிருப்பது போல, பிண்டத்திலும் தீ மட்டுமே உணர்வுடைய தெனக் கூறப்படுகிறது. தீ உடலை நீங்கியதன் பின்னர் எஞ்சியிருப்பனவான நிலமும் நீரும் சிறிதும் பயனற்றவை (பகுதி 85). அண்டத்திலுள்ள தீ எவ்வாறு கீழ் நோக்கியும் மேல் நோக்கியும் செல்லும் ஒழுங்குக் குட்பட்டிருக்கிறதோ அவ்வாறே மனிதனது அமைப்பிலுள்ள தீயும் அவ்வொழுங்குக்குட்பட்டிருக்கிறது. இது பற்றி எரக்கிளீட்டசுவின் கூற்றுப் பின்வருமாறு : எல்லாப் பொருட்களும்—தெய்வீகமானவையும், மானிடரைச சேர்ந்தனவும்—மாற்றுக்களாக மேலும் கீழுமாகச் செல்கின்றன. உலகின் எனைய பொருட்கள் எவ்வாறு நிலையற்ற மாற்றத்துக்குள்ளாகின்றனவோ அதைப் போலவே நாமும் என்றும் ஒழியாத மாற்றதிற்குட்பட்டவர்களே. அடுத்துள்ள எந்த இருகணங்களிலும் நாம் ஒத்த இயல்பையுடையவர்களாயிருப்பதில்லை (பகுதி 81). எம்மில உள்ள தீ என்றும் நீராகிக்கொண்டிருக்கிறது. அதுபோலவே எம்முடலில் உள்ள நீரும் மண்ணாக மாறிக்கொண்டிருக்கிறது ; இவற்றிற்கு எதிர்த்திசையிலும் அதே நேரத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றனவாதலால் நாம் முனபிருந்தவாறே இருப்பது போலத் தோன்றுகிறது[1].

1. எபிகாமோசுவின பகுதியொன்றிலும் (2 வது) இதுபறறிக கூறப்பட்டிருக்கிறது போலத் தோன்றுகிறது. " மனிதர்களையும் நோக்குவாயாக. ஒருவர் வளாகையில் மறறவா இறநதுபோவதையும் யாவரும எபபோதும் மாறற மடைவதையும் நீ காண்பாய். ஒரே இடததில் நிலைத்திராததும , உட்பொருளிலேயே மாற்றமடைவதுமான பொருள் எப்போதும சறறு நேரத்திறகு முன இருநதுகழிநத பொருளிலிருந்து ஒருவகையில் வேறுபட்ட இயல்புடையதாகவே இருக்கும். ஆகவே நானும் நீயும் நேற்று வேறுன மனிதர்களாக இருநதோம் இபபோது நாம் மூற்றிலும் வேறு மனிதர்கள். இனியும் நாம் வேறுக மாறுவோம. இத்தகைய மாற்றம் மீண்டும் மீணடும் நடைபெற்றுகொணடேயிருக்கும். நாம் வேறு வேறு ஆட்களாகிக் கொண்டிருபபோம். " வாங்கிய கடனைத் திருப்பிக கொடுக்க விரும்பாத கடன்காரன் ஒருவன கூறுவதாக இப்பகுதி அமைந்துள்ளது.

(அ) துயில்தலும் விழித்தலும்

74. இதுமட்டுமன்று. மனிதனது உடலில் உள்ள தீ, நீர் என்பனவற்றின் " அளவுகளி "ல் ஏற்படும் ஓர் வகை அலேவே, துயில்தல் விழித்தல், வாழ்வு மரணம் என்பவை மாறி மாறி ஏற்படுவதற்குக் காரணமாக அமைகிறது. இதுபற்றி ஐனெகிடெமோசு கூறியனவற்றை அப்படியே தரும் செகுதசு எம்பிரிக்கசுவின் கட்டுரை யொன்றை இவ்விடயத்தைப் பற்றிய மிகச்சிறந்த ஆதாரமெனக் கொள்ளலாம். அது பின்வருமாறு (R. P. 41) :

எம்மைச் சுற்றிவர இருப்பவை யாவும் உணர்வுடையனவென வும் நியாயத்திற்கிணங்கவே அமைந்துள்ளன வெனவும் இயற் கைமெய்யியல் அறிஞர் கருதுகின்றனர். இத்தெய்வீக அறிவினைச் சுவாசிப்பதன் மூலம் நாம் உட்கொள்வதனால நாமும் பகுத்த றிவுடையோராகின்றேம் என எரகிளீட்டசு கூறினர். துயிலும் போது நாம் நினைவிழந்தாலும், விழித்ததும் நாம் மீண்டும் உணர்வுடையோராகின்றேம். எனெனில் துயிலும்போது புலன வாயில்கள் அடைபட்டுப் போவதால எம்முள்ளே இருக்கும்மனத் திற்கும் எமது சுற்றுப்புறத்திலுள்ளனவற்றிறகும் இடையே உள்ள தொடர்பும் அந்நேரத்தில் அற்றுப் போய்விடுகிறது. இந்நிலையில் எமது சுவாசம் மட்டுமே, மரங்களின் வேரைப் போன்று, வெளியுலகிற்கும் எமக்குமுள்ள தொடர்பைப் பேணி வைத்திருகிறதெனலாம் (இதனிலிருந்து பின்னர் பிற புலன் களும் எழுதல் கூடும்). இவ்வாறு துயிலின்போது வெளியுலகத் தொடர்பை இழந்த ஆன்மா, விழித்திருக்கையில் அதற்கிருந்த ஞாபகசத்தியையும் இழந்து விடுகிறது. ஆனால் நாம் மீண்டும் விழித்தெழும்போது, ஆன்மாவானது, பலகணிகளினூடாகப் பார் ப்பது போலப் புலன்களுக்கூடாகப் பார்பபதன்மூலம், சுறறுட லோடு மீண்டும் ஒன்றிவிடுகிறது. இதனால் அது மீண்டும் சிந்திக்கும் திறனைப் பெறுகிறது. தீயினிலிருக்கும்போது வெம் மையடைந்து செந்நிறமாயும் அதனிலிருந்து வெளியே யெடுக் கப்பட்டபின் அணைந்தும் காணப்படும் தணலைப் போல, சூழ விருக்கும் மனத்திலிருந்து எமது உடலினுட் புகுந்து வாழும் பகுதியும், வெளிமனத்தோடு தொடர்பற்றதாகிவிடும்போது சிந்திக்கும் திறனற்றதாகி, புலன்வாயில்களோடு தொடர்பேற் படும்போது வெளிமனத்தைப் போல சிந்தனை ஆற்றலையுடைய தாகிறது.

மேற்கண்ட பகுதியில், பிற்காலத்துக் கருத்துக்கள் பலவும் கலந்துள்ளன என்பது தெளிவு. குறிப்பாக, " எம்மைச் சூழ வுள்ளது " வளியே எனும் கருத்து எரக்கிளீட்டசுவின் கருத் தாயிருக்க முடியாது ; எனெனில் வளி ஓர்வகை நீரே என்பதை யன்றி எரக்கிளீட்டசு வேறெதையும் அறிந்திருக்கவில்லை

(பிரிவு 27). தொளைகள் அல்லது புலன்களின் வாயில்களைப் பற்றிய குறிப்பும் அவருக்குத் தெரியாததவொன்றே யெனக் கொள்ளலாம்; எனெனில் தொளைகள் பற்றிய கொள்கை அலுக்மையோனதே (பிரிவு 96). இறுதியாக உடலுக்கும் மனத்திற்குமிடையேயுள்ள வேற்றுமை இப்பகுதியில் மிகத் தெளிவாகத் தரபபட்டுள்ளது (இவ்வேற்றுமையை எரக்கிளீட்டசு அத்தனை தெளிவாக உணர்ந்திருக்க முடியாது). ஆனால் சுவாசிப்புக்கு இனகு அளிக்கப்பட்டிருக்கும் முக்கியததுவம் எரக்கிளீட்டசுவின் கொள்கையிலிருந்து பெறப்பட்டதாயிருக்கலாம்; எனெனில் ஏலவே அனக்சிமினிசுவின் கொள்கையிலும் நாம் இக்கருத்தைக் கண்டுள்ளோம. அனறியும், தீயினருகே கொணரப்படும்போது ஒளிரும் தனல் பற்றிய உவமையின பொருததம் பற்றியும் நாம் ஐயுற நியாயமிலலை யெனலாம் (77 ஆம் பகுதியோடு ஒப்பிடுக). உடலிலுள்ள நீரிலிருந்து வெளிப்படும் இருண்ட ஈரமான வெளிமூச்சுக்கள் தீயினை ஓரளவுக்குத் தணிப்பதனால் துயிலுண்டாகிறது என்பதே உண்மையில் இவரது கொள்கையாயிருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. துயிலும்போது, யாவருக்கும் பொதுவான தீயோடு நாம் கொண்ட தொடர்பினை இழந்து எமகு மட்டும் உரியதானவோர் தனி உலகினுட் சென்று விடுகிறோம் (பகுதி 95). தீயும நீரும் நனகு சமமாகவுள்ள ஆன்மாவில், காலையில் ஒளிரிய மூச்சுக்கள் சம அளவிற்கு முன்னேறுமபோது சமநிலை மீண்டும் செம்மையடைகிறது.

75. ஆனால் எந்த ஆன்மாவிலும் தீயும் நீரும் இவ்வாறு செம் வாழ்வும்
மையான நடுநிலையிற் றொடர்ந்திருப்பதில்லை. இவற்றுள் ஏதா மரணமும்
வது ஒன்று மற்றையதை மீறி ஆட்சிபெறுகிறது. இவ்வாறு மீறும் இரண்டில எதுவாயினும் ஏற்படுவது மரணமே. இது எவ்வாறு என நோக்குவோம். நீராகுவதால் ஆன்மாக்கள் மரணமடைகின்றன என நாம் அறிவோம் (பகுதி 8); இன்பத்தை நுகர வேண்டி முயலும் ஆன்மாக்களுக்கு நேர்வது இதுவே. எனெனில் இன்பம் என்பது ஆன்மா ஈரமடைந்த நிலையே (பகுதி 72). தான் செல்லும் வழியையும் அறிய முடியாத அளவிற்குத் தனது ஆன்மாவை ஈரப்படுததிக் கொள்ளும் குடிகாரனைப் பார்த்தோமானால் இது தெளிவாகும் (பகுதி 73). எமது மதுக்கிண்ணஙகளோடு நாம் காலத்தைக் கழிக்கும்போது, நாம் அதிகம் மது அருந்தாதபோதும், எமது குறைபாடுகளை மறைத்து வைப்பது எனைய காலஙகளைவிடச் சிரமமாயிருக்கிறது (பகுதி 108). இதனாற்றான் நாம் அமிதமான ஆசைகளைக் கட்டுப்படுத்தல் வேண்டுமென்பது (பகுதி 103); எனெனில் எமது இதயம் ஆவலோடு விரும்புவது எதுவும்,

எமது உயிரின், அதாவது எமதுள்ளேயுள்ள தீயின், செல விலேயே பெறப்படுகிறது (பகுதி 105). இனி மற்றைய வழியை நோக்குவோம். ஈரலிப்பு மிகக் குறைவாக உள்ள உலர்ந்த ஆன்மாவே சிறந்தது (பகுதி 74); ஆனால் நீர் அளவை மீறி மூன்னேறுவதால் மரணம் உண்டாவதுபோல, தீ மிகைபடு வதாலும், மரணம் உண்டாகிறது. ஆனால் இது வேறு வகை யான மரணமென்பதோடு இவ்வழியில் மரணமெய்துவோர் அதிக பலன்களுக்கும் உரிமையுடையோராகின்றனர் (பகுதி 101).

மேலும் கோடையும் மாரியும் ஒன்றென்பதும், இவை தமது எதிரிழுவிசையினால் ஒனறை ஒன்று உண்டாக்கின்றன என் பதும் எவ்வாறு உண்மையோ அவ்வாறே வாழ்வும் மரண மும் ஒன்றென்பதும், ஒன்றையொன்று உண்டாக்கின்றன என் பதும் உன்மையே. இளமையும் முதுமையும் கூட இத்தன்மை யனவே எனக் கூறப்படுகிறது (பகுதி 78). இதிலிருந்து ஆன்மா என்பது உயிருடையதாகவும் உயிரற்றதாகவும் இருக்கும் இயல் புடையது என்பது பெறபபடுகிறது; அது தீயாக அல்லது நீராக மாற்றமடைந்து மீண்டும் அதாவது இடையருத மேல் நோக்கு வதும் கீழ்நோக்குவதுமான பிரயாணத்தை ஆரம்பிக்கும் என் பதே இதன பொருள். ஈரமடைவதனால் மரணமடைந்த ஆனமா கீழிறங்கி நிலத்தினை அடைகிறது; ஆனால் நிலத்தி லிருந்து நீருணடாகிறது. இந்நீரிலிருந்து மீண்டுமோர் ஆவி வெளிவருகிறது (பகுதி 68). மேலும் தேவரும் மனிதரும் ஒரே இயலபினரே எனவும் கூறப்படுகிறது (பகுதி 67). வாழ்வும் மரணமும் இருவருக்கும் பொதுவானதே. தீ மிகைப்படுத லால் மரணம் அடையும் மக்கள் நித்தியவாழ்வு[1] பெற்று இறந்தோரையும், வாழ்வோரையும் காப்போராகின்றனர் (பகுதி 123); [2] இவ்வாறு நித்தியவாழ்வு பெற்றேரும் காலப்போக்கில் இறப்புளோராகின்றனர். ஒவ்வொன்றும் பிறிதொன்றின் இறப் பைக் குறிப்பதே (பகுதி 64). வாழ்வனவும் இறந்தனவும்

1. முரணும் தோற்றம் எறபடுதலும பொருட்டு இபபதம் கையாளப்பட் டிருக்கிறது. ஆனால் இவாகள் யாவரும் ஒருவகையில் இறப்புளோர் எனவும வேருெருவகையில் இறப்பிலோ எனவுமே கொள்ளல வேணடும்.

2. போக்களத்தில் மாய்வோரும் இநநிலையையே எய்துகின்றனர் எனவே தோன்றுகிறது (பகுதி 102). மரணதத்ன பின்னரும் ஆன்மா எஞ்சியிருநத தென எரகிளிட்டசு கருதினுரெனபதை உரூட்டு (*Psyche*–II.[2] pp. 148 Sqq.) எற்க மறுததனர். உண்மையில் இது முரணபட்டவோ கருத்தேயெனபதில ஐயமில்லை; ஆனால செலலர், டியல்சு ஆகியோர் கூறுவதைப் போல, இது வோ எற்கத்தகக முரண்பாடு எனவே நானும் எண்ணுகிறேன். பீடோவில் ஆன்மாவின் இறப்பின்மையை நிறுவுதற்குப் பிளேட்டோ கையாண்ட முதலா வது வாதம, துயிலிற்கும் விழிப்பிற்கும் வாழ்வுக்கும் மரணத்திற்குமிடையே எரகிளிட்டசு காட்டிய ஒற்றுமையே.

எப்போதும் இடம்மாறுகின்றன (பகுதி 78). இது சிறுர்கள் விளையாடும் சொக்கட்டான் பலகைகளிலுள்ள காய்களினது இயக்கம் போன்ற நிகழ்ச்சியெனக (பகுதி 79). நீராக மாறி விட்டுள்ள ஆன்மாக்களுக்கு மட்டும் இது பொருந்துவதல்ல ; தீயாகி நித்திய வாழ்வு பெற்ற ஆன்மாக்களுக்கும் இது பொருந்தும். ஒரே நிலையிற் றொடர்ந்திருப்பதே உண்மையிற் கீளப்பைத் தருவது (பகுதி 82) ; மாறறங்களுக்குள்ளாதலே உண்மையில் ஓய்வைத் தருகிறது (பகுதி 83). வேறெவ்வகையிலும் ஓய்வு பெறல் எனல் முற்றுகப் பிரிந்து அழிந்து போவதற்குச் சமமானதாம் (பகுதி 84). ஆகவே அவையும் மீண்டும் பிறவி எடுக்கின்றன. வாழ்வுக்கும் மரணத்திற்கும் இடையேயுள்ள சமநிலையைப் பேணும் சக்கரம், ஒரு மனிதன பாட்டனுவதற்குக் குறைந்தபடசம் தேவையான காலமான முப்பதாண்டுகளுக்கு நீடிக்கின்றது என எரக்ஸிஸ்டசு மதிப்பிட்டார் (பகுதிகள் 87–89).

76. இனி உலகை நோக்குவோம். தரையிலிருந்தும் கடலிலிருந்தும் வெளிப்பட்ட ஒள்ளிய மூச்சுக்கள் தீயை ஊட்டின வெனவும் இருண்ட மூச்சுக்கள் ஈரலிப்பை ஊட்டினவெனவும் இடையோசினிசு கூறுகிறார். ஈரலிப்பை ஊட்டுவனவான இவ்விருணட ஆவிகள் யாவை ? அனக்சிமினிசுவின் “ வளி ”யை நாம் நினைவுகூர்வோமானுல் இவ்வாவிகள் உண்மையில் இருளே யென்று கொள்ளலாமென எமக்குத் தோன்றும். ஆகவே தரையிலிருந்தும் கடலிலிருந்தும் எழுந்த இருளிலிருந்தே இரவும மாரியும் உண்டாகின்றன வெனவும்—குன்றுகளின் உச்சிகளோடு ஒப்பிடுகையில் பள்ளத்தாக்குகள் இருண்டனவாகக் காணப்பட்டதை அவர் கவனித்திருக்கவேண்டும்—இவ்விருள் ஈரமானதாதலால், நீர்ப் பகுதி அதிகரித்துச சூரியனது ஒளி அவிந்து போகிறதெனவும் எரக்ஸிஸ்டசு நம்பியிருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். ஆனுல் இருள் மேற்கண்டவாறு சூரியனது ஒளியை அவித்துவிடுமாயின, அதனது வலியும் கெட்டு விடுமென்க. சூரியன் இருளிற்கு இயக்கம் அளியாது விடின், அதனுல் மேலெழ முடியாது. ஆகவே புதிய சூரியன் ஒன்று (பகுதி 32) தோற்றுத் தோன்றலும், சிறிது காலத்திற் காயினும், ஈரமான பகுதிகளின செலவிற் றன்னை ஊட்டிக் கொள்ளுதலும் சாத்தியமாகின்றன. ஆனுல் இஃது அதிக காலத்திற்கு நடைபெறமுடியாது. சூரியன், ஒள்ளிய ஆவிகளை எரிப்பதன் மூலம் தனது ஊட்டத்தை அழித்துவிடுகிறதாதலால், இருணட ஆவிகள் மீண்டும் ஆட்சியேறுகின்றன. இதனுலேயே “ பகலும் இரவும் ஒன்றே ” யெனக் கூறப்படுகிறது (பகுதி 35). ஒன்று உளதெனின் மறறையதும் உள தென்பது பெறப்படுகிறது ; அவை ஒரே நிகழ்ச்சியின் இரு அம்சங்களே. இவ்

வாறு கொள்வதனுலேயே அவற்றின் உண்மையான விளக்க மான அடிப்படையை அறிதல் கூடும் (பகுதி 36).

கோடை மாரி என்பனவும் இவ்வாறே விளக்கப்படுகின்றன. சூரியன் தனது "கதியிற் திரும்பிச் செல்லல்" பற்றி அக் காலத்தில் ஆராய்ந்தனர் என நாம் அறிவோம். ஆகவே சூரி யன் தெறகு நோக்கிப் பின்னடைந்தமையை, அதன் வெப்பத் தினுல், ஈரமான பகுதி முன்னேற்றமடைந்ததால் ஏற்பட்ட நிகழ்ச்சியென எரக்ளீட்டசு விளக்க முயன்றதில் ஆச்சரியத் திற்கிடமில்லை யெனலாம். ஆனுல் இதன காரணமாகச் சூரிய னது ஆவியாக்குந் திறன் குறைந்துவிடுவதால், அது தனக்கு ஊட்டம் பெறுவதற்காக வடகு நோக்கி மீள வேண்டி யிருக் கிறது. சுதோயக்க கருத்து இதுவாயிருந்தது என்பதில் ஐய மில்லை. அவர் இதனை எரக்ளீட்டசுவிடமிருந்தே பெற்றிருக்க வேண்டுமென்பதற்கும் ஆதாரமுளது. பின்வரும பகுதி எரக் ளீட்டசுவினதே யென்பது தெளிவு :

(தீ, நீர் என்னும்) இவை, சாத்தியமான மிகக் கூடிய அளவிலும் மிகக் குறைந்த அளவிலும், மாறிமாறி ஒன்றை யொன்று ஆட்சி செய்கின்றன. ஏனெனில் ஒன்றும் முற்றுக மற்றதனை அடக்குதல் சாத்தியமில்லை. அதற்கான காரணங் கள் பினவருமாறு : தீ, நீரின் கடைசி எல்லை வரைக்கும் முனனேறுமாயின் அதறகு ஊட்டமில்லாது போகும். ஆகவே அது தனக்கு ஊட்டம் கிடைக்கக்கூடிய வோரிடத்தில ஒய் வெடுத்துக்கொளகிறது. இவ்வாறே நீர் தீயின் இறுதியெல்லை வரைக்கும் முன்னேறுமாயின் அதனை இயக்குஞ் சத்தி அற்றுப் போய்விடும். அந்நிலையில அது இயக்கமினறி நிற்றல வேண் டும் ; அவ்வாறு இயஙகாது நிறபின் அதற்கு எதனையும் தடை செய்யும் திறனில்லாதுபோய்விடுமாதலால் அதன்மீது வரும் தீயினுல் எளிதில ஊட்டமாக உட்கொள்ளப்பட்டுவிடும். ஆகை யாற்றுன் இவ்விரண்டில் ஒனருயினும் முற்றுக மறறதனை அடக்குதல் இயலாதென்க. ஆனுல் எக்காலத்திலாயினும், எவ் வகையிலாயினும் ஒன்று முற்றுக அடக்கப்படின அதன் பின் ஒனறேனும் இப்போதுள்ளவாறிராது. ஆனுல் பொருட்கள் யாவும் இன்றுளவாறு இருக்கும்வரை தீயும் நீரும் இருந்தே தீரும் ; இவையிரண்டிலும் எதுவும் இல்லாது போகாது.

பேராண்டு

77. "பேராண்டு" எனப்படுவதும், 18,000 ஆண்டுகளைக் கொண்ட தெனவும் 10,800 ஆண்டுகளைக் கொண்டதெனவும் பல்வேறு வகைகளில் வருணிக்கப்பட்டுள்ளதுமான வோர் நீண்ட காலப்பிரிவு பற்றியும் எரக்ளீட்டசு குறிப்பிட்டுள்ளார். ஆனுல் பேராண்டெனும் இக்காலப் பிரிவில் என்ன நிகழ்ந்ததென எரக்ளீட்டசு கருதினுர் என்பது பற்றிய திட்டவட்டமான கூற்

றெதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. 36,000 ஆண்டுகள்கொண்ட காலப்பிரிவு பறறிய ஓர் கருத்துப் பபிலோனியரிடையே வழக்கிலிருந்தது. காலச்சக்கரங்கள் யாவற்றையும் மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் செல்லும் வழிகளாகப் பிரிப்பது எரக்ஙிளீட்டசுவுக்கு வழக்கமானவோர் முறையாயிருந்ததாதலால், 36,000 ஆண்டுகள கொண்ட காலப்பிரிவை இரண்டாக வகுப்பதன் மூலம், 18,000 ஆண்டுகள் கொண்ட வோர் காலப்பிரிவை அவர் பெற்றிருக்கலாம். சுதோய்ககர்கள்—அவர்களிற் சில ராவது—ஓர் ஊழித தீக்கும் அதற்கடுத்த ஊழித்தீக்கும் இடைப் பட்ட காலமே, பேராண்டு எனக் கருதினர். ஆனால், இக்கால இடைவெளி, எரக்ஙிளீட்டசு கருதியதிலும் நீணடதென அவர் கள் கூறினர். எவ்வாறுயினும், எரக்ஙிளீட்டசு ஊழித் தீ பறறிய கொள்கை யொனறை அமைத்திருந்தார் எனக் கூறுவதில அதிக சிரமமுளள தெனலாம்[1]. ஏலவே நாம் ஆராய்ந்துள்ள சிறுகாலப் பிரிவுகளை உவமைகளாகக் கொண்டே பேராண்டு பறறிய கருததிறகும் பொருள்கொளள முயலல் வேணடும்.

ஒரு மனிதனது வாழ்வில அவன் பாட்டனுகுவதற்கு வேண்டிய மிகக் குறைந்த காலம் ஓர் தலைமுறை யெனவும், ஆன்மா மேல நோக்கி அலலது கீழ்நோக்கிச் செல்வதறகு வேண்டிய காலம் அதுவெனவும் நாம் ஏலவே பார்த்தோம். இதைக் கொண்டு நோக்குவதாயின, உலகததியானது, கீழ் நோக்கிச் சென்று நிலமாகுதற்கு அல்லது மேல் நோக்கிச்சென்று மீண்டும் தீயாதறகு வேண்டும் காலமே, பேராண்டுக்காலம் எனப்பொருள் கொளளலாம். உலக நிகழ்ச்சிகள் பற்றிய காலப் பிரிவுகளுகும் மனித வாழ்க்கையில உள்ள காலப்பிரிவுகளுக்குமிடையே இவ்வாறு உவமை காணப்படுகிறதெனப் பொருள்படும் வகையில பிளேட்டோவும் எழுதியுள்ளார். ஊழித்தீயைக் குறிப்பிடுவதெனப் பொதுவாக் ஒப்புக்கொளளப்பட்ட அரித்தோதியின் பகுதியொனறிலும், பிளேட்டோவின் கூற்றை உறுதிப்படுத்தும் குறிபபொன்றுளது. அங்கு அவர் வானம் (இதனை அவர் "முதலாவது வானம்" என அழைக்கிறார்) நித்திய

1. சுதோயகக கொளகையற்றி, **Cf. Nemesios, De nat. hom. 38 (R. P. 503)** பிளேட்டோ எறறுக்கொண்ட ஆண்டின இறுதியிலும உலக அழிவோ அல்லது பெருநதீயோ எறபடவில்லையென ஆதாம் எறறுகொளகிறார். ஆனால இந்நிகழ்ச்சிகளிடையே தொடாபிருநததெனும் கொள்கை உணமையிற் பித்திய வோர் காலத்தைச் சோநததே யெனவும, ஆகையால் எரக்ஙிளீட்டசு இவற்றைத தொடர் புடையனவாகக் கொண்டாா எனக் கொள்வதறகு எவ்வகையாதாரமுமில்லாதளவில் அவவாறு கொளளலாகாதெனவும இயலபாக அடைய வேணடிய முடிவிறகு வருவதற்கு ஆதாம் மறுக்கிறார.

மானதா அல்லவா என ஆராய்கையில் அதனை எரக்கிளீட்டசு வின் தீயிலிருந்து வேறுபடாததாகக் கருதுகிறார். இது அவ ரது கண்ணோட்ட நிலையில் இயல்பானதே. எரக்கிளீட்டசு எம் பிடோக்கிளிசுவைப்போல " வானம் " இப்போதுள்ள நிலையிலும், இந்நிலையிலிருந்து கழிந்து போவதான இனனோர் நிலையிலும் மாறி மாறி யிருப்பதாகக கருதினார் என அரித்தோதில் அங்கு குறிப்பிடுகிறார். ஆனால மேற்குறிப்பிட்ட இரண்டாவது நிலை உண்மையில் அழிவு அல்லவெனவும், இம்மாற்றம் ஒரு சிறு வன் மனிதனுகவும் அவன் மீண்டும் ஓர் சிறுவனுவது போல வும் ஏற்படுவதே யெனவும் அவர் தொடர்ந்து கூறிச் செல் கிறார். இது உண்மையில் பேராண்டிற்கும், மனிதனது வாழ் வில் உளள தலைமுறைக்கும் இடையே காணப்பட்ட ஒறறுமை பற்றியவோர் குறிப்பே என்பதில் ஐயமில்லை. ஆயின் அரித் தோதிலது பகுதிக்கு வழமையாகப் பொருள் கொள்ளும் முறை தவறுனதாயிருத்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட " அளவு " தீ மேல் நோக்கிய, கீழ் நோக்கிய பயணங்களுக் கூடாகத தனது ஒருமை மாறுதிருக்கும் எனக் கொள்வது, இக்கொள்கையோடு உண்மையிற் பொருந்தாதென்க. ஆனால் ஒவ்வொரு ஆன்மாவும் தொடர்ந்திருக்கிறது என்னும் கொள் கையைப் பொறுத்தவரையில் நாம் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கருதியது இத்தகைய ஒரு முரண்பாட்டையே. 18,000 எனும் எண், 36,000 எனும் எண்ணின் பாதி யெனின், 10,800, 360ஐ 30ஆற பெருக்கும்போது பெறப்படும் தொகையாகும். இரண்டாவது கணக்கின்படி, ஒவ்வொரு தலை முறையும் பேராண்டின் ஒரு நாளுக்குச் சமமாகிறது. இந்தக் கணக்கை நோக்கும்போதும், 18,000 ஆண்டுகள் எனலே எறகத்தகுந்ததுபோற் றேன்றுகிறது.

பெருந்தீ பற்றிய கொளகை யொன்று எரகிளீட்ட சுவாற் போதிக் கப்பட்டதா?

78. காலத்துக்குக் காலம் ஓர் பெருந்தீ எற்பட்டதென எரக் கிளீட்டசு போதித்தாரென, பெரும்பாலான ஆசிரியர்கள் கருது கின்றனர். ஆனால் இஃது எரகிளீட்டசுவின் பொதுவான கொள்கைக்கு முரணுனது. செல்லரும் இதனை ஒப்புக்கொண்டு, நாம் முன்னர் (பக். 151) மேறகோளாகத் தந்த, பிளேட்டோ வின் கூற்றுக்கான உரையைத் தொடர்ந்து பின்வருமாறு கூறுகினறார் : " உலகத்தின் அமைப்பில் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றம் பறறிய தனது கொள்கையின் ஓர் அம்சமா யிருந்த, பெருந்தீ பற்றிய கருத்தை எரக்கிளீட்டசு நீக்க விரும்பவில்லை. இதனால் ஓர் முரண்பாடு ஏற்படுகிறதெனின், அவர் அதனை உணர்ந்திருக்கவில்லை". எரக்கிளீட்டசுவின் போதனையில் முரண்பாடுகள் இருந்திருக்கலாம். ஆனால் மேற் கூறிய முரண்பாடு காணப்பட்டிருக்கும் என எண்ண முடியா

தெனலாம். ஏனெனில் இது அவரது மனத்தை முற்றுக ஆடகொண்டிருந்ததும் அவரது கொள்கையின மையமாயமைந் ததுமான கருத்திற்கு முரணுயுள்ளதாதலினுலென்க (பிரிவு 67). ஆகவே மறுக்க முடியாத ஆதாரம் காணப்பட்டாலொழிய, இம்முரண்பாடு இருந்திருக்கலாம் என நாம் ஏற்கலாகாது. இரண்டாவதாக, ப என்பது எப்போதும் ஏகமாகவும் ஏகம் எனபது எப்போதும் பலவாகவும் இருந்தது என எரக்ஸீட்டசு கூறினுரெனவும் எம்பிடோகஸிசு, எல்லாம் என்பது பலவாக வும் ஏகமாகவும் மாறி மாறி இருந்ததெனக் கூறினுரெனவும், பிளேட்டோ இவ்விருவருக்குமிடையே காட்டியமுக்கிய வேறுபா டும் (பிரிவு 68) முறைப் பெருந்தீக் கொளகையை ஏற்றுக்கொண் டால் பொருளற்றதாகிவிடுகிறது. ஆகவே செல்லாத விளக் கத்தை நாம் ஏற்றுக்கொண்டால், எரகஸீட்டசு தமது கண்டு பிடிப்போடு முற்றுக முரண்படும் கருத்தொன்றைத் தம்மை அறியாமலே தமது கொள்கையிற் புகுத்தினுரெனவும், இக் கண்டுபிடிப்பை ஆராய்ந்த பிளேட்டோவும் இதனைச் சற்றும் உணரவில்லையெனவும் நாம் நம்பவேண்டியதாயிருக்கும்.

அரிததோதிலும், பிளேட்டோவின் கூற்றை மறுக்கும்வகை யில் எதனையும் கூறவில்லே. எரக்ஸீட்டசுவும் எம்பிடோக் ஸிசுவைப்போல, வானம் முதலில் ஓர் நீலேயிலும் பின்னர் வேறேர் நிலேயிலும் மாறி மாறி இருக்கின்றதெனக் கூறினுர் என அரிஸ்தோதில் கூறும் பகுதி, உலகைக் குறிப்பிடுவ தொன்றல்ல, அவரால " முதல்வானம் " என அழைக்கப்பட்ட தீயையே அது குறித்ததென நாம் பார்த்தோம். மேலும், யாவும் எப்போதாவது ஒரு காலத்திற் தீயாகினறன எனும் அவரது கூற்றும் எமது விளக்கத்தோடு முற்றிலும் இசை வானதே. யாவும் ஒரே நேரத்தில் தீயாகின்றன என நாம் இதற்குப பொருள் கொள்ள வேண்டியதில்லே. மேல் நோக்கு வதும் கீழ் நோக்குவதுமான வழிபற்றிய, எரக்ஸீட்டசுவின் கொள்கையே இதுவெனலாம்.

பெருந்தீக்கொள்கையை எரக்ஸீட்டசு போதித்தார் என்னும் கருத்து முதன் முதலிற் காணப்படுவது சுதோய்க்க எழுத் தாளர்கள் நூலகளிலேயே. பிற்காலத்துக் கிறித்துவ கொள்கை பேணுவோரும், இறுதித்தீ பற்றிய கொள்கையில் ஆர்வமுடை யோராயிருந்தனர். சுதோய்க்கர்களது கருத்தை அவர்கள் முற் றுக ஏற்றுக்கொண்டனர். ஆனல் இங்குள்ள விநோதம் என் னவென்றல், சுதோய்க்கர்களிடையே இக்கொள்கை பற்றி வேறுபாடிருந்ததென்பதே. மாக்கசு ஔரீலியசு ஓரிடத்திற் பின்வருமாறு கூறுகிறர் : " ஆகவே இவை யாவும், அண்டத் தின் நியாயத்திற்குள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன ; இது

காலத்துக்குக் காலம் ஏற்படும் பெருந்தீயினாலோ அல்லது நிதியமான மாற்றுக்களினால் உண்டாகும் திருத்தங்களினாலேயோ நடைபெறுகிறது.'' உண்மையில், எரக்கிளீட்சுவின் கொள்கையில், பெருந்தீயெனும் அம்சமே இருக்கவில்லை எனக் கூறுவோரும் இருந்தனர். புளூட்டார்க்கு தனது பாத்திரங்களிலொன்றைப் பின்வருமாறு பேசவைக்கிறார் : ''அவற்றையெல்லாம் பற்றி நான் கேளாவிப்படுகிறேன; அத்துடன் சுதோய்க்க பெருந்தீ, எரக்கிளீட்சு, ஓபியசு என்போரது பாடல்களுக்கு மேற் பரவுவதைப்போல எசியட்டுவின் பாடல்களுக்கு மேலாகவும் பரவுவதைக் காணகிறேன்.'' இதிலிருந்து இவ்விடயம் ஐயத்திற்கிடமானதாகவும் விவாதத்திற்குரியதாகவும் இருந்ததென நாம் அறிகிறோம். ஆகவே பெருந்தீக கொள்கையை எரக்கிளீட்சு போதித்தார் என்பதை உறுதிப்படுத்தக் கூடிய அவரது கூற்றெதுவும் இருந்திருந்தால் அது மீண்டும் மீண்டும் இவ்விவாதங்களில் மேறகோளாகத் தரப்பட்டிருக்கும். ஆனால் அத்தகைய மேற்கோள் ஒன்றுயினும் எமக்குக் கிடைக்கவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது[1].

மேலும், எரக்கிளீட்சு பெருந்தீக்கொள்கையைப போதித்தார் எனபதறகு அத்தாட்சியாகத் தரப்படும் சில பகுதிகளை நோக்கும்போது, உண்மையான அத்தாட்சி எதுவுமேயில்லை யென்னும் எண்ணம் மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. பெரும்பாலும், அத்தாட்சியாகத் தரப்படும் 24ஆவது பகுதியில் தெவிட்டலும், தேவையுமாகத் தீயிருந்ததென எரக்கிளீட்சு கூறுகிறார். இவ்வாறு கூறுவது அவருக்கு இயல்பானதே. மேலும் நாம் பொருள் கொள்ளும் முறையில இதனை நன்கு விளகுகக் கூடியதாயிருபபது மட்டுமன்றி 36ஆவது பகுதியினாலும் இது உறுதிப்படுத்தப்படுகிறது. அடுத்தது, தீ மூனனேறும்போது யாவறறையும் மதிப்பிட்டுத் தண்டனையளிக்கும் எனக் கூறும் 26ஆவது பகுதியாகும். ஆனால் தீ, யாவற்றையும் மதிப்பிட்டுத் தண்டனையளிப்பது வெவ்வேறு காலங்களிலல்லாது, ஒரே நேரத்

1. இது வெறும வாயடை நியாயம் மட்டுமே எனச் சிலர் கூறியுள்ளனர். ஆனால இதுபோனற விடயஙகளில் வாயடை நியாயம பிற நியாயஙகளிலும உபயோகமானதெனல் வேணடும ; உள்ள கூற்றுகளுப பிழையாக விளஙகிக கொள்ளலாம ; ஆனால் ஒருவிடயம மிகத் தீவிரமாக விவாதிககப்படுகையில் இரு கட்சியினரும் தமது கருததை நிறுவககூடிய ஐயத்திறகிடமில்லாத கூற்றெதனையும் ஆதாரமாகக காட்ட முடியாதிருநதால, அததகைய கூற்றெதுவும உணமையில் இருக்கவில்லை எனும் முடிபு தவிர்க்க முடியாததாகிறது. இவ்விடயதைப் பறறி இககாலத்திற் கூறப்படுவனவறறையும் இவ்வாறே கொளள வேண்டும். டியல்சு, எனது கருததுத் தவருனது எனச சுருககமாகக் கூறினாலும் அதற்கு ஆதாரமாகப புதிய நியாயம் எதனையும் அவர் காட்டவில்லை. அத்தகைய நியாயம எதுவும் அவரிடம் இல்லையென்பதே எனது முடிவு.

தில் நடைபெறுமோர் நிகழ்ச்சி யெனக் கருதுவதற்கு இப் பகுதியில் எவ்வகை ஆதாரமுமில்லை. உண்மையில் இப்பகுதி யின் சொற்றொடர்களின அமைப்பை நோக்கும்போது, தீ,நீர் என்பனவற்றின் முன்னேற்றம் பற்றி எரக்கிளீட்டசு கூறியுள்ள வையே எமக்கு நினைவுக்கு வருகின்றன. ஆங்கு, இவற்றின் முன்னேற்றம் ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேற் சாத்தியமில்லை என அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். கிறித்துவ கொள்கை பேணுவோரும், சுதோய்க்கர்களும் தமது முடிவுக்கு அத்தாட் சியாகத் தரும் பகுதிகள் இவையிரண்டுமே. நாம் இவற்றுக்குப் பொருள் கொண்ட முறை தவறெனக் கொள்ளினும், அவர் கள் கொண்ட முடிவுக்கு ஆதாரமளிக்கும் வலிமை இப்பகுதி களுக்கில்லையென்பதும், சுதோய்க்காகளுக்கும் எனையோருக்கும் இவற்றிலும் வலுவுள்ள அத்தாட்சி எதுவும் கிடைக்கவில்லை என்பதும் தெளிவு.

ஆனால் பெருந்தீக்கொள்கைக்கு மூலமுகவுள்ள பகுதிகளைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிதெனக. 20 ஆம, 29 ஆம் பகுதி களிற் குறிப்பிடப்படும் " அளவுகள் " என்பவை ஒரு பொருளையே குறிபபிடல் வேண்டும். மேலும் 23 ஆம் பகுதியின் பொருளை யொட்டியே இவற்றிற்கும் பொருள் கொள்தல் வேண்டும். இது சரியான முறையெனின 20 ஆம் பகுதியும், குறிப்பாக 29 ஆம் பகுதியும், பெருந்தீக் கொள்கையை நேரடியாக மறுக்கினறன வெனலாம். " சூரியன தனது அளவுகளை மீறுது "[1] இரண்டாவதாக, " மாற்று " எனும் உவமேயம் 22 ஆம் பகுதியில் தீக்கு அளிக்கப்பட்டிருப்பதும் இதனையே காட்டுகிறது. கலன்களுக்கு மாற்றுகத் தங்கமும் தங்கத்திற்கு மாறறுகக் கலன்களும் கொடுக்கப்படும்போது இவற்றின் தொகையோ அல்லது " அளவோ " மாறுவதில்லை. மாறுவது அவறறின் உரிமையாளர்களே. எல்லாக் கலனகளும் எல்லாத் தங்கமும் ஒருவரிடமே போய்ச் சேர்வதில்லை. அதுபோலவே எதுவும் தீயாக மாறும்போது, அதற்குச் சம அளவான வேறு பொருள் எதுவும் தீயல்லாததாக மாறிஞற்றுன், இம்மாற்று நியாயமானதாயிருக்கும். சூரியன் தான் கொடுப்பதில் அதிக மாக எடுத்துக்கொள்ளாது எனினயிசு (பிரிவு 29) பார்த்துக் கொள்ளும் என உறுதி கூறப்படுகிறது. நாம் முனபு கண்டது போல, ஒரு குறிப்பிட்ட வகையான மாற்றம் நிகழ்கிறது என்பது உண்மையே. ஆனால் இது ஓர் வரம்புக்குட்பட்டதாயிருப்பதுடன், காலப்போக்கில் எதிர்த்திசை நோக்கி எற்படும் மாறுதலினால்

1. இங்கு பொருள் கொள்ளப்படும் முறை பற்றி யாருகும் சந்தேகம் எறபடின, அப்பொலோனியா நாட்டு இடையோசினிசுவின் பிரயோகததோடு (பகுதி 3) ஒப்பிட்டு நோக்கவும.

ஈடுசெய்யவும் படுகிறது. மூன்றுவதாக, பூசலின் அழிவை வேண்டியதற்காக ஓமரை எரக்கிளீட்டசு கண்டிப்பதாக அமைந்துள்ள 43வது பகுதி குறிப்பிடத்தக்கது. பூசல் நின்றுபோனால் எல்லாப் பொருட்களும் ஒரே நேரத்தில் கீழ்நோக்கியே அல்லது மேல்நோக்கியே செல்லும்; அத்துடன அவை "எதிர்த்திசைகளிற் செல்வது" நின்றுவிடும். யாவுமே ஒரே நேரத்தில் மேல் நோக்கும் வழியிற் சென்றால், பெருந்தீ ஏறபடும். இதுவே விதியினபடி நடக்கவேண்டியது என எரக்கிளீட்டசுவும் எண்ணியிருந்தால், அவ்வாறு ஏறபடுதலை விரும்பியதற்காக ஓமரை அவர் கண்டித்திருப்பாரா? நான்காவதாக, 20 ஆம் பகுதியில் நித்தியமானதென அழைக்கபபடுவது இவ்வுலகமே யொழிய "எனறும் எரியும் தீ" யல்லவெனபதையும் நாம காண முடிகிறது; மேலும் உலகில் எரியூட்டப்படும் பகுதியும், தணிநது போகும் பகுதியும் எப்போதும் ஒரே அளவினதாய் இருபபதாலும், ஒரு திசையில் நடைபெறும் ஆக்கிரமிப்பு மறு திசையில் அதன பினனர் நடைபெறும் ஆக்கிரமிப்பினால் ஈடு செய்யபபடுவதனாலுமே, உலகு நித்தியமானதாயிருகிறது எனவும் தோன்றுகிறது. இறுதியாக, மேலே நாம் மேற் கோளாகத் தந்த பகுதி எல்லாப் பொருள்களும் தீயினாலும் நீரினாலும் ஆனவை யெனப பொருள் கொள்ளக்கூடியவாறு அமைநதிருப்பதால், அப்பகுதி எரக்கிளீட்டசுவினதாக இருக்க முடியாது எனும் செல்லரது மறுப்பினால் லாசலது வாதத்தின வலு எவ்வகையிலும் குறைக்கப்படவில்லையெனக. உண்மையில் அப்பகுதியின் பொருள அதுவல்ல; வானசோதிகளைப் போல மனிதனும் தீக்கும் நீருக்கும் இடையே அலைகிறான் என்பதே இப்பகுதியின் பொருள். எரகிளீட்டசு போதித்த கொள்கையும் இதுவே. தீயோ அல்லது நீரோ முற்றுக ஆட்சி பெறமுடியாதெனவும் இப்பகுதியிற கூறப்பட்டிருக்கிறது. அத்துடன் மிகவும பொருத்தமானதும், எரக்கிளீட்டசுவின் ஏனைய கொள்கைகளோடு இசைவுடையதுமானவோர், நியாயமும் இதற்கு ஆதாரமாகத் தரப்பட்டிருக்கிறது. உண்மையில் பெருந்தீ ஒனறு ஏற்படுமாயின் உலகு அதனிலிருந்து எவ்வாறு மீளமுடியும் எனபதை, இக்கொள்கைகளுக்கு இசைவான முறையில் விளக்குவது இலகுவானதல்ல. இக்கொள்கை முழுவதுமே தெவிட்டல் என்பது தேவையுமே என்பதில்—அதாவது தீ அதிகரிக்கும்போது ஈரமான மூச்சுக்கள் அதிகரிக்கின்றன, நீர் அதிகரிக்கும்போது, தீ, தனது ஆவியாக்கும் ஆற்றலை இழந்துவிடுகிறது என்பதில்—தங்கியிருக்கிறதெனலாம். பெருந் தீ, ஒரு கணத்திற்கேனும் ஏற்படின், புதிய உலகம் தோன்றுவதற்கு இன்றியமையாததான எதிர்

இழுவிசை அழிக்கப்பட்டு விடுமாதலால், இயக்கம் என்பதே முற்றுக அசாத்தியமானதாகிவிடும்.

விரோதமும் " இசைவும் "

79 " மேலும் கீழும் நோக்கிய வழி " யின் மூலம் வெளிப்படும் விரோதம் அல்லது எதிர்ப்புப் பற்றிய விதியை, நாம் இப்போது நன்கு விளங்கிக் கொள்ளலாம். எந்த ஒரு கணத்திலும் தீ,நீர், நிலம் எனும் மூன்று தொகுதிகளும் இரு சமபங்குகளாகப் (மேலே குறிப்பிடப்பட்ட அலைவுகள் நிகழ்வது உண்டே) பிரிக்கப் பட்டிருகின்றன. இவற்றுள் ஒருபகுதி மேல்நோக்கிச் செல் கையில் மறுபகுதி கீழ்நோகிச் செல்கிறது. இவ்வாறு யாவற் றின இருபாதிகளும் இவ்வாறு " எதிர்த்திசைகளில் இழுக்கப் படு வதே "—இவ் " வெதிரிழுவிசை "யே—" பொருட்களே ஒன் றுக வைத்திருக்க "வும், ஒருவரமபுக்குள, தற்காலிகமாக மட்டும் எற்படக்கூடிய குழப்பங்களைத் தவிர்த்து எனைய நேரங்களில் சம நிலையில் வைத்திருக்கவும் உதவுகிறது. அண்டத்தினது "மறைந் துள்ள இசைவு " எனபது இதுவே (பகுதி 47). ஆனல் இன னேர் அம்சத்தை நோக்குகையில், இது விரோதமா யிருக்கிறது எனபது உண்மையே. " வில்லையும் வீணை "யையும் பொறுத்த வரையில் (பகுதி 45) கமெல் தந்திருப்பதே இவ்வுவமைக்கு மிகவும் பொருத்தமான விளக்கம் என நான் கருதுகிறேன். " அம்பானது நாணைவிட்டுச் செலலும்போது கைகள் ஒனறுக் கொன்று எதிரான திசைகளிலும், வில்லின் வெவ்வேறு பாகங் களை ஒன்றுக்கொன்று எதிரான திசைகளிலும் இழுக்கினறன " என அவர் கூறினர் (cf. Plato, *Rep* iv. 439) ; வீணையின் இனிய சுரங்களும் இதற்கொப்பான இழுவிசை, பற்றுநிலை என் பனவற்றினுலேயே உண்டாகின்றன. அண்டத்தின இரகசியமும் இதுவே. ஆகவே தான் மனித சமுதாயத்திலுள்ளது போல அண்டத்திலும் போரே யாவற்றினதும் தந்தையாயும் அரசனு யும் உள்ளது (பகுதி 44) ; இதனுற்றுன் விரோதம் ஒழிய வேண்டும் என ஓமர் வேண்டியமை, உண்மையில் உலக அழிவை வேண்டும் பிரார்த்தனை எனப்பட்டது (பகுதி 43).

எரக்கிளீட்டசு தனது கொள்கைக்கு ஆதாரமாகப் பல உதார ணங்களைத் தந்தார் என நாம் பிலோவின மூலம் அறிகிறோம் ; இவற்றுட் சிலவற்றை நாம் இன்றும் பெறக்கூடியதாயிருக் கிறது. அரித்தோதிலது எனக் குறிப்பிடும் போலி நூலிலும், இப்போக்கிருத்திசுவின் நூலிலும் இதுபறறி உளள பகுதிகள் குறிப்பிடத்தக்க முறையில் ஒற்றுமையுடையனவாயிருக்கக் காண் கிறோம். **எரக்கிளீட்டசுவின் லிகிதங்கள்** எனும் நூலின பகுதி யொனறேனும் இவையிரண்டும் ஒற்றுமையுடையனவாயிருப்பதி லிருந்து, இந்நூலாசிரியரிருவரும் எரக்கிளீட்டசுவின் போதனைக ளிலிருந்தே தமது கருத்துக்களைப் பெற்றிருக்கவேண்டுமென்பது

நனகு உறுதிப்படுததப்படுகிறது. **எரக்கிளிட்டசுவின் லிகிதங்கள்** எனும் நூலும் போலியேயாயினும அதனை எழுதியவர் உண்மையில எரக்கிளிட்டசுவின கருத்துக்களை நேரடியாக அறிந்தவரே எனலாம். இயற்கை எவ்வாறு செயற்படுகிறதோ அவ்வாறே மனிதரும் செயற்படுகின்றனராதலால், அவர்கள் இயற்கையிற் செயற்படும் விதிகளை அறியாதிருப்பது வியப்புக்குரியது எனபதே இப்பகுதிகளிற குறிப்பிடப்பட்டுள்ள வாதம். ஓவியன் தனது சித்திரத்தில், நிறஙகளை வேறுபடுதது உபயோகிப்பதன் மூலம் இசைவு நிலையை ஏறபடுத்துகிறான் ; சங்கீதத்திலும் இவ்வாறே உயர்ந்தனவும் தாழ்ந்தனவுமான சுருதிகளிடையே இசைவு ஏற்படுத்தப்படுகிறது. யாராவது எலலாப பொருட்களையும் ஒரே தன்மையுடையனவாகச் செயதால், அதனபின் அவறறில் இன்பம் இராது. இவை போன்ற பல உதாரணங்களுள. அவற்றுட் சில எரக்கிளிட்டசுவிடமிருந்தே பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமிலலை. ஆனால் அவற்றைப் பிற்கால இடைச்செருகல்களிருந்து பிரித்தறிதல் கடினமே.

முரண்பாடுகள் இனமாக கப்படல்

80. எரக்கிளிட்டசுவின பகுதிகளிற் பல தமக்கெனவுரிய ஓர் விசேட இயல்பையுடையனவாகக் காணப்படுகின்றன. எமக்குக கிடைத்துள்ள மிகவும் குறிப்பிடத்தக்க கூறறுக்களில், இவையும் சிலவெனலாம். வழமையாக முரண்பாடுகளாகக் கருதபபடும் பொருட்களின ஒருமையைச் சிறிதும் தயக்கமின்றி மிகவும் உறுதியாக அவை கூறுகின்றன. இரவும் பகலும் ஒன்றே எனும் கூறறுக்கு நாம் எலவே தந்த விளக்கத்தையொட்டியே, இத்தகைய பிற கூற்றுக்களுக்கும் பொருள் கொள்ள வேண்டும். உண்மையில் எரக்கிளிட்டசு கூறியது, இரவு என்பது பகலே யெனவோ அல்லது பகலெனபது இரவே யெனவோ அல்ல ; இவையிரண்டும் தீ, நீர் எனபனவற்றின் அளவுகளில் ஏறபடும் அலைவின் இரு பக்கங்களே, இவற்றில் ஒன்றில்லாது மற்றது நடைபெற முடியாது என்பதே அவரது கூற்று. இரவை விளக்குவதறகுத் தரப்படும் எந்த விளக்கமும் பகலையும் விளக்குகிறது ; அதே போலப் பகலுக்குத் தரும் எந்த விளக்கமும் இரவையும் விளக்குகிறது. எனெனில் அத்தகைய விளக்கம், இவ்விரண்டிற்கும் பொதுவானதும், மாறி மாறி இவ்விரண்டின மூலமும் தன்னை வெளிப்படுத்துவதுமான பொருளைப் பறறிய விளக்கமாயிருக்கும். மூலத் தீ தனது பிரிவிலும் ஒன்றுகவேயிருக்கின்றது எனும் தத்துவத்தின் ஓர் குறிப்பிட்ட பிரயோகமே இதுவென்க. அது தனது ஒருமையிலும் தானே தெவிட்டலும் தேவையுமாயும் போரும் சமாதானமுமாயும் இருக்கிறது (பகுதி 36). அதாவது தீ, பிற உருவங்களைப் பெறுவதற்கும், " மாற்றத்தில் ஆறுதல் பெற "

விழைவதற்கும் (பகுதி 83) மறைந்துள்ளதான, எதிர்ப்புக் களின் இசைவிற் கரந்தொழுக முனைவதறகும் (பகுதி 10) காரணமான "தெவிட்டல்" நீலை உண்மையில் உலக நிகழ்ச்சி யின் ஒரு பக்கமே. ஒள்ளிய மூச்சுக்களைத் தனது எளிபொரு ளாக நுகர்வதற்குக் காரணமான தேவையே இந்நிகழ்ச்சியின மறுபகமெனக. மேல் நோக்கிய வழி, கீழ் நோக்கிய வழி யின்றி எதனையும் சாதிக்க முடியாது (பகுதி 69). இவற்றுள் ஒன்று இல்லாதுபோனால மற்றதும் நினறுவிடும்; உலகம் மறைந்துவிடும்; எனெனில் நிலையானது போலத் தோற்ற மளிக்கும் ஓர் உலகை ஆகுதற்கு இவ்விரு முறைகளும் வேண்டும்.

இவை போனற ஏனைக் கூற்றுக்களும் இவ்வாறே விளக்கப் படல் வேணடும். குளிரில்லையாயின், சூடும் இருகக முடியாது; எனெனில், குளிராயிருக்கிறவரைக்குமே ஒரு பொருள் சூடாக முடியும். ஈரலிப்பு, வறட்சி எனும் முரண்பாடுகளும் இத் தகையனவே (பகுதி 39). இவ்விரண்டும், அனக்சிமாந்தரது ஆதி முரண்பாடுகளே யெனபது கவனிக்கப்படும். இவற்றிற் கிடையே எற்படும் போரெனபது உண்மையில் அமைதியே என எரக்கிளீட்டசு காட்டுகிறார். எனெனில் அவற்றிற்குப் பொதுவான அம்சம் இவ்வமைதியே (பகுதி 62). விரோதமாகக் காட்சியளிக் கும் இதுவே நீதியும் கூட. அனக்சிமாந்தர் கருதியதுபோல, இந்நிகழ்ச்சி, இவறறுள் ஒன்று மற்றையதிறகு எதிராக இழைக் கும் அநீதியல்ல[1].

இக்கூற்றுக்கள் யாவற்றிலும் அதிக வியப்பைத் தருவது நனமையும் தீமையும ஒன்றே யெனனும் கூறறே (பகுதி 57). நனமையென்பது தீமையே என்பதோ அல்லது தீமையென்பது உண்மையில் நனமையே என்பதோ இதன பொருளல்ல. நன் மையும் தீமையும் ஒரே பொருளின் பிரிக்க முடியாத இரு பாதிகளே எனபதே மேற்படி கூற்றின் பொருளென்க. ஒரு பொருள் எலவே நல்லதாய் இருக்குமளவிற்குத்தான் அது தீய தாக முடியும். அதேபோலத தீயதாக இருக்கும் அளவிற்கே அது நல்லதாக முடியும்; வேறுபடுதலிலேயே யாவும் தங்கியிருக் கின்றன. 58ஆவது பகுதியில் உள்ள உவமை இதை நன்கு விளக்குகிறது. சித்திரவதை என்பது தீயது என யாவரும் ஒப்புக்கொள்வர்; ஆனால் நோயெனும் வேறோர் தீமை இருபப தனால் இதுவோர் நன்மையாகிறது. நோயாளிகளைப் பலவகை யிலும் துன்புறுத்தும் வைத்தியர்கள் தமது வேலைக்குப் பணம் கேட்கின்றனர் எனும் உதாரணத்தின் மூலம் இது விளக்கப்

1. அத். 1, 16 ஆம் பிரிவு.

படுகிறது. நன்மை பயப்பதான நீதி, தீயதான அநீதியின்றேல், எவருக்கும் தெரியாதவொன்றுமிருக்கும் (பகுதி 60). அதனாற் றான், மனிதர்கள் தாம் விரும்புவன யாவற்றையும் பெறுவது நனறல்ல எனக் கூறப்படுகிறது (பகுதி 104). விரோதம் இவ்வுலகில இல்லாது போனால், எவ்வாறு இவ்வுலகு அழிந்து போகுமோ, அவ்வாறே பசி, பிணி, சோர்வு என்பன இல்லாது போயின், இவ்வுலகில் திருப்தி, ஆரோக்கியம், ஒய்வு எனபனவும் இல்லாது போம்.

"மனிதனே யாவற்றிற்கும் அளவாவான்" எனும் புரொட் டாகரசுவின் கொள்கைக்கு வழிகோலும் ஓர் சார்புநிலைக் கொள்கைக்கு இது அடிகோலுகிறது[1]. கடல் நீர் மீனகளுக்கு நல்லதாகவும் மனிதர்களுக்குக் கூடாததாகவும் இருக்கிறது (பகுதி 52). பிறபொருட்கள் யாவும் இவ்வாறுள்ளன. அதே நேரத்தில, எரக்கிளீட்சு தனி மெய்ம்மை வாதத்தை நம்பியவ ரல்ல எனபதையும் குறிப்பிடல் வேண்டும். உலக நிகழ்ச்சி வெறுமனே வட்டமானவொன்றல்ல. அது "கீழ்நோக்கியும் மேலநோக்கியும்" செல்லுமோர் வழியாகும். இருவழிகளும் மேலே சந்திக்குமிடத்தில் தூய தீயுளது. அதில், பிரிவில்லை யாதலால, சார்பும் இலலை. மனிதனுக்குச் சில பொருட்கள் தீயனவாயும் வேறு சில நல்லவையாயும் தோன்றினாலும், கடவுளுக்கு யாவும் நல்லவையே எனக் கூறப்படுகிறது (பகுதி 61). இங்கு கடவுள், அல்லது "ஞானமுடைய ஏகம்" எனக் கூறும்போது எரக்கிளீட்சு தீயையே கருதுகிறார் என்ப தில் ஐயமில்லை. உலகில், நீக்கமற நிலவும் எதிர்ப்பும் சார்பும் தீயில் மறைந்து போகின்றன எனபதையே இங்கு எரக்கிளீட்சு கூறினார் என்பது பற்றி ஐயத்திற்கிடமிருக்க முடியாது. 96 ஆம், 97 ஆம், 98 ஆம் பகுதிகள் இக்கருத்தையே குறிப்பிடுகினறன என்பதில் ஐயமில்லை.

ஞான முடையது

81. "ஞானம்", "ஞானமுடைய" என்பவற்றை எரக்கிளீட்சு இரு பொருள்களிற பிரயோகிக்கிறார். "ஞானம்" என்பது "ஏனை யாவற்றிற்கும் புறம்பான வொன்று" என அவர் கூறி னார் என்பதை நாம் எலவே பார்த்தோம் (பகுதி 18). பலவா யுள்ளவற்றினடியேயுள்ள ஒருமையைக் காண்பதே ஞான

1. தியோததசுவில சார்புநிலைகொள்கை பறறிப் பிளேட்டோ கூறியிருப் பவை, எரகிளீட்சுவிலிருநது பெறப்பட்டிருகக முடியாது. ஆனல எரகிளீட்சு வின் கொள்கையிலிருந்து இத்தகைய சாபு நிலை வாதம் எழமுடியும் என்ப தனையே இது காட்டுகிறது. ஆனமாவும் பொருள்களும் நீரோட்டங்கள் போன்ற வையெனின அறிவு சார்பு பற்றியதாகவேயிருத்தல் வேண்டும. பிறகாலத்து எரகிளீட்சவாதிகள் தமது கொள்கையை இவ்வாறே விருத்தி செய்திருக்க வேண்டும்.

மெனவே அவர் கருதியிருக்கவேண்டும். யாவற்றின் இயக்கத்தையும் வழிப்படுத்தும் சிந்தனையெனக் கொள்ளப்படும் ஒருமையெனும் பொருளிலும், அவர் "ஞானம்" எனும் சொல்லை உபயோகித்துள்ளார். இது, மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் செல்லும் இருபகுதிகளாகப் பிரிக்கப்படாதிருக்கும் தூய தீயைக் குறிப்பதாயிருக்கவேண்டும். அது மட்டுமே ஞானமுடையது; நாம் காணும் அபூரணமான பொருட்கள் எவையும் ஞான முடையனவல்ல. நாமும் தீயுடையவாகளாகவிருக்கும் அளவிற் குத்தான, ஞானமுடையவர்களாயிருக்கிறோம் (பகுதி 74).

82. குறிப்பிட்ட சில வரையறைகளுக்குள், ஏகமாய ஞானத்தைச் சியசு என அழைக்க எரக்கிளீட்டசு தயாராயிருந்தார். 62ஆவது பகுதியின் பொருள இதுவெனவே தோன்றுகிறது. இவ்வரையறைகள் எவையென ஊகித்தல் கடினமன்று. சியசுவை மனித உருவத்திற் கற்பனை செய்யலாகாது. இங்கு எரக்கிளீட்டசு, செனோபனிசு கூறியதையே மீண்டும் கூறுகின்றார் என்று கொள்ளலாம். இக்கடவுள், இதனை அவ்வாறு அழைப்பதாயின், ஒனறே யெனும் கருத்தையும் எரக்கிளீட்டசு, செனோபனிசுவைப் போல ஏற்றுக்கொளகிறார்; ஆனால் மக்களது சமயத்திற்கு எதிராக அவர் துரந்த கண்டனங்கள், சமயக்கிரியைகளுக்கும் சடங்குகளுக்கும் எதிராகவமைநதனவே யொழிய, அசசமயங்களை யொட்டிய புராணக்கருத்துக்களுக் கெதிராகவமைந்தனவல்ல வெனலாம். தனது காலதது்ச் சமயத்தலைவர்களினது பெயர்ப்பட்டியல் ஒன்றையும அவர் தருகிறார் (பகுதி 124). இப்பகுதி மேற்கோளாகத தரபபடும் சந்தர்ப்பததை நோக்குமிடத்து, பின்வரப்போகும் கினத்தைச் சுட்டிக்காட்டி, அத்தலைவருட் சிலரை எதோ ஒரு வழியில் இவர் அச்சுறுத்தினர் என ஊகிக்கக் கூடியதாகின்றது. உருவங்களை வழிபடும் மடமையையும் (பகுதி 126), இரத்தம் சிந்திய குற்றத்தை இரத்தம் சிந்துவதால் நீக்கிவிடமுடியும் எனும் விநோதமான நம்பிக்கையையும் (பகுதி 130) அவர் இகழ்ந்து கூறினர். களிப்பற்றன வான சடங்குகள் மூலம் ஏடிசுவை வழிபடுவோர், களிப்புடையனவும், ஒழுக்கவீனமானவையுமான சடங்குகளால் இடயனிசோசுவைக் கொணடாடுதல மடமையென அவர் கூறினர் போலத் தெரிகிறது (பகுதி 127). அனுபூதி நெறியின்படியும் இவையிரண்டும் உண்மையில் ஒனறே; ஏகமாய ஞானம், வேறெந்தக் கருத்தோடும் சேர்க்கப்படாது தனியாக வழிபடப்படல் வேண்டும். இறையியற் கொள்கை

83. "பொதுவானதைப் பினபற்று" எனும் விதியை எரக்கிளீட்டசுவின் சனமார்க்க போதனையின் மையக் கருத்தாகக் கொள்ளலாம். ஆனால் எரக்கிளீட்டசு, வறபுறுத்திய "பொதுவான" தெனபது சாதாரண அறிவு என்பதல்ல. உண்மையில், எரக்கிளீட்டசின் ஒழுக்கவியற் கொள்கைகள்

எரக்கிளீட்டசு "சாதாரண அறிவு" என்பதை மிகவும் இகழ்ந்துரைத்தார் (பகுதி III). "பலர்" பற்றி அவர் தரும் கண்டனங்களுள் மிகவும் தீவிரமானதும் இதுவே; இவர்கள் ஒவ்வொருவரும் தமது தனி உலகங்களில் வாழ்கின்றனர் (பகுதி 95); தங்களுக்கென ஒவ்வொரு தனி ஞானம் உடையவர்கள் போல இவர்கள் நடந்து கொள்கின்றனர் (பகுதி 92); ஆகவே பொது அபிப்பிராயம் என்பது உண்மையிற் "பொதுவான"திற்கு எதிரானதாகும். "பொதுவானதைப் பின்பற்று" எனும் இவ்விதி உண்மையில் இவரது அண்டவியல், மானிடவியல் என்பன பற்றிய கொள்கைகளிலிருந்து பெறப்பட்ட ஒரு விளைவாகவே கொள்ளப்பட வேண்டும். முதலாவதாக உண்மையிற் பொதுவானதான, எகஞானமான தீயினோடு சேரும வகையில் நாம் எமது ஆனமாக்களை உலர்ந்தவையாய் வைத்துக்கொள்ள வேண்டும். எமது ஆன்மாக்களை ஈரமடையவிட்டு, உலகிலுள்ள தீக்கும் அவற்றிற்குமிடையேயுள்ள தொடர்பு அறும்வகையில், துயில்பவர்களைபோல நடந்துகொள்வதே மிகப்பெரிய தவறாகும் (பகுதி 94).

"பொதுவான"தை, நகரத்தின் சட்டங்களுக்கு ஒப்பிடுவதன் மூலம், சுதோய்க்கர்களது உலக—அரசுக்கொள்கைக்கு எரக்கிளீட்டசு அடிகோலினார். இவற்றைத் தெய்வீக நியதிகளில் ஒருவகை எனக் கொள்வது போதாது. உண்மையில் அவை தெய்வீக நியதியின் அபூரணமான உருவங்கள் கூட. ஆனால் இவற்றில் உருவமடைவதால் தெய்வீக நியதி முற்றாக ஒழிந்துபோவதில்லை, எனெனில் மனித நடவடிக்கைகள் யாவும் ஓரளவிற்குச் சார்பு நிலையினவே (பகுதி 91). கடவுளோடு ஒப்பிடப்படும் போது "மனிதன ஒரு குழந்தையே" (பகுதி 97). எனினும் ஓர் நகரம் தனது சுவர்களைப் பகைவரிடமிருந்து காபபதறகு எவ்வாறு போரிடுமோ, அவ்வாறு இந்நியதிகளைக் காப்பதற்கும் போரிடுதல் வேண்டும்; ஒரு நகரின் நல்வாய்ப்பினால் அங்கு உலர்ந்த ஆன்மாவுடையவன் ஒருவன் இருப்பானாகில் அவன் பத்தாயிரம் சாதாரண மனிதர்களுக்குச் சமமானவனாவான் (பகுதி 113); எனெனில் அவனில் மட்டுமே "பொதுவானது" இடம்பெறறிருக்கிறது.

அத்தியாயம் 4

ஈலியா நாட்டுப் பார்மனிடிசு

84. பைரிசுவின் மகனான பார்மனிடிசு, ஐலீ அல்லது ஈலியா அல்லது வேலியா என அழைக்கப்படும் நாட்டுக் குடிமகனாவான். இது பொகாயாநாட்டு அகதிகளால் கி. மு. 540–39 இல் ஐனத்திரியாவில் நிறுவபபட்டவோர் குடியேற்றப்பகுதியாகும்.[1] இவர் 69 ஆவது ஒலிம்பிய ஆண்டில (கி. மு. 504–500) சிறப்புடன் விளங்கினரென இடையோசினிசு கூறுகிறார். அப் பொலோடரசு தந்த தேதியும் இதுவே யென்பதில் ஐயமில்லை. ஆனால், பிளேட்டோவோ பாமனிடிசு தனது அறுபத்தி நாலாவது வயதில சேனோவோடு அதென்சுக்கு வந்தாரென வும், அப்போது மிகவும் இளைஞராயிருந்த சோக்கிரதருடன் உரையாடினர் எனவும் தெரிவிக்கிறார். கி. மு. 399 ஆம் ஆண்டில் சோக்கிரதருக்கு மரணதண்டனை அளிக்கப்பட்டபோது அவருக்கு எழுபதுகளுக் சற்று அதிகமான வயதாகியிருந்தது ; ஆகவே அவர் பார்மனிடிசுவைச சந்தித்தபோது அவருக்கு வயது பதினேழுக்கும் பதினெட்டுக்குமிடையே யிருந்ததெனக் கொள்வதாயின், இச்சந்திபபு கி. மு. 451–449 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சியெனக கொள்ள வேண்டும். பிளேட்டோ இவ்வாறு கூறியிருக்கையில், குறிப்பாக, "பல நகர்க"ளுக் கும் சென்றது பற்றிப் பார்மனிடிசுவும் குறிப்பிட்டிருக்கை யில், அப்பொலோடரசுவின் கருத்தை ஆராய்வின்றி ஏறறுக் கொள்ளலாகாது. மேலும் சேனோ அதென்சுக்குச் சென்றது பற்றி வேறு ஆதாரமுமுளது. அங்கு பெரிக்கிளிசு சேனோ வின் போதனைகளைக் "கேட்டனர்" எனக் கூறப்பட்டிருக்கிறது. அப்பொலோடரசு தரும் தேதி, ஈலியா நிறுவப்பட்ட திகதியை (கி. மு. 540) மட்டுமே ஆதாரமாகக் கொண்டு பெறப்பட்டுள்ளது. இத்திகதியைச செனோபனிசு சிறப்புடன் விளங்கிய தேதியாக அப்பொலோடரசு எலவே ஏறறுக்கொண்டிருந்தார். சேனோ எவ்வாறு பார்மனிடிசு சிறப்புடன் விளங்கிய ஆண்டிற் பிறந்தா ரெனக் கூறப்பட்டதோ அது போலச் செனோபனிசு சிறப்புடன் விளங்கிய ஆண்டில் பார்மனிடிசு பிறந்தார் என அப்பொலோ டரசு கூறுகிறார். இததகைய விநோத அனுமானமுறைக்கு

வாழ்க்கை

[1]. ஈலியா நிறுவப்பட்டதுபறறி Herod. i. 165 sqq. பார்க்க. பொசெய் டோனியாவுகுத தெற்கே, ஓக்கானியாவின கரையோரததில இபபகுதி அமைநதிருந்தது.

8—R 10269 (6/63)

யார்தான் எப்படி அதிக முக்கியத்துவம் அளிக்க முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை.

பார்மனிடிசு, செனோபனிசுவின் சீடர்களுள் ஒருவர் எனக் கூறும் கூற்றொனறை அரிததோதில் குறிப்பிட்டுள்ளார் என நாம் முன்பு கண்டோம் (பிரிவு 55) ; ஆனால் அரித்தோதில் குறிப்பிடும் இக் குறிபபு உண்மையில் பிளோட்டோவினது **சோபிட்டுவில்** வரும் ஓர் நகைச்சுவைக் கூறறே என்பது ஐயத் திற்கிடமின்றித் தெளிவாகியுள்ளது. இதுபற்றி நாம் எலவே பார்த்தோம்.[1] தாம் தமது தொண்ணூற்றிரண்டாவது வயதி லும் அங்குமிங்குமாக அலைந்து திரிந்துகொண்டிருந்ததாகச் செனோபனிசுவே கூறுகிறார் (பகுதி 8). செனோபனிசு வுக்குத் தொண்ணூற்றிரண்டு வயதாகியிருந்தபோது பார்மனி டிசுவும் மிக முதிர்ந்தவராகியிருந்திருப்பார். அன்றியும் பார் மனிடிசு செனோபனிசுவின போதனைகளை "கேட்டா" ரெனி னும், அவரைப் பின்பற்றவில்லையெனும், இடையோசினிசு வாற் டோனப்பட்டுள்ள, சோதியனது கூற்றையும் நாம் மறந்து விடலாகாது. உண்மையில் இவர், டையசய்தாசுவின் மகனும் பைதாகரசவாதியுமான ஆமெனியாசுவோடு கேண்மை பூண்ட வரென்க. "வறியவராஞலும் கண்ணியமான மனிதரான ஆமெனியாசுவுக்கு இவர், ஓர் வீரனுகுச் செய்வது போல ஓர் கோவிலெடுத்தனர்." பார்மனிடிசுவை மெயயியல் வாழ்வை நோக்கித் திருப்பியது ஆமெனியாசுவே யன்றி, செனோபனிசு அல்ல. இது ஓர் கற்பனையெனத தோனற வில்லை. மெற்று போந்திபோனிலிருந்த பைதாகரசவின் சமாதியைப் போல, பார்மனிடிசுவால் நிறுவப்பட்ட கோவிலும் பிற்காலத்திலும் இருந்திருக்கும். மேலும், அக்கோவில் யாருக்கு அர்ப்பணிக் கப்பட்டது என்பது போன்ற விவரங்கள் கொண்ட குறிப்பும் அங்கு பொறிக்கப்பட்டிருகும். பார்மனிடிசுவும் சேனோவும் திராபோவினால் பைதாகரசவாதிகள் என வருணிக்கப்பட்டிருக கிறார்கள் என்பதையும், "பார்மனிடிய, பைதாகரச வாழ்க்கை முறை" யெனும் ஒன்றைப் பற்றிக் கீபிசு குறிப்பிடுகின்ற ரென்பதையும் கவனித்தல் வேண்டும்.[2] எதோ ஒரு வகையிற றவருனவோர் கொள்கையிலிருந்து தான் உண்மையென நம் பிய கொள்கைக்குத் தான் திருப்பப்பட்டமையை உருவகித்துக் கூறும் பாவனையிலும், ஓபிசவெளிப்பாடு ஒன்றைக் கூறுவது போன்ற உருவத்திலும் பார்மனிடிசுவின் கவிதையின் ஆரம்

1. அத். 2. 132 ஆம் பக்கம் பார்க்க.

2. இபபோது "எமக்குக கிடையாத வரலாற்றுகிரியர்களின் அடிப்படையில் அமைந்தனவாதலின், திராபோவின் கூற்றுகள் மிகவும் பயனுடையவை யெனக.

பம் அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை.[1] இவர் முதலில் ஓர் பைதாகரசவாதியாயிருந்திருத்தால் இவ்வாறு தமது கவிதையை அமைத்ததில் வியப்பிற்கிடமில்லை. ஆகவே அவர் ஓர் பைதாகரசவாதியாயிருந்தார் எனும் வரலாற்றைநாம் ஏற்றுக் கொளளத் தயங்கவேண்டியதில்லை. பைதாகரச கொள்கைக்கும் பார்மனிடிசுவுக்கும் இடையேயுள்ள தொடர்புபற்றி நாம் பின்னர் சில கூறுவோம். ஆனால், பழைய மெய்யியலாளருள், பெருமபாலானோரைப் போல, பார்மனிடிசுவும் அரசியலில் ஈடுபட்டார் என்பதைக் கவனித்துக்கொண்டால் இப்போது போதுமெனக ; தனது நகரிற்கான சட்டங்களை இவர் இயற்றினாரெனப பியூசிப்போசு குறிப்பிடடுள்ளார். ஈலியநாட்டுக் குடிகள், பாமனிடிசு தந்த சட்டங்களுக்குத்தாம் கட்டுப்படுவோம் என ஆண்டுதோறும் சத்தியமிட வேண்டும் என அந்நாட்டு நீதிபதிகள் கட்டளையிட்டதாக வேறு சிலர் கூறியுள்ளனர்.

அவரது கவிதை

85. தனது கொள்கையை, யாப்பியல்மொழியில் விளக்கிய முதலாவது மெய்யியல் ஞானி பார்மனிடிசுவே. இவருக்கு முன்னர், அனக்சிமாந்தர் அனக்சிமினிசு எரக்கிளிட்டசு என்போர் யாவரும் வசனநடையிலேயே தமது மெய்யியற் கொள்கைகளை விளக்கினர். கவிதை நடையில் எழுதிய இரேக்க மெய்யியலாளர்கள் பார்மனிடிசு எம்பிடோக்கிளிசு எனும் இருவர் மடடுமே ; எனெனில எபிகாமோசுவை எவ்வள்வுக்கு மெயயிய லாளரெனலாமோ அவ்வளவுக்கே செனோபனிசுவும் மெய்யிய லாளரென அழைக்கப்படுதற்குத் தகுதியுள்ளவராவர். எம்பிடோக்கிளிசு, பார்மனிடிசுவைப் பின்பற்றியே எழுதினர். பார்மனிடிசுவும் ஓபிச செல்வாக்குக்குட்பட்டதாலேயே இவ்வாறு கவிதை நடையில் எழுத முற்பட்டார் என ஊகிக்கலாம். ஆனால் கவிதையில் மெய்யியலை எழுதும் முறை புதிதாகப் புகுத்தப்பட்டவோர் அம்சமே. அத்துடன் இப்புதிய மரபு நீடித்து நிலைக்கவுமில்லை.

பார்மனிடிசுவின் கவிதைப்பகுதிகளிற் பெரும்பாலானவை சிம்பிளியசுவினூற் பேணித் தரப்பட்டுள்ளன. அவரது காலத்தில் பார்மனிடிசு எழுதிய மூல நூல் எற்கவே அரிதாகிவிட்டிருந்ததாதலால், அவர் தமது பாடிய நூலில் பார்மனிடிசுவின் பகுதிகளையும் சேர்த்தெழுதியது எமது நல்வாய்ப்பே. நான் டியலசு தந்துள்ள ஒழுங்கில் அவற்றைத் தருகிறேன் :

1. ஆரும் நூற்றாண்டைச் சேர்ந்த வெளிப்பாட்டுப பாடல்களைப் பற்றி நாம் மிகச சிறிதே அறிவோமாதலால, இதுபற்றிய விவரங்கள எமக்குத் தெரியவில்லை. ஆனால் அததகைய பாடலொன்றின அமைப்பையே பாமனிடிசுவும் தனது பாடலில தழுவியுளளார் என்பதில் ஐயமிலலை.

(1)

அறிவுடையவனே எல்லா நகரங்களுக்கூடாகவும் கொண்டு செல்லும் தேவதையின் புகழ்பெற்ற வழிக்கு என்னைக்கொ ணர்ந்த இரதம், நான் விரும்பிய தூரத்திற்கு என்னை இட்டுச சென்றது. அவ்வழியால் எனது இரதம் மேலும் சென்றது ; ஏனெனில் கன்னிப்பெண்கள் வழிகாட்ட, அதிற் பூட்டப்பட்டி ருந்த அறிவுள்ளனவான குதிரைகள் அவ்வழியில் என்னை இட்டுச்சென்றன. சூரிய குமாரிகள், ஒளியினிடத்திற்கு என்னை அழைத்துச் செல்லும் அவசரத்தில், தமது முகங்களிலிருந்த திரைகளை அகற்றிப் பின்னே தள்ளிட்டு, இரவினிடத்திலிருந்து வெளிப்பட்டபோது, குடதினுளளே ஒளிர்ந்து கொண்டிருந்த அச்சு—இருமூனைகளிலும் வேகமாகச் சுழன்று கொண்டிருந்த சில்லுகளினுல் உந்தப்பட்டு வேகமாக இயங்கியதால் அச்சு ஒளிர்ந் ததென்க—ஊதுகுழலினது போன்றவோர் ஓசையை வெளி யிட்டது.

இரவினதும் பகலினதும் வழிகளின் கதவுகள் அங்கு உள்ளன. அவை மேலே பாவுபடிகளினும், கீழே கல்லாலான வாயிலினும் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவையும் உயரத்தில், பலமான கதவுகளால் மூடப்பட்டிருக்கின்றன. இவற்றின் திறப்புக்களை, பழிவாங்குபவளான நீதி வைத்திருக்கிருள். என்னை வழி காட்டி அழைத்து வந்த கன்னிப்பெண்கள், அவளோடு மென் மையான சொறகளால் சாமர்த்தியமாகப் பேசி, கதவுகளைப் பூட்டியிருந்த தாழ்ப்பாள்ச் சட்டங்களை மறுப்பின்றி அகற்றச் செய்தனர். இக்கதவுகள் திறந்து பின் தளளப்பட்டபோது, ஆணிகளாலும், தறைகளாலும் பொருத்தப்பட்ட, பித்தளையா லான கதவுத் தூண்கள் ஒன்றன்பின் ஒன்றுகப் பின்னுக்குத் திரும்பியபோது, ஓர் விசாலமான வெளி தென்பட்டது. இவை யாவற்றிற்கும் ஊடாக, அக்கன்னிப் பெண்கள் எனது இரதத் தையும் குதிரைகளையும், அவ்விசாலமான வழியால் அழைத துச் சென்றனர். என்னைக் கண்டதும் அப்பெண்தெய்வம், இனிமையாக வரவேற்றுள். எனது வலதுகையைத் தனது கையினுற் பற்றியவாறே அவள் பேசலானுள் :

இறப்பில்லாதவரான சாரதிகளது கண்காணிப்பிலுள்ள இர தத்தில் எனது இடத்திற்கு வந்துள்ள இளைஞனே, உனக்கு நல்வரவாகுக : உன்னை இவ்வழியில் இட்டுக்கொணர்ந்தது எவ்வகையிலும் தீயவோர் விதியன்று ; நீதியும் நன்னெறி யுமே உன்னை இங்கு அனுப்பியுள்ளன என்பதையறிவாய். மனிதர்கள் சாதாரணமாகச் செல்லும் வழியிலிருந்து இது உண்மையில் மிகவும் சேய்மையிலேயே உளது. சற்றேனும்

உண்மைக்கலப்பில்லாதனவான, சாதாரண மனிதர்களது கருத்துக்களையும், நன்கமைந்த உண்மையின் அசைக்க முடியாத உட்பொருளையும் நீ அறிவது நல்லதே. ஆனால் நீ இவற்றை அறிதலும் மிகவும் முக்கியமானதே—எவ்வாறு யாவற்றிற்கு மூடாகச் சென்று, உள்ளனபோற் காட்சியளிக்கும பொருட்களை மதிப்பிடுதல் வேண்டும் எனபதை அறிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் இக்கொள்கையை ஒரேயடியாக எற்றுகொண்டு அதனை விருத்தி செய்ய முனைவதிலிருந்து உனது சிந்தனையை நீ கட்டுப்படுத்தல் வேண்டும். அனறியும் அதிக அனுபவத்தால் வந்த பழக்கம் காரணமாக இவ்விடயத்தைச் சாவதானமான கண்கொண்டு அல்லது அதிக உன்னிப்பில்லாத செவியால் அல்லது நாவினால் உணரமுயல்வதும் கூடாது. ஆனால் நான் கூறும் மிகுநத விவாதத்திறகிடமானவையான நிரூபணங்களை, வாதரீதியாக மதிபபிடல் வேணடும். எல்லா முறைகளிலும், பேசத் தகுந்ததென எஞ்சியுள்ளது ஒன்றே.... **R. P. 113.**

உண்மையின் வழி

(2)

சேய்மையிலுள்ளனவாயிருப்பினும், பொருட்கள் அண்மையிலுள்ளன வென்றெண்ணி அவற்றை உனது மனத்தால் உற்றுக் கவனிப்பாயாக. வெளியே ஒழுங்காகப் பரப்பும் நோக்கத்துடனே அல்லது ஒன்று சேர்க்கும் நோக்கத்துடனே, உள்ளதனோடு இறுக இணைந்திருக்கும் உள்ளதனை உன்னுற றுணிக்க முடியாது. **R. P. 118 a.**

(3)

நான் எந்த இடததிலிருந்து ஆரம்பித்தாலும் எனக்கு ஒன்றுதான்; எனெனில் நான் மீணடும் அந்த இடத்திற்கு வருவேன்.

(4, 5)

தேடுதற்குரியனவான, நமது சிந்தனைக் கெட்டிய இரண்டே இரண்டு வழிகளை நான் உனக்குக் கூறுவேன்—நீ நான கூறுவனவற்றைக் கேட்டு, அவற்றை வெளியே பரப்புவாயாக. முதலாவது அது இல்லாதிருப்பது சாத்தியமில்லை எனும் வழியாகும். இது நம்பிக்கையின்வழி. உண்மை எப்போதும் இதனோடு சேர்ந்திருக்கிறது. இரண்டாவது, **அது இல்லை**, அது இருப்பது சாத்தியமில்லை என்பதாகும். இவ்விரண்டாவது வழிபற்றி ஒருவரும் அறிய முடியாது என நான கூறுவேன். எனெனில் இல்லாததைப் பற்றி நீ அறிய முடியாது—அது அசாத்திய

மானது—அதனைப் பற்றி நீ பேசவும் முடியாது ; எனெனில் உளது என்பதும் சிந்திக்கப்படுவது என்பதும் ஒன்றே. **R. P. 114.**

(6)

பேசப்படக்கூடியதும், சிந்திக்கப்படக்கூடியதும் **உள்ளதாயிருத்தல்** வேண்டும் ; எனெனில உள்ளது, உளதாயிருத்தல் சாத்தியமானது, இலது என்பது இருத்தல அசாத்தியமே. இதைப் பற்றியே, உன்னைச் சிநதிகும்படி நான் கேட்கிறேன். இம் முதலாவது வழியிலும் இம்மறற வழியிலும் செல்வதிலிருந்து நான உன்னைக் கட்டுப்படுத்துகிறேன. இவ்விரண்டாவது வழியிற்ருன் எதுவுமறியாத மனிதர்கள், பொய் நெறியாளராக அலைகினறனர். எனெனில் இவர்களது நெஞ்சிலுள்ள் அலையும் சிந்தனைகளை நடாத்திச் செல்வது இவர்களது பலவீனமே. ஆகவே குருடும செவிடுமான மனிதர்களைபபோல; எதுவுமறியாது திகைத்தவர்களாய் இவர்கள அவ்வழியில் இழுததுச் செல்லபபடுகின்றனர். அது உளதெனவும் இலதெனவும், ஒன்றேயெனவும், ஒன்றல்லவெனவும், பொருட்கள் யாவும் எதிரெதிரான திசைகளிற் செலகின்றனவெனவும் கூறும் அறிவிலிகள் மனிதர் ! **R. P. 115.**

(7)

எனெனில் உளளது இல்லை யெனனும் இக்கருத்து ஒரு போதும் நிரூபிக்கப்படமாட்டாது ; நீ இவ்வழியிற் செல்வதிலிருந்து உனது சிந்தனையைக் கட்டுபபடுத்துவாயாக. **R. P. 116.**

(8)

பேசுவதற்கு எமக்கு ஒரு வழியே எஞ்சியுள்ளது ; **அது உளது** என்பதே அது. உள்ளது என்பது ஆக்கபபட்டதும் அல்ல, அழியக்கூடியதும் அலலவென்பதற்கு இவ்வழியிற பல அடையாளஙகளுள ; எனெனில் அது பூரணமானதாயும், அசைகக முடியாததாயும் முடிவற்றதாயும் உளது. அது எப்போதாவது இருந்தது எனலோ, இருக்கும் எனலோ தவறு; எனெனில அது முழுமையுடையதாகவும், தொடர்ந்துள்ளதாகவும் இப்போதே **உள்ளது.** எனெனில இது எவ்வாறு ஆரம்பித்ததென உன்னுற் கூற முடியும் ? எதனிலிருந்து, எவ்வகையில் அது தனது வளர்ச்சிக்கான பொருளைப் பெற்றிருக்க முடியும் ? இலலாததிலிருந்து அது வநதது எனக் கூறவோ நீனைக்கவோ நான் உன்னை அனுமதியேன் ; எனெனில் எதுவும் இல்லை என்பதை நீனைக்கவோ பேசவோ முடியாது. அன்றியும் இல்லாததிலிருந்து அது வந்ததெனின் எக்காரணத்தினுல் அது ஒரு குறிப்பிட்ட காலத்திற் றேன்றி

யது ? ஆகையால் அது எப்போதும் உளதாதல் வேண்டும், அன்றேல் ஒருபோதும் இல்லாததாயிருத்தல் வேண்டும். அன்றியும் இல்லாததிலிருந்து இல்லாததைத் தவிர வேறு எதுவும் தோன்றுவதை, உண்மையின் சத்தி அனுமதிக்காது. ஆதலால், நீதி தனது தளையை இளக்கி எதனையும் தோனறவோ, அழிந்து போகவோ விடுவதில்லை. அவள் அதனை இறுகப் பற்றிக்கொண்டிருக்கிறாள். ஆகவே **அது உளதா** அல்லது **அது இல்லையா** என்பதிலேயே நமது முடிவு தங்கியிருக்கிறது. இவற்றுள் ஒரு வழி சிந்திக்கப்படக்கூடியதலல வென்பதுடன் பெயரிடவும் முடியாததாதலால் ஒதுக்கப்படவேண்டுமெனவும் (ஏனெனில அது உண்மையான வழியல்ல), மற்றவழியே உண்மையானதும் உள்ளதுமான தெனவும் முடிவு செய்தல் அவசியம். அப்படியானால உள்ளதென்பது எதிர்காலத்தில் இருக்கும் என்பது எவவாறு ? அல்லது அது உண்டாகும் எனல் எவ்வாறு ? அது உண்டாவதெனின், அது இல்லை யென்க ; அது எதிகாலதில இருகபபோவதெனினும் அது இபபோது இலலையென்க. இவ்வாறே ஆதல் என்பது மறுக்கப்படுகிறது. இதனற்றன் அழிதல் என்பதைப் பற்றி ஒன்றும் கூறப்படவிலலை. **R. P. 117.**

உள்ளது எல்லா இடங்களிலும் ஒரே தனமையுடையதாயிருப்பதாலும் ஓரிடத்திற் குறைவாகவும் இன்னோரிடத்தில் அதிகமாகவும் இல்லாதிருபபதனாலும், எல்லாப் பகுதிகளிலும் நிறைந்திருப்பதனாலும், அதனைப் பிரித்தல் இயலாது. ஆகையால் அது முற்றிலும தொடர்புடையதாகவிருக்கிறது ; எனெனில் உள்ளது, (அதன் எனைய பாகங்களோடு) உள்ளதோடு தொட்டுக் கொண்டிருக்கிறது.

அனறியும், அது ஆதியும் அந்தமுமில்லாது, பலமான சங்கிலிகளின் தளையிற் கடடுண்டு இயங்க மூடியாதிருக்கினறது; ஆதல், அழிதல் என்பவை, உண்மையான சிந்தனையால் விலக்கப்பட்டு அகலத துரத்தப்பட்டு விட்டனவாதலால். அது, தானன்றி வேறுகாது, அதே இடத்திலேயே, தன்னிலேயே தங்கி நிற்கிறது. இவ்வாறு அது தனது இடத்திலேயே நிலைத்திருக்கிறது ; எனெனில் எல்லாப் பக்கங்களிலும் அதனை வரையறை செய்யும் இன்றியமையா விதி அதனைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. ஆதலால் அதற்கு எல்லையற்றதாக இருக்க அனுமதி இல்லை. அது எதனையும் வேண்டி நிற்கவில்லை ; ஆனால் அது எல்லையற்றதாயிருப்பின யாவற்றையும் வேண்டி நிற்பதாயிருக்கும். **R. P. 118.**

எதனைப் பற்றிச் சிந்தித்தல் சாத்தியமோ அதுவும், எதற்காகச் சிந்தனையிருக்கிறதோ அதுவும் ஒன்றே ; எனெனில் உள்பொருள் இல்லாது, ஆதலால அதனைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமும் இல்லாது போனால், சிந்தனையும் இருக்க முடியாது. விதியானது உளளதை முழுமையுடையதும் இயங்க முடியாததுமாக ஆக்கியுள்ளதாதலால் அதனைத் தவிர்த்து வேறெதுவுமில்லை. வேறெப்போதும் இருக்கப்போவது மில்லை. ஆதலால், ஆதல், அழிதல் என்பனவும், உள்பொருள், இல் பொருள் என்பனவும், இடமாற்றம் நிறமாற்றம் என்பனவும்— இவை யாவும் உண்மையென நம்பிய மாந்தர் ஆக்கிய பெயர் களே. R. P. 119.

ஆகவே அதற்கோர் எல்லையுளது. அது எல்லாப் பக்கங் களிலும் பூரணமானதாயும், மத்தியிலிருந்து எல்லாப் பக்கங் களிலும் சமமாக அமைந்திருக்கும் ஓர் கோளத்தில் பொருள் போலவும் உளது ; எனெனில் அது ஓர் இடத்தில் இன் னேரிடத்தில் உள்ளதிலும் குறைவாகவோ கூடுதலாகவோ இருக்க முடியாது. எனெனில் அது எல்லாப் பககங்களிலும் சமமாகப் பரவுவதை எதனலும் தடைசெய்ய முடியாது. அன்றி யும் உளதாயிருப்பது எதுவும், அது சிறிதும் இழிவுபடுத்தப் படக்கூடாததாதலால், ஓரிடத்தில இன்னேரிடத்திலிருப்பதிலும் குறைவானதாக இருக்க முடியாது. அன்றியும், அது எவ் விடத்திலிருந்து, எல்லாப் பக்கங்களிலும் சமமாக விருக்கிறதோ, அவ்விடம் எல்லாத்திசைகளிலும் எல்லையை நோக்கிச் சமமாக மூனகிறது. R. P. 120.

நம்பிக்கையின் வழி

உண்மை பற்றியதும், நம்பத்தகுந்ததுமான எனது பேச்சை யும், சிந்தனையையும் இப்போது நிறுத்துவேன். இனி, எனது பேச்சின் போலித் தொனியை மனதிற் கொண்டு, சாதாரண மாந்தரது நம்பிக்கைகளை அறிவாயாக.

மாந்தர்கள் இரு உருவங்களைப் பற்றிப் பேசுகின்றனர். இவற் றுள் ஒன்றைப் பற்றிப் பேச முடியாததாலால், இங்கு அவர்கள் உண்மையை விட்டு விலகியேகின்றனர். இவையிரண்டும் ஒன் றுக்கொன்று எதிரானவையெனவும் வேறுபட்ட பண்புடையன வெனவும் அவர்கள் கூறுகின்றனர். ஒன்று, மென்மையுடைய தும், எத்திசையிலும் மிகவும் இலேசானதுமான, ஆனல் மற்ற உருவத்திலிருந்து மாறுபட்டதுமான வானத்தீயென அவர்கள் கூறுவா. மற்றது, திண்மையுடையதும், மிகவும் பாரமான பொருளுமான இருண்ட இரவு ; முன்னையதற்கு எல்லா வகைகளிலும் எதிரானது. மாந்தர்களது சிந்தனைகள் யாவற்

நிலும நீ திறமையுடையவனுயிருக்க வேண்டுமாதலால், இவ் விரண்டையும் பற்றியும், அவை உண்மையில் எவ்வாறிருக் கின்றன எனக் கூறல் பொருந்துமோ அவ்வாறு உனக்கு விளக்குவேன். R. P. 121.

(9)

பொருள்கள் யாவும் ஒளியும் இரவும் என வகுக்கப்பட்டு விட்டனவாதலாலும், இவற்றின் சதிகளின் பெயாகளும் பொருள்கள் யாவற்றிறகும் அளிக்கப்பட்டு விட்டனவாதலாலும், எல்லாப் பொருள்களும் ஒரே நேரத்தில், சமமான ஒளியும் இருண்ட இரவும் நிறைநததனவாக இருக்கின்றன ; எனெனில் இவற்றில் ஒனறிற்காவது மற்றதோடு எவ்வகைத் தொடர்பும் இல்லை.

(10, 11)

ஒளிரும் சூரியனது தூய விளககின அழகிய சாதனைகளை யும், வானத்தின உட்பொருளையும், வானத்தில் உள்ள எல்லா அடையாளங்களையும், இவை யாவும் எவ்வாறு தோன்றின என்பதையும் நீ அறிவாய். அதே போல வட்ட முகமுடைய சந்திரனது உட்பொருளையும், அலையும் அதனது செயலகளை யும் நீ அறிவாய். அன்றியும், எம்மைச் சூழவிருக்கும் வானுல கங்கள் பற்றியும், அவை எவ்வாறு தோன்றின எனபது பற்றி யும், மாறு விதி எவ்வாறு அவறறை உடுக்களின் எல்லைகளைக் காக்குமாறு பணித்ததெனபது பற்றியும்.....பூமி, சூரியன், சந்திரன், யாவற்றுக்கும் பொதுவான ஆகாயம், பால்வழி மண்ட லம் ஆகிய யாவும் எவ்வாறு தோன்றின எனபது பற்றியும் நீ அறிவாய். கடைசி எல்லையிலிருக்கும் ஒலிம்போசும், எரியும் உடுக்களினது வலியும் எங்ஙனம் ஏற்பட்டன என்பதையும் நீ அறிவாய். R. P. 123, 124.

(12)

ஒடுங்கிய வட்டங்கள் தூய தீயினலும், அவற்றை அடுத் துள்ளவை இரவினலும் நிறைக்கப்பட்டன. இவற்றின் நடுவே இவற்றின் தீப்பகுதிகள் பாயகின்றன. யாவற்றையும் ஆற்றுப் படுத்துபவளான தெயவம் இவற்றின் நடுவேயுள்ளாள் ; எனெ னில் ஆணின் அணைப்பை விரும்புமாறு பெண்ணைத் தூண்டி யும், பெண்ணின் அணைப்பை விரும்புமாறு ஆணைத் தூண்டி யும், புணர்ச்சியையும், நோமிருந்த பிரசவத்தையும் ஆரம் பிப்பவள் இவளே. R. P. 125.

(13)

எல்லாத் தெய்வங்களுக்கும் முன்னர் அவள் ஈரோசுவை (காதற் கடவுளை) ஆகினாள். R. P. 125.

(14)

பூமியைச் சுற்றி அலைவதும், இரவில் ஒளியால் இரவிற் பிரகாசிப்பதும்.[1]

(15)

எப்போதும் சூரியனது கதிர்களைப் பார்த்துக்கொண்டு.

(16)

தவறிழைக்கும் அதனது அங்கங்களுக்கு ஏற்றதாக எவ்வாறு சிந்தனை அமைகிறதோ, அவ்வாறே மனிதர்களுக்கும் அது அமைகிறது; எனெனில் சிந்திப்பது—ஒரு பொருளே—அதாவது ஒவ்வொரு மனிதனிலும் அவனது அங்கங்களின் உட் பொருளாயமைந்த அதுவே; ஏனெனில் அவர்களில் எது அதிகமாயிருக்கிறதோ அதனால் அமைவதே அவர்களது சிந்தனை[2]. R. P. 128.

(17)

வலப்பக்கத்தில் சிறுவர்கள; இடப்பக்கத்தில் சிறுமியர்[3].

(19)

மனிதர்களது கருத்துப்படி, பொருளகள் இவ்வாறே தோன்றின, இவ்வாறே இனறு உள. காலத்தின் போக்கில் அவை வளர்ந்து மறைகின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் மனிதர்கள் ஒவ்வொரு பெயரைச் சூட்டியிருக்கினறனர். R. P. 129 b.

1. இலியட்டின் (ப. 214) எதிரொலியைக காணக. எம்பிடோகிளிசுவினும் இது காணப்படுகிறது (பகுதி 45). செனோபனிசுவின காலத்தில, சநதிரனது ஒளி பிரதிபலிகபபடும் ஒளியே எனக கண்டுபிடிக்கபபட்டபோது, அவா கூறியவைபோல, இதுவுமோ கேலிபோலும. இககருததினை அனகசகோரசு அதென் சில புருததியிருக்கலாம் (பிரிவு 135). ஆனால இபபாடல்கள இது அவாற் கண்டு பிடிகபபட்ட விடயமல்ல எனபதை நிரூபிகினறன.

2. பாமனிடிசுவின கவிதையின் இரண்டாம் பகுதியில விவரிக்கப்பட அறிவியற் கொளகையின இபபகுதிகளு, தியோபிறசுதோசு தமது "புலனுணாவு பற்றிய பகுதி" யிற கூறுவனவறறோடு சோததே பொருள் கொள்ளப்பட வேணடும் (201 ஆம பகம ஒப்பிடுக). மனிதாகளது உடலில ஒளியுள்ள பகுதியோ அல்லது இருணட பகுதியோ அதிக மிருப்பதற்கிணங்கவே அவாகளது சிநதனை அமைகிறது. ஒளியுள்ள பொருள அதிகமாயிருகுமபோது அவாகள ஞான மூடையோராகவும், இருள அதிகமாகும்போது பேதைகளாகவும் இருகினறனர்.

3. இது பார்மனிடிசுவினது கருவியலிலிருந்து ஓர் பகுதி.

86. கவிதையின் முதலாவது பகுதியில், "அது உளது". "அது உளது" என்பதை நிறுவுவதில் பார்மீனிடிசு அதிக கவனம் செலுத்துவதைக்காண்கிறோம். ஆனால் முதலில நோக்கும்போது அவர் குறிப்பிடும் உள்ளது எனபது எனனவென்று விளங்கவில்லை. **உள்ள தென்பது உளது** என வெறுமனே கூறுவதோடு அவர் நிறுத்திவிடுகிறார். நாம் உடலுள் பொருள் என வழக்கமாக அழைபபதே இஙகு அவராற் கருதப்படுவது என்பதில் உண்மையான ஐயத்திறகிடமேயில்லை. அது வெளியிற பரந்துள்ள தாகவே கருதப்படுகிறது எனபது திண்ணம் ; எனெனில் அது கோளவடிவினது எனக் கூறுப்படுகிறது (பகுதி 8). மேலும், புலனகளால் உணரபபடக்கூடியதான வொனறையனறி வேறெந்தச் சத்துப் பொருளுமிருந்ததாகப் பார்மீனிடிசு நம்பவில்லை யென அரித்தோதில் கூறுகிறார். "உள்பொருள்" என்பதைப் புற்றிப் பாமமீனிடிசு ஓரிடத்திலும் ஒரு சொல்லாயினும் கூறவில்லை. மேலும், அவருக்கு முனபும், பினபும் வாழ்ந்த மெய்யியலாளாகளால், அதிகம் கையாளப்பட்ட "இறை" யெனும் சொல்லை அவர் ஓரிடதிலும் கையாளவில்லை எனபதும் குறிபபிடத்தகது. "**அது உளது**" எனும் கூற்றிறகு இறுதியில் நாம் கொளளகூடிய பொருள் உலகு ஓர் பூரணம் என்பதே ; அததுடன் உலகுக்கு வெளியேயோ உள்ளேயோ வெறறிடம் எனும் ஒனறு இருக்கவில்லை எனவும் அறிதல் வேண்டும். இதிலிருந்து இயக்கம் எனும் எதுவும் இருக்க முடியாதென்பதும் பெறபபடுகிறது. ஏகததை மாறும் இயல் புடையதாக்கி அதன்மூலம் உலக நிகழ்சசிகளை விளக்கிய ஏரக் கிளைட்டசு போலல்லாது, மாறறம் எனபது வெறும் கண்மாயமே எனப் பார்மீனிடிசு அதனை ஒதுக்கியுளளார். ஏகம் என்பதனை அதன் முழுததாறபரியத்தோடும் உணர்ந்து ஏற்றுக்கொள்வோர், பிற அனைததையும் மறுத்தல் வேண்டும் என்பதனைப் பார்மீனிடிசு தீர்க்கமாக விளக்கினார். ஆகவே, இப்பிரச்சினைக்கு, அவருக்கு முன்னர் தரப்பட்ட விளக்கங்கள் யாவும் உண்மையில் இப்பிரச்சினையை நனகு உணராது தரபபட்டவையே யெனல் வேண்டும். ஐதாதல், அடாத்தியுறல் என்பவை பற்றிய தனது கொள்கையின் மூலம், மூலபபதாாத்ததின ஒருமையைக் காப்பாறற முனைந்த அனக்சிமினிசு, உள்பொருள் ஓரிடத்தில், வேறோரிடத்திலிருப்பதிலும் குறைவாக உளது எனக் கொள்வது, உணமையில் இல்பொருளுளது எனத் தான ஒப்புக் கொள்வதறகுச் சமமாகும் என்பதை உணரவில்லை (பகுதி 8). உலகின் வெளியே வெற்றிடம் அல்லது வளி இருந்ததெனவும், அலகுகளைப் பிரிக்கும் பொருட்டே உலகினுள்ளே அது வந்ததெனவும் பைதாகரசவாதிகள் விளக்கினர் (பிரிவு 53). இவ்

விளக்கமும் இல்பொருள் உளது எனும் கருதுகோளை உடையதாயிருக்கிறது. எரக்கிளேட்சுவின் கொள்கையையும் இவற்றிலும் திருப்திகரமானதெனக் கொள்ள முடியாது ; ஏனெனில் தீ உளது எனவும் இலது எனவும் ஒருங்கே கூறும் மூரண் பாட்டின் அடிப்படையில் அவரது கொள்கை அமைந்துளது (பகுதி 6).

நாம் மேலே கடைசியாக எடுத்துக்காட்டிய கவிதைகளில் குறிப்பிடப்பட்டிருப்பவர் எரக்கிளேட்சு எனபதன் உண்மையைச் சிலர் சந்தேகித்துள்ளனர். ஆனால இச்சந்தேகம் எழப்போதிய நியாயமில்லை யெனலாம். உளபொருளும் இல்பொருளும் ஒன்றேயென (6 ஆம், 8 ஆம், பகுதிகளின பழைய மொழி பெயர்ப்பு) எரக்கிளேட்சு ஒருபோதும் கூறவில்லை யென்பது செல்லரால் எடுத்துக் காட்டப்பட்டுளளது ; இதைவிட வேறெந்த ஆதாரமும இல்லையெனில், இச்சந்தேகங்கள் நியாயமானவையே யெனலாம். ஆனால் இங்கு தர்க்கிக்கபடும் கருத்தினபடி நோக்கின், " எலலாப பொருளகளும் எதிர்த்திசைகளிற் செல்கின்றன " எனும சூற்றுக்கு " மேலும் கீழும் செல்லும் வழி " (பகுதி 71) எனும் எரக்கிளேட்ச கொள்கை யென்பதைத் தவிர வேறு முறையிற் பொருள் கொள்ள இயலாது. அன்றியும், தான கண்டிக்கும் மெய்யியலாளர் உள்பொருளும் இல்பொருளும் ஒனறெனவும் கூறினர் எனப பார்மனிடிசு கூறவிலலையெனவும் நாம் கண்டோம் ; அவர் கூறுவதெல்லாம் அது உள்பொருள், அது இல்பொருள் (எனவும்) அது ஒனறே, அது ஒன்றல்ல (எனவும் மக்கள் கூறுகிறார்கள்) எனபதே. மேலேயுள்ள வார்த்தைகளிலிருந்து இயல்பாகப் பெறகூடிய பொருள் இதுவே ; எரக்கிளேட்சுவின் கொள்கையை இது மிகவும் செம்மையாக வருணிக்கிறதெனலாம்.

பார்மனிடிசின முறை

87. பாமனிடிசு வாதிக்கும் முறையே அவரது கவிதையிற் காணபபடும் பெரிய புதுமையென்க. தான் ஆராயப்போகும் கொள்கைகள் யாவற்றிற்கும் பொதுவாயுள்ள முற்கற்பிதம் யாதென அவர் முதலிற் றேடுகிறார். இல்பொருள் உளது எனபதே அக்கற்பிதம் எனக் கண்டதும், அதனைப் பற்றிச் சிந்தித்தல் சாத்தியமா எனும் இரண்டாவது வினு எழுகிறது. இல்பொருள் பற்றிச் சிநதித்தல் சாத்தியமில்லை யெனபதே அதறகு விடையாகக் கிடைக்கிறது. சிநதிக்க வேண்டுமானால், எதையேனும் பற்றியே சிந்திக்க வேண்டும். ஆகையால் இல்பொருளென்பது எதுவும் இல்லை. சிந்திக்கப்படக்கூடியதே இருக்க முடியும் (பகுதி 5) ; எனெனில் உள்ளதற்காகவே சிந்தனை உளது (பகுதி 8).

இமமுறையைப் பார்மனீடிசு மிகவும் கண்டிப்போடு விருத்தி செய்கிறார். சிந்திக்கப்பட முடியாதனவென நாம் ஒத்துக்கொள்ள வேண்டியனவற்றைப் பறறி நாம சிந்திக்கிறோம் எனப் பாசாங்கு செய்ய அவா எம்மை அனுமதியாா. நாம் நன்கு விளங்கிக் கொள்வனவற்றைத் தவிர வேறு எதனையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என நாம் துணிவோமானால், அழிவும், மாறறமும் நிறைந்தவோா உலகை எமக்குக் காட்டும் எமது புலன்களோடு எமது அறிவு முற்றிலும் முரண்படும் என்பது உண்மையே. இது புலனகளின் துரதிடமே என்கிறார் பார்மனீடிசு. ஓருடல் வாதத்தை ஏற்றுக்கொண்டால் இம்முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகும். பார்மனீடிசு துணிச்சலோடு இம்முடிவை எடுத்துக் கூறியமை, இக்கொளகையின் வளர்ச்சிக்கே ஓர் முடிவை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அக்காலதில் நிலவிய கருத்துக்களை அவற்றின தருக்க ரீதியான முடிவு வரைக்கும் விருத்தி செய்து, அம்முடிவை, அது எவ்வளவுதான முரண்பட்டதாகத் தோன்றினாலும், ஏறறுக்கொள்ளும் துணிவு பார்மனீடிசுவுக்கு இல்லாது போயிருந்தால், மெய்யியலாளர் இனனும் நெடுங் காலம்வரை ஐதாதல்—அடர்த்தியுறல், ஏகம்—பல எனும் எதிர்ப்பு வட்டங்களிற் சிக்கி அவற்றிலிருந்து வெளியேற வழிய றியாதிருந்திருப்பார்கள். பார்மனீடிசு துணிச்சலோடு தமது வாத வியல் முறையைப் பூரணமாகப் பின்பற்றியமையே பிற்கால மெய்யியற சிந்தனை முன்னேறுவதற்கு வழியமைத்துக் கொடுத்தது. இனி மெய்யியலானது, ஒன்றில், ஒருமை வாதத்தைக் கைவிடுதல் வேணடும் அனறேல் உடல்வாதத்தைக கைவிடுதல் வேண்டும் எனனும் நிலை ஏறபட்டது ; அவை இரண்டையுமே தழுவுதல் இயலாததாயிற்று. ஆனால் உடலற்ற பொருள் பறறி இன்னும் அவர்கள் அறிந்திலராதலால், உடல் வாதத்தைக் கைவிடுதல் இயலாததாயிறறு. ஆகவே அவர்கள் ஒருமை வாதத்தைக் கைவிட்டு, இறுதியாக அணுவாதக் கொள்கையைத் தழுவுவாராயினர்; உலகததை, இயக்கத்திலிருக்கும் ஓர் பொருட் டொகுதியெனனும் கொள்கையின அடிப்படையில் வருணிப்ப தறகுக் கடைசியாகத் தரப்பட்ட கொள்கை நாமறிந்த வரையில் அணுவாதமே[1].

88. “ **அது உளது** ” என்பதை ஒப்புக்கொணடதன பின்னர் அதனால் ஏற்படும் விளைவுகள் யாவற்றையும் பார்மனீடிசு விருத்தி **விளைவுகள்**

1. நாம இபபோது ஏற்றுகொள்ளும் கணணோட்டத்திலிருநது அணுவாதத் தையும ஒருமைகொளகை யெனலாமா எனபது ஐயதிறகிடமானதே. எனெனில் அணுவாதம் வெற்றிடம் உணமையில் உளதென ஒபபுககொள்கிறது. தறகாலத்து ஒருமை வாதக கொளகைகளினபடி உடலல்லாது சததியே மூலப் பொருள. ஆகையால இவை உடலவாதஙகளலலவெனக.

செய்கிறார். அது ஆக்கப்படாததாகவும், அழிக்கப்படக் கூடாததாகவும் இருத்தல்வேண்டும். இல்லாதது என எதுவும் இல்லையாதலால அது இல்லாததிலிருந்து வந்திருக்க முடியாது. அதைத் தவிர்த்து வேறு எதுவும் இருக்க இடமில்லையாதலால, அது வேறு எதனிலிருந்தும் வந்திருக்க முடியாது. உளளது, தனக் கருகே வேறு எதுவும் தோனறுவதற்கு இடமளிக்கும் வெற் றிடததை உடையதாகவிருக்க முடியாது ; எனெனில் வெற்றிடம் என்பது இல்லை. இல்லாததைப் பறறிச் சிந்திகக முடியாது. ஆகவே அது இருக்க முடியாது. உளளது, எபபோதும தோன் றியதல்ல, எதிாகாலத்திலும் எதுவும் தோன்றப்போவதில்லை, "அது **உளதாயின்**" அது முழுவதும் ஒருஙகே இபபோதே உளது.

பாாமனெடிசுவின் இக்கொள்கை, வெற்றிடம் உளது எனபதை மறுக்கிறது என்பது பிளேட்டோவுககு நனகு தெரிந்திருந்தது. "எலலாப் பொருட்களும் ஒன்றுயிருநதன வெனவும, **இயங் குவதற்கிடமில்லை** யாதலால் அது தன்னிலேயே நிலைதிருந்தது" எனவும் பார்மனெடிசு கருதினுர் எனப் பிளேட்டோ கூறுகிறார். அரித்தோதிலும், பிளேடடோவைப் போலவே, இதனை மிகவும் தெளிவாக உணாந்திருந்தார். பார்மனெடிசுவின் காலத்திலும் அதற்கு முன்பும், புலன்களால் அறியக் கூடியனவற்றைத தவிர, புலன்களால் உணரமுடியாத சததுப்பொருளும் இருத்தல் கூடுமென யாரும் கற்பனை செய்திருக்கவிலலை யாதலாறறுன், ஏகம் என்பது இயக்கமற்றது எனக் கூறும் நிாப்பந்தம் பார்மனெடிசுவுக்கு ஏற்பட்டதென அரித்தோதில் கூறினுர்.

உள்ளதென்பது உளது ; அது கூடுதலாகவோ குறைவாகவோ இருக்க முடியாது. ஆகவே ஒரிடத்தில் அதில் எவ்வளவிருக் கிறதோ அவ்வளவு எனைய இடங்களிலும் இருக்கிறது. ஆக வேதான் உலகு நீக்கமற்றதும், பிரிக்க முடியாததுமானவோர் பூரணமாக விருக்கிறது. இதை ஏற்றுக்கொண்டவுடன், இப் பூரணம் இயங்க முடியாது என்பது உடனடியாகப் பெறப் படுகிறது. அது இயங்குவதானுல், வெற்றிடததிலேயே இயங குதல் வேண்டும் ; ஆனுல் வெற்றிடம் என்பது இல்லை. எல்லாப் பக்கங்களிலும், உள்ளதனுல், சத்துப்பொருளினுல், அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்நியாயத்தின்படியே அது எல்லையுடையதாகவும், தனக்கப்பால் வேறெதுவும் இல்லாததா கவும் உளது எனப்பட்டது. அது தன்னிலேயே பூரணமாயிருக் கிறதாதலால், இல்லாததான வெற்றிடத்திலே, தன்னைப் பரப்பிக் கொள்ள வேண்டிய அவசியம் அதற்கில்லை. ஆகை யினுற்றுன் அது கோளவடிவானதாகவும் உளது. அது எல்லாப் பக்கங்களிலும் சம அளவு மெய்மையுடையதாக விருக்கிறது.

இந்நியமத்திற்குப் பொருந்தும் ஒரே வடிவம் கோளமே. வேறு எந்த உருவதிலும் ஒருபக்கத்தில் இருப்பது பிறபக்கத்திலிருப்பதிலும் அதிகமாகக் காணப்படும்.

89. சுருங்கக் கூறுவதாயின், உளதென்பது, எல்லையுள்ளதும், கோளவடிவமுடையதும், இயக்கமற்றதும் உடலுள்ளதுமானவோர் பூரணம்; அதனையன்றி, வேறெவுமில்லை. நமக்குத் தோன்றும் பலவாகுமியல்பு, இயக்கம், வெற்றிடம், காலம் என்பன யாவும் வெறும மாயைகளே. ஆதி அண்டவியலாளர் தேடிய மூலப்பதார்த்தம், இங்கு "தானேயுளவாயபொருள" போன்றவொன்றுக ஆதலே இங்கு காண்கிறேம். பிறர் ஒருபோதும் இது இத்தன்மையை முற்றுக இழக்கவில்லை. எம்பிடோக்ளிசுவின மூலகங்களும், அனக்சகோரசுவினது "ஓமியோமரிசு" என அழைக்கப்பட்ட பொருள்களும், லியூக்ப்போசு, தெமோகிரித்தோசு ஆகியோரது அணுக்களும் பார்மனைடிசுவினது "உளபொருளே" யனறி வேறில்லை. சிலர் கூறியிருப்பது போலப பார்மனைடிசு "கருத்து வாதத்தின் தந்தை" அலல. அதற்கு மாறுக சடவாதம் முழுவதும், பார்மனைடிசுவின் கண்ணோட்டத்தையே ஆதாரமாகக் கொண்டுள்ளது. பார்மனைடிசு வே சடவாதத்தின தந்தை எனல்

90. புலனகள் தரு உலகம் பறறித் தனது கற்பனையில் எழுந்த விளக்கமாக, பொருட்களின் ஆரம்பம் பற்றிய இருமைவாதக் கொள்கையொன்றையே, பார்மனைடிசு தனது கவிதையின் இரண்டாவது பாகத்திற்றருகின்றார் எனப் பொதுவாகக் கருதப் படுகிறது. "அவர் தருவதெனக் கூறுவது இறப்புலோரான **மக்களது கருத்துக்களையே**; ஆனல் பார்மனைடிசு இவவாறு தருவது பிறரது கருத்துக்கள் மட்டுமல்ல. தமது கருத்துக்களிலும் வெளிப்படையான மெய்யியலுண்மையின் அடிப்படையில் இன்றியமையாதனவென, எத்தகைய கண்டனத்திற் கெதிராகவும் நிறுவப்படக்கூடியனவற்றைத் தவிர்த்து ஏனையவறறைத் தந்துள்ளார்" எனக கொம்பர்சு கூறியிருப்பதும் இதனையே[1]. அரித்தோதில் இத்தகைய ஓர் கருத்தை ஓரிடத்தில் எற்றுக்கொளகிறார் என்பது உணமையேயாயினும் இக்கருத்து ஓர் காலவழுவென்பதில் ஐயமில்லை. மேலும் இது உண்மையில் அரித்தோதிலின் கருத்துமல்ல. இலபொருள், எவ்வகையிலும் இருந்ததெனப் பார்மனைடிசு ஒப்புகொள்ளவில்லை யென்பதை அரித்தோதில் நன்கு உணர்ந்திருந்தார்; ஆனல் பார்மனைடிசுவின் கவிதையின் இரண்டாவது பகுதியிற் காணப்பட்ட அண்டவியற் கருத்துக்களை அவரது அண்டவியற் கருத்துகள எனவே குறிப்பிடுவது இயற்கையான முறையாகத் தோன்றி "மக்கள்" நம்பிக்கைகள்

1. *Greek Thinkers*, Vol. i. p. 180 Sqq.

யிருக்க வேண்டும். அவர் கூறுவதை நேரே கேட்டுக் கொண்டிருந்தவர்கள் அக்கூற்றின் பொருளை உணர்ந்து கொண்டிருப்பார்கள். எவ்வாறாயினும், பார்மீனிடிசு தமது கவிதையின் இரண்டாவது பகுதியில் "பலரது" நம்பிக்கைகளையே தர விரும்பினர் என்பதே அக்காலத்து அரித்தோதிலது குழுவினரான அதெனியரிடையே வழங்கிய கருத்துமெனக. தியோபிறசுத்தோசும் இவ்வாறே கூறுகிறார். இவ்விரண்டாவது பகுதியிலுள்ள அண்டவியற் கருத்துக்கள் யாவும் முற்றிலும் தவறுனவை எனப் பார்மீனிடிசு தானும் உணர்ந்திருந்தார் என அலெக்சாந்தர் கூறுகிறார். மற்றைய கருத்து, "உண்மையின வழி" சிந்தனைக்குரிய உலகு பற்றிய வருணனையெனவும், "நம்பிக்கையின் வழி" புலனைகள் தரு உலகுபற்றிய வருணனை எனவும் கருதிய நவபபிளேட்டோ தரிசனவாதிகளினது, குறிப்பாக சிம்பிளிசியசுவின் கருத்தாகும். கொம்பர்சு பார்மீனிடிசுவின் இரண்டாவது பகுதிகும் கானறுவின் கொள்கைக்குமிடையே ஒவமை காண முனைந்தது எவவளவிறகுக் காலவழுவாகுமோ அவவளவிறகுச் சிம்பிளிசியசுவின கருத்தும் காலவழுவாகுமெனலாம். தான் தரும (அண்டவியற்) கொள்கையில் சிறிதேனும் உண்மையில்லையெனப் பார்மீனிடிசுவே திட்டவட்டமாகக கூறியுளளார். அன்றியும் "இறப்புளோரான மக்கள்"து நம்பிக்கைகளையே தான் தருவதாகவும் அவர் கூறியுள்ளார். இதனாலேயே இக்கொள்கைகள் "பலரது" கொள்கைகள் எனத் தியோபிறசுத்தோசு கூறினார்.

தியோபிறசுதோசுவினது விளக்கம், சிம்பிளிசியசுவினது விளக்கத்தை விடச் சிறந்ததே யெனினும், ஏறறுக்கொளளக் கூடியவொன்றல்ல. பார்மீனிடிசுவாற் றரப்பட்டது போனற விரிவான இருமைவாதக் கருததொன்றைப் "பலர்" (சாதாரண மக்கள்) நம்பியிருப்பார்கள் எனக் கூறுவது ஒருபோதும் பொருந்தாது. அதே நேரத்தில், சாதாரண மக்களின் நம்பிக்கைகள் எவவாறு ஒழுங்குபடுத்தப்படலாம் எனக் காட்டும் பொருட்டுப் பார்மீனிடிசு இவறறைக் கூறினரென்பதும் மிகவும் செயற்கையானவோர் கருதுகோளாகும். தமக்குச் சற்றும பழக்கமில்லாதவொரு முறையிற் றமது கொள்கைகள் தரப்படும் போது, அதனிலுள்ள பிழைகள் தமது பிழைகளே யெனச் சாதாரணமக்கள் கண்டுகொள்வார்கள் எனக் கொள்வது சிறிதும் பொருந்தாது. நாம் பார்த்த விளக்கங்கள் யாவற்றிலும் கொஞ்சமேனும் பொருத்தமில்லாத விளக்கம் இதுவேயெனலாம். ஆனால் இவ்விளக்கத்தை நம்புபவர்கள் இனனமும் உளராதலால், இவை யாவறறையும் கூறுபவள் ஒரு தேவதை யென்னும் காரணத்தினாலேயே, இரண்டாம் பகுதியிலுள்ள

கருத்துக்கள், "மக்களது நம்பிக்கைகள்" எனக் குறிப்பிடப் பட்டன எனபதைச் சுட்டிக்காட்டுதல அவசியமாகிறது. மேலும் இருவகையான ஆராய்ச்சிகளைப் பார்மனிடிசு, ஏற்கக் கூடாதவை யெனகிறார் எனபதையும கவனித்தல வேண்டும். இவற்றுள் "மக்களது வழி" எனத் திட்டவட்டமாக வருணிக்கப்பட்டி ருக்கும் இரண்டாவது வழி, எரக்ளீட்டசுவின் கொள்கையா யிருத்தல் வேண்டும. ஆகவே மற்றைய வழியும், அக்காலத் தில வழஙகிய வேறேர் குழுவினரது கொள்கையாய இருத்தல வேண்டும். ஆனால் பைதாகரசவாதத்தைத் தவிர்த்து, அக்கா லத்து வழஙகிய வேறு முக்கிய மரபெதனையும் காண்டல அரிது. பாமனிடிசுவின் கவிதையின் இரணடாவது பகுதியில் பைதாகரச கருத்துக்கள உளளன எனபது இபோது யாவ ராலும் ஒப்புக்கொள்ளபபடுகிறது. ஆகவே இப்பகுதியிலுளள அண்டவியற் கருத்துக்கள் யாவும் யாரிடமிருநது பெறப்பட்டன வென்பது திடவட்டமாகத் தெரியாதவரையில், இவையும் பைதா கரசவாதிகளிடமிருந்தே பெறபபடடன என ஏற்றுக்கொளள வேண்டியதே. இரண்டாவது வழியில ஆராய்ச்சி செய்யலாகாது எனக கூறுமிடத்தைத் தவிர்தது வேறு எஙகாயினும் பாமனி டிசு எரக்ளீட்டசுவைப பற்றிக் குறிபபிட்டிருப்பதாகத தெரிய வில்லை. உண்மையில் சிந்திக்கப்படக்கூடியனவான வழிகள் இரண்டேயுளவெனவும் அவறறை ஒனறு சேர்ப்பதறகு எரக் ளீட்டசு செய்த முயறசி அவமே எனவும் பொருள்படுமாறு அவர் நாம் குறிப்பிட்ட பகுதியில் எழுதியுள்ளார். எவ்வா றாயினும் அக்காலததில் இததாலியில வாழ்ந்த மெய்யிய லாளர் யாவருள்ளும் பைதாகரசவாதிகளே பார்மனிடிசுவுக்கு முக்கிய எதிரிகளாயிருநதனராதலால் அவர்களது கொள்கை கள் பறறித் தான என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார் எனக் கட்டாயம் பார்மனிடிசு குறிப்பிட்டிருப்பார் என நாம் எதிர்பார்க்கலாம.

ஆயினும் மூற்றிலும் பிழையானவை யெனத் தாமே உணர்ந் திருந்த இக்கருத்துக்களை அறுசீரடிப் பாடல்களிற் றரப்படக் கூடிய தகுதியுடையனவாக இவர் கருதியதற்குக் காரணம் என்னவென்பது இன்னமும் தெளிவாயில்லை. பார்மனிடிசு, தானும் முன்பு ஓர் பைதாகரசவாதியாயிருந்தார் என்பதையும், இக்கவிதையின்படி அவர் துறப்பவை, அவர் முன்பு ஏற்றுக் கொண்டிருந்த கொள்கைகளையே என்பதையும் நாம் இங்கு நினைவுகூரல் நன்மைபயக்கும். தான் இருளிலிருந்து, ஒளி யுள்ள இடத்திற்கு வந்ததாக, பார்மனிடிசு தனது ஆரம்ப கவிதைகளிற் றெளிவாகக் கூறுகிறார். அத்தகைய சநதர்ப் பங்களில், மனிதர்கள் தமது பழையகொள்கைகள் எவ்வ

கையிற் றவருனவை என விளக்கமுற்படுவது வழக்கமே. "ஒருவன் எவ்வாறு யாவற்றிறகும் ஊடாக நோக்கி, உள்ள னபோற் தோன்றுவனவறறை மதிப்பிட முடியும்" எனபதை அறிதற்கு வேண்டிய நம்பிக்கைகளையும் தெரிந்து கொள்ள வேண்டுமென அப்பெண் தெய்வம் அவருக்குக் கூறுகிறது. இதைப் பறறி மேலும் ஓர் குறிப்பு வேறோரிடத்திற் காணப்படு கிறது. "மாந்தர்களது கொள்கைகள யாவறறுக்கும் அவர் ஈடுகொடுக்கவேண்டுமாதலால" அவர் அவாகளது நம்பிக்கைகளை அறிதல வேண்டும் (பகுதி 8). பைதாகரச கொள்கைகள் அக் காலத்தில் வாய்மொழியாகவே வழஙகி வந்தன என்பதை மனதிற கொள்வோமானால், இக்குறிப்பின் பொருளை நாம் உணர்ந்து கொள்ளலாம். பைதாகரசவாதத்திற்கு எதிரான மரபொனறைப் பார்மனிடிசு ஆரம்பிததாராகையால், அவரது சீடர்களை, அவர்கள் எதிர்க்கவேண்டிய கொள்கையினும் பயிற் றுதல அவசியமாகியது. அவர்கள் பைதாகரசவாதத்தை அறி யாது, அதனைத் தர்க்கரீதியாகக் கண்டித்தொதுக்குவது சாத்தி தியமாகாதாதலால, பார்மனிடிசு அவாகளுக்குப் பைதாகரசம் பற்றிய அறிவினையூட்டுதல் அவசியமாகிறறு.

இருமைவாத அண்டவியல

91. பார்மனிடிசுவின் கவிதையின் இரண்டாவது பகுதியிற் றரப்பட்டுள்ள கருத்துக்கள், உண்மையில், அகாலதது வழங் கிய பைதாகரச அண்டவியற் கருத்துக்களே யென்பது தருக்க ரீதியாக நிறுவப்படக்கூடிய வொனறல்லவாயினும், இவ்வெண் ணம் சரியாகவிருத்தல் வேணடு மெனபதை ஓரளவுக்குக காட் டுதல் கூடும். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதிவரையும் பைதாகரசவாதம் அடைந்த மாறறஙகள் பற்றிய வரலாறு முழுவதும், ஊகங்களின் அடிப்படையில் அமைந்ததே. ஆனால் பார்மனிடிசுவின் கவிதைகளிலே, உலகு பறறிய அவரது கொள் கையோடு சிறிதும் தொடர்பற்றனவும், பினனைப் பைதாகரசவா தத்திற் காணப்படுவனவுமான கருத்துக்களைக் கண்டால், அவை ஆதி பைதாகரசவாதிகளிடமிருந்து பெறப்பட்ட கருததுக்களே யென அனுமானிப்பது பொருந்தும். மேலும் இக்கருத் துகளில் எவையேனும் பழைய அயோனிய அண்டவியற் கருத் துக்களின் விருத்திகள் எனக் கணடோமாயின், அவை ஆதி பைதாகரசவாதிகளின் கருத்துக்களே யென்பது மேலும் உறுதிப்படுத்தபபடும. பைதாகரசு சாமோசு நாட்டிலிருந்து வந் தாரெனவும் உண்மையில் அவரது சுயசிநதனைத் திறன காணப் பட்டது அவரது அணடவியற் கொள்கைகளில்லல வெனவும் நாம் முன்பு கண்டோம். உலகு சுவாசிக்கிறதெனபது அனக் சிமினிசுவிடமிருந்து பெறப்பட்ட கருத்தென முனபு சுட்டிக்காட்டப் பட்டது (பிரிவு 53); அனக்சிமாந்தரது கொள்கைகளின் சாயை

களும் பைதாகரசுவின அண்டவியலிற காணப்பட்டால் அதை யிட்டு வியப்படைவதற்கில்லை. நாம் இங்கு அரித்தோதிலிட மிருந்து பெறக்கூடிய கூறறுக்களே மடடுமே நம்பியிருந்தால பைதாகரச கொள்கைகளே பார்மனேடிசுவின் இரண்டாவது பகு தியிற றரப்படடுள்ளவை என நிரூபிப்பது மிகக் கடினமாயிருக் கும் ; ஆனால் வழக்கமபோல அவரது கூறறுக்களே மிகவும் கவனமாக ஆராய்தல் அவசியம். சூடும குளிருமே பாமனே டிசுவின் இரு மூலகங்கள் என அவர் முதலிற கூறுகிறார். பார்மனேடிசு குறிப்பிடும தீ சூடானதாதலால், அதற்கு எதிரான குணங்கள் யாவறறையும் கொணடுள்ள மற்ற "உருவம்" குளிர் என்பது தருக்க ரீதியாகப் பெறப்படுகிறதா தலால, இதைப் பொறுததவரை அரிததோதில் கூறுவது சரியே. மைலீசியர்கள, பாரமபரியமாகக் குறிபபிட்ட "முரண் பாடு"களே இவை. குளிர், சூடு எனும் இம்முரண்பாடுகளே, அரித்தோதில் தீ, நிலம் எனும் இரண்டோடும வேறுபடாதன போல ஒன்றுகக குறிப்பிடுவது தவறுன கற்பிதங்களுக்கு இட மளிக்கவல்ல தெனினும, தியோபிறசுத்தோசும், அரித்தோதி திலப் போலவே இவ்விரு முரண்பாடடிணைகளையும் வேறறுமை யின்றிக் கண்டிருக்கினறனரென்க. பாமனேடிசுவின கவிதையை நேரில் வாசிததவரான (பிரிவு 85) சிம்பிளிசியசு தீயையும் நிலத்தையும் குறிபபிட்டபின "அல்லது ஒளியும் இருளும" எனல அதிக பொருத்தமுடையது என்கிறார். இது கவ னித்தறகுரியது. இறுதியாக அரித்தோதில், கவிதையின் முதற் பகுதியில், "இலலாத" தெனக் குறிபபிடப்படுவதும் திண்மையான மூலகமும் ஒனறேயெனக் கொள்வதோடு, அது நிலமெனும் கருத்துப பொருந்தாதெனக. ஆனால், "பெய ரிட்டழைக்கப்பட்டிருக்கக் கூடாததான இரண்டாவது "உருவம" உண்மையில் பைதாகரச வளி அல்லது வெற்றிடம் எனக கொள் வோமாயின், "இல்லாததெனபது" அதுவே யெனனும் அரித்தோதிலினது கூற்றுப் பொருளுடையதாகிறது. இவ்வாறு கொண்டால, திண்மையான மூலகம என்பது நிலமே என்னும் கருத்தை எறக மறுப்பதற்கு நியாயமுண்டெனலாம். இவ்வி ரண்டையும் ஒனறெனக் கருதும் வழக்கம் எவ்வாறு ஆரம் பித்தென்பதைத் நாம் பின்னர் காண்போம்[1]. சூடே நிமித்த காரணமெனவும், குளிர் ஆதி அலலது செயற்படாத காரண மெனவும் தியோபிறசுததோசு மேலும் கூறுவதை நாம் வரலாற்று ரீதியானதென எறகவேண்டியதில்லை.

1. அத். 7, 147 ஆம் பிரிவின் கீழ்க் காண்க.

பார்மேனிடிசுவின் கவிதையை நேரில் வாசித்தறிந்தவரான சிம்பிளிசியசு, தீயும் நிலமும் என்பதற்குப் பதிலாக ஒளியும் இருளும் எனும் முரண்பாட்டிணையை தந்து அரித்தோதிலேத் திருத்துகிறார் எனக் கணடோம். சிம்பிளிசியசு மேறகோள்களாகத் தரும் பகுதிகளும் அவரது கருத்துக்குப் போதிய ஆதாரங்களாயமைகினறன. பாமேனிடிசுவும் இவற்றுள் ஒரு வடிவத்தினை ஒளி, தழல், தீ எனும் சொற்களாலும் மற்ற வடிவத்தினை இரவு எனும் சொல்லாலும் அழைக்கிறார். இனி இவ்விரண்டு உருவங்களையும பைதாகரசுவினது எல்லை, வரம் பறறது என்பனவாகக் கொள்ளலாமோ வெனபதே நாம் ஆராய வேண்டியதாகும். உலகம் சுவாசிக்கிறது எனும் கருத்துப் பைதாகரசவாதத்தில் முதலிலிருநது ஓர் அம்சமாயிருந்தது எனக கொளவதறகுப் போதிய நியாயமுண்டென நாம் முன்பே (பிரிவு 58) கண்டோம். வரையறையற்றதான இவ்வுலக மூச்சே இருள் எனக் கூறுவதில் எவ்வகையான சிரமமுமில்லையென லாம். மேலும் சிம்பிளிசியசுவாற குறிப்பிடப்பட்ட இவ்விருள் பைதாகரசுவினது வரம்பறறதுவே எனக் கூறுவதறகுப போதிய நியாயமுண்டு. "வளி" அல்லது பனி இருண்ட மூலகமெனவே எப்போதும் கருதப்பட்டு வந்தது[2]. தெளிவற்றதான இருளுக்குத் தெளிவான வடிவத்தையளிப்பது தீயல்லது ஒளியே, இபபாசோசு தீக்குப் பெருமளவு முக்கியததுவம் கொடுத்தமைக்கு இதுவே காரணமாயிருக்கலாம். ஆகவே, எல்லை, வரம் பறறது எனும் பைதாகரச பிரிவு (இதனைப் பற்றி நாம் பின்னர் ஆராய்வோம். (அத். 7) விருத்தியறறதான இம்முறையிலேயே தோன்றியிருக்க வேண்டுமென நாம் முடிவு செய்யலாம். ஆனால் இதற்கு மாறுக வேறு சில ஆசிரியர்கள் கொணடுள்ள வாறு, இருளே எல்லையெனவும் ஒளியே வரம்பற்றதெனவும் நாமும் முடிவு செய்வோமானால் விலக்க முடியாத சிக்கல்கள் பலவற்றுக்குள்ளாவோம்.

வானசோதிகள

92. கவிதையின இரண்டாவது பகுதியிற் றரப்பட்டிருக்கும் பொதுவான அண்டவியற் கொள்கையை இனி நாம் நோக்குதல் பொருந்தும. எமக்குக் கிடைத்துள்ள பகுதிகள் மிகக் குறை வானவையே என்பதுடன், இவை பற்றித் தொகுப்பாசிரியர்கள் கூறுவனவற்றுக்குப் பொருள் காண்பதும் மிகவும் சிரமமாயுளளதெனக ; ஆனால் இங்கும் நாம் காண்பவை பைதாகரச

[2]. திண்மையான மூலகம எனபதும் "வளி"யும் ஒனறே எனும் கருத்து (Plut) *Strom.*fr. 5 (Dox. p. 581) இல் உளது. வளியும் "பனி, இருள்" எனபனவும் ஒன்றே எனும் கருதது அத. 1 பிரிவு 27, அத. 5 பிரிவு 107 ஆகியவறறுடன ஒப்பிடுக. இவ்விரண்டாவது உவமையைப் பிளேட்டோ பைதாகரசவாதியின் மூலமே வெளியிடுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாதத்தைச் சோநத கருததுக்களே யென்பதைக் காட்டுவதற்குப் போதிய ஆதாரங்களுள. ஈத்தியோசு இதுபற்றிக் கூறுவதாவது:

ஒனறுக்கொன்று குறுக்காகச் செல்வனவும், ஒன்றையொன்று சுற்றியுள்ளனவுமான வளையங்களால முறையே, ஐதான மூலகம், திண்மையான மூலகம் எனபன அமைந்திருந்தன வென வும் இவறறிற்கிடையே ஒளியாலும் இருளாலும் ஆன கலப்பு வளையங்கள் இருநதனவெனவும பாமனிடிசு கூறினார். இவை யாவற்றையும் சூழ்ந்திருப்பது சுவர் போலக் கடினமானவோர் பொருளெனவும் அதறகுக் கீழே ஓர் தீவளையும் உளதெனவும் அவர் கருதினர். வளையங்கள் யாவற்றுகும் நடுவே யிருப்பதும் ஓர் திடபபொருளே. இதுவும் ஓர் தீவளையத்தினாற் சூழப் பட்டிருக்கிறது. கலப்பு வளையங்களின உள்வட்டமே, எனையவை யாவும் ஆவதறகும் இயங்குவதறகும் காரணமாயிருககிறது. இதனையே அவா "அவற்றின வழியைக் காட்டும் தேவதை" எனவும, "இனறியமையா விதி" எனவும், "பால்வரைமுதல்வி" எனவும் அழைககிறார்.—Aet. ii. 7. I. ii. 7 (R. P. 126).

93. இஙகு குறிபபிடப்படும் "வளையங்கள்" எனபனவற்றைக் கோளங்கள எனக் கருதுவது சிறிதும் பொருந்தாது. ஈத்தியோசு தரும் கிரேக்க சொல்லிற்கு விளிம்பு எனவோ, ஓரவட்டம் எனவோ அலலது அதனைப போனற வேறு எவ்வகையிலும் பொருள கொள்ளலாம். ஆனால் அச்சொல கோளம் எனும் பொருளில் உபயோகிகபபட்டிருக்கலாம் என நம்புவதறகே யிடமிலலை. அனறியும எல்லா உச்சிகளையும சூழவுள்ள திடப் பொருளாலான வட்டம் ஓர் கோளமாயிருக்கலாம் எனபதும் பொருந்துவதாயில்லை. அப்படியாயின சுவர் எனும் உவமை கொஞ்சமேனும் பொருத்தமுடையதாயிருக்காது. இங்கு நாம் காண்பது அனகசிமாந்தர் குறிப்பிட்ட "சில்லுகள்" போன்ற பொருள்களே யெனத் தோன்றுகிறது. பைதாகரசு தமது அணடவியற கருததை அனக்சிமாந்தரிடமிருந்தே பெற்றார் எனக் கருதவும் போதிய நியாயமுண்டு. அததோடு, பைதாகரச வாதிகள் வானசோதிகளை இவ்வாறே கருதினர் என்பதறகும் போதிய ஆதாரஙகளில்லாமலில்லை. பைதாகரசவாதத்தின் பொதுவியல்பைக் கொண்டதான பிளேடோவினது "ஏர்" எனும் கதையில் கோளங்கள பற்றியே குறிப்பிடப்படவில்லை. அடுக்குப் பெட்டிகள் போல, ஒன்றனுள ஒன்றுகப் பொருந்தி யிருக்கும் ஒரு மையஙக கொண்ட புரிகளின் "சொண்டுகள்" பற்றியே அதிற் கூறப்பட்டிருக்கிறது. திமாயசுவிலும் ஒனறுக் கொன்று கோணமிட்டுக் குறுக்காகச் செல்லும் வளையங்கள் அல்லது துண்டுகள் பற்றிக் குறிப்புளதே யொழிய, கோளங்கள் பற்றிய குறிப்பெதுவும் இல்லை யெனலாம். இறுதியாகப பைதா

க்ரச செல்வாக்கில் எழுதப்பட்டது போற காணப்படும் " எளிசுவை வழிபடும்பாடல் " என்பதிலும், கிரகத்தின ஒழுக்கைக் குறிப் பிடுவதறகு உபயோகிக்கப்பட்ட சொல் " விளிம்புவட்டம் " எனும் பொருள் கொள்ளக்கூடிய வொனறுகவே காணப்படுகிறது.

தோற்ற நிகழ்ச்சிகளை முறறுக ஒதுக்காது விளக்கும்பொருட் டென இயூடெக்சோசு[1] தநத கேத்திரகணித ரீதியான அமைப்பு க்களை, அரித்தோதில் உண்மையில் உள்ள பொருள்களாக மாறறும்வரைககும், வானகோளங்கள் உளவென யாரும் கருதி யதாக ஆதாரம் எதுவுமிலலை. ஏனெனில இக்காலத்தில, கோள ங்களின உதவியின்றியே எளிய முறையில விளக்கப்பட முடி யாத எதனையும் விளக்குவதற்குக் கோளங்கள் பயனபட்டிருக்க முடியாது.

இனி, இவ்வளையங்கள ஒனறையொனறு சுறறியிருக்கின்றன அல்லது ஒனறின மீது ஒனறுக மடிக்கப்பட்டிருக்கினறனவென வும், இவை ஐதானதும் அடர்த்தியானதுமான மூலகத்தால் ஆனவை யெனறும் எமக்குக் கூறப்பட்டுள்ளது. இவறறிற் கிடையே, ஒளியினாலும் இருளினாலும் ஆன கலப்பு வளையங்கள் உள்ளன வெனவும் கூறப்படுகிறது. ஒளி, இருள என்பவை உண்மையில் ஐதும் திண்மையுமே யாதலால், இஙகு ஏதோ வொருமயக்கம் உண்டுபோலத் தோன்றுகிறது. தீயினாலான வளையங்களுக்கிடையே ஓரளவுக்குத் தீயையும் கொண்ட இரவின வளையங்கள் காணப்பட்டன எனவும் பொருள கொள்ளப்படக் கூடிய 12 ஆம் பகுதியைத் தவிர்த்து வேறு எந்த ஆதாரமும் இக்கூற்றுக்களுக்குண்டோ வெனபதும் சந்தேகத்திற்கிடமானதே. அது சரியாயிருக்கலாம் ; ஆனால், ஒடுங்கிய வட்டங்கள், இரவின் அகனற வட்டங்களினாற் சூழப்பட்டிருக்கின்றனவெனவும், இவற் றுள் ஒவ்வொன்றினது மத்தியிலும் வேகமாகப் பாயும் தீயுள தெனவும் இப்பகுதிக்குப் பொருள் காண்பதே, மிகவும் இயல் பானதென எனககுப் படுகிறது. ஒடுங்கிய வட்டங்கள் கலப்பற்ற தீயினை யுடையவையாய் இருககின்றன என்பதே இதற்குப் பொரு ளாகுமாதலால், இது அனக்சிமாந்தரது " சில்லுகள் " பற்றிய வோர் செம்மையான வருணனையென அழைக்கப்படலாம்.

பெண் தெய்வம்

94. " எல்லாவற்றுக்கும் நடுவே, யாவற்றையும் அவற்றின் வழியே செலுத்துபவளான பெண்தெய்வம் உள்ளாள் " எனப் பார்மனைடிசு கூறுகிறார். " கலப்பு வட்டங்களின் நடுவே " என ஈததியோசு இதற்குப் பொருள் கொள்கிறார். ஆனால் சிம்பிளி யசு, எலலா வளையங்களுக்கும் நடுவே அதாவது உலகின் நடுவே எனப் பொருள் கொள்கிறார். இவர்கள் இருவருக்குமே

1. இயூடெகசோசுவின ஒருமைக கோளங்கள பற்றி : Heath, p. 193 *sqq.*

பார்மனிடிசுவின் வார்த்தைகளைத் தவிர்த்து வேறு ஆதாரம் எதாயினும் இருந்தது எனக கொள்ள இடமில்லை. பாமனி டிசுவின் சொற்களோ மிகவும் மயக்கத்தைத் தரக்கூடியன வாயக் காணப்படுகினறன. பைதாகரச எசுத்தியா அல்லது மத்திய தெய்வமே இப பெண்தெய்வமெனச் சிம்பிளிசியசு கருதினுரெனபது சிமபிளிசியசு கையாளும் வார்த்தைகளிலிரு ந்து புலப்படுகிறது. ஆனால், பார்மனிடிசு பூமி உருண்டை யானதெனவும் உலகின மததியிலுள்ளதெனவும் கூறினுரெனத் தியோபிறசுத்தோசு நனகு அறிந்திருநதாராதலால், அவரால் சிம்பிளிசியசு கூறியதைப்போலக் கூற முடியாதிருந்தது. எல்லா வளையங்களுக்கும் நடுவேயிருந்தது திடபதார்ததமாயிருந்தது என இப்பகுதியிலேயே கூறபபடடுள்ளது. மேலும் தியோபிற சுத்தோசு தரும் தகவலகளை நோககும்போது மத்திய தீயே பார்மனிடிசுவின பெண்தெய்வம் எனக கூறுவது சிறிதும் இய லாததாகின்றது. மேலுமம இவ்வாறு கொள்வதாயின **எல்லா** வளையங்களுக்கும் மத்தியில் உள்ளது திடப்பொருள் எனவும் அதன கீழே ஓர் தீ வளையம் உளளதெனவும் கூறமுடியாது. அத்துடன் திடப்பொருளாலானதும் கோளவடிவினதுமான பூமி யின மத்தியில் அப் பெண்தெய்வமுள்ளாள் எனக் கூறுவதும் சிறிதும் பொருத்தமுடையதாயில்லை.

இத்தேவதை **" அனங்கே "** எனவும் **" பால்வரை முதலவி "** எனவும் அழைகபபட்டாள் என ஈததியோசு மேலும் கூறு கிறார். அவள் " யாவறறிறகும் வழிகாடடுகிறாள் " என, அதா வது வான வளையங்களின இயகக்ங்களைக் கடடுப்படுத்துகிறாள் என நாம் ஏலவே அறிந்தோம. அவள் ஆனமாக்களை ஒளி யுளள உலகிலிருநது, கண்ணுக்குத் தெரியாத உலகிறகும், கண்ணுக்குத் தெரியாத உலகிலிருநது ஒளியினிடத்திறகும் மாறி மாறி அனுப்புகிறாள எனச் சிமபிளிசியசு மேலும் கூறுகிறார். துரதிட்டவசமாக அவர் இது பறறிய மேற்கோள எதுவும் தரவில்லை. " ஏர் " பறறிய கதையிற் கூறப்படுவதும் இதே யாதலால, இஙகு நாம் காண்பதுவும் பைதாகரச கருத்துப் போலவே தோனறுகிறது. 10 ஆவது பகுதியில், அனங்கே **ஏவ்** வாறு வானஙகளுக்கு உடுக்களை அவறறின மாறு ஒழுக்குகளி லிருந்து வழுவாது செய்யுமாறு பணித்தாள் என்பது பற்றி யும் 12 ஆவது பகுதியில் ஆண பெண சேர்க்கைக்கும், பிறப்புக் கும் அவளே காரணமெனவும கூறபபட்டிருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. இறுதியாக, மறறக் கடவுளர்கள் யாவருக் கும் முன்னதாக அவள் ஈரோசுவையே படைத்தாள் என்பது 13 ஆவது பகுதியிற் றரப்பட்டுளளது. ஆகவே இதனைத் தொடர் ந்து, அனங்கேயின ஓர் பழைய வாக்கு அல்லது ஆணையே

கடவுளர்கள் வீழ்ச்சியடைந்து, பிறவி பிறவியாக மாறி மாறி அவதாரமெடுப்பதறகுக காரணமென எம்பிடோக்கிளிசு கூறுவதைக் காண்போம்[1].

ஏர்பற்றிய கதையில் அனங்கே எங்குள்ளாள் என அறிந்தோமானால், உலகில் இப்பெண்தெய்வத்திற்கு எவ்விடம் அளிக்கப்படுகிறதென்பதை நாம் மேலும் திட்டவட்டமாக அறிந்து கொள்ளலாம். ஆனால் சிக்கல் நிறைந்ததான அவ்வினாவை எழுப்பாமலே, தியோபிறசுதோசுவின்படி அவள பூமிக்கும் வானத்திற்கும் இடையேயுள்ள ஓர் நீலையிலிருந்தாள் என ஓரளவு நம்பிக்கையோடு நாம் கூறலாம். இவவிடயத்தைப் பொறுததவரையில், கலப்பு வலயங்கள் உள்ளனவென நாம் நம்புகிறோமா அலலவா என்பது இஙகு வேண்டியதிலலை ; எனெனில, அவள் கலப்பு வலயங்களின நடுவே இருந்தாள் எனும் கூற்றிலிருநதும், அவள பூமிக்கும் வானத்துக்குமிடையே இருந்தாள் என்று ஐயதிற்கிடமினறி ஊகிக்க முடிகிறது. சிசிரோவினது, அதிக தெளிவற்ற பகுதியொன்றில், பெண் தெய்வம், இவ்வலயங்களிலொன்றே யெனக் கூறப்பட்டிருக் கிறது. மேலும், பால்வழி மண்டலத்திலிருந்தே, சிலலுகள் அல்லது வலயங்கள பற்றிய இககொளகை முழுவதுமே ஆரம் பித்திருக்க வேண்டும். ஆகவே சூரியனுக்கும் சந்திரனுககு மிடையேயுள்ள வோர் வலயமாகவே நாம் பால்வழி மண் டலத்தைக் கருதுதல் வேணடும். 11 ஆவது பகுதியில் மிகவும் மூக்கியமுடையவொன்று போல, பால்வழிமண்டலம் குறிப்பிடப் படுவதோடும் இது நன்கு பொருந்துகிறதெனலாம். ஏன விவ ரங்களைப் பற்றித் திட்டவட்டமான அபிப்பிராயமெதுவும் கொள் ளாதிருத்தல நலம். ஆனால் விடிவெள்ளியும் மாலைவெளளி யும் ஒன்றே யெனக் கண்டுபிடித்தவர் பைதாகரசுவெனச் சில ரும் பார்மனைடிசுவே யென வேறு சிலரும் கருதுகிறார்களென் பதைக் கவனிக்கலாம்.

இவை யாவற்றையும் விட, ஏனைக் கடவுளர் எவ்வாறு தோன் றினரெனவும் எவ்வாறு வீழ்ச்சியடைந்தனரெனவும் பார்மனை டிசு தொடர்ந்து வருணித்துச் சென்றார் என்பதில் ஐயமில்லை. இவை ஓபிசக் கருத்துக்கள் என நாம் நன்கறிவோம். இவை பைதாகரசவாதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க லாம். எம்பிடோக்கிளிசுவைப் பற்றி ஆராய்கையில் நாம் இதுபற்றி மீண்டும் காண்போம். பிளேட்டோவினது **சிம்போசியத்தில்** அகாதன் என்பான், கடவுளர்களது பண்டைய கொடுஞ்செயல் கள் பற்றிக் கூறுவோரென எசியொட்டு, பார்மனைடிசு ஆகிய

எம்பிடோக்கிளிசு, பகுதி 115.

இருவரது பெயர்களையும் தருகிறான். பைதாகரசவாதிகளின் இறையியற் கருத்துக்களையே பார்மனிடிசுவும் கொண்டிருந்தார் என்பது உண்மையானால், நாம் அவரிடமிருந்து எதிர்பார்க்க வேண்டியதும் இத்தகைய வரலாறுகளையே. ஆனால் உண்மையின் வழியின் நோக்கம் பற்றித் தரப்பட்டுள்ள வேறு விளக்கங்களால்[1] இதனை விளக்க முயலுவது வீண் முயற்சி போலத் தோன்றுகிறது. இத்தகைய விடயங்கள் இறையியல பற்றிய கற்பனைகளினபாற்பட்டவையே யொழிய ''பலரது'' நம்பிக்கைகளின்பாறபட்டவை அல்ல. இனி, உலகம் பற்றிசசாதாரணமக்கள் கொணடிருந்த கருத்துக்கள நனகு முறைப படுத்தப்பட்டால், எவ்வாறிருக்கு மென்பதைக காட்டுதற்காகப் பாமனிடிசு இக்கதைகளைத தாமே அமைத்தார் என்பதையும் நம்பக்கூடியதாக நாம் ஏறறுக்கொள்ள முடியாது. ஆகவே இவ்விளக்கங்களில் ஒன்றை ஏற்றுககொள்வதாயின், அதுகவிதையில் கணிசமான பகுதியாயிருந்ததை விளக்கக் கூடியதாயிருந்திருத்தல் அவசியமென நான் எணணுகிறேன்.

95. தனது காலத்தே வாழ்ந்தோரது கருத்துக்களை வருணிக் உடலியல் கையில், உடலியல் சம்பந்தமான விடயங்கள் பறறியும் பாமனிடிசு பெருமளவு கூற நேர்ந்தது எனபது எமக்குக் கிடைத்துள்ள பகுதிகளைப் பார்க்கும்போது தெரிகிறது. எனைய யாவற்றையும் போல மனிதன் சூடு,குளிர் என்னும் இரணடினலும் ஆனவனுயிருந்தான். சூடு நீக்கப்படடபோது மரணம் நேர்ந்தது. சந்ததி விருத்தி பற்றியும் நூதனமான கருத்துக்கள் சில தரப்பட்டன. முதலாவதாக, பெண்கள் இடது பக்கத்திலிருந்தும் ஆண்கள் வலது பக்கத்திலிருந்தும் தோன்றினர். பெண்கள சூடதிகமானவர்களாயும் ஆண்கள குளிரதிகமானவர்களாயுமிருந்தனர். எம்பிடோக்கிளிசு இக்கருத்தை மறுத்தலைக்காண்க. மனிதரில், சூட்டுக்கும் குளிருக்குமிடையே உள்ள விகிதமே அவர்களது சிந்தனையின் தன்மையை நிர்ணயிக்கிறது. ஆதலாறறுன், சூடு முற்றுக நீங்கிய பிரதேசங்களும் குளிரையும் இருளையும் உணரும் ஆற்றல் உடையனவாய் இருக்கின்றன. இப்பகுதிகளைத் தனியே நோக்குவதன் மூலம் நாம் அதிகம் அறிய முடியாது. ஆனால் வைத்தியசாததிரத்தின் வரலாற்றேடு இவை நனகு பொருந்துவதுமட்டுமல்லாது, வைத்திய கழகங்களிலொன்றுக்கும் பைதாகரச கழகத்திற்குமிடையே நெருஙகிய தொடர்பிருந்த தென்பதையும் உணர்த்தி நிற்கின்றன. பைதாகரசவுக்குப் பின்னர், பார்மனிடிசுவுக்கு முன்னர் குரோட்டனில் வாழ்ந்த மிகவும் புகழ்பெற்ற வைத்திய

1. இவவிளகஙகளைத் 90 ஆம் பிரிவிற் காண்க.

நூலாசிரியரொருவரது பெயரையும் நாம் அறிவோம். இவரைப் பற்றி எமக்குக் கிடைத்துள்ள சில விவரங்களிலிருந்து, பார்மனிடிசு வருணிக்கும் உடலியல்பு பற்றிய கருத்துக்கள், தொடர்பற்ற சில கண்டுபிடிப்புக்களல்ல, என்பதும தேக ஆரோக்கியம் மூரண்பாடுகளின் சமநிலையேயென விளக்குவதும் செல்வாக்கு மிகுந்ததுமான ஓர் மருத்துவக கொள்கையின் வளர்ச்சியைக்காட்டும் முக்கிய கண்டுபிடிப்புக்களே அவை எனபதும் புலனாகிறது.

குரோட்டன் நகர அலுக்மையோன்

96. குரோட்டன் நகரத்தவனான அலுக்மையோன், பைதாகரசு வியோதிபனுக வாழ்ந்த காலத்தில் இளைஞனாக விருநதான் என அரிஸ்தோதில் கூறுகிறார். பிறகாலத்து எழுத்தாளர்கள் சிலர் கூறியிருப்பது போல, அவர் ஓர் பைதாகரசவாதியே என அரிஸ்தோதில் கூறவில்லை. ஆனால் எதிர்ப்புகள் பறறிய கொளகையைப் பைதாகரசவாதிகளிடமிருந்து இவர் பெற்றிருத்தல வேண்டும் அல்லது அவர்கள் இவரிடமிருந்து பெற்றிருகக வேண்டுமென அரிஸ்தோதில் சுட்டிககாட்டுகிறார். ஆயினும், இவரது நூலிலிருந்து மிக அரிதாகக் கிடைத்துள்ள பகுதிகளிலொன்றிலிருந்து, அலுக்மையோன் பைதாகரச கழகத்தோடு நெருஙகிய தொடர்பு பூணடிருந்தாரென்பது தெளிவாகினறது. அப்பகுதி பின்வருமாறு : "பெயிரித்தவுசுவின் மகனும் குரோடடன் நகரத்தவனுமான அலுக்மையோன பாதில்லோசுவைச் சேர்ந்த லியோன், புரோத்திஞ்சு என்போருக்குப் பின்வருவனவற்றைக் கூறினான். கண்ணுக்குப் புலப்படாதனவும் இறப்புள்ளனவுமான பொருட்களைப் பற்றிக் கடவுளர்கள் திடடவட்டமாக அறிவர் ; ஆனால் மனிதர் ஊகிக்கக்கூடிய வரையில்...." துரதிட்டவசமாக இககூற்று இவவாறு திடீரென முடிவடைந்துவிடுகிறது. ஆனால் நாம் இதிலிருந்து இரண்டு விடயங்களை அறிந்து கொள்கிறோம். முதலாவதாக, சிறந்த கிரேக்க மருததுவ நூலாசிரியர் யாவரிடையேயும் காணப்படட அடக்கம் அலுக்மையோனிடத்தேயும் இருந்தது ; இரண்டாவதாக அவர் தமது நூலைப் பைதாகரச கழகததின் தலைவர்களுக்குச் சமர்ப்பணம் செய்தார்.[1]

அனுபவமுறை உளவியலை ஆரம்பித்தவர் என்பதிலேயே அலுக்மையோனது முக்கியத்துவம் உண்மையிற் றங்கியுள்ளதெனலாம்.[2] மூளையே பொதுவான புலன் என அவர் கருதி

1. புரோத்திஞ்சு (அலலது புரோநதிஞ்சு) பைதாகரசுவின் மருமகன எனச் சிலராலும் மாமன் என வேறு சிலராலும் வருணிககப்பட்டுளளார். லியோன, அயாமபிளிகோசுவின அட்டவணையிற காணப்பட்ட மெற்றபோந்தியர்களில் ஒருவன.

2. இவை யாவற்றையும் பறறி Prof. Beare's, *Greek Theories of Elementary Cognition*. விவரங்களுக்கு அதனைப் பாரக.

ரூர். எம்பிடோக்ளிசும் அரித்தோதிலும், சுதோய்க்கர்களும் இதயமே மத்திய புலன் எனும் பழைய கொள்கையை மீண்டும் தழுவிக்கொண்டனராயினும், இப்போகிருத்திசும், பிளேடோவும் இவரது கொள்கையையே எறறுக்கொண்டனர். உடலே ஆராய்வதன் மூலமே அனுக்மையோன் இம்முடிவுக்கு வந்தார் என்பதைச சநதேஹிக்க எவ்வகை நியாயமுமிலலே. இவர் உடலே அறுத்துச் சோதனைகள் செய்யும் வழககத்தை உடையவராயிருந்தார் எனவும், அககாலத்தில் நரம்புகள் பற்றிக் கண்டுபிடிககப்படவிலலே யெனினும், புலனுணர்ச்சியை மூளையி லிருநது பிற பகுதிகளுககுக் கொணடு செல்லும் “சிலவழி களை” இவராற் கண்டுபிடிக்கப்பட்டன வெனவும், இவ்வழி களை அழிபபதன் மூலம் மூளைகளும் குறிபபிட்ட பகுதிகளுக்கு மிடையேயுள்ள தொடர்பை இல்லாமற் செயதல் சாததியமென இவர் கணடுபிடித்தாரெனவும் கூறுவதற்கு ஆதாரங்களுள. புல னுணர்ச்சிகளும், விளக்கத்திற்குமிடையேயுளள வேறுபாட்டை யும் இவர் தெளிவுபடுததினார். ஆயினும் இவை இரணடுக்கும் இடையே உள்ள எல்லையை இவா எவ்வாறு நிர்ணயித்தார் என்பதை அறிய எமக்கு எவ்வித வழியுமிலலே எனபது உணமையே. விசேட புலன்கள் பறறிய இவரது கொளகைகள் மிகவும் சுவையானவை. பார்வையென்பது கண்ணிலிருந்து புறப்படும் ஒருவகைக கதிர் வீச்சம் என்பதையும், கண்ணிற் பிரதிபலிக்கப்படும் ஒரு வடிவத்தால் ஏற்படுவதே பார்வை யென்பதையும் இணைத்து இவை இரண்டின் மூலமும் பார் வையை விளக்கும் முயற்சி இவரிடததே காணப்படுகிறது. இவ் வாறு இவரிடத்து எலவே காணப்படும் இக்கருத்து, கிரேக்க பார்வைக்கொள்கைகள் அனைத்திலும் காணப்படும் ஓர் அம்ச மேயன்க. வளியினை இவா வெற்றிடம் என அழைத்தாராயினும் (இது முற்றிலும் பைதாகரசுவின் செல்வாக்காலுணடான சொற் பிரயோகமே) செவிப்புலனுக்கு அது எவ்வளவு முக்கியம் என் பதை உணர்ந்திருநதார். மற்றைய புலன்களைப் பற்றி எமககுக் கிடைத்த விவரங்கள் மிகக் குறைவேயெனினும், இவ்விடயத்தை இவர் ஒழுங்காக ஆராய்ந்தார் என அவற்றிலிருந்து அனு மானிக்க முடிகிறது.

பைதாகரசுவோடு இவர் நெருங்கிய தொடர்புடையவர் என் பதை மனத்திற் கொள்ளும்போது, இவரது வானியற்கொள் கைகள் சிறிதும செப்பமறறனவாகத் தோனறுகின்றன. சூரிய னைப் பற்றி அனக்சிமினிசு வெளியிட்ட கொள்கையையும், கிரக ணங்கள்பற்றி எரக்கிளேட்டசு தந்த விளக்கத்தையும் இவர் ஏற்றுக் கொண்டாரெனக் கூறப்படுகிறது. பார்மனேடிசுவின் கவிதையின் இரண்டாம் பாகத்திலுள்ளவை பைதாகரசுவின் கருத்துக்களே

என நாம் கொண்டது உண்மையானால், பைதாகரசு இவ்விடயங்களில் மைலீசியர்களிலும் அதிகம் முனனேறியிருக்கவிலலை என்பது பெறப்படும். வானசோதிகள் பற்றிய அவரது கொள்கை இன்னமும் வளிமணடலச் சாயபுடைதாகவே இருந்தது. கிரகங்கள், வானசோதிகளது தினசரிச் சுழறசியின் திசைக்கு எதிர்த்திசையிற் றமது ஒழுகுகளில் இயஙகுகின்றன எனவும் அலுக்மையோன் கூறினர் எனப்படுகிறதென்பதும், குறிப்பிடத்தக்கது. பைதாகரசுவிடமிருந்து இவராற பெறப்பட்டதா யிருக்ககூடிய இக்கருத்து, அனக்சிமாந்தரது கொள்கையிலுள்ள குறைபாடுகளை நோக்கியபோது இயல்பாகவே தோன்றியிருக்குமெனலாம். ஆன்மாவானது அழிவறற பொருள்களைப்போல விருந்ததாதலாலும், வானசோதிகளைப் போல எப்போதும் இயங்கிக்கொண்டிருபபதாலும் அது அழிவற்றதே யெனும் இவரது வேறேர் கருத்துக்கும் இக்கருததுக்கும நெருஙகிய தொடர்புள்ளதெனலாம். பிளேட்டோ பைதாகரசவாதியான திமையோசுவைக் கூறவைக்கும், " வானமும் கிரகங்களும் எவ்வாறு சுழல்கின்றனவோ அவ்வாறு சுழலும் வட்டங்கள் ஆன்மாவிலும் உள்ளன " எனும் விநோதமான கருத்தும் இவருடையது போலவே தோன்றுகிறது. இது, மனிதன, ஆரம்பத்தை முடிவோடு இணைக்க முடியாதிருப்பதலலேயே இறக்கிறன் எனும் அவரது வேறு கூறறெனறிற்கு விளக்கமாயமையும் போலக் காணப்படுகிறது. வானசோதிகளினது ஒழுக்குவட்டங்கள் பூரணமானவையாயிருக்கின்றன. ஆனால் மனிதனது தலையில் உள்ள வட்டங்கள் தம்மைப் பூரணமாக்கிக்கொள்ள இயலாது போகலாம்.

மனித உடலில நிலவும் ஆரோக்கியம், அஙகுள்ள எதிர்ப்புக்களினிடையே நிலவும் சமவுறிமையே எனும் கொள்கையே, அனக்சிமாந்தர் போன்ற முந்திய மெய்யியலாளர்களுக்கும் இவருக்குமிடையே உள்ள தொடர்பைக் காட்டுகிறது. அதே நேரத்தில், இவருக்குப் பிந்திய மெய்யியலின் வளர்ச்சியிலும் இககொள்கை பெரும்பஙகு கொணடதெனலாம். முதலாவதாக, " மனித பொருள்களிற் பெரும்பாலானவை இரண்டாயிருந்தன" என அவர் கூறினர். சூடு குளிர், ஈரம் வறட்சி, என்பனவற்றிலும் வேண முரண்பாடுகளாலும் ஆனவனே மனிதன் என்பதே அவர் இங்கு கருதியதென்க. நோய் என்பது இவற்றுள் ஒன்று " ஆட்சி " பெறுவதே—அனக்சிமாந்தர் " அநீதி "யென அழைத்தது இதனையே—சமமான சட்டங்களோடு கூடிய சுதந்திர ஆட்சி நிறுவப்படுதலே ஆரோக்கியமெனப்படும். சிகிலிய மருத்துவக் கழகத்தினரது முக்கிய கொள்கையும் இதுவே. இனி பைதாகரச வாதத்தின் வளர்சியை இக்கொள்கையின் விளைவுகள் எவ்வாறு வளப்படுத்தின என்பதையும் நாம் ஆராய்

தல் வேண்டும். " தொனிகள் " பற்றிய கொளகையோடு, முரண் பாடுகளின் சமநிலையெனும் இக்கொளகை இணைந்தமை, பிற் கால விஞ்ஞான வளர்ச்சிக்கு மிகவும் முகியமான விளைவுகளைக் கொணர்ந்தது.

அத்தியாயம் 5

அக்கிரகாசு நகரத்து எம்பிடோக்கிளிசு

பனமை வாதம்.

97. பொருள்கள் யாவும் ஒன்றன் பல்வேறு உருவங்களே என்னும் நம்பிக்கை (ஒருமைக் கோட்பாடு), ஆதி அயோனிய சிந்தனையாளர் பலரிடையே பொதுவாக நிலவி வந்தது ; ஆனால் பார்மனிடிசுவின காலத்துக்குப் பின்னர் இந்நிலையில ஒருமாற றம் எற்படலாயிற்று. உணமையில் இருப்பது ஒரே பொருளா யின், அது பல உருவங்களைப் பெறமுடியும் என நிறுவு தல் சாததியமாகாது என்று பார்மனிடிசுவின தத்துவக் கொளகை தெளிவாகப் புலபபடுத்தியது. மாறுந்தனமையுடைய பல்வேறு பொருள்களே எமச்குக காட்டுகையில் எமது புலனகள் எமமை ஏமாறறுகினறன என அவா வாதிததார். பார்மனிடி சுவின் வாதங்கள் வலுவுள்ளனவாயும் மறுக்க முடியாதன வாயும் அமைந்திருந்தன. ஆகவே அவருக்குப் பின் வந்த மெய்யியல் சிந்தனையாளர் ஒருமைக் கோட்பாடடை முற்றுகக் கைவிடலாயினர். ஒருமைக் கோட்பாட்டில் இன்னமும் நம் பிக்கையுடையோராயிருந்த சிலர் நலனுய்வுக் கண்ணோட்ட நிலை யில் நின்று, பார்மனிடிசுவின கொள்கைக்கு முரணுக எழுந்த புதிய கொளகைகளே மறுத்து அவரது கொள்கைகளே நிறுவுவ தில் ஈடுபட்டனர். வேறு சிலர் எரக்கிளீட்டசுவின் வாதத்தைச் சற்று மிகைப்படுதது விருததி செய்யலாயினர்; வேறு சிலர் ஆதி மைலீசியர்களது கொளகை முறைகளைப் பரப்புவதற்கு முனைந்தனர் ; ஆயினும் இக்கால மெய்யியற சிந்தனையாளருள் முக்கியமானவர்கள் பன்மைவாதிகளாகவே யிருந்தனர் என்று கூறலாம். ஒருமைவாதக் கொளகையின விருத்திகுப் பினனர் சடவாதக் கருதுகோளைத் தொடர்ந்து தழுவுதல் இயலாது போயிறறெனலாம்.

எம்பிடோகிளிசுவின் காலம்

98. சிசிலியில் அகிரகாசு நகரத்தில் வாழ்ந்தவர் எம்பி டோக்கிளிசு. மெய்யியல் வரலாறறில முக்கிய இடத்தைப் பெற்றுள்ள டொரிய நாட்டவா இவர் ஒருவரே[1]. எமக்குக் கிடைத்த குறிப்புக்களில் மிகவும் நம்பிக்கையானவறறிலிருந்து இவரது தந்தையின் பெயர் மீட்டன எனத் தெரியவருகிறது. எம்பிடோக்கிளிசு என்னும் பெயராலேயே அழைக்கப்பட்ட இவ ரது பாட்டனர் 71 ஆவது ஒலிம்பிய ஆண்டில் (496–95 கி.மு.) ஒலிம்பியாவில் நடந்த குதிரைப் பந்தயத்தில் வெற்றியீட்

1. முன்னுரை இரணடாம் பிரிவைப பாரக்க.

டியவர்[1]. எம்பிடோக்கிளிசு புகழுடன வாழ்ந்த காலம் 84 ஆம் ஒலிமபிய ஆண்டென (444–43 கி.மு.) அபபொலோடரசு நிர்ண யித்துள்ளார். தெளரியை நகரம் அமைக்கப்பட்ட ஆண்டும் இது வேயாகும். இப்புதிய நகரம் அமைக்கப்பட்டுச் சிறிது காலத் திறகுள எம்பிடோக்கிளிசு அங்கு சென்றார் என 5 ஆம் நூற் றாண்டு வரலாறறுசிரியரான றெசியன் நகர கிளெளக்கசு கூறி யிருப்பது இடையோசினிசின கூற்றென்றிலிருந்து எமக் குத் தெரிய வருகிறது. ஆனால் அபபொலோடரசு கொள்வது போல எம்பிடோக்கிளிசுவிறகு அப்போது 40 வயது தானிருந் திருக்க வேணடும் என்பதை நாம் ஏறறுக்கொள்ள வேண்டி யதில்லை. உண்மையில் அப்பொலோடரசு தரும் திகதி மிகவும் பிந்தியது[2] என்று கருத இடமிருக்கிறது. அககிரகாசு நகரத்தி லிருந்து நாடு கடத்தப்படுமவரை எம்பிடோக்கிளிசு தெளரியைக் குச் செல்லவில்லையெனவும், அது நிகழ்ந்தபோது அவருக்கு 40 வயதிறகு அதிகமாக இருந்திருக்கும் எனவுமே கூறத் தோன்று கிறது. எம்பிடோகிளிசுவின் பாட்டனார் கி.மு. 496 இல் வாழ்ந் தவர் எனபதும், 472 ஆம் ஆணடில் தேரொன காலஞ்சென்ற தன பினனரும் எம்பிடோக்கிளிசு அக்கிரகாசில் வாழ்ந்து வந் தாரென்பதும், இவர் 444 ஆம் ஆணடிறகுப பின்னரே இறந் தார் என்பதுமே எமக்கு இதுவரை நிச்சயமாகத் தெரிந்த விவ ரங்கள எனக் கூறலாம்.

அரசியல்வாதி எம்பிடோக்கி ளிசு

99. தேரொனின் மரணத்தைத் தொடாந்து நடைபெற்ற அரசியற சம்பவங்களில் எம்பிடோகிளிசும் முக்கிய பங்கெடுத்துக் கொணடிருக்க வேணடும் எனபதில் ஐயமில்லை. திமாயோசு

1. இதற்கு ஏமகசு அபபொலோடரசுவின ஆதாரம இடைத்துளளது (Diog. viii. 51 52, R.P. 162) அரிதோதிலைப் பினபறறி எராதொசுதேனிசு எழுதிய ஒலிமபிய வீரா (*Olympio victors*) எனபதையே அபபொலோடரசு பினபறறியுளளார். எராகிளீட்சு, மூதத எம்பிடோகிளிசுவை ஒரு "குதிரை வளர்பபோன" என வர்ணிததுளளார். திமாயோசு தனது பதினநதாவது நூலில அவரைக குறிபபிடடுளளார். சததைரோசு இவரை இவரது பேரனெனத் தவறுகக கருதினார்.

2. டியல்சுவின "எம்பிடோகிளிசுவும் யோர்ச்சியாசுவும" எனும நூலைப் பார்க்க (*Berl. Sitzb. 1884*). அனகசகோரசு பிறநது அதிக காலமாவதற குள்ளாகவே, அதாவது கி. மு. 500 ஆம ஆணடளவிலேயே எமபிடோகிளிசு பிறநது விடடாரென (120 ஆம பிரிவில பாாக) தியோபிறசுதோசு கூறினர் (Dox. p. 477, 17). இவர பாமனிடிசுவுகுப பினனவர எனபது உறுதியாதலின, அபபொலோடரசு கூறுவதிலும பார்கக பார்மனிடிசு 15 ஆணடுகள மூததவர் எனனும பிளேடோவின கூற்றுகு இது புதியதோர ஆதாரமாகிறது. பொதுவாகத தெளரியைக காலம அபபொலோடரசுவைப் பல விடயங்களில பிழையாகக கருதும்படி செயதுவிட்டதெனக கூறலாம். தெளரியை யோடு சம்பநதபபட்டவாகளில பெரும்பாலோர (எரொடோட்சு, புறதகோரசு போன்றோர்) கி.மு. 484 ஆம ஆணடிற பிறநததாகவே கூறபபடுகிறது.

இவ்வரசியல் சம்பவங்களைப்பற்றி ஓரளவு விரிவாகக் கூறியுள்ளார். இச் சம்பவங்கள் நடந்து ஏறக்குறைய 150 ஆண்டுகளின் பின்னர் வழக்கிலிருந்தவையும் உண்மையெனக் கருதக் கூடியவையுமான வரலாற்றுக் கதைகள் சிலவற்றையும் இச்சரித்திரவாசிரியர் தந்துள்ளார். சாதாரணமாக, மக்களிடையே நிலவிவரும் பிற கதைகள்போல இவையும் சிறிது குழப்பமான வையாகவே காணப்படுகின்றன. சுவையான சம்பவங்கள் எவையுமே மறக்கப்படவில்லை. ஆனால் பல முக்கிய விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், அவரது பிறசந்ததியினருக்கு[1] எம்பிடோக்கிளிசு எப்படித தோற்றினார் எனபதைக் காட்டுவதன் மூலம், எம்பிடோகிளிசுவின் சரித்திர முக்கியத்துவத்தை நிர்ணயிக்க எமக்கு உதவும் இப்பழங்கதைகளைச் சேகரித்துத்தந்த சரிதாதிரகாரர் திமாயோசுக்கு நாம் நன்றி செலுத்தாதிருக்க முடியாது. இக்கதைகள் யாவும் அவர் சனநாயகக் கொள்கைமீது எவ்வாறு உறுதியாகக் கடைப்பிடித்தார் என்பதை எடுத்துக்காட்டவே தரப்பட்டுள்ளன. உதாரணமாக எம்பிடோக்கிளிசு ஆயிரவர் மகாநாட்டைக்—இது ஓர் ஆட்சிக குழுவாயிருந்திருக்கலாம்—கலைத்தது பறறிய கதை தரப்பட்டிருக்கிறது. இதைத் தொடாந்துதான, எம்பிடோக்கிளிசு அரசபதவியை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக கோரிக்கை செய்யப்பட்டது. எம்பிடோக்கிளிசு அரச பதவியை ஏறக மறுத்துவிட்டார் என அரித்தோதில் குறிப்பிடுகிறார். எம்பிடோக்கிளிசு என்ன காரியங்களில் ஈடுபட்டிருந்தார் என்பது பற்றி எமக்குத் தெளிவாகத் தெரியவராதபோதிலும், அக்கிரகாசு நகரததில் அந்நாட்களில் அவர் ஒரு முக்கியதத்துவம் பெற்ற மக்கள தலைவராக விளங்கினர் என்பது எமக்குப் புலப்படுகிறது.

1. உதாரணமாக, ஒருநாள நீதிபதியொருவருடன உணவருந்த அவர் அழைக்கப்பட்டிருந்தாரெனத் திமாயோசு கூறுகிறார். சாபபாடு ஆரம்பிதது வெகு நேரம் கழிந்த பினனரும் உவைன எதுவும கொண்டு வரப்படவில்லை. மறறவாகள ஒருவரும ஒனறும பேசவிலலை. ஆனால் எம்பிடோகிளிசுவோ கோபித்து, உவைன கொணடுவரபபட வேண்டுமென வறபுறுதினார். விருந்துக் கழைகக்பட்ட வேறொரு அதிகாரி வரும்வரைக்கும் காத்திருபபதாக அவ்விருநதை வழஙகிய வீட்டுகாரர கூறினர. அவ்வதிகாரி சிறிது நேரஙகழித்து வந்ததும் வீட்டுச்சாரர் அவரையே விருநதின தலைவராக நியமிததார். இதன் பினனர அவவதிகாரி சற்று ஆணவத்துடன பழகவாரம்பிததார். அஙகிருந்தோர யாவரும் உவைனக் குடித்தல வேண்டும அல்லது தஙகள தலைகளமீதே அதை ஊற்றிக்கொள்ள வேணடுமென அவர் கட்டளைவிடுத்தார். எம்பிடோகிளிசு ஒன்றும கூறவில்லை. ஆனால் மறுநாள அவவீட்டுக்காராமீதும அவ்வதிகாரி மீதும குற்றஞசாட்டி, நீதிமனறததுகக்ழைப்பிதது அவர்களிருவருகும மரண தணடனை விதிப்பிததார்.

எம்பிடோக்கிளிசுவும் மத போதனையும்

100. எம்பிடோக்கிளிசினது குணங்களிடையே அவரது அரசியற் கொள்கைகளோடு முரண்பட்ட அம்சங்கள் சிலவும் காணப்பட்டன எனத திமாயோசு கூறுகிறார். தான் ஒரு தெய்வம் எனவும், தனது சகபிரசைகள் அதையிட்டுத் தம்மை வழிபட வேண்டுமெனவும் எம்பிடோக்கிளிசு கூறினார். உண்மையென்ன வென்றால் எம்பிடோக்கிளிசு வெறும் அரசறிஞனாய் மட்டும் இருக்கவில்லை. "மாந்திரீக"ரது பண்பாடுகள பலபடைத்தவராயும் அவர் விளங்கினார்.

தனது குருவான எம்பிடோக்கிளிசு சூனிய வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது தானும் அவரோடு கூட விருந்ததாக யோசியாசு ஒத்துக்கொண்டதாகச சத்தையோசு கூறுகிறார். "**தூய்மையாக்கம்**" என்னும் நூலிலிருந்து கிடைத்துள்ள பகுதிகளைப் பார்க்கும்போது எமக்கு இதன் அர்த்தம் புலப்படுகிறது. தேவைகளைக் கட்டுப்படுத்திப புனித வாழ்க்கை வாழ்வதன மூலம் பிறவித் தொடர்பிலிருந்து விடுதலை பெறமனிதன முயலவேண்டும் எனும் புதிய சமயத்தின் போதனாசிரியராக எம்பிடோக்கிளிசு விளங்கினார். தேரொனது காலத்தில் அக்கிரகாசில் ஒபிசம் வலுவுற்றிருந்தது எனக் கருதஇடமிருக்கிறது. அத்துடன் எம்பிடோக்கிளிசின் கவிதைகளுக்கும் தேரொன்மீது பிந்தர் பாடிய ஒபிசக் கவிதைகளுக்குமிடையே சில சொல்லொற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால் "தூய்மையாகக"த்தின் **134** ஆவது பகுதி அப்போலோவைக் குறிக்கிறது என அம்மோனியோசு கூறியிருப்பதையும் நாம் சந்தேகிக்கக் காரணமில்லை. இது உண்மையானால், பைதாகரசைப் போல எம்பிடோக்கிளிசும், அயோனியர்களினதைப் போன்ற இறையனுபவக் கொள்கையை அனுட்டித்தவர் என்றே தோன்றுகிறது. "போதனைகளைத் திருடிய" காரணத்திற்காகப பைதாகரச கழகத்திலிருந்து எம்பிடோக்கிளிசு வெளியேற்றப்பட்ட வரலாறு திமாயோசுக்கு ஏறகெனவே தெரிந்திருக்கிறது. "தூய்மையாக்க"த்தின் **129** ஆவது பகுதி பைதாகரசையே குறிப்பிடுகிறது எனக் கருதவும் இடமிருக்கிறது. பைதாகரச கழகத்தினரால் சரியானவையெனக் கருதபபட்ட கொள்கைகளுக்குப புறம்பான பைதாகரச கொள்கைகளைப் போதித்த காரணத்திற்காகவே எம்பிடோக்கிளிசு கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் எனத் தோன்றுகிறது. இவர் சாதித்தவையெனக் கூறப்படும் அதிசயங்கள் பற்றிய விவரங்கள் இவரது

கவிதைகளில் காணப்பட்ட குறிப்புகளிலிருந்து விரித்தெழுதப் பட்டவை போலவே காணப்படுகின்றன.[1]

சொற்கோப்புக் கலையும் வைத்தியமும்

101. சொற்கோப்புக்கலையை எற்படுத்தியவர் எம்பிடோக்கிளிசே என அரித்தோதில் கூறுகிறார். கொசு, நிடோசு முதலிய வைத்தியக் கழகங்களுக்குச் சமானமான இத்தாலிய வைத்தியக் கழகத்தை நிறுவியவரும் எம்பிடோக்கிளிசே எனக கலன் கூறுகிறார். எம்பிடோக்கிளிசின் அரசியல், அறிவியல் சார்ந்த ஈடுபாடுகளோடு சேர்த்தே அரித்தோதில் கலன் ஆகியோரது இவ்வித கூற்றுக்களும் ஆராயப்படல் வேண்டும். யோச்சியாசு, எம்பிடோக்கிளிசின் சீடன் என்பதும், பின்னர் அதென்சு மக்களுக்கு யோசசியாசினால் அறிமுகப்படுத்தப்பட்டதும் இலக்கிய நடையொன்று[2] தோன்றக் காரணமாயிருந்ததுமான செயறகை அணிகள் கொண்ட நடையிலேயே இவரது சொற்பொழிவுகள நிகழ்த்தப்பட்டன என்பதும் உண்மையாயிருக்கலாம். வைத்தியத்தை மட்டுமல்லாது, அதன் மூலமாக விஞ்ஞான வளர்ச்சி முழுவதையுமே வசப்படுத்திய, எம்பிடோக்கிளிசுவின் வைத்தியம் சம்பந்தமான சிந்தனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. எம்பிடோக்கிளிசிற்குப் பின்னர் அவரது வழி வந்தோர் யாரும் இருக்கவில்லையெனக் கூறப்பட்டிருக்கிறது. இவரது மெய்யியற் கொள்கைகளைப் பொறுத்தவரையில் இக் கூற்று உண்மையே. ஆனால் இவரால் நிறுவப்பட்ட வைத்தியக் கழகம் பிளேட்டோவின் காலத்திலும் நீலதிருந்து அவரையும் தனது செல்வாக்குக்குட்படுத்தியது. அரித்தோதில் பிளேட்டோவைவிட அதிகமாக இக்கழகத்தின வசப்பட்டிருந்தார் எனக் கூறலாம்.[3] வெப்பம், குளிர், வறட்சி, ஈரலிப்பு

1. கழுதைகளின் தோலினாலான பைகளை மரங்களில் தொங்கவிடுவதன் மூலம், ஈற்றிசியன காற்றுகளின வேகத்தை இவா எவ்வாறு கட்டுபடுத்தினர் என்பது பற்றித திமாயோசு கூறுகிறார். இவர் போதித்த விஞ்ஞானத்தை நன்குகத் தெரிநத இவரது சீடர்கள காற்றுகளைக கட்டுபடுதத நனகுக அறிந்திருந்தார்கள் எனக குறிப்பிடபபட்டிருகிறது. 30 நாட்களாகச சுவாசம், நாடித் துடிபபு எதுவுமினறி இருந்த பெண ஒருத்தியை இவா எவ்வாறு உயிரப்பித்தார் எனபது பற்றியும் கூறபபட்டிருகிறது. கவிதைபபகுதி (iii) இல் தன்னுடைய, போதனை எவ்வாறு எடிசிலிருநது இறநதவர்களை மீடக உதவுமென அவர் பெனசகனியாசுக்குக் கூறுகினறார்.

2. யோசியாசு எமபிடோக்கிளிசுவின் சீடர் என்பதைத் தெரிவிக்கும் மிகபபழைய ஆதாரம் சத்தைரோசுவிடமிருநது கிடைப்பது. யோசசியாசுவின சீடனை அனுகிடாமசுவிடமிருந்தே அவர் இதை அறிந்திருந்தார் எனத் தோனறுகிறது. பிளேட்டோவின் "மேனே"வில் நுணனிய துவாரங்கள், வெளியொழுக்குகள் பற்றிய எமபிடோகிளிசுவின கொள்கை, யோச்சியாசுவின தெனக் குறிப்பிடப்பட்டிருகிறது.

3. இக்காலதிலிருந்து மருத்துவவியலின் வளர்ச்சியை அறியாது மெய்யியலின் வரலாறறை அறிதல் அசாத்தியம்.

என்பனவே நான்கு மூலகங்களும் என்பதே இக்கழகத்தின் பிரதான கொள்கையாயிருந்தது. உடலிலுள்ள நுண்ணெளிகள் யாவற்றிலுஞும் நாம் சுவாசிக்கிறேம் என்பதும் சுவாசாணுபவதற்கும் இரததவோட்டத்திற்கும் நெருங்கிய தொடர் பிருக்கிறது என்பதும் இவர்களது கொள்கைகளாயிருந்தன. உணர்வுக்கான உறுபபு இருதயம் என்றும் மூளையல்ல வென்றும் இவர்கள் நம்பினர். எம்பிடோக்கிளிசின் வழிவந்தவர்களது வைத்தியக் கொள்கைகளில் மாந்திரீக முறையான கருத்துக்கள் பல சேர்ந்திருந்தன என்பதும் உண்மையாகும். இம் மாந்திரீகக் கொள்கைகளைக் கண்டித்துக் கோவன் வைத்தியக் கழக அங்கத்தினர் ஒருவர் வெளியிட்டவொரு கருத்துப் பற்றிய குறிப்பு இன்றும் நாம் அறியக் கூடியதாயிருக்கிறது. எம்பிடோக்கிளிசின் வைத்தியக் கழகத்தினர் " மாந்திரீகர்களும் தூயதாக்கிகளும் போலி அறிஞர்களும், போலி மருத்துவர்களு மென்றும், மிருந்த சமயப்பற்றுடையவர்கள் போலப் பாவனை செய்து கொள்பவர்கள் " என்றும் இவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவருக்கு முன்பிருந்தோர்

102. எம்பிடோக்கிளிசின வாழ்க்கை வரலாற்றில் இயற்கை பற்றிய அவரது கொளகை எதுவும் தரப்படவில்லை. அவரது ஆசிரியர்கள் பற்றிய சில கூற்றுகளை மட்டுமே எம்மால் பெற முடிகிறது. எம்பிடோக்கிளிசைப்பற்றி அறிய மிகவும் வாய்ப்புப் பெற்றிருந்த அலுக்கிடாமசு இவர் சேனோவுடன் சேர்ந்து பார்மனிடிசிடம் கற்றவர் எனக் கூறுகிறார். தியோபிறசுத்தோசும் இவர் பாமனிடிசைப் பின்பற்றியவர் எனறே கூறியுள்ளார். ஆனால் பைதாகரசிடம் இவர் பாடம் " கேட்டவர் " என்ற கூற்று உண்மையாயிருக்க முடியாது. பைதாகரசின் வழிவந்தோரிடம் பாடம் கேட்டோர் என்றே அலுக்கிடாமசு கூற விரும்பியிருக்கவேண்டும்.

எம்பிடோக்கிளிசின் கொள்கைகளின் சில பகுதிகள், குறிப்பாக நுண்ணெளிகள் பற்றியும் வெளியொழுக்குகள் பற்றியும். அவர் கொண்டிருந்த கொள்கை போன்றன லியூக்கிப்போசின் செல்வாக்கின் மூலம் எறபட்டவை எனச் சிலர் கருதுகின்றனர்.[1] ஆனால அலுகமையோன் நுண்ணெளிகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பது எமகுத் தெரியுமாதலால் எம்பிடோக்கிளிசின் கொள்கை அவரிடமிருந்து பெறப்பட்டிருக்கலாமெனக் கருத இடமுண்டு. அலுக்மையோனும், பிற்கால அயோனிய மெய்

1. எம்பிடோக்கிளிசு, லியூக்கிபபோசுவின் செல்வாக்குக் குப்பட்டிருந்தார் என்னும் கருததை எறறுகொளவது இனிவரும் சில அத்தியாயங்களின் முகிய கொளகையையே மாறறுவதாக முடியும. எம்பிடோக்கிளிசின் செல்வாகுகுப பட்ட பிநதிய பைதாகரச கொள்கையின் செல்வாககு லியூகிப்போசுவை வசபபடுதியது என நான் நிரூபிபபேன்.

யியற் சிந்தனையாளர்களும் கொண்டிருந்த சில உடற்கூற்றுக் கொள்கைகள் பற்றிய வரலாற்றுடனும் இக்கருதது பொருந் துவதாயுள்ளது. எம்பிடோக்கிளிசால் நிறுவப்பட்ட வைத்தியக் கழகத்தின் மூலமாகவே இக்கொளகைகள அயோனியாவை அடைந்திருக்க வேண்டும் என எம்மால் உணரமுடிகிறது.

மரணம்

103. தன்னைத் தெய்வமெனப் பிறர் கொள்ள வேண்டும் எனும் எண்ணத்துடன் எம்பிடோக்கிளிசு எட்ஞ எரிமலையின் வாயினுட் குதிததாகக் கூறப்படுகிறது. இரவு[1] நேரத்தில் திடீரென எம்பிடோக்கிளிசு வானுலகிறகுத் தூக்கியெடுக்கப்பட் டார் என அவரைப் பின்பறறியோா துவகஙி வைதத கதையே கெட்ட எண்ணத்துடன் இவ்வாறு திரித்துக் கூறப்பட்டதெனத் தோன்றுகிறது. உள்ளூர் மக்களிடையே எவ்வித வரலாறும் வழக்கிலிருக்காதபடியால் இவ்விரு கதைகளும் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படலாம். எம்பிடோகிளிசு காலஞ் சென்ற இடம் சிசிலி அலல ; பெலோப்பொனீசு அல்லது தெளரியையா யிருக் கலாம். அவர் அதென்சு சென்றிருக்க முடியாது எனறு கூறு வதற்கும் எவ்வித நியாயமும் இலலை.[2] சோக்கிரதருக்கு இளமை யிலேயே எம்பிடோகிளிசின கொள்கைகள் தெரிந்திருந்தன வென்று பிளேட்டோ கூறுகிறார். அத்துடன் எம்பிடோக்கிளிசின் கொளகைகளில் அவரின் தனித்தனமையைக் காட்டுவதான ஒன்றையே பெரிய கிரிட்டாசும் பின்பற்றினார்.[3]

நூல்கள

104. அங்கதக்கவிஞர் செனோபனிசைச் சேர்த்துக் கொள்ளா விட்டால், செய்யுளர் உருவததில் தமது சிந்தனைகளை வெளியிட்ட இரண்டாவது மெய்யியல் ஞானி எம்பிடோக்கிளிசே. கிரேக்க மெய்யியல் அறிஞருள் செய்யுளியற்றிய கடைசி அறிஞரும் எம்பிடோக்கிளிசே எனக் கூறலாம பைதாகரசின் கொள்கை களைச் சார்ந்து எழுதப்பட்டிருக்கும். செய்யுள்கள் பிந்தியகால இடைச்செருகல்கள் போலக் காணப்படுவதால் நாம் அவற்றை யும் விட்டுவிடலாம். செய்யுள் எழுதும் முறையில் பார்மனை

1. இது பொண்டோசுநாட்டு எரகிளைட்சுவாற் கூறப்பட்ட கதையாகும.

2. பொதுவாக வழஙகிய கதைகளை, திமாயோசு விரிவாக மறுததுள்ளார். எமபிடோக்கிளிசு ஒலிமபியாவுகருச சென்றதன பினனா சிசிலிக்கு ஒருபோதும் மீளவில்லை என அவா திடமாகக கூறுகினறார. ஆஙலை தெளரியைக குடி யேறறம பற்றி ஒலிம்பியாவில் பேசசுவார்ததைகள் நடை பெறறன வெனறும், பெலோப்பொனீசிலிருந்தும் ஏனைய இடஙகளிலிருந்தும் கிரேககாகள அங்கு சென்றனசென்றும் நாம் அறிவோம். இது சமபநதமாக அவர் அதென சுக்குச சென்றிருககலாம்.

3. இவன் பிளேட்டோவில் திமாயசுவில் வரும் கிரிட்டோசுவே யன்றி மூப்ப தின்மில ஒருவனன கிரிட்டோசுவல்ல. உணமையில் இவன அவனது பாட்டனுவான்.

டிசை எவ்வாறு எம்பிடோக்கிளிசு பின்பற்றினரோ அதேமாதிரி லியூக்கிறத்திசு இவரைப் பினபற்றினர். கவிதை அணிகளுடன் எழுதப்படுவனவற்றிற்குப் பொருள் காண முயலும் போது சிரமம் ஏற்படுகிறது எனபது உண்மைதான். ஆனல் எரக்கிளீட் டசுவின வசனங்களிலும் பார்கக எம்பிடோக்கிளிசின் செய்யுள் களிலிருந்து அவறறின் மெய்யியல உட்பொருளை மீட்பது இல குவாயிருகிறது என்றே கூறவேண்டும்.

105. வேறு எந்தக் கிரேக்க மெய்யியல் ஞானியையும் விட எம்பிடோக்கிளிசுவின் குறிப்புக்களே எமக்கு அதிகமாகக் கிடைத திருக்கினறன. "இயறகை பற்றிய கவிதைகள்" "தூய்மை யாக்கம்" ஆகிய இருதொகுதிகளும் மொத்தம 5,000 செய் யுள்களைக் கொண்டிருந்தன வெனறு அலெக்சாநதிரியா நகர நூல்நிலேயக காபபாளர்கள் மதிபபிடடனர் என இடையோ சினிசு, சூயிதாசு ஆகியோர் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் கூறுகினறன. இவற்றுள் 2,000 செய்யுள்கள் "இயறகை பற்றிய கவிதைகள்" என்னும் நூலில் அடஙகியிருந்தன. இநநூலின ஐநதில் ஒரு பங்கிற்கும் குறைந்ததாக இருந்த, பேரண்டவியற் கவிதையிலிருந்து 350 செய்யுளகளும செய் யுட் பகுதிகளும் எமககு வரலாறருசிரியர் டியல்சு மூலம் கிடைத் திருக்கினறன. ஆகவே இதிலும் எவ்வளவோ தொலேந்து போயினவெண்பதை நாம நினைவில் வைததிருகக வேண்டும். அலெக்சாந்திரிய அறிஞர்களால் எம்பிடோகிளிசின கவிதைகள் எனக் கூறபபடும் பிற சிலவறறை அவருடையவை என ஒத்துக் கொள்ள முடியாது. டியல்சு ஒழுங்குபடுத்திய முறையில் எஞ்சி யுள்ள செய்யுளகளைத் தருகிறேன : எஞ்சியுள் ளவை

(1)

அறிவாழம்கொண்ட அங்கிதோசுவின் மகனுகிய பௌசானி யாசே உற்றுக் கேடபாயாக.

(2)

அவர்களது உடல்களின பல பாகஙகளிலுமுள்ள ஆற்றல்கள் மிகக் குறைந்தவை ; அவர்களது சிந்தனையின் கூர்மை மழுங்கும் வண்ணம் அவர்களைத் தாக்கும் கவலைகள அநேகம். உண்மையில் வாழ்வெனக் கருதபபட முடியாத சிறு கால வாழ்வையே அவர்களாற் காண முடிகிறது. விரைவுடன் வரும் முடிவான, மரணத்தை நோககி இட்டுச் செல்லப்படும் அவர்கள், புகையைப் போல மறைந்து விடுகின்றனர். எல்லா வகையிலும் அவசரவழிகளில் அழைத்துச் செல்லப்படும் ஒவ் வொருவனும் தனனல் காண முடிந்தவற்றை மட்டுமே முற்றுக நம்பி, தான் பூரணத்துவத்தையே கண்டுவிட்டதாக

வீணில் தற்புகழ்ச்சியில் ஈடுபடுகிறான். இந்த விடயங்களை மனிதர் தமது மனத்தால் அறிந்து கொள்வது எத்தனை கடினம்! கண்களால் முற்றுமுகக் காண்டலும் காதுகளால் முற்றுமுகக் கேட்டலும் அரிது, அரிது! எப்படியாயினும், இங்கு வந்துள்ள நீ அழியும் தன்மையுடைய மனித மனத்தின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவற்றை அறிந்து கொள்ள முடியாது. R. P. 163.

(3)

உனது ஊனமை இதயத்துட் பேணுதற்காக.....

(4)

தெய்வங்காள்! மனிதர்களுக்கியல்பான விசாரை எனது நாவிலிருந்து விலக்குவீராக. எனது உதடுகளுக்கு ஒளியூட்டி அவற்றிலிருந்து புனித ஊற்றுப் பாயும்படி செய்வீராக. வெண்மையான கைகளுடைய கன்னியே, யாவரும் வழிபடும் தேவதையே, ஒரு நாட் குழந்தைகளாகிய நாம் அறிய வேண்டிய வற்றை நான் கேட்க வகை செய்யும்படி உனை இறைஞ்சுகிறேன. உனது புனித இருப்பிடத்திலிருந்து, உன்வசப்பட்டு நிற்கும் எனை இயக்குவாயாக, எனக்கு வேகத்தைத் தருவாயாக. உனதுற்றமும் பெற்ற கர்வத்திலும் தமது தகுதிகளு மிஞ்சிய முறையில் பேசும் பொருட்டும், அதனமூலம் "அறிவின உச்சியில்" தமக்கு ஓர் இடம் பெறும்பொருட்டும், உனக்குப் புகழும மதிப்பும் கொண்ட மானிடக்களைச் சமர்ப்பிக்கும் மானிடர்களை நீ அதிகமாக உயாத்தாது விடுவாயாக.

நீ இப்போது சென்று ஒவ்வொரு பொருளும் என்ன விதத்தில் தெளிவாயிருகிறதெனறு உனது முழு ஆற்றலையும் உபயோகித்துக் கவனித்தல் வேணடும். உனது காதுகளால் கேட்பனவறறிலும் பார்க்க நீ காணும் காடசிகள் அதிகம் நம்பத்தகுநதவை என்று நினைத்துவிடாதே. அல்லது உனது நாவின் சுவை யுணர்வு உனது காதுகளின் ஒலியுணர்விலும் பார்க்கத் தாழ்ந்தது என்று நினைக்ககூடாது. அறிவைத் தேட உதவக்கூடிய எந்த அங்கதையுமே நம்பத்தகாததென நீ கழித்துவிடக்கூடாது. ஒவ்வொனறையும் அது எவவகையில் தெளிவாயிருகிறதோ அவ்வகையில மதிப்பிடல் வேண்டும். R. P. 163.

(5)

ஆனால் உன்னிலும் சிறந்தவர்களது சொற்களை நம்ப மறுப்பதும மிகவும் இழிந்த குணமாகும். நான் கூறுபவை உனது இதயதில் பதிந்ததும் அவற்றை நீ எனது தேவதையின் உறுதியான சாட்சிகளாகக் கருதிப் படித்துக் கொள்ளலாம்.

(6)

முதலில் எல்லாப் பொருள்களினதும் நானகு மூலகங்களையும் தெரிந்துகொள் : ஒளிர்விடும் சியசு, உயிரளிக்கும் ஏரா, அழியுந் தன்மையுடைய யாவர்ககுமு நீரூற்றுகும்[1] கண்ணீர்த் துளிகளையுடைய நெசுத்திசு, அய்தோனியசு. R. P. 164.

(7)

ஆக்கப்படாத.....

(8)

நான் உனக்கு இன்னுமொன்று சொல்வேன். அழிகின்ற அனைத்திலும், ஒன்றுவது பொருளாவதில்லை ; பழிகேடுடைய மரணம அவறறை அடையாது விடுவதுமில்லை. ஏறகெனவே கலந்திருப்பவை மீண்டும் கலநது ஒனறுடொன்று மாறு பட்டு உணடானவையே அவை. பொருளென இவை மனிதர் களால்தான பெயரிடப்பட்டிருக்கினறன. R. P. 165.

(9)

ஆனால் வளியும் ஒளியும் கலந்து (தற்செயலாக) மனிதர் களாக உருப்பெறும்போது, அல்லது காட்டுமிருகஙகளாகவோ, பறவைகளாகவேர, தாவரஙகளாகவோ கலக்கும்போது அதைப் பிறப்பு என அவர்கள் கொள்கினறனர். இநதப் பொருள்கள் மீண்டும பிரியும்போது அதை அவர்கள துயர் மிகுநத இறப் பென (தவறுக ?) அழைக்கிறர்கள். நானும் அந்த வழக்கத் தைப் பின் பற்றி இவறறை இந்தப் பெயர்களாலேயே அழைக் கிறேன்.

(10)

பழி வாங்கும் மரணம்.

(11, 12)

முன்பு இல்லாதவை புதிதாகத் தோன்றலாம் என்றும் பொருள்கள் அழிந்து முற்றுக நாசமாகிவிடலாம் என்றும் நினைப்பவர்களுக்கு ஆழ்ந்த சிந்தனை எதுவும் இல்லை—அறி விலிகள் : எனெனில் எவ்விதததிலும் இல்லாததிலிருந்து ஒனறும் தோன்ற முடியாது ; இருப்பது அழிந்து போவதும் சாத்தியமில்லை ; அவ்வாறு நடத்தல் சாத்தியம் என நாம் கேள்விப்பட்டதும் இல்லை. R. P. 165a.

1. நானகு மூலகங்களும் அவற்றின் புராணப் பெயர்களினுல் இங்கு அறி முகப்படுதத்படடுள்ளன.

(13)

முழுமை என்பது கொஞ்சமேனும் வெறுமையாகவோ அளவுக்கு மீறி நிரம்பியோ இல்லை.

(14)

முழுமை என்பதில் ஒன்றும் வெறுமையாய் இல்லை. அப்படியாயின் அதை அதிகரிப்பதற்கான எதுவும் எங்கிருந்து வரமுடியும் ?

(15)

மக்கள் தமது வாழ்வென அழைப்பதை வாழும் வரைக்கும் தான், இருக்கிறார்கள், நல்லதையும் கெட்டதையும் அனுபவிக்கிறார்கள் ; தாம் உருவாகுதறகு முனனரும், தாம்கலைந்து போனதன் பின்னரும் முறறுக இல்லாது போயவிடுகிறார்கள் என இவ்விடயங்களில் ஆழ்ந்த அறிவுள்ள எந்த மனிதனும், முடிவுசெய்ய மாட்டான R. P. 165 a.

(16)

எனெனில் அவை (பூசலும் காதலும்) முன்பிருந்தவாறே கட்டாயம தொடர்ந்து இருக்கும் ; எல்லையற்ற காலததில் இவை எபபோதாவது இல்லாது போய்விடும் எனவும் நான் நினைக்கவில்லை. R. P. 166 c.

(17)

நான் உனக்கு இரட்டைத் தன்மையுடைய கதையொன்று சொல்வேன். ஒரு காலத்தில் பலவறறிலிருந்துதான ஒனறு வளர்ந்தது ; இன்னொரு காலத்தில் ஒன்றுக்குப் பதிலாக அது பலவாகப பிரிந்தது. அழியும் பொருள்கள் வருதலும் மறைதலும் இரட்டிப்பாக நடைபெறுகிறது. எல்லாப் பொருள்களும் ஒனறு சேர்தல் ஒரு தலைமுறையைத் தோற்றுவித்து அதை அழிக்கிறது ; மறறையது வளர்ந்து பொருளகள் பிரியும் போது, சிதறுகிறது. இபபொருள்கள தொடர்ந்து இடம் மாறுவதும் இடைவிடாது நடைபெறுகிறது—ஒரு நேரத்தில் காதலினால் எல்லாம் ஒனறுகச் சேர்கினறன ; பிறிதொரு நேரத்தில் பூசலின எதிர்பபினால் யாவும் வெவ்வேறு திசைகளில் இட்டுச் செல்லப்படுகின்றன. பலவற்றிலிருநது ஒனறுக வருதலும் ஒன்று பிரிக்கப்படும்போது மீணடும பலவாதலும் இவற்றின் இயல்பாக இருக்கும்வரை, இவை இவ்வாறு தோனறுதலும் இவற்றின் வாழ்வு முடிந்து போதலும் நடைபெறுகிறது. ஆனால் இவை தொடர்ந்து இடம் மாறிக் கொண்டிருத்தலை நிறுத்தாதிருக்கும் வரை இவற்றை இருப்பு வட்டத்திலிருந்து அகற்றுதலும் முடியாது.

எனது சொற்களைக் கவனிப்பாயாக. ஏனெனில் கல்வியே அறிவை அதிகரிக்கச் செய்கிறது. எனது உரையினை தலைப்பு களைத் தந்தபோது நான கூறியது போல நான் உனக்கு இரட் டைத் தன்மையுடைய கதையொனறு சொல்வேன. ஒரு காலத் தில் அது பலவறறிலிருந்துதான் ஒன்றுகச் சேர்ந்து வளர்ந் தது. இன்னொரு காலத்தில் ஒன்றுக்குப் பதிலாக அது பல வாகப் பிரிந்தது; தீயும் நீரும் நிலமும் மிகவும் உயரமான வளியும், இவற்றைவிட ஒவ்வொன்றுக்கும் சம நிறையுள்ள பயங்கர பூசலும் இருந்தது. அத்துடன் இவற்றின் நடுவே சமநீளமும் அகலமும் கொண்ட காதலும் இருந்தது. திகைத் துப் போனவன மாதிரி வெறுமனே பார்த்துக்கொண்டிராது அவளைத்தான நீ உனது மனததில் இருத்திச் சிந்தித்தல் வேண்டும். மனிதரின அமைப்பிலேயே பதிக்கப்பட்டவளெனக் கூறபபடுபவள் அவளே. அவர்களிடையே காதல் பறறிய சிந்தனைகளைத் தூண்டுபவரும் சாந்தமான செயலகளைச் செய்ய வைப்பவளும் அவளே. இன்பம் என்றும் அபுறுடைற்று என்றும் அவளையே அழைகிறார்கள். தம்மிடையே நடமிடும் அவளை இன்னமும் மனிதர்களில் எவரும் கவனிக்கவில்லை. ஆனால் நீ இப்போது நான் வஞ்சனையினறிக் கூறுவனவறறின் ஒழுங்கைக் கவனிப்பாயாக. ஏனெனில் இவையெல்லாம் சம வயதுடையவையாய இருப்பினும் ஒவ்வொன்றிற்கும் அதற்கே உரித்தான தனி இயல்பும் போக்கும் உண்டு. ஆனால் காலப் போக்கில் ஒவ்வொன்றும் மாறி மாறி முதன்மை பெறுகிறது. இவற்றை விட வேறொன்றும் தோன்றுவதில்லை. இவை மறைவதும் இல்லை. தொடர்ந்து மறைந்து கொண்டிருந்திருந்தால், இவை இப்போது இருக்கமாட்டா. அத்துடன் முழுமை என்பதை யாது அதிகரிக்கச் செய்ய முடியும்? அது எங்கிருந்து வரமுடியும்? அது எப்படி அழிய முடியும்? ஏனெனில் இவை இல்லாது வெறுமையாய் இருக்கினற இடத் தைக் காணேம். இவை மாத்திரமே இருக்கின்றன. ஆனால் ஒன்றுக்கூடாக ஒன்று ஓடுவதால் அவை ஒரு கணம் ஒன்றுக வும் இன்னொரு கணம் மறறொன்றுகவும் எப்போதும் இத்தகைய பொருள்களாகவும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. R. P. 166.

(18)

காதல்.

(19)

விடாது பற்றிக் கொள்ளும் காதல்.

(20)

இது (காதலுக்கும் பூசலுக்கும் இடையே உள்ள போட்டி) மனித அங்கங்கள் எல்லாவற்றிலும் நடைபெறுவது வெளிப்படை. ஒரு காலத்தில், வாழ்க்கையின் மலர்ச்சிப் பருவக் காதலினால், உடலின்பாகங்களான அங்கங்கள் யாவும் ஒன்று சேர்க்கப்படுகின்றன. இன்னொரு காலதத்தில் கொடிய பூசலினால் துணடிக்கப்பட்டு இவை யாவும் வாழ்க்கைக் கடலின் பேரலைகளோடு தனித்தனியே கலைந்து செல்கின்றன. நீரில் வாழும் மீனகளும், குன்றுகளில் வசிக்கும் விலங்குகளும், சிறகடித்துப் பறக்கும் கடறபறவைகளும், தாவரங்களும், யாவும் இவ்வாறே. R. P. 173 d.

(21)

எனது உரையை முன்பு கூறிய முறையில் எதாவது குறைபாடிருந்ததாயின், அதற்குச் சாட்சியாக உள்ளவற்றை இப்போது அவதானித்துப பார். எங்கும் பிரகாசமாயும் சூடாகவும் இருக்கும் சூரியனையும், ஒளிவிடும் பிரகாசத்திலும் வெபபத்திலும் மூழ்கியிருக்கும் அழியாத பொருள்களையும் நோக்குவாயாக. எங்கும் இருளும் குளிருமாயிருக்கிற மழைமையும், நிலத்திலிருந்து வெளிப்படும் திடமான நெருக்கமான பொருள்களையும் நோக்குவாயாக. விரோதித்திருக்கும்போது இவை யாவும் உருமாறியும் தனித்தும் இருப்பன. காதலினால் இவை யாவும் ஒன்று சேர்கின்றன ; ஒன்றை ஒன்று விரும்புகின்றன.

முன்பு இருந்தவைகளும், இப்போது இருப்பவையும், இனி இருக்கப் போகின்றவைகளும் இவற்றிலிருந்துதான் பிறந்தன— மரங்கள், ஆண்கள், பெண்கள், விலஙகுகள், பறவைகள், நீரில் வாழும் மீன்கள் ஆகிய யாவும், ஏன், நீண்ட காலம் வாழ்ந்து யாவராலும் உயர்ந்தவர்களாக மதிக்கப்படும் கடவுளர்கள் கூடத்தான். R. P. 166 i.

எனெனில் இவை மட்டுமே இருக்கின்றன ; ஆனால் ஒன்றுக் கூடாக ஒன்று ஓடி வெவ்வேறு உருவங்களைப் பெறுகின்றன. கலப்பு இவற்றை அவ்வளவு மாற்றிவிடுகிறது. R. P. 166 g.

(22)

சூரியன், நிலம், வானம், கடல் என்னும் இவை யாவும், தம்மிடமிருந்து பிரிக்கப்பட்டு அழியும் பொருள்களில் சேர்க்கப்பட்டுள்ள தமது பகுதிகளோடு ஒத்த தன்மையுடையனவாயே உள்ளன. இவற்றுள்ளும் கலப்புக்கு மிகவும் ஏற்றவையாயுள்ள பொருள்கள் ஒனறுக்கொன்று ஒத்த தன்மையுடையனவாயிருத்தலால், அபுரொடைற்றின் மூலம் காதலால் இணைக்கப்

படுகின்றன. பிறப்பிலும், சேர்க்கையிலும் உருவத்திலும் மிகவும் மாறுபட்ட பொருள்கள் மிகவும் விரோதித்திருகின்றன. எனெனில் பூசலிலுல பிறப்பிக்கப்பட்ட இவை இணைவதறகுச் சிறிதேனும் பழக்கமில்லாதனவாயும் பூசலின் கட்டளையால மிகவும் துயரடைவனவாயும் உளளன.

(23)

ஆழ்ந்த அறிவிலுல் நன்ருகத் தமது கலையைப் பயின்ற ஓவியர்கள் ஆலய சித்திரங்களைத் தீட்டமுற்படும்போது, தமது கைகளில் பல நிறமான சாயங்களை எடுத்துச சிலவறறைக் குறைவாகவும் சிலவற்றை அதிகமாகவும், எற்ற விகிதபபடி கலந்து, அதிலிருந்து எல்லாவிதமான உருவங்களையும்–மரங்களையும், ஆண்களையும், பெணகளையும், விலங்குகளையும், பறவைகளையும், நீரில் வாழும் மீனகளையும் நீண்டகாலம் வாழ்பவர்களும் உயர்வாக மதிக்கப்படுபவர்களுமான தெய்வங்களையும்—தோற்றுவிப்பது போலவே உண்மையில் இவை யாவும் தோற்றுவிக்கப்படுகின்றன. எண்ணிறந்தவையாகத் தோன்றும் அழியுந்தனமையுடைய இவை யெல்லாம் வேறு எந்த முறையிலோ பிறக்கினறன என்னும் பிழையான எண்ணத்தை உன் மனத்தில் இருகக விடாதே. இந்தக் கதையை ஒரு தெய்வததிடமிருந்து கேட்டுள்ளாயாதலால் இதை நீ உறுதியாக அறிந்து கொள்ளலாம்.

(24)

கடைசிவரை வெறும் வார்த்தைகளாலான ஒரே பாதையிற் சென்றுகொண்டிருக்காமல் ஒரு உச்சியில் இருந்து இனனொரு உச்சிக்கு அடியெடுத்து.....

(25)

சரியானதெதுவோ அதை இரண்டு முறை வேண்டுமானலும் சொல்லலாம்.

(26)

காலச்சுழற்சியில் அவை தமது முறையின்படி ஒன்றனுள் ஒன்று புகுந்து தமது முறைவரும் போது வலிமை பெறுகின்றன. R. P. 166 c.

இவை மாத்திரம் உள்ளன. ஆனுல் ஒன்றனுள் ஒன்று புகும்போது இவை மனிதர்களாகவும் விலங்கினங்களாகவும் மாறுகின்றன. ஒரு காலதது காதல் மூலமாக இவை யாவும் ஒரு ஒழுங்குக்குக் கொண்டுவரப்படுகின்றன. இனனொரு காலத்தில் பூசலின் எதிர்ப்பிலுல் இவை வெவ்வேறு திசைகளுக்கு இட்டுச் செல்லப்படுகின்றன. மீண்டும் ஒன்றுகச் சேர்ந்து தணி

யும் வரை இவை கலைந்து செல்கின்றன. இவ்வாறு பலவற்றிலிருந்து ஒன்றுகவும், ஒனறிலிருந்து பலவாகவும் மாறுவதனால் இவை தோற்றம் பெறுகினறன ; இவற்றின் வாழ்வு நீடிப்பதில்லை; ஆனால் தொடர்ந்து இவ்வாறு மாறிக்கொண்டிருக்கும் வரை இவை இருப்பு வட்டத்திலிருந்து அகற்றப்படாது இருந்து வரும்.

(27)

கோளமாயும் வட்டமாயும், தனது வட்டமான தனிமையிற் களித்துக்கொண்டும் இருப்பதான இசைவு, மிகவும் நெருக்கமாகக் கடவுளே அமைத்திருப்பதனால் அங்கே (அந்தக்கோளத்தினுளளே) சூரியனது வேகத்துடன் அசையும் அங்கங்களேயோ வலிமையும் அடர்த்தியான வளர்ச்சி கொண்டதுமான நிலத்தையோ கடலையோ அடையாளம் கண்டு கொள்ள முடியாதிருக்கிறது. R. P. 167.

(27 a)

அவனுடைய அங்கங்களிலே முரண்பாடோ, வேண்டத்தகாத பூசலோ இல்லை.

(28)

ஆனால் அவன் எல்லாப் பக்கங்களிலும் எல்லையற்ற சம அளவுடையவனுகவும் கோளமாயும், வட்டமாயும், தனது வட்டமான தனிமையிற களிப்பவனுகவும் இருந்தான்.

(29)

அவனது முதுகிலிருந்து இரு கிளைகள் வெளிவருவதில்லை ; அவனுக்குப் பாதங்களோ, வேகமான முழங்கால்களோ அலலது வேறு எந்தப் பயன்தரு உறுப்போ இலலை. ஆனால் அவன் கோளமாயும் எல்லாப்பக்கங்களிலும் சம அளவினனுயும் இருந்தான்.

(30, 31)

அந்த வன்மையான உறுதிமொழியின்படி தமக்கென விதிக்கப்பட்ட காலம் முதிர்ந்து வந்தபோது கடவுளின் உறுப்புக்களில் பூசல் மிகுந்து அப்பூசல் தனது உரிமைகளைக் கேட்க முற்பட்டது. ..கடவுளின உறுப்புக்கள் யாவும் அப்போது ஒனறன்பின் ஒன்றுக அதிர்ந்தன. R. P. 167.

(32)

அந்த இணைப்பினால் இருபொருள்கள் சேர்க்கப்படுகின்றன.

(33)

அத்திமரத்தின்பால் வெண்மையான பாலைக் கட்டி இறுக்குவதுபோல.....

(34)

தண்ணீரால் மாவைக்கட்டி யாகுவதுபோல.....

(35, 36)

இனி நான் இதுவரை நடந்த கவினதகளின் வழியே திரும்பி அடியெடுத்து வைத்து, இது வரை நான் கூறியவற்றிலிருந்து புதிய கூறறுக்கீள வெளிக்கொணர்வேன். சூழியின மிகவும் ஆழமான அடிவரைக்கும் பூசல் வீழ்ந்து, சூழியின் மத்தி வரைக்கும் காதல் வந்து விடும்போது அதிலே எல்லாப் பொருள்களும் ஒன்றுகவே இருப்பதறகாக ஒன்று சேர்கின்றன; யாவும் ஒரே நேரத்தில் வராது தமக்கிசைந்தவாறு வெவ் வேறு பகுதிகளிலிருந்து வருகினறன. அவை கலக்கும்போது பூசல் கடைசி எல்லைநிலை வரைக்கும் விலகிச் செல்லத் தொடங் கியது. ஆனால் இனனும் முற்றுக வீழ்ச்சியடையாத பூசலின பிடியிலிருந்த பல பொருள்கள், கலக்கும் பொருள்களினி டையே, இனனுமக கலவாது எஞ்சியிருநதன ; எனெனில் பூசல் இனனும் முற்றுக ஓய்ந்து போகாமலும், வட்டத்தின் வெளியே யுள்ள எல்லைவரைக்கும் போகாமலும் இருந்தது. அதில் இன்னமும் கொஞ்சம் உள்ளே இருந்தது. அத்துடன் முழுமை எனபதன உறுப்பிலிருந்து கொஞ்சம் எற்கெனவே வெளி வந்திருந்தது. பூசல் இவ்வாறு வெளியேறிக்கொண்டிருக்கும போது, அழியாத தனமையுடைய காதல் ஒரு மென்மையான ஓடையென உள்ளே வந்துகொண்டிருந்தது. உடனே முன்பு அழியாதனவாயிருந்தன வெல்லாம் அழியுந் தன்மையு டையனவாக மாறின ; முனபு கலவாதிருந்தவை யெல்லாம் கலந்தன ; ஒவ்வொன்றும் தனது வழியை விட்டு விலகிற்று. அவை அவ்வாறு கலந்தபோது எண்ணற்ற அழியும் தன்மை யுடைய பொருள்கள் பல்வேறு வகையான உருவங்களுடன் தோன்றி வெளியே பரவின. இவை யாவும் பார்ப்பதற்கு வியக்கத்தக்க அழகுடையவையாயிருந்தன. R. P. 169.

(37)

நிலம் தனது பொருட்திரளைத் தானே கூட்டிக்கொள்கிறது ; காற்றுத் தனது அளவைத் தானே கூட்டிக்கொள்கிறது.

(38)

சூரியனின் தொடக்கத்தையும், நிலம், பொங்கும் கடல், ஈர மான வாயு ஆகிய எல்லாப பொருள்களும், இவறறைச் சுற் றித தனது வீீயததை நெருக்கமாக இடும் பெரியவளுன வளி யும், இப்போது நாம் காணும் பொருளகள் யாவும் எங்கிருந்து பிறந்தன என்பதையும் நான் உனக்கு முதலில சொல்வேன். R. P. 170 a.

(39)

மூழுமையின் சிறியவோர் பகுதியையே கண்டவர்களாகிய மனி தர்களது வாயிலிருந்து பிறந்த அறிவற்ற கூற்றின்படி— நிலத் தின ஆழமும், அகனற காற்றும் எல்லையற்றனவாய் இருந் தால்....[1] R. P. 103 b.

(40)

சடுதியாகத்திரும்பும் சூரியனும் சாந்தமான நிலவும்.

(41)

அது (சூரியவெளிச்சம்) ஒனறுசேர்க்கப்பட்டு அகன்ற வான மண்டலத்தைச் சுறறி வட்டமிடுகினறது.

(42)

அவள் தனக்கு மேலாக அவன் போகும்போது அவனது கதிர்களைத் தடைசெய்து வெளிறிய முகதையுடைய சந்திர னளவு அகலமுடைய நிலப்பகுதியின் மீது நிழலொன்றைப் படிய விடுகிறாள்.

(43)

அபபடியாயினும் சூரியனது கதிர் சந்திரனது அகன்ற வலிய வட்டதில் மோதியதும் உடனே வானத்தைத் தொடும் பொருட்டு ஓடி மீள்கிறது.

(44)

கொஞ்சமும் கலவரப்படாத முகத்துடன் அது ஒலிம்போசுக்கு விரைந்து பாய்கிறது. R. P. 170.

(45, 46)

சக்கரத்தின் அச்சுக்குடம் அதி தூரததிலுள்ள இலட்சியத்தை நோக்கிச சுழல்வதுபோல நிலத்தைச் சுற்றி வட்டமான இரவல் ஒளியொனறு சுழல்கிறது.

1. இக்கூற்று செலேனிகுவினுடையது என அரித்தோதில் குறிப்பிட்டுள் ளார். இரணடாம் அததியாயத்தில் பாாக்க.

(47)

எனெனில் அவள் எதிரேயுள்ள வீரூர்ந்த சூரியனது புனித வட்டத்தை நோக்குகிறாள்.

(48)

வெளிச்சத்திற்கு எதிராக வருவதன் மூலம் பூமியே இரவை உண்டுபண்ணுகிறது.

(49)

தனிமையான, பார்வையற்ற இரவு.

(50)

கடும் மழையும் காற்றும் ஐரிசுவினால் கடலிலிருந்து கொண்டு வரப்படுகினறன.

(51)

வேகமாக மேலெழும் (தீ)

(52)

நிலத்திற்குக் கீழே தீ பல இடங்களில் எரிகின்றது. **R. P. 171 a.**

(53)

பெரும்பாலும் வேறுவழியிற் செல்வதாலும், அந்த நேரத்தில் அது (வளி) அவ்வழியில் ஓடிக்கொண்டிருந்தது. **R. P. 171 a.**

(54)

வளி தனது நீண்ட வேர்களினால் நிலத்தில் பதிந்தது. **R. P. 171 a.**

(55)

நிலத்தின் வியர்வையான கடல். **R. P. 170 b.**

(56)

சூரியனது கதிர்களின் தாக்கத்தினால் உப்பு கட்டியாக்கப்பட்டது

(57)

அதன்மீது (நிலத்தின்மீது) கழுத்தில்லாத பல தலைகள் முளைத் தெழுந்தன ; தோள்களில்லாது வெறுமையான கைகளும் நெற்றியில்லாத கண்களும் அங்கும் இங்குமாக அலைந்து திரிந்தன. **R. P. 173 a.**

(58)

தனிமையான உறுப்புக்கள் பிணைப்பை நாடி அலைந்தன.

(59)

ஆனால் தெய்வததன்மையோடு தெய்வத்தன்மை மேலும் மேலும் கலக்கும்போது இப்பொருள்கள் தாம் அவ்வப்போது இருந்தவாறு இணைந்து கொண்டன. அத்துடன் இவற்றை விட மேலும் பல பொருள்களும் தொடர்ந்து தோனறின.

(60)

எண்ணிறந்த கைகளையுடைய அருவருக்கததக்க பிராணிகள்.

(61)

மார்பும் முகமும் வெவ்வேறு திசைகளை பார்த்துக்கொண்டிருப்பது போல உள்ள பல பிராணிகள பிறந்தன ; சில மனித முகங்களோடு பிறந்த எருதுகளின கனறுகள் ; வேறு சில எருது முகங்களோடு பிறந்த மனிதக் குழந்தைகள் ; மற்றும் மலடான பாகங்களைக் கொண்டவையும் ஆணினது இயற்கையும் பெண்ணினது இயற்கையும் கலந்துள்ளனவுமான பிராணிகள். R. P. 173 b.

(62)

ஆண்களது கங்குற்றுளிர்களையும் கண்ணீர் விடும் பெண்டிர்களையும் தீ தான பிரிந்ததபோது தோறறுவித்தது எவ்வாறு எனபதைக் கேட்பாயாக; ஏனெனில் நான கூறும் கதை தொடர் பற்றதோ அல்லது அறியாமையினால கூறப்படுவதொன்றே அல்ல. பூரணத்துவம் கொண்டவையும் நீரும் நெருப்பும் அடங்கினவையுமான உருவங்கள் நிலத்திலிருந்து தோனறின. தனது இயல்பு கொண்டவறறை அணுகும் பொருட்டு, தீ இவற்றை மேலே அனுபபியது. இவற்றுக்கு அப்போதும் மனிதர்களுக்குப் பொருத்தமான இயலபுகளோ, குரலோ, அல்லது இனிய உறுப்புருவங்களோ எறபடவில்லை. R. P. 173 c.

(63)

.....ஆனால் (குழந்தையின்) உறுப்புப் பொருள் இவர்களுக்கிடையே பிரிக்கப்பட்டிருந்தது, ஒருபகுதி மனிதனது உடலில் (இன்னொருபகுதி பெண்ணின் உடலில்).

(64)

பார்வை மூலம் அவனுக்கு நினைவூட்டியவாறு அவனிடத்தே ஆசை வந்து படிந்தது.

(65)

.....அது தூய்மையாக்கப்பட்ட பகுதிகளிலே வார்க்கப்பட்டது ; பின்னர் அது குளிரைச சந்தித்தபோது அதனிடமிருந்து பெண்கள் தோன்றினர்.

(66)

அபுரெடைறின பகுக்கப்பட்ட பசும்புல் வெளிகள்.

(67)

ஏனெனில் கருப்பை தனது சூடான பகுதிகளிலிருந்து ஆண்களைத் தோற்றுவிக்கிறது. அதனற்றன் ஆண்கள் நிறங்குறைந்தவர்களாயும் ஆண்மையுடையவர்களாயும் முரட்டு மயிர்நிறைந்தவாகளாகவும் இருக்கிறார்கள்.

(68)

எட்டாவது மாதத்தின் 10 ஆவது நாளில் அது அழுகிய பொருளாக மாறுகிறது.[1]

(69)

இருமுறை கருத்தரிக்கும்.[2]

(70)

செம்மறியாட்டுத் தோல்[3].

(71)

அபுரெடைற்றினுல் ஒன்று சேர்க்கப்பட்டவையும், நீர், நிலம், ஆகாயம், தீ எனபனவற்றின் சேர்க்கையினுல் உண்டானவையுமான இப்பொருள்களின நிறங்களும் உருவங்களும் எப்படித் தோனறின என்பது பற்றி உனக்கு முற்றுக விளங்காதிருக்குமானுல்.

(72)

உயரமான மரங்களும் கடலில் உள்ள மீன்களும் எவ்வாறு.....

(73)

நிலதைதை நீரில் நனைத்தபின், சூட்டை உண்டாக்கிய கைப்பிரிசு அதைக் கடும் தீயிலிட்டுக் கடினமாக்கையில் .....R. P. 171

1. இரத்தம பழுதடைவதனுலேயே பால் உண்டாகிறதென எம்பிடோக்ளிசு கருதினுரெனபது அரிதோதிலினுல் குறிப்பிடபபட்டிருகிறது.

2. 7 ஆம 9 ஆம மாதங்களில நடைபெறும பிறப்புகளைக குறிதது, பெண்களபறறிக கூறியது.

3. கருப்பிண்டத்தைச் சுற்றியுளள சவ்வு.

(74)

வளமார்ந்த பாடாத மீனினத்தை நடாத்திச்சென்று.

(75)

கைப்பிரிசுவின் கரங்களிலிருந்து இத்தகைய் உரமற்ற தன் மையைப்பெற்று உட்பாகம் அடர்த்தியாகவும் வெளிபபாகம் அடர்த்திக் குறைவாகவும் உள்ள அப்பொருள்கள்.

(76)

நன்ருகச் சுடப்பட்டவையான கடல்வாழ் இளிஞ்சல்களிலும், கடல் நத்தைகளிலும், கல்போன்ற தோலையுடைய ஆமைகளி லும் நீ இவ்வியல்பைக் காண்பாய். இவற்றில் நிலத்தாலான பகுதி தோலின அதிமேற்பகுதியில் இருப்பதையும் காண்பாய்.

(77–78)

என்றும் பசுமையாயிருக்கும் மரங்களே ஆண்டு முழுவதும் திர ளான பழங்கள் கொழிக்கச் செய்வது ஈரலிப்பே.

(79)

எல்லாவற்றிற்கும் முதலில், ஒலிவ மரங்களில் முட்டைகள் தோன்றின.

(80)

அக்காரணத்தினுற்ருன் மாதுளங்கனிகள் காலந்தாழ்த்தித் தோனறுவனவாகவும் அப்பிள்கள் சாறு நிரம்பியவையாகவும் இருக்கினறன.

(81)

மரத்திலிருந்து அழுகிப்போய், பட்டையிலிருந்து வரும் நீரே உவைன்.

(82)

மயிரும், இலைகளும், பறவைகளின் தடித்த இறகுகளும், வலிய உறுப்புக்களில வளரும் செதில்களும்—இவை யாவும் ஒரு பொருளே.

(83)

ஆனல் முள்ளெலியின் முதுகுப்புறத்தில் சிலிர்த்துக்கொண் டிருக்கும் அதனது மயிர்கள் கூரிய நுனிகளையுடையன.

(84)

புயல் நேரத்தில் இரவில் வெளியே செல்ல நினைப்பவன் விளக்கொன்றை, எரியும் நெருப்பான தீச்சுடரைத், தயார்

செய்து, எவ்வகைக் காறறையும் சிதறவைத்துத் தீச்சுடரைக் காபபாறறவல்ல கொம்புச் சட்டங்களையும் தனது விளக்கில் பொருததிககொள்ளுகிறான். ஆனால் யாவற்றிறகுமூடாக ஒளி வெளியே பாய்கிறது. அதனுடைய தூய்மைமிக்க கதிர்கள் தவறாது வழிநெடுகிலும் பிரகாசமூடடுகினறன. அதே போல அவள் (காதல்) அநத மூல நெருபபை, வட்டக் கண்மணியை, அகப்படுத்தி, அதிசயமான எத்தனையோ வழிகளடர்நத மென் தோல்களாலும் மெனமையான இழையங்களாலும் அதனைச் சிறைபபடுத்தி வைததிருக்கிறாள. வட்டக்கண்மணியைச் சுறறி யுள்ள ஆழமான நீரை இந்த அதிசயமான வழிகள வெளி யேறவிடாது வைத்திருக்கினறன. ஆனால் தீயின தூய்மைமிக்க கதிாகளை அவை செல்ல அனுமதிக்கின்றன. R. P. 177 b.

(85)

ஆனால் இந்த (கண்ணின) மெனமையான தீச்சுடரில் நிலம் மிகக் குறைவாகவே உள்ளது.

(86)

தெய்வீகத் தன்மையுடைய அபுறொடைறறு இவற்றிலிருந்து சோாவில்லாத கண்களை உருவாககினாள்.

(87)

காதலினால் ஆன ஆணிகளால் அபுறொடைற்று இவற்றை ஒன் றாக இணைத்தாள்.

(88)

இரு கண்களும் சேர்ந்தே ஒரு காட்சியை உண்டு பண்ணு கினறன.

(89)

உண்டாகியுள்ள பொருள்கள யாவற்றிலிருந்தும் வெளியொ ழுக்குக்கள் வெளிப்படுகினறன என்பதை அறிந்து கொள. R. P. 166 h.

(90)

இப்படியே இனிமை, இனிமையைப் பற்றிக்கொள்கிறது. கசபபானது கசப்பானதிடம் செலகிறது. அமிலம் அமிலத்தை அடைகிறது. சூடு சூட்டுடன சோகிறது. R. P. 166 h.

(91)

நீர் உவனுடன் நன்றாகச் சேர்கிறது. ஆனால் அது எண் ணெயுடன் கலப்பதில்லை.

(92)

தகரத்தோடு கலந்த செம்பு.

(93)

சாம்பல் நிற நார்த்துணியுடன் சிவப்புச் சாயத்தின் மலர்ச்சி கலந்து விடுகிறது.

(94)

ஆற்றின அடியிலிருக்கும் கறுத்தநிறம் நிழலிலிருந்து உண்டாகிறது. குகைகளிலும இவ்வாறே.

(95)

கைப்பிரிசினுடைய கைகளில்தான அவை (கண்கள்) முதலில் ஒனருக வளர்ந்தனவாகையால்.....

(96)

பிரகாசமுடைய நெசுத்திசுவின எட்டுப பகுதிகளில் இருபகுதிகளையும் எபாயுசுத்தோசுவின நான்கையும் காருண்ணியம் மிக்க நிலம் தனது அகண்ட புனலகளில் ஏறறுக்கொண்டது. விதமுறை எனனும் சீமெந்தால் தெய்வீகமாகப் பொருத்தப்பட்ட வெண்மையான எலும்புகள் இவ்வாறு தோனறின. R. P. 175.

(97)

முதுகெலும்பு (உடைந்திருந்தது)

(98)

அபுரொடைற்றின் குறைவற்ற துறைகளில் தங்கும் நிலம் இவற்றுடன இட்டத்தடச் சமவீதங்களில் கலக்கிறது. எபாயுசுத்தோசுடனும் நீருடனும, பிரகாசமான வளியுடனும்—அதில் சிறிது கூடுதலாக, அலலது அவற்றில் குறைவாகவும் அதில் கூடுதலாகவும. இவறறிலிருந்து தான இரத்தமும் பலவகையான தசைகளும் தோன்றின. R. P. 175 c.

(99)

அந்த மணி . . . . . (காதின்) தசையுடைய முளை.

(100)

இவ்வாறே எல்லாப் பொருள்களும் காற்றை உள்ளே இழுத்து மீண்டும் வெளியே விடுகின்றன. எல்லோருடைய உடலின் மேற்பரப்புக்களிலும் இரத்தமில்லாத தசைக்குழாய்கள் இருக்கின்றன ; இக்குழாய்களின் வாயிலில் தோலின் பரப்பு மிக

வும் நெருக்கமான நுண்ணெலைகளுடையதாய் இருத்தலினால் இரத்தம் வெளியே வராமலிருக்கையில் காற்று உட்புகுதலும் வெளியேறுதலும் சாத்தியமாயிருக்கிறது. இவற்றிலிருந்து செறிவு குறைந்த இரத்தம் நீங்கும்போது குமிழியிடும் காற்று வேகத்துடன உள்ளே பாய்கிறது. இரத்தம் குழாய்க்குள் திரும்பி வரும்போது காற்று வெளியேற்றப்படுகிறது. பிரகாச மூள்ள பிததலீயால் செய்யப்பட்ட நீர்க்கடிகாரத்தை வைத் ருக்கும் பெணணெருத்தி தனது அழகிய கைகளினால் அதன் வாயைப் பறறிக்கொண்டு, அதனை நீரில் அமிழ்த்தும்போது உள்ளே அடர்ந்திருக்கும் காற்று கடிகாரத்தின் நெருக்கமான நுண்ணெலைகளில் ஆழ்த்திக் கொண்டிருப்பதால் நீர் உள்ளே செல்வதில்லை. ஆனால் பெண் தனது கைகளைக் கடிகாரத் தின வாயிலிருந்து எடுத்ததும் காறறுவெளியே செல்வதும் தண்ணீர் உளளே வருதலும சாததியமாகிறது. இதேபோலப் பித்தலைப் பாத்திரத்தில் நீர் நிரம்பியிருக்கும்போது, வாயில் கையால் அடைக்கப்பட்டிருந்தால், வெளியிலிருந்து உள்ளே வரமுயலும் காற்று, பரப்பை அழுத்துவதன மூலம் நீரை வெளியேவராது பாத்திரத்தின் கழுத்தளவிலேயே நிறுத்தி வைக்கிறது. பெண் கையை விட்டதும் முன்பு நடந்ததறகு மாறுபாடாகக காற்று உள்ளே பாய்தலும் அதற்கு இடமளிக்கும் பொருட்டுச் சம அளவான நீர் வெளியேறுதலும் நடைபெறு கின்றன. இதே போலத்தான் உறுப்புக்களுக்கூடாகப் பாயும் செறிவு குறைந்த இரத்தம் உட்பகுதிகளுக்குப் பாயும்போது காற்றுவெள்ளம் தசைக்குழாய்களுக்குளளே பாய்கிறது. ஆனால் இரத்தம் மீண்டும் குழாய்களுக்குள் பாயும்போது காற்றுச் சம அளவில் வெளியே செல்கிறது.

(101)

மென்மையான புல்லில் விலங்குகளின் பாதங்கள் விடும் மணத்தையும், அவற்றின் உறுப்புக்களின் துகள்களையும் தமது நாசித்துவாரங்களினால் மோப்பம் பிடிக்கும் (நாய்கள்).

(102)

ஒவ்வொருவரும் சுவாசத்திலும், மணத்திலும் தமது பங்கைப் பெறுகின்றனர்.

(103–104)

காலதேவதையின் தீர்மானத்திலேயே எல்லாப் பொருள் களும் சிந்தித்தன.....தமது வீழ்ச்சிக்காலத்தில் மிக அபூர்வ மான பொருள்கள் ஒன்று சேர்ந்ததைப் போல.

(105)

எதிர்த்திசைகளில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தக் கடலில்வாழும் (இருதயம்), மனிதர்களால சிந்தனையென அழைக்கப்படுவதின் பிரதான நிலையம்; ஏனெனில் இருதயத்தைச் சுற்றிவர உள்ள இரத்தமே மனிதர்களது சிந்தனை. R. P. 178 a.

(106)

அவர்களுக்கு முன்னுள் என்ன உள்ளதோ, அதற்கேற்பவே மனிதர்களது அறிவு வளர்கிறதாகையால் ..... R. P. 177.

(107)

இவற்றிலிருந்தே எல்லாப் பொருள்களும் உருவாக்கப்பட்டு இணைக்கப்படுகின்றனவாதலாலும், இவற்றின் மூலமே மனிதர் சிந்திதது, இன்ப துன்பங்களை உணர்கின்றனராதலாலும். R. P. 178.

(108)

அவர்கள் வேறுபட்ட பண்புடையோராய் இருக்குமளவிற்கு அவர்களின் மனங்களில் (கனவுகளில்)[1] தோன்றும் சிந்தனைகளும் வேறுபட்டவையாய் உள்ளன. R. P. 177a.

(109)

நிலத்தினூலேயே நாம் நிலத்தைப் பார்க்கிறோம். நீரை நீராலும் பிரகாசமான வானத்தை வானத்தாலும், அழிக்கும் நெருப்பை நெருப்பினூலும் நாம் பார்க்கிறோம். காதலினூல் காதலையும், துன்பமான வெறுப்பினூல் துன்பத்தையும் நாம் காண்கிறோம். R. P. 176.

(110)

இவற்றை உறுதியாக உனது மனத்தில் இருத்தி, பிழையின்றிக் கவனத்துடனும் கூர்மையாகவும் நீ சிந்திப்பாயானூல், உனது வாழ்நாள் முழுவதும் இவற்றைப் பெருமளவில் பெறுவதுடன் இவற்றிலிருந்து வேறு பல பொருள்களையும் நீ அடைவாய். ஒவ்வொரு மனிதனதும் உண்மையான இயல்பின் நிலையமான இருதயத்தில் இவை தாமாகவே வளரும் தன்மையுடையன. ஆனூல் சாதாரணமாக மனிதர்களது முக்கியமான சிந்தனைகளைப் பல்லாயிரம் வீண் எண்ணங்கள் வந்து கவைத் துவிடுவதைப் போல நீயும் வேறுவகையான பொருள்களைப் பின்பற்ற முற்பட்டாயானூல், இவை காலப்போக்கில் விரைவில்

1. இது கனவுகளையே குறிப்பிடுகிறது எனச் சிம்பிளியசுவின் மூலம் அறிகிறோம்.

உண்ணே விட்டு அகன்றுவிடும் ; எனெனில் அவை தமது இனத்தை மீண்டும் அடையவே ஆவலுடையனவாய் இருக்கும் ; எல்லாப் பொருள்களுக்கும் ஓரளவு சிந்தனையும் அறிவும் உள்ளன என்பதை நீ தெரிந்துகொள்ள வேண்டும்.

(111)

மூதுமையிலிருந்தும், பிணிகளிலிருந்தும் பாதுகாப்பளிக்கும் மருந்துகள் யாவற்றையும் நீ தெரிந்துகொள்வாய் ; எனெனில் உனக்காகவே நான் இவையெல்லாவற்றையும் பெற்றுத் தருவேன். வயல்களைப் பாழாக்கவும், பூமியைத் துடைத்தழிக்கவும் தொடர்ந்தெழுந்து வரும் காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துவாய். நீ விரும்பும் போது அவற்றை மீண்டும் வேகத்துடன் வீசச் செய்வாய். இருண்ட மழைக்காலத்தின் பின்னர் மனிதர் விரும்பும் வறட்சியை நீ உண்டுபண்ணுவாய். பின்னர் கோடைகால வறட்சியை, மரங்களுக்கு ஊட்டமாகும் படி வானத்திலிருந்து பொழியும் தாரையாக மாற்றுவாய். ஏடிசு என்னும் தென்புல உலகிலிருந்து இறந்த மனிதனது உயிரையும் நீ மீட்டு வருவாய்.

தூய்மையாக்கங்கள்

(112)

அற்பத்தனத்தில் பயிற்சி குறைந்தோரது இருப்பிடமும், அந்நியர்களுக்குக் கண்ணியமான தங்குமிடமும் நல்வாழ்வின் நிலையமுமாய், அக்கிரகாசின் மஞ்சட்குன்றைப் பார்த்தவண்ணம், அரணுடன் அமைந்திருக்கும் மாநகரத்தில் வசிப்பவர்களே, நண்பர்களே, யாவரும் வருகை தாருங்கள். நான் இப்போது அழியுந்தன்மையுடைய மானுடனல்லன். மயிர்க் கொடிகளினாலும், மலர் மாலைகளினாலும் அலங்கரிக்கப்படும், தகுதியுடையோரால் கவுரவிக்கப்படும், இறப்பில்லாத தேவனாகிய நான் உங்களிடையே நடமாடுகிறேன். ஆண்களும் பெண்களும் அடங்கிய எனது கூட்டத்தினருடன் நான் செல்வம் கொழிக்கும் நகரங்களுக்குள் செல்லும்போது உடனே எனக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. எண்ணற்ற கூட்டத்தினராய் அவர்கள் எனக்குப் பின்னே வந்து, இலாபம் பெறும் வழி என்னவென என்னிடம் கேட்கின்றனர் ; சிலர் எதிர்காலம் பற்றிய குறியுரை கேட்டு வருகின்றனர். வேறுசிலர் பல வகையான நோய்களினாலும் துன்பத்தை அனுபவித்தபின் என்னிடம் நோய் தீர்க்கும் வார்த்தைகளைக் கேட்டு இறைஞ்சுகின்றனர். **R. P. 162 f.**

(113)

அழியுந்தன்மையுடையவனும் அற்பகால வாழ்வுடையவனு மான மனிதனினும், நான் அதிக சத்தியுடையவன் என்பதைப் பெரிதாகக் கருதுவது போல, நான இதை எல்லாம் என் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன் ?

(114)

நண்பர்களே, நான் கூறப்போகும் வார்த்தைகளில் உண்மை யிருக்கிறது என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் தமது ஆன்மாக்களுடன் பிணைக்கப்பட்ட நம்பிக்கைகளைத் தகர்க் கக்கூடிய இவ்வுண்மைகளை நம்புவது மனிதர்களுக்குச் சிரம மாயிருக்கும்.

(115)

தேவர்களது பழமைமிக்க கோட்பாடாயுள்ளதும் மிகுந்த சத்தியங்களுக்குக் கட்டுப்பட்டதும் கட்டாயமுடையதுமான உறுதி மொழி யொன்றுளது. அஃது எவ்வாறெனின் : குறுகிய வாழ் வையுடையனவான தேவதைகள் பாவவழியிற்சென்று தங்கள் கைகளை இரத்தத்தினால் கறைப்படுத்திக் கொண்டால் அல்லது பூசலைத் தொடர்ந்து தம்மைப் பொய்மைக்குட்படுத்திக் கொண் டால், அவை தாம் வாழும் சுவர்க்கத்தினின்றும் நீங்கி, மூப்பதாயிரம் ஆண்டுகள் வரை அலைதல வேண்டும். காலம் முழுவதும், அழியும் உடல்களை மீண்டும் மீண்டும் பெற்று, துயர்மிகுந்த வெவ்வேறு வாழ்க்கைகளை அனுபவித்தல் வேண் டும். எனெனில் வலிமை பொருந்திய காற்று அவனைக் கடலுக்குத் துரத்துகினறது. கடலோ, அவனை வரண்ட நிலததில் உமிழ்ந்து விடுகிறது. சுவாலையிடும் கதிரவனது கதிர்களின் உள்ளே அவனை நிலம் எறிந்துவிடுகிறது. சூரியன் அவனை மீண்டும் காற்றினை சுழலுக்குள் எறிந்துவிடுகினறான். ஒன்று இன்னொன்றிலிருந்து அவனைப் பெற்றுக் கொள்கிறது. ஆனால யாவும் அவனை விலக்குகின்றன. நான் இப்போது இவர்களில் ஒருவன். பூசலில் எனது நம்பிக்கையை வைத்தது காரண மாக இப்போது கடவுள்களினிடத்திலிருந்து நீங்கி அலைபவ னாகவும், இருப்பிடமிழந்தவனாகவும் நான் வருந்துகிறேன். R. P. 181.

(116)

சகிக்க முடியாத மாறுநியதியைக் காரிசு வெறுக்கிறான்.

(117)

எனெனில் நான் இதற்கு முன்பு சிறுவனுகவும், சிறுமியாக வும், ஓர் புதராகவும் பறவையாகவும், கடலில் வாழும் ஊமை மீனுகவும் இருந்திருக்கிறேன். R. P. 182.

(118)

எனக்குப் பழக்கமில்லாத தரையைக் கண்டதும் நான்தேம் பியழுதேன். R. P. 182.

(119)

எத்தகைய கௌரவமான நிலையிலிருந்து, எத்தனை இன் பத்தின் உச்சத்திலிருந்து வீழ்ச்சியடைந்து, நான் இங்கு பூமியில் மனிதர்களிடையே வாழ்கின்றேன் !

(120)

நாம் இந்தக் கூரை சரிந்த குகையின்[1] கீழே வந்துள்ளோம்.

(121)

சாவும், சினமும், அழிவின் படைகளும் நிறைந்திருக்கும் துயர்மிகு நாடு ..... ; வாட்டும் கொள்ளை நோய்களும், அழிவும் வெள்ளமும் எற்று என்னும் பசும்புல்வெளியில், இருளில் அலைகின்றன.

(122–123)

இதோனியும், தூரப்பார்வையுள்ள ஈலியோப்பும், மாறுபாடும், சாந்த சுபாவமுள்ள இசைவும், கலிசுத்தோவும், அயுசுக்கிரேயு வும், வேகமும், தாமதமும், இனிமையான உண்மையும், கருமையான மயிரையுடைய தெளிவின்மையும், பிறப்பும், அழிவும், விழிப்பும் நித்திரையும், இயக்கமும், இயக்கமின் மையும், முடிசூடிய மாட்சிமையும் அற்பத்தனமும் அமைதியும் ஓசையும் இவை யாவும் அங்கிருந்தன[2]. R. P. 182 a.

(124)

பரிதாபத்திற்குரியதும் அருளில்லாது துயரடைவதுமான அழி யும் (மனித) வர்க்கமே, இத்தகைய பூசல்களிலிருந்தும், புலம் பல்களிலிருந்துமே நீ பிறந்தாய் :

1. போபைரியினபடி ஆன்மா முதலில் அழைத்துக்கொண்டு வந்த "சதஜி"களால் கூறப்பட்டவைகளே இவ்வார்த்தைகள.

2. இலியத்துவில் உளள "அரமகளிர வரிசை"யை இப்பகுதி மிகவும் ஒத்துள்ளது.

(125)

உயிருள்ள பிராணிகளிலிருந்து அவற்றின் உருவங்களை மாற்றி இறந்தனவற்றை அவன் உண்டாக்கினான்.

(126)

தசையாலான ஒரு விநோதமான ஆடையால் அப்பெண் தெய்வம் அவர்களுக்கு உடையணிவித்தாள்.

(127)

மிருகங்களுள் அவர்கள் தரையில் தமது படுக்கையையும் மலைகளில் தமது குகைகளையும் அமைக்கும் சிங்கங்களாகின்றனர்; அடர்த்தியான இலைகளுள்ள மரங்களுள் அவர்கள் புன்னைகளாகின்றனர். 181.

(128)

கைப்பிரிசு இராணியே யொழிய, எரிசுவோ, கைடொயு மோசுவோ சியசு மன்னனோ, குரோனசுவோ அல்லது பொசெயு தொனோ அவர்களுக்குத[1] தெய்வமாக இருக்கவில்லை. அவளின் அருளைப்பெறும்பொருட்டுப் புனிதபொருள்களையும், வர்ணம் பூசிய உருவங்களையும் தூய சாம்பிராணி, சுங்கிலியம் போன்றவறறையும் காணிக்கையாகஅளித்து, சிவந்த தேனைக் குடிதேறலாக நிலத்தில் வாரத்தனர். படையல் மேடையில் எருதின் இரத்த நாற்றம் வீசவில்லை. ஏனெனில் அதன் உயிரைப் பறித்தபின், அதனுடைய அழகிய உறுப்புகளை உண்பது மிகவும் இழிவான செயலென அவர்கள் கருதினர். R.P. 184.

(129)

ஆழ்ந்த அறிவுச் செல்வத்தையும், எல்லாவகையான திறமைகளையும் பெற்றவனும், அபூர்வமான கல்வியுடையவனுமான ஒருவன் அவர்களிடையே இருந்தான். அவன் தனது மனததால் முயற்சி செய்தபோதெல்லாம், சாதாரணமக்கள் பத்து அல்லது இருபது முறை வாழ்ந்து அறியக் கூடிய அனைத்தையும் முற்றுக அறியும் ஆற்றல் உடையவனாயிருந்தான்[2].

1. பொற்காலததே வாழ்நதோர்.

2. இவ்வடிகள பைதாகரசுவால் எழுதப்பட்டவை எனத திமாயோசு எற கெனவே கூறியிருநதார். சிலர் இக்கவிதைகள் பார்மனைடிசுவால் இயறறப்பட்டவை எனக் கூறினர் என்று இடையோசினிசு கூறியுள்ளபடியால் பெயர் எதுவும் தரப்படவிலலை யென்பது தெளிவு.

(130)

மனிதரிடத்து மிருகங்கள், பறவைகள் ஆதிய யாவும் அடக்கமும் அமைதியான சுபாவமும் உடையனவாய் இருந்தன; எவ்விடத்தும் நட்புணர்ச்சியே நிலவியது. R.P. 184 a.

(131)

மிக அற்பமான ஆயுளையே உடையனவான இவற்றைப் பற்றிக் கூற நான் எடுத்துகொண்ட முயற்சிக்கு உதவ நீ நினைத்திருந்தாயானால், அழியா இயல்புடைய தேவதைகளே! ஓ கலியோப்பியா! அருளுடைய தெய்வங்களைப் பற்றிய புனிதவார்த்தைகளை நான் கூறப்புகும்போதும் எனக்குதவ வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். R. P. 179.

(132)

தெய்வீகமான அறிவுச் செல்வத்தை அடைந்தவன் அருள் பெற்றவன் ஆவான்; தனது இதயத்தில் தெய்வங்களைப் பற்றிக குறைவான அபிப்பிராயம் கொண்டவன் பரிதாபத்துக்குரியவன.

(133)

மனிதன் தனது இதயத்தில் நம்பிக்கை பெறும்பொருட்டு யாவற்றையும் கண்ணால் காணவும், கைகளினால் தொட்டுப் பார்க்கவும் முயல்கிறன். ஆனால் கடவுளை எங்கள் கண்கள் முன்னிலையில் நிறுத்தவோ அல்லது கைகளினால் பற்றவோ முடியாது.

(134)

ஏனெனில் அவரது உடலிலே மனிதத் தலையில்லை, தோள்களிலிருந்து பிரியும் இருகைகளோ, பாதங்களோ வேகமாய் இயங்கும் முழங்கால்களோ அல்லது உரோமமுடைய பாகங்களோ அவருக்கு இல்லை; உலக முழுவதிற் கூடாகவும் மின்னலெனப் பாயும் சிந்தனைகளைக் கொண்ட வர்ணிக்க முடியாத வோர் புனிதமனமே அவர். R. P. 180.

(135)

(இவை சிலருக்குச் சட்டபூர்வமானவையும் மற்றவர்களுக்குச் சட்ட விரோதமானவையும் அல்ல.) யாவருக்கும் உள்ளசட்டமானது விரிந்திருக்கும் காற்றின்மீதும், விண்ணுலகின் எல்லையற்ற ஒளிமீதும், எல்லா இடங்களிலும் பரவியிருக்கிறது. R. P. 183.

(136)

இந்தக் குரூரமான கொலை வதையை நீங்கள் நிறுத்தமாட் டீர்களா ? இதயத்தில் சிறிதும் சிந்தனையினறி நீங்கள் ஒரு வரை யொருவர் இரையாக்கிக்கொளகிறீர்கள் என்பதை உங்க ளால் அறிய முடியவில்லையா ? R. P. 184 b.

(137)

வேற்றுருவிலிருக்கும் தனது சொந்த மகனைத் தந்தை தூகி, இறைவணக்கஞ் செய்து கொண்டே கொலை செய்கிறான். அறிவிழந்தபேதை ! கருணை வேண்டி இவர்கள் யாவரும் பலியிடுவோனிடம் விரைகையில் அவனே இவாகளது இறைஞ் சல்களுக்குச் செவிமடுக்காது யாவரையும் தனது மண்டபங்களில் வதைசெய்து தனது தீய விருந்தைத் தயார் செய்கிறான். இதே முறையில் மகன் தந்தையையும், பிள்ளைகள் தங்கள் தாயையும் பிடித்து உயிரைப் பறித்துத் தமது இனத்து மாமிசத்தை உண்கின்றனர். R. P. 184 b.

(138)

பித்தளையினால் அவர்களது உயிரைப் போக்கி.

(139)

என்னுடைய உதடுகளால், இவற்றை உண்ணும் தீச்செயல் களை நான் செய்வதற்கு முன்னர் இரக்கமற்ற மரணதினம் வந்து என்னை அழித்து விடவில்லையே அநதோ ! R.P. 184 b.

(140)

புன்னை இலைகளை முற்றுக விலக்குவீராக.

(141)

இழிந்தவர்களே, மிகவும் இழிந்தவர்களே ! அவரையைத் தொடாதீர்கள்.

(142)

ஐசிசு என்னும் கவசமணிந்த சியசுவின், கூரையுடன் கூடிய மாளிகையோ அல்லது..... இன் வீடோ அவனை ஒருபோ தும் அனுபவிக்க முடியாது.

(143)

கடினமான வெண்கலத்திலிருந்து வெளிப்படும் ஐந்து ஊற்றுக்களின் நீரிலும் உங்கள் கைகளைக் கழுவிக் கொள் ளுங்கள். R. P. 184 c.

(144)

தீயன செய்யா நோன்பிரு. R. P. 184 c.

(145)

இதனுற்றுன் நீ மிகவும் தீய செயல்களினுல் மனம் குழப் பமடைந்து, உனது ஆத்மாவிலிருந்து அருவருக்கத்தக்க துன்பச் சுமையை இறக்க முடியாதிருக்கினறுய்.

(146–147)

கடைசியில் அவர்கள், மனிதரிடையே கவிஞர்களாகவும், தீர்க் கதரிசிகளாகவும், வைத்தியர்களாகவும், அரசர்களாகவும் தோன் றுகினறனர். அதன்பின்னர் மிகவும் கவுரவிக்கப்படும் கடவுளர் களாக உயர்ந்து அவர்களோடு சரிநிகர் சமானமாக உணவ ருந்தி, குளிர்காய்ந்து வாழ்வா. மனிதர்க்கியல்பான துயர்கள், தீங்குகள், ஊழ்வினை எனபவற்றிலிருந்து அவர்கள் விடுதலை பெற்றவராயிருப்பர். R. P. 181 c.

(148)

மனிதனைச் சூழ்ந்திருக்கும் நிலம்.....

எம்பிடோக் கிளிசும் பார்ம னடிசும்

106. பூரணத்தைக் கண்டுவிட்டதாகக் கூறுபவர்களைப் பற்றி எம்பிடோக்கிளிசு கோபத்துடன் தனது கவிதையின முறபகு தியில் (பகுதி 2) பேசுகிறார். இதை "விசர்" என்றுகூடக் கூறு கிறர் (பகுதி 4). பார்மனடிசுவைப் பற்றியே இவர் இவ்வாறு கரு தினர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இவரை ஐயகொள்கை யினர் என்று கூற முடியாது. ஒவ்வொரு பொருளையும் அது தெளிவாகத் தென்படும் முறையில நனறுக விளங்கிக் கொள்ள முயலாது (பகுதி 4), பிரபஞ்சம் முழுவதற்குமே பூரண விளக்கம் தரும் கொள்கைகளைச் சிறிதுமை சிநதனையில்லாது இயற்ற முயல் வோரை அவர் இழித்துக் கூறினர். பார்மனடிசுவைப் போல, நாம் புலனறிவை ஒதுகிவிடக் கூடாது என்பதே அவரது கருத் தாகும். ஆனுல் எம்பிடோக்கிளிசும் யாவற்றையும் விளக்குவ தற்கான கொள்கையொன்றைப் புனைந்தார் என்பது எமக்கு விரைவில் தெரியவருகிறது. ஆனுல் எம்பிடோக்கிளிசுவினது கொள்கை ஒருமைவாதமன்று.

பார்மனடிசு, எரகிளைட்டசு ஆகிய இருவரது கொள்கை களையும் இணைக்க எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியே எம்பி டோக்கிளிசின் கொள்கையெனப பலர் கூறியுள்ளனர். ஆனுல் எம்பிடோக்கிளிசின் வாதத்தில் எரகிளைட்டசுவின் கருத்துச் சாயைகளைக் காண்டல் சுலபமல்ல. ஈலிய கொள்கைகளுக்கும், புலன்களுக்குமிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்த முனைந்த

கொள்கையென அதைக் கூறுவதே அதிக பொருத்தமான தெனத் தோன்றுகிறது. "இருபபது" உண்மையானதென்பதற் கும் அழியாத்தன்மையுடையதென்பதறகும் ஏலிய மெய்யியற் சிந்தனையாளர் காடடிய காரணங்களே ஏறக்குறைய அதே சொற் களில் எம்பிடோக்ளிசு தருகிறார் (பகுதிகள் 11–15). "கோளம்" என்பது பற்றி அவர் கொண்டுள்ள கருத்து பார்மனிடிசுவின் உள்பொருள வர்ணனையிலிருந்து பெறபபட்டது போலத் தோன் றுகிறது[1]. புலனகளால் அறியப்படும் உலகம் பற்றிய திரிபுக் காட்சியின் பின்னுல் உள்ளது கோளமான, தொடர்பான, நித்தியமான அசைவற்ற பரப்புள்ள ஒரு "பூரணம்" எனப் பார்மனிடிசு கூறினார். இதிலிருந்தே எம்பிடோக்ளிசு தமது கொள்கையை ஆரம்பிக்கிறார். பார்மனிடிசு வர்ணிக்கும் கோளத்தை ஏற்றுகொண்டு, "இதனிலிருந்து, எமது புல னுக்குத் தென்படும் உலகை எவ்வாறு விளக்குவது?" என அவர் தம்மைக் கேட்டுக்கொண்டார் போலத் தோன்றுகிறது. அசைவற்ற இப்பூரணப் பொருளில் இயக்கத்தை எவ்வாறு புகுத்தலாம்? கோளத்தின் அசைவைக் கட்டாயம் மறுக்க வேண்டியிருந்தாலும் கோளத்தினுள்ளே முற்றுக இயக்கத்தை மறுக்க வேண்டிய நிர்ப்பந்தம பாமனிடிசுவுக்கு இருக்க வில்லை. ஆனுல் அவ்வியக்கத்தை அவர் அனுமதித்திருந்தாலும் அதனுல் எவ்வித பயனும் ஏற்பட்டிருக்காது. கோளத்தின் எபபகுதி நகர்ந்தாலும், வெற்றிடம் எதுவும் இல்லையாதலால் நகர்ந்த பொருளின் இடததை உடனே வேறு பொருள வந்து நிரப்புதல் வேண்டும். புதிதாக அவ்விடத்துக்கு வரும் இப் பொருள் முற்றிலும் முன்பிருந்த பொருளின் குணங்களையே உடையதாயிருக்கும்; ஏனெனில "இருப்பது" முழுவதும் ஒன்றே. ஆகவே அசைவின் பயனும், அசையாமையின் பயனும் எவ்வித வேற்றுமையுமினறி ஒரே மாதிரியாகவே இருககும். ஆனுல் கோளப் பொருள் எவ்வித மாறுபாடுமில்லாத ஒரே தன்மையுடைய பொருள் எனக் கொள்ளுதல் உண்மையில் அவசியம்தானு? அத்தகைய அவசியமெதுவும் இல்லையென் பது வெளிப்படை; இருப்பது யாவும் ஒனறுய் இருக்க வேண்டும் எனும் ஆயவதிகமில்லாத பழைய கருத்தே இக்கொள்கைக்குக் காரணம் என்று தோன்றுகிறது. ஆயினும் எமது புலன்கள் எமக்குக் காட்டும் எண்ணிறந்த உருவங்களை நாம் முடிவான சத்துப்பொருள்கள் எனக் கருத முடியாது. அவற்றிற்குத் தமக்கென உறுதியான இயல்பு இல்லை என்பதுடன் அவை நிலையற்றனவாகவும் காணப்படுகின்றன (பகுதி 8). ஆகவே ஒரு

1. பார்மனிடிசுவின் 8 ஆம் பகுதியுடன எம்பி. 27 ஆம் 28 ஆம் பகுதிகளை ஒப்பிடுக.

வரம்புக்குட்பட்ட சிலவற்றை முடிவான சத்துப்பொருள் என நாம் கொள்ளுவதே சரியானதாகும். அப்படிச் கொள்வோ மாயின் "இருப்பது" பற்றிப் பார்மீனிடிசு கூறிய யாவும் இப்பொருள்+ள் ஒவவொன்றுக்கும் பொருந்துமென நாம் கூற லாம். அதன்பின்னர் இவை யாவும் ஒன்றுடனொன்று கலத்த லினால் உண்டாவனவே நிலையற்ற பல்வேறு உருவங்களும் என நாம் இவற்றிறகு விளக்கம் தரலாம். "மூலகங்கள்" என்னும் கருத்துக கண்டிபிடிக்கப்பட்டதும், அவற்றிலிருந்து பிற பொருள்கள் உண்டாவதறகான ஏற்பாடும் உடனடியாகத் தெரிய வந்தது. தனிப்பட்ட பொருள்களைப் பொறுததவரை, அவை தோன்றி நிலையாக இராது மறைகின்றன என எமது புலன்கள் எமக்குக் கூறுவது உண்மையே. ஆனால் அவறறின் தோற்றத்துக்குக் காரணமான மூலகங்களைப் பொறுத்தவரை "இருப்பது" தோனறுவதுமில்லை, அழிவதுமில்லை என்னும் பார்மீனிடிசுவின் கூற்றை நாம் ஒப்புக கொள்வோம் (பகுதி 17). மைலீசியர்களுடைய இயற்கை எவ்வாறு "முதுமையும், முடி வும் அற்றதாய்" இருந்ததோ அதுபோலவே மூலகங்களும் அழிவற்றனவாய் உளளன.

107. எல்லாப்பொருள்களினதும் "நான்கு மூலங்கள்" என நான்கு மூலங்கள் எம்பிடோக்கிளிசினால் கொள்ளப்பட்டவை—தீ, வளி, நிலம், நீர்— வழமையாக "எதிர்ப்புகளை" எனறு கருதப்பட்டனவற்றை— வெப்பமும் குளிரும், ஈரலிப்பும் வறட்சியும்—முற்றிலும் பார் மீனிடிசியக் கொள்கைக்கேற்ப உடைய சததுப் பொருள்களாக்கு வதறகுற் பெறப்பட்டுளளன போலத் தோன்றுகிறது.

வளி என்பதற்கு வானத்தின மேற்பகுதியில் உளள தூய வளியைக் குறிக்கும் கிரேக்க சொலலே உபயோகியாது, கீழ் மண்டலத்திலிருக்கும் அடர்ந்த வளியைக் குறிப்பிடும் சொல்லே உபயோகித்திருப்பதிலிருந்து, இதுவரை மூதற் சொல்லினால் கருதப்பட்டதைத் தவிர்க்க இவர் விரும்பியிருத்தல் வேண்டு மென்பது பெறப்படுகிறது. வளி என்பது தனித்தன்மையுடைய பரப்புள்ள ஒரு பொருள் எனவும், வெறும் சூனிய வெளி, அடர்த்தி குறைந்த பனி ஆகியவற்றிலிருந்து அது வேறுனது என்பதையும் அவர் கண்டுபிடித்திருந்தார். நீர் என்பது முற்றி லும் வேறுன ஒரு பொருளேயொழிய திரவமாக்கப்பட்ட வளி யல்ல[1]. கிளெப்சைட்ருவின் உதவியால் எம்பிடோக்கிளிசு இவ் வுண்மையை நிரூபித்துக் காட்டினார். சுவாசித்தல், இரத்த வோட்டம் ஆகியவற்றை விளக்குதறகு எம்பிடோக்கிளிசு தான் கண்டுபிடித்த இவ்வுண்மைகளை எவ்வாறு உபயோகித்தார் என்

1. அத்தி. 1, 27 ஆம் பிரிவுடன் ஒப்பிடுக.

பதைக் காட்டும் கவிதைகள் இன்றும் உள்ளன (பகுதி 100). நீர்க் கடிகாரங்களுளளேயும் தோறபைகளுக்குள்ளேயும் வளியை அடைப்பதன்மூலம் சூனியவெளியெனபது இல்லையென நிரூபிக்க முயல்வோரை அரித்தோதில் எளனம் செய்கிறார். இத்தகைய பரிசோதனைகள் வளி ஒரு பொருள் என்பதை மட்டுமே நிரூபிக்கின்றன என அவர் கூறுகிறார்[1]. ஆனால் எம்பிடோக்ளிசு நிரூபிக்க முற்பட்டதும் அதுவே. அத்துடன் விஞ்ஞானத்தின் வரலாற்றிலேயே எம்பிடோக்ளிசுவினது கண்டுபிடிப்பு மிகவும் முக்கியமானவொனறாகும். ஆகவே கீழ் மண்டலவளியை நாம் சிரமமின்றி வளி என மொழிபெயர்ப் பில் குறிப்பிடலாம். ஆனால மேல்மண்டலவளிக்கான கிரேக்க சொல்லையும் வளி என மொழிபெயர்க்காது பார்த்துகொள்ளல் வேண்டும். அனக்சகோரசுவே இச்சொல்லை வளிமண்டலக் காற்று எனும் பொருளில், முதலில் உபயோகித்திருப்பதாகத் தோன்றுகிறது.

அத்துடன் " நான்கு மூலங்க "ளுக்கு எம்பிடோக்ளிசு சில தெய்வங்களின் பெயரை, அளித்தார்—" பிரகாசமூள்ள சியசு, உயிரூட்டும் எரா, ஐதோனியசு, நெசுத்திசு" (பகுதி 6). ஆயினும் மூலங்களில எவையெவை இப்பெயர்களினால் அழைக்கப்பட வேண்டும் என்பது எமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. நெசுத்திசு ஓர் சிசிலிய நீர்த்தேவதை எனக் கூறப்படுகின்ற படியாலும் அவளைப் பற்றிய வாணனைகள் சிலவற்றிலிருந்தும் இததேவதை நீரையே குறித்தாள எனத் தெரிகிறது ; ஆனால் ஏனைய மூவரைப் பற்றியும் அபிபிராயபேதம் உளளது. ஆயினும் இதையிட்டு நாம் கவலைப்படவேண்டியதில்லை. மூலகங்களை எம்பிடோக்ளிசு தெய்வங்களென அழைக்கிறார் என்பதை அறிய நாம் ஏற்கெனவே தயாராயுள்ளோம் ; எனெனில் இதற்கு முந்திய சிந்தனையாளரும் தாம் முதற் பொருள்கள் எனக்கொண்டவற்றை இவ்வாறு அழைத்தார்கள் என நாம் ஏற்கெனவே அறிந்துள்ளோம். நாம் நினைவில் வைத்திருக்க வேண்டியதெல்லாம் இச்சொல் அதன் சமயச்சார்பான பொருளில் உபயோகிக்கப்படவில்லை யென்பதே. எம்பிடோக்ளிசு மூலகங்களை வழிபடவோ அலலது அவற்றிற்குக் காணிக்கைகள் வழங்கவோ இல்லை.

" பொருள்களினது மூலகங்கள் " நிரந்தரமானவை யென எம்பிடோக்ளிசு கருதினார். வெறுமையிலிருந்து எதுவும் உண்

1. அரிததோதில் அனகசகோரசுவின பெயரை மட்டுமே இஙகு குறிப்பிடு கிறார். ஆனால அவர் பனமையை உபயோகிததுளளார. அன்றியும 100 ஆம் பகுதியிலிருநது எம்பிடோகஇளிசு கிளைசைட்ரு பரிசோதனையை உபயோகித் தார எனபது எமகுத் தெரிகிறது.

டாக முடியாது ; எதுவும் முற்றுக அழிந்து வெறுமையாக முடியாது (பகுதி 12). "இருப்பது" இருக்கின்றது ; புதியன உண்டாவதறகோ அழிதறகோ இடமில்லை (பகுதி 8). அத்துடன இவை மாறுதலடையாத் தன்மையுடையன வென அவர் கற் பித்தாரென அரித்தோதில் கூறுகிறார். "அவை எப்போதும் ஒரே மாதிரியே உள்ளன" எனக் கூறுவதன் மூலம் எம்பி டோக்கிளிசு இககருத்தை வெளியிட்டார். நானகு மூலகங்களும் "சமமானவை" என்னும் கருத்து அரிததோதிலுக்கு நூதன மாகத் தோன்றிய போதிலும் எமபிடோகிளிசுவின் காலத்தில் யாவர்க்கும் விளங்கக் கூடியதாயிருந்தது. இவை எல்லா வற்றிற்கும் மேலாக, நான்கு மூலகங்களும் இறுதியானவை. வேனய பொருள்கள் யாவும் மூலகங்களாகும் வரை பிரிக்கப் படலாம் ; ஆனால் தீயும் வேனய மூலகங்களும் பிற மூலக மொன்றில் ஆக்கப்பட்டிருந்தன எனக் கூறினுரேயன்றி அவற்றை மேனும் விவரிகக எம்பிடோக்கிளிசினுல் முடியவில்லை.

மூலகங்கள் யாவற்றையும் தம்முள் அடக்குவனவாகவே எம்பிடோக்கிளிசுவின "நான்கு மூலகங்களும்" தரப்பட்டுள்ளன (பகுதி 23) ; எமது புலன்களால் அறியப்படும் இவ்வுலகத்தின் பண்புகள அனைத்திற்கும் இம்மூலகங்களின் வழியாகவே விளக் கம் தரப்படுகிறது. எம்பிடோக்கிளிசினுல் நிறுவப்பட்டதாகக் கூறப்படும் வைத்தியக் கழகத்தினர, தமது வைத்திய முறை யின் அடிப்படையாயிருந்த வெப்பம், குளிர், ஈரலிப்பு, வறட்சி என்னும் "எதிர்ப்புக்களே"யே மூலகங்களாகக் கொண்டனர். இதை நாம் அறிந்தவுடன் இக்கொள்கை முந்திய உள்பொருள் கொள்கைகளுடன் எப்படித் தொடர்பு பட்டிருந்ததெனபதும் எமக்குத் தெரியவருகிறது. பண்பு என்னும் கருத்து அக்கா லத்து உருவாகியிருககவில்லை. அனக்சிமாந்தர் எதிர்ப்புக்களெ னத் தான் குறிப்பிட்டவற்றைப் பொருள்களெனவே கருதினு ரெனபதில் சந்தேகமில்லை. ஆனால் பார்மேனடிசுவின் காலம் வரைக்கும் பொருள் என்னும் சொல்லின் கருத்து முற்றுக உணரப்படவில்லை என்று கூறலாம். இப்போது நாம் அந் நிலையையே அடைந்துள்ளோம். "பண்பு" எனபது பற்றிய கருத்து இன்னமும் தெளிவாக உணரப்படவில்லையாயினும் பொருள் என்பதன் கருத்து முற்றுக உணரப்பட்டுள்ளது.

நான்கு மூலகங்கள் உள்ளதாக எம்பிடோக்கிளிசு கருதிய போதிலும் அவர் அவற்றை இரண்டாகவே பாவித்தாரென—தீயை எதிர்த்து வேனய மூனறுமை—அரித்தோதில் இரு இடங் களில் கூறியுள்ளார். அவருடைய பாடலிலிருந்து நாமே இதைக் கண்டு கொள்ளலாமென்று அவர் கூறுகிறார். பொதுப்படை யான கொள்கையைப் பொறுத்தவரையில் இத்தகைய ஒன்றை

யும் கூற முடியாது. ஆனால் உலக தோற்றம் பற்றிய பகுதிக்கு வரும்போது (பிரிவு 112) தீ உலக தோற்றத்தில ஒரு முகிய பங்கெடுகினறதென்பதைக காணமுடிகிறது. அரிதோதில் இதையே கருதியிருக்கலாம். உயிரியற் பகுதிகளிலும் (பிரிவுகள் 114–116) ஏனய மூன்று மூலகங்களும் ஏறக்குறைய ஒரே முறையில் செயற்படுகையில் தீ தனக்கென ஒரு சிறப்பான பங்கை நிறைவேற்றுவதைக் காண்கிறோம். ஆனால தீ ஏனய வற்றைவிட முதனமை வாய்ந்ததென இதற்குப் பொருள் கொள்ளக் கூடாது ; எல்லாம் சமமானவையே.

பூசலும் காதலும்

108. ஈலிய மெய்யியல் வாதிகளின் கண்டனதின் பின்னர் " இயக்கம் " என்பதறகு விளக்கம் கொடுத்தல அவசியமாகிறது. " நான்கு மூலகங " களையும் கொண்ட ஆதி நிலையிலிருந்து எம்பிடோக்கிளிசு தமது சிந்தனையை துவங்குகிறதைக் காண் கிறோம். பாமனடிசு குறிப்பிட்ட ஒரே தனமையும், தொடர் பும உடைய கோளம் போனறிராது எம்பிடோகிளிசின துவக்க நிலைப் பொருள் ஒரு கலவையாயிருந்தது. இவ்வித்தியாசமே இயக்கம், மாற்றம் என்பவற்றைச் சாத்தியமாகுகின்றது. ஆனால் பைதாகரசு குறிப்பிட்ட " வளி " போனற ஏதாவதொரு பொருள் வெளியேயிருந்து கோளத்தினுள்ளே நுழைந்து மூல கங்களைப் பிரிக்காவிடால் அதனிலின்று ஒன்றும் தோனற முடியாது. ஆகவேதான் எம்பிடோக்கிளிசு அத்தகைய ஒரு பொருள் உண்டெனக கொண்டு அதற்கு பூசல் எனப பெயரும் இட்டார். ஆனால் இதன் விளைவு கோளத்தில் உள்ள மூலகங்களை முறறுகப பிரிப்பதாய் இருக்குமே யொழிய முடிவில் வேறெனறும் நிகழ்வது சாத்தியமாயிராது. ஆகவே மூலகங்களை மீணடும் ஒன்று சேர்த்தற்கு வேறு ஒரு பொருள தேவையாயிருநதது. காதலே இப்பொருள் என எம்பிடோக்கிளிசு கூறினார். மனிதர் களது உடலிலிருந்து, அவர்களைப் புணர்ச்சியை நாடச் செய்யும் இவ்வுணர்ச்சியே மூலகங்களையும் ஒனறு சோக்கிறது எனபது அவரது கருத்து (பகுதிகள் 17, 22). வைத்தியக் கழகம் ஒன்றை நிறுவியவரான எம்பிடோக்கிளிசு இதையும் உடற் றொழிலியல் ரீதியாகவே நோக்கியிருப்பதில் ஆச்சரியமிலலை. தங்கள் உடலிலே உணரக்கூடியதாக இருக்கும காதலுக்கு மூலகங்களிடையேயும இடமிருக்கிற தெனபதை எந்த மனி தனும் இதுவரை கவனிக்கவில்லையென அவர் கூறினார்.

எம்பிடோக்கிளிசு குறிப்பிடும காதலும் பூசலும் வெறும் உடலறற சத்திகளல்ல. அவை இயக்கமுடையனவாயிருந்தபோதி லும் உடற்சார்புடையனவே. அக்காலத்து இவ்வாறு கொள்ளு வது தவிர்க்க முடியாததாயிருந்தது. உடலற்றதாக எதையும் அவர்கள் அப்போது அறிந்திருக்கவில்லை. தான் நிமித்தகார

ணம் எனக் கூறியவை இவ்வாறு அழைக்கப்பட்டமை அரித் தோதிலுக்கு வியப்பை அளித்தது. " எம்பிடோக்ளிசுவின் காதல பொருள்களீல ஒன்று சேர்ப்பதாகையால் நிமித்தகாரண மாயும், கலக்கும் பொருளகளில் ஒன்ருய் இருந்தமையால ஆதிகாரணமாயும் விளங்கிறறு " என அரித்தோதில கூறுகிறர். எம்பிடோகளிசு காதலுக்கும் பூசலுககும் கிலவேளகளில் இயக குகும் ஆற்றலல அளிததுள்ளார் : கில வேளகளில அவற்றையும் ஏனை நான்கு மூலகஙகளுடன சேர்த்து விடுகிறர் எனக் கூறுகை யில் தியோபிறசுத்தோசும் இதே கருத்தையே வெளியிடுகிறர். எம்பிடோக்ளிசுவின் கவிதைப் பகுதிகளீல நோக்கும்போது அவர் இவ்விரண்டையும் பரப்புடைய உடலுளள பொருள்களாகவே கருதினர் என்பதில் ஐயததிறகே யிடமில்லல. இவை ஆறும் " சமமானவை " என எம்பிடோகளிசு கூறினர். காதல் ஏனையவறறுக்குச் சமமான " நீளமும் அகலமும் " கொண்ட தாயிருந்ததெனவும் பூசல் அவற்றுக்குச் சமமான நிறையுடைய தாயிருந்த தென்றும் கூறப்பட்டிருக்கிறது (பகுதி 17).

புணர்ச்சியை உண்டாக்குவதே காதலின தொழில் ; அதை மீணடும் பிரிதது விடுவதே பூசலின் தொழில. ஆனல் இன் ஞெரு முறையில் நோக்கும்போது, இணைப்பது பூசலெனவும், பிரிபபதே காதல எனவும் கூறலாம் என அரித்தோதில் கூறுவதும் சரியே. கோளமானது பூசலினுற் பிரிக்கப்படும் போது, உதாரணமாக, தீயை எடுத்துக்கொண்டால், கோளம் முழுவதிலுமிருந்த தீ சேர்ந்து ஒனருகிவிடுகிறது. மூலகஙகள மீண்டும் காதலினல ஒன்று சேர்க்கப்படும்பொழுது ஒவ்வொரு மூலகமும் பிரிக்கப்படுகிறது. அழிவுக்கே பூசல காரணமாயிருக் கிறதெனக் கொளளபபடுகிற போதிலும், உண்மையில் கோள த்தை அது அழித்து விடுகின்றதாயினும், அவ்வாறு அழிக்கை யில் யாவற்றையும் தோறறுவித்தற்கு அது காரணமாயிருக் கிறதென அரித்தோதில் இன்ஞெரு இடத்தில் கூறுகிறர். ஆகவே எம்பிடோக்ளிசு குறிப்பிடும் காதலுக்கும், " ஒரே தன்மையுடையனவற்றினிடையே உள்ள ஈர்ப்புக் "குமிடையே வித்தியாசம் உண்டென்பதை நாம் கவனித்தல் வேண்டும். உலக உருவாக்கத்தில் இவ்வீர்ப்புக்கு முக்கிய பஙகுண்டென எம்பிடோக்ளிசு கூறியுள்ளார். இது ஒரு தனியான மூலக மல்ல. கோளத்தைப் பூசல பிரிக்கும்போது வெளிபபடும் ஒவ் வொரு மூலகத்தினதும் தனித்தனமையிலேயே இச்சததி செயற் படத் தொடங்குகிறது. ஆனல் இதற்கு மாறுக ஒரே தன்மை யில்லாதனவற்றை, ஒன்றை ஒன்று ஈர்க்கச் செய்வது காதல்.

கலத்தலும் பிரிதலும்

109. பூசல் மூலகங்களைப் பிரித்தவுடன் அவை எத்திசைகளில் இயங்கும் என்பது அவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ? ஒவ்வொன்றும ஒரு குறிப்பிடட திசையில் " ஓடுகிறது " என்பதை விட எம்பிடோக்கிளிசு வேறு விளக்கம் எதுவும் தநதிருப்பதாகத் தோன்றவில்லை (பகுதி 53). தனது சட்டங்கள்[1] எனனும் நூலில் பிளேட்டோ இதனுல் ஒழுங்கிற்கே இடமில்லாது போகிறது எனத் தீவிரமாகக் கண்டிக்கிறார். வாய்ப்புக்கு முகியத்துவம் கொடுத்தவரான எம்பிடோகிளிசு அதைப்பற்றி எவ்விடத்திலும் வாணிக்கவிலலையேயென அரித்தோதில் குறை கூறுகிறர். அத்துடன " மாறுநியதி " எனபதும் குறிப்பிடப்பட்ட போதிலும் அதைப்பற்றிப் போதிய விளக்கம் தரப்படவில்லை. இன்றியமையாமை காரணமாகவோ அல்லது " வலிமிகக அவ்வுறுதிமொழி " காரணமாகவோ பூசல ஒரு குறிப்பிட்ட காலதில கோளததி னுள்ளே புகுகிறது (பகுதி 30). ஆனல் இதற்கு மேலாக ஒன்றும் இது பற்றிக் கூறப்படவில்லை.

மூலகஙகளின இயக்கத்தைக் கூற முற்பட்ட எம்பிடோக்கிளிசு அவை " ஒன்றனூடு ஒன்றுக ஓடுகின்றன " எனக் கூறினர் (பகுதிகள் 17, 34). " நுண்ணுளைகளின் உருவப் பொருத்த "த்தின மூலமாகவே பொதுவாகக் கலததல் விளக்கப்பட்டதென அரித்தோதில கூறுகிறர். " ஒரு தன்மையுடையவற்றினிடையே உளள ஈர்ப்பு "க்கு இதுவே உண்மையான விளக்கம். ஒரே தன்மையுடைய பொருளகளின் " நுண்ணுளைகள் " பெரும்பாலும் ஒரே அளவினவாய் இருப்பதால் இப்பொருள்கள் இலகுவாகக் கலத்தல் கூடும். ஆனல் நுட்பமான பொருள கலப்படையாமலே தடித்த பொருளுக்கூடாக " ஓட " முடிகிறது. அததுடன் நுட்பமான பொருளின் நுண்ணுளைகளுள் தடித்த பொருள் புகவே முடிவதில்லை. அரித்தோதில் கூறுவதுபோல, அணுக் கொளகை போன்ற ஒன்று எற்படவே இது காரணமாகிறது. ஆனல் எம்பிடோக்கிளிசு இதை உணர்ந்திருந்தார் என்பதற்கு எவ்வகை அத்தாட்சியும் இல்லை. அரித்தோதில் எழுப்பும் இன்னொரு வினவும் மிகவும் பயனுள்ளதாயிருக்கிறது. இந்த நுண்ணுளைகள் நிறைந்துள்ளனவா அல்லது வெறுமையாயிருக்கின்றனவா என அவர் வினவுகிறர். அவை வெறுமையாயிருந்தால் வெறுமையே இல்லை என்னும் கூற்று என்னவாகிறது ? அவை நிறைந்திருந்தால், நுண்ணுளைகள் என நாம் கொள்வதில் என்ன பயன் ? இவ்வினுக்களுக்குப் பதிலளிப்பது எம்பிடோக்கிளிசுவிற்குச் சிரமமாயிருந்திருக்கும்.

1. பிளேட்டோ. இது எம்பிடோகிளிசுவை மட்டுமே குறிப்பிடுவதல்ல வாயினும், பிளேட்டோவின் வார்த்தைகளைக் கவனிக்கும்போது அவர் எம்பிடோக்கிளிசுவையே மனதில் வைதது இவ்வாறு கண்டிததாரெனபது தெரிகிறது.

110. ஏற்கெனவே கூறப்பட்டவற்றிலிருந்து காலவட்டத்தில் நான்கு காலப் நான்கு காலப்பிரிவுகள் இருந்தனவெனபது தெளிவாகியிருக் பிரிவுகள்
கும். முதலில் காதலினுல் ஒனறு சேர்ககப்பட்ட மூலகங்களைக் கொண்டகோளம் இருக்கிறது. பினனா காதல வெளியேறுவதும் பூசல் உட்புகுவதுமான நிலை ; இப்போது மூலகங்கள் ஓரளவு இணைந்தும் ஓரளவு பிரிந்தும் இருக்கும். மூன்றுவதாக மூலகங் கள் முறறுகப் பிரிந்துளள நிலை ; இந்நிலையில் காதல் முற்றுக வெளியேறிவிடுவதால் ஒரே தன்மையுடையனவற்றையே இணைக் கும் பூசல பூரணமாகச் செயற்படுகிறது. கடைசியாக மீண்டும் காதல் மூலகங்களை ஒனறு சேர்க்கையில் பூசல் வெளியேறும் நிலையைக் காண்கிறோம். இது மீண்டும் எம்மைக் கோளத்திற் குக் கொண்டு வருகிறது ; காலவட்டம் மீண்டும் புதிதாகத் தொடஙகுகிறது. எமது உலகத்தைப் போன்ற ஒரு உலகம் இவற்றுள் இரண்டாம, நான்காம் காலப் பிரிவுகளிலேயே இருக்க முடியும். நாம் நான்காம் காலப்பிரிவிலேயே இருக் கிறோம், எனபது பொதுவாகக் கொள்ளப்படுகிறதெனத் தோன றுகிறது[1]. ஆனால் பூசல் ஏற்ற நிலையிலிருக்கும் இரண்டாம் படிவத்திலேயே நாம் இருக்கிறோம் எனக் காட்ட முடியும் என நான் நம்புகிறேன்.

111. அழியுந் தன்மையுடைய பொருட்களைக் கொண்ட உலக பூசலினுல்
மொன்று இரண்டாம் படிவததிலும், நானகாம் படிவத்திலும் உண்டானது
உண்டாகியதென எம்பிடோக்கிளிசு கூறியது உண்மையாதலால் எமது உலகம்
(பகுதி 17) எமது உலகம் இவற்றுள் எதுவென அவர் கட்டாயம் தீர்மானித்தே யிருப்பார். எமது உலகத்திற் பூசல் மிகுந்து கொண்டிருக்கிறது என அரித்தோதில் கருதினார் எனபது வெளிப்படை. " முன்புகாதற் காலத்தில் இருந்த அதே நிலை யில் இப்போது பூசற் காலத்தில் உலகம் இருக்கிற "தென எம்பிடோக்கிளிசு கருதுகிறாரென அரித்தோதில் ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். மூலகங்கள் தனித்தனியாக இருக்கும் இவ் வுலகம், பிரியும் நிலையிலுள்ள பொருள்களிலிருந்து தோன்று கிறதெனக் கூறுவது இயற்கைக்கு முரண்பாடானதாகவிருக்கும் என்பதாலேயே எம்பிடோக்கிளிசு காதற் காலப்பிரிவில் பொருள் கள் தோன்றுவது பற்றிக் கூறவில்லை என அரித்தோதில் இன்னோரிடத்தில் குறிப்பிடுகிறார். இக்குறிப்பைப் பார்க்கும்போது

1. இதுவே செலரது கருத்து. ஆனால் அரித்தோதில் முதலியோரது சாட்சியங்கள் மற்றக கருத்துக்கே முற்றிலும் சாதகமாகவுள்ளன எனச் செல்லா ஒத்துகொள்கிறார். ஆகவே இப்பகுதிகள் அரித்தோதிலின் கருததுக் கேறப விளககப்பட்டால் இது பற்றிய சிகலை தீர்நது விடும். செல்லரது பிரச்சினை இப்பகுதிகளின சரியான பொருள் என்ன வெனபது பற்றிய தாகும்.

உலகிற் பூசல் மிகுந்து கொண்டு வருகின்றதென்பதே எம்பி டோக்கிளிசுவின் கருத்தாயிருந்திருக்க வேண்டுமெனத் தோனறு கிறது. அதாவது அவரது கருதுதின்படி பரிணும வளாச்சி யென்பது கோளம் பிரிவடைதலே யொழிய, பிரிவு நீலையி லிருந்த பொருட்கள் ஒன்று சேர்தல் அல்ல எனக் கொள்ள வேண்டும்[1]. பார்மனீடிசுவின் கோளத்திலிருந்து உலகம் எவ் வாறு தோனறியது எனபதை விளகுதலே எம்பிடோக்கிளிசு வின் பிரச்சினையாயிருந்தது என நாம் கொள்வது சரியானால், இம்முடிபையே நாம் எதிர்பார்க்க வேண்டும். உலகம் மேலும் சிறப்படைவதற்குப் பதிலாகக் குனறிக் கொண்டு போகிறதென் னும் பிற கற்பனைகளோடும் இககருத்து நன்கு பொருநதுவ தாயுள்ளது. எம்பிடோக்கிளிசின் கொள்கையை விவரமாக ஆரா யும்போது இப்பொதுக் கொள்கை நிரூபிக்கப்படுகிறதா என பதை நாம் ஆராய்தல் வேண்டும்.

பூசலின் மூலம் உலகம் தோனறுதல

112. "எல்லாப் பொருள்களினதும் நான்கு மூலகங்களும்" கலந்திருக்கும் கோளத்தை எடுத்துக்கொண்டால், மூலகங்கள் எவ்வாறு சில கவிதைப் பகுதிகளில் தெய்வமெனக் குறிப்பிடப் படுகினறனவோ, அவ்வாறே இதுவும் தெய்வமென அழைககப் படுதலக் கவனிகக்லாம். அரிதோதிலும் பல தடவைகளில் இவ்வாறே அதை அழைத்துள்ளார்[2]. காதலும் இந்தக கலவை யில் ஒன்றெனபதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்[3].

1. காதறகால உலகம பற்றி எமபிடோகிளிசு யாதும குறிப்பிடவிலலை யெனக கொளள வேண்டியதிலலை. 17 ஆம பகுதியில அவா இரு உலகஙகளையும் பறறிக குறிபபிடுகிறா எனபது வெளிபபடை. பொதுபபடையாக இரு உலகஙகளை யும் பறறிக கூறியதன பினனா பூசறகால உலகைப பற்றி அவா விரிவாகக் கூற முறபடடனா எனக் கொளளலாம.

2. இது அரிததோதிலின கருததுகைள சிலவறறையும காடடுவதாகும். எம்பிடோகிளிசு கூறுவதுபோல, எல்லாப பொருளகளும "ஒன்றுகச சேர்வத" றகும எல்லாப் பொருளகளும ஒனறினுட சோவதற்கும, விததியாசம உளது. பினனதனபடி அவை கோளதில தமது தனிததன்மையை இழந்து அரித தோதில குறிபபிடும "சடப் பொருள" ஒத்த பொருளாகிவிடும. முனபு கூறியவாறு, வேறு பொருளகளாகப பிரிககமுடியாத மூலகஙகளப பறறிய கொளகை அரிததோதில உணராதவொனறுக விருநதது. ஆனால எம்பிடோக கிளிசுவைப் பொறுத்தவரையில மூலகஙகள, அவை கோளதில இருகையி லும், பிரிநதிருக்குமபோதும், தமது தனமை மாறுமலே இருகின்றன. கோளம ஒரு கலவையெனபதை அரிததோதிலும நன்கு உணர்நதிருந தாரென்க. 1 ஆம அததியாயம 15 ஆம பிரிவில குறிப்பிடபபடடிருகும அனகசி மாநதரது எகமபறறிய பிரசஙகஙகளும ஒப்பிட்டுப பாகக.

3. தேலிசுவினுடைய நீரைப போலவும், அனகசிமீனிசுவுடைய வளியைப போலவும, எரகலீடடசுவினுடைய நெருபபைப் போலவும காதலும் ஒனற னது அடிப்படையாகும் என அரிததோதில கூறியதற்கு இதுவே காரணம்.

முந்திய முறைகளில் வரம்பற்றது எவ்வாறு உலகைச் சூழ்ந் திருந்ததோ அவ்வாறே பூசல் உலகைச் சூழ்ந்திருந்தது என்பது கவனிக்கப்படல் வேண்டும். ஆனால் பூசல் எல்லையற்ற அளவின தல்ல. நான்கு மூலகங்களுள ளாதேனும் ஒன்றுக்கு அல்லது காதலுக்கு அது அளவிற் சமமானது.

விதிக்கப்பட்ட காலம் வந்தபோது பூசல கோளத்தினுட்புகத் தொடங்கியது; காதல் கோளத்தை விடு வெளியேறதொடங் கியது (பகுதிகள் 30, 31). இதைப்பற்றிக் கவிதைப்பகுதிகளி லிருந்து போதிய விவரங்கள் பெற முடியவில்லை. ஆனால் தியோபிறசுத்தோசு இதுபற்றி என்ன கூறினாரெனபது பற்றிய கணிசமான வரலாறு ாத்தியோசு விடமிருந்தும் புளுட்டாக்கின் துரோமதீசுவிலிருந்தும் எமகருக் கிடைக்கிறது.

முதலில் வளி பிரிந்ததென்றும் இரண்டாவதாகத் தீ பிரிந்த தென்றும் எம்பிடோகிளிசு கருதினர். அடுத்ததாக நிலம் தோன்றியது. தனது சுழற்சி காரணமாக மிகவும் அழுத்த மடைந்திருந்த இதனின்றும் நீர் வேகத்துடன் வெளிப்பட்டது. நீரிலிருந்து பனி ஆவியாகத் தோன்றியது; வளியிலிருந்து வானுலகு தோன்றியது; தீயிலிருந்து சூரியன் உண்டானது; எனைய மூலகங்களிலிருந்து உலகப் பொருளகள் அனைத்தும் சூளிர்ச்சியின் மூலம் உண்டாக்கப்பட்டன. **Aet. ii. 6. 3 (*Dox.* p. 334; R. P. 170).**

மூலக்கலவையிலிருந்து வளி பிரிந்தவுடன் அது வட்டமாகப் பரவுகிறதென எம்பிடோக்கிளிசு கருதினர். வளியின் பினனர் தோன்றிய தீ வெளிப்புறம் நோக்கிப பரவுகையில் வேறு இட மொனறும் இடையாமையால் காற்றைச் சூழ்ந்திருந்த திடப் பொருளின் மீதே பரவியது. பூமியைச் சுற்றி இரு அரைக் கோளங்கள் சூழன்று கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று முற்றுகத தீயினால் ஆனது; மற்றது வளியும் சிறிது தீயும் கலந்ததாயிருந்தது. இவற்றுட் பிந்தியதே இரவு என எம்பி டோக்கிளிசு கருதினர். ஒரு கோளத்தில தீ மிகுதியாகச் சேர்ந் திருந்ததனால உண்டாகியதே இவற்றின் இயக்கம் என அவர் கருதினர். ***Ps.– Plut. Strom. fr.* 10 (*Dox.* p. 582,; R. P. 170 a).**

உலகைச் சூழ்ந்திருந்தனவற்றுள் யாவற்றுக்கும் வெளியே யுள்ள இடத்துக்குச் சென்ற காற்றே பூசலினாற் பிரிக்கப்பட்ட முதலாவது மூலகம் எனலாம் (ஒப்பிடுக ப. 38). ஆயினும் காற்று உலகை " வட்டமாக "ச் சூழ்ந்திருந்தது எனும் கூற்றை

எல்லா மூலகங்களும் காதலோடு ஒனறித் தமது தனித்துவத்தை இழந்துவிடு கினறன என அவர் கருதினர். இவவிடத்தில காதலையே அவா தனது " சடப் பொருளுகளுச சமமான " தெனக கொண்டார.

நாம் அதன் பூரண கருத்துடன் கொள்ள வேண்டியதில்லை. வானுலகு மூட்டை வடிவினதாயிருந்ததென எம்பிடோக்கிளிசு கருதினரெனத் தோனறுகிறது. இக்கொள்கையில் ஒபிசக் கருத்துகளின் சாயல் காணப்படுகிறதெனலாம். எவ்வாறுயினும் காற்றின வெளிப்பகுதி வட்டம் உறைந்து கட்டியாகிப் படிகத் தாலானது போன்ற வளைந்த கூரையாகியது. இதுவே உலகத் தின் எல்லையாகியது. வளியைத் திடப்பொருளாக்கி, அதைப் பனிக்கட்டியாக்கியது தீயே என நாம் அறிகிறோம். தீக்குப் பொதுவில் பொருளகளைத் திடப்பொருள்களாக்கும் சக்தியிருந் தது.

உறைந்த வானத்தால் உண்டாகிய குழிந்த கோளத்தின் மேற்பகுதியிலிருந்த வளியின் ஒரு பகுதியை, மேல் நோக்கி வேகத்துடன் பாய்ந்த தீ, வெளியேற்றியது. அவ்வளி தீயிற் சிறிதளவையும், கொண்டு கீழ் நோக்கி இறங்கியது. இவ்வாறே இரண்டு அரைக்கோளங்கள் உண்டாகின : ஒன்று முற்றுகத் தீயை உடையதாய் இருந்தது. இதுவே பகலாய்த் தோன்று வது ; மற்றது இரவிற் றோன்றுவது ; காற்றும் சிறிதளவு தீயும் கொணடது.

மேலேயுள்ள அரைக்கோளத்தில் அதிகம் தீ மண்டியிருப்ப தால் வானுலகங்களின் சமநிலை குழப்பமடைகின்றது. இதன் விளைவாக வானுலகங்கள் சுழலத் தொடங்குகின்றன. இச் சுழற்சி பகல், இரவுகளை உண்டாக்குவது மட்டுமல்லாமல், இதன வேகம் வானம், பூமி என்பனவற்றை நிலைப்படுத்தி வைத்திருக் கிறது. நூலொன்றின் மூனையிலே கட்டப்பட்ட நீர் நிறைந்த கோப்பை வேகமாகச் சுழற்றப்படுமபோது நிலை தளராது இருக் கும் எனும் உதாரணத்தின மூலம் இககருத்து விளக்கப்பட்ட தென அரித்தோதில் கூறுகிறார். இவ்வாறு பரிசோதனைகள் மூலம் விளக்குவது எம்பிடோக்கிளிசுவிற்கு மிகவும் இயல்பான ஓர் பண்பாயிருந்தது. வேகமான இயக்கம் கீழே விழுதலைத் தடை செய்யும் என்பதைக் காட்டவே இவ்வுதாரணம் தரப்பட் டுள்ளது. மையநீக்க விசைக்கும் இப்பரிசோதனைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை யென்ப.

சூரியன, சநதிரன் உடுக்கள பூமி எனபன

113. சூரியனைப் பற்றிக் குறிப்பிடாமலே, இரவு பகல் என்பன விளக்கப்பட்டிருத்தல் கவனிக்கப்பட்டிருக்கலாம். தீயினால் உண் டான அரைக்கோளத்தின் வெளிச்சமே பகல். தீயினால் உண் டான இவ்வரைக்கோளம் பூமியின் மறு பக்கத்திலிருக்கும் போது எற்படும் பூமியின் நிழலே இரவாகும் (பகுதி 48). அப்படி யானால் சூரியன் என்பது என்ன ? புளூட்டாக்கின் துறைமதிலிலிருந்தே எமக்கு இதற்கான விடை கிடைக்கிறது : " சூரியன்

உணமையில் தீப்பொருளல்ல. அது தீயின், நீரிலிருந்து உண்டாவது போன்ற, பிரதிபலிப்பே." புளூட்டாக்கே தனது பாத்திரங்களிலொனறைப் பின்வருமாறு பேசவைக்கிறார் : "வானுலக வெளிச்சத்தின் பிரதிபலிப்பாகத் தோனறி மீண்டும் சலனமற்ற முகத்தோற்றத்துடன ஒலிம்போசுவுக்குப் பினனுல் மறையும் சூரியன் பூமியினுல் உண்டாக்கப்படுவதே எனறு எம்பிடோக்கிளிசு கூறியதைக் கேட்டு நீங்கள் சிரிக்கிறீர்கள்." ஈத்தியோசு பின்வருமாறு கூறுகிறார் : "இரண்டு சூரியன்கள் இருந்தனவென எம்பிடோக்கிளிசு கருதினார். இவற்றுள் ஒன்றே மூலப் பிரதியெனலாம். இதுவே உலகின் ஒரு அரைக்கோளம் முழுவதையும் நிறைததுகொண்டிருக்கும் தீ. தனது பிரதிபலிப்புக்கு எதிராகவே எப்போதும் இருக்கும் தன்மையுடையது இது ; மற்றது நாம் காணும் சூரியன் ; காற்றும் தீயும் கலந்த மற்ற அரைவட்டத்தில் ஏற்படும், மூந்தியதன பிரதிபலிப்பு இது ; வடடமான பூமியினுல் படிகத்தன்மையுடைய சூரியன மீது எற்படுத்தபபடுவது ; தீ நிறைந்த அரைவட்டத்தின இயக்கத்தினுற் சுற்றிவரக் கொணடுசெல்லப்படுகிறது. அல்லது சுருங்கக் கூறுவதாயின் பூமியினுள்ள தீயின பிரதிபலிப்பே சூரியன்".

இவவுரைப் பகுதிகள், குறிப்பாக கடைசிப்பகுதி, சறறேனும் தெளிவாயிலலை[1]. சூரியனென நாம் அழைக்கும் பிரதிபலிப்பு, தீ நிறைந்த அரைக்கோளத்திறகு எதிராக உள்ள அரைக் கோளத்தில் இருக்க முடியாது ; ஏனெனில் அது இரவுக்கான அரைக்கோளம். தீ நிறைநத அரைக்கோளத்திலிருந்து வரும் ஒளி பூமியினுல் மீண்டும் தீ நிறைந்த அவ்வரைக்கோளத்திற்கு ஒரு அடர்நத ஒளிக்கறறையாக வீசப்படுகிறது எனறே நாம் கூற வேண்டும். இதிலிருநது சூரியனென நாம் அழைக்கும் தோற்றமும் பூமியின அளவையே யுடைய தென்பது பெறப்படுகிறது. இக்கொள்கை தோன்றியதற்கான காரணத்தை நாம் ஒருவேளை பினவருமாறு விளக்குதல் கூடும். பிரதிபலிக்கப்பட்ட ஒளியிலுலேயே சநதிரன் பிரகாசிக்கிறது என பது அபபோதுதான கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. புதுமையான கொள்கைகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன், பொருத்தமில்லாத விடயங்களிலும் அவற்றிற்கு இணக்கங்காண முற்படுவது மக்களிடையே ஓர் பொதுவான இயல்பெனலாம். கி.மு. ஐநதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் மனிதர்களுக்கு எவகு டார்த்தாலும் பிரதிபலிக்கப்பட்ட ஒளியே தெரிந்தது ; பைதா

1. தியோபிறசுதோசு மிக நுணுககம் பாரதது செய்த கண்டனம் ஒன்றிலுலேயே இம்மயககம் எறபடடிருத்தல் வேண்டும். இககொள்கையின்படி "இரணடு சூரியன்கள்" இருத்தல் வேண்டுமெனக் கூறுதல அவரிடமிருந்து எதிர்பார்க்கக் கூடியதே.

கரசைப் பின்பற்றியுள்ளோரிற சிலரும் இத்தகையவோர் கொள்கையை நம்பினர் (பிரிவு 150).

இவ்விடயத்தைப் பற்றிக் குறிப்பிடுகையிற்ருன், ஒளி ஓரிடத்திலிருநது இன்னேரிடத்திறகுச் செல்வதற்கு நேரம் எடுக்கிறது எனவும் அது மிகவும் வேகமாகச் செல்வதனலேயே நம்மால அதை அறிய முடியவில்லை யெனறும் எமபிடோக்கிளிசு கூறியிருகக வேணடும்.

" தீயினுல் துண்டிக்கப்படட வளியினுலேயே சந்திரன் ஆக்கப் பட்டிருக்கிறது ; பனிக்கட்டிகளைப போல இதுவும் உறைநது கட்டியாகின்றது. சூரியனிடமிருந்து இது தனது ஒளியைப் பெறுகிறது." அதாவது வானுலகங்களைச் சூழ்ந்திருக்கும் உறைநத வளி எப்பொருளால ஆக்கப்படடிருக்கிறதோ அப்பொருளாலேயே ஆனவோ உறைநத வளி வட்டமே சநதிரன். சந்திரன சூரியனிலும் பார்ககச் சிறியது என எம்பிடோக்கிளிசு கறபித்தார் என இடையோசினிசு கூறுகிறர். பூமிககும் சூரியனுக்கு மிடையே இருநத தூரத்தில் பாதி தூரமே பூமிக்கும் சநதிரனுக்கும் இடையே இருநததென ஈத்தியோசு கூறுகிறர்.

கிரகங்களின மூலமாகவோ, அல்லது பிரதிபலிக்கப்படட ஒளியின் மூலமாகவோ நீலேயான உடுக்களை விளகக எம்பிடோக்கிளிசு முற்படவில்லை. பூசலினுல் முதலில பிரிக்கப்பட்டதும், வேகததோடு மேலெழுந்த தீயினுல், நிலத்தின் கீழே தளளப படடதுமான வளி தனனோடு கொணாநத சிறிது தீயினுலேயே இவை ஆக்கப்பட்டன. நீலேயான உடுகளை உறைந்த வளியுடன் பொருத்தப்பட்டிருநதன. கிரகங்களை எதனிலும பொருத்தப்படாது, எளிதில் இயஙகக்கூடியனவாயிருநதன.

சூரிய கிரகணஙகள் பற்றிய உணமையான கொள்கை எம்பிடோக்கிளிசிற்குத் தெரிநதிருநதது (பகுதி 42). இதுவும் சநதிரனது ஒளி பறறிய கொளகையுமே அகாலததில் கணடுபிடிக்கப் பட்டவற்றுள் முகியமானவையாயிருந்தன. இரவு என்பது முன்பு கருதப்பட்டதுபோல ஒருவகையான வெளிமூசசு அலல வெனறும் பூமியின் கூம்புருவான நிழலே யெனறும் அவர் அறிந்திருந்தார் (பகுதி 48).

தீயினலும், வளியினலும் ஆன அரைக் கோளஙகளின் எதிர்த்திசை இயக்கஙகளினுல் காறறுக்கள் விளக்கப்பட்டன. காறறு அமுத்தப்பட்டபோது, அதனை நுண்ணிய துவாரங்களிலே இருக்ககூடிய நீர் துளிகளாக வெளிப்படுதலே மழை என விளக்கம் தரப்பட்டது. இதே முறையில் மேகங்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட தீயென மின்னலுக்கு விளக்கம் கூறப்பட்டது.

முதலில் நிலததுடன நீர் கலந்திருந்தது. ஆனால் அது சூழறசியின வேகம் காரணமாக மேலும் மேலும் அழுத்த மடைந்தபோது நீர் வேகத்துடன் வெளிக கொணரப்பட்டது. இதனற்றுன கடல " நிலத்தின் வியர்வை " என அழைக்கப் படடது. ஆனால இசசொறருடா வெறும் கவிதை உருவகமே யொழியச் சரியாகப பொருள் கொள்ளகூடியவொனறல்ல என அரிததோதில் கணடனம் தெரிவித்தார். கடலின உப்புத்தன் மையும இவவுமை மூலமே விளக்கப்படடது. சூழியின சூழற் சியில் நிலமும் சோநது கொளகிறதென எத்தகைய நிரூபணமு மினறி நம்பப்பட்டது.

114. தசை, எலுமபுகள் போனற அழியுந்தன்மையுடைய பொருளகள எவ்வாறு நான்கு மூலகங்களும் வெவ்வேறு விகி தங்களில் சேர்வதால் உணடாயின என எம்பிடோகிளிசு விளக்க முற்படடார். இவை யாவும் காதலினால் உண்டானவையே ; ஆனால் இவவுலகம் எக்காலப் பிரிவைச் சேர்நதது என்பது பற்றிய கருததுக்கும் இக்கருததுக்கும் எவ்வித முரண்பாடும் இல்லை. ஒரு காலத்தில காதல முறறுக வெளியேறறப்படு மாயினும், இன்னும் அவ்வாறு நடைபெறவில்லை. இப்போ தும் மூலகச சோகைகளே உண்டுபணணகூடியதாகவே காதல் உள்ளது. ஆனால் பூசல் மிகுந்து கொண்டிருகிறதாகையால், இவை யாவும் அழியக் கூடியனவையே. விதிதமுறைக்கு எம் பிடோக்கிளிசுவின் கொள்கைகளில் அளிக்கபபட்டிருக்கும் முக் கியத்துவததிறகுப பைதாகரசின் கொளகைகளின் செல்வாக்கே காரணம எனபதில் ஐயமில்லை. நிலத்தினுள்ளே இன்னமும் நீரும், என் தீயும் இருக்கினறன வெனபதிலேயே சேதனப் பொருள்களுக்கான சோக்கைகள ஏற்படுதல் தங்கியிருக்கிறது. எட்டுவைபபறறி நாம குறிப்பிடாவிடினும், சிசிலியில் உள்ள வெந்நீர் ஊறறுகள் இதை நிரூபித்தன. வெந்நீர்த்தொட்டி கள் சூடாகபபடுவது பற்றிய உவமையின் மூலம் எம்பிடோக் கிளிசு இவ்வெநநீரூறறுகள் பறறி விளக்கினார். இவ்வுவமை எம்பிடோக்கிளிசுவுககு இயல்பானவோ உவமை எனக்கூறலாம். இவரது உவமைகளில பெரும்பாலானவை மனிதர்களது கண்டு பிடிப்புக்களிலிருந்து அல்லது அவர்களாற செய்யப்பட்ட பொருள் களிலிருந்து பெறப்படடவையாயிருந்தன.

சேதனப் பொருட் சேர்க்கைகள்

115. பூசல், காதல் ஆகியவற்றின வசப்பட்ட நான்கு மூலகங்க ளிலுமிருநதே தாவரஙகளும் மிருகஙகளும் தோன்றின. 77 இல் இருந்து 81 வரையிலுள்ள கவிதைப் பகுதிகள் தாவரங்களே யும மரங்களையும் பறறிக் கூறுவன. இவற்றையும், அரிதோ திலின கூற்றுக்களிற் சிலவற்றையும், மற்றும் தொகுப்பாசிரி யர்களாற் சேகரித்து வைக்கப்பட்டுள்ள செய்திகளையும் சேர்த்துப்

தாவரங்கள்

பார்ப்போமானால் இக்கொள்கை பற்றி ஓரளவுக்கு அறிந்துகொள்ளுதல் கூடும். இது பற்றிக் கூறும் ஈத்தியோசுவின வாசகங்களும் தெளிவற்றனவாயே உள்ளன. ஆயினும் பின்வருமாறு அவற்றை வாசித்துக்கொள்ளலாம்.

இரவு, பகல் என்பன தனித்தனியே உண்டாவதற்கு முன்னர், சூரியன் பரவுவதற்கு முனனர், நிலத்திலிருந்து மேலே முளைத்தெழுந்த முதல் உயிரினங்கள் மரங்களே. அவற்றின் உருவ அமைப்புகளுக்கு ஏற்ற விஇதங்களில் அவை ஆண் பெண் இயற்கைகளே உடையவையாயிருகின்றன. நிலத்திலிருக்கும் வெப்பத்தின காரணமாக அவை மேலெழுந்து வளர்கினறன. கருக்கள் எவ்வாறு கருப்பையின் பகுதிகளாக இருக்கின்றனவோ அவ்வாறே இம்மரங்களும் நிலத்தின பாகங்களாயுள்ளன ; தாவரஙகளிலுள்ள தீ, நீர் ஆதியனவறறிலிருந்து வெளிவரும் கழிவுப் பொருள்களே பழஙகள. ஈரலிப்புக் குறைவாக உள்ள மரங்களிலுளள நீர், கோடை வெப்பத்திலுல் நீராவியாகி வெளியேறும்போது அவை இலைகளே உதிர்கினறன. ஒலிவமரம், தாலம், புன்னைமரம் போன்ற ஈரலிப்பு மிகுந்த மரஙகள் எப்போதும் பசுமையாய் இருக்கின்றன. நிலத்தில் பலவகைச் சத்துப் பொருள்கள இருப்பதும், மரஙகள் வெவ்வேறு வகையான சத்துப் பொருள்களே உறிஞ்சிப் பெறுவதுமே அவறறின் சுவைகளிலுள்ள வேறுபாட்டிற்குக காரணம். திராட்சைப் பழஙகளின் சுவை இடங்களுக்கேற்ப மாறுபடுவது இதனாலேயே. திராட்சைக் கொடிகள் வித்தியாசமாய் இருப்பதல்ல சில உவைன்கள் நல்லாயிருப்பதற்குக் காரணம் ; அவை வளரும் நிலத்தின தனமையே அவற்றிலிருந்து பிழியபபடும் உவைன்கள் நல்லாயிருப்பதற்குக் காரணமாயிருக்கிறது. *Aet. v. 26, 4* **(R. P. 172).**

தாவரங்களில் இருக்கும் நிலம், தீ என்பனவற்றின இயல்பான எதிரியக்கத்தினாலேயே, மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் இரண்டு விதமாகத் தாவரங்கள் வளர்கின்றன என எம்பிடோக்கிளிசு தந்துள்ள விளக்கம் தவருனது என அரித்தோதில் கூறுகிறார். " இயல்பான இயக்கங்கள " என்பதற்கு நாம் ஒரே தன்மையானவற்றிற் கிடையே உள்ள ஈர்ப்பு எனவே பொருள் கொள்ளுதல் வேண்டும் (பிரிவு 109). தியோபிறசுத்தோசும் ஏறக்குறைய இதே கருத்தையே கூறியுள்ளார். ஆகவே பூசலினால் மூலகங்கள் பிரிக்கப்படும்போது நடைபெறும் ஓர் நிகழ்ச்சியெனவே நாம் தாவரங்களின் வளர்ச்சியைக் கருதுதல் வேண்டும். நிலத்தின கீழே இன்னமும் உள்ள தீயில் ஒரு பகுதி (பகுதி 52) மேல்நோக்கி வருகையில், தன் இனத்தை நோக்கிக் கீழ் நோக்கி " ஓடிக்கொண்டிருக்கும் " ஈரம் நீங்காத

நிலத்தைச் சந்திகிறது. இவ்வாறு சநதித்த தீயும் நிலமும், உலகில் இனனமும் எஞ்சியுள்ள காதலின் சத்திக்குடபட்டுச் சேரும்போது எறபடும் நிலையறற சேர்க்கையையே நாம் தாவர மென அலலது மரமென அழைக்கிறோம்.

அரித்தோதிலால் எழுதப்பட்டதெனத் தவருகக் கருதப்படும் "தாவரஙகள் பறறிய ஆராய்சசி" எனும் நூலின் முற்பகுதியில், தாவரங்கள் நோ, இனபம், ஆசை, புலன உணர்வுகள் ஆகியனவற்றை அனுபவித்தன என எம்பிடோக்கிளிசு கருதினு ரெனக் கூறப்பட்டிருக்கிறது. தாவரஙகளில் ஆண, பெண எனும் இரு பால்களின தன்மைகளும் ஒருங்கே அமைந்திருந்தன எனனும் உண்மையை எம்பிடோக்கிளிசு அறிந்திருந்தா ரெனவும் இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. இவ்விடயம் ஈததியோசிஞல் குறிப்பிடபபட்டிருப்பதுடன் அரித்தோதிலினது எனக் கூறப்படும் இந்நூலிலும் ஆராயப்படடிருக்கிறது. அராபிய[1] மூலநூலின் இலத்தீஞக்கத்திலிருந்து பெறபபட்ட பைசாந்திய மொழிபெயர்ப்பை நாம் நம்புவதாயின், இதற்கான காரணத்தை ஓரளவுக்கு அறிதல் கூடும். பால்களைத் தனித்தனியே மூறறுகப் பிரிக்குமளவிற்குப் பூசல் ஆட்சி பெறுத ஒரு காலப் பகுதியில, அதாவது "உலகம் பூரணவளர்ச்சி பெறுத ஓர் நிலையில்" தாவரங்கள் தோன்றின என ஈண்டுக் கூறப்படுகிறது. முதலில் தோன்றிய விலங்கினங்களைப் பற்றியும் இவ்வாறு கூறப்பட்டிருத்தலை நாம் காணலாம். தாவரங்கள் உண்மையில் எவ்வாறு தம்மை விருத்தி செய்து கொள்கின்றன என்பதைப் பற்றி யாதும் கூறாது, எம்பிடோக்கிளிசு, வெறுமனே அவை "மூட்டைகளைப் பயந்தன"—அதாவது பழங்களை—எனக் கூறியிருப்பது வியப்பிற்குரியது (பகுதி 79).

மிருகங்களின பரிணமம்

116. அழியும் தன்மையுடையவை தோன்றுதலும், மறைதலும் இருமுறை நடைபெறுகின்றன என்னும் கூற்றுடன் சேர்ததே (பகுதி 17) விலங்குகளின் பரிணமம் பற்றிய கவிதைப் பகுதிகளையும் (பகுதிகள 57–62) நோக்குதல் வேண்டும். ஈத்தியோசுவின் நூலில் உள்ள ஒரு பகுதியில் இப்பரிணமத்தின நான்கு படிவஙகளும் தெளிவாக வகுத்துக் காட்டப்பட்டுள்ளன. இப்படிவங்களில் இரண்டு உலக வரலாற்றின இரண்டாவது காலப் பிரிவைச் சேர்ந்தவையெனவும் மற்ற இரண்டும் நான்காவது காலப் பிரிவைச் சேர்ந்தவையெனவும் கருத அத்தாடசியிருப்பதையும் நாம் கவனிக்கலாம்.

1. மூனறுவது என்றியின ஆட்சிக்காலத்தே அல்பிரடடு எனும ஆஙகிலேயன அரசபப்திப்பை இததீனில மொழிபெயாத்தனன. மறுமலாச்சிக் காலத்தே இததாலியில வாழ்ந்த இரேகுகன ஒருவன இவவிலத்தீன பதிப்பை மீண்டும் இரேக்க மொழிகுபு பெயாத்தான.

விலங்குகளின வெவ்வேறு உறுப்புக்களும் தனித்தனியே தோனறும காலமே முதலாவது படிவமாகும். இக்காலத்திலேயே கழுத்தில்லாத தலைகளும், தோள்களில்லாத கைகளும், நெறறியில்லாத கண்களும் தோன்றுகினறன (பகுதி 57). உலக வரலாறறின் நானகாவது காலப் பிரிவென நாம அழைக்கும் காலத்தின முதற்படிவததில், அதாவது பூசல வெளியேறுகையில், காதல் புகுந்துகொண்டிருக்கும் நிலையில், இது நடைபெற்றதென்பது தெளிவு. அரித்தோதிலும் இவை நடைபெறற காலம் காதற காலம் எனவே கூறுகிறார. காதல் அதிகரிததுக்கொணடிருக்கும காலத்தையே அவர் காதற்காலம் எனக குறிப்பிடுகிறார். இதற்கிணஙகவே அவர் தனித்தனியே தோன்றிய இவவுறுபபுக்கள பினனர் காதலினால ஒனறு சேர்க்கப்பட்டனவெனக கூறுகிறார.

வெவ்வேறுக உளள உறுபபுகளை ஒனறுக இணைக்கப்படும் காலப்பகுதியே இரண்டாவது படிவமாகும். முதலில அவை சாத்தியமான எல்லா முறைகளிலும இணைகபபட்டன (பகுதி 59). மனித முகங்களையுடைய எருதுகளும், இரட்டைமுகங்களையுடைய பிராணிகளும், இரட்டை மார்புகளை உடையனவும், பலவகைப் பயங்கர விலங்குகளும் இககாலததே தோன்றின (பகுதி 61). இவறறில வாழத் தகுதியுடையனவாய அமைந்தவறறை விட ஏனைய யாவும் இறந்து போயின. இமமுறையிலேயே காதற் காலத்தில் விலங்குகளின பரிணாம வளாச்சி நடைபெறறது.

கோளத்தின் ஒருமை பூசலினால் அழிக்கப்பட்ட காலப் பகுதி மூன்றும் படிவமாகும். ஆகையினால இதுவே எமது உலகின் பரிணாமத்தில் முதலாவது படிவமெனக் கருதப்படும். இன, பால் விதிதியாசஙகள் எதுவுமில்லாத " முழுததனமையுடைய உருவங்களோடு இம்மூன்றுவது படிவம தொடஙகியதெனலாம். தன்னினத்தவற்றை நோக்கி மேலெழும் தீயினால், நிலததையும் நீரையும் கொண்டு இவை உண்டாகபபடடிருந்தன.

நான்காவது படிவததில், வாயிச விருத்தியால மிருகஙகள் உற்பத்தியாகின. இவை பால் ரீதியாகவும் இன ரீதியாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இககாலததே புதிய மிருகங்கள் எவையும் மூலகஙகளிலிருந்து உற்பததியாகவிலலை.

இவ்விருவகைப் பரிணாமங்கள் பற்றிக் கூறும்போதும், வாழ்கிவும் தகுதிவாயந்தன எவையோ, அவையே தொடர்ந்து வாழ முடியும் என்னும் கருத்தினால் எம்பிடோக்கிளிசு முற்றுக ஆட்கொள்ளப்பட்டிருநதார். அரித்தோதில் இதைத் தீவிரமாகக் கண்டித்தார். யாதேனும் ஒரு இலட்சியததுடன் பொருட்கள் அனைத்தும் உருவாக்கப்பட்டிருந்தால் அவை எவ்வா

றிருந்திருக்குமோ அதே முறையில் அவை காலபோக்கில் இயல பாகவும் அமைப்புப் பெற்றுளளன என எம்பிடோக்கிளிசு கருதி ஞா என அரிததோதில குறிப்பிடுகிறார். சில இனங்கள இயல்பா கவே பொருததமான அமைப்புப பெறறிருந்தபடியால், அவை தொடாந்து வாழ முடிகிறது. மனித முகஙகொண்ட எருது கள் போனற பொருத்தமறற அமைப்புடன் பிறநதவை யாவும் அழிந்து போயின. விலஙகுகளின் பரிணம வரலாற்றில் தற் செயல நிகழ்ச்சிகளுகு இகொள்கை அதிக இடமளிக்கிற தென அரித்தோதில் குறிப்பிடுகிறார். முள்ளந்தண்டிலியான மிருகமொன்று தனது உடலத திருப்ப முயறசிக்கையில் தனது முதுகை முறிததுக் கொண்ட தெனவும், அவ்வாறிருப்பது அனுகூலமானவோர் மாற்றம் போலக காணப்பட்டமையால் அதன் பினனர் தொடாந்து அவ்வாறு இருக்கிறதென முள் ளந்தண்டு தோனறியமைக்கு விளக்கம் தரபபட்டிருக்கிறது. இவ்விசிதிர உதாரணம் மனித முகஙகளையுடைய எருதுகளைப் போலல்லாது பூசற் காலத்தைச சேர்ந்ததென்பதும் காதற் காலத்தைச் சேர்ந்ததல்லவெனபதும் கவனிக்கப்படல் வேண டும். இவ்விரு காலங்களிலும், வாழத் தகுதியுடைய அமைப் புப் பெற்றவையே தொடர்ந்து வாழ முடியும் என்னும் நியதிப்படியே பரிணமவளர்ச்சி நடைபெறறது.

117. பூசலிலுல வற்படுத்தபபட்ட மாறுபாடே பால்களுக் உடலியல கிடையே உளள வேறறுமைகளுக் காரணம். ஆணபாலிற் சூடு கூடுதலாக இருந்தது எனவும் கருப்பையின் சூடு கூடிய பகுதி களிலேயே ஆண குழந்தைகள் உருவாகின என்றும் கூறுகை யில (பகுதி 65) எம்பிடோகிளிசு, பாமனிடிசு தனது இரண்டாம் பகுதியில் (பிரிவு 95) கூறிய கருத்துக்குப் புறம்பானவோர் கருதுதையே தெரிவிக்கிறார். கருப்பிண்டத்தின ஒரு பகுதி ஆணின் விந்து நீரிலிருந்தும் இன்னோர் பகுதி பெண்ணின் சுரோணிதத்திலிருந்தும் உண்டாகிறதெனக் கூறப்பட்டது (பகுதி 63). இவ்வாறு குழந்தையின் உடலின் பகுதிகள, ஆண், பெண் ஆகியோரில் வைக்கப்பட்டிருந்தமையே அவர்கள ஒருவரை யொருவர் காணும்போது ஆசையை உண்டாக்கியது (பகுதி 64). ஆணினது விநது நீரிலும் பெண்ணினது சுரோணிததிலும் உளள நுண்ணெலைகளில அமைப்பில் ஒருவகைப் பொருத்தம் இருததல சந்ததி உற்பத்திக்கு அவசியமெனவும் கோவேறு கழுதைகள் மலடாயிருபபதற்கு இவ்வகைப் பொருத்தமின் மையே காரணம் எனவும் எம்பிடோக்கிளிசு விளக்கம் தந் தார். குழநதை உருவாகுவதற்குப் பெற்றோரில எவர் மிக வும் காரணமாயிருந்தாரோ, அவரையே குழந்தை அதிகம் ஒத்திருந்தது. சிலைகள உருவப்படஙகள் ஆதியனவற்றின் செல

வாக்கும் குழந்தைகளின் தோற்றத்தை மாறுபடுத்தியது என்பதும் குறிப்பிடப்பட்டது. விந்துநீர் மிகவும் அதிகமாக இருந்து பிரிவதே ஒரே சூலில இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் பிறப்பதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது. கருப்பிண்டம் சவ்வு ஒன்றினுல் சுற்றப்பட்டிருந்தது எனவும் முப்பத்தாருவது நாளில் உருப்பெறத துவங்கும் கரு நாறபத்தொன்பதாம் நாளில் முற்றுக உருப் பெற்றுவிடும் எனவும் எம்பிடோக்கிளிசு கருதினர். இருதயமே முதலில் உருவாகியதெனவும், நகங்கள் போன்றவை கடைசியாகத் தோன்றினவெனவும் அவர் கூறினர். குழந்தை பிறக்கும் நேரம் வரைக்கும், அதாவது திரவப் பொருளகள் கருப்பையினுள் அதைச் சூழ்ந்திருக்கும் வரைக்கும் சுவாசிப்புத் துவங்குவதில்லை என அவர் கருதினர். எட்டாவது அல்லது ஒனபதாவது மாதத்தில குழந்தை பிறக்கிறது. எட்டாவது மாதத்தின் பததாவது நாளில் பெண்ணின் உடலிற் தாய்ப்பால் தோனறுகிறது (பகுதி 68).

தத்தம் இனத்தைச் சேர எப்போதும் முயன்று கொண்டிருக்கும் (உடலிலுள்ள) நிலமும் தீயும் இறுதியிற் பூசலினுற் பிரிக்கப்படும்போது மரணம் எற்படுகிறது. தீப்பகுதி ஓரளவிற்குத் தற்காலிகமாகப் பிரிக்கப்பட்டிருக்கும் நிலையே நித்திரை. மரனத்தின் பின்னர் விலங்கானது மூலகங்களாகப் பிரிக்கப் படுகிறது. அதன் பின்னர் இம்மூலகங்கள் புதிய கலவைகளாக ஒன்று சேரலாம் ; அல்லது நிரந்தரமாகத “ தத்தம் இனங்களோடு ” சேர்ந்திருக்கலாம். இங்கு சிரஞ்சீவியான ஆனமா என எதைப்பற்றியும் குறிப்பிட இடமில்லையெனலாம்.

ஒரே தன்மையினவானவற் றிடையேயுள்ள ஈர்ப்புச் சத்தி தாவரங்களின் கீழும் மேலுமான வளர்ச்சியில் காணப்படுவது போலவே மிருகங்களின் வாழ்க்கையிலும் காணப்படுகிறது. தாவரங்களில் உள்ள இலைகளும் மிருகங்களின் உரோமமும் ஒன்றே (பகுதி 82). ஓடுள்ள சில மீன்வகைகளைப் பொறுத்த வரையில நிலத்தாலான பாகம் மேலேயிருந்தாலும் (பகுதி 76) பொதுவாக மிருகங்களின் பகுதிகளில் தீயினுலானவை மேல் நோக்கியும், நிலத்தினுலானவை கீழ் நோக்கியுமே செல்ல முனைகின்றனவெனலாம். இன்னமும் உலகில் பெருமளவு காதல் உள்ள தாதலினுலேயே இத்தகைய புறனடைகள் இருக்க முடிகிறது. பல்வேறு இனங்களைச் சேர்ந்த விலங்குகளின் வாழ்க்கையிலும் ஒரே தன்மையுடையனவற்றிற்கிடையே உள்ள இவ்வீர்ப்புச் சத்தி செயற்படுதலை நாம் காணலாம். உடலிற் தீ மிகுதியாக உள்ளவை காற்றில் பறக்கும் தன்மை உடையன வாய் உள்ளன ; எப்போதும் ஒரு ஓட்டின்மீது குந்தியிருந்த நாயைப்போல, உடலில் நிலவியல்பு மிகுதியாய் உடையவை

நிலத்துக்கண்மையிலேயே வாழ்கினறன. நீர் மிகுதியாக உள்ளனவே நீர்வாழ் மிருகங்கள். ஆனால் மீன்கள் இத்தகையன வல்ல. தீ அதிகமாக உள்ள இவை தம்மைக் குளிர்விக்கும் பொருட்டே நீரில் வாழ்கின்றன.

சுவாசானுபவத்தைப் பற்றி எம்பிடோக்கிளிசு மிகுந்த ஆராய்ச்சியுடன் தந்துள்ள விளக்கம் முற்றுக இனறும் பேணப் பட்டுள்ளது (பகுதி 100). சுவாச உறுப்புக்கள் என அழைக்கப்படுவனவற்றல் மாத்திரமல்லாது உடலிலுள்ள நுண்ணெளிகள் யாவற்றினூடுமே நாம் சுவாசிக்கிறோம் என அவர் கருதினர். கிளெப்சைத்திராவின் உதவியால் விளக்கப்பட்டவாறு, இதயத்திலிருந்து உடலின பரப்புப் பகுதிகளை நோக்கியும் மீண்டும் இதயத்தை நோக்கியும் இரததம் ஓடுவதனாலேயே எம்மால மாறி மாறிச் சுவாசிக்க முடிகிறது எனக் காரணம் கூறப்பட்டது.

விலங்குகளின் ஊட்டமும் வளர்ச்சியும், ஒரே தன்மையையுடையனவற்றிற் கிடையே உள்ள ஈர்ப்புச் சத்தியின் மூலம் விளக்கப்பட்டன. உடலின் ஒவ்வொரு பாகத்திலும் நுண்ணிய துவாரங்களுள்ளன வெனவும் அவ்வப்பகுதிக்கேற்ற உணவுத்துகள்கள் இத்துவாரங்களிற் பொருந்திச் சேரும் எனவும் கூறப்பட்டது. இவ்வாறு துவாரங்களிற் பொருந்தக்கூடிய ஒரே தன்மையையுடைய ஊட்ட உணவுகள் இருந்தபோது இன்பம் ஏற்பட்டது; இல்லாதபோது துன்பம் உண்டாகியது. இரத்தத்தை உறையச் செய்த குழப்ப நிகழ்ச்சிகளினூடேயே கண்ணீரும் வியர்வையும் ஏற்பட்டன; இவற்றை இரத்தத்தின் தெளிவுநீர் என்று கூறலாம்.

118. எம்பிடோக்கிளிசுவின் புலனுணர்வுக் கொள்கையைப் பற்றி நாம் தியோபிறசுத்தோசுவின் வார்த்தைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம் : உணர்வு

எம்பிடோக்கிளிசு புலன்கள் யாவற்றையும் பற்றி ஒரே முறையிலேயே விளக்கம் தருகிறார். பொருள்களிலிருந்து வெளிப்படும் ஒருவகை "வெளியொழுக்குகள்" ஒவ்வொரு புலனினூடாள வாயில்களிற் பொருந்துவதாலேயே எம்மால் அவற்றை உணர்ந்தறியக் கூடியதாக இருக்கிறதாக அவர் கூறுகிறார். இதனாலேயே ஒருவருக்குத் தெரிகிற பொருள்களை மறறவர்கள் மதிப்பிடுதல் இயலாது போகிறது; ஏனெனில் சிலரது புலன்களிலுள்ள வாயில்கள் மிகவும் ஒடுங்கியவையாய் இருப்பதினால், அப்பொருள்களிலிருந்து வரும் "வெளியொழுக்குகள்" இவற்றுட் புக முடிகிறதில்லை. வேறு சிலரது புலன்களிலுள்ள வாயில்கள் மிகவும் அகன்றவையாய் இருப்பதால் இவ்வெளியொழுக்குகள் வாயில்களில் முட்டாமல் நேரே தாண்டிச் சென்று விடுவதும் உண்டு. R. P. 177 b.

பார்வையின தன்மையை விளக்கவும் அவர் முயல்கிறார். கண்ணின் உடபகுதியில தீயுளளதெனவும் அதைச் சுற்றி நிலமும் காறறும் இருக்கின்றன எனவும் அவர் கூறுகிறார். விளகுகளிலுள்ள ஒளி வெளிப்படுதல்போல, இக்காறறு, நிலம் ஆகியவறறிற்கூடாக மிகவும் நொய்யதான தீ செலலுதல் சாத்தியமாகிறது (பகுதி 84). தீயும், நீரும் செல்லும் வாயில்கள் ஒன்றுவிட்டொனறுக அமைந்துள்ளன. தீ செலலும் வாயில்களினூடாக நாம் ஒளியுடைய பொருடகளைக் காண்கிறோம்; நீர் செல்வனவற்றுக்கூடாக இருண்ட பொருள்களைக் காண்கிறோம். ஒவ்வொரு வகைப் பொருள்களும் ஒவ்வொரு வகையான வாயிலகளுக்குளளே பொருநதுகின்றன; நிறங்களை அவற்றின் வெளியொழுக்குகளின் மூலமே பார்கக முடிகிறது. **R. P. ib.**

ஆனால எலலாக கண்களும் ஒரேமாதிரியாக அமைக்கப்பட்டனவலல. சில ஒரே தனமையுடையனவான மூலகங்களால உண்டாகபபடுகினறன. வேறு சில எதிர்மாறான தன்மைகளையுடைய மூலகங்களால உணடாக்கப்படடிருக்கின்றன. சிலவறறுக்கு, மத்தியிலேயே தீ இருக்கிறது; சிலவறறுககு வெளியிலே தீ இருககிறது. இதனாலேயே சில விலங்குகள் பகலில நலல பாவையுடையனவாய இருக்கையில எனையவை இரவிற் பாாக்கும் ஆறறலுடையனவாய் இருக்கின்றன. தீ குறைவாக உள்ளவை பகலில நலல பாவை உடையனவாய இருக்கினறன—எனெனில் அப்போதுதான உள்ளேயிருக்கும் தீ வெளியேயிருக்கும் தீயோடு சேர்நது சமநிலைக்கு வருகிறது. இதற்கு எதிரான பொருள் (அதாவது நீர்) குறைவாக உள்ளவை இரவில் நன்றுகப் பார்க்கக் கூடியனவையாய் உள்ளன—எனெனில் அப்போதுதான் உள்ளே குறைவாக உள்ள நீர் வெளியேயிருந்து சமநிலைக்குக் கொண்டுவரப்படுகிறது. ஆனால் தீ அதிகமாய இருககிற கணகள பகலின ஒளியால் கூச்சம் அடையும்—எனெனில் அப்போது தீ மேலும் அதிகரிக்கப்படுவதால் நீரினுடைய நுண்ணிய துவாரஙகளும் தீயினால் நிறைக்கப்பட்டு அடைபடடு விடுகின்றன. இதே முறையில் நீர் அதிகமாக உள்ள கணகள், இரவில் தீயின துவாரஙகள் நீரினால் அடைக்கபபடும காரணத்தால், சததி குறைந்து போய் விடுகின்றன. எல்லாவிடயங்களிலும் எதிாததனமையுடையதே மாறறுக விளங்குமாதலால், வளியினால் நீர் பிரிக்கப்படும்வரை இவ்வாறே தொடர்நது நடைபெறுகிறது. நீரும், தீயும சமமான முறையில் சேர்ந்திருககும பார்வையே மிகவும் நன்றுக அமைநததும் சிறந்ததுமான பார்வையுமாகும். பார்வையைப பற்றி எம்பிடோக்கிளிசு கூறுவது பொதுவில் இதுவேயாகும்.

ஒலி வெளியே எற்படுகிறதெனவும், வெளியேயுளள குரல் களிஞல் உண்டாகும் காறறதிர்ச்சி, காதினுள்ளே சப்திக்கும் போது நமமால் கேட்க முடிகிறதெனவும் அவர் கருதினர். " தசையுடையமூளை " யென அவர் குறிபபிடும் செவியினுள்ளே மணிபோன்ற ஒன்று ஒலிப்பதே செவிப்புலஞகும். காற்று இயஙகும்போது அது கடினமான பகுதிகளில் மோதி ஒலியை உண்டாகுகிறது. சுவாசிப்பதஞலேயே முகர்ச்சி அனுபவம எறபடுகிறது என அவர் கருதினர். இதஞலேயே பலமாகச் சுவாசிபபவர்கள் கூர்மையான முகர்ச்சி உணர்வு பெறறிருக் கிறர்கள் எனவும், சூக்குமமான நுணணிய பொருளகள அதிக மணமுடையவையாயிருபபதற்கு இதுவே காரணமெனவும் அவர் கருதினர். நுண்ணிய துவாரஙகளுக்குள் பொருள்களின் வெளி யொழுக்குகள் பொருந்துவதால் புனனுணர்வு எறபடுகிறது என னும் பொதுப்படையான விளக்கத்தை விட, தொடுகை, சுவை ஆகிய புலனகளபபறறியும் அவை எவ்வாறு எழுகினறனவென றும் அவர் தனியாக எதுவும் கூறவிலலை. மூலகங்களில ஒரே தன்மையுடையவை இருப்பதஞலும் அவற்றின் கலவையி ஞலுமே இன்பம் எற்படுகிறது ; எதிரான தனமையுடையனவற் ருல் துன்பம் உண்டாகிறது. R. P. ib.

இதே முறையில் சிந்தனை, அறியாமை எனபனவறறைப பற்றி மிகவும திட்டவட்டமான விவரஙகள தந்துள்ளார். சிந்த னையும் புலனுணாவைப் போன்றதே எனனும் பொருள தோன்றுமபடியாக, ஒரே தனமையுடையனவற்றிலிருந்து சிந் தனை எழுகினறதெனவும், எதிர்ததன்மைகள காரணமாக அறியாமை உண்டாகின்றதெனவும் அவர் கூறியுள்ளார். ஒவ் வொரு பொருளையும் நாம எவ்வாறு அதன மூலமாகவே பார்க்க முடிகிறது எனபதைப் பற்றிக் கூறிய பின்னர் அவர் பின்வருமாறு மேலும் கூறுகிறார்: " இவற்றிலிருந்தே எல் லாப் பொருள்களும உருவாக்கப்பட்டு இணைக்கப்படுகினறனவாத லாலும் இவற்றின் மூலமே மனிதர் சிந்திக்கினறனர், இனப துனபஙகளை உணருகின்றனர் என்பதாலும்" (பகுதி 107). இக் காரணத்திஞல் நாம் பெரும்பாலும எமது இரத்தத்திலேயே சிததிக்கிறோம். எனெனில உடலின எல்லாப பாகஙகளுளளும இரததத்திலேயே எல்லா மூலகங்களும ஒனருகச் சேர்ந்துள்ளன. R. P. 178.

கலவை சமமாய் அல்லது கிட்டத்தட்டச் சமமாயிருக்கின்ற யாவரும்—மூலகங்கள் அதிகம் பிரிக்கப்படாது, மிகவும் குறை யாமலும் மிகவும் கூடாமலும் இருப்பவர்கள்—கூர்மையான உணர்வுடையவர்களாயும் ஆழ்ந்த புத்தியுடையவர்களாயுமிருப் பர் ; அவர்களுக்கு அடுத்ததாக வருபவர்கள் அதற்கேற்ற

விதப்படி புத்தியுடையவர்களாயிருப்பர். இதற்கு எதிரான நிலையிலிருப்போரே மிகவும் புத்தியற்றவர்களாயிருப்பர். திட்பம் குறைந்தவையும் இடைவெளிகளால் பிரிக்கப்பட்டவையுமான மூலகங்களைக் கொண்டவர்கள் மிகவும் மந்தபுத்தியுடையவர்கள். நுண்ணிய துகள்களாகவுள்ள மூலகங்கள் அடர்த்தியாகத் திணிக்கபபட்டிருபபவாகள் மனமுடுக்குக்கேறப முன்யோசனையதிகமினறி நடபபவர்களாயும் அநேக காரியங்களை ஆரம்பிததுச் சிலவற்றையே முடிகுந தனமையுடையோராயும் இருப்பர். இவர்களின இரத்தம மிகவும் வேகமாக இயங்குவதே இதற்குக் காரணம். தமது உடலின ஒருபகுதியில சரியான கலவையுடையோர அவ்வுறுப்பின தொழிலில் சீராயிருப்பர். இதனாலேயே சிலர் சிறந்த பேச்சாளர்களாயும், சிலர் சிறந்த கைத்தொழிற்றிறமை யுடையோராயும் காணப்படுகின்றனர். பினனவர்கள் கைகளில் நலல கலவையுடையோரா யிருக்கினறனர்; முனனவர் தமது நாக்குகளில் நல்ல கலவையுடையோராய் இருக்கின்றனர்—இவ்வாறே பிற விசேட திறமைகளும் எற்படுகினறன. R. P. ib.

ஆகவே எங்களுக்குள்ளே உள்ள ஒரு மூலகம் வெளியேயுள்ள ஒன்றைச் சந்திக்கும்போதே புலனுணர்வு உண்டாகிறது. எல்லாப் பொருளகளிலிருந்தும் எப்போதும் வெளிப்படும் வெளியொழுக்குகளோடு பொருந்தும் வண்ணம் புலன்களில் உள்ள நுண்ணிய துவாரங்கள், மிகவும் பெரியவையாகவோ, சிறியவையாகவோ இல்லாதிருக்கும் போதே இவ்வுணர்வு எற்படும் (பகுதி 89). சுவாசத்தின் மூலமே முகாச்சி உணர்வு எறபடுகிறது. உள்வரும் சுவாசம் நுண்ணுரோகளுக்குள் பொருந்தக் கூடிய சிறு துகளகளையும தன்னோடு சேர்ததுக்கொண்டே உள்ளே வருகிறது. தலையில் தடிமன் பிடிததவர்களுக்கு, சுவாசிப்பது சிரமமாய் இருப்பதனால், முகரவும் முடியாமலிருப்பதை உதாரணமாகக் காட்டி எம்பிடோக்கிளிசு இதை விளக்கினார். நாய்களின் மோப்பசத்தியும், இக்கொள்கையை நிரூபித்தற்கு எம்பிடோக்கிளிசினால் குறிப்பிடப்படுவதை 101 ஆம் கவிதைப் பகுதியில் நாம் காண்கிறோம். ஆயினும் முகர்ச்சியுணர்வைப் பறறி எம்பிடோக்கிளிசு எவ்வகை விளககமும் தரவில்லை; அத்துடன் தொடுகையுணர்வைப் பற்றியும் அவர் ஒன்றும் கூறவில்லை. செவியினுள்ளே யுள்ள கசியிழையத்துடன் மோதி, அதை அசைத்து மணிபோன்று ஒலிக்கும்படி செய்யும் காற்றின் அசைவே ஒலி எமக்குக் கேட்பதற்குக் காரணமெனக் கூறப்பட்டது.

பார்வையுணர்வு பற்றிய கொள்கை யாவற்றிலும் அதிக சிக்கலானது. அத்துடன் பிளேட்டோ தனது பாத்திரமான

திமாயோசுவை இக்கருத்தை எடுத்தியம்பச் செய்திருப்பதால், இது மெய்யியல் வரலாற்றிலும் மூக்கியத்துவம் வாய்ந்ததாகும். அனுக்மையோன் கருதியது போலவே, (பிரிவு 96) கண் நீரினாலும் தீயாலும் ஆயதெனக் கருதப்பட்டது. விளக்கிலுள்ள தீ நாக்கு எவ்வாறு கொமபினாலான மறைப்பால் காக்கப்படுகிறதோ (பகுதி 84), அதே போலக கதிராளியிலுள்ள தீயும், அதனைச் சூழவுளள மென்சவ்வுகளினால் நீரிலிருந்து காக்கப்படுகிறது. இந்த மென்சவ்வுகளிலுள்ள நுண்ணிய துவாரங்களுக்கூடாகத் தீ வெளியேற முடிந்தாலும் நீர் உட்புக முடியாது. கண்ணினுள்ளே உள்ள தீ வெளியேயுள்ள பொருள்களைச் சென்று சந்திப்பதனாலேயே காட்சி எற்படுகிறது.

"வெளியொழுக்குகள்" எனத் தாம் குறிப்பிட்டவை பொருள்களிலிருந்து கண்களுக்கும் வந்தன என்பதையும் எம்பிடோக்கிளிசு அறிந்திருந்தார். "நுண்ணுரோமகளுக்குள், உருவங்களிலிருந்து (அலலது பொருள்களிலிருந்து) வரும் வெளியொழுக்குகள் பொருந்தி, உணரபபடும் போதே நிறங்கள் தோன்றுகின்றன" என அவர் நிறங்களை வருணித்தார். இவ்விரு கொள்கைகளும் எவ்வாறு பொருந்துகின்றன வென்பதோ அல்லது பிளேட்டோவின திமாயசுவில் உள்ள கொள்கையை எவ்வளவு தூரம் எம்பிடோக்கிளிசுவினது என்று கொள்ளலாம் என்பதோ தெளிவாயில்லை. நாம் இங்கு தந்திருக்கும் கூற்றுக்கள் எறக்குறைய அதையே கருதுவனபோலத் தோன்றுகின்றன.

எம்பிடோக்கிளிசு புலனுகர்வுக்கும் சிந்தனைக்குமிடையே வேறுமை காட்டவில்லை எனத் தியோபிறசுத்தோசு கூறுகிறார். அரித்தோதிலும் எறகெனவே இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நான்கு மூலகஙகளும் நன்றாகக் கலந்திருக்கிற இரத்தம், அதிலும் இருதயத்தை அடுத்துள்ள இரத்தமே புலனுணர்வின மூக்கிய பிறப்பிடம் என்பது எம்பிடோக்கிளிசுவின் கருத்து (பகுதி 105).[1] ஆனால் இதனமூலம், உடலின் மற்றப் பகுதிகளாலும் உணரமுடியும் என்பது தவிர்ககப்படவில்லை; உண்மையில் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் சிந்தனையில் பஙகு உண்டென்பதே எம்பிடோக்கிளிசின் கொளகையாகும் (பகுதி 103). ஆனால் இரததம் மிகவும் நுண்ணிதாகக் கலக்கப்

1. இது சிசிலிய மரபினர்கு மிகவும் இயல்பானவோர் கொளகையாய இருநதது. அரிதோதிலும, சுதோய்ககரும இக்கருத்தையே தழுவினரென்க. இபபோதிருதிசு அனுக்மையோனது கருததைப பினபற்றி உணாவின இருப்பிடம மூளையெனக கொண்டனர். பிற்காலததே பிளேட்டோவின நண்பரான சிராக்கியூசு நாட்டுப பிலிசுதியோன எனபார் இரததததோடு கலந்திருபபதான "விலஙகு இரசம" எனப் பொருள்படும் சொல்லொன்றை உபயோகித்தனர்.

பட்டிருந்ததால் அது புலனுணர்வுக்கு வேண்டிய நுகர்ச்சிக் கூர்மையை அதிகம் பெற்றிருந்தது. எமது உடலின் சேர்க்கையின் மாறுபாடுகளுக்கேற்ப எமது அறிவும் மாறுபடுகிறது (பகுதி 106) எனப் பார்மனிடிசுவின் கவிதையின இரண்டாம் பாகத்தில் (பகுதி 16) தரப்பட்டிருக்கும் கருத்தையே எம்பிடோக்கிளிசும் கொண்டிருந்தார் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

சமயமும் இறையியலும்

119. எம்பிடோக்கிளிசுவின இறையியற் கொள்கை எமக்குச் செனோபனிசுவை நினைப்பூட்டுகையில் அவரது நடைமுறைச் சமயபோதனை, பைதாகரசையும் ஓபிக்குகளையும் நினைவூட்டுகின்றன எனலாம். கவிதையின முற்பகுதியில் சில "கடவுளர்கள்" மூலகங்களினுல் ஆனவர்கள எனக் கூறப்பட்டிருக்கிறது; ஆகையினுல அவர்கள் "நீண்ட காலம் வாழ்பவர" களாயினும் இறத்தல் வேண்டும் (பகுதி 21). மூலகங்களும் கோளமும் கூடக் கடவுளர்கள் என அழைக்கப்பட்டாலும் இஃது அச்சொல்லின் முற்றிலும் வேறுபட்டவோர் பொருளிலேயாகும்— அத்துடன் மூலகங்கள ஒருபோதும் இல்லாது போவதில்லை.

தூய்மையாக்கத்திலுள்ள சமயபோதனைக் கருத்துக்களைக் கவனித்தோமானுல் அவை யாவும் மறுபிறப்புக் கொள்கையோடு தொடர்புடையனவாயிருப்பதைக்காணலாம். இதன் முகியத்துவத்தைப் பற்றி ஏற்கெனவே போதியளவு கூறபபட்டிருகிறது (பிரிவு 42); எம்பிடோக்கிளிசு தரும் விவரங்கள நூதனமானவையே. இன்றியமையாமை யென்னும் கோட்பாடு ஒன்றின்படி பாவம் செய்யும் "நற்றேவதைகள்" வானுலகினுள்ள தமது இருப்பிடத்தை விட்டு நீங்கி மூப்பதினுயிரம் பருவகாலங்களுகு அலையும்படி துரத்தப்படுகின்றன (பகுதி 115). தானும் அத்தகையவோர் கடத்தப்பட்ட தேவதையே யெனவும், விரோதத்தில் நம்பிக்கை வைத்ததாலேயே தான் தனது உயர்ந்த பதவியிலிருந்து வீழசியடைய நேரிட்டதெனவும் எம்பிடோக்கிளிசு கூறுகின்றார். நான்கு மூலகங்களும் வெறுப்புடன ஒன்றிலிருந்து இனனொனறுக்கு அவரை மாறி மாறி எறிகின்றன. இதனுல் அவர் மனிதனுகவும், தாவரமாகவும் மட்டுமல்லாது மீனுகவும் இருந்திருக்கிறார். ஆதித்தீவினைபயனை அகற்றுவதற்கு வழி புனிதமான கிரியைகளை அனுட்டித்தல், தூய்மையாக்கம், புலாலுண்ணுமை என்பனவற்றைக் கைக்கொள்ளலே. எனெனில் விலங்குகள் எமது இனத்தைச் சேர்ந்தவையாதலாலும் அவற்றைக் கொல்லல் தந்தையைக்கொலை செய்வதற்குச் சமமாகும் என்பதனுலுமெனக (பகுதி 137). இக்கூற்றுகளிற் சில அண்டவியலோடு சம்பந்தமுடையனவாய் இருப்பதைக் காணலாம். "வன்மையான

உறுதிமொழி "(பகுதி 115 ; ப. 30), நான்கு மூலகங்கள், ஆதித்தீ வினைக்குக்காரணமாகும் வெறுப்பு, பொற்கால அரசியெனும மகைப்பிரிசு ஆகியன ரண்டும் குறிப்பிடப்படடுள்ளன (பகுதி 128). ஆனால் இவறறில எதுவும் அடிப்படை முகடியத்துவம் வாய்ந்த தலல. அத்துடன் தூய்மையாக்கத்தில் எடுத்தாளப்பட்டிருக்கும் ஆன்மா அழிவின்மைக கொள்கை, எமபிடோக்கிளிசுவின் அண்டவியறகோடபாட்டில் கொஞ்சமேனும் உபயோகபடுத்தப்பட வில்லல. இக்கால மக்களது சமய நம்பிக்கைகளுகளும் அண்ட வியல்பற்றிய அவர்களது கருத்துக்களுக்குமிடையே மிகுந்த வேற்றுமை இருந்திருக்கிறது போலத தோன்றுகிறது. நாம் முனபு குறிபபிட்டுளளவாறு, சில விடயங்கள் இறையியலிலும், அண்டவியலிலும் கையாளப்படடுளளமை எம்பிடோக்கிளிசுவே இவ்வுண்மையை அறியாது விடுதற்குக் காரணமாயிருநதிருக்க லாம்.

அத்தியாயம் 6

இளாசொமெனே நகரத்து

அனக்சகோரசு

காலம்

120. டிமீத்திரியசு பெலேரியசு தனது "பிரதம நீதிபதிகள் இடாப்பு" என்னும் நூலில், கலியாடிசு அல்லது கலியாசு, பிரதம நீதிபதியாயிருந்த காலத்தில் (கி. மு. 480–79) அதென்சு நகரத்தில், அனக்சகோரசு தனது இருபதாவது வயதில் "மெய்யியல் அறிவாளனெனப் பெயர் பெறத் தொடங்கினர்" என்று குறிப்பிட்டுள்ளார். எமக்கு அனக்சகோரசுவின் காலம பற்றி அபொலோடரசு கூறும் அனைத்தும் டிமீத்திரியசு பெலேரியசின் குறிப்பிலிருந்தே பெறப்பட்டவை எனலாம். இம்மெய்யியலாளரது வழக்கு விசாரிக்கப்பட்ட போது இவருக்கு என்ன வயதாகியிருந்தது என்பதைக் கொண்டே இத்திகதி நிர்ணயிக்கப்பட்டிருக்கலாமெனத் தோன்றுகிறது. தற்போது நமக்குக் கிடைக்காத எத்தனையோ ஆதாரங்களிலிருந்து டிமீத்திரியசு இவ்விசாரணையைப் பற்றிய முழு விபரங்களையும் அறிந்திருக்கலாம். எழுபதாவது ஒலிம்பிய ஆண்டில் (கி. மு. 500–496) அனக்சகோரசு பிறந்தார் என்பது அப்பொலோடரசின் ஊகம். அத்துடன் எண்பத்தி எட்டாவது ஒலிம்பிய ஆண்டில் (கி. மு. 428–27) தமது எழுபத்திரண்டாவது வயதில் அனக்சகோரசு காலமாகினர் எனவும் அவர் கூறியுள்ளார். பெரிக்கிளிசுவைவிட அனக்சகோரசு நீண்ட காலம் வாழ்ந்திருக்க முடியாதென்பதும் பிளேட்டோ பிறந்த ஆண்டிலேயே இவர் இறந்திருக்க வேண்டுமென்பதும் அப்பொலோடரசுக்கு மிகவும் பொருத்தமானவையாகத் தோன்றியிருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. அதென்சில் அனக்சகோரசு முப்பது வருடங்களாக வாழ்ந்தார் எனனும் வேறொரு கூற்றும் எமக்குக் கிடைத்துள்ளது. இக்கூற்று யாருடையது என்பது எமக்குத் தெளிவாகத் தெரியாது போனலும் இதுவும் டிமீத்திரியினுடையது என்று கருத இடமிருக்கிறது. எனினும் இக்கூற்று உண்மையானல் அனக்சகோரசு அதென்சில் வாழ்ந்த காலம் கி. மு. 480 இல் இருந்து 450 வரை என நாம் கொள்ளலாம்.

இத்திகதிகள் யாவும் கிட்டத்தட்டச் சரியானவையே என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது. கி. மு. 490 ஆம் ஆண்டுக்கு முன்னரே பிறந்தவரான எம்பிடோக்கிளிசுவைவிட அனக்

சகோரசு வயதாற் கூடியவர் என அரித்தோதில் கூறுகிறார் (பிரிவு 93). "அனக்சகோரசுவுக்குப் பினனர் அதிக காலமாவ தற்குள்ளேயே" எம்பிடோக்கிளிசும் பிறந்துவிட்டார் எனத் தியோபிறசுத்தோசும் கூறியுள்ளார். அனக்சகோரசின் அந்திம காலத்தில் தான் ஓர் இளைஞனாக இருந்ததாகவும் அவர் கி. மு. 460 ஆம் ஆண்டில் பிறந்திருக்க வேண்டும் எனவும் தெமோ கிரித்தோசு கூறியுள்ளார்[1].

121. அனக்சகோரசு இளாசொமெனேயைச் சேர்ந்தவர். இவ ரது தந்தையாரின் பெயர் எகெசிபவுலோசு எனத் தியோபிற சுத்தோசு கூறுகிறார். இவர் விஞ்ஞானம் கற்கும் பொருட்டுத் தமது உடமைகளையும் கவனியாது விட்டுச் சென்றாரென்று இவரைப் பற்றி வழங்கும் வரலாறொன்றுண்டு. நான்காம் நூற்றாண்டிலேயே "கொள்கை வழி" வாழும் மனித ரென இவர் பெயர்பெற்றிருந்தார் என்பது நிச்சயமாகத் தெரி கிறது. உலகியற் பொருளகள் மீது இவருக்கிருந்த பற்றின்மை பற்றிய கதை பிற்காலத்துச் சரித்திர நாவலாசிரியர்களால் நையாண்டியுடன் திரித்தெழுதப்பட்டது. இவற்றைப் பற்றி நாம் இங்கு கவனிக்கவேண்டியதில்லை. அனக்சகோரசு இளை ஞனாயிருந்த காலத்தில் ஐகொசப்பொத்தேமசுவினுள்ளே எரி கல்லொன்று வீழ்ந்த சம்பவம் பற்றிய குறிப்பொன்றுளது. இச்சம்பவம் கி. மு. 468–67 இல் நடந்ததாகும். இச்சம்பவம் நடக்குமென அனக்சகோரசு முன்பாகவே அறிந்திருந்தாரென எமது வரலாற்றுக்காரர்கள் கூறுவது முற்றிலும் அபத்த மானதே. ஆனால் முந்திய அண்டவியற் கருத்துக்களை அவர் முற்றுகக் கைவிட்டமைக்கும் அதென்சு நகரத்தில அவரைக் கண்டனத்துக்காளாக்கிய அண்டவியற் கொள்கைகளை அவர் கடைப்பிடித்தமைக்கும் இந்நிகழ்ச்சியே காரணமாயிருந்ததென நம்ப இடமுண்டு. எப்படியாயினும், இவ்வெரிகீன்கல் வீழ்ச்சிச் சம்பவம் அக்காலத்து மிகுந்த பரபரப்பை எற்படுத்தியது என லாம். பினினி, புளூட்டாகசு ஆகியோரது காலத்திலும் அப்ப கதிக்குச் சென்ற யாத்திரீகர்கள் இக்கல்லைக் காண அழைத்துச் செல்லப்பட்டனர்.

122. அனக்சகோரசு அனக்சிமினிசுவின் சீடர் என வரலாற் றாசிரியர்கள் கூறுவர். இது உண்மையாயிருக்க முடியாது. அனக்சகோரசு பிறப்பதற்கு முன்பே அனக்சிமினிசு இறந்து விட்டார் எனக் கருத இடமுண்டு. "பாரம்பரியம்" என்னும் நூலில் அனக்சிமினிசுவின் பெயரை அடுத்து அனக்சகோரசுவின் அயோனிய நிந்தனையாள ரும் இவரும்

1. தெமோகிரித்தோசுவின் காலம்பற்றி 9 ஆம் அத்தியாயம் 171 ஆம் பிரிவிற் காண்க.

பெயர் தரப்பட்டிருப்பதாலேயே இவ்வாறு கருத இடமேற்பட்டது எனக் கூறுவதோடு நிறுத்திவிட முடியாது. அனக்கசோரசு "அனகசிமினிசுவின் மெய்யியற் சிந்தனையோடு தொடர்பு கொண்டவர்," எனக் கூறும் தியோபிறசுத்தோசுவின குறிப் பொன்றிலிருந்தே இக்கருத்து உண்மையிற் பெறப்பட்டதென்க. இந்நூலின் முன்னுரையில் (பிரிவு XIV) விஞ்ஞானக்கழகங்கள் எனபதற்குத் தரப்பட்டிருக்கும் விளக்கம் ஏற்றுகொள்ளப்பட் டால் தியோபிறசுத்தோசுவின் இக்கூற்றுக்கும திட்டவட்ட மானவோர் பொருளேற்படும். அதாவது கி. மு. 494 ஆம் ஆண்டில் மிலட்டசு நகரம் அழிந்ததன் பின்னரும் பழைய அயோனிய குழு செயற்பட்டிருந்த தெனவும், பிற ஆசிய நகரங்களில இக்குழுவினரின் சிந்தனை மரபு தொடர்ந்து சிறப் பாக வழங்கி வந்ததெனவும் பொருள் கொள்ளத் தோன றும். அத்துடன் இக்குழுவின் மூன்றுவது மாண்புமிக்க சிந் தனையாளனுக்குப் பின்னர் சிறப்பு மிகக மெய்யியலாளன் ஒருவனும் தோன்றவில்லை யெனவும், அனக்சிமினுசுவின் தத்துவமே இக்குழுவின் தலைவாகளாக யார் இருந்தார்களோ அவர்களால் இன்னமும் போதிக்கப்பட்டு வந்த தெனவும் பெறப்படும்.

கி. மு. ஐந்தாம் நூற்றுண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளி லும் ஏற்பட்ட மெய்யியல வளர்ச்சியைப் பற்றி அடுத்து வரும் சில அத்தியாயங்களில் நாம் அடையப்போகும் முடிவுகளை, இந்நிலையிலேயே சுருக்கமாகக் குறிப்பிடல் நன்மை பயக்கும். சிறந்த சிந்தனையாளரைத் தோற்றுவிக்கும் ஆற்றல் பழைய அயோனிய குழுவிற்கு இனனமும் இருந்தபோதிலும் அவர் களை ஒரே சிந்தனை மரபோடு தொடர்ந்து பிணைத்து வைத்திருக் கும் சத்தியை அககுழு இழந்துவிட்டிருந்தது என்பதை நாம் காணலாம். அனக்சகோரசு தன் வழியே சிந்தனையை வளர்த் தார்; மெலிசசுவும் லியூகிப்போசுவும் தமது சிந்தனையின் உண்மையான தோற்றுவாய் எதுவெனப் பிறர் கண்டுகொளளு மளவிற்கு அயோனிய கருத்துக்களைக் கொண்டிருந்தபோதும், ஈலிய முரண்நிலை ஆய்வுமுறையில் அவர்களுக்கிருந்த ஈடுபாடு அவர்களை அனக்சிமினிசுவின் கொள்கைகளை ஏற்பதுடன் திருப் தியடைய விடவில்லை. சாமோசுவைச் சேர்ந்த இப்பன்போனற திறமையற்ற சிந்தனையாளர்கள் தேலிசுவின் செப்பமற்ற கொள் கையையும், இரண்டாந்தர மெய்யியலாளனை இடையோசினிசு போன்றோர் வைதீக அயோனிய வாதத்தையும் ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்படலாயிற்று. இங்கு நாம் தரும் குறிப்புக் களைப் பற்றிய முழு விபரங்களும், தொடர்ந்து வாசித்துச் செல் கையில் வாசகருக்குத் தெரியவரும். இப்போது வாசகர் நினை

வில் வைத்திருக்க வேண்டியதெல்லாம் இதுவே. முந்திய அத்தியாயங்களில கூறப்பட்டுளள சிந்தனைகளுக்கு எவ்வாறு பைதாகரச ஓபிசக்கருத்துக்கள் பினனணியாக நின்றனவோ அதே முறையில் நாம் இப்போது கூறுங கதைக்குப் பழைய அயோனிய மெய்யியற் சிந்தனை முழுவதும் பின்னணியாக அமைந்துளளது.

அதென்சில் வாழ

123. அதென்சில் வாழ முற்பட்ட முதலாவது மெய்யிய லாளர் அனக்சகோரசே. சலாமிசு ஆண்டில் இவர் அங்கு சென ருர். அதெனசுகரு இவர் சென்றதற்குக் காரணமென்ன என்பது பறறி எமக்குத் தெரியவில்லை. ஆயினும் அவர் அப்போது பாரசீகப் பிரசையாய இருந்தார் என்பது எமக்குத் தெரி கிறது. எனெனில அயோனிய புரட்சியின வீழ்ச்சிகுப் பின்னர் இளாசொமெனே அடக்கப்பட்டிருந்தது. அத்துடன பாரசீகப் படையில் அனக்சகோரசு சேர்ந்திருந்தார் என எண்ணவும் போதிய ஆதாரங்களுளள. பெரிகிளிசின் குரு அனக்சகோரசுவே எனக் கூறப்படுகிறது. பிளேடோவினுடைய அத்தாடசி யுடன் இச்செய்தி ஐயத்திறகிடமினறி உறுதிப்படுத்தப்படுகிறது. "**பீதரசு**" என்னும் உரையாடலில பிளேட்டோ சோக்கிரதரைப் பினவருமாறு பேசவைக்கிறார்:

"உயர்ந்த கலைகளைப் பயில விரும்புவோர், உயர்ந்த விடயங களைப் பற்றிக் கூறும் விஞ்ஞானத் துறைகளைப் பற்றிப் பேசுத லும் விவாதிததலும் வேண்டும்; எத்திசையிலும் உயர்ந்த மனப்போக்கையும் திறமையையும் இவவாறே பெற முடியும் போலத் தோன்றுகிறது. பெரிகிளிசு தனக்கு ஏற்கெனவே இயலபாக இருந்த ஆற்றல்களுடன் இததிறனையும் சேர்ததுக் கொண்டான். விஞ்ஞான ஆராயச்சியில ஈடுபட்டிருந்தவரான அனக்சகோரசுவுடன அவன சேர்ந்து கொண்டான் எனத் தோன்றுகிறது. உயர்ந்த விடயங்களைப் பற்றிய அறிவை அவன் பூரணமாகச் சேகரித்துக்கொண்டான; அனகசகோரசுவின் உரை யாடல்களுக்கு முக்கிய பொருள்களாயிருந்த மனம், அறிவாற் றல் ஆகியவற்றின் உண்மைத் தன்மையையும் நனருக அறிந்துகொண்டு தனக்குப் பேச்சுக்கலையில இவற்றில் எவை அனுகூலமாயிருக்குமோ அவற்றை யெல்லாம் ஆழமாக உணர் ந்துகொண்டான்". பெரிக்கிளிசு பிரபலமானவோர் அரசியல் வாதியாவதன் முன்னர் அனக்சகோரசுவுடன தொடர்பு கொண்டிருந்தார் எனபதை இஃது தெளிவாக்குகிறது. அனச்ச கோரசு, டேமன் என்னும் இரு சோபிட்டுகளிடம் பெரிக்கி ளிசு மாணவனுயிருந்தார் என ஐசோக்கிரத்திசும் கூறியிருக்

கிறார். பெரிக்கிளிசுவின் இளமைப்பராயத்திலே[1] டேமனது போதனை அவருக்குக் கிடைத்ததெனபதில் எவ்வித ஐயமும் இல்லை. அனக்சகோரசுவும் அக்காலத்திலேயே அவருக்குக் குருவாயிருந்தார் என நாம் ஊகிக்கலாம்.

அனக்சகோரசுவுக்கும் இயூரிப்பிடிசுவுக்கும் இடையே இருந்த தொடர்பை நிர்ணயித்தல் சிக்கலானது. தொலமிபிலடெல பொசுவின் (கி. மு. 280) அரசவையில் வாழ்ந்த கவிஞனும் நூல்நிலைய அதிபனுமான அய்தோலிய நாட்டு அலெக்சாந்தரிட மிருந்து எமக்கு இத்தொடர்பு பற்றிய மிகப் பழமையான ஆதாரம் கிடைத்திருக்கிறது. இயூரிப்பிடிசை, "தைரியமிக்க அனக்சகோரசுவின வளர்ப்புக்குழந்தை" என அவர் ஓரிடத்தில் வருணிக்கிறார். விஞ்ஞான வாழ்வின் உயரிய தன்மை பற்றிக் கூறும் பிரசித்தமான அககூற்று அண்டவியல் அறிஞருள் எவரையாவது குறிப்பிடுவதாயிருக்கலாம். அனக்சகோரசு வையே அக்கூற்று குறிப்பிடுகிறதெனத் திட்டமாகக் கூற முடியாது. உண்மையில் அக்கூற்றின் இயல்பை நோக்கு மிடத்து அங்கு குறிக்கப்படுபவர் அதிக விருத்தியடையாத அண்ட வியற் கொளகையையுடைய சிந்தனையாளரொருவர் எனவே எண்ணத் தோன்றுகிறது. ஆயின் அனக்சகோரசு தனது மெய்யியற் சிந்தனையைப் படிப்படியாகவே விருத்தி செய்தனர் எனக் கொள்ளுதலும் கூடும். அத்துடன் அனச்சிமினிசுவின் சிந்தனையையே இவர் முதலில் போதித்தனர் என்பதிலும் ஐயமில்லை. அன்றியும் அனக்சகோரசுவின் பிரதான கருத்தை எடுத்துக் கூறும் பகுதி ஒன்று எமகருக் கிடைத்துள்ளது. இதை அனச்சிமினிசுவை விட வேறெவரையும்சார்ந்த சிந்தனை யெனக் கூற முடியாது.

விசாரணை

124. பெலரோன நகரத்து டிமீத்திரியோசு தரும் காலமானத்தை நாம் ஏற்றுக்கொண்டால் பெரிக்கிளிசுவின் அரசியல் வாழ்வின் முற்பகுதியிலேயே அனக்சகோரசுவின் விசாரணை நடைபெற்றதென்பது தெளிவாகிறது[2]. மெலிசியாசுவின் மகனை

1. கி.மு. 460 ஆம் ஆண்டளவிலேயே டேமன அரசியலிற பெரிதும் ஈடுபட்டிருந்தாராகையால் அவா கி. மு. 500 ஆம் ஆண்டளவிற் பிறந்திருக்கவேண்டும். மேயரது கூற்றின்படி, கி. மு. 443 ஆம் ஆண்டின முன்பே இவா சமூகத்திலிருந்து விலக்கப்பட்டுவிட்டா எனக் கொள்ள வேண்டும். கி.மு. 445 இல இவர் விலக்கப்பட்டு, 435 இல் மீண்டும் சேர்த்துக்கொள்ளபபட்டார் எனக கொண்டோமாயின், அதன்பின அவருக்கும சோக்கிரதருகும் இடையே நிலவியதாகக் கூறப்படும் தொடர்புகள் இயல்பாக ஏற்பட்டிருக்கக கூடியவையே. பிளேட்டோ இவரை நேரடியாக அறிந்திருக்க முடியாது.

2. அனக்சகோரசுவின வழகசு, பெலோபபனீசிய போரிற்குச் சிறிது காலத்திற்கு முன்பே விசாரிக்கப்பட தெனவே பொதுவாகக் கூறப்படுகிறது.

தவுக்கிடிடெசுவினுல் மீடிசம் (பாரசீகர்களுக்குச் சார்பான நடவடிக்கை) நாததிகம ஆகியவறறுக்காக அனக்சகோரசு குற்றம் சாட்டப்பட்டாரெனச் சத்தையோசு கூறுவதும் இதுவே. தவுக்கிடிடெசு கி. மு. 443 இல் சமுதாயததிலிருந்து விலக் கப்பட்டாரனுதலால் அனக்சகோரசுவின விசாரணை கி. மு. ஐம்ப தாம் ஆணடளவில் நடைபெற்றதெனக கொளளுதல் பொருந் தும். பெரிக்கிளிசுவின இன்னெரு ஆசிரியரான டேமன சமூ கத்திலிருந்து விலக்கபபட்ட சம்பவததிறகும் அனகசகோர சுவின் விசாரணைக்கும் இதனுல் தொடர்பேறபடுகிறது.[1] இக்கால நிர்ணயம் சரியெனின பிளேட்டோ என தனது நூல்களில் சோக்கிரதர் ஒருமுறையாவது அனக்சகோரசுவைச் சந்தித்த தாகக் கூறது விட்டனர் என்பது எமக்குத் தெளிவாகும். விஞ் ஞானக் கொள்கைகளில் கவனம் செலுத்துமளவிறகுச் சோக் கிரதருக்கு வயதாகுமுன்னரே அனக்சகோரசு தனது கழகத்தை ஆகலேசுவிடம ஒப்படைத்துவிட்டார்[2]. ஆயினும் இவர் மீது நாத்திகன என்னும் குறறசசாட்டு என சுமத்தப்பட்டதென்பதை நாம் பிளேடபோவிடமிருந்து அறியக்கூடிய தாயிருக்கிறது. சூரி யன ஒரு சிவந்த சூடான கல்லெனவும், சந்திரன் பூமியைப் போல மண்ணுலானதெனவும் அனக்சகோரசு போதித்தமையே அவர் நாததிகனெனப்பட்டதறகுக் காரண மெனக. உண்மை யில் அனக்சகோரசு இககொள்கைகளில் நம்பிக்கையுடையவராய் இருந்தார் என்பதை நாம் காண்போம் (பிரிவு 133). எனையவற் றிற்கு, இவர் பெரிக்கிளிசுவினுல் சிறையினின்றும் விடுவிககப் பட்டு அனுப்பப்பட்டார் எனனும் விவரமே மிகவும் பொருத் தமானது. அதென்னில் இத்தகைய நிகழ்ச்சிகள் சாத்தியமா யிருந்தன எனபது எமக்கு ஏற்கெனவே தெரிந்ததே.

இரண்டாம் தாயகமாகத் தான் தழுவிக்கொண்ட நகரிலி ருந்து வெளியேற்றப்பட்ட அனக்சகோரசு தான விரும்பியவற் றைச் சுதந்திரமாகப போதிக்கும் பொருட்டு அயோனியாவுக்கு

[1]. அனக்சகோரசு, குறைநதது 30 ஆண்டுகளாவது அதெனசில் வாழ்ந் தார எனும கூற்றோடு இது முறறுகப் பொருந்துவதாயுள்ளது.

[2]. சோகிரதர் மிகவும் இளவயதினராயிருகும்போதே அனகசகோரசு அதெனசிலிருநது சென்றுவிட்டார எனப் பொருள்படும் வகையிலேயே, **பீடோ** வினுள்ள இபபெயாபெறற பகுதி அமைந்துள்ளது. அனகசகோரசுவின நூல்பறறி ஆகலேசுவிடமிருநதே அவர் கேளவிப்படுகிறர். உடனே அதைத் தருவித்து அதனைச் சோக்கிரதர் வாசிகிறர். அனகசகோரசு அககாலத்தில் அதென்சில் இருந்திருந்தால சோக்கிரதர அவரைத் தம்மிடத்திற்கு அழைதது அவரோடு உரையாடியிருப்பார. பிளேடோவும் அதனை ஓர உரையாடலாக எழுதியிருப்பார். பாமனிடிசு, சேனே எனபோர், சோகிரதரைச சந்தித்தன ரெனச் சித்திரிததுள்ள பிளேட்டோ அனக்சகோரசுவைப்பறறி அவ்வாறு கூறது விட்டது கவனிததறகுரியது.

மீண்டும் சென்றார். அங்கு அவர் மிலட்டசுவின் குடியேற்றப் பகுதிகளுள் ஒன்றாய இலாம்புசகோசுவில் வாழலாயினார். இங்கு கழகம் ஒன்றையும் அவர் நிறுவினார் என எண்ண ஆதாரம் இருப்பதைக் காண்போம். ஆனால இதுவுண்மையானால, அனக்ச கோரசு இறப்பதற்கு முன்னர் சிறிதுகாலம 'இலாம்புசகோசில் வாழந்திருத்தல் வேண்டும்[1]. இலாம்புசகோனியர்கள் இவரது ஞாபகார்ததமாக மனத்திறகும் உண்மைக்கும் அர்ப்பணிக்கப் பட்ட பீடமொன்றைத் தமது சந்தையிடத்தின நடுவே நிறுவி னா. அததுடன் அவரது வேண்டுகோளின பேரில் அவரது இறந்த நாள் ஆண்டு தோறும் பள்ளிப் பிள்ளைகளுககு ஓர் விடு முறை நாளாகக கொண்டாடபபட்ட தெனவும் கூறப்பட்டது.[2]

இவர் எழுதியவை

125. ஒரே ஒரு நூலை மட்டும் எழுதிவைத்துவிட்டுப் போன மெயயியலாளரின் வரிசையில், இடையோசினிசு அனகசகோரசு வின் பெயரையும் தந்துள்ளார். அனறியும், இநநூல உயர்வா னதும் வாசிக்க "இனிமையானதுமான நடையிலே எழுதப் பட்டிருநதது" எனனும் மதிப்புரையையும அவா பேணித்தநதுள் ளார். அலெகசாந்திரிய நூலகவதிபர்களிடமிருநது பெறப்பட்ட தான இக்கூறறுக்கு எதிரான ஆதாரஙகள் எதுவும் இல்லை யெனலாம். காட்சிச் சிததிரஙகளை வரைவோர் அவதானிகக வேண்டிய இயலுருததோற்ற அமைப்புக்கள் பற்றிய நூலொ னறையும் இவா எழுதினாரெனக் கூறப்படுகினறதெனினும் அதனை நம்ப முடியாதெனலாம்[3]. அன்றியும், வட்டத்தின் பரப்புக்காணமுறை பற்றிய நூலொன்றையும் இவர் எழுதினா ரெனனும் கருத்து, புளுடடாக்கின் கூறறொன்றிற்குப் பிழை யாகப் பொருள் கொணடதனாலேற்பட்டதே. அதென்சில் அனகசகோரசுவின் நூல்கள ஒரு திருக்குமாவுக்கு வாஙகக் கூடியனவாயிருந்தன எனும் செய்தியை நாம் **அப்பொலசி** எனும் நூலிற காண்கிறோம்; அந்நூலைப்பற்றிச் சோக்கிரதரைப் பிளேடடோ அதிக நேரம் பேச வைப்பதிலிருந்து, அது கணிசமான அளவினதான நூல எனக் கருதககூடியதாயிருக் கிறது. கி. பி. ஆறும் நூறறாண்டில் கலைக்கழக நூல் நிலையத்தி லிருந்து போலும் சிம்பிளிசியசுவினால் அந்நூலின் பிரதியொன்

1. ஆககேலசுவின வருணனையை அததியாயம் 10, 191 ஆம பிரிவிற் காண்க.

2. அனகசகோரசு கௌரவிக்கப்பட்ட முறைகள் பற்றிய மிகப்பழைய ஆதா ரம் அலுககிடாமசுவே. யோச்சியாசுவின் மாணவனான இவா தனது காலததிலும், அனக்சகோரசுவின நினைவுககு அஞ்சலி செலுததபபடடதெனக கூறுகிறார்.

3. Vitruvius. vii pr. II. தனது சித்திரததில புகழ்பெற்ற சிறநத கலைஞன் ஒருவனுடைய பெயரைப் பொறிகக விரும்பும பொய்யன் எவனும இயூறிப பிடிசுவுககுப் போதித்தவரெனப்படும் மெய்யியலாளரது பெயரையே உடனடியாக நினைவுகூர்வான்.

றைப் பெற முடிந்தது. ஐயதிற்கிடமானவையான இரண்டொரு பகுதிகளைத தவிர்த்து, எமகுக் கிடைத்துள்ள இந்நூற் குறிப் புக்கள் யாவும் இவரிடமிருந்தே பெறப்பட்டுள்ளன. துரதிட் டவசமாக இவர் எடுத்தாண்டுள்ள பகுதிகள் யாவும் பொதுப் படையான கொள்கைகளைக் கூறும் முதற் பாகத்திலிருந்தே பெறப்படுளளமையால், அவற்றின விவரங்களைப்பற்றி நன்முக நம்மால் அறிய முடியாதிருக்கிறது.

126. டியல்சுவின வைப்புமுறைப்படி இந்நூற்பகுதிகள் கீழே நூற் பகுதிகள தரபபடடுள்ளன :

(1) எணணிக்கையிலும் நுண்மையிலும் எல்லையற்றனவா யிருந்த பொருள்கள் யாவும் ஒருங்கே யிருந்தன ; ஏனெனில் நுண்மையும் எல்லையறறதாயிருந்தது. அனறியும் இவையாவும் ஒருங்கே யிருநதபோது ஒன்றன் நுண்மை இன்னெனறின நுண்மையிலிருநது வேறுபடாததாயுமிருநதது. காற்றும் ஈதரும் எல்லையறறனவாதலால் எல்லாப் பொருள்களையும் பரவி நின்றன. எலலாப் பொருள்களுக்குள்ளும் இவ்விரண்டுமே அளவிலும் தொகையிலும் கூடியவை. R. P. 151.

(2) உலகைச் சூழ்நதிருக்கும் பொருட்டொகுதியிலிருந்து காற றும் ஈதரும் பிரிக்கப்படுகினறன. இவ்வாறு உலகைச் சூழ்ந திருக்கும் பொருளும் எலலையற்ற அளவினது. R. P. ib.

(3) நுண்மையானவற்றுள்ளே யாவறறிலும் சிறியதென் றெென்றில்லை ; ஏனெனில் இருககும் எப்பொருளும் பிரிப்பத லால் இல்லாது போவதில்லை. யாவற்றிலும் பெரிய பொருள் என எணணப்படும் பொருளிலும் பார்க்கப் பெரியதானபொருள் எப்போதும் இருநது கொண்டேயிருககும. அது தொகையில் மிகச் சிறியதானதிற்கு எப்போதும் சமமானதாயுமிருக்கும். இப்பொருளகளில் ஒவ்வொனறும் தன்னுடனேயே ஒப்பிடப்படும் போது பெரியதாகவும் அதே நேரத்தில் சிறியதாகவும் உளளது. R. P. 159a.

(4) பொருள்கள் இவ்வாறிருக்கின்றனவாகையால், பல்வேறு சுவைகளையும் நிறஙகளையும் உருவங்களையும் கொணட பல பொருள்களின் வித்துக்களும் வேறு பலவகையான பொருள் களும், இணையும் பொருள்களில் இருப்பதாக நாம் கொள்ளல் வேணடும் (R. P. ib). அனறியும் இப்பொருள்களில் மனிதர் களும் மற்றும் உயிருள்ள மிருகங்களும் உருவாகியுள்ளனர் எனவும் அம்மனிதர்களும் எமமைப் போல கமத்தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டனரெனவும், எம்மைப் போல அவர்களுக்கும் சூரியன் சந்திரன் என்பன இருந்தன எனவும் நாம் கொளளல் வேண்டும். அவர்களது நிலத்திலிருந்து அவர்

கள் பல பொருள்களைப் பெற்றுக்கொண்டனரெனவும் அவற்றுட் சிறந்தனவற்றை அவர்கள் தமது இல்லங்களுக்குக் கொண்டு சென்று உபயோகித்தனரெனவும் நாம் கொள்ளல் வேண்டும் (R. P. 160b). பொருள்கள் பிரிதல், எம்மிடத்தே மட்டும் நிகழ்வ தொன்றல்ல, பிற இடங்களிலும் நிகழ்வதே என்பதைக் காட்டும் பொருட்டு நான் பிரிதல் பற்றி இவ்வளவும் கூறியுள்ளேன்.

ஆனால் இவை பிரியுமுன்னர், பொருள்கள் யாவும் ஒன்று யிருந்தபோது நிறங்களைத் தானும் கண்டு கொள்ளுதல் இய லாததாயிருந்தது. எனெனில் வேறுபட்ட பண்புகளையுடைய எண்ணற்ற பல பொருள்கள்—ஈரலிப்புடையனவும் பசுமையான வையும், சூடானவையும் குளிர்ந்தவையும், ஒளி பொருந்திய வையும், இருளானவையும் அதிக மணல் சேர்ந்தனவுமான பொருள்கள்—கலந்திருந்தன. இவ்வாறு இவை யாவும் கலந் திருந்தமையாலேயே இவற்றைத் தனித்தனியே இனங்கண்டு கொள்ளுதல் இயலாதிருந்தது. எனெனில் இப்பொருளகளில் ஒன்றுவது மற்றதைப்போலில்லை. இப்பொருள்கள் இவ்வாறு இருத்தலால், பொருள்கள் யாவும் முழுமையிலுள்ளன வெனக் கொள்ளுதல் வேண்டும். R. P. 151[1].

(5) இப்பொருள்களைப் பற்றி இவ்வாறு முடிவு செய்ததன் பின்னர், இவை யாவும் கூடியோ அன்றிக் குறைந்தோ இல்லை எனவும் அறிதல் வேண்டும். எனெனில் யாவற்றிலும் பார்க்க அவை கூடுதலாக இருத்தல் சாத்தியமில்லை ; அத்துடன் யாவும் எப்போதும் சமமாய் உள்ளன. R. P. 151.

(6) பெரியனவற்றின் பகுதிகளும் சிறியனவற்றின் பகுதி களும் தொகையிற் சமமாயிருக்கின்றபடியாலும் ஒவ்வொரு பொருளிலும் எல்லாப் பொருள்களும் இருக்கின்றன. இவை பிரிந்திருப்பதும் சாத்தியமில்லை; ஆனால் எல்லாப் பொருளகளும், எல்லாவற்றின் பகுதிகளையும் உடையனவாய் இருக்கின்றன. யாவற்றிலும் மிகக் குறைந்ததான ஒன்று இல்லையாதலால் இவற்றைப் பிரிக்கவும் முடியாது ; இவை தாமாகத் தனியே இருக்கவும் இயலாது ; ஆரம்பத்தில் இருந்ததுபோல யாவும் ஒன்றுகவே, இப்போதும் இருத்தல் வேண்டும். எல்லாப் பொருள்களிலும் பல பொருள்கள் உள்ளன. பிரியும் பொருள் கள் யாவற்றிலும், சிறிய பொருள்களும் பெரிய பொருள்களும் சமமாக உள்ளன.

1. இதனை ஓர் தொடர்பான பகுதியாக, சிம்பிளிசியசு மும்முறை மேற் கோளாகக கையாண்டிருக்கிறாதலால், நாம் இதனைப் பிரிததல பொருந்தா தென நான் முதறபதிப்பில் எலவே சுட்டிக்காட்டியிருநதேன. இப்போது டியல்சுவும் இதனை ஒரே பகுதியாகவே அச்சிடுகினறார்.

(7) பிரிக்கப்படும் பொருள்களின் எண்ணிக்கையை நாம் சொல்லிலோ செயலிலோ அறிய முடியாதபடி.....

(8) ஒருலகில் உள்ள பொருள்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டோ கோடரியினால் வெட்டப்பட்டோ இல்லை ; சூடானவை குளிர்ந்தனவற்றிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கவில்லை. குளிர்ந்தவை சூடானவற்றிலிருந்து பிரிக்கப்பட்டுமில்லை. R. P. 155 e.

(9) இப்பொருள்கள் சுழனறு, அச்சுழற்சியின் வேகத்தாலும் விசையாலும் பிரிக்கப்படுகையில்.....வேகமே விசையை உண்டாக்கின்றது. ஆனால் இவறறின் வேகம் இப்போது மனிதரிடையேயுள்ள எதனது வேகத்தையும் போன்றதல்ல. எல்லா வழிகளிலும் பல மடங்கு கூடியதாகும்.

(10) மயிரல்லாததிலிருந்து எவ்வாறு மயிர் உண்டாதல் கூடும் ? அன்றேல் தசையல்லாததிலிருந்து எவ்வாறு தசையுண்டாதல் கூடும் ? R. P. 155, f, n. I.

(11) ஒவ்வொரு பொருளிலும், நூசு தவிர்ந்த ஏனைய பொருள்கள் எல்லாம சிறிதளவு உளது. நூசும் உள்ள பொருள்களும் சில உள. R. P. 160 b.

(12) ஏனைப் பொருள்கள், பிற பொருள்கள் யாவற்றையும் கொண்டவையாய் இருக்கையில் நூசானது எல்லையற்றதாயும் தன்னியல்புடையதாயும் வேறென்றேடும் கலவாததாயும் தானேயாய்த் தனித்துள்ளதாயும் இருக்கிறது. எனெனில் அது தனித்திராது, வேறு எதனோடும் கலந்திருப்பதாயின், அது எல்லாப் பொருள்களோடும் கலந்திருப்பதாகிவிடும் ; எனெனில் நான் முன கூறியவாறு ஒவ்வொரு பொருளிலும் சிறிதளவு ஏனைய ஒவ்வொரு பொருளும் உளது ; அத்துடன் இவ்வாறு பல பொருள்கள் கலந்திருப்பின் நூசு தடைசெய்யப்படுமாதலின், இப்போது தனித்திருக்கையில் அதற்கிருக்கும் சத்தி அதற்கு ஒன்றன்மீதும் இல்லாது போய்விடும். எனெனில் அது யாவற்றிலும் மிகவும் நொய்யதும், தூய்மையுடையதும், மிகக் கூடிய வலிமையுடையதும், யாவற்றையும் பற்றிய அறிவும் படைத்ததுமாயுள்ளது. பெரியனவும் சிறியனவுமான உயிருள்ள எல்லாப் பொருள்களமீதும் நூசு அதிகாரம் உடையதாயிருக்கின்றது. சுழறசி முழுவதன்மீதும் நூசு அதிகாரமுடையதாயிருந்தது. ஆகவே ஆதியிலேயே அது சுழலவாரம்பித்தது. ஆனால் அச்சுழற்சி இபபோது முன்பிருந்ததிலும் கூடிய வெளியை வியாபிக்கிறது ; இனனும் கூடிய வெளியையும் அது காலப்போக்கில் வியாபிக்கும். ஒனறுகக் கலந்திருப்பவையும் பிரிந்துள்ளவையும் பிரித்தறியக்கூடியனவுமாயுள்ள பொருள்கள் யாவும் நூசின் மூலமாகவே அறியப்படுகின்றன. முன்பு இருந்து தற்

போது இல்லாத பொருள்கள், பின்னர் இருக்கப்போகின்ற பொருள்கள், இப்போது இருக்கின்ற பொருள்கள் ஆகிய யாவும் நூசுவினுல் ஒழுங்குபடுத்தப்பட்டன. பிரிந்திருக்கும் ஈதர், காற்று என்பனவற்றையும், சூரியன, சந்திரன், விண்மீன்கள் என்பன வற்றையும் உள்ளடக்கிய இச்சுழற்சியும் நூசுவினுல் ஒழுங்கு படுத்தபபட்டதே. இச்சுழற்சியே இவற்றின பிரிவை உண்டாக் கியது. ஐதானவற்றிலிருந்து அடர்த்தியானவையும், குளிர்ந்தன வற்றிலிருந்து சூடானவையும், இருண்டனவறறிலிருந்து ஒளி பொருந்தியனவும், ஈரலிப்புடையனவற்றிலிருந்து வறண்டவை யும் பிரிக்கப்பட்டன. அனறியும் பல பொருள்களிற் பல பகுதி கள் உள்ளன. ஆனுல் எந்தப் பொருளும் முற்றுகப் பிரிக்கப் படவில்லே. அன்றியும் நூசுவிடமிருந்தேயொழிய மற்றப் பொருள் களிலிருந்து எப்பொருளையும் தனித்தறியவும் முடியாது. சிறி யனவாயும் பெரியனவாயும் உள்ள நூசு முழுவதும் ஒரே தன்மையதாய் உள்ளது. எந்தப் பொருளும் வேறு எந்தப் பொருளையும் போன்ற தன்மையுடையதல்ல. ஆனுல் ஒவ்வொரு பொருளும் அதில் எப்பொருள்கள் அதிகமாக உள்ளதோ அப்பொருளின் தன்மையையுடையதாயிருந்தது. இப்போது அவ் வாறேயுள்ளது. R. P. 155.

(13) பொருள்களை நூசு நகர்த்த ஆரம்பித்ததும், நகர்த்தப் பட்ட பொருள்கள் யாவும் பிரிய ஆரம்பித்தன. அன்றியும் நூசு இவற்றை இயக்கியவரையிலும் எல்லாப் பொருளகளும் பிரிந்து போயின. பொருள்கள் இயக்கத்துக்குள்ளாகிப் பிரிந்த போது, சுழற்சி அவற்றை மேலும் அதிகமாகப் பிரியச் செய்தது.

(14) எது இருப்பினும் நூசு இருப்பது உறுதியே. வேறைய பொருள்கள் யாவும் இருக்கும் இடத்திலும், சூழவிருக்கும் பொருட்டொகுதியிலும், அதனேடு சேர்ந்தனவற்றிலும், அத னின்று பிரிக்கப்பட்டவற்றிலும் நூசு உள்ளது.

(15) அடர்த்தியானவையும், ஈரலிப்புடையவையும், குளிர்ந்த வையும், இருண்டவையும், இப்போது பூமி உள்ள இடத்தில் ஒன்று சேர்ந்தன. ஐதானவையும், சூடானவையும், வறண்ட வையும், பிரகாசமானவையும் ஈதரின் வெளியெல்லேயை நோக் கிச் சென்றன. R. P. 156.

(16) இவற்றிலிருந்து—இவை பிரியும்போது—பூமி இறுக்க மடைகிறது; எனெனில் புகாரிலிருந்து நீர் பிரிக்கப்படுகிறது; நீரிலிருந்து நிலம் பிரிக்கப்படுகிறது. குளிரினுல் இறுகிய நிலத் திலிருந்து கற்கள் உண்டாகின்றன. இவை நீரினும் பார்க்க அதிகமாக வெளியே விரைகின்றன. R. P. 156.

(17) தோன்றுவது பற்றியும் அழிவது பற்றியும் பேசுகையில் எலெனீசிய மக்கள் பிழையான வழக்கமொன்றிற் குட்படுகின்றனர் ; ஏனெனில் ஒரு பொருளும் தோன்றுவதோ அழிவதோ இல்லை. அவை இருந்தவாறே கலப்படைதலும் பிரிதலுமே நடைபெறுகின்றன. ஆகவே தோனறுவதற்குப் பதிலாகக் கலப்படைதல் எனவும் அழிதல் என்பதற்குப் பதிலாகப் பிரிதல் எனவும் அவர்கள் கூறுவது சரியாகும். R. P. 150.

(18) சந்திரனுள்ளே பிரகாசத்தை வைத்தது சூரியனே.

(19) நாம் வானவில்லை, மேகங்களிற் றேனறும் சூரியனது பிரதிபலிபபு என்கிறோம் ; அது இப்போது புயலின் ஒரு அறிகுறி ; ஏனெனில் மேகத்தைச் சுற்றிப் பாயும் நீர் காற்றை உண்டாக்கிறது அல்லது மழையாகப் பொழிகிறது.

(20) நாய் வெள்ளியின் (?) உதயத்துடன் மனிதர்கள் அறுவடையை ஆரம்பிக்கின்றனர். அதன் அத்தமனத்துடன் அவர்கள் நிலத்தை உழ ஆரம்பிக்கின்றனர். நாற்பது இரவு பகல்களுக்கு அது மறைந்திருக்கிறது.

(21) எமது புலன்கள் பலவீனமாயிருப்பதால் எம்மால் உண்மையை மதிப்பிட முடியவில்லை.

(21 a) எமக்குத் தோன்றுவது, காணப்படாதவொன்றின் தோற்றமே.

(21 b) நாம் எமது அனுபவம், ஞாபகசத்தி, திறமை, புத்தி ஆகியவற்றை உபயோகிப்பதால் (எம்மால் ஏனைய மிருகங்களைப் பயனபடுத்தமுடிகிறது).

(22) " பறவையின் பாலென் "பது முட்டையின் வெண்பகுதியையே.

அனக்சகோரசும் அவருக்கு முன் தோன்றியவர்களும்

127. எங்கு பார்ப்பினும் தோன்றுவதும் அழிவதுமாய்க் காட்சி தரும் இவ்வுலகு, மாறுபடாததனமையுடையதே தூலப் பொருள் எனும் ஈலிய மெய்யியலாளரது கொளகையோடு உண்மையில் முரண்பட்டதனறு என்பதை நிறுவுவதே எம்பிடோக்ளிசுவைப் போல, அனக் கோராசுவினதும் நோக்கமாயிருந்தது. பார்மீனடிசுவின் முடிபுகள் எவ்வித ஒளிவுமறைவுமின்றி ஏற்றுக் கொளளப்பட்டே மீணடும் அனக்சகோரசுவினால் இயம்பப்பட்டன. எல்லாப் பொருள்களுடனும் எதையும் சேர்க்க முடியாது. ஏனெனில் எல்லாவற்றையும் விட அதிகமாக எதுவும் இருக்கமுடியாது. அன்றியும் எல்லாம் எப்பொழுதும் சமமாகவே இருக்கிறது (பகுதி 5). ஒன்றும் முற்றுக அழிந்து போகவும் முடியாது. மனிதர்கள் பொதுவாக தோன்றல் எனவும் அழிதல் எனவும் கூறுவது உண்மையில் கலப்பையும் பிரிவையுமே என்க (பகுதி 17).

கலப்புப்பற்றிய இக்கொள்கையை, தன் காலத்தவரும் தன்னிலும் இளையவருமான எம்பிடோக்கிளிசிடமிருந்து அனக்சகோரசு பெற்றிருக்கலாமென எண்ண எவ்வகையிலும் இடமுண்டு. எம்பிடோக்கிளிசுவின் பாடல்கள் இவரது நூலுக்கு முன்னரே வெளிவந்திருக்கலாம். எபபடியாயினும் ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்னரே எம்பிடோக்கிளிசுவின் கருத்துக்கள் அதெனசில் தெரிந்திருந்தன என்பதை நாம் கண்டோம். சூடு, குளிர், ஈரலிப்பு, வறட்சி எனும் முரண்பாடுகள் ஒவ்வொன்றும் பார்மனிடிசுவின் கருத்துக்கேற்ற உண்மைப் பொருள்களே என நிறுவுவதன் மூலம் எவ்வாறு எம்பிடோக்கிளிசு காட்சியுலகத்தை மறுப்பதிலிருந்து காப்பாற்ற முயன்றாரென்பதையும் நாம் கண்டோம். அனக்சகோரசுவிற்கு இது திருப்தியளிக்கவில்லை. பொருள்களில் எதுவும் மற்றைய எல்லாப் பொருள்களாகவும் மாறுகிறது. உலகத்தில் உள்ள பொருள்கள் இவ்வாறு "கோடரியினால் வெட்டப்பட்டிருக்கவில்லை" (பகுதி 8). இதற்கு மாறுக உண்மையான சூத்திரம் இதுவே **ஒவ்வொரு பொருளிலும், எல்லாப் பொருள்களினது ஒரு பகுதி இருக்கின்றது.**

"எல்லாப் பொருள்களும் ஒவ்வொரு பொருளிலும்"

128. அனக்சகோரசு இதை நிரூபிக்க உபயோகித்த வாதத்தின் ஒரு பகுதி, சற்றே ஏதைந்த முறையில், ஈத்தியோசுவினால் பேணித் தரப்பட்டிருக்கின்றது. சென். ஏரேகி நேசியான்சீன் பற்றி எழுதப்பட்ட குறிப்புரையிலிருந்து டியல்சும் இவ்வாதம் பற்றி முதலில் எழுதப்பட்ட சில வார்த்தைகளையே பெற்றுள்ளார். "நாம் நீரை அருந்தும் போதும் அல்லது டிமீட்டரது பழத்தைப் புசிக்கும்போதும் மிகவும் எளிமையான ஊட்டத்தையே பெறுகிறோம்; ஆனால் தசையல்லாததிலிருந்து தசை உண்டாதலோ, மயிரல்லாததிலிருந்து மயிர் உண்டாதலோ எவ்வாறு சாத்தியமாகும்?" என அவர் வினவினார் (பகுதி 10). ஆதி மைலீசியர்களும் இத்தகைய வினாக்களையே எழுப்பியிருத்தல் வேண்டும். உடற்றொழிலியல் பற்றிய முந்திய ஆர்வம் இப்போது வாயுமண்டலம் பற்றியதாகிவிட்டது என்பதே வேறுபாடு என்க. அப்பொலோனியாவைச் சேர்ந்த இடையோசினிசுவும் இவ்வாறே வாதித்தார் எனபதையும் நாம் காண்போம் (பகுதி 2). உலகங்களின தோற்றத்துக்கு முன்பு இருந்த மூலக்கலவையையே "ஒவ்வொரு பொருளிலும் எல்லாப் பொருளினதும் ஒரு பகுதி இருந்தது" எனும் வார்த்தைகள் வர்ணிக்கின்றன என நாம் கொள்ளலாகாது (பகுதி 1). உண்மையில் இதற்கு மாறுக, இப்பொழுதும் "எல்லாப் பொருள்களும் ஒன்றுகவே இருக்கின்றன"; அன்றியும் சிறியனவும் பெரியனவுமாகிய எல்லாப் பொருள்களிலும் சமமான அளவு

"பகுதிகள்" உள்ளன (பகுதி 6). ஒரு குறைந்த அளவான பொருளில், பொருட்பாகங்களில் ஒன்று இலதாகின், குறைந்த எண்ணிக்கையுடைய பகுதிகளே இருத்தல் கூடும்; ஆனால் பார்மனிடிசுவின் கொள்கையின் பூரண கருத்துக் கேற்றவாறு, ஒரு பொருள் **உளதாயின்** வெறும் பிரித்தலினால் அப்பொருள் அற்றுப் போகும் எனல் சாத்தியமில்லை (பகுதி 3). தூலப் பொருளானது எல்லையின்றிப் பிரிக்கப்படக்கூடியது; எனெனில் மிகப் பெரியது என்பது எவ்வாறு இல்லையோ அவ்வாறு மிகச் சிறியது எனபதும் இல்லை. ஆனால் ஒரு பொருள் எவ்வளவு பெரியதாயோ சிறியதாயோ இருப்பினும், அதில் ஒரே எண்ணிக்கையுடைய பகுதிகளே இருக்கும்—அதாவது ஒவ்வொரு பொருளிலும் ஒரு பகுதி இருக்குமெனக.

129. என்ன "பொருள்க"ளின் பகுதிகள் இவ்வாறு எல்லாப் பொருள்களிலும் இருக்கின்றன? உதாரணமாகக் கோதுமையில் தசை, இரத்தம், எலும்பு போன்றனவற்றின் சிறு துகள்கள் இருப்பதாக அனக்சகோரசு கூறியதாகச் சிலர் அவரது கொள்கையைப்பற்றிக் கூறுதல் வழக்கமாயிருந்தது; ஆனால் தூலப் பொருள் எல்லையின்றிப் பிரிக்கப்படக்கூடிய தென்பதையும் (பகுதி 3) சிறு பொருளிலும் பெரிய பொருளில் உள்ள அளவு பகுதிகள் உள்ளன (பகுதி 6) என்பதையும் நாம் இப்போது கண்டோம். இது பழைய கொள்கையை வலுவற்றதாக்குகிறது. நாம் எவ்வாறு மேலும் மேலும் பிரித்துக் கொண்டு சென்றாலும், நம்மால் "கலப்பற்ற" தனிப் பொருளை அடைய முடியாது. ஆகவே எவ்வளவு நுண்ணியதாக ஒரு பொருள் இருப்பினும் அது தனிப்பண்பையுடையவோர் கலப்பற்ற பொருளாக இருக்க முடியாது. பகுதிகள்

இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரே ஒரு வழியே உண்டு: "ஒன்றிலிருந்து ஒன்று கோடியால் வெட்டப்பட்டதுபோற் பிரிக்கப்படாத னவாய்" இருக்கும் பொருள்களுக்கு உதாரணமாக 8 ஆவது பகுதியில் தரப்பட்டவை வெப்பமும் குளிருமே. பிற இடங்களில் (பகுதிகள் 4, 15) வழமையான வேறு முரண்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மூலதத்துவங்கள் எல்லையற்றவையெனக் கொள்வதானால், அவை தெமோகிரித்தோசு கூறியதுபோல ஒரே இனத்தவையாகவோ அல்லது முரண்பட்டவையாகவோ இருக்கலாம் என அரித்தோதில் கூறுகிறார். முரண்பட்ட தன்மையுடையனவே மூல தத்துவங்கள் என அனக்சகோரசு கருதினாரென, போபெரியையும் தெமிசுத்தியோசுவையும் பின்பற்றிச் சிம்பிளிசியசு கூறுகின்றார். "கோமியோமரிசு" (**Homoeomeries**) எனும் ஒத்த இயல்புடைய மூலப்பொ

ருள்களே மூலதத்துவங்கள் என அழைக்குமளவிற்கு அனக்ச கோரசுவின் "முரண்பாடுகளே" யும் அவ்வாறு அழைக்கலாம் என்று பொருள்பட அரித்தோதிலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே ஒவ்வொரு பொருளிலும் இருப்பவை அம்முரண் பாடுகளின பகுதிகளேயன்றி வெவ்வேறு வகைத் தூலப்பொ ருள்களின் பகுதிகளல்ல. எவ்வளவு சிறியதாய் அல்லது பெரிய தாய் இருப்பினும், ஒவ்வொரு பொருடபகுதியும் இம்முரண் பட்ட குணங்கள் ஒவ்வொனறையும் உடையதாயிருக்கின்றது. சூடாயுள்ளது ஒரு அளவிற்குக் குளிர்ந்ததாயும் இருக்கிறது. வெண்பனியும் கறுப்பாயிருக்கிறதென அனக்சகோரசு கூறி னார்; அதாவது வெண்மையும் அதற்கு எதிரான நிறம் சறறே உளளதாகவேயிருக்கிறது. இதற்கும் எரக்கிளீட்டசுவின கொள் கைக்கு மிடையே உள்ள தொடர்பைச் சுட்டிக்காட்டின் போதும் (பிரிவு 80).

விதைகள்

130. எம்பிடோக்கிளிசுவின் கொள்கைக்கும் அனக்சகோரசு வின் கொள்கைக்குமிடையே உளள வித்தியாசம் இதுவே. உல கத்திலுள்ள பல்வேறு பொருள்களே, குறிப்பாக உடலின் பகுதி களான தசை, எலும்பு எனபனவற்றைப் பிரித்தால், முதற் றத்துவங்களாகிய நான்கு "மூலகங்கள்" அல்லது தனிமங்கள் பெறப்படும் என எம்பிடோக்கிளிசு போதித்தார். அனக்சகோர சுவோ, எல்லையின்றிப் பிரிக்கப்படக்கூடியனவான இப்பொருள் களே எப்படிப் பிரிப்பினும், எதிர்த்தன்மையுடையனவான "முரண்பாடுகள்" யாவற்றின் பகுதிகளேயும் கொண்டிருக்க முடியாதளவுக்கு நுண்ணியவையான பொருளகளைப் பெறுதல் முடியாது எனறு கூறுகிறார். ஆனால் எதுவும் வேறு எந்தப் பொருளுக்குள்ளும் சேர்தல் சாத்தியமே. எனெனில் "விதை கள்" என அவரால் அழைக்கப்பட்டவையான தூலப் பொருட் பகுதிகள் "முரண்பாடுகள்" யாவற்றிலும் ஒவ்வோர் பகுதி களேயுடையனவாயிருந்தன. ஆனால் ஒவவொரு பொருளிலும் இவை வெவ்வேறு விகிதப்படி இருந்தனவென்க. "மூலகங்கள்" எனும் சொல்லை உபயோகிப்பதாயின, அனக்சகோரசுவின் மெயயியற் கொளகையில் இவ்விதைகளே மூலகங்கள் எனல் வேண்டும். எம்பிடோக்கிளிசுவினது "மூலகங்களுக்கு"ப் பதி லாக அனக்சகோரசு குறிப்பிட்ட "விதைகள்," பிரிந்த நிலையில் உள்ள முரண்பாடுகள அல்ல வென்றும், அவை ஒவ்வொன் றிலும் முரண்பாடுகள் யாவற்றினது பகுதிகளும் இருந்தன வென்றும் நாம் கொள்ளல் வேண்டும். "கோமியோமரிசு" என்னும் சொல்லை அனக்சகோரசு உபயோகித்திருந்தால், இச்சொல்லடங்கிய பகுதியெதையும் சிம்பிளிசியசு எடுத்தாளாது விடடிருப்பது ஆச்சரியமே.

இவ்விரு மெய்யியற் கொள்கைகளுக்கு மிடையே யுள்ள வித்தியாசத்தை இனஞ்ஞெரு வகையிலும் நாம் காண்டல்கூடும். அனக்சகோரசு தனது கொள்கையின்படி, எம்பிடோக்கிளிசுவின் மூலகங்களை முதற பொருள்களாகக் கருதவேண்டியிருக்க வில்லை. எம்பிடோக்கிளிசுவின் கருத்தில், குறிப்பாக நிலம் பற்றிய அவரது கொள்கையில், மழுத்தற்குரிய சில வெளிப் படையான அம்சங்கள் இருந்தன. அனக்சகோ சு வேறு மூறையில தமது விளக்கத்தைத் தந்தார். ஒவ்வொரு பொரு ளிலும் எல்லாப் பொருள்களின் பகுதிகளும் இருந்த போதி லும், பொருள்கள் தம்மில் எப்பொருள் அதிகமாக இருந் தனவோ, அப்பொருளாகவே தோன்றின (பகுதி 12). ஆகவே நாம், காற்றில் ஓரளவு வெப்பமும் தீயில் ஓரளவு குளிரும் இருக்கினறதென்னும் கொள்கையைக் கைவிடாமலே, அதிக மாகக் குளிரையுடையதே காறறெனவும் அதிகமாக வெப் பத்தை உடையதே தீ எனவும் கூறலாம். எம்பிடோக்கிளிசு மூலகங்கள் எனக் கருதிய பொருட்திரட்சிகள் பல்வேறு வகை யான " விதை "களின தொகுதிகளே.

131. " எல்லாப் பொருள்களும் ஒன்றுய் இருந்தபோது, அதாவது வெவ்வேறு பொருள்களின விதைகள் யாவும் மிகச் சிறிய பகுதிகளிற் கலந்திருந்தபோது (பகுதி 1) இதுவரை மூலப்பொருள் " என யாவராலும் கருதப்பட்டு வந்ததைப் போலவே அக்கலவையும காட்சியளித்திருத்தல் வேண்டும் என நாம் இவை யெல்லாவற்றிலிருந்தும் அனுமானிக்க முடிகிறது. உண்மையில் அவை " வளியையும் ஈதரையும் " போலக் காட்சி யளித்தன. எனெனில் இவ்விரு பொருளகளினதும் பண்பு களாகிய வெப்பமும் குளிரும், உலகிலுள்ள மற்ற எல்லாப் பொருள்களிலும் அதிகமாக இருத்தலாலும், ஒவ்வொரு பொருளும் அதனில் எது கூடுதலாயிருக்கினறதோ அதுவேயா தலாலும் என்க (பகுதி 12). இங்கே அனக்சகோரசு அனக்சி மினிசுவோடு சேர்ந்து கொள்கிறார் எனலாம். உலகங்கள் தோனறுவதற்கு முன் பொருள்கள் இருந்த ஆதிநிலை இரு வராலும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியே வர்ணிக்கப்படுகிறது; அனக்ச கோரசுவின் கொள்கையினபடி ஆதியிலிருந்த பொருள் ஒரு மூலப்பொருளாகவிராது, மிகச் சிறியனவாகப் பிரிக்கப்பட்டிருந்த எண்ணிறந்த " விதைக "ளின் கலவையாயிருந்தது என்பதே ஒரு வித்தியாசம் என்க.

" எல்லாப் பொருள்களும் ஒன்றுய் இருத்தல் "

அனக்சிமினிசுவுடைய வளியைப் போல இப்பொருட்திரட்சி யும் எல்லையற்றது. அத்துடன் சூழவொன்று மில்லையாதலால் அது தனக்குத் தானே ஆதாரமாகவுள்ளது. மேலும் அதனுள் அடங்கியுள்ள பல பொருள்களின் விதைகள் எண்ணிறந்தன

(பகுதி 1). ஆனால், குளிரும், ஈரலிப்பும், அடர்த்தியும், இருளும் உள்ள பகுதிகளாகவும், சூடும், வறட்சியும், ஐதும், ஒளியும், கொண்ட பகுதிகளாகவும், இவ்வெண்ணிறந்த விதைகளைப் பிரித்தல் கூடுமாதலால், மூலக்கலவை எல்லையற்ற தீயையும் எல்லையற்ற வளியையும் கொண்டிருந்ததென நாம் கூறலாம். ஆனால் காற்றின் விதைகளில், தீயை அதிகமாகக் கொண்ட விதைகளில் இருக்கும் பொருள்கள் இருந்தன ; அதே போலத் தீயின் விதைகளிலும். ஆனால் எல்லாப் பொருள்களையும் அவற்றில் எப்பொருள் அதிகமாக இருந்ததோ அப்பொருளாகவே கொள்கிறோம். அத்துடன் கலவையில் வெறுமையான பகுதியெதுவும் இல்லை. இக் கருத்து, பார்மனைடிசுவின் வாதங்கள் காரணமாகச் சேர்க்கப்பட்ட தெனக. ஆனால் இதற்கு ஈலியர்களுடைய முரண்நிலைஆய்வழி நிரூபணத்துடன் அனக்சகோரசு பரிசோதனை ரீதியான நிரூபணம் ஒன்றையும் சேர்த்துள்ளார் எனபது குறிப்பிடத்தக்கது. எம்பிடோக்கிளிசு செய்ததைப்போல (பகுதி 100) அவரும் " கிளெப்சைத்திரு " பரிசோதனையை உபயோகித்தார். அனறியும் காற்றுமோர் சடப்பொருளே என்பதைக் காற்று நிறைக்கப்பட்ட தோற்பைகள் மூலம் நிரூபித்தார்.

நூசு

132. கலவையில் இயக்கத்தை எற்படுத்துதற்கு எம்பிடோக்கிளிசுவைப போல அனக்சகோரசுவுக்கும் ஒரு புறக் காரணம் வேண்டியிருந்தது. மைலீசியர்கள் கருதியதுபோல, சடப்பொருள்கள் தாமாக இயங்கமாட்டா எனப் பாமனைடிசு ஏற்கெனவே விளக்கியிருந்தார். ஆகவே இயக்கத்தின காரணம் " நூசு " என அனக்சகோரசு கூறினர். இதனாலேயே அனக்சகோரசு " அவருக்கு முன்வாழ்ந்த விண்பேச்சுகாரரின் நடுவே ஓர் நிதானபுத்தியுடையவராகத் திகழ்ந்தார் " என அரித்தோதில் கூறியுள்ளார். அத்துடன் மெய்யியலில் ஆனமீகத்தை முதலிற புகுத்தியதும் இவரே எனக் கூறப்படுகிறது. ஆனால் இக்கொள்கையை அனக்சகோரசு விருததி செய்த முறை பற்றிப் " பீடோ "வில் சோக்கிரதர் வெளியிட்டிருக்கும் அதிருப்தியைக்கவனிக்கையில் நாம் இக்கொள்கையின சிறப்பை மிகையாக மதிப்பிடுவதற்கு முன் சிறிது சிந்தித்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது. பீடோவில் பிளேட்டோ சோக்கிரதரைப் பின்வருமாறு பேசவைக்கிறார் : " முன்பு ஒருபோது ஒரு மனிதன அனக்சகோரசு எழுதியதாகக் கூறப்பட்ட நூல் ஒன்றை வாசிப்பதைக் கேட்டேன். மனமே எல்லாப் பொருள்களுக்கும் காரண மென்றும், இவ்வுலகத்தை மனமே ஒழுங்குபடுதிய தெனவும் அதில் கூறப்பட்டிருப்பதாகக் கேட்டபோது, அவர் கூறியதுமிகச் சரியானது போலத் தோன்றியதால் நான் மிகவும் களிப்படைந்தேன்

..... ஆனால் மேலும் வாசிக்கையில் இக்கொள்கையில் மனம் கொஞ்சமும் உபயோகப்படுத்தப்படவில்லை என நான் கண்டபோது எனக்கு மிகவும் ஏமாற்றமாயிருந்தது. பொருள்களை ஒழுங்குபடுத்துவதில் அவர் மனத்திற்கு எந்தவிதமான காரண இயல்பையும் அளியாது, வளி, ஈதர், நீர் முதலிய பல நூதன மான பொருள்களை உலக ஒழுங்குக்குக் காரணங்களாகக் காட் டியிருந்தார்." "சில நாடகாசிரியர்கள் கதைப் போக்கில் எற் பட்ட சங்கடத்தை அவிழ்ப்பதற்குக் கடவுளைக் கதையுட் புகுத் துவதுபோல, அனக்சகோரசுவும் உலகம் தோன்றிய விதத்தை விளக்குதற்கு மனத்தை உபயோகித்தனர்" என அரிதோ தில், சோக்ரதரின் கூற்றை மனத்தில் கொண்டு போலும், கூறியுள்ளார். "என் ஒரு பொருளாகட்டாயமாக இருக்கிறது என விளக்க முடியாதபோது அவர் மனத்தைக் கொணர் கிறார். ஆனால் ஏனைய வேளைகளில் மனத்தைவிட வேறு எதை யுமே அவர் காரணமாகக் காட்டுகிறார்" என அரித்தோதில் மேலும் கூறியுள்ளார். எம்பிடோக்ளிசின காதல், பூசல் என் பனவற்றைப் போன்றதே அனக்சகோரசுவின் நூசுவும் என இக் கூற்றுக்களிலிருந்து புலப்படுகிறது. மேலும் நூசுவைப்பற்றி அனக்சகோரசு கூறுவனவற்றிலிருந்தும் இக்கருத்து உறுதிப் படுகிறதெனலாம்.

முதலாவதாக நூசு கலப்பற்றது என்பதும் (பகுதி 12) மற்றப் பொருள்களை போல எல்லாப் பொருள்களையும் தனனுள் அடக்கியதல்லவெனபதும் குறிப்பிடத்தக்கன. சடப்பொருளா லானதல்லாத மனத்தைப் பற்றி இவ்வாறு கூறுவது அவசிய மல்ல வென்க; அது வெப்பமாக அல்லது குளிராக இருக்கு மென யாரும் நினையார். அது கலப்பற்றதாக இருப்பதன் பயனாக இது எல்லாவற்றின் மீதும் "சத்தியுடையதாய" இருக் கிறது; அதாவது அனக்சகோரசுவின்படி யாவும் இயங்கக் காரணமாயிருக்கிறது. எரக்ளீட்டசு தீயைப் பற்றி இவவாறே கூறியுள்ளார். எம்பிடோக்ளிசும் விரோதத்தைப் பற்றி இவ் வாறே கூறியுள்ளார். மேலும் நூசுவே பொருள்கள் யாவற் றிலும் நொய்யதாயிருந்தது. அதனால் அது எல்லாவிடங்களி னுள்ளும் புகும் தன்மையுடையதாயிருந்தது. ஆனால் சடப் பொருளல்லாதவொனறு சடபபொருள்களிலும் பார்க்க நொய்ய தாயிருந்தது எனக் கூறுவதில பயனெதுவுமில்லை. நூசு "யாவற்றையும் அறியும் ஆற்றல் படைத்திருந்தது" எனபதும் உண்மையானாலும் இடையோசினிசுவின் காற்றும் இவ்வாற்ற லைக் கொண்டிருந்ததே. எரக்ளீட்டசுவின் தீயும் இவவாற் றலையுடையதாயிருந்ததெனலாம். உண்மையில் அசரீரியான வொன்றைப்பற்றியே அனக்சகோரசு கூறமுனைந்திருக்க வேண்டு

மெனச் செல்லர் கூறுகிறார்; ஆனால் நூசுவை அசரீரியான வொனறாகக் காட்டும் முயறசியில் அனக்சகோரசு வெறறி பெற விலலையெனச செல்லர் கூறுவதே வரலாற்று ரீதியாக நாம் கவனிக்க வேண்டியதென்க. ஆனால் நூசு பரப்பையுடையதா யிருந்தது எனபதில் ஐயமில்லை; அதன சிறியனவும் பெரியன வுமான பகுதிகளைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோமாதலின் (பகுதி 12).

எல்லாவற்றையும் "அறியும்" மூலப் பொருள் எனும் அயோனியக கொள்கையையும் யாவற்றையும் "இயக்கும்" மூலப் பொருள் எனும் புதிய கொள்கையையும் இணைககும் நோக் கத்துடன் அனக்சகோரசு, எம்பிடோக்கிளிசுவின காதல், பூசல் என்பவறறிற்குப் பதிலாக நூசைத் தேர்ந்தனர் எனபது உண்மையாயிருக்கலாம். வெறும் அண்டவியல பற்றிய விட யங்களில்லல்லாமல் உடலியல் பற்றிய விடயங்களில் அவருக் கிருந்த மிகையான ஆர்வம் அவர் இவ்வாறு ஆன்மாவுக்குப் பதிலாக மனத்தைப் பற்றிப் பேசுவதற்குக் காரணமாயிருந் திருக்கலாம். ஆன்மா எனும் சொல்லினும் பார்க்க மனம் எனும் சொல் உடலோடு மிகவும் தொடர்புடையவொனறாகக் கிரேக்கர்களுக்குத தோன்றியிருக்கலாம். எனினும் அனக்ச கோரசுவின் நூசு பற்றிய கொள்கையினும் பார்க்க அவரது பதார்த்தம் பற்றிய கொள்கையே அதிக புதுமையுடைத்து எனக் கொள்ளல் வேண்டும்.

உலகங்களின் தோற்றம்

133. "எல்லாப் பொருள்களும் ஒன்றுயுள்ள" (பகுதி 13) கலவையில் நூசு ஏற்படுதலும் இயக்கதினால கலவை மேலும் மேலும் விரிந்து, அதிக இடத்தை வியாபிக்கத் தொடங்குகிறது. சுழற்சியுடையதான இவ்வியக்கத்திலேயே உலகம் தோனறு கிறது. இவ்வியக்கத்தின் வேகத்தினால (பகுதி 19) அடர்த்தி யானவை ஐதானவற்றிலிருந்தும் வெப்பமுடையவை குளிர்ந் தனவற்றிலிருந்தும், ஒளியுடையவை இருண்டனவற்றிலிருந்தும் ஈரலிப்புடையவை வறட்சி யுடையனவற்றிலிருந்தும் பிரிக்கப்படு கின்றன (பகுதி 15). இவ்வாறு பிரிக்கப்படுவதனால, பெரும் பாலும் ஐது, வெப்பம், ஒளி, வறட்சி ஆகியனவற்றைக் கொண்ட ஈதர் என அழைக்கப்படும் ஓர் பொருட்திரட்சியும், இவற்றிற்கு எதிரான குணங்களைப் பெருமளவிற்குக் கொண்டதும் வளி என அழைக்கப்படுவதுமான (பகுதி 1) வேறோர் பொருட் திரட்சியும் உண்டாயின. இவற்றுள் ஈதர் அல்லது தீ வெளியேயும் வளி நடுவேயும் இருந்தன (பகுதி 15).

இதறகு அடுத்த பருவத்தில், வளி மேகங்கள், நீர், நிலம், கல் என்பனவாகப் பிரிதல் நிகழ்ந்தது (பகுதி 16). இது

பற்றிக் குறிப்பிடுகையில் அனக்சகோரசு அனக்சிமினிசுவைப பெரும்பாலும் பின்பற்றுகிறார் எனலாம். ஆனால் வானசோதிகள் பற்றிய அவரது விளக்கம், அவருக்கே உரித்தான கருத்துக்களைக் கொண்டுள்ளது. 16 ஆவது பகுதியின கற்கள் " நீரிலும் அதிகமாக வெளிப்புறம் விரைகினறன " என அவர் கூறியிருப்பதைக் காண்கிறோம். மேலும் நிலத்தின் சுழற்சி வேகத்தினால் அதிலிருந்து விடுபட்டுபோன கறகளே வானசோதிகள் என்றும், அவை தமது இயக்கத்தினால் வெப்பமடைந்து செம்மையொளி பெற்றன என்றும் விளக்கப்பட்டதெனத் தொகுப்பாசிரியர்கள் மூலம் அறிகின்றோம். ஐகொசுப்பொத்தமையில் வால் வெள்ளியொன்று விழுந்தமைக்கும் இக்கொள்கை தோன்றியமைக்கும் யாதேனும் தொடர்பிருக்கலாம். அத்துடன் தட்டையான இவ்வுலகும் " சுழி "யோடு சோந்து சுழல்கிறது என்பதும் இக்கொள்கையிலிருந்து தவருது பெறப்படுகிறதெனபதும் குறிப்பிடப்படத்தக்கது.

134. எண்ணிறந்த உலகங்கள் இருந்தனவென்னும் ஆதி அயோனியக் கொள்கையை அனக்சகோரசும் கொண்டிருந்தார் என்பது 4 ஆம் பகுதியிலிருந்து தெளிவாகிறது. இப்பகுதியைத் தொடர்பற்ற தெனக் கருதவும் நியாயமில்லை. " எம்மிடத்தில் மடடுமல்லாது, பிறவிடங்களிலும் பொருள்கள் பிரிக்கப்பட்டன" எனும் சொற்களுக்கு, நூசு ஒன்றுக்கு மேறபட்ட இடங்களில், சுழற்சி இயக்கத்தை ஏற்படுத்தியது எனவே பொருள் கொள்ள முடியும். ஒரு உலகம் மட்டுமே இருந்தது எனக் கூறியோர் வரிசையில் அனக்சகோரசுவையும் ஈத்தியோசு சேர்த்துக்கொண்டார் எனபது உண்மையே ; ஆனால் நமக்குக் கிடைத்துள்ள அனக்சகோரசுவின் கருத்துப் " பகுதி "களிலும் பார்க்க ஈத்தியோசுவின் கூற்று வலுவுள்ள ஆதாரமென ஏற்றுக் கொளள முடியாது. மேலே குறிப்பிட்ட சொற்கள் சந்திரனைக் கருதுவன எனும் செல்லாது கூற்றும் அவ்வளவு ஏற்கத்தகுந்த தலல. சந்திரனில வசிப்போரும் " நம்மைப்போல், சூரிய சந்திரர்களை உடையோரே " என யாரும் கூறுவார்களா ?

எண்ணிறந்த உலகங்கள்

135. அனக்சகோரசுவின் அண்டவியற் கொள்கைகள் பெருமளவிற்கு அனக்சிமினீசுவின் கொள்கைகளது அடிப்படையிலேயே அமைந்திருந்தன என்பது, இப்பொலேட்டசுவின பின் வரும் பகுதியை, முதலாம் அத்தியாயத்தில் (29 ஆம்பிரிவு) தரப்பட்டுள்ள மேற்கோள்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பின் நன்கு புலப்படும் :

அண்டவியல்

(3) பூமி தட்டையானது. அதன் மிகப் பரந்த அளவிலும், சூனிய வெளியின்மையிலும்[1] அது அந்தரத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாவே காற்று மிகவும் வலிமையுடையதாயிருந்து தன்மீதுள்ள பூமியைத் தாங்கிக்கொள்கிறது.

(4) பூமியின் மேற்பரப்பிலுள்ள நீர்நிலைகளில், கடலானது பூமியினுள்ளே உள்ள நீர்களிலும் (இவற்றில் ஆவியானவை போக எஞ்சியவை உப்புத் தன்மையுடையவாயிருந்தன) ஆறுகளிலிருந்து தனக்குள் வந்து கலக்கும் நீரிலும் ஆனது[2].

(5) பூமியிலுள்ள நீர்களிலிருந்தும், மழையிலிருந்தும் ஆறுகள் உற்பத்தியாகின்றன; ஏனெனில் பூமியின் போறையான உட்புறம் முழுவதும் நீரால் நிரப்பப்பட்டிருக்கிறது. எதியோப்பியாவிலுள்ள பனி உருகிக் கீழே வருவதனால் கோடைகாலத்தில் நைல் நதியில் நீர் பெருகுகிறது.

(6) ஈதரின சுழற்சியிலால் வட்டமிடும் தீக்கறகளே சூரியனும், சந்திரனும், ஏனைய விண்மீன்களும். விண்மீன்களுக்குக் கீழே, சூரியனும், சந்திரனும், எமது கண்ணுக்குத் தெரியாது. அவற்றோடு சுழலும் வேறு சில பொருள்களும் உள்ளன.

(7) விண்மீன்கள் பூமியிலிருந்து மிகுந்த தொலையிலுள்ள பாடியாற்றான் நாம் அவற்றின் வெப்பத்தை உணர்வதில்லை. அன்றியும், அவை குளிரான பகுதியில் இருப்பதால் அவை சூரியனளவு வெப்பமுடையனவாய இல்லை. சந்திரன் சூரியனுக்குக் கீழேயும் அதனிலும் பார்க்க எமக்கு அண்மையிலும் உளளது.

(8) சூரியன பெலோபொனீசசுவிலும் பார்க்க அளவிற் பெரியது. சந்திரனுகுச் சொந்தமான ஒளியில்லை; சூரியனிடமிருந்தே அது தனது ஒளியைப் பெறுகிறது. பூமிக்குக் கீழாகவும் விண்மீனகள பிரயாணம் செய்கினறன.

(9) சூரியனிடமிருந்து வரும் ஒளியைப் பூமி அல்லது சந்திரனுக்குக் கீழேயுள்ள வேறு பொருளகள் மறைப்பதால சந்திர கிரகணம் உண்டாகிறது. அமாவாசைக் காலத்தில் சூரியனைச் சந்திரன் மறைப்பதால சூரிய கிரகணம் ஏறபடுகிறது. காற்றினால பின தள்ளபபட்டுச் சூரியனும் சந்திரனும் தாம் செல்லும் வழியில மேலும் செல்ல முடியாது திரும்புகினறன. சந்திரனுல் குளிருக்கு ஈடு கொடுக்க முடிவதில்லையாதலால் அது இவ்வாறு அடிக்கடி திரும்ப நேரிடுகிறது.

[1] சூனியவெளியுண்டெனபதை ரலிய வாதிகள் மறுத்தது காரணமாக, மூநதிய கருதுதுக்கு வலுவூட்டும வகையில இது அமைகிறது.

[2] இப்பகுதி சறறுத தெளிவற்றதாயுளளது. ஆனால Aet. iii. 162 இலிருந்து இப்பகுதியின பொதுவான பொருள் அறிந்து கொளளலாம.

(10) சூரிய சந்திரர்களது ஒளி, அவற்றின் கிரகணம் ஆகியவற்றோடு தொடர்புபட்ட விடயங்களை முதலில் மதிப்பிட்டவர் அனக்சகோரசுவே. சந்திரன நிலத்தைப் போன்ற அமைப்புடையதெனவும் சமவெளிகளையும் கணவாய்களையும் கொண்டதெனவும் அவர் கூறினர். சூரியனால் ஒளியூட்டப்படாத விண்மீன்களின ஒளியின பிரதிபலிப்பே பால்வீதிமண்டலம். வான மண்டலத்தின் இயக்கத்தினால் பறக்கும் தீக்கங்குகளென வால் வெள்ளிகளை அழைக்கலாம்.

(11) சூரிய வெப்பத்தினால் காற்று இலேசாக்கப்பட்டபோதும், பொருள்கள் எரிந்து வானமண்டலத்தை அடைந்தபோதும் காற்றுக்கள் உண்டாகின. வெப்பம் மேகங்களோடு மோதியபோது இடியும் மின்னலும் உண்டாயின.

(12) பூமிக்கு மேலேயுள்ள வளி அதற்குக் கீழேயுள்ள காற்றோடு மோதுவதால் பூமியதிர்ச்சிகள் ஏறபட்டன; ஏனெனில் பூமிக்குக் கீழேயுள்ள காற்றின் அசைவு அதன் மேலே மிதக்கும் பூமியை ஆடச்செய்கிறது.

அனக்சகோரசு, அனக்சிமினிசுவின் மரபைச் சேர்ந்தவர் எனும் தியோபிறசுத்தோசுவின கூற்றை, இவை யாவும் உறுதி செய்கினறன. காற்றில் மிதகும் தட்டையான பூமி, சந்திரனுக்குக் கீழேயுளள ஒளியற்ற பொருள்கள், காற்றின் அமுக்கத்தினால் சந்திரனின் "பிரயாணத்தில் ஏறபடும் திருப்பங்கள்" அயனத் தொடக்கம் ஆகியவை பற்றிய விளக்கம், காற்று, இடி, மின்னல் என்பவை பற்றிய விளக்கம் என்பன யாவும் அனக்சிமினிசுவின் கொள்கைகளிலிருந்தே பெறப்பட்டிருக்கின்றன. சந்திரனது ஒளி கிரகணங்களின் காரணம் ஆகியவற்றைக் கண்டு பிடித்தவர் அனக்சகோரசுவேயென அதென்சு நகர மக்கள் நம்பியதில் ஆச்சரியமெதுவுமில்லை. ஆனால் பூமி தட்டையானதென நம்பிய ஒருவர் இவற்றைக் கண்டுபிடித்தார் என நம்ப முடியாதெனலாம். அத்துடன் இக்கண்டுபிடிப்புக்கள் பைதாகரசினுடையவை என எண்ண ஆதாரங்கள் உள்ளன.

136. "நூசைத் தவிர்ந்த வேனய பொருள்கள் யாவற்றிலும் ஓரளவு எல்லாப் பொருளும் உள்ளது; ஆனால் சில பொருள்களில் நூசும் அடங்கியுள்ளது" (பகுதி 11). சேதன, அசேதனப் பொருளகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை அனக்சகோரசு இவ்வார்த்தைகளில் தந்துள்ளார். உயிருள்ளவை யாவற்றின மீதும், சிறியனவற்றின் மீதும் பெரியனவற்றின் மீதும் "சக்தி உடையது"—அதாவது அவற்றை இயங்க வைப்பது—ஒரே நூசுவே என அவர் கூறுகிறார் (பகுதி 12). உயிருள்ள பிராணிகள் யாவற்றிலும் உள்ள நூசு ஒன்றே, உயிரியல்

(பகுதி 12). விலங்குகளும், தாவரங்களும் வெவ்வேறு அள வான நுண்மதியைப் பெற்றிருப்பது அவற்றின் உடலமைப் பிறகேற்றவாறே என்பது இதிலிருந்து பெறப்படுகிறது. நாசு னன்ருக விருந்தபோதிலும், சில உடலகளில் மறறவறறிலும் பார்க்க அதறகு அதிக வாய்ப்பிருந்தது. விலங்குலகில் மனி தனே அதிக கெட்டித்தனம் உடையவனுயிருகிறன. இதற்குக் காரணம் அவனுக்குக் கைகளிருப்பதனுலேயே யொழிய, மற் றைய விலங்குகளிலும் பார்க்கச் சிறந்த நாசை உடையவனு யிருப்பதால்ல வென்க. எற்கெனவே இவ்விடயம் பற்றி நில விய கருத்துக்களுட்னும் இக்கொள்கை பொருந்துவதாயுள்ளது. மனிதர்களது சிந்தனே அவர்களது உறுப்புக்களின் அமைபபுக் கேற்றவாறே உள்ளது எனப பார்மீனடிசுவும் தமது இரண்டாம் பாகத்தில் (பகுதி 16) கூறியிருந்தார்.

நாசு முழுவதும் ஒனருகையால் தாவரங்களும் உயிருள்ள பொருள்களாகக் கொள்ளப்படுவதில் ஆச்சரியமெதுவுமில்லே. அரித்தோதிலால் எழுதப்பட்டதெனக் கூறப்படும் நூலான " தாவரவியலி "ல் தாவரங்கள் தாம் வளர்சியடைகையிலும், இலைகளே யுதிர்க்கையிலும் முறையே களிப்பும் துன்பமும் அடைகின்றன என அனக்சகோரசு வாதிததார் எனக் கூறப் பட்டிருக்கிறது. " நிலத்தில் பொருந்தியுள்ள விலங்குகள் " என அனக்சகோரசு தாவரங்களே வருணித்தார் எனப புளுட்டாக்கு கூறுகிறார்.

காற்றிலிருந்த தாவர விதைகள் மழை நீரோடு நிலத்தை அடைந்ததைத் தொடர்ந்து தாவரங்கள் தோனறின. விலங்கு களும் இவ்வாறே உணடாயின. அனக்சிமாந்தரைப் போல அனக்சகோரசுவும், விலஙகுகள முதலில் ஈரலிப்புடைய மூலகத் திலேயே தோன்றினவெனக் கருதினர்.

புலனுணர்வு

137. இச்சிறு குறிப்புக்களிலிருந்து, எம்பிடோக்கிளிசுவின் கொள்கைகளே மறுக்க முயல்வது போனறவோர் உளபபாங்கை நாம் அவதானிக்க முடிகிறது. அனக்சகோரசுவின புலனுணர்வுக் கொள்கையைப் பறறிக் கூறப்பட்டிருப்பதிலும்—குறிப்பாக, மறு தலைகளேயே உணர முடியும் எனும் கொள்கையில்—நாம் இத்தகையவோர் உளபபாங்கைத்தான காணகிறோம். இது பற் றித் தியோபிறசுத்தோசு கூறுவது பின்வருமாறு :

" அனக்சகோரசுவோ, முரண்பாடுகளினுறருன் புலனுணர்வு எற்படுகிறது எனக் கூறுகிறார் ; எனெனில் ஒத்த தன்மை யுடைய பொருள்களில் ஒனறினுல் மறறதனமீது எத்தகைய மாற்றத்தையும் எற்படுத்த முடியாது. ஒவ்வொரு புலனையும் விரிவாக விவரிக்க அவர் முயல்கிறார் ; கண்மணியில் தோன்

றும் விம்பத்தின் மூலம் எம்மால் பார்க்க முடிகிறது ; ஆனால் ஒத்த நிறமுடைய பொருளில் எவ்வகை விம்பமும் ஏற்படுவ தில்லை ; வேறுபட்டவொனறிலேயே விம்பம் ஏற்படுகிறது. உயி ருள்ளனவற்றில் பெரும்பாலானவற்றிறகு, பொருளகள் யாவும், பகலில் தம்முடைய விம்பத்திலிருந்து வேறுபட்ட நிறங்களை யுடையனவாகவே யுள்ளன. ஆனால் இரவிலும் சில பிராணி களது கண்மணிகள் இவ்வாறு பொருள்களிலிருந்து வேறுபட்ட நிறமுடையனவாயிருப்பதனறருன் அவற்றுல் இரவிலும் கூர் மையாகப் பார்க்க முடிகிறது. ஆனால் பொதுவாகப் பகலைவிட இரவே கண்களை அதிகம் ஒத்த நிறமுறையதாயிருக்கிறதென லாம். பகலில், கணமணியில எவ்வாறு விம்பம் ஏற்படுகிற தெனின, ஒளியானது விம்பம் ஏற்படுதற்கு உடனியலுகின்ற ஒரு காரணமாதலினுலும், அந்நேரத்திலுள்ள நிறம், அத ற்கு முரணான நிறமுடையவொனறில் இலகுவாகத் தனது விம்பத்தை எறபடுத்துவதனலுமென்க.

சுவை, ஊறு போனற உணர்வுகளும் கூட இம்முறையிலேயே செயற்பட்டுப் பொருள்களை உணர்கின்றன. எங்கள் உடலின ளவு சூடாகவோ அல்லது குளிர்ந்தோ இருக்கும் பொருள்கள் எம்மைச் சூடாக்கவோ, குளிர்விக்கவோ முடியாது ; இவ்வாறே இனிப்பு, புளிப்பு எனும் சுவைகளையும் நாம் அவற்றின் மூலமாக அறிந்து கொளவதில்லை. ஒவ்வொரு சுவையையும் அதன் இன்மையினுலேயே நம்மால் உணர முடிகிறது— குளிரைச் சூடின்மூலமும், உப்பற்றதை உப்புமூலமும், இனிமையுடையதைப் புளிப்பின் மூலமும் நாம் அறிகிறோம் ; ஆரம்பத்திலிருந்தே இச்சுவைகள் யாவும் எம்மிடத்தே இருக் கின்றன. மணம், ஒலி முதலியனவற்றை நாம் உணர்வதும் இவ்வாறே. பொருள்களின் மணங்களை அவற்றினறே சேர்ந் துவரும் மூச்சுக்காற்றினுல் நாம் உணரமுடிகிறது. ஒலியைப் பொறுத்தவரையில் மூளையைச் சுற்றியிருக்கும் எலும்பு போறை யாயிருப்பதால், அதன்மீது ஒலிவிழுந்து மூளையை அடைந்த துமே, நம்மால் ஒலியை உணர முடிகிறது.

மாறுபட்ட தன்மையுடைய பொருள்கள் ஒன்றையொன்று தீண்டும்போது நோ ஏற்படுகிறதென முன்பே கொள்ளப்பட்ட தாதலின், எத்தகைய புலனுணர்வு ஏற்படும்போதும் நோவும் ஏற்படுமென்பது பெறப்படும். புலனுணர்வு அமிதமாக அல்லது தொடர்ந்து ஏற்படும்போது இந்நோவை நாம் உணர்கிறோம். மிக வும் பிரகாசமான நிறங்களும், அமிதமான சந்தடியும் நோவை உண்டுபண்ணுகின்றன ; ஒரேபொருளை எம்மால் அதிக நேரம் களிப்புடன் அனுபவிக்க முடிவதில்லை. அளவிற்பெரிய விலங் குகளது புலனுணர்வு கூர்மை கூடியதாக இருக்கிறது. அன்

நியும் பொதுவாகப் புலனுணர்வுத்திறன் உணர்வுறுப்புக்களின் அளவுக்கேற்ப அமைந்துள்ளதெனலாம். பெரியனவும் தூய்மையும் பிரகாசமுமுடையனவான கண்களையுடையனவான விலங்குகளால் பெரிய பொருள்களையும், மிகுந்த தூரத்திலுள்ளவற்றையும் பார்க்க முடிகிறது. இவ்வாறு அல்லாத விலங்குகளுக்கு இத்தகைய திறன் இருப்பதில்லை.

செவிப்புலனும் இவ்வாறே. பெரிய விலங்குகளால் மெல்லோசைகளைக் கேட்க இயலாதெனினும், வல்லோசைகளையும் அதிக தூரத்திலிருந்து எழும் ஓசைகளையும் நன்றாகக் கேட்க முடிகிறது. சிறிய விலங்குகள் அண்மையிலிருந்து எழும் மெல்லோசைகளை இலகுவாகக் கேட்கவல்லன. மோப்பவுணர்வும் இவ்வாறே. திண்மை குறைந்த காற்று அதிக மணமுடையதாயிருக்கிறது. ஆகவேதான் காற்றுச் சூடாகி ஐதாகும்போது அதிக மணமுள்ளதாயிருக்கிறது. பெரிய விலங்குகள் சுவாசிக்கும்போது ஐதான காற்றைத் திண்மை கூடிய காற்றுடன் சேர்த்தே உள்ளிழுக்கின்றன. ஆனால் சிறிய விலங்குகளோ ஐதான காற்றை மட்டும் உள்ளிழுக்கின்றன ; ஆகவேதான் பெரிய விலங்குகளால் அதிக பொருள்களை உணர முடிகிறது. எனெனில் காற்று அதிக திண்மையுடையதாயிருக்கும் காரணத்தினால் அது அண்மையிலுள்ளபோது, சேய்மையிலிருக்கும்போது முடிவதைவிட, நன்றாக அதிலுள்ள மணங்களை உணரமுடிகிறது. மணங்கள், பரந்து ஐதாகியிருக்கும்போது, பெரிதும் குன்றிவிடுகின்றன. ஆனால் பொதுவில், பெரிய விலங்குகளால் ஐதான மணங்களை உணர முடியாதெனவும், சிறிய விலங்குகளால் செறிவு கூடிய மணங்களை முகர முடியாது எனவும் கூறலாம்.

அனக்சகோரசுவின் இக்கொள்கை சில வழிகளில் எம்பிடோக்கிளிசுவினது கொள்கையிலும் வளர்ச்சியுடையதாகும். முரண்பாடுகளின் தூண்டுதலில் புலனுணர்வு தங்கியுளதெனவும் அது நோவோடு தொடர்புடையதெனவும் அனக்சகோரசு கூறியது போற்றத்தக்க வொன்றாகும். தற்காலக் கொள்கைகள் பலவும் இத்தகைய கருத்தொன்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

புலன்களினால் உண்மையை அணுகமுடியாதென அனக்சகோரசு கருதினரென்பது செகுசுதசுவால் பேணப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து தெரியவருகிறது. ஆயினும், நாம் அவரை ஓர் ஐயவாதி எனக் கூறிவிட முடியாது. அரித்தோதில் மூலம் நமக்குக் கிடைத்துள்ள, " பொருள்கள் எவ்வாறிருக்கின்றன வென நாம் கருதுகின்றோமோ அவ்வாறே அவை உள்ளன " எனும்

கூற்றிலிருந்து நாம் எத்தகைய முடிவுக்கும் வந்துவிட முடியாது. இக்கூற்று, பழமொழித் தொகுதி யொன்றிலிருந்து எடுக்கப்பட்டதேயன்றி அனக்சகோரசுவின் நூலிலிருந்து எடுக்கப்பட்டதல்ல ; அத்துடன் இக்கூற்று ஒழுக்கவியல் சம்பந்தப்பட்டவொன்று எனக் கருதவும் இடமுண்டு. "எமது புலன்களின் பலவீனம் உண்மையைக் காண்பதிலிருந்து எம்மைத் தடைசெய்கின்றது" என அவர் கூறியுள்ளார் (பகுதி 21) என்பது உண்மையே. ஆனால் இதற்குப் பொருள் ஒவ்வொரு பொருளிலுமுள்ள எல்லாப் பொருள்களினதும் பகுதிகள் யாவற்றையும் நாம் காண்பதில்லை என்பதேயொழிய, வேறெதுவுமல்ல ; உதாரணமாக வெண்மையிலுள்ள கருமைப் பகுதிகளை நாம் காண்பதில்லை. மேலோங்கி நிற்கும் பகுதிகள் எவையோ அவற்றையே நமது புலன்கள் எமக்குக் காட்டுகின்றன. நாம் காணும் பொருள்கள் கட்புலனாகாதவற்றையும் காணும் திறனை எமக்கு அளிக்கின்றவெனவும் அனக்சகோரசு கூறியுள்ளார். அஃது ஐயவாதத்திற்கு முற்றிலும் முரணானவோர் கருத்தென்க.

அத்தியாயம் 7

பைதாகரசவாதிகள்

பைதாகரசகுழு

138. ஆக்கையன் நகரங்களில் தமது செல்வாக்கு வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து, பைதாகரசவாதிகள் பலரும், தெசியோன் நகரில் வாழத்தலைப்பட்டனர். ஆனால் அங்கு நிறுவப்பட்ட குழுக நிக காலம் நிலைத்திருக்கவில்லை; ஆக்கைற்றுசு ஒருவர் மட்டுமே இத்தாலியில் தங்கினர். குரோட்டன படுகொலையிலிருந்து தமது இளமைக் காலத்திலே தப்பி வந்தவரான லகிசுவும், பிலோலெசுவும் ஏற்கெனவே தீபிசுவை அடைந்திருந்தனர். ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் பிலோலெசு அங்கிருந்தாரெனவும், லகிசு, பின்னர் எப்பாமீனந்தாசுவின் ஆசிரியராயிருந்தாரெனவும் நாம் பிளேட்டோவின் மூலமாக அறிகிறோம். ஆனால் பைதாகரசவாதிகளிற் சிலர், பின்னர் இத்தாலிக்கு மீண்டனர். பிலோலெசு அவ்வாறு சென்றனர் என்பது உறுதி; பிளேட்டோவும் சோக்கிரதர் கொலையுண்ட ஆண்டாகிய கி. மு. 399 க்குச் சற்று முனபாக, அவர் தீபிசுவை விட்டு அகன்றார் எனும் பொருள்பட எழுதியுள்ளார். நான்காம் நூற்றாண்டில் இக்குழுவினர் சிறப்பாகச் செயற்பட்டது டோரிய நகரமாகிய தாரசு விலேயே. சிரக்கியூசு நாட்டு இடையனீசியசு என்பாரது தலையாய எதிரிகளாகப் பைதாகரசவாதிகள் விளங்கியதையும் நாம் அறியக்கூடியதாயிருக்கிறது. ஆக்கைட்டாசுவின் நடவடிக்கைகளும் இக்காலத்தைச் சேர்ந்தவையே. பிளேட்டோவின் நண்பரான ஆக்கைட்டாசு, "மெய்யுணர்வேந்து" எனும் இலட்சியத்தைப் பெருமளவிற்குக் கிட்டியவரெனக் கூறலாம். தாரசுவைப் பல ஆண்டுகளாக ஆட்சி செய்த இவர், ஒரு போதும் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டதில்லை என அரித்தோசெனசு கூறுகிறார். கணித நிலையியக்கவியலைக் கண்டுபிடித்தவரும் இவரே. இதே காலத்தில் பைதாகரசவாதம் கீழைத்திசையிலும் பரவியிருந்தது. லகிசு, தீபிசுவிலேயே தங்கினர். இங்கு சிம்மியாசு, கீபிசு ஆகியோர் ஏற்கெனவே பிலோலெசுவின் போதனைகளைக் கேட்டிருந்தனர். தெசியோனை நீத்த பைதாகரசவாதிகளில் ஏனையோர் பிளேயசுவில் குடியேறினர். இக்குழுவினரின் கடைசிச் சந்ததியினரை நன்கு அறிந்திருந்தவரான அரித்தோசெனசு இவர்களுட் பலரது பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். திரேசு நாட்டுக் கல்கிசு நகரத்தவனான செனோபிலோசு, பாண்டன். எக்கிரத்திசு, இடியோக்கிளிசு, பிளீயசுநாட்டுப பொலி

மிஞைத்தோசு ஆகியோர் யாவரும் பிலோலெசுவினதும், இயூ ரைத்தோசுவினதும் சீடர்களென அரித்தோசெனசு குறிப்பிட்டு டுள்ளார். மேலும் தீபிசுநாட்டுச் சிம்மியாசு, கீபிசு என்போரும் பிளேயசுவைச்சேர்ந்த எக்கிறுத்திசுவும் சோக்கிரதரின் தோழர் களாயிருந்தனர் எனப பிளேட்டோ மூலமாகவும நாம் அறி கிறோம்.[1] அரித்தோசெஞெசுவின் ஆசிரியரான செஞெபிலோசு என்பவர் தமக்கு நூற்றிஐந்து வயதாகும் வரை பூரண ஆரோ கியமுடையவராய் அதென்சு நகரில் வாழ்ந்தார்.

பிலோலெசு

139. இக்குழுவினருள், ணண்டு குறிப்பிடப்பட்ட தலைமுறையி னர் உண்மையில் இதற்குப் பிந்தியவோர் காலப்பகுதியைச் சேர்ந்தவர்கள். நாம் இங்கு கவனிக்க வேண்டியது பிலோ லெசுவையே. இவரது போதனைகளைப் பற்றிப் புறவழிகளால் நாம் அறிபவை மிகக் குறைவானவை. கோள் மண்டலங்களைப் பற்றி இவர் விரிவானவோர் கோட்பாட்டை ஆக்கியிருந்தாரெனத் தொகுப்பாசிரியர்கள் கூறியுள்ளனரெனினும் அரித்தோதில் அத்தகைய கோட்பாடு பற்றிக் கூறுகையில் இவரது பெயரை ஒருபோதும் குறிப்பிட்டுள்ளாரில்லை. "பைதாகரச கொள்கை" எனவே அவர் இக்கோட்பாடு பற்றிக் கூறியுள்ளார்.[2] பிளேட் டோவின் பீடோ, யோச்சியாசு என்பனவற்றிலுள்ள பைதாகரச கருத்துக்கள், பிலோலெசுவிடமிருந்தே பெறப்பட்டிருக்க வேண் டுமெனக் கொள்ளுதலே இயல்பாகத் தோன்றுகிறது. தற்கொலை செய்வது ஏன் சட்டவிரோதமானது என்பதை சிம்மியாசுவும் கீபிசுவும் அவரிடமிருந்து அறிந்து கொள்ளாதது பற்றிச் சோக் கிரதர் ஆச்சரியமடைவதைப் பிளேட்டோ காட்டுகின்றார். மேலும் "மெய்யியலாளன்" என்னும் பதம் வாழ்க்கைச் சுமையிலி ருந்து விடுதலை பெற வழிகாண முயல்வோன் ஒருவனையே குறிக்கும் எனத் தீபிசுவிலுள்ள பைதாகரசவாதிகள் கருதினர் என்னும் கருத்துத் தோன்றும் வகையிலும் குறிப்பொன்றுள் ளது. ஆன்மாவைச் சிறைவைத்திருக்கும் கல்லறையே உடம்பு எனப் பிலோலெசு கூறினர் எனக் கருத இடமுண்டு. பழைய பைதாகரச சமயக் கொள்கையையே இவர் போதித்தாரெனவும், அறிவின் மூலம் விடுதலை பெறமுயலும் கொள்கையில் இவர் அதிக கவனம் செலுத்தினரெனவும், நாம் கருதுவதற்குப்

1. பீடோவின் அமைபபை நோக்கும்போதும இவ்வாறே தோன்றுகிறதாத லால், இவ்விடயததில பிளேட்டோ பிழைவிட்டிருபபாரென நம்ப முடியா தென்க. சிம்மியாசும் கீபிசுவும் பிளேட்டோவிலும் சிறிது இளையவராயிருநதன ராதலால, அவர்கள உண்மையில் சோக்கிரதரின் சீடர்களாயிருநதிராவிடின் பிளேட்டோ அவர்களை இவ்வுரையாடலிற பாததிரங்களாக்கியிரார்.

2. 150, 152 ஆம் பிரிவுகளில் பார்க்க.

போதிய காரணங்களுளவெனலாம். இவர் பற்றிய மிகச் சிறந்த ஆதாரங்களான பிளேட்டோவின் நூல்களிலிருந்து நாம் பெறும் கருத்து இதுவே.

மேலும் பிலோலெசு "எண்களை"ப்பற்றி எழுதினரெனவும் நாம் அறிகிறோம்; இவ்விடயம் பறறிய பைதாகரச கொள்கை களைப் பறறி எழுதிய பியூசிப்போசு இவரையே பினபற்றினராத லின்.[1] இவர் எணகணிதத்திலேயே அதிக கவனம் செலுத்தினரெனக் கருத இடமுண்டு. அத்துடன் இவரது கேதிரகணிதம் நாம் மூனபோர் அத்தியாயத்தில் விவரிததது போன்ற அதிகம் விருத்தியடையாததோர் கோட்பாடே என்பதில் ஐயத்திற்கிட மில்லை யெனலாம். இவரது சீடனான இயூரைதோசு என்பா ரின் கொள்கைகள் அதிக செம்மையற்றனவாயிருந்தன என் பதையும் முன்பு கவனித்தோம் (பிரிவு 47).

பிலோலெசு வைத்தியம் பற்றியும் எழுதினரெனவும், சிசிலிய மரபை அவர் பின்பறறினர் போலத் தோன்றினாலும் உண்மை யில் பைதாகரச கொளகைகளின் அடிப்படையில் நின்று சிசிலிய கொள்கைகளை அவர் எதிர்த்தாரெனவும் நாம் அறிவோம். எமது உடல்கள் சூடானவற்றையே கொண்டிருந்தன வென வும், குளிர்ந்தவை எவையும் அவற்றில் இல்லையெனவும் அவர் கருதினர் என்பது சுறிப்பிடத்தகாது. பிறப்பின பின் னரே சுவாசதத்தின் மூலமாகக் குளிர் எமது உடல்களிற் புகுத்தப் பட்டது. இதற்கும் பழைய பைதாகரச கொள்கைக்கும் இடையே உள்ள தொடாபு வெளிப்படை. அண்டத்திலுள்ள தீ எவ்வாறு உலகைச் சூழவிருக்கும் இருண்ட குளிர்காற்றை உள்ளிழுத்துக் கட்டுப்படுத்துகின்றதோ (பிரிவு 53), அதுபோலவே எமது உடல் களும் வெளியேயிருந்து குளிரை உள்ளிழுக்கின்றன. பித்தம், இரத்தம், கபம் எனபனவே நோய்களுக்குக் காரணங்களெனப் பிலோலெசு கூறினர்; அனறியும் இக்கொள்கைக்கேற்ப, சிசிலிய மரபினா கூறியது போல கபம் குளிருடையது அல்ல என அவர் கூறவேண்டியிருநதது. அச்சொல்லின் (கிரேக்க சொல்லின்) அமைப்பை ஆராயின் அது சூடானது என நிரூ பிக்கப்படும் என அவர் கூறினர். இவ்வாறு சிசிலிய வைத்திய மரபுடன் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்தமையே, பின்னைப் பைதாகரசதத்தின் சில முக்கிய இயல்புகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த தென்பதை நாம் கண்போம்.

பைதாகரவாதி களும் பிளேட்டோ வும

140. வரலாற்றின் மூலம் நாம் அறியவரும் பிலோலெசு, நாம் அறிந்தவரையில் இத்தகையவரே. ஆனால் வேறு பலவா றும், கொப்பர்ணிக்கசுவின் முன்னோடியெனவும் கூட, இவர்

1. 2 ஆம் அத்தியாயம் 107 ஆம் பக்கத்தைப் பார்க்க.

பிறரால் வருணிக்கப்பட்டுள்ளார். இது பற்றி அறிவதானால் நாம் இலககியச்சதி ஒன்றைப்பற்றிச் சறறே தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

பிளேடடோ பிலோலெசுவைப் பற்றி ஓரிருமுறைகள் குறிப்பிட்டுள்ளாரெனினும், பைதாகரச விஞ்ஞானக் கொள்கைகளின் வளர்ச்சியில் இவர் பிரதான பங்கெதுவும் எடுத்தாரென இக் குறிபபுக்களிலிருந்து தெரியவில்லை. பைதாகர விஞ்ஞானத்தைப் பற்றிய மிக விரிவான விவரங்களை, லோககிரியன் நாட்டவனான திமாயோசு என்பவனின் வார்த்தைகளாகப் பிளேட்டோ எமக்குத் தருகிறார். ஆனால் திமாயோசுவைப் பற்றிப பிளேட்டோ கூறுபவற்றைத் தவிர நாம் எதுவும் அறியோம். சோக்கிரதருக்கு அதிக வயதாவதற்கு முன்னரே அவர் அதெனசுக்கு வந்தார் என்பதுவும்[1] அவர் பிலோலெசுவின் காலத்தவர் என்பதுவுமே எமக்குத் தெரியவந்துள்ளவை. உண்மையில் திமாயோசுவிலும் அதிக பிரசித்தமானவரான, பிலோலெசுவின கண்டுபிடிப்புக்களைத திமாயோசுவினுடையவை எனப் பிளேட்டோ கூறியுள்ளார் எனக் கருத இடமிலலை. பிளேட்டோவிற்கு எதிரிகளும், பழிகூறுவோரும் பலர் இருந்தனர் என்பதில் ஐயமில்லை; அரித்தோசெனசுவும் அவர்களுள் ஒருவர். பிளேட்டோவினுடைய "குடியரசு" என்னும் நூலின் பெரும் பான்மையும் புரொதாகரசுவின் நூலொன்றிற் காணப்படுகிறது என்னும் விநோதமான கூற்று அவரது என்பதையும் நாம் அறிவோம். அன்றியும் பிளேட்டோ பிலோலெசுவிடமிருந்து "மூன்று பைதாகரச நூல்களை வாங்கி அவற்றிலிருந்தே திமாயோசு" வைப் பிரதிபண்ணினார் என்னும் கதையை உண்டாக்கியவரும் இவரே எனவும் தோன்றுகிறது. இக்கதையின்படி இம்"மூன்று நூல்களும்" பிலோலெசுவிடம் இருந்தன. அவர் மிகுந்த வறுமையடைந்திருந்தாராதலின், அந்நூல்களை டியோன் எனபார் பிளேட்டோவின் வேண்டுகோளின்படி, பிலோலெசுவிடமிருந்தோ அல்லது அவரது உறவினர் ஒருவரிடமிருந்தோ நூறு மினே பணத்திற்குப் பெற்றுக்கொண்டாரென்பது கதை.[2] இக்கதை மூன்றாம் நூற்றாண்டிலேயே பெருவழக்கிலிருந்தது எனபது நிச்சயம்; ஏனெனில் பிளேயசு நாட்டு அங்கதகாரரான திமோன் என்பார் பின்வருமாறு பிளேட்டோவை நோக்கிக் கூறுகிறார்: "பிளேட்டோ, அறிவு சேர்க்கும் ஆசை உன்னையுமல்லவோ பீடித்தது. ஏனெனில் அனேக வெள்ளி நாண

1. அதிக வயதினனான மூத்த கிரிததியாசுவுடனும, இளைஞனான ஏமோககிறாத்திசுவுடனும் அவர் உரையாடிக் கொணடிருபபதாகக காட்டப்பட்டுளளாராதலால், நாம் இவ்வாறு கொள்ள முடிகிறது.

2. இக்கதை அரித்தோசெனசுவுடையது என டியல்சு கொள்வது மிகச் சரியே.

யங்களைக் கொடுத்து ஒரு சிறிய நூலைப் பெற்றுக்கொண்ட நீ, அதிலிருந்து திமாயசுவை எழுதக் கற்றுக்கொண்டாயன்றே?" பிளேட்டோ தாலுகவே நாற்பது அலெகசாந்திரிய மினே நாண யங்களைக் கொடுத்துப் பிலோலெசுவின் உறவினர்களிடமிருந்து இந்நூல்களைப் பெற்றுக்கொண்டாரெனவும் அவற்றிலிருந்து திமாயசுவைப் பிரதி பண்ணினாரெனவும் "யாரோ ஒரு எழுத் தாளர்" குறிப்பிட்டுள்ளதாகக் கலிமாச்சோசுவின் மாணவரான எமிப்போசு என்பார் கூறியுள்ளார். அரித்தாக்கியரான சத்தை ரோசு என்பார் டியன் மூலமாகவே இந்நூல்கள் நூறு மினே கொடுத்து வாங்கப்பட்டன எனக் கூறுகிறார். இக்கூற்றுக்கள் எவற்றிலாவது, இங்கு குறிப்பிடப்படும் நூல்கள் பிலோ லெசுவால் எழுதப்பட்டன எனக் கூறபபடவில்லை; பிளேட்டோ வாங்கியது பைதாகரசுவினுடையவோர் நூல் அல்லது அவரது போதனையின் உண்மையான குறிப்புக்கள் கொண்டவோர் நூல் எனபதும், அவை பிலோலெசுவிடம் இருந்தன எனபதுவுமே இக்கூற்றுக்களில் தரப்படுவது எனக. பிற்காலத்தில் லோக்கிரிய னான திமாயோசு என்பாரது பெயரோடு வழங்கும் "உலகத் தின ஆன்மா" எனனும் போலியே இங்கு குறிப்பிடப்பட்ட நூல் எனக கருதப்பட்டது. ஆனால் இந்நூல் முதலாம் நூற் றாண்டிற்கு முன்னர் இருந்திருக்க முடியாது என்பது தற் போது நிரூபிக்கபபடுவிட்டது. மேலும் இந்நூல் பிளேட்டோ வின் திமாயசுவையே தழுவி, அவரது நூல் களவாடி எழுதப் பட்டது என்னும் கதையை நம்பத்தகுந்ததாக்குவதற்காக, எழு தப்பட்டது என்பது தெளிவு. அனறியும் இக்கதையின் ஓர் பிரதான அம்சமான "மூன்று நூல்கள்" என்னும் முக்கிய நிபந்தனையேனும் "உலகத்தின் ஆன்மா" எனும் இந்நூல் பொருந்தவில்லை.

நாம் இங்கு குறிப்பிட்டவர்களில் ஒருவர்தானும் பிரசித்த மான இம் "மூனறு நூல்களை"த் தான் நேரிற கண்டதாகக் கூறவில்லை.[1] ஆனால் பிற்காலத்தில் குறைந்தது இரண்டு நூல்களாவது, இப்பெயரால் வழஙகின. அயோனிய மொழியில், எழுதப்பட்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட நூலொன்று, பைதாகரசுவின் பெயரால் வழங்கியதென டியஸ்சு எடுத்துக்காட்டி யுள்ளார். இந்நூல் அரித்தோசெனசுவின் நூலொனறைப் பெரி தும் தழுவி எழுதப்பட்டதாகும். ஆயினும் இதனது காலத்தை நிர்ணயிக்க இயலாதிருக்கினறதென்க.

1. பைவாட்டர் கூறியதுபோல, இந்நூலின் வரலாறு, உண்மையில் கற்பனை சதஇ கொண்ட எழுத்தாளர்களது மனத்தில தோன்றும் ஓர் இலக்கியக் கொள்ளிவா பேயின் வரலாறு போலத் தோனறுகிறதேயொழிய, ஒரு புத்த கத்தின வரலாறு போலத் தோனறவில்லை.

கி. மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த டிமீத்திரியசு மக்னேசு என்பார் தாம் கூறும் வார்த்தைகள் சில, பிலோலெசு பிரசுரித்த நூலொன்றின ஆரம்பப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட மேறகோளகள் எனக் கூறுகிறார். இவை டொரிக்கு மொழியிலுள்ளன. இந்நூல் உண்மையில் பிலோலெசுவினுலேயே எழுதப்பட்டது என டிமீத்திரியசு கூறவில்லே. ஆயினும் தோபேயோசு முதலாய எழுத்தாளர்களது நூல்களில் இவரது பெயரோடு உள்ள மேற்கோள்கள் எடுக்கப்பட்ட நூலே, டிமீத்திரியசு குறிப்பிடும் நூல் எனபதில் ஐயமில்லே. இது பிலோலெசுவினுல் எழுதப்பட்டதெனக் கூறபபடின், அது மூலக்கதையோடு அவ்வளவு டொருத்தமுடையதாயிருக்கவில்லே ; ஆனுல் இவரது பெயர் இந்நூலுக்கு என வந்தது எனபதை இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். பைதாகரசினது பெயரோடு வழங்கிய மற்றைய நூல் உண்மையில் லேசிசுவரால் எழுதப்பட்டதென நாம் அறிகிறோம். பிலோலெசு எழுதியது எனக் கூறப்பட்ட நூலும் மூன்று பகுதிகளையுடையதாயிருக்கலாம் எனப் பீக்கு விளக்கியுள்ளார். புரோக்கிளிசு அந்நூலே ''டக்காய்'' என அழைக்கிறார். எரொடோதசுவின் " தேவதை "கீள நினேவூட்டும் இத் தலேப்பு அலெக்சாந்திரிய செல்வாக்கினேக காட்டுகிறது. தொபேயோசுவிலுள்ள பகுதிகளிரண்டும் இதை அத்தாட்சிப்படுத்துகினறன. இக்கதை முழுவதுமே பீகவும் சந்தேகத்திற்கிடமானது என்பதை ஒபபுகொள்ளத்தான் வேண்டும்.

பிலோலெசின் பகுதிகள்

141. பிலோலெசுவின் பெயரிலுள்ள பகுதிகள் யாவும் உண்மையானவையேயெனப் பீக்கு வாதித்தார். ஆனுல் தற்போது ஒருவரும் அதனே ஒபபுகொள்ளார். எனைய பகுதிகள் யாவும் உண்மையில் பிலோலெசுவுடையனவே என ஒப்புக்கொள்வோர் கூட, ஆனமா பற்றிய நீண்ட பகுதி அவரது அல்லவெனவே கூறுவர்.[1] இக்கருத்து எற்றுக்கொள்ளக் கூடிய ஒனறல்ல வெனலாம். ஒன்றுகு மேற்பட்ட நூல்கள் இருந்தனவெனக் கொளளுதற்கு எவ்வகை ஆதாரமுமில்லேயெனக் கண்ட பீக்கு, எஞ்சியுள்ளவை யாவற்றையும் நாம் அவை முழுவதும் உண்மையானவை அல்லது போலிகள் எனக் கொள்ளுதல் வேண்டும் என முடிவு செய்தார். எனினும் பெரும்பாலான பகுதிகள் உண்மையானவையே என அநேக அறிஞர்கள் கருதுவதால, அவறறை நாம் ஒரேயடியாக ஒதுக்கி விட முடியாது. இவர்களின் கொள்கையின அடிப்படையில் எழும் வாதங்கள ஒனறை

1. இது R. P. 68 இல தரப்பட்டுள்ளது. இதையும் எனைய பகுதிகளையும் பற்றிய ஆராய்வு பினவரும் கட்டுரையிற காணப்படுகிறது : **"On the Fragments attributed to Philolaus the Pythagorean—by Bywater"** (J. Phil. i.pp. 21 Sqq.).

ஒன்று பற்றிநிற்பன போலத் தோன்றுவது உண்மையே. ஆயினும் பிலோலெசுவின் இப்பகுதிகளுக்கெதிராகக் கூறப்படும் இரு பிரதான குறறச்சாட்டுக்களை ஈண்டு உடனடியாகத் தரலாம்.

முதலாவதாக, பிலோலெசு டொரிக்கு மொழியில் எழுதியிருக்க முடியுமா என நாம் அறிதல் வேண்டும். பெலோப் பொனீசியப் போர்வரைக்கும் அயோனிய மொழியே உபயோகிக்கப்பட்டதாதலின் ஆதி பைதாகரசுவாதிகள் வேறேரு மொழியை உபயோகித்ததனர் எனக் கொள்ளுவதறகுக் காரணமெதுவும் இல்லையென்க. மேலும் பைதாகரசுவும் ஓர் அயோனியரே யாதலால், அவர் தமது மரபை நிறுவிய ஆக்கையன் நாடுகளில், அவரது காலதிலேயே டொரிக்கு மொழியை உபயோகித்தனர் என எண்ண இடமில்லை. குரோட்டன் நாட்டவரான அலுக்மையோனும் அயோனிய மொழியிலேயே எழுதினரெனத் தோன்றுகிறது. பிலோலெசுவும் அவருக்குப் பின்னர் ஆக்கைட்டாசுவுமே தமது பிறந்த நாடடு மொழியை உபயோகிக்கத் தொடங்கிய முதலாவது பைதாகரசவாதிகள் என டியல்சு கூறுகிறார். ஆனால் டியல்சுவுக்குப் பிறந்த நாடு என ஒன்று இருந்ததெனக் கூறுவதே அத்துணைப் பொருத்தமுடையதாயிராது. அனறியும் தீபிசுவில் வாழ்ந்த ஆக்கையன் நாட்டு அகதியொருவன எதற்காக டொரிக்கு மொழியில் எழுதி யிருக்க வேண்டும் என அறிந்து கொள்ளுதல் சுலபமல்ல. மேலும் ஆக்கைடடாசு எழுதியது "பாமரர்களது டொரிக்கு" எனக் கூறக்கூடியவோர் மொழியிலேயே யன்றி தாரசு நாட்டு லாக்கோனிய மொழியிலல்ல. அன்றியும் அவர் பிலோலெசுவுக்கு ஒருதலைமுறை பிந்தியவர் எனபதும் குறிப்பிடத்தக்கது. பிலோலெசுவின் காலதிலும் அதற்குப் பின்னரும்கூட டொரிய நகரங்களில் விஞ்ஞான அலுவல்களுக்கு அயோனிய மொழியே உபயோகிக்கப்பட்டது. சிராக்கியூசு நாட்டு வரலாறருசிரியரான அந்திக்கோசுவும், டொரிய நாட்டு வைத்திய நூலாசிரியர்களான கோசு, நிடோசு எனபாரும் அயோனிய மொழியிலேயே எழுதினர். பைதாகரசுவினுடையதெனக் கூறப்படும் போலி நூலும்—இதுவே வேறு சிலரால் லேசிசுவால் எழுதப்பட்டதெனக் கூறப்படுவது—அயோனிய மொழியிலேயே எழுதப்பட்டிருக்கிறது. அந்திரோக்கைடிசுவால் எழுதப்பட்டதெனக் கூறப்படும் அக்கௌசுமாட்டா பற்றிய நூலும் அயோனிய மொழியிலேயே எழுதப்பட்டிருப்பதிலிருந்து, பைதாகரச நூல்களுக்கு அயோனிய மொழியே பொருத்தமானதென அலெக்சாந்திரிய காலங்களிலும் கருதப்பட்டது என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாக, இப்பகுதிகளிலொன்றில் ஐந்து ஒழுங்கான திண்மங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனவென்பதினும் அவற்றில் நான்கு எம்பிடோக்கிளிசுவின் நான்கு மூலகங்களே என்பதினும் எவ்வகை ஐயத்திற்குமிடமில்லை. "குடியரசு" எனும் தனது நூலில், அவ்வுரையாடல் நிகழ்ந்தகாலத்து திண்மப் பொருளளவையியல் இன்னமும் விருத்தி செய்யப்படவில்லை யெனப் பிளேட்டோ கூறியுள்ளார்[1]. "பிளேட்டோவின் உருவங்கள்" என அழைக்கப்படும் ஐந்தும் கழகத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டனவென்பதற்குத் தக்க ஆதாரமுளது. பைதாகரச வாதிகளுக்குச் சதுரத்திண்மம், பிரமீது (நான்முகத்திண்மம்), பன்னிருமுகத்திண்மம் என்பனவே தெரிந்திருந்தன வென வும் எண்முகத் திண்மம், இருபான்முகத்திண்மம் என்பன தியாதித்தோசுவினுலேயே கண்டுபிடிக்கப்பட்டன வெனவும் இயூக்கிளிடுவுக்கெழுதப்பட்ட பக்கக் குறிப்பொன்றிற் காணப் படுகின்றது. "பிலோலெசுவின் பகுதி"களே நாம் முற்றுக எற்றுக்கொள்ள மறுப்பதற்கு இதுவே போதிய காரணமாகும் எனலாம். அன்றியும் இப்பகுதிகள் எந்நூலிலிருந்து எடுக்கப் பட்டனவோ அந்நூலே அரித்தோதில அறிந்திருக்கவில்லை யென் பதும் நாம் இப்பகுதிகளே முற்றுக எற்க மறுத்தற்குக் காரண மெனலாம்[2].

142. ஆகவே நாம் பிற ஆதாரங்களைக் கவனித்தல் வேண்டும். பிரச்சினை பைதாகரசவாதத்தைப்பற்றிப பிளேட்டோவிடமிருந்து மட்டுமே அதற்குச் சாதகமான முறையில் அறிய முடியும் என்பது ஏற்கெனவே கூறப்பட்டனவறறிலிருந்து தெளிவாகிறது. பைதா கரச சிந்தனைகளில் அரித்தோதிலுக்கு அதிக மதிப்பில்லாதிருந்த போதிலும், அவர் அவற்றை விளங்கிக்கொள்வதற்குப் பெரிதும் முயன்றார். அவர் இவ்வாறு முயன்றது எனெனில் பிளேட்டோ

1. பிளேட்டோ, *Rep.* 528 b.

2. அரித்தோதிலினது நூல்கள் முழுவதிலும் பிலோலெசு ஒரேயொரு இடத்திலேயே (Eth. Eud. B, 88. 1225 a 33) குறிப்பிடப்பட்டிருக் கிறார். வேறேரு இடத்திலும் அவரது பெயர்கூடக குறிப்பிடப்படவில்லை. பைதாகரச கொளகைகளை விளக்கும் இவரது நூலைதையும் அரிதோதில் கண்டிருந்தாராஞல் இஃது இவவாறிருகக நியாயம இல்லை. பிளேட்டோவின் "பீடோ"விலிருநது பிலோலெசுவின முகயிய ததுவத்தை அவர் அறிந்திருப்பா ராதலால, அததகைய நூலெதுவும் இருநதிருந்தால அவர் அதைத் தேடிப் பெற்றிருப்பார். எமது பகுதிகளிலுளளதுபோனற உயர்தர இசைக கொளகை யைப் பிலோலெசுவிஞல் இயற்றியிருகக முடியாது எனத் தானரி கூறு கிறார் என்பதும குறிப்பிடத்தககது. பிளேட்டோ, ஆக்கைட்டாசு என்போருக்குப் பின்னரே அக்கொள்கை தோன்றியிருகக வேணடுமென அவர் வாதிததார் (Rev. de. Phil. xxviii. pp. 233 Sqq). இவவிடயஙகளில் அவரது கருத்து மதிக்கத்தககது எனக.

வினதும் அவருக்குப் பின் வந்தோரினதும் கொள்கைகளின் வளர்ச்சியில் பைதாகரச கொள்கைகளுக்கு அதிக பங்குண்டாதலினல் இவ்விரு கொள்கைகளுக்கிடையேயுள்ள தொடர்பைத் தாம் அறிந்து கொள்ளுதற்கும் தமது சீடர்களுக்குத் தெளிவு படுத்துதற்கும் அவர் பைதாகரச கொள்கைகளையும் நன்று அறிந்துகொள்ளவேண்டி யிருந்ததனலென்க. ஆகவே நாம் இப்போது செய்ய வேண்டியது அரித்தோதில் கூறுபவறறைப் பிளேட்டோவின் மனப்பகுவத்தோடு பொருள் செய்துகொண்டு, அம்முறையினல் நாம் பெறும் கொள்கை அதற்கு முந்திய கொள்கை ளோடு எவ்வாறு தொடர்புகொண்டிருக்கிறது எனக் காண்டலேயாகும். இது மிக நுட்பமானவோர் வேலையென் பதிற சந்தேகமில்லை யெனினும், கணிதவியல் வைத்தியவியல் எனபனவற்றின் ஆதி வரலாறு பற்றிய சமீபகாலக் கண்டு பிடிப்புக்களின மூலம் இது அத்துணைச் சிக்கலல்லாதவொன்றாகி விட்டதெனலாம்.

பைதாகரச கொள்கையின் பிந்திய வர்ணனைகளிற் புகுந்த பிளேட்டோனிய அம்சங்களை நீக்குவதன்மூலம், செல்லர் நிலை மையை ஓரளவுக்குத் தெளிவுபடுத்தியுள்ளாரெனலாம். மேற் கூறிய பிளேட்டோனிய அம்சங்கள இருவகைப்பட்டன. முதலா வதாக எல்லையையும், எல்லையற்றதையும், ஏகமும் தோரா விரட்டையும் எனக் கூறுவதுபோன்ற வழமையானகழக்க் கருத் துக்களுள்ளன ;[1] இரண்டாவதாக, எல்லைக்கும் எல்லையற்றதற் குமிடையே உள்ள எதிர்பபு, பதிக்கும் சடப் பொருளுக்குமி டையே உள்ள எதிர்ப்பு எனக் கூறும் நவபபிளேட்டோதரிசனக் கருத்துளது.[2] இத்தகையவோர் கொள்கை பைதாகரச வாதிக ளுடையது என இப்போது யாரும் கூறுராதலின், செல்லரது வாதங்களை இங்கு தர வேண்டியதில்லை.

இது, பிரச்சினையைச் சற்றே இலகுவாக்கினலும், இன்னமும் எமது வேலை கடினமானதே. அரித்தோதில் கூறுவதனபடி பொருளகள் எண்களே எனப் பைதாகரசவாதிகள் கூறினர். ஆனல் பிலோலெசுவின் பகுதிகளிலிருந்து நாம் பெறும் கொள்கை இதுவல்ல. இவற்றின மூலமாகவே எம்மால் பொருள் களை அறிய முடிகிறது. ஆனல் அவற்றின் உண்மையான சாரம் நம்மால் அறிய முடியாததொன்றாகும். பைதாகரசுவே பொருள்கள் எண்களே எனக் கூறியுள்ளார் என நம்புதற்

1. " ஏகமெனக் கருதபபடும் எல்லையற்றதற்குப் பதிலாக இரட்டையொன்றை நிறுவுவதும், எல்லையறறதில் பெரியவையும் சிறியவையும் உள்ளன வெனக் கூறுவதும் பிளேட்டோவிற்கு இயல்பானதே " என அரித்தோதில கூறுகிறார்.

2. Zeller, p. 369 Sqq. (Eng. trans. p. 397 Sqq.)

கான காரணங்களே நாம் பார்த்தோம் (பிரிவு 52.) இச் சூத்திரத்துக்கு அவரைப் பின்பற்றியோர் எவ்வாறு பொருள் கொண்டனர் என்பதிலும் ஐயமில்லை ; ஏனெனில் அவர்கள் அதை அண்டவியற கருத்தில் உபயோகித்தனர் என அரித் தோதில் கூறுகிறார். உலகம் " நான்கு மூலகங்களால் " உண் டாக்கப்பட்டிருக்கிறது எனவும் எண்ணிறந்த விதைகளிலுல் உண்டாக்கப்பட்டிருக்கிறது எனவும் பிறர் எவ்வாறு கூறினர் களோ அதே போலவே இவர்கள் உலகம் எண்களால் உண்டாக் கப்பட்டிருக்கிறது எனக் கருதினர். இதை வெறும் அனுபூதி நெறியென ஒதுக்கிவிட முடியாது. ஐந்தாம் நூறாண்டில் பைதாகரசவாதிகள், விஞ்ஞானிகளாயிருந்தனராதலால அவர் கள் கூறியதற்குத் திட்டவட்டமான பொருளிருந்திருத்தல் வேண்டும். பொருள்களை எண்களே எனும் சொறகளுககு அவர்கள் அவற்றின் இயல்புகளுக்கு மாறுன பொருளேதும் கொண்டிருத்தல் வேண்டுமென நாம் கொண்டாலும் அதில் எவ்வித சிக்கலுமில்லை. தமது குருவின் சொற்களே எவ்வகை மாற்றமுமின்றி உபயோகிபபதில் பைதாகரசவாதிகள் அதிக கவனமுடையோராயிருந்தனர் ; ஆனுல் சொற்களே அப்படியே உபயோகிப்பதில் அவர்களுக்கு இத்தகைய பக்தி இருந்த அதே நேரத்தில் அச்சொற்களுக்குத் தாம் விரும்பியவாறெல்லாம் பொருள் கொள்ளும் பண்பையும் அவர்கள் கொண்டிருந்தனர். ஆகவே நாம் அரித்தோதில் எண்களைப் பற்றிக் கூறுவதி லிருந்து ஆரம்பிக்கலாம்.

எண்கள் பற்றி அரிதோதில் கூறியவை

143. பைதாகரசவாதமும் ஏனையவற்றைப் போலவோர் அண்டவியற் கொள்கையாகவே அமைந்ததென அரித்தோதில் தெளிவாக அபிப்பிராயப்படுகிறார். " பைதாகரசவாதிகள் உப யோகித்த முதற்றத்துவங்களும் மூலகங்களும், புலன்தருபொ ருள்களிலிருந்து பெறப்படாதவையாதலால், அத்தனை வெளிப் படையானவையாயல்லாத போதிலும், அவர்களது ஆராய்ச்சி களும் விவாதங்களும் இயற்கை பற்றியே குறிப்பிடுவனவாய் அமைந்துள்ளன. வானத்தின் தோற்றத்தைப் பற்றி அவர்கள் வர்ணிக்கின்றனர். அதன் பகுதிகளையும், அதற்கு நடப்பன வற்றையும் அதன் இயக்கங்களையும் அவர்கள் அவதானித்த னர் " என அரித்தோதில் கூறுகிறார். உள்பொருளானது புலன்களால் அறியத் தரப்படுவதேயெனவும், வான வட்டத் திற்குட்பட்டதெனவும் மற்ற மெய்யியல் வாதிகளோடு தாமும் ஒப்புகொள்பவர் போன்று, இப்பொருள்களையே அவர்கள் தமது முதற்றத்துவங்களால் விளக்க முற்படுகின்றனர். ஆனுல் அவர்களாற் கையாளப்பட்ட முதற்றத்துவங்களும், காரணங்

களும் புலன்றரு பொருள்களை விட உயர்ந்த உள்பொருள் வகைகளை விளக்கவல்லன என்பது குறிப்பிடத்தக்கது.

எண்களின் மூலகங்கள் பொருள்களின் மூலகங்களேயாதலால் பொருள்கள் எண்களே யென அரித்தோதில் இக்கொள்கையை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். அனறியும், "பொருள்கள்" என்பவை புலன்றரு பொருள்களே யெனவும் உண்மையில் அவை இவ்வுலகத்தின பல்வேறு பகுதிகளாயுமுள்ள உடல்களே யெனவும் அவர் திட்டவட்டமாகக் கூறுகிறார். எண்களிலிருந்து உலகத்தை உண்டாக்குதல் உண்மையில் நடைபெற்றவோர் செயன்முறை யெனவும் அது காலத்தில் நடைபெற்றதெனவும் கருதிய பைதாகரசவாதிகள் அச்செயன் முறையை விரிவாக வருணித்துள்ளனர்.

மேலும் இக்கொள்கையில் குறிப்பிடப்படும் எண்கள் புலன்றரு பொருளகளிலிருந்து முற்றுக வேறுபட்டனவல்லவாயினும், அவை கணிதவியலெண்களே. அதே நேரத்து அவை வெறுமனே பிறவற்றின் பணபுகளாக மாத்திரமிராது, தமக்கென வோர் மெய்ம்மையுடையனவாயிருந்தன. "எல்லை, எல்லையற்றது, ஏகம் என்பன தீ, நீர் போன்ற பிற பொருள்கள் என அவர்கள் கருதவில்லை; ஆனால் எல்லையற்றதும், ஏகமுமே, தாம் எவற்றிறகுப் பயனிலையாகக் கூறப்பட்டனவோ அவற்றின் மெய்ம்மைகளாக விருந்தன. இதனுற்றுன் எண்களே யாவற்றினதும் உள்பொருளாக விருந்தனவென அவர்கள் கூறினர்." ஆகவேதான் எண்கள், அரித்தோதிலின் சொற்களிற் கூறுவதானால் பொருள்களின் நியமகாரணங்களாக மாத்திரமிராது ஆதிகாரணங்களாகவுமிருந்தன."

பைதாகரசவாதிகளுக்கும் பிளேட்டோவுக்குமிடையே ஒற்றுமையிருந்த கொள்கையெதுவெனில், எண்கள் வேறெதனேடும் சாராது தாமாகவே மெய்ம்மையுடையனவாயிருந்தன வென்பதே என அரித்தோதில் கூறியிருக்கிறார்; ஆனால் எண்களினது மெய்ம்மை புலன்றரு பொருள்களின் மெய்ம்மையிலிருந்து வேறுபட்ட தன்மையினது எனக் கூறுவதன் மூலம் பிளேட்டோ பைதாகரசவாதிகளிலிருந்து வேறுபட்டார். இக்கூற்றுக்களை நாம் விரிவாக ஆராயலாம்.

எண்களின் மூலகங்கள்

144. எண்களின் "மூலகங்கள்" சிலவற்றைப் பற்றி அரித்தோதில் குறிப்பிடுகிறார். இவையே பொருள்களின் மூலகங்களுமாம். இதன் பொருளையறிந்தால், அது இப்பிரச்சனையை விளக்குதற்கு வழியாயமையும். ஆரம்பத்தில் ஒற்றை, இரட்டை என்பனவே "எண்களின் மூலகங்கள்" என நாம் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு கொள்ளுதல் எமக்கு அதிகம் உதவுவதா

யில்லை. ஆனால் பைதாகரச அண்டவியலின் முதற்றத்துவங்க ளென நாம் கருதக்கூடியனவையான எல்லை, எல்லையற்றது என் பனவே, ஒற்றை, இரட்டை என்பனவாகக் கொள்ளப்பட்டனவென வும் நாம் காண்கிறோம் (பிரிவு 53). பொருள்களிலிருக்கை யில், ஒற்றையினால் கட்டுபடுத்தப்படும் இரட்டையே பொருள்க ளுக்கு அவற்றின எல்லையற்ற தன்மையை அளிக்கிறது என அரித் தோதில் கூறுகிறார். பொருள்களுக்கு, எல்லையற்றுப் பிரிக்கப்படும் தன்மையை அளிப்பது இரட்டையே என உரையாசிரியர்கள் யாவ ரும் கருத்து வேற்றுமையின்றி இதற்குப் பொருள் கொண்டுள் ளனர். ஆனால் இது எவ்வாறு சாத்தியமாகும் என்பதை விளக்க முயல்கையிற்றான் அவர்களுக்குப் பிரச்சினைகள் எற்படுகினறன. அலெக்சாந்தரினது என நம்பத்தகுந்ததான விளக்கமொன் றைச் சிம்பிளிசியசு பேணித் தந்துள்ளார். அது வருமாறு : "ஒவ்வொரு இரட்டையும் சமமான பகுதிகளாகப் பிரிக்கப்படுவதா லும் சமமாகப் பிரிக்கப்படுவது எல்லையின்றி இரண்டாக்கப்பட லாமாதலாலும் இரட்டை எண் எல்லையற்றதெனக் கொள்ளப் பட்டது ; ஏனெனில் பாதிகளாகவும், சமபங்குகளாகவும் செய் யப்படும் பங்கீடு எல்லையின்றி நடைபெறும் தன்மையுடைய தாயிருக்கிறது. ஆனால் ஒற்றை அதனுட் கொணரப்பட்டதும் இரட்டை கட்டுப்படுத்தப்படுகிறது. ஏனெனில் அது சமபங்குகளா கப் பிரிக்கப்படுவதை ஒற்றை அசாத்தியமாக்குகிறது." இரட்டை எண்கள் எல்லையின்றி இரண்டாகப் பிரிக்கப்படும் தன்மை யுடையன வெனப பைதாகரசவாதிகள் கூறினர் என நாம் கூற முடியாது என்பது வெளிப்படை. இரட்டை எண்களான 6, 10 ஆகியன ஒருமுறை மட்டுமே இரண்டாகப் பிரிக்கப்படலாம் என அவர்கள் அறிந்திருப்பார்கள். அரித்தோசெனசுவுடைய பகுதியொன்றிற் காணப்படும் பொருளே பொருத்தமுடையது போலத் தோன்றுகிற தெனலாம். அதன்படி "சமபங்குக ளாகப் பிரிக்கப்படக்கூடியவை இரட்டை எண்கள். ஒற்றை எண் கள் சமமில்லாத பங்குகளாகப் பிரிக்கப்படும் தன்மையையுடை யன ; அன்றியும் அவை "நடுப்பதம்" ஒன்றை உடையன." சுதொபேயோசுவினால் மேற்கோளாகக் கையாளப்பட்டிருக்கும் பொசெய்டோனியோசுவின் பகுதி யொன்றில் இது மேலும் விளக்கப்பட்டிருக்கின்ற தெனலாம். அது வருமாறு : "ஒற்றை எண் இரு சமபங்குகளாகப் பிரிக்கப்படும்போது அதன் ஒரு அலகு நடுவில் எஞ்சிவிடுகிறது ; ஆனால் இரட்டை எண் இவ் வாறு பிரிக்கப்படும்போது தலைவனற்ற புலம் போன்றவோர் எண் இல்லாத வெற்றிடமே எஞ்சி நிற்கிறது. இதிலிருந்து இரட்டை எண் குறைவுடையதும் பூரணமில்லாததுமானவொன்று என்பது தெளிவாகிறது." புளூட்டாக்கும் பின்வருமாறு கூறு

கிறார் : "இரட்டை எண்ணானது எத்திசையிலாவது பிரிக்கப்படும் போது தனக்குள்ளேயே...ஒரு வெற்றிடத்தை விடுவது போலத் தோன்றுகிறது ; ஆனால் ஒற்றை எண்ணே இவ்வாறு பிரிக்கும் போது, பிரித்தலின் பின்னர் எப்போதும் ஒரு நடுப்பதம் எஞ்சி நிற்கிறது." இப்பகுதிகள் யாவும் ஒரு பொருளையே குறிக்கின்றன வென்பதும் அப்பொருள் நமக்கு முன்பே அறி முகமான "பதங்கள்" அதாவது குற்றுக்களே யல்லாது வேறெ துவுமல்ல வென்பதும் வெளிப்படை (பிரிவு 47). பிரிக்கும் போது, அது எப்போதும் இவற்றிற்கிடையே நடைபெறல் வேண் டும் ; எனெனில பிரிக்கும்போது, பிரிக்க முடியாத பதமெது வும் எதிர்ப்படின், பிரித்தல் தடைப்படுகிறதென்க.

எண்கள் பரப் புடையன

145. எல்லையற்றது என்பது பரப்புடையதெனவே பைதாகரசு கருதினர் என்பதில் ஐயமெதுவுமில்லை ; ஏனெனில் அவர் வளி, இரவு, வெறுமை என்பனவெல்லாம் அதுவே யெனக் கூறி னர். ஆகவே அவரைப் பின்பற்றியோர்களும் எல்லையற்றது பரப்புடையதே எனக் கருதினர்கள் என எதிர்பார்க்கலாம. அரித்தோதிலும் இவ்வாறே கருதினர் என்பது உறுதி. எல்லை யற்றது வேறேர் உள்பொருளின் பயனிலையாய் மாத்திரமிராது தானே ஓர் உள்பொருளாயின், வளியின் பகுதிகளும் எவ்வாறு வளியாயுள்ளனவோ, அவ்வாறு அதன் ஒவ்வோர் பகுதியும் எல்லையற்றதாய் இருத்தல் வேண்டுமென அவர் வாதித்தார். பைதாகரச எல்லையற்றது வானத்திற்கு வெளியே யுள்ளது எனும் அவரது கூற்றிலும் இககருத்தே பொதிந் துள்ளது.[1] இதற்கப்பால், தெளிவாகப் பொருள் கொள்ள இய லாதென்க. பிலோலெசுவும் அவரைப் பின்பற்றியோரும் எல்லை யற்றதை வளியெனக் கருதியிருக்க முடியாது ; ஏனெனில் அவர்கள் அம் "மூலகத்"தைப் பொறுத்தவரை எம்பிடோக்கி ளிசுவின் கொள்கையை ஏற்று, அதை வேறு வழியில் விளக் கின ரென்பதை நாம் காண்போம். அவர்களில் ஒருவரான சூத்தோசு என்பார் அடர்த்தியுறல், ஐதாதல் என்பன நடை பெறும்போது, வெற்றிடம் இல்லாது விடின் அண்டம் கொள் ளாது போய் விடுமாதலின், வெற்றிடம் இருத்தல் வேண்டும் என வாதித்தார். இவர் அணுவாதிகளுக்கு முந்தியவரோ அல்லரோ என நாம் அறியோம். எல்லையற்றது எனும்போது பரப்புடைய பொருள்களையே பைதாகரசுவாதிகள் கருதினர் எனக் கூறினால் போதுமானது. எல்லையற்றது பரப்புடையதானால் எல் லையும் பரப்புடையதாய் இருத்தல் வேண்டும். மேலும் கோடு, புள்ளி, மேற்பரப்பு என்பன எல்லையின் உருவங்கள் எனக்

1. 2 ஆம் அத்தியாயம் 53 ஆம் பிரிவைப் பார்க்க.

கொள்ளப்படலாம். அதுவே பின்னர் கைகொள்ளப்பட்ட கருத் தாயிற்று. ஆஞல் பைதாகரசவாதத்திற்கு இயல்பான அம்சம், புள்ளி, எல்லையாகக் கருதபடாதது மாத்திரமல்லாது, எல்லை, எல்லையற்றது எனபனவற்றின் முதலாவது உறுபொருளாக வும் அது கொள்ளப்பட்டது என்பதே. அன்றியும் புள்ளி யானது, பூச்சியமெனக் கொள்ளப்படவில்லை. அதுவே கணித அலகாக அவர்களாற் கொளளப்பட்டது. ஆகவே இக்கொள் கையின்படி புள்ளிக்கு ஒரு பரிமாணமும், கோட்டிற்கு இரு பரிமாணங்களும், மேற்பரப்புக்கு மூனறு பரிமாணங்களும் திண் மங்களுக்கு நான்கு பரிமாணங்களும் உள்ளன. அதாவது பைதாகரச புள்ளிகளுக்குப் பரிமாணமும், கோடுகளுக்கு அகல மும், மேற்பரப்புகளுக்குப் பருமனும் இருந்தன. " நிலையொன் றுளதான " அலகெனப் புள்ளியைக் கருதுவதிலேயே இக் கொள்கை முழுவதும் தங்கியிருக்கிறது எனலாம்.[1] இத்தகைய மூலகங்களிலிருந்தே உலகததை ஆக்குதல இயலும் எனத் தோன்றியது.

146. பைதாகரசவாதிகளால் தோற்றுவிக்கப்பட்டது(பிரிவு 47) எண்கள் அளவுகள் எனல் என நாம் எண்ணக் கூடியதாயிருக்கும், சமச்சீருள்ள வடிவங் களில், குற்றுக்களே அடுகடி அவறறின் மூலம் எண்களைக் காட்டும் முறையோடு, புள்ளி, கோடு, மேற்பரப்பு என்பன வற்றை மேற்கண்டவாறு கொள்ளும் முறை தொடர்புபட்டது. கேத்திரகணிதம் இக்காலத்துப் பல வழிகளில் முன்னேறியி ருந்ததாயினும், அலகுகளின் தொகையே கணியமென இன் னமும் கருதப்பட்டதால், புள்ளியானது 0 எனக் கொள்ளப் படுவதற்குப் பதிலாக 1 எனவே கொள்ளப்பட்டது. பைதா கரச எண்கள் பரப்புடையனவெனக் கொள்ளுதல், அவை ஆதியில் எண் கணிதச் சார்புடையனவாயிருந்தன வென்பதை மறந்து, கேத்திர கணிதச் சார்புடையனவெனக் கருதுவதாகும் என்னும் செல்லாது வாதத்திற்கு இதுவே விடையாகும். நாம் பொருள் கொண்டுள்ள முறை, அவ்வுண்மையை மனத்திற் கொள்ளுவது மாத்திரமல்லாது, பைதாகரச கொள்கை முழுவதி லுமுள்ள சிறப்பியல்புகளையும் அவ்வுண்மையைக் கொண்டே விளக்க முற்படுகிறது. பைதாகரச புள்ளிகள் அளவுடையன என்பது பற்றி அரித்தோதில் திட்டவட்டமான அபிப்பிராய மூடையவராயிருந்தார். " அவர்கள் உலகம் முழுவதையும் எண் களிலிருந்தே உண்டாக்குகின்றனர். ஆஞல் அலகுகள் பரு மனுடையவை என அவர்கள் கொள்ளுகின்றனர். ஆஞல் பருமனுடையதான முதல் அலகு எவ்வாறு உண்டாகியது என்

1. புள்ளி ஓர் அலகே எனக் கருதப்படுவது பற்றி அரித்தோதிலின் நூலில் கூறப்பட்டிருக்கிறது.

பதை அவர்களால் விளக்க இயலாதிருக்கிறது" என அவர் கூறினர். இஃது அரித்தோதிலின் அனுமானமேயெனச் செல்லர் கூறுகிறார். புள்ளிகள் பருமனுடையவே யென வெளிப்படையாகப் பைதாகரசவாதிகள் கூறவில்லையாதலால் செல்லர் இவ்வாறு கூறுவதிலும் ஓரளவு உண்மையிருக்கிறதெனலாம்.

பைதாகரச அண்டவியற் பகுதிகளில், எண்கள் பரப்புடையனவாகவே கொள்ளப்படல் வேண்டும் எனச் செல்லர் ஒப்புக் கொள்கிறார்—இது இவ்வாறே யென அவர் மிகவும் உறுதியாகக் கூறுகிறார் எனலாம். ஆனால் பைதாகரச கொள்கையின் ஏனைய பகுதிகளைப் பற்றியே அவர் விளக்கள் எழுப்புகிறார். ஆன்மா, நீதி, வாய்ப்பு என்பன போன்ற பிறவும் எண்களெனவே கூறப்படுகின்றன. ஆனால் இவை புள்ளிகளாலும், கோடுகளாலும் மேற்பரப்புகளாலும் ஆனவை எனக் கூறமுடியாது. பைதாகரசுவைக் கண்டிக்கும் பந்தியொன்றில் அரித்தோதில் கூறுவதும் இதுவே என எனக்குத் தோன்றுகிறது. உலகில் ஒரு பாகத்தில் அபிப்பிராயம் நிலைபெற்றிருந்ததாகவும் அதற்குச் சற்று மேலே அல்லது கீழே அநீதி அல்லது பிரிவு அல்லது கலவையிருந்ததாகவும் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு எண்ணெனவும் பைதாகரச வாதிகள் கருதினர் என அரித்தோதில் கூறுகிறார். ஆனால் வானத்தில் அதே பகுதிகளில் பருமனுள்ள பொருள்கள் இருந்தன. இவையும் எண்களே. நீதி பருமனல்லாதவொன்றுதலால் இது எவ்வாறு சாத்தியமாகும்? விருப்பத்திற்கேற்றவாறெல்லாம் தரப்பட்டவை போலத் தோன்றும் இவ்வுதாரணங்கள், தமது கேத்திரகணித இயல்பு கொண்ட அண்டத்தோடு எவ்வாறு பொருந்தினவென் பதைப் பைதாகரசவாதிகள் தெளிவாக விவரிக்கவில்லை என் பதையே இது காட்டுகிறது எனலாம்.

எண்களும் மூலகங்களும்

147. இக்காலப் பைதாகரசவாதிகளுக்கும் அவர்களுக்கு முந்தியவர்களுக்கும் உள்ள வேற்றுமை, இக்காலத்தவர் தமது கொள்கையைப் புதிய "மூலக"க் கொள்கைக் கேற்ப மாற்றியமைக்க முயன்றமையே யெனலாம். இதனாலேயே நாம் இவர்களை மீண்டும் பன்மைவாதிகளோடும் ஒப்பிட்டு நோக்குதல் அவசியமாகிறது. பைதாகரசவாதிகள் தென இத்தாலிக்கு மீண்டபோது அங்கு நிலவிய கருத்துக்களுக்கேற்பத தமது கொள்கையை ஓரளவுக்கு மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர் என்பதை நாம் பின்னர் காண்போம். எம்பிடோக்கிளிசு ஒரு மெய்யியற் குழுவை ஆரம்பித்தாரா என்பதை அறியாவிட்டாலும், இப்பகுதிகளில் பரவியிருந்த வைத்திய மரபுகள் பெருமளவிற்கு அவரது கருத்துக்களின செலவாக்குக்குட்பட்டிருந்தன என்பதில் ஐயமில்லை; வைத்திய அறிவின் வர

லாற்றில் பிலோலெசுவுக்கும் ஓர் இடமுண்டு என்பதையும் நாம் அறிவோம்[1]. முன்பு தெளிவற்றது போலத் தோன்றிய வற்றை விளங்கிக் கொள்வதற்கு இவ்வறிவு உதவும். மூலகங்களை, அவை கேத்திரகணித உருவங்களால் ஆனவையெனப் பைதாகர சவாதிகள் விளக்கினர் என்பது வரலாறு. பிளேட்டோவின் திமாயசுவில் இக்கொள்கை மேலும் விருத்தி செய்யப்பட்டிருப் பதை நாம் காணலாம். இத்தாலியில் வைத்திய அறிவில் தாமே தலைசிறந்தவர்களாகத் தொடர்ந்து இருப்பதாயின், பைதாகரச வாதிகள் மூலகங்களை விளக்கவே வேண்டியிருந்தது. ஆனால் மூலகங்களின் ஆக்கம் பற்றிய பைதாகரச விளக்கம் பிளேட் டோவின் திமாயசுவில் நாம்காணும் கொள்கையை அப்படியே முற்றுக ஒத்திருந்ததெனவும் நாம் கொள்ளலாகாது. உண் மையில் ஒழுங்கான திண்மங்களில், பிரமீது, பன்னிருமுகத் திண்மம், சதுரத்திண்மம் என்னும் மூன்றையுமே இவர்கள் அறிந்திருந்தனர் எனக் கொள்ளுதற்கு இடமிருக்கிறது[2] என்ப தையும் பார்த்தோம். பிளேட்டோ தனது பாத்திரமான திமா யசுவை, தீ, நிலம் என்பனவற்றிலிருந்து ஆரம்பிக்க வைக் கிறார். மேலும் மூலகங்களை ஆக்குகையில் எண்முகத்திண்மம், இருபான்முகத்திண்மம் என்பன இலகுவில் பிரமீதுகளாக மாற் றப்படக்கூடிய முறையிலும் சதுரத்திண்மம், பன்னிருமுகத் திண்மம் என்பன அவ்வாறு மாற்றப்பட இயலாத முறை யிலுமே செய்துள்ளார் என்பதையும் காண்கின்றோம். இதி லிருந்து காற்றும் நீரும் இலகுவாகத் தீயாகின்றன என்பதும், நிலம் அவ்வாறு மாறாது என்பதும் பன்னிரு முகத்திண்மம் வேறெருரு நோக்கத்துக்காக ஆக்கப்பட்டது என்பதும் தெளிவா கின்றன. அந்நோக்கம் என்ன என்பது பற்றி நாம் விரைவில் ஆராயலாம். இம்முறை பைதாகரச கொள்கையோடு நன்கு பொருந்துவதாய் உள்ளது ; பார்மனீடிசுவின் கவிதையின் இரண்டாம் பாகத்தில் விளக்கப்பட்டது போன்றவோர் இரு மைக் கொள்கைக்குப் போதிய இடமளிப்பதாதலின் இப் பாசோசு தீயையே முதற்றத்துவமாக்கினர் என்பதை நாம் அறிவோம். காற்று, நீரென்பனவற்றைத் தீயின் பிறவடிவங்க ளெனக் கொள்ளுதல் கூடுமென்பதைத் திமாயசுவிலிருந்து அறிகிறோம். காற்றல்லாது, நிலமே மற்றைய மூலகமெனக் கொள்வதற்குக் காரணங்களுள வென்பதையும் ஆதிபைதாகரச கொள்கையிலிருந்து அறிந்தோம். எம்பிடோக்கிளிசுவினது வளிமண்டலக் காற்றின் கண்டுபிடிப்பிலிருந்தும், மூலகங்கள் பற்றிய அவரது பொதுவான கொள்கையிலிருந்தும் இம்மூடிவு

1. 292 ஆம் பக்கம் பார்க்க.
2. 297 ஆம் பக்கம் பார்க்க.

இயல்பாகவே ஏற்படும். பார்மேனடிசுவால் குறிப்பிடப்பட்ட இரு "உருவங்"களும் நிலமுமே என அரித்தோதில் கூறியதையும் இதனால் விளக்கலாம்[1].

பன்னிருமுகத் திண்மம்

148. பன்னிருமுகத்திண்மம் உபயோகிக்கப்படும் முறையே இக்கொள்கையில் அதிக கவனத்திற்குரிய அம்சமெனலாம். "அண்டகோள"த்துடன் அல்லது பிலோலெசுவின் பகுதியிற கூறப்படுவது போலக "கோளத்தின அடிக்கல"த்துடன் பனனிருமுகத்திண்மம் ஒப்பிடப்பட்டது என அறிகிறோம். இப்பகுதிகள் உண்மையானவையோ என்பது பற்றி எத்தகைய ஐயமிருப்பினும், இவை பைதாகரசுவின சொற்களே என நாம் நம்பலாம். மேலும் மத்தியிலுள்ள தீ பற்றிப் பேசுகையில் உபயோகிக்கப்பட்ட "ஏரா" என்னும் சொல்லுடன் சேர்த்தே இவ் வார்த்தைகளையும் நோக்குதல் வேண்டும். உலகத்தின் அமைப்பு ஒரு கப்பலின் அமைப்புடன ஒபபிடப்படடது எனபதற்குப் பிற ஆதாரங்களும் உள. பன்னிருமுகத்திண்மம் பற்றிக் கூறப்படுவனவற்றை விளக்குதற்கான வழியும் பிளேடோவிடமிருந்தே எமக்குக கிடைக்கிறது. ஒழுங்கான திண்மங்கள் பறறிய கொள்கை முற்றுக உருவாக்கப்படுவதற்கு முன்னர் எழுதப் பட்டதுபோலத தோன்றும் பீடோவில் "உண்மையான உலகு மேலேயிருந்து பார்க்கையில் பன்னிரணடு தோற்றுண்டுகளாலான பந்துகளைப் போலப் பல நிறங்களுடன் காணப்படுகிறது" எனப் பிளேட்டோ கூறுகிறார். இவ்விடயம் திமாயசுவிலும் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது : "ஐந்தாவது அமைப்பு இன்னமும் எஞ்சியிருநதபடியால் கடவுள் உலகுக்கு வர்ணந் தீட்டுகையில் அதற்கு இவ்வமைப்பை உபயோகப்படுத்தினர்.[2] மற்றைய ஒழுங்கான திண்மங்களிலும் பார்க்கப் பனனிருமுகத் திண்மமே கோளத்தை மிகவும் ஒத்திருந்தது என்பதே கவனிக்க வேண்டியதாகும். பந்தை ஆகுதற்கு வேண்டிய பனனிரண்டு தோற்றுண்டுகள் எனக் குறிப்பிடப்பட்டவை ஒழுங்கான ஐங்கோணங்களாயிருத்தல் வேண்டும் ; அவ்வாறு எடுக்கப்பட்ட தோற்றுண்டுகளுக்குப் பதிலாக வளையுந் தனமையற்ற மூலப் பொருள் எதுவும் உபயோகிக்கப்பட்டால் நாம் பெறும் உருவம் கோளமாயிருப்பதற்குப் பதிலாகப் பனனிருமுத்திண்மமாக

1. ஆரும் அதத்தியாயம் 195 ஆம் பக்கம் பார்க்க.

2. பிளேட்டோ, *Tim.* 55 c4. இப்பகுதியோ அலலது இதறகு முந்தியதோ இராசியைக் குறிக்க முடியாது. இராசியைப் பனனிரு கோணம எனக கூறலாமேயொழிய பன்னிருமுகத்திண்மம் எனக கூறமுடியாது. இங்கு குறிப்பிடப்பட்டது சிரகங்களை வைதத்தற்காக வானம பனனிரு ஐங்கோணப்பகுதிகளாகப பிரிக்கப்பட்டமையேயாகும். இம் முறைகளின் வரலாற்றிற்கு : Newbold in *Arch.* xix. pp. 198 Sqq. பாரக்க

விருக்கும். தியாதித்தோசுவின் காலத்திற்கு முன்னரே கிரேக்கர் பன்னிருமுகத்திண்மத்தை நன்கு அறிந்திருந்தனர் என்பதை இது நிரூபிக்கின்றது. மேலும் பன்னிருமுகத்திண்மத்தையே, கோள வடிவமான வானத்தை அமைப்பதற்கு வேண்டிய ஆதார சட்டமாக உபயோகித்தனர் என்க் கருதப்பட்டதென நாம் அனுமானிக்கலாம்.

பைதாகரச கொள்கையில் பன்னிருமுகத் திண்மத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியதுவத்தைப பரம்பரை வரலாறும் ரசமான முறையில உறுதிப்படுத்துகிறது. "பன்னிரண்டு ஐங்கோணங்களினால் கோளம் ஆக்கப்பட்டது" எனபதை வெளியிட்டதற்காக இப்பாசோசு கடலில் அமிழ்த்திக் கொல்லப்பட்டார் எனபர்[1]. ஐங்கோணச் சக்கரமான "பென்ரல்பா" என்பதை அவர்கள் தமது அடையாளமாக்கியதிலிருந்தும் பைதாகரசவாதிகளே பன்னிருமுகத் திணமத்தை அமைத்தனர் என்பதை நாம ஓரளவுக்கு அனுமானிக்கலாம். பிற்காலத்து மாந்திரீக முறைகளில் இவ்வடையாளம் பெரு மளவிற்கு உபயோகப்படுத்தப்பட்டது என்பதை நாம் அறிவோம். பாசெல்சசு அதை ஆரோக்கியதிற்குரியவோர் குறியாக உபயோகித்தார். பைதாகரச வாதிகளும் அதை அவ்வாறே அழைத்தனர்.

149. ஆன்மா என்பது ஓர் "இசைவு". அதாவது பொருந்தி நிற்கும் ஒரு நிலை எனும் கருத்து நான்கு மூலகங்கள் பற்றிய கொள்கையோடு நெருங்கிய தொடர்புடையது. இக்கருத்து ஆதிப் பைதாகரச வாதத்தைச் சேர்ந்ததாய் இருக்க முடியாது ; ஏனெனில் பீடோவில் கூறப்பட்டிருப்பதுபோல, இக்கருத்து ஆன்மா உடலை விட்டுச் சுதந்திரமாகவும் இருக்க முடியும் என்பதற்கு முரணானதாகும். "எந்த உடலுக்குள்ளும் எந்த ஆன்மாவும் புகமுடியும்" எனும் கருத்துக்கும் இது நேர் எதிரானதாகும். ஆனால் தீபிசுவில் பிலோலைசுவிடம் போதனை கேட்டவர்களான சிம்மியாசும் கீபிசுவும், பிலோலைசு இயூறைத்தோசு என்போரது சீடனான பிளேயசு நாட்டு எகிறத்தீசும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டனர் என நாம் பீடோவிலிருந்து அறிகிறோம். இக்கருத்து வைத்தியவியலிலிருந்து பெறப்பட்டது எனபதோடு இதனைப் பற்றிப் பிளேட்டோ கூறுவனவும் பொருந்துவனவாயுள்ளன. சிம்மியாசு பின்வருமாறு கூறுகிறார் ; "எமது உடலானது சூடு, குளிர், வறட்சி, ஈரலிப்பு எனபனவற்றாலும் இவை போன்ற பிறவற்றாலும் இணைத்து வைக்கப்பட்டிருக்கிறதாகையால், இவை யெல்லாம் ஒன்றோடொன்று, விகிதாசாரப்

ஆன்மா என்பது ஓர் "இசைவு" நிலை எனல்

1. இரண்டாம் அதிகாரம் 111 ஆம் பக்கம் கு. 2.

படி நன்கு கலந்திருக்கையில் இவற்றினிடையே எற்படும் ஓர் பொருத்தமும் உளப்பாங்குமே எமது ஆன்மா வென்பது. இவ்வாறு எமது ஆன்மாவோர் பொருத்தநிலையெனில், எமது உடல், நோய்கள் காரணமாகவோ அல்லது பிற பிணிகள் காரணமாகவோ அளவுக்கு மீறி இளகியோ அல்லது முறுக் குண்டோ இருப்பின் ஆன்மா உடனே அழிந்து போய்விடு மென்பது தவிர்க்க முடியாதவோர் உண்மையென்பது தெளிவு." இது சிசிலிய சிந்தனை மரபுகளை யொட்டியவோர் கருத் தென்பதுடன், அலுக்மையோனது கொள்கையிலிருந்தே இக் கருத்துப் பெறப்பட்டது என்பதும் ஐயத்திற்கிடமின்றித் தெரி கிறது (பிரிவு 96). ஐந்தாம் நூற்றாண்டில் நிலவிய பைதாகரச கொள்கை புதிய எம்பிடோக்ளிசிய கருத்துக்களுக்கேற்ப மாற்றி யமைக்கப்பட்டவோர் உருவமே என்பதறகான ஆதாரத்தொகு தியை இது பூரணப்படுத்துகிறது எனக் கூறலாம்.

ஆன்மாவானது பைதாகரசவாதத்திற் கூறப்படுவது போன்ற வோர் இசைவு நிலையெனக் கொள்வதாயின், அக்காலத்து எற்கப்பட்ட நான்காவது, ஐந்தாவது, எட்டாவது, எனும் மூன்று இசையிடைகளையும் அது கொண்டிருத்தல் வேண்டுமென நாம் எண்ணலாம். பிளேட்டோவின் 'குடியரசு' என்பதிலிருந்து நாம் அறியும் முப்பிரிவுடைய ஆன்மா பற்றிய கொள்கை உண்மையில் ஒரு பைதாகரச கருத்தே எனும் பொசெய்டோனியோசுவின் கூற்றும் பெருமளவிற்கு இதனால் உறுதிப்படுத்தப்படுகிறது என லாம். இஃது ஆன்மா பற்றிய பிளேட்டோவின கருத்தோடு முற்றிலும் முரண்பட்டதாயினும், நாம் சற்று முன்னர் விளக் கிய கொள்கையுடன் வியக்கத்தகு முறையிற் பொருந்துவதா யுள்ளது.

மத்திய தீ

150. அரித்தோதில் பைதாகரசுவுடையதெனக் கூறுவதும் ஈத்தியோசுவினால் பிலோகெசுவினதெனக் கூறப்படுவதுமான கோட்டொகுதிக் கொள்கை உண்மையிலேயே குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளுடையது. இக்கொள்கையினபடி உலகின் நடுவே பூமி இல்லை. அதற்குப் பதிலாக மத்திய தீயிருக்கிறது. ஆனால் இதைச் சூரியன் எனக் கொள்ளுதல் கூடாதென்க. இத் தீயைச் சுற்றிப் பத்துக் கோள்கள் சுழல்கின்றன. முதலாவ தாக "அன்ரிக்தோன்" எனும் மறு-பூமி இருக்கிறது. அதற்கு அடுத்ததாகப் பூமி இருக்கிறது. இவ்வாறு பூமியும் ஒரு கிரக மாகக் கொள்ளப்படுகிறது. பூமிக்குப் பின்னர், முறையே சந்திரன், சூரியன் கிரகங்கள், நிலையான உடுக்களினது வானம் என்பன உள்ளன. பூமியில், நாம் இருக்கும் பக்கம் எப் போதும் மத்திய தீ, அன்ரிக்தோன் என்பனவற்றைப் பார்க்க முடியாது திரும்பியிருப்பதனாலேயே நம்மால் அவற்றைப்

பார்க்க முடியாதிருக்கிறது. சந்திரனை உதாரணமாகக் கொள்வதன் மூலம் இது விளக்கப்படுகிறது. சந்திரன் எப்போதும் ஒரே முகத்தையே எமக்குக் காட்டுவதால், அதன் மறு பக்கத்தில் உள்ள மனிதர்களால் ஒருபோதும் பூமியைப் பார்க்க முடியாது. இக்கோள்கள் மத்திய தீயைச் சுற்றி வருதற்கு எடுக்கும் நேரத்திலேயே தமது அச்சிலும் சுழல்கின்றன என இதற்கு நாம் பொருள் கொள்ள முடிகிறது[1]. மேலும் பூமி மத்திய தீயைச் சுற்றி வரும் அதே நேரத்தில் அன்ரிக் தோனும் சுற்றி வருவதால் அது எப்போதும் பூமிக்கு எதிராகவே உள்ளது.[2]

இக்கொள்கை பிலோலெசுவினால் போதிக்கப்பட்டதென்னும் ஈத்தியோசுவின் கூற்றை நாம் எளிதில் ஏற்றுக்கொள்ள முடியாது. அரித்தோதில், இக்கொள்கை பற்றிக் கூறுகையில் சிம்மியாசுவை ஒருபோதும் குறிப்பிடவில்லை. பிடோவில், பூமியைப் பற்றியும் உலகத்தில் அது எப்பகுதியிலுள்ளது என்பது பற்றியும், இக்கொள்கைக்கு முற்றிலும் முரணான முறையில் சோக்கிரதர் போதிக்கையில் பிலோலெசுவின் சீடனான சிம்மியாசு எவ்வித மறுப்புமின்றி அதனை ஏற்றுக்கொள்வதைக் காண்கிறோம். ஆயினும் அதென்சில் நிலவிய அயோனிய கொள்கைகளிலும், குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி பெற்ற தான இக்கொள்கை ஒரு பைதாகரச கொள்கை என்பது டற்றி ஐயப்பட வேண்டியதில்லை. பூமியை அதன் நிலையில் வைத் திருப்பதற்கு வளியோ அல்லது அதைப்போன்ற வேறெதுவுமோ அவசியமில்லை என்பதை ஒரு புதுமைக் கருத்தாகவே சோக்கிரதர் எடுத்துக் கூறுகிறார் என்பதும் தெளிவு. ஆனால் அனக்சகோரசுவினால் அக்கருத்தை அவசியமற்றதென ஒதுக்கிவிட முடியவில்லை. தெமோகிரித்தோசுவும் பூமி தட்டையானது எனும் தனது கொள்கையுடன் பூமியைத் தாங்குதற்கு வளியும் அவசியமெனவே நம்பினார். கோள வடிவமான பூமி தனது சமநிலை காரணமாக உலகத்தின் மத்தியில் இருக்க முடிகிறது

1. வான உடுக்களுக்கு அச்சிலற் சுழற்சியிருப்பதாக, பிளேட்டோ திமாயசு வைக் கூறவைக்கிறார். அச்சுழற்சியும் இத்தகையதாகவே இருத்தல் வேண்டும் (*Tim.* 40 a 7). சந்திரனும் தனது அசைற் சுழல்வதற்கு, பூமியைச் சுற்றுவதற்கு வேண்டிய நேரமே ஆகிறது; ஆனால் அதன் ஒழுக்கைப் பொறுத்த வரையில் அது சுழலவில்லையெனக் கூறினும் சரியே. இரேகைகள் கூறியதும் அவ்வாறே. உடுக்கள் யாவற்றைப் பற்றியும் இவ்வாறு கூறலாமென்பது பைதாகரச வாதிகளுக்கு இயல்பாகவே தோன்றியிருக்கும். இதைத் தொடர்ந்தே உடுக்கள் யாவும் சடப்பொருட் கோளங்களிலேயே பொருத்தப்பட்டிருக்கின்றன என்னும் கொள்கை எற்பட்டது.

2. பூமியும் மறு-பூமியும் எப்போதும் ஒன்றுகவே உள்ளன என்பதைப் பார்க்கிலும் இது இயற்கையான கருத்தெனக் கூறலாம்.

எனும் கொள்கை பிலோலெசுவினுடையது. என்பதே பீடோவிலிருந்து நாம் இயல்பாகப் பெறக் கூடிய முடிவெனலாம். அப்படியானால் மத்திய தீ பற்றிய கொள்கை பிலோலெசுவுக்குப் பிந்தியவோர் காலத்தைச் சேர்ந்ததெனல் வேண்டும்.

சூரிய ஒளி பற்றி எம்பிடோக்கிளிசு தந்த விளக்கத்திலிருந்தே மத்திய தீயைப் பூமி சுற்றி வருவது பற்றிய கொள்கை எற் பட்டிருக்க வேண்டும் போலத் தோன்றுகிறது. எம்பிடோக் கிளிசு இரு சூரியனகள் இருந்தனவெனக் கூறினர்; ஆனால் பிலோலெசுவோ இரண்டு அல்லது மூன்று சூரியன்கள் இருப்ப தாக நம்பினர் எனக் கூறுகையில் ஈத்தியோசு இவ்விரு கொள் கைகளையும் நெருங்கிய தொடர்புடையனவாகக் காட்டுகிறார். அவரது வார்த்தைகள், அவ்வளவு தெளிவுடையனவாயில்லா திருப்பினும் தியோபிறசுதோசு இவ்விரு கொள்கைகளும் ஒற்றுமையுடையவை எனக் கருதினர் என நாம் நம்புவதற்கு இடமளிக்கின்றன. இரவும் பகலும் மாறி மாறி வருவது பற்றி எம்பிடோக்கிளிசு ஒன்றுகொன்று முரணான இரு விளக் கங்கள் தந்தார் என நாம் பார்த்தோம் (பிரிவு 113). மத்திய தீ ஒன்றிலிருந்து பெறப்பட்ட பிரதிடலிப்பினாலேயே சூரியன் ஒளியுடையதாகத் தோன்றியது எனக் கூறுவதன் மூலமாகவே அச்சிக்கலுக்கு முடிவு காணலாம் போலவும் தோன்றியிருக்க லாம். சந்திரனது ஒளி பற்றியும் அதன கிரகணங்கள் பற்றி யும் எற்பட்டுள்ள சமீபகாலக் கண்டுபிடிப்புக்கள் சூரியனுக்கும் பொருந்துவதாகக் கூறப்பட்டால்—அவ்வாறு கூறப்படுவது இட் டத்தட்ட தவிர்க்க முடியாதவொன்றெனலாம்—இக்கொள்கை இயல்பாகவே எற்படும்.

புராணங்களோ யொட்டிய பல பெயாகளாலும் "மத்திய தீ" சுறிப்பிடப்பட்டது: "உலகத்தின் கணப்பிடம்", "கியசுவின் வீடு" அல்லது "காவற்கோபுரம்", "கடவுளரின் தாய்" என்பனபோன்ற பெயர்களால் மத்திய தீ வழங்கியது. இம் மரபினரது இயல்பு இதுவேயாயினும், இதுவோர் விஞ்ஞான ரீதியான கருதுகோள் என்பதை மறந்துவிடலாகாது. மத்தியில் பிரகாசிக்கும் பொருள் ஒன்று இருப்பதன் மூலமே தோற்றப் பாடுகள் "பாதுகாக்கப்படலாம்" எனவும் பூமியும் மற்றைய கோள்களோப் போலவோர் சுழலும் கோளமாகவே இருத்தல் வேண்டும் எனவும் எண்ணியமை விருத்தி பெற்ற சிந்தனையைக் காட்டுவதாகும். உண்மையில் இதனுடன் ஒப்பிடும்போது மத் திய தீயே சூரியன் எனும் கண்டுபிடிப்பு அவ்வளவு பெரிய சாதனையல்ல வெனவே கொள்ளத் தோன்றுகிறது. சூரியனே உலகின் மத்தியிலுள்ளது எனும் கருதுகோளைச் சாமோசு நாட்டு

அரித்தாக்கோசு அடைவதற்கு அவனுடைய சிந்தனையைத் தூண்டிவிட்டதும் இக்கொள்கையே என நம்ப இடமுண்டு எனலாம். பூமியே உலகின் மத்தியில் உள்ளதென அரித்தோதில் மீண்டும் நிறுவுவதில் வெற்றி பெறறபடியாலேயே, பின்னர் கொப்பணிக்கசு புதிதாக இவ்வுண்மையைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. ஆனால் தான் பைதாகரசவாதிகளிடமிருந்து இக்கருத்துப்பற்றிக் கற்றுக்கொண்டதாக அவரே கூறுகிறார்.

நாம் இங்கு தந்துள்ள உருவத்தில் இக்கொள்கையினால் எத்தனை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டனவோ, அதேயளவு புதிய வினாக்கள் எழுவதற்கும் இது இடமளித்தது எனக் கூறலாம். அன்றியும் இக்கொள்கை நீண்டகாலம் நிலைக்கவில்லை யெனலாம். பூமி மத்திய தீயைச் சுற்றி வலம் வந்ததென்பது உண்மையானால் அவ்வியக்கம் காரணமாகக குறிப்பிடத்தக்க இடமாறு தோற்றங்கள் ஏற்படுமென இக்கொள்கைக் கெதிராகக் கண்டனம் எழுப்பப்பட்டதென அரித்தோதில் கூறுகிறார். ஆனால் அவ்வாறு பெருமளவிற்கு மாற்றங்கள் எதுவும் நிகழ முடியாதென்பதற்குப் பைதாகரசவாதிகள் சிலகாரணங்கள் காட்டியதாகவும் அவர் கூறுகிறார். இருசாராரும் கையாண்ட வாதங்களைப் பற்றிய தெளிவான குறிப்பெதுவும் எமக்கு அரித்தோதிலிடமிருந்து கிடைக்கவில்லை. ஆனால் அக்காலத்தில் பூமி அதன் உண்மையான அளவிலும் மிகச் சிறிய அளவினதாகவே கருதப்பட்டது. ஆகவே அதன் ஒழுக்கின் வட்டம், இப்போது நமக்குத் தெரிவதிலும் பார்க்க மிகப் பெரியதாக இருந்ததென அவர்கள் கருதினர் என்று நாம் நினைப்பதற்கு நியாயமெதுவு மில்லை.

பூமியின் அளவுகள் பற்றிய சரியான அறிவிருப்பின், இரவு பகல் என்பன பூமி தன்னசசிலேயே சுழல்வதனால் ஏற்படுகின்றன என்னும் மூடிபு இயலபாகவே ஏற்படும். அவ்வாறுயின் பூமியே உலகத்தின் மததியிலிருக்கிறது என மீண்டுமு கொள்ளலாம் எனத் தோனறும். இக்கொள்கையைக் கொண்டிருந்தவர்களான யாரையும் அரித்தோதில் அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இக்கேதாசு, சிராக்கியூசு நாட்டு எகுபாந்தோசு என்பார் இக்கொள்கையைத் தழுவியிருந்தனர் எனத் தியோபிறசுத்தோசு கருதியதாகத் தெரிகிறது. ஆனால் இவ்விருவரைப் பற்றியும் நாம் அதிகம் அறியோம்.[1]

1. சிசிரோவும் இக்கொள்கை இக்கேதாசுவினதெனக கூறுகிறார் (*Acad. pr.* ii. 39). ஆனால் நிலையான உடுக்களைப் போலச் சூரியனும் சந்திரனும் அசைவற்றிருந்தன என அவன் கூறுவதாக எழுதுவதன மூலம் யாவற்றையுமே அர்த்தமற்ற குழபபத்திற் குளளாகவிடுகிறார். இக்கேதாசு, எகு

நீலயான உடுக்களிருக்கும் வானமும் நிலைபெற்ற வொன்றே என அவர்கள் கருதியிருந்திருக்க வேண்டும். அரித்தோதிலது கொள்கையும் முற்றுக நாளாந்த இயக்கத்தையே மையக் கொள்கையாகக் கொண்டிருப்பதால், இதைப்பற்றி அவர் எங்காயினும் கேள்விப்பட்டிருந்தாராயின், கட்டாயம் குறிப்பிட்டிருப்பார்.

மத்திய தீயைப் பூமி வலம்வருவது பற்றிய கொள்கையும், பூமி தன்னச்சிலேயே சுழல்வது பற்றிய கொள்கையும் சேர்ந்து, பைதாகரசவாதிகள் முற்றுக நம்பிய நீலயான உடுக்களும் சுற்றுகின்றன எனும் கொள்கையை விளக்குவதற்காகிதான வொன்றுக்கின. அவை நீலயானவையாயிருத்தல் வேண்டும். அன்றேல் அவை இயங்குபவையாஞல் அவற்றின் இயக்கம் நாளாந்த சுழற்சியிலிருந்து வேறுபட்டதாயிருத்தல் வேண்டும். இக்காரணத்தினுற்றுன் போலும் இக்கொள்கை பின்னர் கைவிடப்பட்டது.

பூமி இயக்கமுடையது எனக் கருதுவோரின் கொள்கைகளைப் பற்றி ஆராய்கையில், மத்திய தீயைப் பூமி வலம்வருகிறது எனும் கொள்கையை விட, திமாயசுவினுள்ள கொள்கையை மட்டுமே அரித்தோதில் குறிப்பிடுகிறார். இக்கொள்கையின்படி பூமி கோள்களுளொன்றெனக் கருதப்படாது, "மத்தியில்" இருப்பதாகவும், அண்டத்தின் அச்சைப் பொறுத்தவரையில் ஒருவகை இயக்கம் உடையதாகவும் கூறப்படுகிறது. ஆஞல் குறேத்தே கூறியது போல, இச்சுழற்சி ஓர் அச்சியற் சுழற்சியாக இருக்க முடியாது; வானத்தின் நாளாந்த சுழற்சியினுலேயே இரவு, பகல் என்பன உண்டாகின்றன எனும் கருத்தே திமாயசுவினுள்ள முழு அண்டவியற் பகுதியினும்

பாந்தோசு என்போர் எரக்கிளீட்சுவின் உரையாடலிற் காணப்பட்ட இரு கற்பனைப் பாத்திரங்களே யெனத் தானரி கருதினர். இவர்கள் உண்மையில் வாழ்ந்தன ரென தியோபிறசுத்தோசு கருதினர் எனபதில் ஐயமில்லை. ஆஞல் பூமியின சுழற்சி பற்றிய கொள்கை ஒன்றும் புதுமையானதல்ல வென்பதை இங்கே குறிப்பிடலாம். மைலீசியர்கள் தமது தட்டைப்பூமி இவ்வாறு சுழல்கிறதென நம்பினர் எனறு கூற இடமிருகிறது (பிரிவு 21); அனக்சகோரசு அவ்வாறு எண்ணினர் என்பதில் ஐயத்திறகே இடமில்லை (பக். 283). ஆஞல் கோளத்தைப் பற்றி இது கூறப்பட்டதே புதுமையென்க. உலகின் மத்தியிலிருகும் பூமி சுழல்கின்றதெனக் கூறிய பைதாகரசவாதிகள், மத்திய தீ பூமியின் உட்பகுதியினுள்ளே இருக்கிறதென நம்பினர் என நிரூபிக்க முடியுமாஞல், அவர்களது கொள்கை பிலோலெசுவைவிடப் பிந்தியதென நிரூபிக்கலாம். சிம்பிளிசியசு இதையே கூறுகிறார் போலத் தோன்றுகிறது (*Le caelo*, p. 5129 8qq). அவரது வார்த்தைகள் தொலைந்துபோன, பைதாகரசம் பற்றிய அரித்தோதிலின் நூலிலிருந்து எடுக்கப்பட்டனவாயிருக்கலாம். எவ்வாருயினும் இது சந்தேகத்திற்குரிய விடயமே.

கூறப்படுகிறதாதலின். ஆனால் சற்றே பின்னதாக "இரவையும் பகலையும் எற்படுத்துபவனும் அவற்றின் பாதுகாவலனும்" எனப் பூமி வருணிக்கப்படுவதிலிருந்து இக்கருத்துக்கு எதிரான எதுவும் நிரூபிக்கப்படுகிறதெனக் கொள்ள முடியாது. எனெனில் எவ்வாறாயினும், இரவு பூமியின் கூம்பு வடிவமான நிழலே யாதலால், பூமியே இரவு பகல் மாறி மாறி எற்படுவதற்குக் காரணம் என்பதில் மறுத்தற் கெதுவுமில்லையாதலினாலென்க. ஆகவே இதுவரை பீக்குவும் அவரைப் பின்பற்றுவோரும் கூறுவதே சரியெனத் தோன்றுகிறதெனலாம்.

ஆனால் திமாயசுவிற் குறிப்பிடப்பட்டிருப்பது "உருண்டிருக்கிறது" அல்லது வட்டமாகப் "பொதிந்திருக்கிறது" எனும் கருத்தேயொழிய இயக்கமெனும் கருத்தல்ல எனப் பீக்கு வாதிக்கையில் என்னால் அவர் கூறுவதைச் சற்றும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. மொழியியல் ரீதியான நியாயங்கள் ஒருபுறமிருக்க, இவ்வகையான விளக்கம், அரித்தோதிலின் வாத முறையைப் பொருளற்றதாக்குகின்றதெனலாம். பூமி இயக்கமுடையதாயின், அவ்வியக்கம், "மத்தியில் நடைபெறுவ" தாயினும் சரி, "மத்திக்கு அப்பால் நடைபெறுவ"தாயினும் சரி, "இயல்பான இயக்க"மாயிருக்க முடியாதென அவர் கூறுகிறார். எனெனில் அப்படியாயின், பூமியின் ஒவ்வொரு பகுதியும் அத்தகைய இயக்கத்தையே உடையதாயிருத்தல் வேண்டும்; ஆனால் ஒவ்வொரு பிடி மணலும் "கீழ்நோக்கியே", அதாவது மத்தியை நோக்கியே, இயங்குவதை நாம் அவதானிக்கிறோம். மேலும் பூமியின் இயக்கம், "மத்தியில் நடைபெறுவ" தாயினும் சரி, "மத்திக்கு அப்பால் நடைபெறுவ"தாயினும் சரி, "முதற் கோள"த்தைத் தவிர்த்து ஏனைய யாவற்றையும்போல, பூமியும் இருவகைப்பட்ட இயக்கம் உடையதாய் இருத்தல் வேண்டும் எனவும் அவர்கூறுகிறார். அப்படியாயின் நிலைபெற்ற உடுக்களுக்கும், மேலும் கீழுமாகவும், தம் கதியில் திரும்பிப் பக்கவாட்டாக மாறியும் செல்லும் இருவகை இயக்கங்கள் இருத்தல் வேண்டும். ஆனால் இவ்வாறில்லை என்க. எனவே, பூமியின் இயக்கம் பற்றிய கொள்கைகளில் இரண்டாவதும் முதலாவதைப் போல இடப்பெயர்ச்சி யியக்கம் பற்றிக் கூறியதெனவும் அது பிளேட்டோவின் திமாயசுவிலுள்ள கொள்கையே யெனவும் அரித்தோதில் கருதினார் என்பது தெளிவு. இதுபோன்றவொரு விடயத்தில் அரித்தோதில் பிழைவிட்டிருப்பாரென நம்ப முடியாது.[1]

1. திமாயசு வெளியிடப்பட்டபோது, அரித்தோதில் கழகத்திலோர் அங்கத்தவராயிருந்திருக்க வேண்டும். திமாயசுவுக்கு விளக்கம் காண்பதே, பிளேட்டோவின் மரணத்தின் பின்னர், கழகத்தினரின பிரதான வேலைகளிலொன்றாக விருந்தது எனவும் நாம் அறிவோம். ஆகவே இடம் பெயரும் இயக்கம் நடை

திமாயசுவில் கூறப்பட்டவற்றை நாம் சரிவரப் பார்வையிடுகையில், அங்கு கூறப்படும் கருத்து, இடப்பெயர்ச்சியியக்கமே யேற்படுகிறதென்னும் அரித்தோதிலின் கூற்றை முற்றுக ஆதரிப்பதைக் காணலாம். பீக்கு பொருள் கொள்ளும் முறை இலக்கண ரீதியாகவும் சொல்லியல ரீதியாகவும் தவறுனதெனவும் காண்போம். ஆகவே பூமி " மத்தியிலுள்ளது " என்னும் கருத்துடன் எவ்வகையான இடம் பெயரும் இயக்கமும் பொருத்தமுடையது என ஆராய்தல வேண்டும். அவ்வாறு ஆராயின் அண்டத்தின் அச்சில் மேலும் கீழுமாகச் செலலும் இயக்கமே சாத்தியமான தெனக் காண்போம். மேலும், முன்னும் பின்னுமாகச் செல்லும் இயக்கம் எனப் பொருள் கொள்ளப்படக் கூடிய பதம் ஒன்று பிரயோகிக்கப்பட்டிருப்பதையும் நாம் காணலாம். யாரோ வொரு பெயர் தெரியாத அண்டவியல்வாதியின் ஆதாரத்தின பேரில், பீடோவில சோக்கிரதர் பூமியிலுள்ள நீர்கீள பற்றித தந்துள்ள விளக்கத்தைப் பார்க்கையில், இத்தகைய இயககம் பற்றிப் பைதாகரசவாதிகளும் அறிந்திருந்தனர் என்பது புலனுகிறது.

எதை விளக்கும் பொருட்டு இவ்வியக்கம் கூறப்பட்டது ? அதுவும், மற்றையதும், அதாவது பூமத்திய ரேகை ஞாயிற்று வீதி ஆகியவற்றின் வீளையங்களிலுல் தோற்றப்பாடுகளீ முற்றுக விளக்க முடியாது என்பது தெளிவு. எனினும், கிரகங்கள் யாவும், ஒன்றில் ஞாயிற்று வீதியிற் செல்லல் வேண்டும் அலலது அவ்வீதியிலிருந்து எப்போதும் சம தூரத்திலேயே காணப்படல் வேண்டும். ஆனுல் உண்மைநிலை இதுவல்ல. ஆகவேதான், கிரகங்கள் மேலும் கீழுமாக இடம் பெயர்வதற்கு, அதாவது அவை மாறி மாறி ஞாயிற்று வீதியை நோக்கியும் அதனிலிருந்து விலகியும் செல்வதற்கு, வேறெவ் வகையிலாயினும் விளக்கங் காண்டல் வேண்டும். சந்திரன் தனது கதியில திரும்பிச் செல்லல் பற்றி ஆராய்வதில் அனக்சிமாந்தர் சிரத்தை காட்டினுர் என நாம் முன்பு (பக். 67) பார்த்தோம். மேலும் கிரகங்களின் நேரியக்கம், வக்கரிப்பியக்கம் என்பனவும் திமாயசுவில் மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கொள்கையிலுள்ள முரண்பாடுகள் அனைத்தையும் திமாயசுவிற் குறிப்பிடப்பட்டுள்ள இயக்கத்தை ஏற்றுக்

பெறுகிறதென இவா அவ்வுரையாடலுக்குத் தவருன விளக்கம கண்டிருந்தால், கட்டாயம் அலெகசாந்தா, சிமபிளிசியசு ஆகியோா கிருநதர், அலலது வேறு யாராவது ஒருவரைக கொண்டு அததவருன விளகததை உறுதியாகக் கண்டித்திருப்பர். திமாயசுவில பீககு கணடிருப்பது அரிததோதிலின கருத்தே யாகும். அது வேண்டுமெனத் தவருகக செய்யபபட்ட விளக்கமென அவர் காணுது விட்டிருப்பாரென எணண முடியாது.

கொள்வதன் மூலம் நீக்கிவிடலாம் என்பதை நாம் விரிவாகக் காட்ட வேண்டிய அவசியமெதுவுமில்லை ; அவ்வாறு காட்ட முடியும் என ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பைதாகர சவாதிகள் கருதினர் எனபதைக் காட்டின் போதுமென்க. கிரகங் களின் தற்போக்கான இயக்கத்தால் நிகழ்ச்சிகளை விளக்க முயல்வதிலும், பூமியின் கிரமமான இயக்கத்திலும் அவற்றை விளக்க முற்படுவது விரும்பத்தக்கது போல் தோன்றியிருக்கும் ; அவ்வாறு அவர் கருதியிருந்தாரெனில் அவர்களது சிந்தனை சரியான முறையில் வளர்ச்சியடைந்ததெனலாம்.

முந்திய தலைமுறையைச் சேர்ந்தவர்களான பைதாகரவாதி களுக்கு அவர்களது கொள்கை எற்றதே யெனப் பிளேட்டோ கருதியிருந்தாலும், தாம் அக்கொள்கையை எற்றுக்கொள்வ தோடு திருப்தியடைந்திருப்பார் என எண்ண முடியாது என் பதையும் இங்கு குறிப்பிடுவது, தவறான கருத்தேற்படுவதைத் தவிர்க்கும். பிளேட்டோ தனது கருத்துக்களைத் தனக்கு முந்திய காலத்தில் நடைபெற்றவோர் உரையாடலின் உருவத்தில் தந் திருப்பார் என்பது என்னைப் பொறுத்தவரையிலாவது நம்பு தற்கரியதாகவே தோன்றுகிறது. மேலும் பிளேட்டோ தனது கடைசி நாட்களில், உலகின மத்தியில் என்ன இருக்கிறதென அவராற் கூற முடியவில்லை யெனினும், பூமி உலகின் மத்தி யிலுள்ளது எனும் கருதுகோளைக் கைவிட்டு விட்டாரென அந் நாட்களில கழகத்தில் அவரது சக அங்கத்தவராயிருந்த முற்றி லும் நம்பத்தகுந்த சாட்சியான தியோபிறசுத்தோசுவிடமிருந்து அறிகிறோம். மேலும் சட்டங்கள் என்னும் நூலிலிருந்து, அவர் பூமி அச்சியற் சுழற்சியுடையதெனக கூறினரென்பது தெளி வாகத் தெரிகிறதெனலாம்[1].

அன்ரிக்தோன்

151. கிரகணம் எனும் தோற்றப்பாட்டை விளக்கும் பொருட்டே அன்ரிக்தோன் (இரண்டாவது பூமி) ஒன்று உளது எனும் கருது கோள் கைக்கொள்ளப்பட்டது. சுற்றும் கோள்களின் எண் ணிக்கையைப் பத்தாக உயர்த்தும் பொருட்டுப் பைதாகரசவாதி கள் அன்ரிக்தோனைக் கண்டுபிடித்தனர் (!) என அரித்தோதில்

1. சட்டங்கள் எனும் இந்நூலில் நாம் குறிப்பிட்டுள்ள பகுதியில் (822.a 4 Sqq.) கோள்கள் எவிய வட்டமான கதியிற் செல்பவை யெனப் பிளேட்டோ கூறுகிறார். மேலும் அக்கருத்து, தான் தனது இளமையிலோ அல்லது அதற்கு முனபோ ஒருபோதும் கேள்விப்படாத ஒன்றென்கிறார். இருபத்தி நான்குமணி நேரத்தில பூமி தனது அச்சிற் சுழலுகின்ற தென்பதே இக்கருத்தா யிருந்திருத்தல் வேண்டும். எனெனில் கோள்களின் இயக்கம் பலதரப்பட்டது என்னும் பைதாகரச கொள்கையை இது மறுப்பதாகும். நாங்கள் இக்கருத்தைத் திமாயசுவிலும் காணவேண்டும் என எதிர்பார்க்கலாகாது. எனெனில் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பைதாகரசவாதி ஒருவனது கருத்துக்களைக் கூறுவதாகவே அது எழுதப்பட்டிருக்கிறது.

ஓரிடத்திற் கூறுகிறார். ஆனால் வேண்டுமென்று இவ்வாறு கூறினாரேயெனினும் அரித்தோதில் அன்ரிக்தோன் பற்றி நன்கு அறிந்திருந்தார். பைதாகரசவாதம் பற்றிய தனது நூலில், சந்திர கிரகணங்கள் சிலவேளைகளில் பூமியின் குறுக்கீட்டினாலும், சிலவேளைகளில் அன்ரிக்தோனினாலும் ஏற்பட்டனவென அவர் கூறுகிறார்; இவ்விடயம் பற்றி நன்கு அறிந்தவரான ஒப்பவுசு நாட்டுப் பிலிப்பு என்பவரும் இவ்வாறே கூறியுள்ளார். அரித்தோதில் உண்மையில் வேறொரு பகுதியில் இக்கொள்கை எவ்வாறு உண்டாகியதென விளக்கியுள்ளார். பூமியின் குறுக்கீட்டினால் நமது கண்களுக்குப் புலனாகாதுவிடினும், பல கோள்கள் மத்தியைச் சுற்றி வலம்வந்து கொண்டிருக்கலாமெனவும், சூரியனை விடச் சந்திரன் பலமுறை கிரகணப்படுவதற்கு இதுவே காரணமெனவும் சிலர் கருதினர் என அவர் கூறுகிறார். இது அன்ரிக்தோனுக்கு நெருங்கிய தொடர்புடையதாகவே குறிப்பிடப்படுவதால், அரித்தோதில் இவ்விரு கருதுகோள்களும் ஒரே தன்மையுடையனவெனக் கருதினர் என்பது தெளிவாகிறது. இக்கொள்கையின் வரலாறு இதுவெனவே தோன்றுகிறது. சந்திரகிரகணங்களை விளக்கும் பொருட்டு அனக்சிமினசு இருண்ட கோள்கள் உளவெனக் கூறினர் (பிரிவு 29). அனக்சகோரசுவும் அக்கொள்கையை மீண்டும் போதித்தார் (பிரிவு 135). சில பைதாகரசவாதிகள், இவ்விருண்ட கோள்கள் எமது கண்களுக்கு ஒருபோதும் புலப்படாதிருப்பதை விளக்கும் பொருட்டு, அவை பூமிக்கும் மத்திய தீக்குமிடையிலே உள்ளன எனக் கூறினர். இவை யாவும் ஒரு கோளே எனக் கூறுவதே அவர்களது சிந்தனையின் அடுத்தபடியாயிற்று. பைதாகரசவாதிகள் தமது முன்னோடிகளது சிந்தனையை எவ்வாறு எளிமையுடையதாக்க முனைந்தனர் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

152. "கோளங்களது இசைவு" பற்றிய கொள்கையெனப் பொதுவாக—ஆனால் தவருக—வழங்கிவரும் கொள்கை, பிந்திய வோர் தலைமுறையினராலேயே விரிவாக விளக்கப்பட்டதாயினும் பைதாகரசுவினாலேயே முதலில் தோற்றுவிக்கப்பட்டதென நாம் முன்பு பார்த்தோம் (பிரிவு 54). கி. மு. நான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் கோள்களின் இயக்கங்கள் பற்றி நிலவிய பல்வேறு கருத்துக்களை, "கோளங்களின் இசைவு"க் கொள்கை பற்றி நமக்குத் தெரிய வந்துள்ள பல்வேறுபட்ட விவரங்களுக்குக் காரணமாதல் வேண்டும். வானத்துக் கோள்கள் தமது கதிகளிற் செல்கையில் இசையொலிகளை யெழுப்பின எனப் பைதாகரசவாதிகள் நம்பினர் என அவர்களது கொள்கையை நன்கு அறிந்தவரான அரித்தோதில் எமக்குக் கூறுகிறார். இவ்விசையின் சுரங்களின் சுருதி, கோள்களின் இயக்கத்தின்

வேகத்திற்கேற்ப வமைந்ததெனக் கூறப்பட்டது. இனி இவ் வேகங்கள், அட்டம சுரத்தின் ஒத்திசையிடைகளின் விகிதத் திலேயே அமைந்துள்ள தூரங்களிற்கேற்ப உண்டாகின்றன. அசைவற்ற உடுக்களையுடைய வானமும் இவ்விண்ணுலக இசைக் குழுவில் சேர்ந்திருந்ததென அரித்தோதில் நம்பினார் என் பதில் ஐயமில்லை. ஏனெனில் "அளவிலும் எண்ணிக்கையி லும் மிகக் கூடியனவாயுள்ள சூரியனும், சந்திரனும், உடுக்க ளும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐந்து கிரகங்களே மட்டுமே குறிப்பிடுவதாலும் அவர் இவ்வார்த்தைகளை உபயோகித்திருக்க மாட்டார். மெதுவாக அசைந்த கோள்கள் ஆழமான ஒலியை எழுப்பின வெனவும், வேகமாக இயங்கியவை சன்னமான ஒலியை எழுப்பினவெனவும் கூறப்பட்டிருக்கிறது. ஒலிவரிசை யில் உயர்ந்த சுருதியுடையவையான சன்ன ஒலிகள், இருபத்தி நான்கு மணிநேரத்திற் சுழலும் உடுக்களின் வானத்தால் உண் டாக்கப்பட்டனவெனவே பொதுவாக நம்பப்பட்டதெனவும் தெரி யவருகிறது. சனி அடுத்ததாகக் கூறப்படுகிறது; ஏனெனில் அது எதிர்த்திசையில் மெதுவாகச் செல்லுமியல்பையுடையதாயினும், நாளாந்த சுழற்சியின் வேகத்தின்முன் அது ஒருபொருட்டன்று என்க. வானதின் நாளாந்த சுழற்சிக்குப் பதிலாகப்பூமியின் அச்சியற் சுழற்சி கைக்கொள்ளப்பட்டதன் காரணமாகவே, சந்திரன் உயர்ந்த சன்னவொலியை எழுப்புகிறதெனவும் அசை வற்ற உடுக்கள் ஆழமான ஒலியை எழுப்புகின்றன வெனவும் கூறும் மற்றைய கொள்கை ஏற்பட்டிருக்க வேண்டும்.

153. பொருள்கள் "எண்களைப் போன்றவை" என்னும் கொள்கையையும் ஆராய்தல் வேண்டும். இதுவும் பைதாகரச வாதிகளுடையதே என அரித்தோதில் சிலவிடங்களில் குறிப் பிட்டுள்ளார். "பொருள்கள் எண்களே" என்னும் கொள்கை யோடு இது எப்படிப் பொருந்துமென்பது எமக்குத் தெளிவாக வில்லையாயினும், அவர் இவையிரண்டும் ஒன்றுக் கொன்று முரண்பட்டவை எனக் கருதுவதாகத் தோன்றவில்லை. ஆனால் பைதாகரசவாதிகள் பொருள்கள் எண்களைப் போல விருந்தன எனப் போதித்தனர் எனவே அரித்தோசெனசு கூறினர் என் பதில் ஐயமில்லை. மேலும் இதுவே பைதாகரச வாதத்தின் மூலக் கொள்கையெனக் கூறுவதற்கும் ஒருமுறை முயற்சி செய்யப்பட்டதென்பதற்கான ஆதாரங்களுள. பைதாகரசுவின் மனைவியான தியனோவினால் எழுதப்பட்டதெனவோர் கடிதம் கொணரப்பட்டது. எலஸீசியர்கள் பலர், பைதாகரசு பொருள் கள் எண்களாற் செய்யப்பட்டனவெனக் கூறியதாக, நம்புகின் பொருள்கள் எண்களைப் போன்றவை

றனர் எனவும் ஆனால் உண்மையில் பொருள்கள் எண்களுக்கேற்பவே செய்யப்பட்டனவென அவர் போதித்தார் எனவும் தியனோ கூறுவதாகவும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

இக்கருத்துத் தன் மனத்தை ஆட்கொண்டிருக்கையில், பிளேட்டோவுக்கும் பைதாகரசவாதத்திற்குமிடையில் சொல்லளவிலேயே வேற்றுமை இருப்பதாக அரித்தோதிலுக்குப் படுகிறது. "பிரதியாதல்" எனும் உவமேயத்திற்குப் பதிலாகவே "பங்கெடுத்தல்" எனும் உவமேயம் புகுத்தப்பட்டது. "கருத்துக்கள் பற்றிய கொள்கை" யெனப்படுவதன் பொருளை ஆராய இது இடமல்ல. ஆயினும் "பிரதியாதல்" பற்றிய கொள்கை பைதாகரசவாதிகளுடையதென அரித்தோதில் கூறுவது பீடோவினால் வேண்டிய அளவிற்கு உறுதிப்படுத்தப்படுகிறதென்பதை இங்கு குறிப்பிடலாம். "இக்கொள்கையை ஏற்கின்றாயா?" எனச் சிம்மியாசு கேட்கப்படும்போது எவ்வித தயக்கமுமின்றி, எவ்வித விளக்கமும் வேண்டாது, தான் அதை ஏற்பதாக, அவன் உறுதியுடன் பதிலிறுக்கின்றான். "சமம்" என்பது மட்டுமே உண்மையானது, நாம் சமமெனக் கூறுபவையனைத்தும் அதன் நிறைவற்ற பிரதிகளே யென்னும் கொள்கை அவனுக்கு நன்கு பரிச்சயமானதுபோல் தோன்றுகிறது. அன்றியும் உருக்கள் பற்றிய கொள்கையிலிருந்து ஆன்மாவின் அழிவின்மை பெறப்படுகின்றது எனச் சோக்கிரதர் காட்டியபடியாற்றான் அவன் இறுதியில் அழிவின்மைக் கொள்கையை நம்புகிறான்.

மேலும் இக்கொள்கையைச் சோக்கிரதர் ஓர் புதுமையாகக்கூறவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. "கருத்துக்களின்" மெய்ம்மையானது "நம்மால் எப்போதும் பேசப்படுவது" போன்றவோர் மெய்மையே. மேலும் ஒரு மரபினதெனக் கூறப்படும், நூதனமானவோர் மொழிநடையிலேயே இக் "கருத்துக்கள்" விளக்கப்படுகின்றன. "நாம் சொல்கிறோம்" எனத் தொடங்கும் சூத்திரங்களினாலேயே கலைச்சொற்கள அறிமுகப்படுத்தப்படுகின்றன. இது யாருடைய கொள்கை? பொதுவாக இது பிளேட்டோவுடையதெனவே நம்பப்படுகிறது. ஆனால் இது "கருத்துக்கள்" பற்றி அவர் முதன் முதலிற் கொண்டிருந்த கொள்கையெனவும், பின்னர் இக்கொள்கையில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டன வெனவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இவ்வாறு எண்ணுவதில் பல நெருக்கடிகள் உள்ளன. பீடோவில் இது பற்றித் தரப்பட்டிருக்கும் உரையாடலின்போது தான் அங்கு இருக்கவில்லை யெனப் பிளேட்டோ கூறுகிறார். எந்த மெய்யியலாளனாவது தனது புதிய கொள்கை ஒன்றை, அது ஏற்கெனவே தன்னோடு வாழ்ந்த பல பெயர்பெற்ற அறிஞர்

களுக்குத் தெரிந்தவொன்றுதான் என அறிமுகஞ் செய்த துண்டா[1] ? அதை நம்புவது சுலபமல்ல. ஆனால் இக் கொள்கை சோக்கிரதருடைய தெனக் கொள்வதும் சரியா காது. ஆகவே " உருக்கள் " பற்றிய இக்கொள்கை, பின்னர் சோக்கிரதரினுல் விருத்திசெய்யப்பட்ட தாயினும் பைதாகரச குழு வினரிடையேயே முதலில் உருவாகியது எனக் கொள்வதைத் தவிர வேறு வழியிலலைப்போலத் தோன்றுகிறது. இதில் ஆச் சரியப்படுவதற் கெதுவுமில்லை. சிம்மியாசுவும் கீபிசுவும் பைதா கரசவாதிகள் என்பது மட்டுமல்லாது சோக்கிரதரின் சீடர்களு மென்பது வரலாற்று உண்மை. அவர்கள் நாம் சாதாரண மாக நம்புவதிலும் பார்க்கக் " கருத்துக்களில் " அதிக பிரிய முடையராயிருந்தனர் என்பது பற்றி ஐயமில்லை.

பிளேட்டோ சோக்கிரதரின் மூலம் வெளியிடும் கருத்துக்களி லிருந்து பிரித்தறிந்து கொளள முடியாதளவுக்குப் பைதாகரச வாதம் மாற்றமடைந்துள்ள வரை அதன் வரலாற்றைக் கூறு வதன் மூலம் நாம் உண்மையில் இந்நூலின் எல்லைக்கப் பாற் சென்றுவிட்டோமெனலாம். ஆனால் நமக்குக் கிடைத் துள்ள ஆதாரங்களான கூற்றுக்களின் உண்மையான தன் மைகளை அறிந்துகொள்வதற்கு அவ்வாறு செய்தல் அவசி யமாயிருந்ததென்க. அரித்தோசெனசு தான் நேரில் அறிந்த மனிதர்களைப் பற்றித் தவருன கருத்துக்கொண்டிருக்க முடி யாது. அதேபால அரித்தோதிலும் போதிய ஆதாரமின்றி எதை யும் கூறியிருக்க மாட்டார் என நம்பலாம்.

1. பார்மனைடிசில சோகிரதரைத் தான பிறப்பதறகு இருபது ஆண்டு களுககு முநதியவோர் திகதியில, இககருதைக் கூற வைப்பது போலக் காட்டு வதில் பிளேட்டோ கவனம் செலுததியுளளார.

அத்தியாயம் 8

இளைய ஈலியவாதிகள்

இவர்களும் இவர்களின முன்னோடிகளும்

154. நாம் சற்று முன்வரை படித்த கொள்கைகள் யாவும் அடிப்படையில் பன்மைவாதக் கொள்கைகளே. ஒருடல் வாதத்தை நாம் கடைப்பிடித்தோமேயானால் எங்கும் பன்மையியல்பு, இயக்கம், மாற்றம் என்பனவற்றைக் கொண்டதாய எமது உலக அனுபவத்திற்கு முரணான பண்புள்ளது சத்துப் பொருள் எனக் கூறவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாவோம் எனப் பார்மீனடிசு காட்டியிருந்தாராதலாற்றான், இக்கொள்கைகள் இவ்வாறு பன்மைவாத அடிப்படையிலமைந்தன (பிரிவு 97). எம்பிடோக்ளிசுவின் நான்கு "மூலகங்களும்" அனக்சகோரசுவின் எண்ணிறந்த "விதைகளும்" பார்மீனடிசுவினால் எழுப்பப்பட்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே கொணரப்பட்டவையெனலாம் (பிரிவுகள் 106, 127). பைதாகரசவாதிகள் பார்மீனடிசுவின் கொள்கைகளின் செல்வாக்குக்குட்பட்டனர் என்பதை நிறுவுதற்கு வேண்டிய ஆதாரங்கள் இல்லையாயினும், அவர்களது கொள்கையின் பிந்திய உருவம் எம்பிடோக்ளிசுவின் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்தது என நாம் பார்த்தோம் (பிரிவு 147). இவ்வாறு அக்காலத்து நிலவிய பன்மைவாதமே, ஈலியவாதக் கண்ணோட்ட நீலையினின்று சேனோவினால் கண்டிக்கப்பட்டது. குறிப்பாக, பைதாகரசவாதத்திற் கெதிராகவே இவர் வாதித்தார். மெலிசசுவும் பைதாகரசவாதத்தைக் கண்டித்தார். ஆனால் சத்துப் பொருள் எல்லையற்றது என்னும் பழைய அயோனிய கொள்கையை நிறுவுவதன் மூலம், மெலிசசு தனக்கும் தனது எதிரிகளுக்குமிடையே ஒரு பொதுவான கருத்தைக் காண முயன்றனர் எனலாம்.

1. ஈலிய நாட்டு சேனோ

அவரது வாழ்க்கை

155. அப்பொலோடரசுவின்படி[1] சேனோ எழுபத்தி ஒன்பதாவது ஒலிம்பிய ஆண்டில் சிறப்புடன் விளங்கினர். பார்மீனடிசுவினும் இவர் நாற்பது ஆண்டுகள் இளையவர் எனக் கொள்வதன்

1. Diog. ix. 29 (R. P. 130 a). சேனோவின் காலத்தை அறிதற்கு அப்பொலோடரசுவைப் பார்த்தல் வழக்கமில்லையாயினும், அவரது தகப்பன் பெயரை அறிவதற்கு அப்பொலோடரசுவிடமிருந்தே மேற்கோள் பெறப்படுவதால், அவர் விளங்கிய காலத்தையறிதற்கும் இவரே ஆதாரம் என்பதில் ஐயமில்லை.

மூலம் இத்திகதி பெறப்படுகிறது. ஆனால் இது நாம் பிளேட்டோ மூலம் அறிவதற்கு நேர்முரணானதாயிருக்கிறது. இளைஞரான சோக்ரதரைப் பார்மீனிடிசுவும் சேனோவும் சந்தித்த சம்பவம் கி. மு. 449க்கு முன்னர் நடந்திருக்க முடியாதென நாம் ஏலவே பார்த்தோம். சேனோ அப்போது "கிட்டத்தட்ட நாற்பது வயதினராய் இருந்தார்" எனப் பிளேட்டோ கூறுகிறார்.[1] அப்படியானால் அவர் கி. மு. 489 ஆம் ஆண்டளவில், அதாவது பார்மீனிடிசுவிற்கு இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர், பிறந்திருத்தல் வேண்டும். இவர் திலீயுத்தகாரசுவின் மகனாவார். இவர் பார்மீனிடிசுவினால் சுவீகாரம் செய்யப்பட்டார் என அப்பொலோடரசு கூறுவதற்குக் காரணம் பிளேட்டோவின் சோபிட்டுவிலுள்ள சில சொற்களுக்கு அவர் தவருகப் பொருள் செய்து கொண்டமையே. அவர் நெடிதுயர்ந்த வசீகரமான தோற்றத்தை உடையவர் எனப் பிளேட்டோ அவரை மேலும் வருணிக்கிறார்.

பார்மீனிடிசுவைப்போல, சேனோவும் தனது நகரத்தின் அரசியலிற் பங்கெடுத்துக்கொண்டார். திமாயோசுவின் கூற்றுக்கோ ஆதாரமாகக் கொண்டுபோனாலும், ஈலியநாட்டில் நல்லரசு நிலவியதற்கு சேனோவும் ஒரு காரணம் எனவும், அவர் ஒரு பைதாகரசவாதி யெனவும் திராபோ கூறுகிறார். இக்கூற்றை விளக்குவது சுலபம். பார்மீனிடிசு முதலில் ஒரு பைதாகரச வாதியாகவே இருந்தார் என நாம் பார்த்தோம். ஆகவேதான் ஈலிய மரபும் பைதாகரச கழகததின் ஓர் கிளையெனக் கருதப்பட்டது. சேனோ ஒரு கொடுங்கோலனுக்கு எதிராகச் சதி செய்தாரெனவும் கூறப்பட்டிருக்கிறது. இக்கொடுங்கோலனது பெயர் பற்றியும் அவனது சித்திரவதைகளின்போது சேனோ காட்டிய மனத்திடம் பற்றியும் வெவ்வேறு நூல்களில் வெவ்வேறு விதமான செய்திகள் தரப்பட்டுள்ளன.

156. சேனோவின் "நூல்கள்" பற்றி இடையோசினிசு குறிப் பிடுகிறார். சூயிதாசுவும் சில நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். இவை மிலட்டசு நாட்டு எசைக்கியோசு மூலமாக அலெக்சாந்திரிய நூல் நிலைய அதிபர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கலாம். பார்மீனிடிசில் பிளேட்டோ சேனோவை, தான் அவருடைய நூல்கள்

[1] Plato, *Parm.* 127 b (R. P. 111 d). சேனோ அதென்சுக்கு வந்தசெய்தி புளுட்டார்கினாலும் உறுதிசெய்யப்படுகிறது *Per.* 4 (R. P. 130 e). அனக்சகோரசு, சேனோ என்போரது போதனைகளைப் பெரிக்கிளிசு "கேட்டதாக" அவரது நூலில் கூறப்பட்டிருக்கிறது *Alc.* I. 119 a இதுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஐசொலொகோசுவின் மகனான பைதோடரசும் கலியாடிசுவின் மகனான கலியாசும் ஆளுகு 100 மினே வீதம் சேனோவிடம் போதனை கேட்பதற்காகப் பணம் கொடுத்ததாக இந்நூலிற் கூறப்பட்டிருக்கிறது.

எழுதிய நூல்களில் தனக்கு மிகவும் புகழைத் தேடித் தந்த நூல், தான் மிகவும் இளைஞனாயிருக்கும்போது எழுதப்பட்ட தெனவும் தனது விருப்பத்திற் கெதிராகவே வெளியிடப்பட்ட தெனவும் கூறவைக்கிறார். இவ்வுரையாடலின்போது அவருக்கு நாற்பது வயது எனக் கொள்ளப்படுவதால் இந்நூல் கி. மு. 460 ஆம் ஆண்டில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்; ஆகவே அவர் அதற்குப் பின்னர் பல நூல்களை எழுதியிருக்கலாம் என்பதும் சாத்தியமே. சேனை, சூயிதாசு கூறுவதுபோல "மெய்யியல்வாதிக"ளுக்கு எதிராக நூலொன்று எழுதினை ரென்பது உண்மையானால் அது பைதாகரச வாதிகளுக்கெதிராகவே எழுதப்படடிருத்தல் வேண்டும். "மெய்யியல்வாதி" எனும் சொல்லிற்கும் பைதாகரசவாதிகள் வழக்கிற்குப் புறம்பான வோர் புதிய பொருள் கொண்டனரெனவும் பார்த்தோம்[1]. பிளேட்டோவின் பார்மனைடிசில் குறிப்பிடப்பட்டுள்ள நூல் இவரது "வாதாட்டங்கள்" எனும் நூலாகவோ அல்லது "இயற்கை விளக்கம்" எனும் நூலாகவோ இருக்கலாம்; அல்லது வேறொரு நூலாகவும் இருத்தல் கூடும்.

அரித்தோதிலின் நூல்களில் சேனைவும் உரையாடல்கள் சில வற்றை எழுதினரெனும் பொருள்படக்கூடிய சில குறிப்புக்கள் உள்ள போதிலும், அவ்வாறு நாம் எண்ணுதற்கிடமில்லை யெனலாம். அரித்தோதிலது பௌதிகம் எனும் நூலில், சாமைக்குவையொனறின் மிகச் சிறிய பகுதியும் ஒலியை உண்டாக்கும் எனும் சேனைவின் வாதம் ஒன்று குறிப்பிடப்படுகிறது. சிம்பிளிசியசு, சேனைவுக்கும் புரோதாகரசவுக்கு மிடையே நடந்த உரையாடற் பகுதியொன்றை மேற்கோளாகக் காட்டி, இவ்வாதத்தை விளக்குகிறார்; ஆனால் சேனை தான் எழுதிய உரையாடலொன்றில், தன்னையும் ஒரு பாத்திரமாக்கியிருப்பார் எனக் கூற முடியாது. பிற்காலத்திற்றான் அவ்வழக்கம் ஏற்பட்டது. "சேனை வினவுபவராகவும் வேறொருவர் பதிலிறுப்பவராகவும்" கொண்டு அமைந்த இன்னொரு உரையாடல் பற்றியும் அரித்தோதில் வேறோர் இடத்திற் குறிப்பிடுகின்றார். இதையும் முந்திய குறிப்பைப் போலவே இலகுவாக விளக்கிவிடலாம். யோச்சியாசுவை ஒரு பாத்திரமாகக் கொண்ட உரையாடலொன்றை அலுக்கிடாமசுவும் எழுதியதாகத் தெரிகிறது. சேனைவினது வாதங்களை உரையாடல் மூலமாக விளக்குவது இவர்கள் யாவருக்கும் சிறந்தவோர் முறையாகத் தோனறியிருக்கவேண்டும்.

சேஜே இளமைக்காலத்தில் எழுதிய நூல் பற்றிப்பிளேட்டோ தெளிவான விவரங்கள் தந்துள்ளார். அதில் ஒன் றுக்கு மேற்பட்ட "விரிவுரை" களிருந்தனவெனவும், ஒவ்வொரு விரிவுரையும் அவரது எதிரிகளின முற்கற்பிதங்கள் பற்றிக் கூறும் பிரிவுகளாக வகுக்கபபட்டிருந்ததெனவும் பிளேட்டோ கூறுகிறார். ஏகம், பன்மை, எனபனபற்றிய சேஜேவின் வாதங் களைப் பேணித் தந்ததற்காக நாம் சிம்பிளிசியசுவுக்குக் கட மைப்பட்டிருத்தல் வேண்டும். இயக்கம் பறறிய வாதங்கள் அரித்தோதில் மூலம் எமக்குக் கிடைத்துள்ளன. ஆனால் அவர் அவற்றைத் தமது வார்த்தைகளில் தந்துள்ளார்.

157. அரித்தோதில் தனது சோபிட்டில் வாதவியலைக் கண்டு பிடித்தவர் சேஜேவே எனக் கூறியுள்ளார். இவ்வகை வாத முறை ஈலிய மரபு ஆரம்பித்தபோதே ஆரம்பித்ததெனினும் அரித்தோதிலின் கூற்றுப் பெருமளவிற்கு உண்மை எனலாம். சேஜேவின் நூலின் நோக்கம், மொழிநடை என்பவை பற்றி யவோர் ரசமான வர்ணனை, சேஜே தானே கூறுவதுபோல, பிளேட்டோவினால தரப்படுகிறது. வாதவியலை

சத்துப்பொருள் ஒன்றேயெனின், பார்மனிடிசுவின வாதம் பல முரண்பாடுகளைக் கொண்டதாயும் பொருளற்றதாயும் ஆகி விடும் எனும் காரணத்தைக் காட்டிய பார்மனிடிசுவின் கொள் கையை நையாண்டி செய்ய முயல்வோருக் கெதிராக, அவரது கொள்கைக்கு வலியூட்டுவதே உண்மையில், இங்கு எழுதப் படுபவற்றின் நோக்கமாகும். பன்மையை ஆதரிப்பவர்களுகெ திராகவே இவ்வாதம்; அவர்கள் சொல்லுபவற்றிற்கு அவர் களிலும் பார்க்க இரண்டு மடங்கு வலுவுடன் பதிலிறுப்பதும், ஒருமைக் கற்பிதத்திலும், பன்மைக் கற்பிதமே போதியளவு விரித்துப் பார்க்கின், அதிக முரண்பாடுகளுக்கு இட்டுச்செல்லும் எனக் காட்டுவதுமே எமது வாதத்தின் நோக்கம்.

தனது எதிரியின் அடிப்படை இடுகோள்களில் ஒன்றினை யெடுத்துக் கொண்டு, அதிலிருந்து ஒன்றுக் கொன்று முரண் பட்ட இரு முடிவுகளுக்கு வரலாமென்பதைக் காட்டுவதே சேஜேவின் முறையாயிருந்தது. அரித்தோதில் இவரே வாத வியலைக் கண்டுபிடித்தவர் எனக் கூறியபோது, இதையே கரு தினரென்க. தானே உண்மையான எடுகூற்றுகளிலிருந்து ஆரம்பிக்காது, மாற்றாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எடுகூற்றுக்க ளிலிருந்து வாதிப்பதே இம்முறை. பார்மனிடிசுவின் கொள்கை, புலன்களினால் நாம் பெறும் அறிவுக்குப் பலவகைகளில் முர ணான முடிவுகள் ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கிறது. ஆனால் சேஜேவின் வாதங்கள் இம்முடிவுகளை ஆதரிக்கும் பொருட்டு எழுதப்படவில்லை. பார்மனிடிசுவின் எதிரிகளின் கொள்கையும்

இத்தகைய முரண்பாடுகளையே எற்படுத்தின என்பதையே அவரது வாதங்கள் விளக்க முற்பட்டன.

சேனோவும் பைதாகரசவாதமும்

158. பொருள்கள் "பல" வாயிருந்தன வெனக் கூறியவர்களான பார்மேனடிசுவின் எதிரிகளைக் கண்டிக்கும்பொருட்டே சேனோவின் வாதங்கள் எழுந்தன வென்னும் பிளேட்டோவின் கூற்றிலிருந்து, அவரது வாதவியல் குறிப்பாகப் பைதாகரச வாதிகளுக் கெதிராகவே எழுதப்பட்டதென்பது பெறப்படுகிறது.[1] பொருள்கள் பலவேயென்னும் கொள்கை பற்றிப் பொதுவாக மக்களிடையே நிலவிய கருத்தையே சேனோ மறுக்க முனைந்தார் எனச் செலலர் கூறுகிறார். ஆனால் மெய்யியலாளரொருவர் மறுக்குமளவிற்குப் பொருள்கள் பலவென்னும் கொள்கை சாதாரண மக்களிடையே நிலவியதென்பது உண்மையாக விருக்க முடியாது. பார்மேனடிசுவின் எதிரிகள் நம்பிய கருத்துக்களை சேனோவின் எடுகூற்றுக்களா யமைந்தனவெனப் பிளேட்டோ கூறுகிறார். வெளியும், ஆகவே உடலும், பல தனியலகுகளினால் ஆனவை யென்னும் இடுகோளிலிருந்து சேனோ தனது முரண்பாடுகளை யெல்லாம் பெறமுடியுமெனக் காட்டியுள்ளார். இவ் வொப்புக்கோள் பைதாகரச கருத்தே யென்க. சேனோவின் நூல் அவரது இளமைப் பருவத்தே யெழுதப்பட்டது என நாம் பிளேட்டோ மூலம் அறிகிறோம். ஆகவே இவர் அதை இத்தாலியிலிருந்தே எழுதியிருத்தல் வேண்டும். அங்கு அக்காலத்தில், பார்மேனடிசுவின் கொள்கையைக் கண்டித்திருக்கக் கூடியவர்கள் பைதாகரசவாதிகளே.[2]

நாமும் பிளேட்டோவைப் பின்பற்றி வழக்கமாகச் சேனோவுக்களிக்கப்படும் திகதியை விடப் பிந்தியவோர் திகதியை அளிப் போமாயின், அதன்மூலம் வரலாற்றில் அவரது நிலை மிகத் தெளிவாகின்றதென்பது கவனிக்கப்படலாம். முதலில் பார்மேனடிசுவையும் அவருக்குப் பின்னர் பன்மைவாதிகளையும் அவர்களைத் தொடர்ந்து சேனோவின் கண்டனங்களையும் நாம் காண்கிறோம். வரலாற்று வளர்ச்சி இவ்வாறு நிகழ்ந்ததாகவே அரித்தோதிலும் கருதுகிறாரெனலாம்.[3]

1. சமீப காலத்தில் தானரி, போம்கர் என்போரும் சேனோவின் வாதங்கள் பைதாகரசுவுக்கு எதிராகவே எழுந்தன என்பதை நிறுவியுள்ளனர்.

2. சேனோவாற் கண்டிகைப்பட்டவர் எம்பிடோகிளிசுவாக இருக்கலாமென வும் கூறபட்டுள்ளது. அவரும் சேனோவின் வயதையுடையவராய் இருந்தார் (பிரிவு 98) இவர், பார்மேனடிசுவைக் கண்டித்தெழுதியுள்ளார் (பிரிவு 106). ஆனால் சேனோவின் வாதங்கள் அவரது கொள்கையை விசேட மாகக் குறிப்புனவெனக் கருத இடமில்லை. அனக்சகோரசுவையும் அவ்வாறு கருத முடியாதென்க.

3. 173 ஆம் பிரிவைப் பார்க்க.

159. "அலகு" என்பது பற்றியவோர் குறிப்பிட்ட கருத்துக் கெதிராகவே சேனேவின் வாதங்கள் பிரதானமாகத் தொகுக் கப்பட்டிருக்கின்றனவெனலாம். "யாராயினும் தனக்கு அலகு என்ன வெனக் கூறினுல் பொருள்கள் என்னத்தாலானவை யெனத் தன்னுற் கூறமுடியுமென" சேனே கூறியதாக இயூ டெமோசு தனது "பௌதிகம்" எனும் நூலிற் கூறுகின்றார். சிம்பிளிசியசுவினுற் பேணித் தரப்பட்டுள்ள, இதுபற்றிய அலெக் சாந்தரது குறிப்புரை மிகவும் திருத்திகரமானதாயுள்ளது. "பன்மை என்பதற்குப் பல அலகுகள் என்பது பொருளாதலா லும், பொருள்களில் அலகுகளிலலே யாதலாலும், பொருள் கள் பலவாயிருத்தல் சாத்தியமேயில்லே யெனப் பார்மனிடிசு வின் சீடரான சேனே நிரூபிக்க முற்பட்டாரென இயூடெமோசு கூறுகின்றார்" என அலெக்சாந்தர் எழுதியுள்ளார். எல்லாப் பொருள்களும் பல அலகுகளாலானவையேயென்னும் பைதாகரச கொள்கையே குறிப்பிடப்படுவதை இங்கு நாம் தெளிவாகக் காண்கிறோம். சேனே மறுத்தது இதையே. "அலகு" என்பது என்ன?

160. சேனேவின் கொளகை பற்றி நமக்குக் கிடைத்துள்ள பகுதிகளே நோக்கும்போதும் இதுவே அவரது வாதத்தின் கருத் தென்பது தெளிவாகின்றது. அப்பகுதிகள், டியல்சு அவற்றைத் தந்துள்ள ஒழுங்கின்படி இங்கே தரப்பட்டுகின்றன. சேனேவின் வாதப் பகுதிகள்

(1)

இருப்பது அளவு அற்றதாய் இருந்தால், அது இருக்கவே மாட்டாது....ஆனல் அது அளவுடையதாய் இருந்தால், ஒவ் வொன்றும் ஒரு குறிப்பிட்ட அளவையும் மொத்தத்தையும் உடையதாய் இருப்பதோடு தனக்கு முன்னிருப்பதிலிருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்திலிருப்பதாயுமிருக்கும். அதற்கு முன்னுல் இருப்பதைப் பற்றியும் இவ்வாறு கூறலாம். எனெனில் அதுவும் அளவையுடையதாயிருக்கும்; அதற்கு முன்னுலும் ஒன்று இரு க்கும்[1]. இதை ஒருமுறை கூறினும், பலமுறை கூறினும் சரியே; எனெனில் இவற்றில் ஒரு பகுதியும் கடைசிப் பகுதியாயிராது. மேலும் இவற்றுள் ஒன்றையினும், பிறிதொன்றோடு ஒப்பிடப் படும்போது அதனளவுக்கு இருப்பது அல்லாததாகவிராது ஆகவே, பொருள்கள் பலவாயின் அவை ஒருங்கே பெரியனவும் சிறியனவுமாயிருத்தல் வேண்டும்; இவற்றிற்கு அளவே இல்லே எனுமளவிற்குச் சிறியனவாயும், எல்லேயற்றன எனுமளவிற்குப் பெரியனவாயும் இருத்தல் வேண்டும். R.P.134.

1. பைதாகரச புள்ளி மூன்று பரிமாணங்களேக் கொண்டது எனச் சேனே காட்டுகின்றார்.

(2)

எனெனில், அதை எப்பொருளோடு சேர்த்தாலும் அப்பொருள் அதனுல் அளவிற் பெரியதாகாது ; எனெனில், அளவற்றவொன் றைக் கூட்டுவதானுல் ஒரு பொருளும் அளவிற் பெரியதாகாது. இதிலிருந்து சேர்க்கப்பட்டது அளவேயில்லாதது என்பது உடனடியாகப் பெறப்படுகிறது[1]. இது வேறெரு பொருளிலிருந்து எடுக்கப்பட்டாலும் அப்பொருள் அளவிற குறைந்ததாகாது ; இது வேறெரு பொருளோடு சேர்க்கப்படும்போது அது அளவிற் கூடுவதில்லை ; ஆகவே எடுக்கப்பட்டதும், சேர்க்கப்பட்டதும் உண்மையில அதிரவியமே என்பது தெளிவு. R.P.132.

(3)

பொருள்கள் பலவாயிருந்தால் அவை தாம் எத்தனையோ, அத்தனையாயே இருத்தல் வேண்டும். அதிற் கூடவோ குறையவோ இருக்க முடியாது. அவை தாம் எத்தனையோ, அத்தனையாயிருப்பின், எணணிக்கையில் அவை முடிவுள்ளவையே.

பொருள்கள் பலவாயின அவை எண்ணிக்கையில் முடிவற்றவை ; எனெனில் அவற்றிற்கிடையே பிறபொருள்கள் எப்போதும் இருக்கும். அவற்றிற் கிடையேயும் பிற பொருள்கள் இருக்கும். ஆகவே பொருள்கள் எண்ணிறந்தவையே. R.P. 133[3].

அலகு

161. அலகு அளவு இல்லாததென நாம் கொள்வோமாயின்– அரிததோதில் கவர்பாட்டு வாதம் எனக் கூறும் வாதத்திலிருந்து இது பெறப்படுகிறது–யாவும் மிக மிகச் சிறியனவாயிருத்தல் வேண்டும். அளவு இல்லாத அலகுகளினுல் ஆன எதுவும் அளவுடையதாய் இருக்க முடியாது. அதேபோல பொருள்களில் உள்ள அலகுகள், எவ்வளவு சிறியனவாயினும், அளவுடையனவே யென்போமானுல் பொருள்கள் எல்லையற்றுப் பருத்தனவெனக் கூறுதல் வேண்டும். கோடு முடிவில்லாது

1. செல்லர் இவ்விடத்தில் ஒருகுறையுளதெனகாட்டுகிறார். ஒரு பொருளிலிருந்து ஒரு புள்ளியைக் குறைப்பதனுல் அப்பொருள் அளவிறகுறைவடையாது எனச் சேனே கட்டாயம காட்டியிருக்கவேண்டும். ; ஆனுல் அவர் இப்பகுதிகளின் ஆரமபத்திற்கு முதலே அவ்வாறு செயதிருக்கலாம்.

2. இதையே அரிததோதில் "கவர்பாட்டு வாதம்" என அழைத்தனர். ஒரு கோடு புள்ளிகளால் ஆனதெனின் "குறிப்பிட்டவொரு கோட்டில் எத்தனை புளளிகளுள்ளன ?" எனும் கேள்விக்கு நாம் விடை கூறக் கூடியவர்களாயிருத்தல் வேண்டும். ஆனுல் ஒரு கோட்டையோ அல்லது அதன் எந்தப்பகுதியையுமோ இரு சமபாதிகளாகப் பிரிபபது எப்போதும் சாத்தியமே. ஆகவே கோடு புள்ளிகளாலானதெனின், அதிலுள்ள புள்ளிகள் எப்போதும் நாம் கூறும் எண்ணிலும் கூடியனவாயே இருக்கும்.

பிரிக்கப்படக்கூடியது. இக்கொள்கையினபடி ஒவ்வொன்றும் சிறிய அளவுள்ள, ஆனால் முடிவற்ற எண்ணிகைகை கொண்ட, அலகுகளினாலானதே கோடு.

இவ்வாதம் புள்ளிகளைப் பற்றியதே யென்பது அரித்தோதி வின் "பௌதிகவதீதம" எனும் நூலிலுள்ளவோர் மிகவும் பயனுடைய பகுதியினால் நிரூபிக்கப்படுகிறது. அப்பகுதி பின் வருமாறு :

"அலகு பிரிக்கப்படக்கூடியதாயின, சேனோவின எடுப்பின் படி, அஃது அதிரவியாமாயிருக்கும். எதைச் சேர்ப்பதனால் எப் பொருளினது அளவும் அதிகரிகக்வில்லையோ, எதைக் கழிப் பதனால் எபபொருளினது அளவும் குறைக்கப்படவில்லையோ, அப்பொருள் சத்துப் பொருளேயலலவெனச் சேனோ கூறு கின்றார் ; எனெனில சத்துப் பொருள் அளவுடையதாயிருத்தல் வேண்டுமென்பது தெளிவு. மேலும் அது அளவுடையதாயின் அஃது உடலுள் பொருளென்க ; எனெனில் எல்லாவகையிலும் பரிமாணமுடையது உடலுள்ள பொருளே. கோடு, தளம் ஆகிய வஜைப் பொருள்கள், பொருள்களோடு ஒரு முறையாகச் சேர்க்கப் படின அவற்றைப் பெரிதாக்கும் ; வேறெரு முறையாகச் சேர்க் கப்படின் அப்பொருள்களில் எவ்வகை மாற்றமும் ஏறபடாது. ஆனால் புள்ளியினாலும், அலகினாலும் பொருளகளை எவ்வகை யிலும் பெரிதாக்க முடியாது."

இவை யாவற்றிலிருந்தும் புலப்படுவது "பன்மை"யை ஆக் குவதாகக் கூறப்படும் "ஒன்று"க் கெதிராகவே சேனோ தனது வாதங்களைத் தொடுத்துள்ளார எனபதே. "பன்மை" பல "ஒன்று"களினால் ஆனது என்கையில் குறிப்பிடப்படும் "ஒன்று" பைதாகரச கொள்கையிலுள்ள அலகே.

162. வெளி பற்றிய பைதாகரச கொள்கைக் கெதிராகத் தொடுக்கப்பட்டதுபோலத் தோனறும் வாதமொன்று அரித் தோதிலாற் குறிபபிடப்பட்டிருக்கிறது. சிம்பிளிசியசு அதைப் பினவருமாறு கூறுகிறார் : வெளி

"வெளியிருக்குமாயின அது யாதேனுமொன்றிலேயே இருக் கிறது ; எனெனில இருபபவை யாவும் யாதேனும் ஒனறிலேயே இருக்கினறன. ஆனால் அதுவும் வெளியிலேயே இருக்கிறது. ஆகவே வெளி, வெளியிலிருத்தல் வேண்டும். இது இவ்வாறு இறுதியினறி ஓடுகிறது. ஆகவே வெளியெனபதில்லை."

வெளியை அதனில் இருக்கும் உடலிலிருந்து பிரித்துக் கருதும் முயற்சியையே இங்கு சேனோ கண்டிக்கிறார். உடல் வெளியில் இருக்கிறதென நாம் கூறினால வெளி எதில்

உள்ளதெனவும் நாம் கேட்டல் வேண்டும். வெற்றிடத்தை மறுக்கும் பார்மீனடிசுவின் வாதத்திற்கு வலுவூட்டுவதே இவ் வாதம். ஒவ்வொரு பொருளும், யாதேனும் ஒன்றில் இருக்க வேண்டும் அல்லது தனக்கு அப்பால் எதையும் கொண்ட தாய் இருத்தல் வேண்டும் எனும் வாதம் வெளியே யெதுவு மில்லாத முடிவுள்ள கோளம் பற்றிய பார்மீனடிசிய கொள் கைக் கெதிராக உபயோகிக்கப்பட்டிருக்கலாம்.

இயக்கம்

163. இயக்கம் பற்றிய சேனோவின் வாதங்கள் அரித்தோதிலி னலேயே பேணித் தரப்பட்டுள்ளன. பார்மீனடிசுவின் கொள்கை எவ்வகை இயக்கமும் சாத்தியமில்லை யெனும் முடிவை எற் படுத்தியது. அவருக்குப் பின் வந்தோர் இம்முடிவைத் தவிர்க் கும் பொருட்டு ஒருமைவாதக் கருதுகோளையே கைவிட நேரிட்டது. இயக்கமென்பது அசாத்தியமெனக் காட்டுவதற்குச் சேனோ புதிய நிரூபணம் எதையும் கொண்டுவரவில்லை; பார்மீனடிசுவின் கொள்கையால் எவ்வாறு இயக்கத்தை விளக்குவது இயலாத தாய் இருந்ததோ அதுபோலவே பைதாகரசவாதிகளினுடையது போன்ற பன்மைவாதக் கொள்கைகளினாலும் இயக்கத்தை விளக்க இயலவில்லை என்பதையே அவர் காட்டுகின்றார். இவ் வாறு நோக்குகையில் சேனோவின் வாதங்கள் வெறும் சார மற்ற தொடர்களல்ல வென்பதும், அளவு எனும் எண்ணக் கோளின் வரலாற்றில் இவை ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிப் பனவென்பதும் புலனாகும். இயக்கம் பற்றிய அவரது வாதங்கள் பின்வருமாறு :

1. ஓட்டப்போட்டி மைதானமொன்றையும் உன்னால் கடக்க முடியாது. முடிவுள்ள காலத்தில், உன்னால் முடிவற்ற எண் ணிக்கையுள்ள புள்ளிகளைக் கடக்க முடியாது. நீ எந்தக் குறிப் பிட்ட தூரத்தையும் கடப்பதற்கு முன்னர் அத்தூரத்தில் பாதித் தூரத்தைக் கடத்தல் வேண்டும். அப்பாதியைக் கடப்பதற்கு முன்னர் அதன் பாதியைக் கடத்தல் வேண்டும். இது இவ்வாறு இறுதியின்றிச் செல்கின்றதாகையால், குறிப்பிட்ட வெளியெத னிலும் முடிவற்ற எண்ணிக்கையுள்ள புள்ளிகள் உள்ளன. இவ்வாறு முடிவற்றனவாயுள்ள புள்ளிகளை, முடிவுள்ள காலத் தில் ஒவ்வொன்றாகத் தொடுதல் இயலாது.

2. அக்கிலிசு ஒருபோதும் ஆமையை முந்த முடியாது. ஆமை எந்த இடத்திலிருந்து தொடங்கியதோ அந்த இடத்தை அவன் முதலில் அடைதல் வேண்டும். அதற்குள் ஆமை சற்றுத்தூரம் முன்னே சென்றிருக்கும். அக்கிலிசு அப்போது அந்தத் தூரத்தைக்கடந்து முடித்தல் வேண்டும். மீண்டும் ஆமை சற்றுத்தூரம் முன்னே சென்றுவிடும். அக்கிலிசு

எப்போதும் முன்பிருந்ததிலும் பார்க்க அண்மையில் வருகின் றனவினும், ஒருபோதும் ஆமைக்கு நேர் சமமாக வரமாட் டாவன.

இரண்டாவது வாதத்தின் "கருதுகோளு"ம் முதலாவது வாதத்தினதும் ஒன்றே. கோடென்பது புள்ளிகளின் வரிசையே எனும் கருதுகோளே இரண்டிலும் உளது. ஆனால் இரண்டாவ தில், இயங்கும் பொருள் ஒன்று புகுத்தப்படுவதன் மூலம் வாதம் சற்றே சிக்கலுடையதாக்கப்படுகிறது. ஒவ்வொரு முறை யும், வித்தியாசம், முன்பிருந்ததில் பாதியாகுவதற்குப் பதி லாக, மாறுவிகிதமொன்றின்படி குறைந்து வருகிறது. மேலும், இக்கருதுகோளின்படி, இயங்கும் பொருளெதுவும், அது எவ் வாறு வேகமாக இயங்கினாலும், எவ்வளவு சிறிய தூரத்தையும் ஒருபோதும் கடக்க முடியாதென முதலாவது வாதம் விளக்கி யது ; இரண்டாவது வாதம், எவ்வளவு மெதுவாக இயங்கினா லும் அது முடிவற்ற தூரத்தைக் கடக்குமென்பதை விளக்கு கிறது.[1]

3. பறக்கும் அம்பு நிலையாயிருக்கிறது. தனக்குச் சமமான அளவுள்ள வெளியிலிருக்கும் எப்பொருளும் நிலையாயிருக்கி றதென்றால், இயங்கிக் கொண்டிருக்கும் எப்பொருளும் ஒரு குறிப்பிட்ட கணத்தில் தனக்குச் சமமான வெளியிலேயே இருக் கின்றதாதலால், இயங்கிக்கொண்டிருக்கும் எப்பொருளும் நிலை யாயிருக்கிறது.

இங்கு மீண்டுமொரு புதிய சிக்கல் புகுத்தப்பட்டிருக்கிறது. இயங்கும் பொருளே நீளமுடையதாயிருக்கிறது. அதன் பல் வேறு நிலைகள் புள்ளிகளாயிராது கோடுகளாயுள்ளன. முடி வற்ற எண்ணிக்கையுள்ள பிரிக்க முடியாத பகுதிகள் ஒரு கோட்டினுள்ளனவெனும் கருதுகோளை மறுக்கும் நோக்கத் துடனேயே முதலிரு வாதங்களும் தரப்பட்டுள்ளன. இவ்வாத மும் இதற்கடுத்ததும் ஒரு கோட்டில் முடிவுள்ள எண்ணிக்கை யுள்ள பிரிக்கமுடியாத பகுதிகளேயுள்ளன எனும் கருத்தை நிறுவ முயல்வன.[2]

1. திரு. யோடமின கூறுவதுபோல (*Mind*, 1916, p. 42) "முதலாவது வாதம் இயக்கம் ஒரு போதும் ஆரம்பிக்கவே முடியாதென்பதைக் காட்டுகின் றது ; இரண்டாவது வாதம் மெதுவாகச் செல்வதும், அதனினும் விரைவாகச் செல்வனவறைப் போன்றளவு விரைவாகச செல்கிறது எனக காட்டுகினறது." ஒரு கோட்டை அதை ஆக்கும் புள்ளிகளாக முடிவின்றிப் பிரிக்க முடியும் எனும் கருதுகோளின் அடிப்படையில் எற்படும் விளைவுகளைக் காட்டுவனவாகவே இவ்வாதங்கள் அமைந்துள்ளன.

2. யோடமின், முன்பு கூறிய நூலில்.

4. ஓரளவு நேரத்தின அரைப்பங்கு, அதன் இருமடங்கு நேரத திற்குச் சமமாயிருக்கலாம். மூன்று வரிசைகளாகப் பொருள்கள் இருக்கின்றனவென வைத்துக் கொள்வோம். அவற்றில் ஒரு வரிசை (A) நிலையாயிருக்கையில் மறற இருவரிசைகளும் (B,C) ஒன்றுக்கொன்று எதிரான திசைகளில் நகாகின்றன (படம் 1). இவை யாவும் ஒரே இடத்திற்குள் வருவதற்குள் B, A, யில் உள்ளவற்றிலும் இரண்டு மடங்கு பொருள்களை C யிற தாண்டியிருகும் (படம் 2).

படம் 1



படம் 2



ஆகவே C யைத் தாண்டுவதறகுச் செல்லும் நேரம் A யைத் தாண்டுவதற்குச் செலலும் நேரத்தைப்போல இருமடங்காகிறது. ஆனால் C யும் B யும A யின் இடத்தை அடைவதற்கு வேண்டிய நேரம் சமமானதே. ஆகவே இரண்டு மடங்குநேரம் பாதி நேரத்திறகுச் சமமானதே.

எநதப்பொருளும், அதற்குச் சம அளவுள்ள பொருள நிலையாயிருநதாலும் சரி, இயங்கிக் கொண்டிருந்தாலும் சரி சம மான வேகத்திற் செல்கையில் சமமான நேரத்திற்குச் செலலல் வேண்டும் எனும் எடுகோளிலேயே இப்போலி நியாயத் தொடை தங்கியுளளதென அரித்தோதில் கருதுகிறர். அது உண்மை யென்பதில் ஐயமில்லை. ஆனால் இவ்வெடுகோள் சேரூவுடையதென நாம் கற்பித்துக்கொள்ள வேண்டியதில்லை. இரண்டாவது வாதம் மூனறுவது வாதத்தோடு தொடர்புள்ளதா யிருக்கிறது. முதலாவது வாததிலுள்ள, ஒரு இயங்கும் புள்ளி யோடு அக்கிலிசும் இரண்டாவது இயஙகும் புளளியாகச் சேர்ந்து கொள்கிறுன் ; இந்த வாதம் பறக்கும் அம்பெனும் ஒரு நகரும் கோட்டுடன இரண்டாவது நகரும் கோடொனறை யும் சேர்த்துக்கொளகிறது. ஆனால் கோடுகள் இங்கு அலகு வரிசைகளாகக காட்டப்படுகின்றன. பைதாகரசவாதிகளும் கோட்டை, அலகுகளின வரிசையெனவே கருதினர். கோடுகள் தனியான அலகுகளின் தொகுதியென்பதும், நேரம் தனியான கணங்களின் தொகுதியென்பதும் உண்மையானால், ஒவ்வொரு அலகும் எத்தனை அலகுகளைத் தாணடுகிறது என்பதைவிட, இயக்கத்தை அளவிடுதற்கு வேறு வழி காணமுடியாதென்க. பொருள்கள யாவும் தனித்தனியே உள்ளவை என்னும் எடு கோளைக் கொள்ளுவதால் உண்டாகும் பொருந்தா முடிபுகளை எடுத்துக்காட்டுதற்காகவே மற்றைய எல்லா வாதங்களையும்போல

இவ்வாதமும் கொணரப்பட்டது. மற்றைய கருதுகோள்கள் எம்மைப் பொருந்தா முடிபுகளுக்கு இட்டுச் செல்லுகின்றன என்பதை விளக்குவதன் மூலம் உலகம் இடையீடின்றித் தொடர்பாய் இருக்கும் பொருள்களைக் கொண்டது என்னும் கருத்தைச் சேனை நிறுவியுள்ளார். ஒன்று தொடர்பாய் உள்ளதெனப் பார்மனிடிசு கூறினர் என்பது நம் நினைவில் இருக்குமானால் (பகுதிகள் 8,25), சோக்கிரதர் கூறுவது போல், பிளேட்டோ சேனையின் வாதமுறையைப் பற்றித் தரும் விவரம் எவ்வளவு சரியானது என்பதை நாம் கண்டு கொள்வோம்.

2. சாமோசுநாட்டு மெலிசசு

அவரது வாழ்க்கை

164. இதாகெனிசுவின் மகனும், மெய்யியலாளனுமான மெலிசசுவே கி. மு. 441–0 ஆண்டின் அதெனிய கப்பற்படையைத்தோற்கடித்த சாமியப் படைத்தலைவனென, அரித்தோதிலது ஆதாரத்தோடு, தனது பெரிக்கிளிசுவின் வாழ்க்கை யெனனும் நூலில் புளூட்டார்க்கு கூறுகிறார்; இவர் சிறப்புடன் விளங்கிய காலம் எண்பதாம்நான்காவது ஒலிம்பிய ஆண்டென (கி. மு. 444–41) அப்பொலோடசு நிர்ணயித்ததற்கும் இதுவே காரணமாயிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை.[1] இதைவிட மெலிசசுவின் வாழ்க்கை பற்றி நாம் வேறென்றும் அறியோம். சேனையைப் போல இவரும பார்மனிடிசுவின் சீடரேயெனக் கூறப்படுகிறது. ஆனால் இவர் சாமோசு நாட்டைச் சேர்ந்தவராதலால், முதலில் இவர் அயோனிய மரபைச் சேர்ந்தவராயிருந்திருக்கலாம். இவரது கொள்கையின் அம்சங்கள் சிலவும் இக்கருதுதை ஆதரிப்பனவாயுள்ளன. ஆனால் அதே நேரத்தில் ஈலிய வாதவியல் முறையில் இவர் முற்றுக நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது பற்றியும், அயோனிய கருத்துக்களில், அதற்கு முரணுயிருந்தவற்றைக் கைவிட்டனர் என்பது பற்றியும் சந்தேகத்திற்கேயிடமில்லை. அதென்சின் மேன்மை காரணமாக, கிழக்குக்கும் மேற்கிற்குமிடையே இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய முறையில் எற்பட்டிருந்த புதிய வசதிகளின் பயனை நாம் இங்கு கவனிக்கலாம்.

1. அப்பொலோடசு ஒலிம்பியாட்டின் நான்காவது ஆண்டையல்லாது முதலாவது ஆண்டையே கருதினுரெனபது சாத்தியமாயிருக்கலாம். தெளரியை நிறுவப்பட்ட ஆண்டாய இதுவே அவரது வழமையான காலம் எள்க. ஆனால் அவர் நான்காவது ஆண்டையே கருதினர் எனக் கொள்ளுவதே அதிக பொருத்தமானதெனலாம்.

மெலிசசுவின் வாதத்திலிருந்து வந்துள்ள பகுதிகள்

165. நமக்குக் கிடைத்துள்ள பகுதிகள் சிம்பிளியசுவிடமிருந்தே கிடைத்துள்ளன. முதலாவது பகுதி தவிர வேனய யாவும் டியல்சு தந்துள்ளவாறு இங்கு தரப்பட்டுள்ளன.

(Ia) அதிரவியமே உள்ளதாயின், மெய்யான ஒன்றைப்பற்றிக் கூறுவது போல அதைப்பற்றி யாது கூறமுடியும் ?

(I) இருந்தது எதுவோ அது என்றும் இருந்தது. எனெனில் அது இடையிலே எற்பட்டதாயின், அவ்வாறு எற்படுவதற்கு முன்னர் அது அதிரவியமாயிருந்திருத்தல் வேண்டும். ஆனல் அது அதிரவியமாயிருந்தால், எவ்வகையிற்றனும் அதனின்றும் எப்பொருளும் தோன்றியிருக்க முடியாது. R. P. 142.

(2) ஆகவே அது இடையில் எற்பட்டதல்ல. இருப்பதாதலால் அஃது எப்போதும் இருந்தது ; எப்போதும் இருக்கும், ஆரம்பமோ முடிவோ அதற்கு இல்லை ; அதற்கு எல்லையும் இல்லை. எனெனில் அது இடையிலே உண்டாகியதாயின் அதற்கு ஒரு ஆரம்பமும் (எனெனில் அது எதாவது ஒரு காலத்தில் உண்டாகத் தொடங்கியிருக்கும்), முடிவும் (எனெனில் உண்டாவது, எதோவொரு காலத்தில் முடிந்திருக்கும்) இருந்திருக்கும் ; ஆனல அது ஆரம்பிக்கவோ முடியவோ இல்லை. எப்போதும் அது இருந்தது, எப்போதும் அது இருக்கும். அதற்கு ஆரம்பமோ முடிவோ, எதுவும் இல்லை ; எனெனில் முற்றுக இராது. இருப்பதென்பதே ஒன்றுக்கும் ஒருபோதும் சாத்தியமில்லை. R. P. 143.

(3) மேலும் அது என்றும் இருப்பதைப்போலவே, என்றும் அளவில் எல்லையற்றதாகவும் இருக்கும். R. P. 413.

(4) ஆனல் ஆரம்பமோ, முடிவோ உள்ள எதுவும் எல்லையற்றதாகவோ, நித்தியமானதாகவோ இருக்க முடியாது. R. P. 143.

(5) அது ஒன்றல்லவெனின், அதை வேறெதுவும் சூழ்ந்திருக்கும். R. P. 144 a.

(6a) (அன்றியும் அது ஒன்றுயிருப்பதனல் அது முழுவதும் ஒரே தன்மையுடையதாயிருக்கிறது ; எனெனில் மாறுபட்டதாயிருந்தால், அது பலவாயிருக்குமேயொழிய ஒன்றுயிருக்காது).

(6) எனெனில் அது (எல்லையற்றதாக) உளதானல், அது ஒன்றுயிருத்தல் வேண்டும் ; எனெனில் அது இரண்டானல் அது எல்லையற்றதாயிருக்கமுடியாது ; எனெனில் அவை அப்போது ஒன்றையொன்று கட்டுப்படுத்துவனவாய் அமையும். R. P. 144.

(7) ஆகவே அது நித்தியமானதாகவும், எல்லையற்றதாகவும், ஒன்றேயாகவும், முற்றிலும் ஒரே தன்மையுடையதாகவும் இருக்கிறது. மேலும் அது அழியவோ, அல்லது அளவிற் கூடவோ மாட்டாது. அதற்கு நோவோ துன்பமோ ஏற்படுவதில்லை. ஏனெனில் இவற்றுள் எதாவது ஒன்று அதற்கு ஏற்படுமாயினும் அது ஒன்றாக இருக்க முடியாது. ஏனெனில் அது மாற்றமடைந்தால், சத்துப்பொருள் முற்றாக ஒரே தன்மையுடையதாக இருக்க முடியாது. ஆனால் முன்பிருந்தது இல்லாது போய் முன்பில்லாதது புதிதாக உண்டாதல் வேண்டும். சத்துப் பொருளானது பதாயிரம் ஆண்டுகளிற்றானும் ஒரு மயிரளவாவது மாற்றமடையுமானால், காலம் முடிவதற்குள் அது முற்றாய் அழிந்துவிடும் எனலாம்.

அன்றியும் அதனுள் நிலைமை ஒழுங்குதானும் மாற்றமடையும் என்பதும் சாதியமில்லை; ஏனெனில் முன்பிருந்த ஒழுங்கு அழிவதுமில்லை; முன்பில்லாத ஒழுங்கு புதிதாக உண்டாவதுமில்லை. ஆனால் அதிலுள்ள எதுவும் மாற்றமடையாமலும், அதனோடு எதுவும் சேராமலும், அதிலிருந்து எதுவும் கழிக்கப்படாமலுமிருந்தால், ஒரு சத்துப்பொருளின் ஒழுங்கு எவ்வாறு மாற்றமடைதல் கூடும்? ஏனெனில் எதாவது பொருள் மாற்றமடையின், அஃது அதன் ஒழுங்கு மாற்றமடைவதற்குச் சமமாகும்.

அது நோவையும் அனுபவிப்பதில்லை; ஏனெனில் நோவுள்ள ஒரு பொருள் முற்றாக இருக்க முடியாது. நோவை அனுபவிக்கும் ஒரு பொருள் என்றுமுளதாக விராது; பூரணமாக விருக்குமொன்றைப் போனறளவு ஆற்றலும் அதற்கு இராது. அன்றியும் நோவை அனுபவிப்பதாயிருந்தால் அது முற்றிலும் ஒரே தன்மையுடையதாகவுமிராது. எதோவொன்று சேர்க்கப்பட்டதால் அல்லது கழிக்கப்பட்டதாலேயே அது நோவை அனுபவிக்கின்றதாதலால், அது முற்றிலும் ஒரே தன்மையுடையதாயில்லை. பூரணமாயிருக்கின்ற எதுவும் நோவை உணரமாட்டாது. ஏனெனில் அவ்வாறு அது உணரின், பூரணமாயும், சத்துப்பொருளாயும் இருந்ததும் அழிந்துபோம். முன்பில்லாதிருந்தது உண்டாகும். நோவைப்பற்றிய இவ்வாதங்கள் துன்பத்திற்கும் பொருந்துமென்க.

வெறுமையாகவும் ஒன்றுமில்லை. ஏனெனில் வெறுமையாயிருப்பது அதிரவியமே. அதிரவியமென்பது இருக்க முடியாது.

அது இயங்குவது மில்லை; ஏனெனில் அது செல்வதற்கு இடமெதுவுமில்லை. ஆனால் அது நிறைவுள்ளதாயிருக்கிறது. ஏனெனில் ஆங்கு எதுவும் வெறுமையாயிருந்தால் அது அவ்

வெறுமையுட் செல்ல முடியும். ஆனால் ஆங்கு வெறுமையாய் எதுவுமில்லையாதலால், அது செல்வதற்கு இடமெதுவும் இல்லை.

அது ஓரிடத்தில் திண்மையுடையதாகவும் பிறிதோரிடத்தில் ஐதானதாகவும் இருக்க முடியாது. ஐதாகவுள்ள எதுவும் திண்மையுடையதாயுள்ள வெதனிலும் பார்க்க வெறுமையான தாயிருக்கிறது. ஐதாகவுளளது திண்மையாகவிருப்பதைப்போல நிறைவுள்ளதாய் இருக்க முடியாது.

நிறைவாக இருப்பதிலிருந்து நிறைவில்லாது இருப்பதை நாம் இவ்வாறே இனங்கண்டுகொள்ள வேண்டும். ஒரு பொருளில் வேறு எந்தப பொருளுக்காவது இடமிருந்து அதை உட் சேர்த்துக்கொள்ள முடிந்தால், அது நிறைவுள்ளதல்ல. ஆனால் அதற்குள்ளே வேறு எந்தப பொருளையும் உட்சேர்த்துக்கொள்ள இடமில்லாதிருந்தால் அது நிறைவானதே. அதில் எதுவும் வெறுமையாயில்லாவிட்டால் அது நிறைவாகவே இருத்தல் வேண்டும். அது நிறைவானதாயிருந்தால் இயங்கமுடியாது. R. P. 145.

(8) அது ஒன்றுமட்டுமே எனபதற்கு இவ்வாதமே மிகச் சிறந்த நிரூபணமெனக ; ஆனால் பினவருவனவும் அதை நிரூபிப்பனவே. பல இருப்பின், அவை யாவும் ஒனறு எத் தன்மை படைத்ததென நான கூறினேனே, அத்தன்மையை உடையனவாகவே இருத்தல் வேண்டும். எனெனில் நிலமும், நீரும், காற்றும, தீயும, இரும்பும், தங்கமும் இருப்பின், அவற் றுட் சில உயிருள்ளவாயும் சில இறந்தனவாயும இருப் பின், பொருள்கள வெள்ளையாயும், கறுப்பாகவும், அவை எவ்வாறெல்லாமுள்ளனவென, மனிதர்கள் கூறுகின்றார்களோ, அவ்வாறெல்லாம இருப்பின், நாம காண்பவையும் நமக்குக் கேட்பவையும் சரியானால், இவை ஒவ்வொனறும் நாம் முன்பு தீர்மானித்ததுபோலவே இருத்தல் வேண்டும். அன்றியும் அவை மாறற முடியாதனவையாய் என்றும ஒரே தன்மை யுடையனவாய் இருத்தல வேண்டும். ஆனால் நாம் காண்பதும் கேட்பதும் அறிவதும சரியே என நாம் கூறினாலும், சூடா யிருபபது குளிர்கிறது எனவும் குளிர்ந்திருப்பது சூடாகிற து எனவும் நாம் நம்புகிறோம் ; கடினமாயிருப்பது மென்மை யுடையதாகவும் மென்மையாயிருப்பது கடினமானதாகவும் மாறு கினறனவென நம்புகிறோம் ; வாழ்வது இறக்கின்ற தெனவும் வாழாதிருப்பதிலிருந்து பொருள்கள் பிறக்கின்றன வெனவும் எண்ணுகிறோம் ; எல்லாப் பொருள்களும் மாறியுள்ளனவென வும அவற்றின் முந்திய தன்மைக்கும் இப்போதைய தன்

மைக்கும் இடையே எத்தகைய ஒற்றுமையும் இல்லையெனவும் நம்புகின்றோம். கடினமான பொருளான இரும்பு, விரலால் தொடுவதனால் தேய்ந்து போகிறது என நாம் எண்ணுகிறோம். நாம் திடமான பொருள்கள் எனக் கருதும் தங்கம், கல் என்பனவும் இவ்வாறே என நினைகிறோம். மேலும் மண்ணும் கல்லும் நீரிலிருந்து உண்டானவை என எண்ணுகிறோம். எனவே நாம் சத்துப் பொருளைக் காணவோ அறியவோ இல்லையெனபது தெளிவாகிறது. இப்பொருள்கள் ஒன்றோடொன்று பொருந்துவனவல்ல. தமக்கென உருவமும வலிமையும் உடைய நிதநியமான பொருள்கள பல உளவெனநாம் கூறியிருந்தாலும் அவை யாவும் மாறறமடைகினறன வெனவும் நாம் ஒவ்வொரு முறை பார்க்கும்போதும அவை வெவ்வேறு தன்மைகளையுடையனவாயிருக்கின்றன வெனவும் நாம் நினைக்கிறோம். ஆகவே நமது காட்சி பிழையென்பதும், இப் பொருள்கள் பலவென நாம் நம்பியது தவறென்பதும் தெளிவாகின்றன. சத்துப் பொருளகளாயிருநதால் அவை மாற்றமடையமாட்டா. ஒவ்வொரு பொருளும, அது எத்தன்மையது என நாம் எண்ணினோமோ அத்தனமையதாகவே இருந்திருக்கும் ; எனெனில் உண்மையான சத்துப பொருளிலும் வலிமையுடையது எதுவுமில்லை. ஆனால் அது மாறற மடைந்தாலும், முன்பிருந்தது, இலலாது போய்விட்டது ; முனபு இல்லாதிருந்தது உண்டாகியுள்ளது எனலாம். ஆகவே பல பொருள்கள் உளவாயின, அவை யாவும ஒன்றினது தன்மையையே உடையனவாயிருத்தல் வேண்டும். **R. P. 147.**

(9) அது இருப்பதனால், அது ஒன்றாகவே இருத்தல் வேண்டும். ஆனால் அது ஒனறனால் அதற்கு உடல் இருகக முடியாது ; எனெனில் உடலிருப்பின், பகுதிகளிலிருக்குமாதலால், அது ஒனறாயிருக்காது. **R. P. 146[2].**

(10) சத்துபபொருள் பிரிகசப்படுவதாயின், அது இயக்கமுடையது. இயங்குவதாயின் அது இருக்க முடியாது. **R.P. 144a[3].**

சத்துப்பொருள் பற்றிய கொள்கை

166. ஆரம்பத்தில் மெலிசசு ஈலிய மரபைச் சேர்ந்தவராக அல்லாதிருந்திருக்கலாம் எனபது மூன்னா குறிப்பிடபபட்டது. ஆனால் பார்மேடிசுவின் கொளகையில் குறிப்பிடத்தக்க ஒரே யொரு கருத்தைமட்டும் தவிர்த்து, வேனய யாவற்றையும், அவர் ஏற்றுகொண்டார் என்பதில் ஐயமில்லை. " அதிரவியம் என்பதில்லை " என்னும் பார்மேடிசுவின் கருத்தை மீண்டும் வலியுறுத்தியே அவர் தமது நூலை ஆரம்பித்திருக்கிறரெனத் தோன்றுகிறது (பகுதி **Ia**). மேலும் இக்கருத்தை ஆதரிக்கும் பொருட்டு அவர் தரும் வாதங்களும் நமக்கு ஏற்கெனவே அறிமுக

மாலிவை(பகுதி I). சத்துப் பொருள், பார்மீனிடிசு கூறியதைப் போல நித்தியமானதே. இக்கருத்தை மெலிசசு தலைக்கே உரிய முறையிற் கூறியுள்ளார். உண்டானவை யாவற்றிற்கும் ஓர் முதலும் முடிவும் உளவாதலால், உண்டாகாதவற்றிற்கு முதலும் முடிவுமில்லை யென அவர் வாதித்தார். நிறைவிதி எடுப்பொன்றை இவ்வாறு எளிய எதிர்மாற்றஞ் செய்ததுபற்றி அரித்தோதில் மெலிசசுவைப் பலமாகக் கண்டிக்கிறார். ஆனால் மெலிசசு இக்கருத்தை நம்பியதற்கு இந்நியாயமொன்றே ஆதாரம் எனக் கொள்ளலாகாது. சத்துப் பொருள்பற்றி அவர் கொண்டிருந்த கருத்து முழுவதுமே அது நித்தியமானது என அவரை எண்ணத் தூண்டியதெனலாம். சத்துப்பொருள் காலத்தைப் பொறுத்தவரையில் ஆதியும் அந்தமும் இல்லாதவொன்றுதலால் வெளியைப் பொறுத்தவரையிலும் கூட அது எல்லையற்றதாயிருத்தல் வேண்டும் என மெலிசசு அனுமானித்தாரென அரித்தோதில் கருதியது சரியாயிருந்திருந்தால், அது உண்மையில் நாம் கவனிக்க வேண்டிய வொன்றாயிருக்கும். ஆனால் அரித்தோதில் எப்பகுதியைப் பார்த்து இவ்வாறு பொருள் கொண்டாரோ அப்பகுதி எமக்கும் கிடைத் திருக்கிறதாதலால் (பகுதி 2) நாம் எமக்குத் தோன்றுகிறவாறு அதற்குப் பொருள் கொள்ளலாம். அப்பகுதியைப பார்க்கையில் அதிலுள்ள "எல்லையற்ற" என்னும் சொற்றொடர் "வெளியில் எல்லையற்ற" எனும் பொருள் கொண்டது என அரித்தோதில் எண்ணுவதில் நியாயம் எதுவுமில்லைப் போலத்தான்றுகிறது.

சத்துப்பொருள் எல்லையற்ற வெளியிலுள்ளது எனல்

167 காலத்தில் மட்டுமல்லாது வெளியைப் பொறுத்தவரையிலும் கூட சத்துப்பொருள் எல்லையற்றதே என்கையில் மெலிசசு பார்மீனிடிசுவின் கொள்கையிலிருந்து மாறுபடுகிறார் எனவே கூறவேண்டும். ஆனால் இவ்வாறு எண்ணுவதற்கு அவருக்குச் சிறந்தவோர் நியாயமிருந்ததாகையால், அவர் இத்தகைய அசாதாரணவாதத்தின் உதவி கொண்டு தனது கருத்தை நிறுவியிருக்க வேண்டியதில்லை. சத்துப் பொருள் கட்டுப்படுத்தப் பட்டதாயின் வெறிடத்தினூலேயே கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் என்பதே அவர் கூற்று. அரித்தோதில் மூலம் நாம் அறியும் இந்நியாயம், உண்மையில் பார்மீனிடிசுவின் கொள்கைக்கு மேற்பட்டவோர் வளர்ச்சியைக் குறிப்பதாகும். சத்துப்பொருளோர் முடிவுள்ள கோளமென அவர் கருதினர். ஆனால் இக்கொள்கையின் முழுவிவரங்களையும் காண்டல் இவருக்கு மிகச் சிரமமானவோர் காரியமாக இருந்திருக்கும். கோளத்திற்கு வெளியே அதிரவியமே உள்ள தெனவே அவர் கூற வேண்டியிருந்திருக்கும்; ஆனால் அதிரவியமென ஒன்றும் இல்லையென்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். எல்லை

யுள்ளவோர் கோளத்தைச் சூழ எல்லையற்ற வெற்றிட மில்லாது, கற்பனை செய்து பார்க்க முடியாது என்பதை மெலிசசு உணர்ந்தார்[1]; அவரும் இம்மரபைச் சேர்ந்த ஏனையவர்களைப் போலவே வெற்றிடம் என்பதை மறுத்திருந்தாராதலால் (பகுதி 7), சத்துப் பொருள் வெளியளவிலும் எல்லையற்றதே எனக் கூறவேண்டியிருந்தது (பகுதி 3). இக் கருத்தை அவர் ஏற்பதற்கு, அயோனிய சிந்தனை மரபோடு இவருக்கு இருந்த தொடர்பும் காரணமாயிருந்திருக்கலாம்.

சத்துப்பொருள் எல்லையற்றது என்பதிலிருந்து அது ஒன்றே என்பது பெறப்படுகிறது; எனெனில் ஒன்றல்லவாயின், அது பிறிதொன்றால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் (பகுதி 5). ஒன்று இருக்கையில அது முற்றிலும் ஒரே தன்மையுடையதாயிருத்தல் வேண்டும் (பகுதி 6 a). எனெனில் ஒன்றெனபதன் பொருள் அதுவே. ஆகவே சத்துப்பொருள் ஒன்றேயான, முற்றிலும் ஒரே தன்மையுடையதான உடலுள்ள பூரணம். அன்றியும் அது வெளியில் எல்லாற்றதாகவும் காலத்தில் எல்லை கடந்து முன்னும் பின்னும் விரிவதாயும் உள்ளது.

அயோனிய வாதிகளுக் கெதிரான கண்டனம்

168. ஈலியவாதம் எப்போதும் பிறகொள்கைகளை விமரிசனம் செய்வதாகவே அமைந்தது. அக்காலத்து நிலவிய ஏனைய மெய்யியற் கொள்கைகளைப் பற்றி மெலிசசுவின் கண்ணோட்டம் எவ்வாறிருந்தது என்பது பற்றியும் நம்மால் அறிய முடிகிறது. ஒன்றில், ஓரினவியல்பு முற்றுக விருக்கவில்லை எனக் கொள்ளும் இசைவின்மை அயோனிய கொள்கைகளில் உள்ள தவறென மெலிசசு காட்டினார். மேலும் அயோனிய மெய்யியலாளர்கள் யாவரும் மாற்றம் ஏற்படுதல் சாத்தியமென ஒப்புக் கொண்டனர். ஆனால் பொருள்கள் யாவும் ஒன்றின் மாறறம் என்பது ஒருவகையில் உண்டாதலும், அழிதலுமாயிருத்தல் வேண்டும். ஒரு பொருள் மாற்றமடையலாமென ஒப்புக்கொண்டால் அது நித்தியமானது என நிறுவமுடியாது. அனக்சிமாந்தர் போன்றோர் கூறியது போல, அதன் பகுதிகளின் ஒழுங்கிலும் மாற்றமேற்பட முடியாது. அத்தகைய மாற்றத்தின் போது எப்போதும் அழிதல், உண்டாதல் என்பன நடைபெறுகின்றன.

மெலிசசு அடுத்ததாகக் கூறும் விடயம் சற்று நூதனமானது. சத்துப்பொருளிலுல் துன்பத்தையோ நோவையோ உணரமுடியாதென அவர் கூறுகிறார்; எனெனில் இவை, சத்துப்பொருளிலிருந்து யாதேனும் கழிக்கப்படுவதால், அல்லது அதனோடு

1. சேனோவின் கொள்கைக்கும் இதற்குமிடையேயுள்ள வேறுபாட்டைக் கவனிக்க.

யாதேனும் சேர்க்கப்படுவதால் மட்டுமே உண்டாகின்றன. ஆனால் சதுப்பொருள் இவ்வாறு கூடுவதோ, குறைவதோ அசாத்தியம். இதற்கு என்ன பொருள் எனக் காண்பது எளிதான காரியமன்று. அனக்சகோரசு புலனுணர்வை விளக்குதற்கு உபயோகித்த கொள்கையே இங்கு கருதப்படுவதாயுமிருக்கலாம்.

பொதுவாக இயக்கமும், குறிப்பாக ஐதாதல், திண்மையடைதல் எனபனவும் அசாத்தியமே ; ஏனெனில் இவையிரண்டும் நடைபெறுவதாயின் வெற்றிடமிருத்தல் வேண்டும். இக்காரணத்திற்காகவே பிரிக்கப்படுந்தன்மையும் சத்துப் பொருளுக் கில்லையெனப்பட்டது. இவை பார்மீனடிசுவினுலும் உபயோகிக்கப்பட்ட வாதங்களே.

பைதாகரச வாதத்திற்கு எதிரான கண்டனம்

169. மெலிசசுவின் கொள்கையைப் பற்றிய விவரங்கள் யாவற்றிலும், அவர் சத்துப்பொருளானது உடலுள் பொருளே யென்பதை மறுத்தாரெனவே கூறப்பட்டிருக்கிறது. சிம்பிளிசியசு இக்கருததை நிரூபித்தறகெனவே மேற்கோளாகத் தந்துள்ள 9 ஆவது பகுதியைப் பார்ப்பின், இவ்வபிப்பிராயம் மேலும் உறுதியாக்கப்படும். ஆனல் ஆதி கிரேக்க மெய்யியல் பற்றிய எமது பொதுவான கருத்துச் சரியானதெனின், இக்கூற்று நம்பமுடியாத வொன்று போல் தோன்றும். " பார்மீனடிசுவின ஒன்று கருத்துப் பொருளாயிருந்தது; மெலிசசுவினதோ சடப்பொருட் சார்பானதாயிருந்தது " என அரித்தோதில் " பௌதிகவதீகம் " எனும் நூலிற் கூறியிருப்பதை நோக்குகையில் இக்கூறறைப்பற்றி எமக்கு மேலும் ஆச்சரிய முண்டாகிறது. ஆனல் சிம்பிளிசியசுவின் கையெழுத்துப் பிரதியில் உள்ளபடி, இப்பகுதியில் தரப்பட்டிருப்பது முற்றிலும் கற்பனையானவோர் உதாரணமே. எது வாயினும் இருப்பின் அது உடலுள்ள பொருளாகவும், ஒன்றுகவும் இருக்கவேண்டுமாகையால் பொருளகள் **உள்**ளமையை மறுப்பதே இதற்குப் பொருள் எனவே நாம் இயல்பாகக் கருதுதல் வேண்டும. ஆனல் இது மெலிசசுவினுலும் நம்பப்பட்டாலிய ஒனறைக் கருதுவதாக விருக்க முடியாது ; மேலும் இவ்வாதம் சொற்களைப் பொறுத்தவரையிலும் சேனோவின் வாதங்களி லொன்றைப் போல விருப்பதால், முடிவான அலகுகள் பறறிய பைதாகரச எடுகோளுக் கெதிராகவே இதுவும் தொடுக்கப்பட்டிருக்கிறதெனக் கொள்ளலாம. ஆனல் நாம இவ்வாறு கொள்வதற்குத் தடையேது மிருப்பின், அது இப்பகுதி பற்றி இரு முறை குறிப்பிட்டுள்ள சிம்பிளிசியசு, அதற்கு வழமைகமாகக் கொடுக்கப்படும் பொருளையே கொண்டார் என்பதேயாகும். ஆனல் அவ்வாறு அவர் பொருள் கொண்டது இயல்பாகவே எற்படக் கூடியவோர் தவறே. கி.மு. ஐந்தாம் நூற்றுண்டின் நடுப் பகுதியில் " ஒன்று " எனும் சொல்லிற்கு இரு பொருள்கள்

வழங்கின ; அச்சொல் சத்துப்பொருள் முழுவதையுமோ அல்லது வெளியின் அலகான புள்ளியையோ கருதிற்று. முதலாவது பொருளில் அதை நிறுவுதற்கு, ஈலிய வாதிகள் இரண்டாவது பொருளில் அதை மறுக்கவேண்டியிருந்தது. ஆகவேதான் தாம் மறுத்த பொருளில் "ஒன்று" எனக் குறிப்பிட்டபோதும் சிலவேளைகளில் அது அவர்கள் ஆதரித்த பொருளில் உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது. சேஞ்ஞை "ஒனறை" மறுத்த பகுதி பறறியும் இப்பிரச்சினை வற்பட்டதை நாம் பார்த்தோம்[1].

அனக்சகோரசுவுக் கெதிரான கண்டனம்

170. மெலிசசுவின் பகுதிகளில் மிகவும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கது அவரது கடைசிப் பகுதியேயாகும் (பகுதி 8). அது அனக்சகோரசுவுக் கெதிரானதாகத் தொடுக்கப்பட்டது போலத் தோன்றுகிறது. அப்பகுதியின் சொற்கள் அவரைக் குறிப்பனபோலவே தோனறுகின்றனவெனலாம். எமது புலன்கள் எமக்குக் காட்டுபவை தமது கொள்கைக்கு முரணுயுள்ளனவென அனக்சகோரசு ஒப்புக்கொளகையில் (பிரிவு 137) இதற்குக் காரணம் அவறறின் வலுவற்ற தன்மையேயென அவர் கூறியிருந்தார். அவர் இவ்வாறு ஒப்புக்கொண்டதைப் பயன்படுத்திக்கொண்டு, சத்துப் பொருளைப் பற்றிப் புலன்கள் கூறுவதை நாம் நம்பாவிடின், நாம் ஈலியவாதத்தை நிராகரிக்க முடியாதென மெலிசசு கூறுகிறார். உள்ளவை பலவென நாம் அனக்சகோரசுவோடு ஒப்புக்கொள்வோமாயின், அவை ஒவ்வொன்றும் ஈலியவாதிகள் கூறும் ஒன்றைப் போல விருத்தல் வேண்டும் என அவர் வியக்கத்தக்க புத்திக்கூர்மையோடு சுட்டிக்காட்டினார். அதாவது இசைவுள்ள ஒரேயொரு பனமைவாதம் அணுவாதமே யென்க.

அரித்தோதிலின் கண்டனங்கள் காரணமாக மெலிசசு மிகக்குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளார். அவரது வாதத்தின் முற்பகுதியிலுள்ள போலியான எதிர்மாற்றத்தை வைத்துக் கொண்டே அரித்தோதில் தமது படாடோபமான கண்டனங்களை எழுப்பினார் என நாம் ஏற்கெனவே பார்த்தோம். எதிர்மாற்ற விதிகள் பற்றி மெலிசசு எதுவும அறிந்திருக்கவில்லை. அவர் தனது கொள்கையை மாற்றுமலே அதை அப்பழுக்கற்ற நியமமுடையதாக்கியிருக்கலாம். ஈலியவாதக் கொள்கைகளை முறைப்படுத்திய பெருமை இவரையே சாரும். அத்துடன் பன்மைவாதிகள் உணர்வதற்கு முன்னரே, பொருள்கள் பலவென்னும் கொள்கையை எவ்வாறு இசைவின்மை இன்றி அமைக்க முடியும்

1. 159 ஆம் பிரிவை பார்க்க.

என்பதைக் கண்டவரும் அவரே[1]. மூலப் பொருள் ஒன்றே யெனப் போதித்த "சோபிட்டுகள்" மெலிசசுவின் கொள் கையை நிலைநாட்டினர்" என இப்போகிரத்திசுவின் மருகனை பொலிபோசு குற்றஞ்சாட்டினர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

1. பொதுவாக சலியவாதிகளையும், குறிப்பாக மெலிசசுவையும் மதிக்காமல், அவர்களுடைய கொளகையையும் பெரிதும் தவருகப பொருள் கொண்டவரான அரித்தோதிலுக்குப பினவந்தோர் ஒப்புக்கொண்ட கதையே மெலிசசு ஆற்றலற்றவர் எனபது.

அத்தியாயம் 9

மிலட்டசுநாட்டு லியூகிப்போசு

லியூகிப்போசும் தெமோகிரித் தோசும்

171 மைலீசிய மரபு அனக்சிமினிசுவுடன முடிவடையவில்லை என நாம் கண்டோம் (பிரிவுகள் 31, 122). தேலிசுவிஞல் முதலில் எழுப்பப்பட்ட விஞவிற்கு மிகவும் பூரணமான விடையளித்தவரும் ஒரு மைலீசிய சிந்தனேயாளரே என்பது குறிப்பிடத் தக்கது.[1] ஆஞல லியூகிப்போசு என ஒருவர் இருந்தாரோ வென்பது பற்றியும் சந்தேகிக்கப்பட்டுள்ளது எனபதும் உண்மையே. இப்பெயருடைய மெய்யியலாளர் எவரும் இருகக்வில்லை யென எபிகூரசு கூறியதாக நாம் அறிகிறேம். சமீபகாலத்திலும் அவரது கூற்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆஞல் அரித்தோதிலும் தியோபிறசுத்தோசுவும், அணுவாதம் இவராலேயே தோற்றுவிக்கப்பட்டதெனக் கூறினர். இவ்விடயத்தில் அவர்கள் பிழை விட்டிருப்பார்கள் எனக் கொள்ள முடியாது. அரித்தோதில் தெமோகிரித்தோசுவைப் பற்றி விசேட ஆர்வத்தோடு ஆராய்ந்தார். அணுவாத மரபு தோன்றிய ஊராகிய அபுதேராவும் அவரது பிறந்தவூரான தாகெய்ரோசுவும் அணித்தாய் இருந்தன.

லியூகிப்போசு பற்றிய இப்பிரச்சினை தெமோகிரித்தோசுவின் காலம் பற்றிய பிரசினேயுடன் சேர்த்தே ஆராயப்படவேண்டும். அனக்சகோரசு வயோதிபராயிருந்த காலத்தில் தான் இளைஞனாயிருந்ததாகத் தெமோகிரித்தோசு கூறியுள்ளார். அவர் சிறப்புடன் விளங்கிய காலமென அப்பொலோடரசு குறிப்பிடும் கி. மு. 420 ஆம் ஆண்டுக்குச் சற்று முனனராகவேதான் தெமோகிரித்தோசு தமது மரபை அபுதேராவில் ஆரம்பித்திருக்க

[1]. இவர் ஒரு ஈலியர் அல்லது மைலீசியா எனத் தியோபிறசுதோசு கூறுகிறார். சிலர் இவர் ஓர் ஈலியர் எனவும் வேறு சிலர் இவர் ஓர் அபுதேரைறறு வெனவும் கூறினர் என இடையோசினிசு கூறுகிறார். பைதாகரசவாதிகளது பிறந்தவூர்கள் பறறிய சநதேகங்கள (7 ஆம் அத. 298 ஆம் பக. கு.1) போனறவை இக்கூறறுக்கள. வேறு சிலர் லியூபிபோசு ஒரு மீலியர் எனக் கருதினரெனவும் இடையோசினிசு கூறுகிறார். இதுவும் பலரை ஆட்கொண்டவோர மயக்கமாகும். மீலோசுநாட்டு டயாகரசு ஓர் மைலீசியரென ஈத்தியோசு கூறுகின்றார். லியூகிப்போசு எக்காரணததிறகாக ஈலியர் என அழைக்கபபட்டாரோ அககாரணததிற் காகவே தெமோகிரிதோசு சிலரால் மைலீசியா என அழைக்கப்பட்டார். எரொடோதசு தன்னை ஒரு அலிகரநாசியன எனக் கருதினாரோ அல்லது தெளரியன எனக கருதினாரோ எனும சந்தேகமும் இத்தகையதே யென லாம்.

வேண்டுமென்பது இதிலிருந்து பெறப்படுகிறது.[1] அப்பொலோனிய நாட்டு இடையோசினிசு வென்பார் தமது கருத்துக்களிற் சிலவற்றை அனக்சகோரசுவிடமிருந்தும் வேறு சிலவற்றை லியூகிப்போசுவிடமிருந்தும் பெற்றாரெனத் தியோபிறசுத்தோசு கூறுகிறார். அப்படியாயின் இடையோசினிசுவின் நூலிலும் அணுவாதக்கொள்கையின சாயைகள் இருந்திருக்க வேண்டும். மேலும் கி. மு. 423 ஆம் ஆண்டுக்கு முன்னரே எழுதப்பட்டதான அரித்தோபெனிசுவின் "மேகங்கள்" எனும் நூலில் இடையோசினிசுவின் நூல் நையாண்டி செய்யப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கி. மு. 423 ஆம் ஆண்டிற்கு முன்னரே லியூகிப்போசுவின் நூல் அறிமுகமாகியிருந்ததென்பது பெறப்படுகிறது. அந்நூலெது வென்பதையும் நாம் தியோபிறசுத்தோசுவின் மூலமாக அறிகிறோம். தெமோகிரித்தோசுவினுடையதென வழக்கமாகக் கூறப்படும் பேரண்டவியல் எனும் நூலே அதுவென்க. ஆகவே தெமோகிரித்தோசுவினுடையவை எனப் பிற்காலத்திற் கருதப்பட்ட பிற நூல்களும் உண்மையில் அபுதேரா மரபினைச் சேர்ந்தனவே என்பதும் பெறப்படுகின்றது. அப்படியாயின் அம்மரபைத் தோற்றுவித்தவரான லியூகிப்போசுவின் நூல்களும் அவற்றுட் சில இருந்திருத்தல் வேண்டும். இப்போகிறத்திசுவின் பெயரில் எமக்குக் கிடைத்துள்ள நூற்றொகுதியைப் போன்றவையே இவையும் எனக் கூறலாம். அத்தொகுதியிலுள்ள பல்வேறு நூல்களின் ஆசிரியர்களது பெயர்களே அறிதல் எவ்வாறு இயலாதாயிருக்கிறதோ, அவ்வாறே இந்நூற் றொகுதியின் ஆசிரியர்களது பெயர்களைப் பற்றியும் முடிவு செய்தல் சிரமமாயிருக்கிறதெனலாம். லியூகிப்போசு ஒரு ஈலியர் எனச் சில நூல்களிற் குறிப்பிடப்பட்டிருந்ததெனத் தியோபிறசுத்தோசு கூறுகின்றார். முன்பு வேறோர் மெய்யியலாளரது பிறப்பிடம் எதுவென்பதுபற்றி வேறுபட்ட மயக்கமே இங்கும் எற்பட்டதெனக் கொள்வதாயின், லியூகிபபோசு ஈலியாவிற் குடியேறியிருந்தார் எனவே நாம் கொள்ளுதல் வேண்டும்[2]. கி. மு. 450–49 ஆம் ஆண்டில் மிலட்சில் நடைபெற்ற புரட்சிக்கும் அவர் அங்கிருந்து வெளியேறியதற்கும் தொடர்பிருக்கலாம். இவர் பார்மனைடிசுவின் கழகத்தின் அங்கத்தவராயிருந்தார் எனத் தியோபிறசுத்தோசு

1. டியல்சு சொல்வதுபோல, தெமோகிரித்தோசு எழுதிய காலத்தில் அனக்சகோரசு காலமாகிவிட்டாரெனவே இக்கூறறிற்குப பொருள் கொள்ள வேண்டும் போலத தோன்றுகிறது. இதனாலேயே, இவா சிறபபுடன் விளங்கிய காலம் அனகசகோரசுவிற்கு 40 ஆணடுகளின் பினனரே யென அப்பொலோடரசு கருதினார் போலும்.

2. 341 ஆம் பக்கக் குறிபபைப பார்க்க.

தெளிவாகக் கூறுகிறார். மேலும் அக்காலத்தும் பார்மீனிடிசுவே அக்கழகத்திற்குத் தலைமை வகித்தாரெனபதும் தியோபிறசுத்தோசுவின் வார்த்தைகளிலிருந்து பெறப்படுகிறது. டியோட்டோ தரும் காலமானத்தை ஏற்றுக்கொண்டால், இது உண்மையென்பது புலனாகும். லியூகிப்போசு சேனோவிடம் பாடம் "கேட்டா" ரெனவும் தியோபிறசுத்தோசு கூறியுள்ளார் போலத் தோன்றுகிறது. இது நம்பக்கூடியவொனறே. எப்படியாயினும் இவரது சிந்தனை முறையில் சேனோவினது செல்வாக்கு மறுக்க முடியாதளவிறகுப படிந்திருந்ததென்பதை நாம் பார்ப்போம். எம்பிடோக்கிளிசு, அனக்சகோரசு எனபாருகும் லியூகிப்போசுவுக்கும் இடையே எத்தகைய தொடர்பு இருந்ததென்பதையும இலகுவாக நிர்ணயிக்க முடியாது. இவ் விருவருடைய கொள்கைகளிலும அணுவாதத்தின் சாயல்கள் காணப்படுகின்றன வெனபதும லியூகிப்போசு என ஒருவர் உண்மையில இருந்தாரெனபதற்கு ஆதாரமாகக் கொள்ளப படுகிறது ; ஆனால் லியூகிப்போசு இருந்தது பறறிய உண்மையை நம்புவதற்கு இத்தகைய நியாயங்கள் எவையும் உண்மையில் அவசியமில்லை எனலாம். எம்பிடோக்கிளிசு லியூகிப்போசுவின் கொள்கைகளின் செல்வாக்குக்குட்பட்டிருந்தார் எனபதற்கு ஆதாரமான முக்கிய கருத்து "நுன்ரெளைகள்" பற்றிய கொள்கையிலிருந்து பெறப்பட்டதாகும். ஆனால் இக்கொள்கை உண்மையில் அனுக்மையோனிடமிருந்தே தோன்றியது என நாம் அறிவோமாதலால், எம்பிடோக்கிளிசுவிடமிருந்தே லியூகிப்போசு இக்கொள்கையைப் பெற்றார் என நம்ப இடமுளது. அன்றியும் அனக்சகோரசுவுக்கு லியூகிப்போசுவின கொள்கைளப பற்றித் தெரிந்திருந்தது எனக் கருதவும் இடமிலலை எனக் கூறலாம். வெற்றிடம் எதுவும் இல்லையென அவர் கூறினார் என்பது உண்மையே. ஆனால் அணுவாதப் பொருளில் யாராயினும் இக்கொள்கையை அதற்கு முன் நிறுவ முயன்றனர் எனறும் கூற முடியாது. ஆதி பைதாகரசவாதிகள் வெற்றிடம் எனபது பற்றிக் கூறியிருந்தனர். ஆனால் அவர்கள் வளிமண்டலக் காறறுக்கும் வெற்றிடத்திறகும் வேறுபாடிருப்பதை அறியாதிருந்தனர் ; அன்றியும், கிளைப்சைட்ரு, காற்று நிறைக்கப்பட்ட தோற்பைகள் எனபனவறறின மூலம் அனக்சகோரசு நடாத்திய பரிசோதனைகள் பைதாகரச கொள்கையை மறுக்கும் நோக்கத்துடன் நடத்தப்பட்டவையாயிருத்தல் வேண்டும்[1]. அன்றேல் அவை பயனற்றனவாகி விடுகின்றன. உண்

1. 6 ஆம் அத். 131 ஆம் பிரிவையும் 7 ஆம் அத். 145 ஆம் பிரிவையும் பார்க்க.

மையில் லியூகிப்போசுவை மறுக்க விரும்பியிருந்தால், அனைச் கோரசு முற்றிலும் வேறுவகையான பரிசோதனைகளை உபயோகித் திருக்க வேண்டும்.

அணுவாதக் கொள்கை மூற்றித் தியோ பிறசுத்தோசு

172. அப்பிராயங்கள் எனும் தனது நூலின் முதற்பகுதி யில் தியோபிறசுத்தோசு லியூகிபோசு பற்றிப் பின்வருமாறு கூறினர். "ஈலியா அல்லது மிலட்டசுவைச் சேர்ந்த லியூகிப் போசு (எனெனில் அவரைப் பற்றி இரண்டுவிதமாகவும கூறப் பட்டிருக்கிறது) மெய்யியல் வாதி எனும் முறையில் பார்மீனி டிசுவுடன் தொடர்பு பூண்டிருந்தார். ஆயினும் பொருள்களை விளக்கும் முறையில் அவர் பார்மீனடிசு, செனோபனிசு போன்றோர் பின்பற்றிய வழியே செல்லவில்லை. உண்மையில் இவாகளுக்கு முற்றிலும் எதிராான ஒரு வழியையே அவர் பின்பற்றினர் எனவே தோனறுகிறது (R. P. 185.). எல்லாம் என்பது ஒன்றெனவும், சிருட்டிக்கப்படாதெனவும், எல்லை யுள்ளதெனவும் அவர்கள் கூறினர். அன்றியும் இப்பொருள் பற்றிச் சிந்திக்கவும் முடியாதென அவர்கள கூறினர். ஆனல் லியூகிப்போசு எண்ணிறந்த, இடைவிடாது இயங்கிக் கொண்டிருக் கும் அணுக்கள் உள்ளனவெனக் கூறினர். அவை எண ணற்ற வடிவங்களையுடையனவெனவும் அவர் கூறினர். இவை ஒரு குறிப்பிட்ட வடிவத்தையுடையனவாயே இருத்தல் வேண்டும் எனக் கொள்வதறகு எவ்வகை நியாயமுமில்லையென அவர் கருதியதும், உலகில் இடைவிடாது புதிய பொருள்கள் தோன்றுவதும், அவை மாறுதலடைவதும், நடைபெறுகின்றன என அவர் கண்டதுமே, இவ்வாறு அவர் கூறியதற்குக் காரணங் கள் என்க. மேலும், உள்பொருள், இல்பொருளை விட எவ் வகையிலும் கூடிய மெய்மையுடையதன்று எனவும் இவை யிரண்டுமே புதிதாக உண்டாகும் பொருள்களுக்குக் காரணங்க ளாகலாம் எனவும் அவர் கூறினர்; அணுக்களின் உட்பொருள் செறிவும நிறைவுமுடையதெனவும் அவையே உட்பொருள் எனவும் அவர் கூறினர். வெற்றிடத்திலேயே அணுக்கள் இயங் கினவெனவும் இல்பொருளான இவ்வெற்றிடம், உட்பொருள் எவ்வளவு மெய்ம்மையுடையதோ அவ்வளவு மெய்மையுடைய தெனவும் அவர் கூறினர்". R. P. 194.

ஈலியவாதி களும் லியூகிப் போசுவும்

173. லியூகிப்போசுவுக்கும் ஈலிய மரபிற்குமிடையே தொடர் பிருந்ததெனத் தியோபிறசுத்தோசு குறிப்பிட்டுள்ள போதும், முதல் நோக்கில் அவரது கொள்கை பார்மீனடிசுவினதுக்கு முறறிலும் எதிரானதேயெனச் சுட்டிக்காட்டுகிறார் என்பது கவ னிக்கப்பட்டிருக்கலாம். இதைத்தொடர்நது பலர் லியூகிப்போசு ஈலிய மரபோடு தொடர்பு கொண்டவர் என்பதை முற்றுக மறுக்க

மூயன்றுள்ளனர். இவ்வாறு அவர்கள் மறுத்ததற்குப் பார்மீனடிசுவின் கொள்கை " பௌதிகவதீத " வியல்புடையதென அவர்கள் கருதியதும், அணுவாதம் போன்ற வொரு விஞ்ஞான நீதியிலமைந்த கருதுகோள "பௌதிகவதீக"க் கொள்கையொன்றிலிருந்து தோன்றியிருக்கும் என ஒப்புக்கொள்ள அவர்கள் விரும்பாமையுமே காரணங்கள். ஆனால் இது வெறும் மூற்கோட்டமேயென்க. மேலும் முதல் நோக்கில் தோன்றுமளவிற்கு இவற்றிறகிடையே வேற்றுமை இருந்ததெனத் தியோபிறசுத் தோசு கருதினர் எனவும் நாம் கொள்ளலாகாது[1]. ஆதி டிரேக்க மெய்யியல் வரலாற்றில் இதுவே மிகவும் முக்கியமான விடயமாதலாலும், நன்றுக விளங்கிக் கொண்டால், இவ்வரலாற்றையே அறிதற்கு இது வழியாக உதவுமாதலாலும், இக்கொள்கையின் வரலாறறுத் தொடர்பை நன்றுக விளக்கும் வகையில் அமைந்துள்ள, அரிததோதிலால் எழுதப்பட்ட பகுதியொன்றை இங்கு தருதல் நன்மைபயக்கும்.

" இயல்பாக எது முதல் வருகிறதோ அதனையே தமது தொடக்கநிலையாகக் கொண்டு, ஒரே கொள்கையின் மீதமைந்த, கிட்டத்தட்ட ஒரே தன்மையான முறையைக் கையாண்டே லியூலிப பொசுவும் தெமோகிரிதோசுவும் எல்லாவிடயங்களைப் பற்றியும் முடிவு செய்துள்ளனர். முந்திய சிந்தனையாளர்களிற் சிலர் சத்துப் பொருள ஒனறுகவும், இயக்கமற்றதுமாகவே இருக்க முடியும் எனக் கூறியிருந்தனர்; எனெனில் வெறறிடம் மெய்ம்மையுடையதல்லவெனவும், சடப்பொருளல்லாத வெற்றிடமின்றி இயக்கம் எற்பட முடியாது எனவும் அவர்கள் கருதினர். மேலும பொருள்களைப் பிரிக்கும் வகையில் அவற்றிற் கிடையில் ஒன்றுமில்லையாதலால், பொருள்கள ஒன்றுக்கு மேற்பட்டவையாயும் இருக்க முடியாது என அவர்கள் கூறினர். எல்லாம் என்பது பலவெனவும், ஒன்றலலவென்றும் வெற்றிட மூளதென்றும் கூறுவதற்குப் பதிலாக, அது தொடர்புடைய தொன்றல்ல, ஒன்றை யொன்று தொடுவனவாயுள்ள பகுதிகளைக கொண்டதேயென யாரும் கூறினும் நிலைமையில் மாற்றம் எதுவுமில்லை. எனெனில் அஃது எவ்விடதிலும் பிரிக்கப்படக் கூடியதாயினை, இருப்பது ஒன்றல்ல. ஆகவே பலவுமல்ல.

1. கொம்பாசுவின, " டிரேக்க சிநதனையாளர் " எனும நூலில இம்முற கோட்டம புகுந்திருபபதை நாம் காணலாம. சற்றே கற்பனை சேர்நததாயினும மிகவும் சுவையான இநநூலின மதிபபு இதன் காரணமாகச் சிறிது குறைநது விடுகிறது எனலாம். இதே கருதகதுடனேயே பரீகா எனபார், சோகிரதருக்கு முந்தியவாகளில அனக்சகோரசுவே இறுதியானவர் எனும் கொள்கை இறையியற் கற்பிதங்களினால் எற்பட்ட தெனக கூறுகிறர் என்பதும் சுவையான வோர் விடயமாகும்.

முழுமை வெறுமையானதே (சேனை) ; அப்படியல்லாமல் அஃது ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே யொழிய பிற இடங்களில் பிரிக்கப்படக்கூடியதல்லவெனின், அது எவ்வித நியாயமுமின்றி நாம் கூறும் கற்பனைக் கதை போலாகிவிடுமெனலாம். ஏனெனில் முழுமை எக்காரணத்திற்காக, எனைய பகுதிகளில் தனித் தனியாகப் பிரிகக கூடியதாயிருக்கையில், சில பகுதிகளில் தொடர்புடையதாகவும் நிறைவுடையதாகவும் இருக்கவேண்டும் ? இவ்வாறு தொடர்பும் நிறைவுமுளள பகுதி எங்கே முடிவடைகிறது ? இதே காரணங்களுக்காகவே இயக்கமும் சாத்தியமில்லையெனக் கூறப்படுகிறது. இந்நியாயங்களின் முடிவாக, புலன்கள் தரும் அறிவிலும் பார்க்க வாதங்களைத் தொடர்தலே நன்று எனும் கருத்துடன, புலனறிவுக்கு அப்பாற் சென்று, எல்லாம் எனபது இயக்கமற்ற ஒனறு எனக் கூறுகினறனர் (பார்மனைடிசு). வரைவு என எதுவுமிருப்பதாயின் அதைச் சூழ வெற்றிடமிருக்க வேண்டுமாதலால், அது முடிவற்றதே யென அவருட சிலா கூறினர் (மெலிசசு) . இதுவே உண்மை பற்றி அவர்கள் தெரிவித்த அபிப்பிராயம் ; இவ்வபிப்பிராயத்தை அவர்கள் அடைந்ததறகான நியாயங்களும் இவையே. இந்நியாயங்களைப பொறுத்தவரையில இம்முடிவு அவற்றிலிருந்து பெறப்படுவதே. ஆனால நோவுகளை நாம் பாபபோமானால, இத்தகைய ஒரு கொளகையை ஏற்றல புத்தி பேதலித்தோரது செயல்போலத் தோன்றும். புத்தி பேதலித்தோருள்ளும் தீயும், பனிக்கட்டியும் ஒனறே யெனக் கூறுமளவிறகு அறிவை இழந்தோர் யாரும் இருக்க மாட்டார். சரியாய் உள்ளனவறறிற்கும் பழக்கம் காரணமாகச் சரியெனத் தோன்றுபவற்றுக்குமிடையே மட்டும், சிலர் தமது பேதமை காரணமாக, மயக்கமடைதல் கூடுமென்க.

ஆனால் லியூசிப்போசு புலனறிவோடு இசைவுள்ளவோர் கொள்கையைத் தாம் கொண்டதாகக் கருதினர். ஆதல, அழிதல், இயக்கம், பன்மை என்பனவற்றை அவர் மறுததவர் அலலர். புலனனுபவத்தின் இவ்வம்சங்கள் சரியெனவே அவர் கூறினர். அன்றியும் ஒனறு பறறிக் கூறியவர்கள் கருதியதுபோல, வெற்றிடமின்றி இயக்கம் ஏறபடமுடியாதெனவும், வெற்றிடம் மெய்ம்மையானதல்ல வெனவும் சத்துப் பொருளின் எப் பகுதியும் மெய்ம்மை யற்றதல்ல வெனவும் அவர் ஒப்புக் கொண்டார். " ஏனெனில் உண்மையில சத்துப்பொருளெனப் படுவது முற்றிலும் பூரணமான வொன்றாய் இருத்தல் வேண்டும் ; ஆனால் பூரணம் ஒன்றுமட்டுமல்ல. இதற்கு எதிர்மாறாக, எண்ணிறந்தனவாய் உள்ள இவை அளவிற் சிறியனவாகையால் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கின்றன. அவை வெற்

றிடத்தில் இயங்குகின்றன (எனெனில் வெற்றிடமுளது) ; இவை ஒன்று சேர்வதனால் பொருள்கள் உண்டாகின்றன. இவை பிரிவதனால் பொருள்கள் அழிகின்றன" என லியூகிப்போசு கூறினார்.

இப்பகுதியில் சேனே, மெலிசசு என்போரது பெயர்கள் தரப்படவில்லையாயினும் அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதில் ஐயமில்லை. பைதாகரசவாதிகளுக் கெதிராகச் சேனே வினால் தொடுக்கப்பட்ட வாதம் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. சத்துப் பொருள் முடிவற்ற தெனக் கூறிய ஈலியவாதி மெலிசசு ஒருவரே யென்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள வொரு விடயமாகும். ஆகவே அணுவாதத்தின் தோற்றம், அதற்கும் ஈலியவாதத்துக்குமிடையேயுள்ள தொடர்பு என்பனவற்றைப் பின்வருமாறு நாம் விளக்கினால் அது அரித்தோதிலின் கூற்றேடும் பொருந்துவதாயமையும் எனலாம். மூடிவின்றிப் பிரிக்கப்படுந் தன்மை பற்றிய தனது வாதத்திற்கெதிராக அக்காலப் பன்மைவாதக் கொள்கைகளையும், குறிப்பாக பைதாகரசவாதத்தையும் நிறுவமுடியாது எனச் சேனே காட்டியிருந்தார். அனக்சகோரசுவுக்கு எதிராக மெலிசசு இதே வாதத்தை உபயோகித்தனர். அனறியும், பொருள்கள் பலவாயின் அவை ஒவ்வொன்றும் ஈலியவாதிகள் வருணித்த ஒன்றைப் போல விருத்தல் வேண்டும் எனும் பொருந்தாமுடிவு ஏற்படுவதையும் காட்டினர். இதற்கு லியூகிப்போசு "ஏன் அவ்வாறிருத்தல் இயலாது ?" எனக் கேட்பதன் மூலம் விடை பகர்கிறார். பிரிக்கப்படுந்தன்மைக்கு ஒரு வரைவு காட்டுவதன் மூலம் சேனேவின் வாதத்தின் வலுவை ஒப்புக்கொண்ட லியூகிப்போசு, அவ்வாறு தான் பெற்ற "அணுக்கள்" ஈலியவாதிகளது ஒன்றின் தன்மைகள் யாவற்றையும் பெற்றிருந்தனவெனக் கூறினர். ஏனெனில் அஃது உளதாயின், இப்பண்புகள் யாவற்றையும் அது பெற்றிருத்தல் வேண்டும் எனப் பார்மனைடிசு காட்டியிருந்தார். அரித்தோதிலது பௌதிகம் எனும் நூலின் பகுதியொன்றிலும் இக்கருத்துத் தோன்றும்படி எழுதப்பட்டிருகிறது. அப்பகுதி பின்வருமாறு : "சிலர் இரு நியாயங்களுக்கும் இணங்கினர். இல்லாதனவும் மெய்ம்மையுடையனவே எனக் கூறுவதன் மூலம், இருப்பது ஒன்றேயென்னும் முதலாவது வாதத்தோடு (பார்மனைடிசு) இசைந்து கொண்டனர். பிரிக்கப்படமுடியாத அளவுகளைத் தமது கொள்கையிற் புகுத்துவதன்மூலம் கவர்பாட்டிலிருந்து பெறப்பட்ட வாதத்தோடும் (சேனே) சமாதானம் செய்து கொண்டனர்." இவ்விடயத்தை இவ்வாறு நோக்குவதன் மூலம் மட்டுமே, லியூகிப்போசு, தெமோகிரித்தோசு என்போரும் பைதாகரவாதிகளும் எண்களிலிருந்தே பொருள்கள் யாவற்றையும் உண்டாக்கினர் என அரித்தோதில்

வேறோரிடத்தில் கூறுவதற்கும் பொருள் காண முடிகிறது, உண்மையில் பைதாகரச மொனூட்டுகளுக்கு லியூகிப்போசு பார்மனிடிசுவின் ஒன்றன் தன்மையை அளித்தாரென்க.

அணுக்கள்

174. அணு, கணிதவியற்படி பிரிக்க முடியாததல்ல என்பதை நாம் கவனித்தல் வேண்டும். எனெனில் அது பருமனுடையது. ஆனால் அதை உண்மையிற் செயலில் பிரித்தல் முடியாது. எனெனில் பார்மனிடிசுவின் ஒனறினைப்போல அதனுள்ளே யும் வெற்றிடமெதுவும் இல்லை[1]. எல்லா அணுக்களும் பரப் புடையன. யாவும் ஒரே தன்மையான உட்பொருளுடையன. ஆகவே பொருள்களில் உள்ள வேற்றுமைகளுக்கு அணுக்களின் வடிவத்திலும் அவற்றின் ஒழுங்கிலும் உள்ள வேற்றுமைகளே காரணமாயிருத்தல் வேண்டும். பொருள்களில் வேற்றுமைக்குக் காரணமாகும் வடிவம், நிலை, ஒழுங்கு என்பன ஏற்கெனவே லியூகிப்போசுவிற்குத் தெரிந்திருந்தன. எனெனில் அரித்தோ தில் இவைபற்றிக் குறிப்பிடுகையில் லியூகிப்போசுவின் பெயரை யும் குறிப்பிடுகின்றார். அணுக்கள் "உருக்கள்", "உருவங் கள்" என அழைக்கப்படுவதற்கான—இவை பைதாகரசவாதி கள் உபயோகிக்கும் வார்த்தைகளே யென்க—காரணமும் இத னால் விளக்கப்படுகிறதெனலாம். முன்னுரையில் (பிரிவு 7) "புசிசு" எனும் கிரேக்க சொல் பற்றிக் கூறப்பட்டிருப்பதை நோக்குவோமானால், அணுக்கள் ஏன் அவ்வாறு அழைக்கப் பட்டன என்பதையும் விளங்கிக் கொள்ளலாம். இப்போது குறிப்பிடப்பட்ட நிலை, ஒழுங்கு, வடிவம் என்பனவற்றின் வேற் றுமைகளாலேயே "முரண்பாடுகள்" விளக்கப்பட்டன. அனக் சகோரசு கருதியது போல "முரண்பாடுகள்" அணுக்களின் தொகுதிகளாகவே கருதப்பட்டன.

வெற்றிடம்

175. நிறைவு, வெறுமை என்பன உளவேயென லியூகிப்போசு கூறினர். இச்சொற்களை அவர் மெலிசசுவிடமிருந்து பெற்றிருக்க லாம். உடலின் இயற்கை பற்றிய விளக்கத்தைத் தருதற்கு அவர் ஈலியவாதிகளால் மறுக்கப்பட்ட வெற்றிடம் மெய்யானதே யெனக் கூறவேண்டியிருந்தது. இங்கும் அவர் பைதாகரச கொள்கையொன்றையே விருத்தி செய்கின்றார் என்க. அலகு களைப் பிரித்து வைப்பதற்கு உதவிய வெறறிடம் பற்றிப் பைதா கரசவாதிகள் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் உடலுள்ள பொரு ளென (பிரிவு 107) எம்பிடோக்கிளிசுவினால் நிரூபிக்கப்பட்ட காற்றுக்கும் (பிரிவு 53) வெற்றிடத்திற்குமிடையேயுள்ள வேற்

1. எபிகூரியவாதிகள் இவ்விடயதைதைத் தவருக விளங்கியிருத்தல் வேண் டும்; அல்லது தமது திறனைப் பெரிதாக காட்டும் நோககத்துடன வேண்டு மென்றே இதைத் தவருக எடுத்துககூறியிருக்க வேண்டும்.

றுமையைப் பைதாகரசவாதிகள் அறிந்திலர் எனலாம். பார் மீனடிசு வெளி பற்றித் தெளிவாக அறிந்திருந்தாராயினும், அதன் மெய்ம்மையை அவர் மறுத்தனரென்க. லியூகிப்போசு இதிலிருந்தே ஆரம்பித்தார். வெற்றிடம் சத்துப்பொருளல்ல வென, அதாவது உடலுள்ள பொருளல்லவென, அவர் ஒப்புக் கொண்டார். ஆனால் அது உளதேயென அவர் கூறினர். ஆனால் தமது கண்டுபிடிப்பைப் பற்றிக் கூறுதற்கு அவருக்குச் சொற்களே கிடைக்கவில்லையெனலாம். ஏனெனில் "இருத் தல்" எனும் சொல் அதுவரை மெய்யியல் வாதிகளால் உடல் பற்றிக் கூறுவதற்கே உபயோகிக்கப்பட்டது: ஆனால் "இல் பொருளும்" (பழைய உடலுள்ளபொருள் பற்றிய சொன்முறை யில்) "உள்பொருள்" எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறு இருக்கிறது எனக் கூறுவதன் மூலம் தனது கருத்தை இயன் றவரை வெளிபடுத்த முயன்றார். வெற்றிடமும் உடலைப் போல மெய்ம்மையுடையதே.

176. தெமோகிரிதசுதோசுவின அண்டவியலிலிருந்து வழக்க அண்டவியல்
மாக அதனின வேறுபடுதன்று என எண்ணப்படும் லியூகிப்போசு வின அண்டவியலைப் பிரித்துக் காண்டல் இலகுவான காரியமல்ல வெனவே தோன்றும். ஆனால் இந்நிலையே நாம் முக்கியமான வோர் விடயத்தை உணர்வதற்குக் காரணமாகிறது. தியோ பிறசுத்தோசுவுக்குப் பிந்திய எவராலும் இவர்களது கொள் கைகளைப் பிரித்தறிய முடியவில்லை. ஆகவே லியூகிப்போசு பற்றிப் பிந்திய எழுத்தாளர்கள் தரும் திட்டவட்டமான கருத் துக்கள் யாவும் தியோபிறசுத்தோசுவிடமிருந்தே பெறப்பட்டி ருக்க வேண்டும். நாம் இக்கருத்தின் வழியே செல்வோமானால் லியூகிப்போசுவின் அண்டவியற் கொள்கை பற்றித் தெளிவாக அறிந்து கொள்வது சாதகியமாகும். அன்றியும் தெமோ கிரித்தோசுவினால் எற்றுக்கொள்ளப்படாத, லியூகிப்போசுவிற்கே உரித்தான சில கருத்துக்களையும் நாம் அறிதல் சாத்திய மாகலாம்.

இடையோசினிசுவினால் தொகுக்கப்பட்ட பகுதிகளிற் பூரண மானதுவும், தியோபிறசுத்தோசுவின்[1] சுருக்கவுரையொன்றிலி ருந்து பெறப்படுவதுமானவோர் பகுதி பின்வருமாறு :

"எல்லாம் என்பது முடிவற்றதெனவும், அதன ஒருபகுதி நிறைவாயிருக்கிறதெனவும், மற்றப்பகுதி வெறுமையாயிருக்கிற

1. இப்பகுதி லியூகிப்போசுவைப் பற்றி மட்டுமே கூறுகின்றது. தெமோ கிரிதசுதோசுவைப பற்றியோ அல்லது "லியூகிப்போசுவையும் தெமோகிரித் தோசுவையும்" பற்றியோ இங்கு கூறப்படவில்லை. சுருக்கமான தொகுப்பு நூல்களுக்கும் விரிவான தொகுபபு நூல்களுக்குமிடையேயுள்ள வேறுபாட்டிற்கு ஆதாரங்கள் பறறிய குறிப்பின் 15 ஆம் பிரிவைப் பார்க்க.

தெனவும் அவர் கூறுகின்றார். இவையே (வெறுமையும், நிறைவும்) மூலகங்கள் என அவர் கூறுகிறார். எண்ணிறந்த உலகங்கள் இவற்றிலிருந்து உண்டாகி, பின்னர் இவையாகப் பிரிகின்றன. இவ்வாறே உலகங்கள் உண்டாகின்றன. "முடிவற்றதிலிருந்து துண்டிக்கப்படும் செயன்முறை" யொன்றினால் பலவகை உருவங்களையுடைய அநேக உடல்கள் "விசாலித்த வோர் வெற்றிட"த்திற்கிட்டுச் செல்லப்பட்டு ஆங்கோர் தனிச் சுழிப்பேற்படும் வகையில் ஒன்று சேர்க்கப்பட்டன. அங்கு அவை ஒன்றோடொன்று முட்டியும், எல்லாத்திசைகளிலும் சுழற்றப்பட்டும் செல்கையில் ஒரே தன்மையுடையவை யாவும் பிரிந்து, தம் இனத்தவையோடு சேர்ந்து கொண்டன. ஆனால் அவை தமது மிகையான தொகை காரணமாகத் தொடர்ந்து சமநிலையிற் சுழல முடியாதிருந்தமையால், அவற்றுள் நுண்ணியனவாய் இருந்தவை யாவும் அரிதட்டினூடாகச் செலுத்தப்பட்டவை போன்று, வெளியுள்ள வெற்றிடத்திற்குச் சென்றன. ஏனையவை அங்கேயே தங்கி நின்று, தம்முள்ளே, ஒன்றோடொன்றுக் சிக்குண்டு, ஒன்றுகக் கீழ் நோக்கி ஓடி, முதலாவது கோள அமைப்பை உண்டாக்கின. இது தன்னுள்ளே பல வகையான உடல்களை அடக்கிய ஒரு தோல் அல்லது சவ்வு போன்ற பொருளாயிருந்தது. மத்தியிலிருந்த தடைச்சத்தி காரணமாக இப்பொருள்கள் ஓர் சுழிப்பாகச் சென்றனவாகையால், ஒன்றோடொன்று முட்டியவாறு இப்பொருள்கள் செல்கையில், அச்சுழிப்பிற்பட்டு, சூழவிருந்த சவ்வு மெல்லியதாயிற்று. இவ்வாறு பூமி உண்டாயிற்று. மத்தியை நோக்கி இட்டுச் செல்லப்பட்ட பொருளகள அங்கேயே தங்கின. வெளியிலிருந்து மேலும் பொருள்கள் பிரிந்ததன மூலம், இப் பொருள்களை அடக்கிய சவ்வு அதிகமாயிற்று. அதுவும் சுழிப்பிற் கொண்டு செல்லப்பட்டதாதலால், தன்னோடு முட்டிய யாவற்றையும் தன்னுள்ளே சேர்த்துக்கொண்டது. இவற்றுட் சில சிக்குண்டு ஓர் அமைப்பைத் தோற்றுவித்தன. இவ்வமைப்பு முதலில் ஈரலிப்பும் சேற்றின் இயல்புமுடையதாய் இருந்தது; ஆனால் இது காய்ந்து முழுச்சுழிப்பினோடும் சுழல்கையில், தீப்பிடித்து, உடுக்களின் உடபொருளாயிற்று. சூரியனின் வட்டம் யாவற்றிற்கும் வெளியே உள்ளது. சந்திரனது வட்டம் பூமிக்கு மிகவும் அணமையில் உள்ளது. ஏனையவற்றின் வட்டங்கள் இவையிரண்டிற்குமிடையே உள்ளன. வானசோதிகள் யாவும் அவற்றின் வேகமான இயக்கம் காரணமாகவே தீப்பற்றிக் கொள்கினறன; சூரியன் உடுக்களினுலும் தீயூட்டப்படுகின்றது. ஆனால் சந்திரனுக்கு மிகச் சிறிதளவான தீயே கிடைக்கின்றது. பூமி தெற்கு நோக்கிச் சாய்ந்திருப்பதனால்

சூரியனும் சந்திரனும் கிரகணமடைகின்றன..... (இராசியின் சாய்வு நீலையும் ஏற்படுகின்றது); மேலும் அதன் வடபகுதிகள் எப்போதும் மழைப்பனியுடையனவாயும் குளிருடையனவாயும், உறைந்தும் உள்ளன. சூரியன் மிக அரிதாகவும, சந்திரன் அடிக்கடியும் கிரகணமடைவதற்குக் காரணம் அவற்றின் வட்டங்கள் சம அளவினவாய் இல்லாதிருப்பதே. உலக ஆக்கங்கள் பல ஏற்படுவது போலவே, வளர்ச்சிகளும், தேய்வுகளும், அழிவுகளும் பலமுறை ஏற்படுகின்றன. விலக்க முடியாத ஓர் நியதியின்படியே இவை ஏற்படுகின்றன. இந் நியதியின் இயற்கை பற்றி அவர் தெளிவாக எதுவும் கூற வில்லை."

இப்பகுதி, பெருமளவிற்குத் தியோபிறசுத்தோசுவிடமிருந்து பெறப்பட்டதாதலால், லியூகிப்போசுவின் அண்டவியலுக்குச் சிறந்ததோர் ஆதாரமாகின்றதெனலாம். பேரண்டவியல் எனும் நூலிலுள்ள சில எபிகூரிய பகுதிகளிலுலும் இப்பகுதி உறுதிப்படுத்தப்படுகிறது. ஆனால் அப்பகுதிகளில் அவரது கொள்கைகள் எபிகூரிய கண்ணோட்டத்திற்கேற்ப ஓரளவுக்குத் திரிபடைந்திருப்பதால், மிகுந்த கவனத்துடனேயே அவை கையாளப்படல் வேண்டும்.

177. லியூகிப்போசுவின் அண்டவியலை நோக்குகையில் எமக்கு தோன்றுவது யாதெனில், பிந்திய பைதாகரசவாதிகளின் சிந்தனைகளின மூலம் உலகம் பற்றிய பொதுவான கொள்கைகளில் ஏற்பட்டிருந்த வளர்ச்சியை அவா அறிந்திருக்கவில்லை, அல்லது வேண்டுமெனறே அக்கொள்கைகளை அவர் புறக்கணித்துள்ளார் என்பதேயாகும். தமது பௌதிகக் கொள்கையில் அவர் எவ்வளவு துணிவுள்ளவராயிருந்தாரோ, அவ்வளவுக்குத் தமது விரிவான அண்டவியற் கொள்கையில் பிறபோக்குடைய வராயிருந்தார். அவரது அண்டவியலை வாசிக்கையில், இடையிடையே எம்பிடோக்கிளிசு, அனக்சகோரசு ஆகியோரது கொள்கைகளின் சாயைகள் புலப்பட்டாலும், பொதுவாக அனக்சிமினிசு, அனக்சிமாந்தர் ஆகியோரது சிந்தனைகளையே மீண்டும் பார்ப்பது போன்ற உணர்ச்சியேற்படுகிறது. இதற்குக் காரணமெனனவெனக் காண்டல் அரிதல்ல. லியூகிப்போசு தமது ஈலிய ஆசிரியர்களிடமிருநது ஓர் அண்டவியற் கொள்கையை அறிநதுகொள்ள விரும்பவில்லை. அனறியும், பார்மீனடிசுவின் சத்துப் பொருட் கொள்கையை மறுக்காமலே, தானோர் அண்டவியலை அமைக்க முடியும் என அவர் கண்டபோதுங் கூட, பழைய அயோனிய கொள்கைகளையே நாடவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கேற்பட்டது. இதன் விளைவு மிகவும் பாதகமானதாக அமைந்தது. தெமோகிரித்தோசுவின் வானியல் இன்னமும்

அயோனிய அண்டவியலோடு இவருக்குள்ள தொடர்பு

சிறுபிள்ளைத்தனமானதாகவே அமைந்திருந்தது. பூமி தட்டையான தெனவும், காற்றினால் தாங்கப்பட்டுக்கொண்டிருந்ததென வும் அவர் நம்பினார்.

"அயோனிய உடலியலாளர்களால் வளர்க்கப்பட்ட பழைய அயோனிய சடப்பொருட் கொள்கையென்னும் மரத்திற் பழுத்த பழமே அனுவாதம்" எனும் கொம்பர்சுவின் கூற்று ஒப்புக் கொள்ளக் கூடிய வொன்றுவது இக்காரணத்தினாலேயே.[1] லியூகிப்போசுவின் விரிவான அண்டவியல் இத்தகையவோர் பழமே என்பதில் ஐயமில்லை. அது மிதமிஞ்சிப் பழுத்தவோர் பழமெனவும் கூறலாம். ஆனால் லியூகிப்போசுவின் திறமையை உண்மையில் எடுத்துக்காட்டுவதான அனுவாதக் கொள்கை முற்றுக ஈலியவாதத்தின் அடிப்படையிலிருந்து தோன்றிய வொன்றே. ஆயினும் இவ்வண்டவியலையும் ஆராய்தல் நமக்குப் பயனுடையதாயிருக்கும்; இத்தகைய ஆராய்ச்சியின்மூலம், இவ்வண்டவியலை எழுவதற்குக் காரணமாயிருந்த வரலாறறு வளர்ச்சியின் உண்மையியல்பை அறிந்துகொள்வதும் சாத்தியமாகிறதாதலின்.

நிதரியமான இயக்கம்

178. அணுக்கள் எப்போதும் இயங்கிக்கொண்டே இருப்பனவென லியூகிப்போசு கூறினார். அரித்தோதில் இதைத் தனது வார்த்தைகளிற கூறுகிறார்: "அனுவாதிகள் 'சோம்பற்றனமாக' இவ்வியக்கத்தின் காரணமென்னவென விளக்காது விட்டதன், இது எத்தகைய இயக்கம் எனக் கூறவும் மறந்தனர்" என அவர் கூறுகிறார். அதாவது அவற்றின் இயக்கம், "இயல்பான இயக்க"மோ அல்லது அவற்றின "இயற்கைக்கு மாறுக" அவற்றிறகு அளிக்கப்பட்டதோ என முடிவு செய்யப்படவில்லையென்க. அணுக்களின் இயக்கம் "தானாகவே எற்படுவதென" அவர்கள் கூறினரெனவும் அரித்தோதில் கூறினார். அரித்தோதில் இவ்வாறு கூறியமை, அணுக்களின் இயக்கம் தற் செயலாக நிகழ்வது என அணுவாதிகள் கூறினரெனச் சிலர் தவறுகக் கருதுவதறகுக் காரணமாயிற்று. ஆனால் அரித்தோதில் உண்மையில் அவ்வாறு கூறவில்லை. மூலகங்களின் இயக்கத்தைத் தான் விளக்கிய எவ்வழியிலும், அணுவாதிகள் அணுக்களின் இயக்கத்தை விளக்க முயலவில்லை என்பதே அவர் கூறியதாகும். அவற்றின் இயக்கம் விண்ணில் நடைபெறுவது போன்ற வட்டவியக்கமெனவோ, சந்திரனுக்குக் கீழேயுள்ள மண்டலங்களில் நடைபெறுவது போன்ற நேர்க்கோட்டியக்கமெனவோ அவர்கள் கூறவில்லை. பாரம் கூடிய பொருள்கள் மேல்நோக்கிச் செல்கின்றனவெனவும் பாரமற்ற பொருள்

1. Gomperz, *Greek Thinkers*,, Vol. i. p. 323.

கள் கீழ் நோக்கிச் செல்கின்றனவெனவும் கூறுவது போன்ற, தம்மியல்புக்கு முரணான நிர்ப்பந்த இயக்கமே இவ்வணுக்க ளுடையது எனவும் அவர்கள் கூறவில்லை. லியூகிப்போசு எழுதியவற்றுள் எமக்குக் கிடைத்துள்ள ஒரே யொரு பகுதி தற்செயற் சம்பவங்களே மறுப்பதேயாகும். "காரணமினறி எதுவுமே நடைபெறுவதில்லை; யாவும் காரணத்தோடும் விலக்கமுடியாத நியதியுடனும் நடைபெறுகின்றன" என அவர் கூறினர்.

வரலாற்று ரீதியாகக் கூறுவதானால், எம்பிடோக்கிளிசு, அனக் சகோரசு என்போர் கருதியது போல, இயக்கத்தை ஆரம்பிப் பதற்கு விசையெதுவும் அவசியமென லியூகிப்போசு கருதவில்லை எனல் வேண்டும். காதலும் பூசலும், மனமும் வேண்டுமென அவர் எண்ணவில்லை. அதற்கான காரணம் வெளிப்படையென்க. எம்பிடோக்கிளிசு, அனக்சகோரசு என்போர் பன்மை, இயக்கம் என்பனவற்றை விளக்க முயன்றது உண்மையேயாயினும், பாமனிடிசுவின் ஒன்று பற்றிய கொள்கையிலிருந்து லியூகிப் போசு வேறுபட்ட அளவிற்கு அவர்கள் வேறுபடவில்லை. "மூல கங்கள்" அல்லது "விதைகள்" என்பன "யாவும் ஒன்று சேர்ந்து" கலந்திருக்கும் நிலையிலேயே அவர்கள் இருவரினதும் ஆரம்ப சடப்பொருள் இருந்ததாகையால், அவ்வொருமையைப் பிரித்தற்கு அவர்களை யாதேனும் ஒருவிசையைக் கற்பிக்க வேண் டியிருந்தது. பார்மனிடிசுவின் ஒன்றைப் போன்றனவெனக் கூறக்கூடிய எண்ணிறந்த அணுக்களுடன் லியூகிப்போசு ஆரம் பித்தாராகையால் அவற்றைப் பிரித்தற்கு வேற்று விசையெது வும் கற்பிக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. அவர் செய்யவேண்டி யிருந்ததெல்லாம் இதற்கு முற்றிலும் எதிர்மாறானவொன்றே. அவை எவ்வாறு ஒன்றுசேர்ந்தன வெனவே அவர் விளக்க வேண்டியிருந்தது. இயக்கத்திற்கு விளக்கம் எதுவும் வேண்டியதில்லை எனும் பழைய கருத்தைத் தழுவுவதில் சிரமமும் இருக்கவில்லை.[1]

இககொள்கையின இயல்பிலிருந்தும், அரித்தோதிலின் விமரிச னத்திலிருந்தும் நாம் பெறக்கூடிய கருத்து இதுவே யெனத் தோன்றுகிறது. ஆனால், அணுக்களின் மூலவியக்கம் எபிகூரசு வின் கொள்கையிலுள்ளதுபோல, முடிவற்ற வெளியினூடான வோர் வீழ்ச்சியே யென்னும் செல்லரது கருத்தோடு இது பொருந்துவதாயில்லை. ஆனால் செல்லரது கருத்து, அணுக்கள் நிறையுள்ளன—நிறையென்பது பொருள்கள் கீழ் நோக்கி விழும் இயல்பே—என்னும் கருத்துக்களிலேயே தங்கியுள்ளது. ஆகவே

1. முன்னுரை. பிரிவு VIII.

நாம் அணுக்கள் நிறையுடையனவாவெனவும் அவ்வாறெனின் என்ன பொருளில் அணுக்கள் நிறையுடையவை எனக் கூறலா மெனவும் ஆராய்தல் வேண்டும்.

அணுக்களின் நிறை

179. அணுக்கள் இயல்பாக நிறை மிகுந்தவை யெனவும் அவை முடிவற்ற வெளியினூடாக, முடிவற்று வீழ்ந்து கொண்டி ருந்தன வெனவும் எபிகூரசு கூறினரென்பதை யாவரும் அறி வர். ஆனால், அணுவாதிகளது மூலக்கொள்கைகளுடன், எபிகூரசு தான் சேர்த்த கருத்தே அணுக்களின் "இயல்பான நிறை" பற்றிய கொளகை என்பதே இம்மரபு பற்றிய பரம்பரை வரலாறுகும். தெமோகிரித்தோசு அணுக்களுக்கு உரு, பருமன் எனும் இருபண்புகளே உளவெனக் கூறினரெனவும் எபிகூரசு நிறையெனும் மூன்றுவது பண்பொன்றையும் சேர்த்தனர் என வும் கூறப்படுகிறது. ஆனால அரித்தோதிலோ அணுக்கள் ஒவ் வொன்றும், மற்றையதைவிட எவ்வளவு பெரியதாக விருந்ததோ அதற்கேற்ற விகிதப்படி நிறையிற் கூடியதாக வுமிருந்ததெனத் தெமோகிரித்தோசு கருதினரெனத் திட்டவட்ட மாகக் கூறுகிறார். தெமோகிரித்தோசு அணுக்கள் தமது பருமனுக்கேற்ற நிறையுடையனவாயிருந்தன வெனக் கருதின ரெனும் தியோபிறசுத்தோசுவின கூற்று இதை விளக்குவதாய மைந்துள்ளது. ஆயினும் நிறை, பருமனைப் போல அணுக்களின் முதற்பண்புகளுளொன்றாய்க் கருதப்படவில்லை.

நிறைபற்றிய கிரேக்க கருத்துக்களின் வரலாற்றை இங்கே சுருக்கமாகவேனும் குறிப்பிடாது, தோற்றரவான இம்முரண் பாட்டை விளக்குதல் சாத்தியமில்லை. பாரமின்மை, நிறை யென்பனவும் உலகின் பண்புகள் என்பதும் அப்பண்புகள் முதனமுதலில் அறியப்பட்டபோதே உணரப்பட்டிருத்தல் வேண் டும் எனபதும் வெளிப்படை. பாரமான பொருள்களை உயர்த்த வேண்டிய நிலையிலிருந்த மனிதன், தெளிவற்ற முறையிலா யினும், இப்பண்புகளை இனங்கண்டு கொண்டிருப்பான். நிறை, பாரமின்மை என்பன உலகிலுள்ள பொருள்கள் எனக் கருதப் பட்டிருக்கலாம். ஆனால் முதலிலிருந்தே ஆதி கிரேக்க மெய் யியல, இக்கருத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டிருந்த தது என்பது குறிப்பிடத்தக்கவொன்றாகும். உதாரணமாக சூடு குளிர் என்பன "பொருள்கள்" என அழைக்கப்பட்டவாறு நிறை ஒருபோதும் ஒரு பொருளென அழைக்கப்படவில்லை. மேலும் நாம் இதுவரை படித்த மெய்யியலாளர்களில் ஒருவ ராயினும் நிறையெனும் பண்பை விளக்குதல் அவசியமெனவோ அல்லது அதைப்பற்றி எதுவும் கூறவேண்டுமெனவோ எண்ண வில்லை யென்பதையும் கண்டோம். பொதுவாக வழங்கும்

கருத்துக்களின்படி. நிறையினியல்புகளெனக் கொள்ளப்பட்ட இயக்கம், தடை என்பனவும் பிறவழிகளாலேயே விளக்கப்பட்டன. தனக்கு முந்திய சிந்தனையாளருள் எவரும் தனிநிறை, பாரமின்மை என்பவற்றைப் பற்றி எதுவுமே கூறவில்லையென அரித்தோதில் திட்டவட்டமாகக் கூறுகிறார். ஒன்றோடொன்று ஒப்பிடப்படும்போது தோன்றும் பாரம், பாரமின்மை என்பன பற்றியே அவர்கள் ஆராய்ந்தனர்.

பிளேட்டோவின் திமாயசுவிலேயே, நிறை, பாரமின்மை என்பனவற்றை இவ்வாறு விளக்கும் முறை முதன்முறையாகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. " மேல் ", " கீழ் " என எதுவும் உலகிலில்லை என அங்கு கூறப்படுகிறது, உலகத்தின் மத்தி, " மத்தியில் " உள்ளதேயொழிய " கீழே " யிருக்கவில்லை. பரிதியிலுள்ள எந்தப் புள்ளியாவது மேலே இருக்கிறது எனவோ அல்லது கீழே இருக்கிறது எனவோ கூறுவதற்கு எவ்வகை நியாயமுமில்லை. பொருள்கள் தமது இனத்தை நோக்கிச் செல்லும் இயல்பே விழுகின்ற பொருளைப் பாரமானதெனவும், அது விழுமிடத்தைக் " கீழே " எனவும் நாம் கூறக் காரணமாயிருக்கிறது. இங்கு பிளேட்டோ தருவது கிட்டத்தட்ட அவரது முன்னோடிகளால் எற்கப்பட்ட கருத்தேயாகும். அரித்தோதிலின் காலம் வரைக்கும் இக்கொள்கை பற்றி ஒருவரும் எவ்வகை ஐயமுமெழுப்பவில்லை யெனலாம்[1]. அரித்தோதில் விண்ணினது பரிதி " மேலே " யெனவும் உலகின் மத்தி " கீழே " யெனவும் கூறினார். இவ்வாறு அவர் கருதியதற்கான காரணங்களை நாம் இங்கு ஆராய வேண்டியதில்லை. மேலும் இவற்றிற்கிடையே மூலகங்களது நேர்க்கோட்டியக்கம் சாத்தியமாகும் பொருட்டு, மூலகங்களுக்கு இயல்பான நிறையும், பாரமின்மையும் உண்டெனவும் கூறினார். ஆயினும் விண்ணிற்கு இயல்பான நிறையில்லை யெனவும், உலகம் ஒன்றேயுளதெனவும் அரித்தோதில் கருதினராகையால, மேற் கூறிய அவரது பிற்போக்கான கொள்கை அவரது அண்டவியற்கொள்கையைப் பெருமளவுக்கு மாற்றவில்லை யெனலாம் ; எபிகூரசு தனது முடிவற்ற வெற்றிடம் பற்றிய கொள்கையோடு இதை இணைத்த

1. நிறையெனபதற்கு, பொருள்களை கீழ் நோகி இயங்குவதறகுக காரணமான பணபென எணணினரேயொழிய ஆதிகாலதது அதறகு வேறெவவகைப பொருளும கொள்ளப்படவிலலையெனச செல்லா கூறுகினறார் ; ஆனல் சடப் பொருள் முழுவதும் கோளம் ஒன்றினுளளேயே அடங்கியிருந்தது எனக கருதியவாகள் " மேலே " என்பது பரிதியெனவும "கீழே" யெனபது மத்தியெனவும் கருதினராம். நிறை பறறிய இததகைய கருதெதுவும் முநதிய மெயயியலாளர் எவரது பகுதியிலும் காணப்படவில்லை ; அவாகள் இவவாறு கருதியதாக வேறெங்கும் கூறப்படவுமிலலை. பிளேட்டோவும் அவர்கள் இத்தகைய கொள்கையை உடையோராயிருந்தனர் என்பதை மற்றுக மறுக்கினறார்.

போதுதான், இக்கொள்கையின் உண்மையான பண்பு வெளிப் பட்டதெனலாம். அரித்தோதிலிய கருத்தொன்று அதற்குச் சற்றேனும் பொருத்தமில்லாத கொள்கையொன்றோடு பலவந்த மாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது என்பதன் மூலமே, எபிகூரிய அணுவாதத்தின் சிக்கலே விளக்கலாம் என எனக்குத் தோன்று கிறது. எபிகூரசுவின் கொள்கை, முந்திய மெய்யியலாளர்களின் சிந்தனைகளிற் காணப்படும் கருத்துக்களிலிருந்து முற்றுக வேறு பட்டதாகவுள்ளது.

இதை நோக்குகையில், அணுக்கள் சுழிப்பில் உள்ளபோதே நிறை, பாரமின்மை எனும் பண்புகளை அடைகின்றன என உடனடியாக எமக்குத் தோன்றுகிறது. அன்றியும் நிறை, பார மின்மை என்பன மேலும் பிரித்தறியப்படக்கூடிய நேர்வு களுக்கு வழங்கப்பட்டுள்ள பெயர்களே. ஒத்த தன்மையுடைய அணுக்கள் தமது இனத்தவையோடு சேர்க்கப்படுதல் சுழிப்பின் விளைவுகளில் ஒன்றென லியூசிப்போசு கருதினரெனவும் நாம் அறிவோம். இங்கு குறிப்பிடப்படும் "ஒத்த தன்மை" வேறு வகையானதெனினும், எம்பிடோக்கிளிசுவின சிந்தனையின் செல் வாககு இங்கு காணப்படுகிறதெனலாம். அணுக்களில் நுண் ணியவை பரிதியை நோக்கிச் செலுத்தப்படுகின்றன ; பெரிய அணுக்கள் மத்தியை நோக்கிச் செல்கின்றன. பெரிய அணுக் கள் பாரமானவை யெனவும், நுண்ணிய அணுக்கள் பாரங் குறைந்தன வெனவும் நாம் கூறினுமேயாலும் அது தியோ பிறசுத்தோசு, அரித்தோதில் என்போர் கூறும் யாவற்றையும் நன்கு விளக்குவதாய் அமையும். சுழிப்புக்கு வெளியேயுள்ள அணுக்கள் பாரமானவை எனவோ அல்லது பாரங்குறைந்தவை யெனவோ திட்டவட்டமாகக் கூறப்படும் பகுதியெதுவும் இல்லை யாதலால், நாம் இவ்வாறு விளக்குவது பொருத்தமே.[1]

நாம் முன்பு மேற்கோளாகத் தந்துள்ள அணுவாத அண்ட வியலில், இக்கருத்து குறிப்பிடத்தக்க வகையில் உறுதிப்படுத் தப்பட்டுள்ளதெனலாம்.[2] "தமது தொகை காரணமாக இவ் வணுக்கள் தொடர்ந்து சமநிலையிற் சுழல்வது சாத்தியமாகாது போனமையாலேயே" சிறுவணுக்களும் பெரியவணுக்களும் பிரிய நேரிட்டதென அங்கே கூறப்பட்டது. இதிலிருந்து இவை முன்னர்

1. டைரோபு என்பாரது பிரதான கருத்தும் இதுவே போலத் தோன்று கிறது. ஆயினும் பாரமின்மை, நிறையென்பன பூமியின் அணுக்கள பற்றியே கூறப்பட்டன எனறு கொள்வதை நான ஏற்றுகொள்ள விரும்பேன. "பூமி" என்பதறகுப் பதிலாக "உலகம்" என நாம கொண்டோமாயின் நாம் உணமையை உணரும் வாய்ப்பு அதிகரிக்கும எனலாம்.

2. 349–50 ஆம் பகதிகள பார்க்க.

"சமநிலை"யிலிருந்தன வென்பது பெறப்படும். இங்கு உபயோகிக்கப்பட்டிருக்கும் கிரேக்க பதமும் நிறையற்றவோர் நிலையை வருணிப்பதாகக் கொள்ளப்படலாமேயன்றி, இரு முரண்பட்ட நிறைகள் ஒன்றையொன்று சமப்படுத்தும் நிலையைக குறிப்பதாகக் கொளள முடியாதென்க.

உலக தோற்றத்துக்கு முந்தியவையும், உலகிற்குப் புறம்பானவையுமான அணுக்களின் "நித்திய இயக்கம்" அவற்றின நிறை காரணமாக எற்பட்டதென நாம் கருதாவிடின், அவ்வியக்கத்தை ஓர் வீழ்ச்சியெனவும் நாம் கருத வேண்டிய திலலையெனலாம். உண்மையில் நாம் ஆதாரமாகக் கொள்ளும் ஆசிரியர்கள் எவரும் அவ்வியக்கத்தை அவ்வாறு வருணிக்கவில்லை. அது எத்தகைய இயக்கம் எனவும் அவர்கள் எவ்வழியிலும் எமக்குக் கூறவில்லை. அஃது இப்படியும் அப்படியுமான வோர் ஒழுங்கற்ற இயக்கமேயெனக் கூறுவதே உத்திபோலத் தோன்றுகிறது.[1] ஆன்மாவில் இனனமும் எஞ்சியுள்ள அணுக்களின் மூல வியக்கத்தை விளக்கும் பொருட்டே ஆன்மாவின் அணுக்களின் இயக்கம், பலகணிக்கூடாக வரும் சூரிய கிரகணங்களிலுள்ள தூசுத்துகள்களுக்கு ஒப்பிடப்பட்டிருக்கலாமெனபது எற்றுக்கொள்ளப்படக்கூடிய வோர் கருத்தே. இவ்வுவமை தெமோகிரித்தோசுவினுடைய தென அரித்நோதில் கூறுகிறார். பைதாகரசவாதிகளும் இவ்வுவமையை உபயோகித்தனரெனபது இக்கருத்தை மேலும் வலுப்படுத்துகிறதெனலாம்; எனெனில் பைதாகரச மொலுட்டுகளுக்கும் "அணுக்களுக்குமிடையே உண்மையான தொடர்பிருந்த தென்பதை நாம் கண்டுள்ளோம். இவ்வுவமையில் ஒப்பாகவுளள விடயம் சூரியனது கிரகணத்திலுள்ள தூசுத்துகள்கள் காற்றில்லாதபோதும் இயங்குகின்றன வென்பதே யெனபது குறிப்பிடத்தக்கதாகும். இதனாலேயே

1. பிரிகர, லீபமன எனபோர, தனிததனியே இககருததை வலியுறுததின ராயினும், நிறை அணுவின மூலபபணபுகளிலொனறு எனக் கூறுவதனமூலம் இவர்களிருவருமே தமது வாதததின வலிமைமையக குறைத்துக் கொணடன ரெனக. அணுக்களின நிறையே அவறறின மூலையகததின காரணமெனபதைப் பிரிகர் மறுத்தார. அணுகளினது நிறை, சுழிப்பில இருகையில மறைவாகவே உளதெனவும் அணுகள் உலகிலிருகையிலேயே அது வெளிபபடுகினற தெனவும் லீப்மன் கூறினர. ஆனால மறைவிலிருக்கையில் செயறபடாதிருகும் இநநிறை அநநிலையில இலலாதிருக்கினறதெனக் கூறுவதே பொருததமுடைதது. அணுகளை நிறையுள்ளவையானால, அவை வீழ்தல வேணடுமெனப் பிரிகர், லீபமன எனபோருகதெதிராக, செலலர் சரியாக வாதித்தார். ஆனால நான் அவாகளது கொள்கையை எடுத்துக கூறியிருப்பது போலக கூறினால, செல்லரது வாதங்கள அக்கொள்கையை எவ்வகையிலும பாதிககமாடடாவென எனக்குத் தோன்றுகிறது. கொம்பர்சுவும் பிரிகா–லீப்மன் விளக்கத்தையே எற்றுககொணடார.

அணுக்களில் மோதுகை மூலமாக ஏற்படுவதைவிட, இயல்பாக ஏற்படும் இயக்கத்தை விளக்குதற்கு இதுவோர் சிறந்த உவமை யாகிறது.

சுழிப்பு

180. இவ்வினாவுகள் யாவற்றிற்கும் காரணமான சுழிப்பைப் பற்றி நாம் யாது கூறலாம்? இச்சுழிப்பின் வினாவுகள் "பௌதிக நியதிகளுக்கேறப உண்டாகவேண்டிய வினாவுகளுக்கு நேர் எதிரான தன்மையுடையனவாயுள்ளன" வெனக் கொம் பர்சு கூறுகின்றார்; ஏனெனில் "ஒவ்வொரு மையநீக்கப் பொறியும் எமக்குக் காட்டுவது போல உண்மையில் மிகுந்த தூரத்துக்குச் செலுத்தபடபடுவன பாரம கூடிய பொருள்களே", எமபிடோக்கிளிசுவிற்கும் அனக்சகோரவிற்கும்[1] தெரிந்திருந்த இவ்வுண்மையை லியூசிபபோசு அறிந்திருக்கவில்லை யென நாம் கொளளுவதா? சுழிப்பின் மூலம, பூமி உலகின் மததியில் இருப்பதற்கு விளக்கம தர முயன்றவர்கள் யாவரும், காறறினுமு, நீரிலும் ஏற்படும் சுழிகளேயே தமது கொளகைக்கு ஆதாரமான உதாரணங்களாகக் கொண்டனர் என நாம அரித் தோதிலின மூலம் அறிகிறோம். இதிலிருந்து பெறப்பட்டவோர் தவருன பொதுமையாக்கமே, இக்கொள்கை முழுவதும் என் பது கொம்பர்சுவின் கருத்து. ஆனால் இவவிடயத்தை நாம் கூர்ந்து கவனிபபோமானால, இங்கு எவ்வித தவறும் ஏற்பட வில்லை யெனபதைக் காண்போம் என்பது எனது எண்ணம்.

சுழிப்பின் எல்லாப் பகுதிகளும் ஒன்றையொன்று தொட்ட வாறுள்ளன வென்பதையும், இத்தொடுகை மூலமாகவே வெளிப்புறமுளள பொருளகளின் இயக்கம, அவறறினுளளே யுளளவறறை அடைகிறதெனபதையும் நாம் நினைவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். பெரிய உடல்கள், இவ்வாறு தம்மை அடையும் இயக்கத்தை, சிறிய உடல்களினும பாக்க நன்றாகத் தாங்கிக் கொள்ளக்கூடியனவாக உளளன. இவவழியாக அவை இயக்கம மிகக் குறைவாயுள்ள மத்திய பகுதியை அடைந்து சிறிய உடல்களை வெளியேறறி விடுகின்றன. இவ்வாறு இயக் கத்தை எதிராததுத் தாங்கக்கூடிய ஆற்றல் பற்றிய கருத்து, சுழிப்பின மத்திக்கு அண்மையில உள்ள பொருள் சேய்மை யினுள்ளனவற்றினும மெதுவாகவே சுழல்கிறது எனும் அணு வாதக் கருத்தோடும பொருந்துவதாயுளளது. நாம் ஏற் கெனவே பார்த்ததுபோல, இவ்விடயத்தையே அனக்சிமாந் தர் கவனிக்கத் தவறிவிட்டார் போலத் தோன்றுகிறது. மைய நீக்கவிசைகளே இஙகு இடமில்லை. அனறியும் காற்றினும்

1. எம்பிடோக்கிளிசுவிற்கு 5 ஆம் அத. 248 ஆம் பக். பார்க்க. அனக்சகோ ரசுவுகு 6 ஆம் அத். 283 ஆம் பக். பார்கக.

நீரிலும் ஏற்படும் சுழிகள் பற்றிய உதாரணம் உண்மையில் முற்றிலும் திருப்திகரமானதே.

181. அணுவாத அண்டவியலே விரிவாகப் பார்க்கின அதனது பூமியும் வான சோதிகளும்
பிற்போக்கான பண்பு மிகவும் வெளிப்படையாகிறதெனலாம். பூமி களுசிரா வடிவமாயிருந்த தெனவும அது காற்றில மிதந்த தெனவும் கருதப்பட்டது. தெற்கேயுள்ள பருதியில் வெப்பத்தி னால காற்று ஐதாகவிருந்தபடியாலும் வடக்கே பனிக்கட்டியும் குளிரும் காற்றைத் திண்மையாக வைத்திருந்தபடியால் அப்ப குதியில் காற்று பூமியைதாங்கும் தன்மையுடையதாயிருந்த தாகையாலும, பூமி தெற்கு நோக்கிச் சற்றே சாய்ந்திருந்தது. இராசியின சாய்வுநிலைக்கு இதுவே காரணமாயிருந்தது. அனக்சிமாந்தரைப போல (பிரிவு 19) லியூகிப்போசுவும் சூரியன் உடுக்களைவிட அதிகதொலைவில் இருந்ததெனக் கூறி னர். ஆனால் உடுக்கள் சந்திரனை விட அதிக தொலைவில் இருந்ததென அவர் கருதினர். சநதிரனுற் கோள்கள் மறைக் கப்படுகின்றன வென்பதை ஏற்கெனவே அவதானித்திருந்தனர். ஆனால் அசைவற்ற உடுக்களுக்கும் கோள்களுக்குமிடையே யுளள வேற்றுமையை அவர்கள் தெளிவாக அறிந்திருந்ததாகத் தெரிய வில்லை. அனக்சகோரசுவினது கிரகணங்கள் பற்றிய கொள்கையை லியூகிப்போசு அறிந்திருந்தார் போலத தோன்றுகிறது. சில முக்கிய அம்சங்களைப் பொறுத்தவரையில, லியூகிப்போசுவின் அண்டவியற் கொளகை, பினனர் தெமோகிரித்தோசுவினுற் போதிக்கப்பட்ட கொள்கையிலிருந்து வேறுபட்டிருந்தது என் பதை எமக்குக் காட்டுமளவுக்கே, இவரது கொள்கை பற்றி எமககுக் கிடைத்துள்ள பிற செய்திகள் எமக்குப் பயனுடைய வாயுள்ளன.

182. புலனுணர்வினால் நாம் அறியும் பொருள்கள் இயற்கை புலனுணர்வு
யாகவல்லாது, "நியதியினாலேயே" உள்ளன வெனும் கொள்கை லியூகிப்போசு வினுடையதே என ஈத்தியோசு திட்டவட்டமாகக் கூறுகிறார். இது தியோபிறசுத்தோசுவின்மூலம் அறியப்பட்டதா யிருத்தல் வேண்டும்; எனெனில் அவருக்குப் பிந்திய எழுத்தா ளர்கள் யாவரும் தெமோகிரித்தோசுவை மட்டுமே மேற்கோ ளாகக் கொள்கினறனர். இக்கொள்கை அப்பொலோனிய நாட்ட வனன இடையோசினிசுவினது எனக் கூறப்படுவதும், ஈத்தி யோசுவின் கூற்றை மேலும் நிரூபிகிறதெனலாம்; ஏனெனில் இடையோசினிசுவின் கருத்துக்கள் சில லியூகிப்போசுவிடமிருந்து பெறப்பட்டனவெனத தியோபிறசுத்தோசு எமக்குக் கூறுகிறார். இக்கொள்கையில் வியப்புக்குரிய தெதுவுமில்லை. புலன்கள் நம்மை ஏமாற்றுவன வெனவும், நிறங்கள் ஆதியன வெறும்

"பெயர்களே" யெனவும் பார்மனிடிசு ஏற்கெனவே கூறியிருந்தார்.[1] எம்பிடோக்கிளிசுவும் ஆதல், அழிதல் என்பன வெறும் பெயர்களே யெனக் கூறியிருந்தார். லியூகிப்போசு இவற்றிற்கு அப்பால் தமது சிந்தனையை அதிகம் விருத்தி செய்திருந்தாரெனக் கூற முடியாது. "ஒழுங்காகப்பிறந்த" அறிவு "ஒழுங்கற்றுப் பிறந்த" அறிவு எனத் தெமோகிரித்தோசு காட்டிய தெளிவான பாகுபாட்டையோ அல்லது சடப்பொருளின் முதற் பண்புகள் துணைப்பண்புகள் எனும் பாகுபாட்டையோ லியூகிப்போசுவே முதலிற் கண்டனர் எனக் கூறுவது தவருகுமெனவே கொள்ளல்வேண்டும். ஒரு திட்டவட்டமான விஞ்ஞானக் கொள்கையிருந்திருந்தாறருன் இப்பாகுபாடுகள் தெரியவந்திருக்கும் என்க. நாம் இங்கு கூறக்கூடியது, அத்தகையவோர் அறிவியற் கொள்கையின் ஆரம்பவித்துகள் லியூகிப்போசுவினதும் அவரது முன்னோடிகளினதும் எழுத்துக்களில் காணப்பட்டன வென்ப தேயாகும். இக்கொள்கைகளைக் கொண்டிருந்தமையால் லியூகிப்போசு, எம்பிடோக்கிளிசுவை அல்லது அனக்சகோரசுவை விடத் தீவிரமானவோர் ஐயவாதியெனக் கூறமுடியாது. அனக்சகோரசுவின் புலனுணர்வு பற்றிய குறிப்பொன்றை (பகுதி 219) தெமோகிரித்தோசு அவரது அனுமதியுடன் மேற்கோளாக உபயோகித்ததாகக் கூறப்படுகிறது.

தெமோகிரித்தோசு, எபிகூரசு என்போரது கொள்கைகளில் முக்கியமாக இடம்பெற்ற உருவ ஒற்றுமை மூலமான காட்சி பற்றியகொள்கை லியூகிப்போசுவினுடையதே யெனக் கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் உளபோலத் தோன்றுகிறது. இக்கொள்கை "வெளியொழுக்குகள்" பறறிய எம்பிடோக்கிளிசுவின கொள்கையின் (பிரிவு 118) இயல்பான விருத்தியாகும். ஆனால் லியூகிப்போசு இவ்விடயம் பற்றி விரிவாக ஆராய்ந்தார் என்பது ஐயத்திற்கிடமானதேயாதலால், இக்கொள்கையை விரிவாக விருத்தி செய்தவர் தெமோகிரிதோசுவே யெனக் கொள்வதே உத்தியெனலாம்.

லியூகிப்போசுவின முகியத்துவம்

183. கிரேக்க சிந்தனையின் வரலாற்றில் அணுவாதத்திற்களிக்கப்படவேண்டிய இடம்பற்றிச் சமீபகாலத்து எழுத்தாளர்க ளிடையே மிகுந்த கருதது வேறுபாடுளதென்பதை நாம் பார்த்தோம். பௌதிகவதீத நியாயங்களின் மூலமாக, அதாவது சத்துப் பொருள் பற்றிய ஈலியகொள்கையை ஆராய்வதன் மூலமாக லியூகிப்போசு தமது கொள்கையை ஆக்கினாரா, அன்றேல், அயோனிய அறிவியலின் வளர்ச்சியாக அவரது கொள்கை தோன்றியதா என்பதே நாம் இப்போது தீர்மானிக்கவேண்டிய

1. 215 ஆம் பக். 9 ஆம் பகுதியைப் பார்க்க.

விடயமாகும். நாம் இதற்கு முன்னதாகத் தந்துள்ள விளக்கத்திலிருந்து உண்மையான விடையைப் பெறுதல் சாத்தியமாயிருத்தல் வேண்டும். உலகின் பௌதிக அமைப்பைப் பற்றிய அவரது பொதுவான கொள்கையைப் பொறுத்தவரையில் அது ஈலிய, பைதாகரச கொள்கைகளின் அடிப்படையிலேயே எழுந்ததெனவே எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அவரது விரிவான அண்டவியல், இப்புதிய பௌதிகக் கொள்கையோடு பழைய அயோனிய நம்பிக்கைகளைப் பொருத்துதற்குச் செய்யப்பட்ட முயற்சியென்பதையும் அது பெருமளவிற்கு வெற்றியடைந்துள்ளதென்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும். உடலே முடிவான சத்துப்பொருள் எனக் கொள்வதாயின், அது எத்தன்மையதெனக் கொள்ளப்படல் வேண்டும் என்பதை முதலிற் கண்டவர் என்பதே அவருக்குப் பெருமை அளிப்பதாகும். பழைய மைலீசிய கருத்துக்கள் அனக்சிமினிசுவின் கொள்கையில் (பிரிவு 31) தமது பூரணமான வடிவத்தை அடைந்திருந்தன. மூலக்கூறுகள் அல்லது அணுக்கள் நெருக்கமாக ஒன்று சேர்கின்றன அல்லது வெளியில் பிரிந்து செல்கின்றன எனும் கருதுகோளின்றி, ஐதாதல், திண்மையடைந்து சுருங்குதல் என்பனவற்றை விளக்க முடியாது. பார்மேனிடீசு இதை நன்கு அறிந்திருந்தார் (பகுதி 2). லியூகிப்போசு தனது கொள்கையை அம்முறையில் அமைக்கக் காரணமாயிருந்தது ஈலியர்களது விமரிசனமே. பிரிக்கப்படுந்தன்மை பற்றிய சேனோவின் வாதங்களை (பிரிவு 128) அனக்சகோரசுவும் கருத்திற் கொண்டாரேயாயினும், வேறுபட்ட பண்புகளையுடைய "விதைகள" பற்றிய அவரது கொள்கை, சில அம்சங்களைப் பொறுத்தவரையில் ஆழமுடையதாகலும், அணுவாதத்தின் மிகவும் கவர்ச்சிகரமான பண்பான எளிமை அவரது கொள்கையிலிருக்கவில்லை யென்க.

அத்தியாயம் 10

சமரசவாதமும் பிற்போக்கும்

விஞ்ஞானத்தின வறட்சி

184. லியூகிப்போசுவுடன் எமது கதை ஒரு முடிவுக்கு வந்திருத்தல் வேண்டும்; ஏனெனில் தேலிசுவினால் முதலிலெழுப்பப்பட்ட வினாவிற்கு அவர் நன்முறைப் பதிலளித்திருந்தார். ஆனால் சடப்பொருள் பற்றிய அவரது கொள்கை துணிவும் புதுமையும் மிகுதியாயினும், திருப்திகரமான அண்டவியற் கொள்கையொன்றை அமைத்தற்கு அவர் எடுத்த முயற்சி போதியளவு வெற்றிபெறவில்லை யென நாம் பார்த்தோம். அணுக்கொள்கை குறைவாக மதிப்பிடப்படுவதற்கு இது ஒரு காரணமாயிற்று. வைத்தியவியலின் செல்வாக்கு இக்காலத்து அதிகரிக்கவாரம்பித்த தென்பதையும், அதன் விளைவாக முந்திய பொதுப்படையான அண்டவியற் கொள்கைகளுக்குப் பதிலாக விரிவான ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்தப்படலாயிற்றென்பதையும் நாம் ஏற்கெனவே கவனித்தோம். இக்காலத்து ஆராயப்பட்ட விடயங்களைப் பற்றி, இபோகிரத்திசுவின் நூற்றொருதியிலுள்ள பல விளக்கவுரைகளிலிருந்து அறியக்கூடியதாயிருக்கிறது. பாலிய எடுகூற்றுக்களிலிருந்து பெறக்கூடிய முடிவு, விஞ்ஞானமே சாத்தியமற்ற வொன்றெனக் கூறுவதுபோற் றோன்றிய "மெலிசசுவின் கொள்கை" மட்டுமல்லவென லியூகிப்போசு விளக்கியிருந்தார். அத்துடன் பெருமளவிற்குப் பழைய அயோனிய கொள்கையைப் போன்றிருந்தவோர் அண்டவியலையும் அவர் ஆக்கினர். இதன் முதல் விளைவாகப் பழைய மரபுகள் அனைத்தும் புத்துயிர் பெற்றுச் சிலகாலம் மீண்டும் செயற்படலாயின. பழைய கொள்கைகளை லியூகிப்போசுவினது கொள்கைகளுக்கேற்ப இணைக்கும் நோக்கத்துடன், அல்லது விஞ்ஞான வளர்ச்சிக்கொவ்வும் முறையில் ஒரு சமரசரீதியில் இவற்றை இணைக்கும் நோக்கத்துடன், சில புதிய கழகங்களும் தோன்றின. ஆனால் இம்முயற்சிகளுள் ஒன்றுகூட நீடித்த செல்வாக்கையோ முக்கியத்துவத்தையோ பெறவில்லை எனலாம். உண்மையில் நாம் இங்கு கவனிக்க வேண்டியது விஞ்ஞானத்தின் வரலாற்றிலே ஒரு அத்தியாயத்தின் இறுதியையும், இன்னொன்றினது ஆரம்பத்தையும் காட்டுவது போன்று இடைக்கிடையே எற்படும் விஞ்ஞானத்தின் வறட்சி நிலைகளிலொன்றையே யென்க.

1. சாமோசுநாட்டு இப்போன்

185. றெசியோனை, அல்லது குரோட்டனை அல்லது சாமோ ஈரலிப்பு சுவைச் சேர்ந்தவரான இப்போன் என்பார் இத்தாலிய வைத்தியமரபைச் சார்நதவர்[1]. பெரிக்கிளிசு வாழ்ந்த காலத்து வாழ்ந்தவர் என்பதைத் தவிர இவரைப்பற்றி நாம் அறிந்தது மிகக் குறைவேயெனலாம். கிருத்திஞேசு வென்பார் தமது பஞேப்தை எனும் நூலில் இவரை நையாண்டி செய்தாரென அரித்தோபனிசுவின் **மேகங்கள்** எனும் நூலுக்கெழுதப்பட்ட பக்கவுரையொன்றிற் காண்கிறோம். அரித்தோதில் தமது **பௌதிகவதீதத்தில்** தந்துள்ள ஆதி மெய்யியல்வாதிகளின் வரிசையில் இவரது பெயரும் உளது. ஆனால் அம்மெய்யியலாளர்களோடு வைத்தெண்ணப்படும் தகுதி புத்திக் கூர்மையற்றவரான இவருக்கில்லை யெனவே அரித்தோதில் அங்கு குறிப்பிடுகிறார்.

இவரது கொள்கைகளைப் பற்றிய மிகவும் தெளிவானவோர் கூற்றை நாம் அலெக்சாந்தரிடமிருந்தே பெறமுடிகிறது. அலெக்சாந்தர் இவ்விடயத்தில் தியோபிறசுத்தோசுவைப் பின்பற்றுகினறார் என்பதில ஐயமில்லை. மூலப்பொருள் ஈரலிப்பேயென இவர் கூறினாரெனவும், அது காற்றோ அல்லது நீரோ என இவர் முடிவாகக் கூறவில்லையெனவும் நாம் அலெக்சாந்தரது கூற்றின் மூலம் அறிகிறோம். அக்காலத்துச் சாதாரணமாக வழங்கிய உடலியற் சார்பான வாதங்களைக் கொண்டே இவர் தனது கொள்கையை நிறுவினர் என்பதற்கு இப்பொலைட்டசு மூலமாக, அரித்தோதில் தியோபிறசுத்தோசு ஆகியோரது ஆதாரங்கள் எமக்குக் கிடைத்துளளன. அரித்தோதில் தேலிசுவுடையதாயிருக்கலாம், என ஊகமாத்திரையாகக் கூறிய வாதங்களும் இத்தகையனவே (பிரிவு 10). இப்போனது பிற கொள்கைகள் வைத்திய வரலாற்று மாணவர்க்கே வேண்டியவை. கொஞ்சக்காலத்துக்கு முன்னர் வரை இப்போனது எழுத்துக்களின் பகுதியெதுவும் இருந்ததாக யாரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஓமருக்கெழுதப்பட்ட செனீவாப் பக்கவுரையிலிருந்து ஒரேயொரு பகுதி பெறப்பட்டுள்

1. அரித்தோசெனசு இவா சாமோசு நாட்டவர் எனகிறார். மேனனது இயாததிரிகாவில இவர் குரோட்டன நாட்டவர் எனக் கூறப்பட்டிருக்கிறது. ஏனையோர் இவா றெசியோனை அல்லது மெறறாபொனதியனைச சேர்நதவர் எனபர். இவர் முதலில பைதாகரசமரபைச் சேர்ந்தவர் எனவே நாம் இவற்றிலிருந்து அறிய முடிகிறது. ஆயின, அரித்தோசெனசுவினது ஆதாரமே இவ்விடயத்தில் உபயோகமிகக தெனலாம். இயாம்பிளிக்கோசுவின் பைதாகரசவாதிகளின் அட்டவணையிலும் மெலிசசுவோடு, இப்போனும் சாமோசு நாட்டவரெனவே குறிப்பிடப்படுகினறார்.

ளது. "பூமிக்கடியிலுள்ள நீர்"களும் ஈரலிப்பை உண்டாக்கும் தனிப்பட்ட ஊற்றுக்களேயென்னும் பழையகருத்தைக் கண்டிப் பதாக அமைந்துள்ள இப்பகுதி பின்வருமாறு :

"நாம் பருகும் நீர்கள் யாவும் கடலிலிருந்தே பெறப்படுகின் றன ; எனெனில் கிணறுகள் கடலிலும் ஆழமானவையாயின் நாம் கடல் நீரைப் பருகுகிறோம் என்பது உண்மையாயிருக்க முடியாது என்பதில் ஐயமில்லை. கிணறுகள் கடலிலும் ஆழமா னவையாயின் நாம் பருகும் நீர் பிறிதோர் ஊற்றிலிருந்தே வருவதாயிருத்தல் வேண்டும் ; ஆனால் உண்மையில் கடல் மற்றைய நீர்நிலைகளிலும் ஆழமானதாகையால், அதற்கு மேலேயுள்ள நீர்கள் அனைத்தும் அதிலிருந்தே வருதல் வேண்டும்.

நீர் பூமியிலிருந்து மேலேழுந்த தன்மையுடையதேயன்றி பூமிக்குளளே கீழ்நோக்கிச் செல்லுந் தன்மையுடையதல்ல வென்னும் பொதுவான எடுகோளேயே நாம் இங்கும் காண் கிறோம்.

இப்போலோடு சேர்த்து இமேராநாட்டு இடாயோசுவையும் நாம் இங்கு குறிப்பிடலாம். காற்றே மூலப்பொருள் என இவர் கருதினரெனச செகுதசு கூறியுள்ளதற்கு மேலாக இவரைப் பற்றி நாம் வேறெதுவும் அறியோம். ஆயினும் இவர் ஓர் கிசிலிய நாட்டவர் என்பது சிந்தனைக்குரியவொன்றே.

2. அப்பொலோனியநாட்டு[1] இடையோசினிசு

காலம் **186.** மைலீசிய மரபின் சிந்தனையாளர் மூவரையும் பற்றி ஆராய்ந்ததன் பின்னர் தியோபிறசுத்தோசு பின்வருமாறு கூறினர் :

இத்தகைய துறைகளைப் பயின்றோரில் மிகப் பிந்தியவர் என அழைக்கப்படக்கூடியவரான அப்பொலோனிய நாட்டு இடை யோசினிசுவும் சிலவிடயங்களில் அனக்சகோரசுவை ஏற்றும், வேறுசில விடயங்களில் லியூகிப்போசுவை ஏற்றும், பெருமள விற்கு ஒரு சமரசரீதியிலேயே எழுதினர். முடிவற்றதும்,

1. பைசாந்தியனைச் சேர்ந்தவனான சிதீபனைசு இது கிறீற்றிலுள்ள அப் பொலோனியா வெனக் கூறுகிறான. ஆனால் இது ஏறகத்தருநததலல. இடை யோசினிசு அயோனிய மொழியில எழுதினராகையால் செல்லரும் இக்கூறறை நம்பத் தயங்கினர். ஆனால் அறிவியல் நூல்களைழுதுவதற்கு வழமையாக உபயோகிக்கபபட்ட அயோனிய மொழியேயாதலால், நாம் அதிலிருந்து எவ் வகை முடிவுக்கும் வரமுடியாது. அனகசிமாந்தரே தனனை உருவாக்கியவர் எனக கருதிய மைலீசிய குடியேறறப்பகுதியாகிய, பொனரோசுவிலுள்ள அப் பொலோனியாவிலிருந்து இவர் வந்திருககலாமெனக கொளளலாம் போலத் தோன்றுகிறது.

நித்தியமானதுமான காற்றே பிரபஞ்சத்தின் மூலப் பதார்த்த மெனவே அவரும் கூறினர். பொருள்கள் யாவற்றினதும் வடிவங்களும், இக்காற்றின் சுருக்கம், ஐதாதல், மாற்றம் என்பனவற்றின் மூலமே உண்டாயின என அவர் கருதினர்.

இவர் அனக்சகோரசுவுக்குச் சமகாலத்தவர் எனும் லயாத் தியசு இடையோசினிசுவிலுள்ள[1] கூற்றிலிருந்து நாம் இவரது காலமெனக் கொள்வதிலும், பிந்திய காலத்தைச் சேர்ந்தவரே இவர் என்பது மேலேயுள்ளபகுதியின் மூலம் தெளிவாகிறது. அரித்தோபனிசுவின் மேகங்கள் எனும் நூலில் இவரது கருத் துக்கள் நையாண்டி செய்யப்பட்டிருப்பதிலிருந்தும் நமக்குத் தோன்றுவதும் இதுவே.

187. தனது காலத்தில் இடையோசினிசுவால் எழுதப்பட்ட இவை னவற்றுள் ஒரேயொரு நூல் மட்டுமே எஞ்சியிருந்த தெனி எழுதியவை னும், இடையோசினிசு பல நூல்களை எழுதினரெனபது உண் மையென சிம்பிளிசியசு கூறுகிறார். எஞ்சியிருந்த அந்நூலி லிருந்த குறிப்புக்களை வைத்துக்கொண்டே, அவர் இவ்வாறு கூறினராதலால், நாம் அவரது கூற்றை வெறுமனே ஒதுக்கிவிட முடியாது. அக்காலத்தில் பன்மைவாத அண்டவியலாளராயி ருந்த சோபிட்டுக்களுக் கெதிரானவோர் சிறுநூலை அவர் யாத் தனர் என்பது பெரிதும் நம்பத்தகுந்தது. வளிமண்டலவியனூல ஒன்றையும் மனிதனது இயல்பு எனப் பெயரிய நூலொன்றை யும் இவர் யாத்தனர் எனவும் நம்ப இடமுண்டு. பின்னையது உடலியல், அல்லது வைத்தியவியல் பற்றிய நூலாயிருந்திருத் தல் வேண்டும். நாளங்கள் பற்றிய பிரசித்தமான பகுதியும் இந்நூலிலிருந்தே பெறப்பட்டிருக்க வேண்டும்.[2]

188. இடையோசினிசுவின் நூல்கள் கழகத்திலுற் பேணப் இவரது பட்டன போலத் தோன்றுகிறது; நமக்குக் கிடைத்துள்ள பகுதிக நூலின ளில் ஓரளவுக்குப் பெரியவையாய் இருப்பன யாவும் சிம்பிளிசியசு பகுதிகள் மூலமாகவே நமக்குக் கிடைத்துள்ளன. டியல்சுவினுல் ஒழுங்கு செய்யப்பட்டவாறு நான் அவற்றை இங்கு தருகிறேன்:

1. எந்த ஆய்வுரையையும் ஆரம்பிப்பவன் தனது தொடக்கக் கருத்தை மறுக்க முடியாத வொன்றுகவும் தனது மொழி

1. இவர் அனகசிமினிசுவின் போதனைகளைக "கேட்டனர்" எனும் அன்றிசு தேனிசுவினது கூறறு, வழமையானவோர் மயக்கங் காரணமாக உணடானதே யாகும். அனக்சகோரசுவைப் போல இவரும் அனகசிமினிசுவின் மெய்யியல் முறையோடு தொடர்பு பூண்ட ஒருவராகவே இருந்தார் என்பதில் ஐயமில்லை. 6 ஆம் அத். 122 ஆம் பிரிவிற் பாாக்க.

2. டியலசு இதையே 6 வது பகுதியாகத் தருகிறார். ஆனல் இது உண்மையில் வைத்திய வரலாறறைச் சோந்ததாகையால, நான் அதை நீக்கியுளளேன்.

நடையை எளிமையும் கம்பீரமும் கொண்டதாகவும் அமைத்துக் கொள்ளல் வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது.

2. சுருங்கக் கூறுவதாயின், எல்லாப் பொருள்களும் ஒரே பொருளேயென்பதும், அவை யாவும் அதன் வேறுபட்ட உருவங்களே யென்பதுமே எனது கருத்து. இது வெளிப்படையான வொன்றே; ஏனெனில் இவ்வுலகில் இப்போதுள்ள பொருள்களில்—நிலமும் நீரும், காற்றும் தீயும், மற்றும் உலகில் உளவாக நாம் காணும் பிறபொருள்கள் யாவற்றிலும்—ஒன்றுயினும் பிறிதொன்றிலிருந்து வேறுபட்ட தாயிருப்பின், அதாவது தனக்கு மட்டுமுரியவோர் உட்பதார்த்தத்தை உடையதாயிருப்பதன் மூலம் வேறுபட்டதாயிருப்பின்; அடிக்கடி மாற்றமடைந்து பிறபொருள்களாவது ஒரே பொருளல்ல வெனின், பொருள்கள் ஒன்றேடொன்று எவ்வகையிலும் கலத்தல் சாத்தியமாகாது. மேலும், ஒரு பொருளுக்கு இன்னொரு பொருளினால் தீமையோ அல்லது நன்மையோ ஏற்படுத்தவும் முடியாது. பொருள்கள் யாவும் ஒரே தன்மையுடையனவாயிருக்கும் வகையில் அமைந்திருந்தாலொழிய, நிலத்திலிருந்து செடிகள் முளைப்பதும், மிருகங்கள உண்டாதலும் சாத்தியமாகா. ஆனால் இவை யாவும் ஒரு பொருளிலிருந்தே தோன்றுகின்றன; அவை மாறுதலடைந்து, வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு உருக்களைப் பெற்று, பின்னர் அப்பொருளிடத்தேயே மீள்கின்றன.

3. நுண்மதியின்றிப் பொருள்கள் இவ்வாறு பிரிக்கப்பட்டிருக்க முடியாது. மாரியும் கோடையும், இரவும் பகலும், மழையும் காற்றும் மற்றும் காலநிலைகளும் நுண்மதியின்றி இவ்வாறு எப்போதும் தமது விதத்தை மீறுதவகையில் செம்மையாகப் பிரிக்கப்பட்டிருக்க முடியாது. இதுபற்றிச் சற்றுச் சிந்திப்பவர்கள் எவரும், ஏனைய பொருள்களும், அவற்றிற்கு மிகவும் உகந்த முறையிலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன வென்பதை உணர்ந்து கொள்வர்.

4. மேலும், பின்வரும் சிறந்த நிரூபணங்கள் உள்ளன: மனிதர்களும் மற்ற மிருகங்களும் காற்றைச் சுவாசிப்பதன் மூலம் உயிர் வாழ்கின்றனர். வளியே இவர்களது ஆன்மாவும், நுண்மதியுமென்பது இந்நூலில் தெளிவாகக் காட்டப்படும். வளி இல்லாது போயின் இவர்கள் இறந்து போய்விடுகின்றனர். இவர்களது நுண்மதிகளும் செயலிழந்து விடுகின்றன.

5. மனிதர்களால் வளியென அழைக்கப்படுவதே நுண்மதியுடைய தெனவும் அது பொருள்கள் யாவற்றையும் தனது அதிகாரத்துக்குட்படுத்துவதெனவும், பொருள்கள் யாவும் அதற்கேற்றவாறே இயங்குகின்றன வெனவும் நான் கருதுகிறேன்

இதுவே இறையெனவும், எங்கும் செல்லக்கூடிய தெனவும், எங்குமுள்ளதெனவும், எதையும் மாற்றும் ஆற்றல் உடைய தெனவும், இதுவிலலாத பொருள் எதுவும் இல்லையெனவும் நான் கருதுகிறேன். ஆனால ஒரு பொருளாயினும், மற்றப் பொருள்கள் அதில் பங்கு பெறும் முறையில், தானும் இதில் பங்கு பெறுவதில்லை ; ஆனால் வளி, நுண்மதி என்பனவற்றில் அநேக ஆகாரங்களுள்ளன. எனெனில் அது பலவகையான மாற்றங்களை அடைகிறது. சூடு கூடியதாகவும், குளிர் கூடியதா கவும், வறட்சியுடையதாகவும், ஈரலிப்புடையதாகவும், நிலையுள் ளதாகவும், மிகவேகமாக இயங்குமியல்புடையதாகவும், இன்னும் அநேக மாற்றங்களையுடையதாகவும், எண்ணிறந்த நிறங்களையும் சுவைகளையும் உடையதாகவும் அது மாறுகின்றது. உயிருள்ளன யாவற்றினது ஆன்மாக்களும் வளியே. எமக்கு வெளியேயுள்ள காற்றிலும் கூடிய சூடுள்ள, ஆனால் சூரியனுக்குக் கிட்டவுள்ள காற்றிலும் சூடு குறைந்த காற்றே ஆன்மாவெனக. ஆனால் எந்த இரு உயிருள்ள பிராணிகளிலும், எந்த இரு மனிதர் களிலும், ஆன்மாவின் சூடு, ஒருபோதும் ஒரே அளவினதாய் இருப்பதில்லை. ஆனால் இவற்றுக்கிடையே யுள்ள வித்தியாசம் மிகவதிகமாய இருப்பதில்லை. அவற்றின ஒத்த தன்மையோடு இசைவாயிருக்குமளவிற்கே அவற்றிற்கிடையே வித்தியாசம் இருக்கிறது. ஆனால் பிரிந்துள்ள இருபொருள்கள், மீண்டும் ஒரு பொருளாகச் சேரும் வரைக்கும், மூற்றுக ஒரே தன்மை யுடையனவாய் ஒருபோதுமிருப்பதில்லை.

6. மூலப்பதார்த்தத்தின் வகைபீடு இவ்வாறு பலதரப்பட் டதாயிருப்பதால் உயிர்வாழ்வன பலவாயும், பலதரப்பட்டவை யாயும் உள்ளன. அவை தோற்றத்திலோ அல்லது நுண்மதி யாற்றலிலோ ஒருபோதும் ஒன்றையொன்று ஒத்திருப்பதில்லை. ஆனால் ஒரே பொருளின் மூலமாகவே இவறறால் உயிர்வாழ வும், பார்க்கவும, கேட்கவும் முடிகிறது. இவை யாவும் தமது நுண்மதியை ஒரே பொருளிடத்திலிருந்தே பெறுகின்றன.

7. இது (வளி) அழிவில்லாததும், நித்தியமானதுமெனி னும், அப்பொருள்களிற் சில ஆகின்றன ; சில அழிந்து போகின்றன.

8. இது பெரிதென்பதும், வலிதென்பதும், இறவாது நித்தி யமாயிருப்பதென்பதும், மிகுந்த அறிவையுடையதென்பதும் கூட வெளிப்படையாகத் தெரியும் விடயங்களாகவே எனக்குத் தோன்றுகின்றன.

அரித்தோதிலாற் பேணப்பட்டுள்ள, நாளங்கள் பறறிய விரி வான விளக்கத்திலிருந்து, இடையோகினிசுவின் பிரதான சிந்

தீனை உடலியல் பற்றியதே யென்பது தெளிவாகிறது. ஒரு பொருள் இன்னொன்றிற்கு எவவாறு, தீங்கிழைக்கவோ அல்லது நன்மை செய்யவோ கூடுமென்பதை விளங்குவது சாத்தியமல்ல வென்பதும் எல்லாப் பொருள்களின் அடிப்படையிலும் ஒற்றுமையுள்ள தென்பதை நிரூபிக்க அவர் கையாண்ட வாதங்களிலொன்று என்பது குறிப்பிடத்தக்கது (பகுதி 2). இடையோசினிசுவின் கருத்துக்கள், போலி—இபோகிறுத்திய நூல்களிற் பெரும்பாலானவற்றின் இயல்பையே ஒத்தனவாயிருக்கின்றன வெனலாம். இக்காலத்துச் சிறுநூல்களின் ஆசிரியர்கள் அனக்சகோரசு, எரக்கிளீட்டசு என்போரைப் பயன்படுத்திய அளவிற்கு இப்போகிறுத்திசுவின் நூல்களையும் பயன்படுத்தினர் எனும் கருததில் பெருமளவு உண்மையிருக்கிறதெனலாம்.

அண்டவியல்

189. அனக்சிமினிசுவைபபோல இடையோசினிசுவும் வளியே மூலப்பதார்த்தமெனக் கருதினர். ஆனால் பிற கருத்துக்களும் நிலவியவோர் காலத்திலேயே அவர் வாழ்ந்தாரென்பது அவரது வாதங்களிலிருந்து எமக்குப் புலனாகிறது. எம்பிடோக்கிளிசுவின் நான்கு மூலகங்களையும் பற்றி அவர் தெளிவாகக் கூறுகின்றார் (பகுதி 2). அன்றியும் அனக்சகோரசு குறிப்பிட்ட நூசுவின் பண்புகள் யாவறறையும், வளியும் கொண்டிருந்தது எனக் கூறுவதிலும் அவர் மிகவும் கவனமாயிருக்கிறார் (பகுதி 4). இவரது அண்டவியற் கொள்கைகள் பற்றித் தொகுப்பாசிரியர்கள் கூறியிருப்பவை நன்கு பேணப்பட்டுள்ளன :

காற்றே மூலமெனவும், பொருள்கள் யாவும் இயங்குகின்றன வெனவும், எண்ணிறந்த உலகங்கள் உள்ளன வெனவும் அப்பொலோனிய நாட்டு இடையோசினிசு கூறினர். உலகத்தின் தோற்றத்தை அவர் பினவருமாறு விளக்குகின்றார். எலலாம் என்பது, இயக்கத்தின் மூலம் சில இடங்களில் ஐதானதாகவும், வேறு சில இடங்களில் திண்மையுடையதாகவும் ஆகும்போது, திண்மையானவை யெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு பொருட்டொகுதி உண்டாயிற்று. பிற பொருள்களும் இவ்வாறே தோன்றின. மிகவும் பாரங்குறைவான பொருள்கள் அதி உயரமான இடத்திற்குச் சென்று சூரியனைத் தோற்றுவித்தன. இல்பொருளிலிருந்து எதுவும் ஆவதில்லை. எப்பொருளும் அழிந்து இல்பொருளாவதில்லை. பூமி வட்டமாயிருக்கிறது, மத்தியில் உளது. சூட்டினால் உண்டாகும் சுழற்சியின் மூலமே பூமி அதனது வடிவத்தை அடைந்துள்ளது. குளிரின் மூலமாகவே அது தனது திட்பத்தைப் பெற்றுளது.

உடுக்கள் நுரைக்கல் போன்றனவாயிருந்தன. உலகின் சுவா சத்துவாரங்கள் இவையே யெனவும், இவை சிவக்கக் காய்ந் திருந்தனவெனவும் அவர் கருதினர்.

சூரியன நுரைக்கல் போனறிருந்தது. ஈதரிலிருந்துவரும் கிரணங்கள் அதனுள்ளே பொருந்திக்கொள்கின்றன. சந்தி ரன் நுரைக்கல் போன்றவோர் தீயாயிருந்தது.

கண்ணுகுகுப் புலப்படும் விண்ணுடுக்களோடு, கண்ணுக்குத் தெரியாத பல கற்களும் சுழல்கின்றன. அவை கண்ணுக்குப் புலப்படாதனவாகையால் பெயரிடப்படாதனவாக உள்ளன. ஆனால் ஐகொசுபொத்தேசுவில தீபபறறியபடியே வீழ்நத கல் லுடுவைப்போன்று, இவை அடிக்கடி வீழ்ந்து பூமியில அணை ந்து போகினறன.

இங்கு நாம் காண்பது சில புதிய கருததுக்களோடு சேர்க கப்பட்ட பழைய அயோனிய கொள்கைகளேயே. சூடு குளிர், வறட்சி ஈரலிப்பு நிலேயுடையன, இயங்குவன எனும் மூரண் பாடுகளே விளகுவதறகு இங்கும் ஐதாதல, அடர்த்தியுறல் எனபனவே உபயோகிக்கப்படுகினறன (பகுதி 5). அனக்சகோ ரசு போதிததைப்போல, காற்று, எல்லேயின்றி முரண்பாடு களாக மாற்றமடையக் கூடியதே. ஆனால இவை யாவும் ஐது, திணமை எனும மூலமுரண்பாடாகச் சுருக்கபபடலாம். காறறு இறுகிச சுருஙகுவதன் மூலம் நிலமும், நீரும உண் டாகினவென அனக்சிமினிசு கூறியதுபோல இடையோசினிசு கூற விலலேயெனச் சென்சோறினசு கூறுகிறார். இரததம, தசை, எலும்புகள் என்பனவே காறறிலிருந்து இவ்வாறு உண்டாகின றனவென இடையோசினிசு கருதினரென அவர் கூறுகிறார். இவ்விடயததில் இவர் அனச்சகோரசுவைப பினபற்றினர் (பிரிவு 130). அவவாறு பினபற்றியது இயல்பானதே. ஆனால காற் றின ஐதான பகுதி, தீயாகிச் சூரியனேயும, ஏனைய விண்ணு டுக்களேயும தோறறுவித்தது. உலகின வடடவியக்கதிறகுக் காற்றின் நுணமதியே காரணமாயிருந்தது. பொருள்களை வெவ் வேறு உருவான உடல்களாகப் பிரிக்கப்படுதறகும், இவ்வு டல்கள் "விதிதம்" தவறுது ஒழுஙகுடனியங்குவதற்கும் கார ணமாயிருப்பதும காற்றே.[1]

அனக்சிமாந்தரைப் போல (பிரிவு 20) இடையோசினிசுவும், நிலத்தைத் தனியே பிரிததெடுக்கும் பொருட்டுச் சூரியனற் காய்ச்சப்பட்ட பின்னரும், மூல ஈரலிப்பில் எஞ்சியுள்ள பகுதியே கடலெனக் கூறினர். பூமி வட்டமானது—அதாவது அதோர் தட்டென்க : தொகுப்பாசிரியர்களது வார்த்தைகளில்

1. "விதிதங்கள்" பறறி 3 ஆம் அத். 72 ஆம் பிரிவில் பாக்க.

கோளவடிவைக் குறிக்கக்கூடிய வெதுவுமில்லை. குளிரினால் பூமி திடப்பொருளாவதற்குக் காரணம் குளிர் அதனை அடர்த்தியுறச் செய்வதே.

மூந்திய அண்டவியலாளர் கூறியது போல உடுக்கள் காற்றினால் அலலது தீயாலானவையெனவோ, அனக்சகோரசு கூறியதுபோல அவை கற்களே யெனவோ, இடையோசினிசு கூறவில்லை. அவை நுரைக்கறகள் போன்றிருந்தனவென அவர் கூறினர். இக்கொள்கையை அவர் கொண்டதற்கு லியூகிப்போசுவின செல்வாக்கும் காரணமென நாம் காணலாம். அவை நிலததாலானவையே ; ஆனால் முற்றிலும் திண்மவியல்புடையனவல்ல. அவற்றின் தொளைகளுக்குள்ளே ஈதரிலிருந்து வரும் தீக்கதிர்கள் நுழைந்தன. அனக்சகோரசு கூறியது போல, உடுக்களோடு சேர்ந்து சுழல்வனவென இவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இருண்ட உடல்களை நாம் ஏன் காண முடியாதிருக்கிறது என்பதையும் இக்கொள்கை விளக்குகின்றது. அவை உண்மையில திண்மையான கற்களேயாகையால் தீ அவறறினுளளே நுழைய முடியாதிருக்கிறது. ஐகொசு பொத்தேமசுவினுள்ளே வீழ்ந்தது இக்கற்களுளொன்றே. அனக்சகோரசுவைப் போல இடையோசினிசுவும், விலங்குகள் தோனறியதன் பினனரே பூமி சாய்வடைந்ததெனக் கூறினர்.

எண்ணிறநத உலகஙகளிருந்தனவென இடையோசினிசுவும் கருதினரென்பதை அறிகையில் எமக்கு வியப்பெதுவுமு ஏற்படவில்லை. ஏனெனில பழைய மைலீசிய சிந்தனையாளர்களது இக்கொள்கை, இவருக்குச் சற்று முனபாகவே அனக்சகோரசு, லியூகிபபோசு என்போரால புத்துயிரளிக்கப்படடிருந்தது. பிளாக்கிட்டாவில், எண்ணிறநத உலகங்கள் உளவென நம்பியோரது வரிசையில் இவரும் குறிப்பிடபபடுகின்றார். ஒரேயொரு உலகே மீண்டும், ஆகி அழிகின்றது எனும் சுதோய்க்க கொள்கையையே அனக்சிமினிசு, எரக்கிளிட்டசு என்பாரைப் போல இவரும் கொண்டிருந்தார் எனச் சிம்பிளிசியசு கூறியிருப்பாராயின், அவர் இவ்விடயத்தல தவறுன கருத்துக்கொண்டுள்ளார் எனவே கூறுதல் வேண்டும்.[1]

விலங்குகளும் செடிகளும்

190. உயிருள்ள பிராணிகள் நிலத்திலிருந்தே தோன்றினவெப்பம் காரணமாகவே இது நடைபெற்ற தென்பதில் ஐயமில்லை. காற்றே இவற்றின் ஆன்மாக்களாயிருந்தது. அககாற்று ஐதாக, அலலது அடர்தியாகவோ இருந்ததற்கேற்பவே இவ்வான்மாக்கள் வேறுபட்டிருந்தன (பகுதி 5). இதயம் அல்லது மூளையைப் போன்ற எந்தக் குறிப்பிட்ட இடமாவது

1. 1 ஆம் அத். 63 ஆம் பக்கம் பாாக்க.

ஆன்மாவுக்களிக்கப்படவில்லை ; நாளங்களினூடாக, குருதியோடு சேர்ந்து சுற்றியோடிய சூடான காற்றே ஆன்மாவெனக கூறப் பட்டது. சுவாசம், சந்ததி உற்பத்தி, குருதி என்பன பற்றிய இடையோசினிசுவின கொள்கைகள் வைத்தியவியல் வரலாற் றின்பாற்பட்டவை. தியோபிறசுத்தோசுவினுல் வருணிக்கப்பட் டுள்ள இவரது புலனுணர்வுக்கொளகை பற்றியும் வெறுமனே குறிப்பிட்டாற் போதுமெனலாம். சுருக்கமாகக் கூறின் அக் கொள்கை பின்வருமாறு : மூளையிலும் மற்ற அங்கங்களி லும் காற்றினுல எற்படுத்தப்படும் விளைவுகளே புலனுணர் வுகள். குருதியில் காற்றுச் செறிவதனுலேயே களிப்புணர்ச்சி ஏற்படுகிறது. இக்கொளகையைப் பற்றி விரிவாக அறிவதற்கு இப்போகிறத்திசுவின் நூல்களோடு சேர்த்தே இதனைப் படித்தல் வேண்டும் ; இடையோசினிசு புதிய அண்டவியல்வாதிகளினது மரபைச் சேர்ந்தவரல்லவாதலின். இவரது கொள்கையை, நேர்வு கள சேகரித்ததற்கும், விரிவாக ஆராய்தறகும் புதிதாக ஏறபட்டி. ருந்த ஆர்வத்தோடு பழைய மெய்யியற் கொள்கைகளும் இணைந்ததால் ஏற்பட்டவோர் புதிய வளர்ச்சியென வருணிக் கலாம்.

3 அதென்சு நகரத்து ஆக்கேலசு

அனக்சகோரசு வாதிகள்

191. பழைய அண்டவியல்வாதிகளது மரபில் கடைசியாக வந் தவர அனக்சகோரசுவின் சீடரான, அதென்சு நகரத்து ஆக் கேலசு[1]. இவர் சோக்கிரதருகுக் குருவாயிருந்தாரென அரித் தோசெனசு, தியோபிறசுதோசு ஆகியோர் கூறுவதைச் சந் தேகிக்க வ்வித நியாயமுமில்லை. இலாம்புசுகோசத்திலிருந்த அனக்சகோரசுவின் கழகத்தின் தலைமைப்பீடத்தை அவருக்குப் பின்னர் ஆக்கேலசு ஏற்றுக்கொண்டார் எனும் வரலாறறை யும் நாம் தயக்கமெதுவுமின்றி ஏற்றுக்கொள்ளலாம். சோபிட் டுக்களென அழைக்கப்படுவோரது தோற்றத்தின் பின்னர் அனக்சகோரசவாதிகளது புகழ் விரைவில் மறைந்து போயிற் றெனினும், அவர்களைப் பற்றி நாம் கேள்விப்படாமலில்லை.

அண்டவியல்

192. ஆக்கேலசுவின் அண்டவியற் கொள்கை பற்றி இப்பொ லுட்டசு பினவருமாறு எழுதியுள்ளார் :

ஆக்கேலசு, அதென்சு நகரத்தில், அப்பொலோடரசுவின் மகனுகப் பிறந்தார். சடப்பொருட்கலவை பற்றியும் முதற்றத்

1. ஆககேலசுவோடு சாமோசுநகருக்குச் சோக்கிரதரும் சென்ருரென இயோசு நாடடு ஐயோன கூறினுர். இது சாமோசுவின் முற்றுகையைக் குறிபபிடுவதாமின இளைஞரான சோகிரதர், மெலிசசுவினுல நிர்வகிக்கப்பட்ட படையொன்றிற் கெதிராகப போர் செய்தனர் என நாம எண்ணலாம்.

துவம் பற்றியும் இவர் கூறியவை, அனக்சகோரசுவின் கொள் கைகளை ஒத்திருந்தன. நூசுவிலும் ஒருவகைக் கலவை உள் ளுறைவாக இருந்ததென அவர் கூறினர். தனித்தனியாக இரண்டு நிமித்தகாரணங்கள் இருந்தன வெனவும் இவை சூடும், குளிருமெனவும் அவர் கருதினர். இவற்றுள் முன்னே யது இயங்கிக்கொண்டும், பின்னேயது அசைவின்றியும் இருந்தன. நீர் திரவமாகியபின்னர் மத்தியை நோக்கி ஓடிய பின்னர், தீயூட்டப்பட்டு நிலமாகவும் காற்றுகவும் மாறி யது. இவற்றுள காற்று மேலேசெல்ல, நிலம் கீழே தனது இடத்தில் நிலைத்தது. நிலம் உண்டாவதற்கும், அது இந்நிலை யிலிருபபதற்குமான காரணங்கள் இவையே. அது மத்தி யிலே இருக்கிறது. உலகில் நிலம் ஒரு பெரிய பகுதியெனக் கருத முடியாது (ஆனால் காற்று இவையெல்லாவற்றிற்கும் மேலாக ஆட்சி புரிகின்றது); தீயூட்டப்பட்டதனால் அது உண் டானதாதலால் அதன் மூலத்தகனத்திலிருந்து வானசோதி களின் உட்பொருள் பெறப்பட்டது. இவற்றுள் சூரியனே மிகப்பெரியது. சந்திரன் இரண்டாவது பெரியது. ஏனையவை யாவும் வெவவேறு அளவினவாய் இருந்தன. விண் சாய்ந் திருந்ததெனவும், பூமியில் சூரியன் ஒளியேற்படுத்தியதென வும், அது காற்றை ஒளிபோகவிடும் இயலபுடையதாகியதென வும், நிலத்தை வறட்சியுடையதாக ஆக்கியதெனவும் அவர் கூறுகிறார்; எனெனில் அது முதலில் பரிதியில் உயர்வாகவும் மத்தியில் பள்ளமாகவும் உள்ளவொரு தடாகத்தைப் போன் றிருந்தது. பூமி எல்லாப் பகுதிகளிலும் சமமான மட்டதை உடையதாயிருப்பின், சூரியனது தோற்றத்தையும், மறைவை யும் எல்லா மக்களும் ஒரே நேரத்தில் பாக்கலாமெனவும், ஆனால் உண்மையில் அவ்வாறு நடக்காதிருபபதிலிருந்து, பூமி யின் மத்தியில் ஓர் பள்ளம் இருக்கிறதென்பது தெளிவாகின்ற தெனவும் அவர் கூறுகிறார். விலங்குகளைப் பொறுத்தவரை யில், பூமியில குளிரும், சூடும் கலந்திருந்த கீழ்ப்பகுதியில் முதலிற் சூடேறியபோது பல உயிரினங்கள்—குறிப்பாக மனிதர் கள்—எழுந்தன. இவை யாவும் ஒரே தன்மையுடைய உயி ரையுடையனவாயும், சகதியிலிருந்தே தமது உணவைப் பெறு வனவாயும் இருந்தன; இவை பலகாலத்திற்கு உயிர் தரித் திருக்கவில்லை. பின்னர் சந்ததி விருத்தி என்பதும் உண் டாகலாயிற்று. மனிதர்கள் மற்ற உயிரினங்களிலிருந்து வேறு ஜித் தம்முள்ளே தலைவர்களையும், சட்டங்களையும், கலைகளையும் ஏற்படுத்தி, நகரங்களையும் இன்னும் பலவற்றையும் உண்டாக் கினர். எல்லா விலங்குகளிலும் நூசு சமமாகவே உள்ளது.

விலங்குகள், மனிதர்கள் ஆகியவாவும் நூசுவை உபயோகிக் கிறார்கள் ; சிலர் விரைவாகவும், சிலர் ஆறுதலாகவும் அதைப் பயன்படுத்துகின்றனர்".

இடையோசினிசு எவ்வாறு அனக்சிமினிசுவின் கொள்கைக் குள் சில அனக்சகோரச கருத்துக்களைப் புகுத்த முயன்றாரோ, அதுபோலவே அயோனிய கொள்கையோடு குளிரும் சூடும், ஐதும் அடர்த்தியும் ஆகிய முரண்பாடுகளைச் சேர்ப்பதனாலும், அனக்சகோரசுவின் கொள்கையில் நூசுவைப் பிறபொருள்களி லிருந்து இனங்கண்டு கொள்ள உதவிய அதன் எல்லையை நீக்குவதன் மூலமும், ஆக்கேலசு அனக்சகோரச வாதத் தைப் பழைய அயோனிய கொள்கைகளுக்கு ஒற்றுமையுடைய வொன்றாக மாற்ற முனைந்தார் என்பது இப்பகுதியிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது. இக்காரணத்தினாலேயே போலும், இவரது கொள்கையில் நூசுவே உலகின் கருத்தாவெனக் கூறப் படவில்லை. அத்தகையவொரு சத்தி அவசியமில்லை யெனு லியூசிப்போசு நிரூபித்திருந்தார். ஆக்கேலசுவுக்கும் அவரது முன்னோடிகளுக்குமிடையே யுள்ள இவ்விருவகைத் தொடர்பை நோக்குகையில், எண்ணிறந்த உலகங்களிருக்கின்றனவென இவர் நம்பினாரெனும் ஈத்தியோசுவின் கூற்றை நம்பலாமெனத் தோன்றுகிறது ; அனக்சகோரசுவும், பழைய அயோனியர்களும் இக்கொள்கையையுடையோரா யிருந்தனராதலின்.

193. ஆக்கேலசுவின் அண்டவியலிலும், இடையோசினிசுவின் கொள்கையிற் காணப்பட்ட, அக்காலத்து இயல்புகளான பிற போக்கு, சமரசவாதம், விரிவான ஆராய்வு என்பனவற்றை நாம் காண முடிகிறது. மெய்யியல் ஒரு மேலே செல்லமுடியாத நிலையை அடைந்துவிட்டதெனவும், வந்தவழியே திரும்புவதன் மூலமே அது அங்கிருந்து தப்ப முடியுமெனவும் அக்காலத்து எற்பட்டிருந்தவோர் உணர்ச்சியையே, நாம் சமோசுநாட்டு இப்போன், இரோராநாட்டு இடாயோசு என்போரது சிந்தனைகளிற் காண முடிகிறது. எபிசசுவிலிருந்த எரக்ளீட்டிய வாதிகள், பிற கருத்துக்கள் தம்மை அணுக முடியாதவாறு, தமது கொள்கை யாலேயே தமக்கு அரணமைத்துக் கொண்டவர்போல விருந் தனர். எரக்ளீட்டியவாதத்தின் முரணுரைகளையும், ஆழமற்ற பகுதிகளையும் பெரிதுபடப் பூனைந்தும், விருத்தி செய்தும் அவர் தம் காலத்தைக் கழித்தனர்[1] ஒரே ஆற்றினுள் இருமுறைகள் முடிவுரை

1. இவர்களைப் பற்றிய வேடிக்கையானவோர் வருணனைக்கும் பிளேட்டோவின் Theaet. 179 e. பார்க்க. மொழி, சொல்லணியியல் என்பனவற்றில் எறிபட்டிருந்த புதிய ஆர்வம் இவர்களைச் சொறகளின இயல்புபற்றித், தமது கற்பனைக்கும் விருப்பத்திற்குமேறறவாறெல்லாம் கூறவைத்தது. பிளேட்டோவின் சோத்தில் சில் இதுவே நையாண்டி செய்யப்பட்டுள்ளது.

கால் வைக்க முடியாது என ஏரக்கிளிட்டசு கூறியது (பகுதி 84) போலக் கூறுவதுடன் நின்றுவிடுவது போதுமெனக் கிராத்திலசு கருதவில்லை[1]; ஒருமுறை கூட ஆற்றினுள் கால் வைக்க முடியாதென்பது அவரது வாதம். உண்மையென்னவெனில், பழைய கற்பிதங்களையே இன்னமும் தழுவிக்கொண்டிருந்த இக்காலத்து மெய்யியலாளரால புதிய கொள்கைகள் எதையும் பிறப்பிக்க முடியவில்லை; தேலிசு எழுப்பிய வினாவிற்கு லியூகிப்போசு தந்த விடை முடிவானவொன்றாக அமைந்தது.

இவ்வாறு தம்முள் முரண்பட்டிருந்த கொள்கைகள் யாவும் அதென்சு வரைக்கும் பரவினவென்பதும், அங்கேதான் அயோனியாவிலெழுந்த பலதரப்பட்ட கொள்கைகளுக்கும், மேற்கேயிருந்து வந்த கொள்கைகளுக்கும் தொடர்பேற்பட்டதென்பதும் கவனித்தற்குரியது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில்; பூமி தட்டையானதா அல்லது வட்டமானதா, "நாம் சிந்திக்க உத்வ்வது" காற்று அல்லது குருதியா எனபது போனற வினாங்கள் பற்றி அதென்சு நகரில் மிகவும் வன்மையாக வாதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இக்காலத்து அங்கு வாழ்ந்த சோக்கிரதர் இளவயதினராயிருந்தார். அவரைப் பற்றி நாம் எத்தனைய கருத்துக்கொண்டிருந்தாலும், பிற்காலத்தில் இவ்வினாங்கள் மிகவும் சேய்மையானவையாக அவருக்குத் தோன்றியிருந்தாலும், இக்காலத்தில் இவ்விவாதங்களில் அவர் சற்றேனும் சிரத்தையெடாதிருந்திருபபாரென்பது சிறிதும் நம்பமுடியாததாகும். பிளேட்டோ தனது பீடோவில் இதுவே உண்மையென்ச் சோக்கிரதரைக் கூற வைக்கிறார். அந்நூலில் சோக்கிரதர் குறிப்பிடும் பிரச்னைகள், அதென்சுநகரில் அக்காலத்து வாழ்ந்த மனிதர்களது சிந்தனைக்கு மட்டுமே ஆராய்தற்குரிய விடயங்களாகத் தோன்றியிருக்க முடியும்.[2] விஞ்ஞானச் சாயலுடைய பிரபஞ்சம் யாவும் அதென்சில் முடிவடைந்தன. அதெனியரான சோக்கிரதரிலேயே, வேறெரு கண்ணோட்டத்திலிருந்து புதிதாகச் சிந்திப்பதன் மூலமே இவர்கள் எழுப்பியவினாக்களுக்கு விடைகள் பெறமுடியுமென்பதை உணரமுடிந்தது.

1. அவர் பேசுவும் மறுத்தாரெனவும், தனது விரலகளை மட்டுமே அசைத்தாரெனவும் கூறப்படுகிறது.

2. பீடோவின் எனது பதிப்பில், (ஒக்சுபோட்டு, 1911) இப்பகுதிக்கான குறிப்புரையில் இவ்விடயத்தை விரிவாக விளக்க முயனறிருக்கிறேன். தான் பிறப்பதற்கு இருபத்தைநது ஆண்டுகளுக்கு முன்பு விஞ்ஞானததுறை எவ்வாறிருந்தது எனபதை, எவ்வகைக் காலமுரணுமினறிப் பிளேட்டோவினால வர்ணிக்க முடிந்ததென்பது, அவரது வரலாற்றுணாவின சிறப்புகளுள நலலவோர் எடுத்துக்காட்டெனக.

அரும்பத அகரவரிசை

அ

அக்கௌசுமாத்தா ..	.. Akousmata
அக்கௌசுமாத்திகள் ..	.. Akousmatics
அகாதன் ..	.. Agathon
அகெனோர் ..	.. Agenor
அச்சியற்சுழற்சி ..	.. Axial revolution
அச்சு ..	.. Axle
அசுகிளெப்பியாட்டுக்கள்	.. Asklepiads
அட்டசுரம் ..	.. Octave
அடர்த்தியுறல் ..	.. Condensation
அடிக்கலம் ..	.. Hull (ship)
அண்டம் ..	.. Macrocosm
அண்டவியல் ..	.. Cosmology
அணுவாதிகள் ..	.. Atomists
அதிரவியம் ..	.. Nothing
அதென்சு ..	.. Athens
அப்பொலசி ..	.. Apology
அப்பொலோடரசு ..	.. Appollodoros
அப்பொலோனியசு ரோடியசு	.. Appollonios Rhódios
அபுதேராமரபினர் ..	.. The school of Abdera
அபுரொடைற்று (காதற்றெய்வம்)	.. Aphrodite
அம்மோனியோசு ..	.. Ammonios
அமாசிசு ..	.. Amasis
அய்தோலியா ..	.. Aitolia
அயாம்பிளிகோசு ..	.. Iamblichos
அயோனியா ..	.. Ionia
அரித்தாக்கோசு ..	.. Aristarchos
அரித்தோசெனசு ..	.. Aristoxenos
அலகு ..	.. Unit
அல்குமையோன் ..	.. Alkmaion
அலெக்சாந்தர் ..	.. Alexander
அலைவு ..	.. Oscillation
அளவையியல் ..	.. Logic

அன்றிக்தோன் ..	.. Antichthon (Counter earth)
அனக்சிமாந்தர் ..	.. Anaximander
அனக்சிமினிசு ..	.. Anaximenes
அனக்சகோரசு ..	.. Anaxagoras
அனங்கே ..	.. Ananke
அனந்தம் ..	.. Infinity
அனுபூதிநெறி ..	.. Mysticism
அனைத்துமிறையெனும் வாதம்	.. Pantheism

ஆ

ஆக்கியர் ..	.. Achaeans
ஆக்கைற்றசு ..	.. Archytas
ஆகாரம் ..	.. Mode
ஆண்டுமானம் ..	.. Calendar
ஆதல் ..	.. Becoming
ஆதிகாரணம் ..	.. Meterial cause
ஆப்பெடொனாட்டுக்கள்	.. Arpedonapts
ஆலயவிதிகாசம் ..	.. Temple legend

இ

இசைவு ..	.. Harmony
இடப்பெயர்ச்சியியக்கம்	.. Motion of translation
இடமாறு தோற்றம் ..	.. Parallax
இடாவின் ..	.. Darwin
இடுகோள் ..	.. Postulate
இடைக்கோட்பாடு ..	.. The doctrine of the mean
இடையனிசோசு ..	.. Dianysos
இடையோசினிசு ..	.. Diogenes
இடையோசினிசு லயாத்தியசு	.. Diogenes Laertios
இப்பொலிட்டசு ..	.. Hippolytos
இப்போகிறத்திசு ..	.. Hippocrates
இப்போன் ..	.. Hippon
இயலுருத்தோற்ற அமைப்பு	.. Perspective
இயாத்திரிகா ..	.. Iatrika
இயூக்கிளிட்டு ..	.. Euclid
இயூசிபியோசு ..	.. Eusibios

இயூதிமினிசு	..	.. Euthymenes
இயூரிப்பிடிசு	..	.. Euripides
இயூறைத்தோசு	..	.. Eurytos
இராசி மண்டலம்	..	.. Zodiac
இராசியின் சாய்வு	..	.. Obliquity of the Zodiac
இராட்டறசு	..	.. Tartaros
இருப்புவட்டம்	..	.. Circle of existance
இறையியல்	..	.. Theology
இல்பொருள்	..	.. What is not
இலாம்புசகோசு	..	.. Lampsakos
இழுவைவிசை	..	.. Tension
இழையம்	..	.. Tissue
இறைன்	..	.. Rhine

ஈ

ஈசியன்	..	.. Aegian
ஈத்தியோசு	..	.. Aetios
ஈதர்	..	.. Aether
ஈலியவாதம்	..	.. Eleaticism
ஈலியா	..	.. Elia
ஈரோசு	..	.. Eros

உ

உட்கிடை	..	.. Implication
உடல்வாதம்	..	.. Corporealism
உடலுள் பூரணம்	..	.. Corporeal Plenum
உடனியலுகின்ற காரணம்		.. Concomitant cause
உலக ஆன்மா	..	.. World Soul
உளவியல்	..	.. Psychology
உறுபொருள்	..	.. Product

ஊ

ஊட்டம்	..	.. Nourishment
ஊற்றுணர்வு	..	.. Sense of touch

எ

எக்காதையோசு	..	.. Hekatios
எசியொட்டு	..	.. Hesiod

எசுத்தியா ..	.. Hestia
எட்னா ..	.. Etna
எடுகூற்று ..	.. Premise
எடுகோள் ..	.. Assumption
எடுப்பு ..	.. Proposition
எண் குறியீடு ..	.. Numerical symbolism
எண், திண்ம ..	.. Number, Solid
எண், தொகுப்பு ..	.. Number, Composite
எண், பகா ..	.. Numbers, Prime
எண், பல வடிவ ..	.. Numbers, Polygonal
எதிர்மறையன்மை விதி	.. Law of non-contradiction
எதிர்மாற்றம் ..	.. Converse
எபிகூரசு ..	.. Epicurus
எபிகூரியர் ..	.. Epicureans
எபிசோசு ..	.. Ephesos
எரக்கிளேட்டசு ..	.. Herakleitos
எரொடோதசு ..	.. Herodotus
எல்லாம் ..	.. All
எல்லையற்றது ..	.. Infinite
எலனிசம் ..	.. Hellenism

ஏ

ஏகம் ..	.. One
ஏகெல் ..	.. Hegel
ஏசியா திரியாடா ..	.. Hagia Triada
ஏடிசு ..	.. Hades
ஏதிரியாத்திக்கடல் ..	.. Adriatic sea
ஏமோடரசு ..	.. Hermodoros
ஏர் ..	.. Er, (Plato's myth of)
ஏர்மிசு ..	.. Hermes

ஐ

ஐங்கோணச்சக்கரம் ..	.. Pentagram
ஐசிசு ..	.. Isis
ஐசோக்கிறத்திசு ..	.. Isokrates
ஐதாதல் ..	.. Rarefaction

ஐப்பபோரியர்	..	.. Hyperborean
ஐயுவாதி	..	.. Sceptic
ஐரிசு	..	.. Iris
ஐனெசிடெமோசு	..	.. Ainesidemos

ஒ

ஒசிரிசு	..	.. Osiris
ஒட்டுவமை	..	.. Allegory
ஒத்திசைகள்	..	.. Consonances
ஒருதளவுருவம்	..	.. Plane figure
ஒருமை	..	.. Unity
ஒருமைக்கோட்பாடு	..	.. Monistic hypothesis
ஒழுக்கவியல்	..	.. Ethics
ஒழுக்கு	..	.. Orbit
ஒறறைநாண்கருவி	..	.. Monochord

ஓ

ஓபிக்குகள்	..	.. The Orphics
ஓபிசம்	..	.. Orphism
ஓமர்	..	.. Homer
ஓரிறைவாதம்	..	.. Monotheism
ஓருடல்வாதம்	..	.. Corporeal monism

ஔ

ஔரானசு	..	.. Auranos

க

கசியிழையம்	..	.. Cartilage
கண்மாயம்	..	.. Illusion
கணியம்	..	.. Quantity
கத்மோசு	..	.. Kadmos
கதிராளி	..	.. Iris (eye)
கபம்	..	.. Phlegm
கயோசு	..	.. Chaos
கருத்துக்குறிப்பு	..	.. Connotation
கருத்துவாதம்	..	.. Idealism

கருதுகோள்	..	.. Hypothesis
கருப்பிண்டம்	..	.. Foetus
கருவியல்	..	.. Embryology
கல்டியர்	..	.. Chaldeans
கவர்பாட்டுவாதம்	..	.. Argument from dichotomy (Zeno)
கழகம்	..	.. The Academy
கழிமுகம்	..	.. Delta
கற்குழி	..	.. Quarry

கா

காரியன்	..	.. Karyan
காலமானம்	..	.. Chronology
காலவழு	..	.. Anachronism
காற்று	..	.. Wind
கான்று	..	.. Kant

கி

கியூமே	..	.. Cumae
கிரகணம்	..	.. Eclipse
கிளாசொமெனை	..	.. Klazomenai
கிளிமென்று	..	.. Clement
கிளெப்சைட்ரு	..	.. Klepsydra
கிளேத்தேற்றம்	..	.. Corollary

கீ

கீபிசு	..	.. Kebes

கு

குடம்	..	.. Socket
குடியரசு	..	.. Republic
குரொனோசு	..	.. Kronos
குரோட்டன்	..	.. Kroton
குரோத்தே	..	.. Grote

கூ

கூம்பகம்	..	.. Pyramid

கெ

கெர்ரேசா	..	.. Geresa

கை

கைதியா	..	.. Scythia
கைப்பிரிசு	..	.. Kypris
கையா	..	.. Gaia

கோ

கோளம்	..	.. Sphere

ச

சகடவோட்டம்	..	.. Cyclic motion
சங்கிராந்தி	..	.. Solstice
சடவாதம்	..	.. Materialism
சதுப்பொருள்	..	.. Reality
"சதம்" மொழி	..	.. 'Satem' Language
சமராத்திரம்	..	.. Equinox

சா

சாடெயிசு	..	.. Sardeis
சாதாரண அறிவு	..	.. Commom sense
சாமோசு	..	.. Samos
சார்பு	..	.. Relation
சாரம்	..	.. Essence

சி

சிசரோ	..	.. Cicero
சிம்பிளிசியசு	..	.. Simplicius
சிமபோசியம்	..	.. Symposium
சிமோனிடிசு	..	.. Simonides
சியசு	..	.. Zeus
சிறுகரடியுடுத்தொகுதி		.. Little Bear Constellation
சினன ஆசியா	..	.. Asia Minor

சு

சுதோய்க்கர்	..	.. Stoics

சுரோணிதம் ..	.. Female semen
சுழி ..	.. Vortex

சூ

சூத்தோசு ..	.. .. Xouthos
சூனியம் ..	.. .. Zero

செ

செகுதசு ..	.. Sextus
செம்பக்கம் ..	.. .. Hypotenuse
செல்லா ..	.. Zeller
செவ்வகவுரு ..	.. Oblong figure
சென். கிரெகோரி நேசியான்சீன்	.. St.Gregory Nazianzene
சென்சோரினசு ..	.. Censorinus
" சென்ரம் " மொழி	.. 'Centum' Language
செனோபனிசு ..	.. Xenophanes
செனோபிலோசு ..	.. Xenophilos

சே

சேனோ ..	.. Zeno

சை

சைரோசு ..	.. Syros

சொ

சொபோக்கிளிசு ..	.. Sophocles

சோ

சோக்கிரதர் ..	.. Socrates
சோதியன் ..	.. Sotion

டி

டிமீத்திரியசுபெலேரியசு	.. Demetrios Phalereus

டீ

டீலோசு ..	.. Delos

டொ

டொரியர்கள் ..	.. Dorians

த

தசாங்கநாற்கணம் ..	.. Tetraktys of the dekad
தமாசுகியோசு ..	.. Damaskios
தனிமம் ..	.. Element

தா

தாரகம் ..	. Sustenance
தாகெய்ரோசு ..	. Stageiros
தாபகர் ..	Founder
தார்க்கீகன், சோபிட்டு	.. Sophist
தாரசு ..	.. Taras
தானரி ..	.. Tannery
தானேயுளவாயபொருள்	.. Thing-in-itself

தி

திண்மப்பொருளளவையியல்	.. Stereometry
திமாயசு ..	.. Timaeus
திமாயோசு ..	.. Timaios
தியனே ..	.. Theano
தியோபிறசுத்தோசு ..	.. Theophrastos
திராபோ ..	.. Strabo
திருக்குமா ..	.. Drachma

தீ

தீபிசு ..	.. Thebes

து

துரோமதீசு ..	.. Stromateis

தூ

தூய்மையாக்கம் ..	.. Purification
தூலப் பொருள் ..	.. Matter

தெ

தெமிசுத்தியோசு ..	.. Themistios

தெமோகிரித்தோசு	..	.. Demokritos
தெரக்கிலிடிசு	..	.. Derkyllides
தெலிசு	..	.. Telys

தே

தேராச்சடப்பொருள்	..	.. Indeterminate matter
தேராவிரட்டை	..	.. Indeterminate Dyad
தேலிசு	..	.. Thales
தேவபாரம்பரியம்	..	.. Theogony

தை

தையனு	..	.. Diana

தொ

தொடுகையுணர்வு	..	.. Sense of Touch

தோ

தோறறப்பாடுகள்	..	.. Phenomena

ந

நபுனசார்	..	.. Nabonassar
நவப்பிளேட்டோதரிசனம்		.. Neoplatonism
நவபைதாகரசவாதம்		.. Neopythagoreanism
நவபைதாகரசவாதிகள்		.. Neopythagoreans

நா

நாளம்	..	.. Vein
நாற்கணம்	..	.. Tetraktys
நானகு மூலகங்கள்	..	.. The four roots (Empedocles)

நி

நிக்கொமாக்கோசு	..	.. Nikomachos
நிமித்தகாரணம்	..	.. Efficient cause
நிமிளை	..	.. Amber
நியமகாரணம்	..	.. Formal cause
நிரீச்சுரவாதி	..	.. Atheist
நிலைக்குத்து	..	.. Gnomon

நிலையியக்கவியல்	..	.. Mechanics
நிறைவிதி எடுப்பு	..	.. Universal affirmative

நீ

நீர்த்தம்பம்	..	.. Waterspout

நு

நுண்டொளை	..	.. Pore
நுரைக்கல்	..	.. Pumice stone

நூ

நூசு	..	.. Nous
நூமினியோசு	..	.. Noumenios

நெ

நெடுங்கணக்குக் குறியீடு		.. Alphabetical notation

நே

நேர்வு	..	.. Fact
நேரியக்கம்	..	.. Direct motion

ப

பக்காய்	..	.. Bakchai
படிகம்	..	.. Crystal
பதி	..	.. God
பதிவு	..	.. Record
பரசெல்சசு	..	.. Paracelsus
பல்லிறைவாதம்	..	.. Polytheism
பற்றுறுதலை	..	.. Retention
பன்னிருமுகத்திண்மம்		. Dodecahedron
பனோப்தை	..	.. Panoptai

பா

பார்மனிடிசு	..	.. Parmenides
பாட்டர்கள்	..	.. Spartans
பாட்டா	..	.. Sparta
பாடியகாரர்	..	.. Commentator
பாயம்	..	.. Flux
பால்வரைமுதல்வி	..	.. Holder of lots (Goddess)

பால்வழி மண்டலம்	..	The Milky Way
பாவுபடி	..	Lintel

பி

பிண்டம்	..	Microcosm
பித்தம்	..	Bile
பிலோ	..	Philo
பிலோலெசு	..	Philolaos
பிளேயசு	..	Phleious

பீ

பீடோ	..	Phaedo
பீதரசு	..	Phaedrus

பு

புகார்	..	Mist
புதிதுகாணி	..	Inventor
புரொதாகரசு	..	Protagoras
புரோய்டெந்தால்	..	Freudenthal
புல்லேடு	..	Papyrus
புலனுணர்வு	..	Perception
புவிமையக்கருதுகோள்	..	Goe etric hypothesis
புவிமையவிடமாற்றம்	..	Geocentric parallex
புளுட்டாக்கு	..	Plutarch

பூ

பூசல்	..	Strife
பூரணம்	..	Plenum

பெ

பெரிகைடிசு	..	Perekydes
பென்ரல்பா	..	Pentalpha (Pentagram)

பே

பேராண்டு	..	The Great Year

பை

பைதாகரசு	..	Pythagoras
பைவாட்டர்	..	Bywater

பொ

பொசெய்டோனியோசு	Poseisdonios
பொதுவளவின்மை	Incommensurability
பொயோத்தியா	Biotia
பொலிகிறுத்திசு	Polykrates

போ

போபைரி	Porphyry
போலிநியாயத்தொடை	Paralogism

பௌ

பௌதிகவதீதம்	Metaphysics

ம

மயக்கம்	Confusion
மறுதலை	Converse
மனமுடுக்கு	Impulse
மனிதனது இயல்பு	The Nature of Man

மா

மாகைட்டுக்கள்	Margites
மாற்று	Exchange
மாறுவிகிதம்	Constant ratio

மி

மிமினமோசு	Memnermos
மிலட்டசு	Miletus
மினோவர்	Minoans

மீ

மீடி	Mede

மு

முக்காலி	Tripod
முரண்நிலை ஆய்வுமுறை	Dialectical method
முரண்பாடுகள்	Opposites

முரணுரை	..	.. Paradox
முழுமை	..	.. The Whole
முற்கற்பிதம்	..	.. Presupposition
முறகோட்டம்	..	.. Prejudice
முறைப் பெருந்தீ	..	.. Periodic Conflagration

மூ

மூலக் கலவை	..	.. Original mixture
மூலக்கூறு	..	.. Molecule
மூலகம்	..	.. Element
மூலைவிட்டம்	..	.. Diagonal

மெ

மெய்யியல்	..	.. Philosophy
மெய்யுணர்வேந்து	..	.. The Philosopher King
மெலிசசு	..	.. Melissos
மெற்றபொந்தியோன்		.. Metapontion
மென்சவ்வு	..	.. Membrane
மென்தோல்	..	.. Membrane

மே

மேமனடை	..	.. Mermanadai
மேனே	..	.. Meno

மை

மைசீனியா	..	.. Mycenea
மையநாட்டவிசை	..	.. Centripetal
மையநீக்கவிசை	..	.. Centrifugal force
மைலீசியர்	..	.. Milesians

மொ

மொசாய்க்க	..	.. Mosaical
மொசுகிய	..	.. Moschical
மொனுட்டு	..	.. Monad

மோ

மோசேசு	..	.. Moses

யோ

யோச்சியாசு	..	.. Georgias

லி

லிடியர்	..	.. Lydians
லியூகிப்போசு	..	.. Leukippos

லை

லைசிசு	..	.. Lysis

லோ

லோபெக்கு	..	.. Lobeck

வ

வக்கரிப்பியக்கம்	..	.. Retrograde motion
வக்கிரம் (வானியல்)	..	.. Retrogression
வட்டத்தின் பரப்புக்காண்முறை		.. Quadrature
வரம்பற்றது	..	.. Boundless
வரன்முறைநூல்	..	.. Successions
வளி	..	.. Air
வளிமண்டலவியல்	..	.. Meteorology

வா

வாதவியல்	..	.. Dialectic
வாதாட்டங்கள்	..	.. Disputation
வாய்ப்பு	..	.. Validity
வாயடை நியாயம்	..	.. Argumentum ad Silentium
வாரோ	..	.. Varro
வானசோதிகள்	..	.. Heavenly bodies
வானமையரேகை	..	.. Celestial Equator
வானியல்	..	.. Astronomy

வி

விகிதசமம்	..	.. Proportion
விகிதமுறுக்கணியம்	..	.. Irrational quantity
விகிதமுறுமூலம்	..	.. Surd
விகிதமுறு வெண்	..	.. Irrational number

விதைகள்	..	.. Seeds (Anaxagoras)
விம்பம்	..	.. Image
விருத்தி (பக். 2, குறி 2)		.. Augment

வெ

வெதுசுத்தாபிளாக்கிட்டா		.. Vetusta Placita
வெளி	..	.. Space
வெளிப்பாடு	..	.. Apocalypse
வெளிமூச்சு	..	.. Exhalation
வெளியொழுக்குகள்		.. Effluences

றெ

றெசியோன்	..	.. Rhegion

ABBREVIATIONS

Arch,	..	**Archiv fur Geschichte der Philosophie,** Berlin, 1888–1920
BEARE.	..	**Greek Theories of Elementary Cognition,** by John I. Beare. Oxford, 1906.
DIELS **Dox.**	..	**Doxographi graeci.** Hermanus Diels. Berlin, 1879.
DIELS **Vors.**	..	**Die Fragmente der Vorsokratiker,** von Hermann Diels, Dritte Auflage. Berlin, 1912.
COMPERZ.	..	**Greek Thinkers,** by Theodor Gomperz, Authorised (English) Edition, vol. i, London, 1901.
JACOBY.	..	**Apollodors Chronik,** von Felix Jacoby (**Philol. Unters.** Heft. xvi.) Berlin, 1902.
R. P.	..	**Historia Philosophiae Graecae,** H. Ritter et L. Preller. Editio octava, quam curavit Eduardus Wellmann. Cotha, 1898.
ZELLER.	..	**Die Philosophie der Griechen, dargestellt von Dr. Eduard Zeller.** Erster Theil, Funfte Auflage. Leipzig, 1892.

அகரவரிசை

அ

அகிரகாசு, 3, 206 தொ.
அகிலிசு, 38
அகிலிசும ஆமையும, 328
அகெளசுமாதத்தா, 101, 104, 296
அகெளசுமாத்திகள், 99, 104
அங்கம (பைதாகரசு) 113, 326 தொ.
அசைவினமை, " இயக்கம் " பார்க்க
அடாததியுறல், " ஐதாதல் " பாாக்க
அண்டவியல ஆர்வம, 53, 242, 276, 282, 362
அண்டவுறபதிதியிலகள, 8 தொ.
அணுக்கள :
இயகம், 15, 65, 352, 357
நிறை, 354 தொ.
அணுவாதம, 189 கு, 191, 348 தொ.
அதெனசு, 331, 374 ;
அனக்சகோரசு, 269 ;
எம்பிடோக்லிசு, 212 ;
பார்மனிடிசுவும சேனோவும், 177, 321 கு.
அதெனகரசு, 38
அந்திரோக்கைடிசு, 296
அநதிரோன (எலிசோசு) , 92
அநதோனியசு இடையோகினிசு, 92
அபபொலோடரசு, 42 ;
அனகசகோரசு, 264
அனகசிமாந்தா, 55
அனகசிமினிசு, 75
எம்பிடோக்லிசு, 207, 207 கு. ;
எரகலிடட்சு, 135 ;
செனோபனிசு, 117 ;
பாமனிடிசு, 177 ;
மெலிசசு, 331 ;
லியூகிபபோசு, 341.
அப்பொலோனியோசு (தையனு) 92 கு. 2, 100
அப்போலோ-ஆகியாதெய்வம், 5
அபபோலோனியா, 57, 364 கு.
அபாரிசு, 85, 95 கு. 2
அபுதேரா : 341 தொ.
அபுதேரா மரபு : 65
அமாசிசு, 45, 93
அமெனியாசு, 178
அயரோன, 118
அயாம்பிளிகோசு,
"பைதாகரசுவின வாழ்ககை", 91, 105 கு. 1
அயோனியா கட்டிடவியல், 45 கு.
அயோனியா : 3
அண்டவியல், 116 ;
கடடிடகலை, 43 கு. 1
தனபியல உணர்வு, 10 ;
லெளகிகம், 15 தொ, 84
அரிதாகோசு (சாமோசு), 311
அரிதியாசு, 85, 95 கு. 2
அரித்தோசெனசு :
ஆக்கைறருசு, 290
இப்போன, 363 கு. 1 ;
இயூறைத்தோசு, 105 கு. 291 ;
பிளேடோ, 293 தொ ;
பைதாகரசு, 91, 93 கு. 1, 94, 96, 99 கு. 1 ;
பைதாகரசவாதிகள், 290, 319
அரித்தோதில், 34 ;
அனகசகோரசு, 265, 277, 278, 280 ;
அனகசிமாந்தா, 59, 60 தொ, 62, 67 ;
அனக்சிமினிசு, 81 ;
அறுகமையோன, 202 ;
இடைக்கோட்பாடு, 117 கு 2 ;
இடையோகினிசு, 367 ;
இப்பாசோசு, 114, 149 ;
இப்போன், 363 ;
இறையியல்வாதிகள், 9 தொ ;
எகிப்தியர் கேத்திரகணிதம, 22

எணிகள, 105 தொ ;
எம்பிடோக்கிளிசு, 208, 210, 240, 241, 243, 244, 245, 2 6 கு 3, 248, 251, 252, 253, 254, 261 ;
எரகிளீட்டசு, 151 கு 1, 153, 165, 167
செனோபனிசு, 130 தொ, 132 தொ ;
சேனோ, 322, 323, 327, 328
தெமோகிரிதோசு, 354 ;
தேலிசு, 52–55 ;
நித்திய இயகம, 14, 15 கு 1 ;
நைல் நதிபெருகு, 49 ;
பாபிலோனியா வானிலை, 26 ;
பாமினைடிசு, 178, 190, 191, 194 தொ.
புவியீர்ப்பு, 352, 353
பைதாகரசு, 91, 92 கு 3, 95 கு 2 ;
பைதாகரவாதிகள், 97 கு 2, 113, 291, 297 தொ, 302, 303 தொ, 315, 317 ;
மெலிசசு, 336 தொ, 338, 339 ;
லியூகிப்போசு, 341, 348 ;
வானகோளங்கள, 198
அரித்தோபனிசு, இடையோசினிசுபற்றி, 342, 365
அலுகமையோன, 90, 161, 202–5, 211, 26 , 269, 308, 343
அலுகிடமாசு, 90, 211, 270 கு 2, 322
அலெகசாந்தர (அபுரொடிகியாசு), 36
அனசிமாண்தா, 68
செனோபனிசு, 132
அலெகசாநதர் (அயதோலிய), 268
அளவைகள, 158 தொ, 169
அளவையியலின் தோற்றம், 1
அனிகிதோன, 308, 315 தொ
அனக்சகோரசு : 264–289 ;
அனகசிமினிசு, 265, 279, 283, 285 ;
ஆதிகால அண்டவியல, 116, 308 தொ ;
இயூரிபபிடிசு, 268
ஈலியா, 275, 320 ;
எம்பிடோக்கிளிசு, 276, 278, 279, 280, 282, 286 ;
எரகிளீட்டசு, 278, 281 ;
சூரிய ஒளி, 186 கு 1 ;
சநதிர கிரகணங்கள, 316 ;
சேனோ, 361
சோகிரதர், 269, 280
நைல்நதி, 50
பெரிகிளிசு, 267 தொ ;
லியூகிபபோசு, 342
அனகிமாநதர, 55–75 ;
கடலுயிரியறவுறையில் கண்ட உண்மை, 28 ;
செனோபனிசு, 119
அனகிமினிசு, 75–83, 187
மெயயியனமுறை, 83, 266, 316, 341, 365 கு 1

-ஆ

ஆக்கிபபோசு, 96
ஆகியா, 2 கு 1, 5, 85 ;
பொலிபியசுவைசசோந்தவர், 87
ஆக்கேலசு, 269–3 ;
அனகசகோரசு, 373
ஆக்கைறருசு, 290
ஆணடு, " பேராணடு " பாரக்க
ஆணடுமானம
பபிலோனியர், 25
தேலிசு, 52
ஆமேசு, 21 தொ ; 51
ஆபபெடொனைட்டு, 110
ஆகுகேடிய சைபபிரிய மொழி, 5 கு 2
ஆனமா (மனித)
ஓபிசு, 86
அனகசிமினிசு, 79
அலுக்மையோன, 204
ஓர் " இசைவு ", 307 தொ.
சோக்கிரதர், 88
ஆனேபியசு. 41

-இ

இக்கேதாசு, 311, 311 கு 1
இசை, பைதாகரசு, 103
இசையியல், 103, 316
இடாயோசு, 364
இடைகோட்பாடு, (அரித்தோதிலினது) 117 கு 3
இடையோசினிசு (அபபோலோனிய) , 68, 83, 364–371 ;
அனகசகோரசு, 368, 369

எம்பிடோக்ஸிஸு, 368
லியூஸிப்போஸு, 370
இடைனிசோஸு, 86
இதயம்
அனுக்மையோன், 203
எம்பிடோகஸிஸு, 211
இந்திய மெய்யியல், 21, 87 கு 1
இப்பாகோஸு, 142, 196, 305, 307
இப்பொலோட்டஸு, 40 ;
அனக்சகோரஸு, 283
அனக்சிமாந்தர், 56
அனக்சிமினிஸு, 82
எரக்ஸிஸ்ட்டஸு, 148
இப்போக்ரத்திசு (கொசு) 29, 261 கு 1
இப்போன, 363–4
தேலிசு, 363
பைதாகரசர், 363 கு 1
இயக்கம
அனக்சகோரஸு, 280
எம்பிடோக்ஸிஸு, 237 தொ
சேனோ, 328
நித்திய 14, 65
பார்மினைடிசு, 187, 190
மெலிசு, 337
லியூஸிப்போஸு, 352
இயூகஸிடெடு, 111
இயூசிபியோஸு, 19, 38, 40, 41
இயூடொக்சோசு
கோளங்கள், 66 கு1, 198 ;
விதிதசமம், 111
இயூதிமினிஸு, 50
இயூமெலோஸு, 47 கு 1, 50 கு 3
இயூரிப்பிடிசுவும் அனக்சகோரசுவும், 268
இயூறைத்தோசு, 105 தொ, 105 கு 1, 112, 291, 292
இரட்டை ஒற்றை, 300 தொ
இரத்தம் :
இடையோசினிஸு, 367
எம்பிடோக்ஸிஸு, 211, 239, 259
சிசிலிய மருத்துவ மரபு, 261 கு 1
இரனீயசு, 4
இராசியின் சாய்வு :
அனக்சிமாந்தர், 56
அனக்சிமினிஸு, 81
இடையோசினிஸு, 370
லியூஸிப்போஸு, 359
இருள், 78, 114, 163, 195, 196, 248, 250
இலெம்புசுகேனியர், 270, 371
இலேஸிசு, 96, 290, 295, 296
இறையியல்வாதிகள், 9 தொ
இறைன்புல்லேடு, 21
இன்பமும் நோவும் :
அனக்சகோரஸு, 287
எம்பிடோக்ஸிஸு, 253, 257, 259

ஈ

ஈசிய நாகரிகம், 2, 3, 17, 44, 84
ஈத்தியோசு, 38
ஈமர், 5 தொ
ஆன்மன, 86
ஈலியவாதிகள் :
பிளேட்டோ, 132,
லியூஸிப்போஸு, 342, 344 தொ, 360
பாமினைடிசு, சேனோ, மெலிசசு ஆகியோரைப பார்க்க.
ஈலியா, 177
காலம், 118, 177
செனோபனிசு, 118, 120, 132
சேனோ, 321
பாமினைடிசு, 177
ஈரோசு, 9, 199

உ

உடலியல் :
இடையோசினிஸு, 367
எம்பிடோகஸிஸு, 255 தொ
பார்மினைடிசு, 201 தொ
உடுத்தொகுதிகளின் பெயர்கள், 24 கு 2
உயிர்ச்சுவடுகள :
செனோபனிசுவின கூற்று, 28, 129 தொ
" உலக ஆனமா "
தேலிசு, 54 ;
அனக்சிமினிஸு, 79.
உலகத்தின் காலங்கள் , 7
உலக மூசசு, 79, 113, 133, 194 தொ

எ

எக்காதையோசு :
அனக்சிமாந்தரின தேசபடம், 57
எரகலீட்டசு, 139 ;
தேலிசு, 50, 55
எகசாமியிசு, 46
எகிறதோசு, 90, 290, 307
எகிப்திய கணிதவியல், 18 ;
எணகணிதம, 21 ;
கேததிரகணிதம, 22
எகிபது, 4, 17, 18,
தேலிசு, 49,
பைதாகரசு, 93
எகியொட்டு, 6 தொ, 16
எடடாவது சுரம், 111, 115, 308, 317
எணகணிதம் :
இயூகலிட்டு, 111
எகிபதிய, 21
பைதாகரச, 104 தொ
எணகள :
அணுக்களும் எணகளும், 348
பைதாகரச கோட்பாடு, 112 தொ, 292, 298 தொ, 317 தொ
மூகதோனை, சதுர, செவ்வகவுரு எணகள், 107
எண்குறியீட்டுமுறை, 106
எணணிறந்த உலகங்கள் :
அனகசகோரசு, 283 தொ
அனகசிமாந்தர், 62 தொ, 72
அனக்சிமினிசு, 82
ஆக்கேலசு, 373
இடையோசினிசு, 370
செனோபனிசு, 130
பைதாகரசு, 82
எபிகாமோசு, 121, 159 கு
எபிகூரசு :
அணுககொளகை, 354 தொ, 355 தொ
" எணணிறந்த உலகஙகள ", 63
லியூகிப்போசு, 351
எபிசோசு, 135 தொ
எபிமினீடிசு, 9, 102, 118
எம்பிடோக்கிளிசின சொற்கோபபுக்கலை, 210
எம்பிடோக்கிளிசு, 206–263 ;
அதெனசில், 212 ;
ஒபிசம், 209, 262 தொ ;
செனோபனிசு, 131 ;
சேனோ, 211
பார்மினீடிசு, 191, 211, 234 கு 2, 237 தொ, 262 தொ, 320
பைதாகரசு, 209
யோசியாசு, 210
லியூகிபபோசு, 211, 343
வளி, இருள, 248
வைத்தியம், 211 தொ
எரகலீட்டசு, 135–176
அனகசிமினிசு, 54
ஆகைலொகோசு, 147
எகாதையோசு, 139
எகியொடு, 139, 141
ஒமா, 141, 147, 170, 171
செனோபனிசு, 135, 139
புரொட்டாகரசு, 174
பைதாகரசு, 89, 93 கு 1, 94, 102, 135, 136, 139
" மூவகை வாழ்க்கைகள ", 104 கு 1, 147 கு 1
எரகலீட்டசு, 54 கு 1
எரகலீட்டசு (பொண்டோசுநாட்டு)
எம்பிடோகலிசு, 212 கு 1
பைதாகரசு, 104 கு 1.
எரக்லீடிசு லெம்போசு, 41
எரதசுதேனசு, 42,
அனகசிமாநதரின தேசபடம், 57
பைதாகரசு, 93 கு 2
எரொடோதசு
எகிபதிய செல்வாக்குகள, 17 ;
ஒபிசம, 83 ;
ஓமரும எகியொட்டும், 8 ;
சொலனும கிறிசசும், 27 ;
தேலிசு, 45–50, 51 ;
நைலநதி, 49 ;
பைதாகரசு, 89, 93 ;
லிடியசெல்வாகசு, 44

எல்லையற்றது :
அனகசிமாந்தர், 58 தொ ;
செனோபனிசு, 130 தொ ;
பாமனீடிசு, 190 ;
மெலிசசு, 336 தொ

ஏ

எபிபோசு, 42, 294
எமோகிரிதசிசு, 293 கு 1
எமோடரசு, 135, 135 கு 4, 147 தொ
" ஏ " (எனும் கதை), 197, 199, 200

ஐ

ஐகொசப்போத்தே தேசு எரிமீனகல, 265, 283, 370
ஐங்கோணச் சகசரம, 307
ஐசோகிரதசிசு, 267
ஐதாதலும அடர்த்தியுறலும், 78 தொ, 154, 187, 338, 369
ஐப்பபோயியர், 85, 95 கு 2
ஐனெசிடெமோசு, 160

ஒ

ஒகதலீன், 41
ஒருமைவாதம, 12, 189, 206, 320
ஒழுககவியல், 1
ஒளி, 196, 250
ஒற்றை இரடடை, 300 தொ
ஒறிகென, 40
ஒனோமகிரிதசிசு, 102

ஓ

ஓபிசம, 6 கு 1, 86 தொ, 200, 209
ஓமா (உருவகககனதையெழுதி, 54 கு 1
ஓமர் உருவக் கதைகள, 54 கு 2
ஓரிறைவாதம், 133

க

கட்டுக்கதைகள் :
எம்பிடோகிளிசு, 210 கு 1 ;
எரகிளீடடசு, 136 கு 3
கடல் :
அனக்சகோரசு, 284 ;
அனகசிமாநதா, 68 தொ ;
இடையோசினிசு, 369 ;
எம்பிடோகிளிசு, 251 ;
எரகிளீட்டசு, 157 ;
கடவுள் :
அனக்சிமாநதர், 64 ;
அனகசிமினிசு, 82 ;
எசியொட்டு, 6, 16 ;
எம்பிடோக்கிளிசு, 240, 246, 262 ;
எரக்கிளீட்டசு, 175 ;
ஓமர், 5 ;
கடவுளாின வீழ்ச்சி, 86 ;
சமயததொடர்பற்ற கடவுள், 16, 84 ;
செனோபனிசு, 133 தொ ;
தேலிசு, 52, 55 ;
பார்மனீடிசு இப்பதத்தினைத தவிாத்தல், 187 ;
கப்பலோடடும முறை :
அகைகிமாநதா, 57 ;
தேலிசு, 46, 52
கயோசு, 9
" கருதகுக்கள " கொளகை, 318 தொ
கருவியல :
எம்பிடோகிளிசு, 256 ;
பாமனீடிசு, 186 கு 3, 201
கலவை :
அனக்சிமாநதர், 61 ;
எமபிடோகிளிசு, 246
கலன, 38 ;
எமபிடோகிளிசு, 210
கழகம, 32
கழக நூலறிலேயம, 36, 365

கா

காநதக்கல பற்றித தேலிசு, 52, 53
காறறு, 66, 67, 68, 71, 72, 78தொ, 114, 155, 160
வெளியெனக்கூறப்படுவது, 114, 195, 203, 239, 240

கி

கிரகஙகள, 24, 73, 110தொ, 203தொ, 250
பைதாகரசவாதிகள முறை, 291, 308
கிரகஙகளின வக்கிரஙகள், 24, 314
கிரகணஙகள :
அனகசகோரசு, 285
அனக்சிமினிசு, 82
எம்பிடோகிளிசு, 250
எரகிளீடடசு, 156
செனோபனிசு, 128
தேலிசு, 46
பபிலோனியர், 47
பைதாகரசு, 310, 315
லியூசிபபோசு, 259
கிரிததியாசு, மூதத, 293கு1
கிராத்திலசு, 374தொ
கிளிமெனறு, 18

இளெபஸைட்ரு, 29, 239, 257, 343
இருததினேசு, 363

ஈ

ஈபிசு (பைதாகரசு பாமனீடிசு), 178
ஈழததேசச செலவாக்குகள், 17தொ

கு

குரொட்டன, 94, 202

கூ

கூர்ப்பு :
அனக்சகோரசு, 285தொ
அனக்சிமாநதா, 75
எமபிடோகிளிசு, 253தொ

கே

கேத்திரகணிதம் :
எபிதியர், 22தொ
தேலிசு, 50தொ
பைதாகரசு, 109தொ

கை

கைலோன, 96

கொ

கொறிபாந்திசுகள, 103

கோ

கோளங்கள் :
எம்பிடோகிளிசு, 238
பாமனீடிசு, 190, 238, 242
வானகோளங்கள, 66கு
" கோணங்களின இசைவு " 115, 316தொ

ச

சங்கிராநதி, 24, 47கு1, 57
சடவாதம, 191
சததைரோசு, 42
அனகசகோரசுபறறி, 269தொ
எம்பிடோக்கிளிசு பற்றி, 210 கு2 ;
பிளேயசு பற்றி, 293
சநதிரன :
அனக சகோரசு, 284தொ
அனக்சிமாநதர், 70
அனகசிமினிசு, 79 தொ
எமபிடோகிளிசு, 250
ஒளி, 186கு1, 250, 285, 310
சுழறசி, 308
செனேபனிசு, 129
லியூகிபபோசு, 259
சமயம் :
சீயா, 4, 5, 84
ஜூலிய, 85, கடவுள், ஒருமைவாதம்
ஓபிசம், பலியிடல் ஆகியவற்றைப் பார்க்க
சமசாததிரம், 24, 47கு1, 57
சனுமொச்சிசு, 89, 95கு2

சா

சாங்கிள், 119

சி

சிசரோ, 39
அனக்சிமாந்தர், 64
அனக்சிமினிசு, 82
தேலிசு, 54தொ
பார்மனீடிசு, 97கு1
பைதாகரசு, 94கு3
சிநதனை
எமபிடோக்கிளிசு, 259
பார்மனீடிசு, 186
சிமபிளிசியசு, 36
அனகசகோரசு, 270, 277
இடையோசினிசு, 365, 370
எண்ணிறநத உலகங்கள, 63தொ
செனேபனிசு, 120தொ, 132
சேனை, 323
தேலிசு, 53
பாமனீடிசு, 179, 192, 196, 198
மெலிசசு, 332
சிமமியாசும பேரிசும், 291, 291கு, 307, 319
சிரஞ்சீவிதவுவம, 88, 162தொ, 204, 263
சில்லுகள :
அனகசிமாநதா, 72, 115, 198
பாமனீடிசு, 198
பைதாகரசு, 115
சில்லோய, 121

சு

சுதோய்ககா, 35, 137, 137கு1, 149, 156, 167தொ.
பேராணடு, 165
சுலவசூத்திரங்கள், 23
சுவாசிபபு, 161, 211, 239, 257, 292
சுழறசி, நாளாந்த, 15, 65, 115

சூ

சூததோசு, 302
சூரியன :
அலுக்மையோன், 203
அனகசகோரசு, 285
அனக்சிமாந்தா, 70தொ
அனக்சிமினிசு, 80தொ
எம்பிடோக்கிளிசு, 249
எரக்கிளேட்டசு, 155, 163

செனேபனிசு, 128
தேலிசு, 53
வியூபிப்போசு, 359

செ

செகுதசு எம்பிரிகசு, 35
எரக்கிளேட்டசு, 160
செகுறறு, 22, 50
செம்பகம், 110
செவிப்புலன :
அலுகமையோனை, 203 ;
அனகசகோரசு, 287 ;
எம்பிடோகிலிசு, 259, 260
செளரம் சதம்மொழிகள், 4 கு
செனேபனிசு : 117–134
அனகசிமாந்தர், 119 ;
உயிர்ச்சுவடுகள், 28 ;
ஓமர் எசியாடசு, 120, 130 ;
தேலிசு, 117, 118 ;
பார்மனீடிசு, 178 ;
பைதாகரசு, 89, 113, 118
செனேபிலோசு, 291

சே

சேர் ஆர்தர் இவானசு, 2 கு 1, 5 கு 2
சேனே, 320–331
அதென்சில் 177, 321 கு 1 ;
எம்பிடோக்கிலிசு, 211, 324 கு 2 ;
பைதாகரசர், 324 தொ

சை

சைபாரிசு, 94 கு 3, 96

சொ

சொசிஜிருத்திசு, 41
சொலன்–திரீசசு, 27 தொ

சோ

சோக்கிரதர் :
அக்கோசு, 371 தொ ;
அனக் கோரசு, 269, 280 ;
ஆன்மா, 88 ;
" கருத்துக்கள் கோட்பாடு ", 318
பார்மனீடிசுவையும் சேனேவையும் சந்
தித்தல், 177, 269 கு 2, 321 ;
பைதாகரசவாதிகள், 291
சோதிடக்கலே, 26 கு 3 ;
சோதியன், 41
பார்மனீடிசு பற்றி, 178.

ஞா

ஞானியர் எழுவர், 46, 49, 55, 118

ட

டமாகியசு, 49

டி

டிமீத்திரியசுமக்னேசு, 295
டிமீத்திரியோசு பலீரியசு :
தேலிசு, 49 ;
அனக்சகோரசு, 264
டியஜெசு, 36

டீ

டீலோசு, 84, 85, 95 கு 2

டே

டேமன, 268 கு 1, 269

டை

டையடோரசு, 100

டொ

டொரிகுமொழி, 295, 296 தொ
டொரியர், 2 கு, 95

த

தசாங்கம், 108
தமாஜியோசு, 9 கு 2

தா

தாவரங்கள் :
அனக்சகோரசு, 285 தொ
எம்பிடோக்லிசு, 251 தொ

தி

திகயாக்கோசு (பைதாகரசுபற்றி), 91, 98
திமாயோசு :
எம்பிடோகிலிசு, 207, 208 கு 1, 209,
212 ;
செனேபனிசு, 118 ;
பார்மனீடிசுவும் சேனேவும், 321 ;
பைதாகரசு, 91, 93, 94

திமாயோசு (லோக்கிரியநாட்டு) 90, 207, 293
திமோன :
செனேபனிசு, 121 ;
பிளேடோ, 293
தியனே, 317
தியாயதிதேசு, 111, 297
தியொடோரசு, 111
தியோடோறெற்று, 38, 41
தியோபிறசுத்தோசு, 36
அனக்சகோரசு, 265, 266, 285, 286 தொ ;
அனக்சிமாந்தர், 55 ;
அனக்சிமினிசு, 75 தொ ;
இக்கேதாசு (எருபாதோசு பற்றி) 311 ;
இடையோசினிசு, 364, 371 ;

எண்ணிறந்த உலகங்கள், 63 தொ ;
எமபிடோகிளிசு, 211, 243, 249 கு 1, 252, 257 தொ, 261 ;
எரகிளீடடசு, 138, 148, 154 ;
செனோபனிசு, 119, 128, 129, 130 ;
தெமோகிரிதசோசு, 354 ;
தேலிசு, 45 கு 1, 57 தொ ;
பாமனீடிசு, 186 கு 2, 192, 195, 199, 200 தொ ;
பிளேடோ, 315 தொ ;
புறெமீதியசு, 45 கு 1 ;
மெயயிய கழகங்கள், 31தொ ;
லியூகிபோசு, 341, 344, 349தொ
திரபோ :
எகோடரசு பறறி, 135 கு 4 ;
மோகோசு பறறி, 19 ;
பாமனீடிசும சேனோவும பறறி, 178, 321
திரவியவுயிரவாதம, 14 கு 1

தீ

தீபிசு :
இலேசிசு, 97, 290 ;
பிலோலெசு, 290

து

துயில :
எமபிடோகிளிசு, 256 ;
எரகிளீடடசு, 144கு1, 160தொ

தெ

தெமோகிரித்தோசு :
அனகசகோரசு, 265, 341, 360 ;
ஆதிஅணடவியல, 116, 309தொ, 351 ;
எபிதியர் கணிதம, 23 ;
காலம, 265கு1, 341 ;
சோகிரதருகு முநதியவா, 1கு1 ;
லியூகிபோசு, 341, 354 ;

தே

தேசபபடம், அனகமொநதினை, 57
தேலிசு, 44-55, 109
தேலிசு ஊனி, 43
தேவபாரமபரியம :
எபியொட்டு, 8தொ

தொ

தொகுப்பாசிரியா, 36
தொபாயோசு, 37
தொளியை (நகரம), 43, 97, 207, 212கு2

ந

நபுனசாகாலம, 25
நவப்பிளேடோதரிசனவாதிகள், 35, 192
நவபைதாகரா, 112 ;

நா

நாற்கணம, 107 ;

நி

நிகொமாகோசு, (கெரேசா), 92கு2
நிசிடியசு பிகுலசு, 100
நிரீச்சுரவாதம, 55
நிறை, 354தொ

நீ

நீா (தேலிசு), 52

நூ

நூசு (அனகசகோரசு), 280
நூமினியோசு, 18

நை

நைல நதி, 49, 284

ப

பபிலோனிய இராசிமணடலம், 24கு2
பபிலோனிய வானியல, 24தொ
சூரியகிரகணம, 47
பலியிடல, 98, 100
பனமைவாதம, 206, 320
பனனிருமுகததிணமம், 306தொ

பா

பாயம, 153
பாமனீடிசு, 177-201
எரகிளீடடசு, 135, 187, 193 தொ
செனோபனிசு, 178
பைதாகரசவாதமும எமபிடோகிளிசும், 178, 193தொ, 201, 211, 305, 320
பால்வழி, 200, 285

பி

பியூகிபோசு :
பாமனீடிசு பறறி, 179 ;
பைதாகரச எணகள பறறி, 107கு1, 292
பிலிசதியோன, 261கு1
பிளிபபு (ஒப்பவுசு), 316
பிலோடெமோசு, 39
அனகசிமாநதா, 64
பிலோலெசு, 90, 105, 290, 291தொ, 305, 309தொ
பிளினி :
அனகசிமாந்தா, 56 ;
எரிமீனகல, 265 ;
தேலிசு, 48
பிளோட்டோ, 34
அளக்சகோரசு, 267, 269கு2, 270, 280 ;
ஈலியவாதிகள, 132 ;

எம்பிடோக்கிளிசு, 151, 210குற2, 244 ;
ஏரகஞ்ஞேட்டசு, 151, 153, 166, 167 ;
ஏரகஞ்ஞேட்டசுவாதிகள், 32, 174குற1 ;
ஒபிசம், 88 ;
கிரகணகளின் இயக்கங்கள், 204 ;
செஞ்ஞேபனிசு, 132, 178 ;
சேஞ்ஞே, 177, 321, 323, 324 ;
சோகஸ்ரதா, 376 ;
பாரமேனடிசு, 177, 178, 190, 200, 207குற2, 321 ;
பிலோலெசு, 290 ;
புவியீர்ப்பு, 355 ;
பூமியின இயகக்ம, 312தொ ;
பேராண்டு, 165தொ ;
பைதாகரசு, 90, 95கு ;
பைதாகரசவாதிகள், 65, 90 318 ;
மெயயியல கழகங்கள், 32தொ ;
" வளி " 196குற1 ;
பிறவிசசக்கரம், 102, 103 ;

பீ

பீறறன, 65, 144 ;
பீனிசய செலவாகசு, 46;

பு

புரொட்டாகரசு :
ஏரகஞ்ஞேட்டசு, 174 ;
சேஞ்ஞே, 322
புரோதிஞ்ஞேசு, 202குற1 ;
புலனுணாசசி :
அலுகமையோனா, 202 ;
அனகசகோரசு, 286தொ ;
இடையோசினிசு, 371 ;
எமபிடோகஞ்ளிசு, 257தொ ;
பாரமேனடிசு, 186 ;
லியூஞ்பபோசு, 359தொ
புலால மறுத்தல் :
எம்பிடோகஞ்ளிசு, 262 ;
பைதாகரசு, 99, 100
புளுட்டாகசு :
அனகசிமினிசு, 79 ;
ஏரகஞ்ஞேட்டசு, 168 ;
எரிமீனகல, 265 ;
ஒற்றை இரட்டை, 301 ;
சேஞ்ஞே, 321குற1 ;
பாரமேனடிசு, 321குற1 ;
மெலிசசு, 331தொ

பூ

பூமி :
அனக்சகோரசு, 255 ;
அனகசிமாநதா, 69தொ ;
அனகசிமினிசு, 81 ;
ஆரமபததில சரலிப்பு, 29, 67தொ, 68, 252தொ ;
இடையோசினிசு, 369 ;
இயகக்ம, 69, 73, 310தொ, 316, 317 ;
எமபிடோகஞ்ளிசு, 251 ;
செஞ்ஞேபனிசு, 130 ;
தேலிசு, 52 ;
பைதாகரசவாதிகள, 311தொ ;
லியூஞ்பபோசு, 359 ;
வடிவம, 69, 116, 309, 359

பெ

பெரிகஞ்ளிசு :
அனகசகோரசு, 264, 267தொ ;
சேஞ்ஞே, 177, 321கு ;
மெலிசசு, 331
பெரிகைடிசு, 4, 9குற1, 84, 99குற1, 102

பே

பேராணடு, 164தொ

பை

பைதாகரசதேற்றம, 109தொ
பைதாகரசவாதிகள : 290-319 ;
பிளேடடோ, 15, 65, 87, 90, 95குற1 ;
வளி, 114, 185, 242
பைதாகரசு, 89-117 ;
அயோனியதேசததவா, 3
பைதியகாலம, 49
பைதுரோசு, 39
பைதோடரசு, 321கு
பைரோ, 87குற1

பொ

பொசெய்டோனியோசு :
சிடோனநாடடு மோகோசு, 19குற1
பொதுவள்வினமை, 110
பொலிஙிறுதிசு, 43, 93

போ

போபைரி, 92, 95

ம

மதஙியதீ, 199, 308 தொ
மரணம் :
அலுக்மையோன, 204 ;
எம்பிடோகஞ்ளிசு, 256 ;
ஏரகஞ்ஞேட்டசு, 143, 161 தொ
மறுபிறபபு, 85குற1 89, 94, 98, 262
மனிதன :
அனக்சிமாநதா, 74 தொ ;

ஏரகலிடீடசு, 159 தொ

மி

மிலிட்டசு, 44, 57கு3, 341, 342
மினனலும இடியும் :
அனகிமாந்தா, 72;
அனகசிமினிசு, 80 ;
எம்பிடோகலினிசு, 250

மு

முகுகோணம் (பைதாகரசு), 23, 109
மூகாசசி ;
அனக்சகோரசு, 287 ;
எமபிடோகலினிசு, 259, 260

மூ

மூலகஙகள், 13கு1, 58, 60 தொ, 239 தொ, 304 தொ
மூலஙகள (எம்பிடோக்லிசினை), 239
மூலை :
அலுகமையோனை, 202 ;
எம்பிடோகலினிசு, 211 ;
பிளேடோவும இபபோகிருத்திசும், 261கு

மெ

மெயயியலறிஞரின அரசியல ஈடுபாடு :
எம்பிடோகலினிசு, 207 தொ ;
சேனே, 321 ;
தேலிசு, 51 ;
பார்மீனடிசு, 179 ;
பைதாகரசு, 95 தொ ;
போலிபோசு, 340
மெய்யியற கழஙகஙகள, 31தொ, 83
மெலிசசு, 331-340 ;
அயோனியா, 331-337 ;
அனகசகோரசு, 338, 339, 347 ;
பாமமீனடிசு, 331, 355 ;
பைதாகரசவாதிகள, 338
மெற்ருபொநதியோன, 94, 95கு2, 96

மை

மைலீசிய மரபு, 44-83
மைலோ, 96

மோ

மோகோசு, 19கு2

ல

யொத்தியசு இடையோகினிசு, 41, 42, 154 தொ

லி

லிடியா, 44 தொ, 123
லியூகிபபோசு, 341-361 ;
அயோனியர், 351 தொ, 360 ;
அனக்சகோரசு, 343, 359
இடையோகினிசு, 359 ;
ஈலியவாதிகள, 191, 342தொ, 344தொ, 348, 353, 360 ;
எமபிடோகலினிசு, 211, 343 ;
தெமோகிரிதோசு, 349, 359 ;
பைதாகரசவாதிகள, 348, 351, 357
லியூகிறதிசு எம்பிடோகலினிசு பறறி, 213

வ

வடிவஙகள் :
அராபிய, 103கு 1
எண, 105
வளிமணடலவியல, 30, 54, 204

வா

வானசோதிகள, 67 தொ ;
அனகசகோரசு, 285 தொ ;
அனகசிமாநதா, 70 தொ ;
அனக்சிமினிசு, 79 தொ ;
அலுகமையோன 204 ;
இடையோகினிசு, 370 ;
எமபிடோகலினிசு, 248 தொ ;
எரகலிடீடசு, 156 தொ ;
செனோபனிசு, 127 தொ ;
பாரமனடிசு, 196 தொ ;
பைதாகரசு, 115 தொ ;
லியூகிபபோசு, 359
வானியல, பபிலோனியரதும கிரேக்கரதும, 24 தொ

வி

விதசமம், 111
விதகமுறுகணியங்கள், 106, 111
விதைகள, அனகசகோரசு, 278 தொ

வெ

வெறறிடம் :
அனகசகோரசு, 284 ;
அலுக்மையோன, 203 ;
பாமமீனடிசு, 188, 196, 328 ;
பைதாகரசு, 114, 187, 195, 302 ;
மெலிசசு, 337 ;
லியூகிபபோசு, 343, 348

வை

வைததியம :
அலுகமையோன, 202 தொ ;
எமபிடோகலினிசு, 210 தொ, 231 ;
பிலோலெசு, 292
பைதாகரசு, 102, 201

ரே

ரேடிசு, 3